தமிழ்நாவல்களில் தேடலும் திரட்டலும்



கோவை ஞானி

மெய்யப்பன் பதிப்பகம்

தமிழ் நாவல்களில் தேடலும் திரட்டலும்

கோவை ஞானி

மெய்யப்பன் பதிப்பகம்
53,புதுத்தெரு,சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : 2, அக்டோபர், 2004
திருவள்ளுவர் ஆண்டு : 2035
உரிமை : ஆசிரியர்க்கு

விலை : ரூ. 100.00

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 120

நினைவில் வாழும்
நிறுவனர்

ச. மெய்யப்பனார்



டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச்செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :
மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம்- 608001. ©:230069

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. ©:25361039


5, சிங்காரவேலுதெரு, தி. நகர், சென்னை-600017. ©:24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001. ©:2622853

15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641001. ©:2397155

28, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002. ©:2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021.
தொலைபேசி : 25954528



தமிழோடும் தமிழியல் ஆய்வோடும் காலமெல்லாம் ஓடிஓடி உழைத்தவரும், எங்களைப் போன்ற தமிழ் ஆர்வலர்களின் பேரன்பிற்கும் மரியாதைக்கும் உரியவருமாக தமிழ் மக்களின் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும் தெய்வத்திரு பேராசிரியர் ச. மெய்யப்பன் அவர்களின் நினைவுக்கு இந்த நூல் என் காணிக்கை.

- ஞானி

முன்னுரை

1. பள்ளி, கல்லூரிக்காலத்தில் கல்கி, அகிலன், மு.வ., நா. பார்த்தசாரதி ஆகியவர்களின் நாவல்களை, என் சக மாணவர் களைப் போலவே நானும் அக்கறையோடு படித்தேன். தமிழ் இலக்கிய மாணவன் என்ற முறையில் தற்கால இலக்கியம் குறித்தும், திறனாய்வு குறித்தும் இயல்பாகவே எனக்குள் பேரார்வம் ஏற்பட்ட நிலையில், கல்லூரிக் கல்விக்குப் பிறகு ஆசிரியர் பணி மேற்கொண்ட காலத்திலும் ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, தி. ஜானகிராமன், அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி முதலியவர்களின் படைப்புக்களை, என் நண்பர்களைப் போலவே நானும் விரும்பிக் கற்றேன். சி.சு. செல்லப்பா முதலியவர்கள் தமிழில் திறனாய்வின் மூலம் இலக்கியம் குறித்துப் புதிய பார்வை களைத் தந்தனர். சிற்றிதழ்கள் தொடர்ந்து வளர்ச்சி பெற்ற சூழலில் எல்லாவற்றையும் மீண்டும் கற்பதும் மறு ஆய்வுக்குட்படுத்துவதும் என்ற இயக்கத்தினுள் நாங்கள் ஈர்க்கப்பட்டோம். மாறுபட்ட மற்றும் முரண்பட்ட கருத்துக்கள் எங்களுக்குள் மோதின. இலக்கியம் என்றும் வாழ்க்கை என்றும் புதிய அணுகுமுறைகள் என்றும் இடைவிடாத தேடலில் நாங்கள் இருந்தோம்.

20-ஆம் நூற்றாண்டின் 1970களில் தொடங்கிய இந்த இயக்கம் எத்தனையோ ஏற்றங்களோடும், இறக்கங்களோடும் இன்றுவரைத் தொடர்வதை நாம் பார்க்க முடியும். 1980க்குப் பிறகு புதிய அணுகுமுறைகள் தீவிரம் பெற்று, 1990களில் தமிழ் இலக்கியத்தின் எல்லாவகை களங்களினுள்ளும் பெருத்த மாற்றங்கள் தொடர் கின்றன. தற்காலத் தமிழ் இலக்கியத்தில் புதிய வீச்சுக்கள், பார்வை கள் இன்று தீவிரமாகச் செயல்படுகின்றன. ஒரு தமிழ் மாணவன் இந்த வரலாற்றின் வழியே இயங்கினால் மட்டுமே நெடுங்காலத் தமிழ் இலக்கியத்தின் வழியே தொடர்கிற மரபின் ஆற்றல், வளம், மேன்மை முதலியவற்றைப் புரிந்து கொள்ள இயலும்.

க.ந.சு. தமிழ் இலக்கியத்திற்குள்ளிருந்தே இன்றைய இலக்கியத் தையும் புரிந்து கொள்வதற்கும், மதிப்பீடு செய்வதற்குமான பார்வையை உருவாக்க வேண்டுமென்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார். தொல்காப்பியரின் திணைக் கோட்பாடு என்ற தளத்தை ஆழமும் விரிவும் செய்ய இயலுமானால் தமிழ் மரபிலிருந்தே இத்தகைய பார்வை ஒன்றை நாம் திரட்ட முடியும். இதற்கு மார்க்சியம் மட்டுமல்லாமல், மேற்கிலிருந்து நமக்கு வந்த அமைப்பியல் நவீனத்துவம் முதலிய பார்வைகளும் பெரும் தூண்டுதலாக அமைய முடியும். இன்றைய தமிழ் வளர்ச்சிக்கு இத்தகைய அரிய முயற்சிகள் இன்றியமையாதவை.

தமிழில் படைப்புத்துறையிலும் திறனாய்வுத்துறையிலும் இன்று புதிய சக்திகள் நமக்குள் வந்து சேர்ந்திருக்கின்றன. இவற்றை ஆரோக்கியமான முறையில் நாம் எதிர்கொள்வது தமிழ் மக்களின் மேம்பாட்டுக்குப் பெரிதும் பயன்படும். இத்தகைய முயற்சிகளில் ஒன்றுதான் எனது இந்தக் கட்டுரைத் தொகுப்பு.

2. சிக்கல் மிக்க வாழ்க்கைச் சூழலில், வாழ்வுக்கு என்ன அர்த்தம் இருக்க முடியும் என்ற தேடலில் என் இளமைக்காலம் முதலே ஈடுபட்டிருந்தேன். வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கு சமூகச் சூழல், வரலாறு, மெய்யியல் என்று பலவற்றுக்குள்ளும் விரிந்த பயணம் செய்தாலன்றி என் வாழ்க்கையையும், என்னையும் புரிந்து கொள்ள இயலாது என்ற உணர்வோடு என் பயணம் இன்றுவரைத் தொடர்கிறது. இத்தகைய பயணத்தின் ஒரு கட்டத்தில் மார்க்சியத்தோடு எனக்கு ஆழ்ந்த உறவு ஏற்பட்டது. தற்காலத் தமிழ் இலக்கியத்தோடும் இலக்கிய இயக்கங்களோடும், சமகால இலக்கியவாதிகளோடும் நெருக்கமான உறவை நான் வளர்த்துக் கொண்டேன். மனிதர்கள் மட்டுமல்லாமல், இலக்கியம், படைப்பு எனப் பலவற்றையும் புரிந்து கொள்வது என் வாழ்வுக்கான இன்றியமையாத தேவையாக மாறியது. வாழ்வின் பரப்புக்கும், ஆழத்துக்கும் எல்லைகள் என வரையறை செய்வதற்கில்லை.

இப்படித் தொடரும் தேடலிலிருந்துதான் வாழ்க்கை பற்றிய உண்மைகளைத் திரட்டிக் கொள்வது தேவையாகிறது. என்னை நானே எப்படிப் புரிந்து கொள்வது, என் வாழ்வை எப்படி விரிவுபடுத்திக் கொள்வது, வாழ்வை எப்படி அர்த்தம் உடையதாக அமைத்துக் கொள்வது என்ற தேடலின் ஒரு பகுதியாகவே நாவல்கள் பற்றிய கல்வி அமைகிறது.

ஒரு காலத்தில் வாழ்வின் பெரும் பரப்பை காவியங்கள் தமக்கு உள்ளடக்கமாகக் கொண்டிருந்தன. காவியங்களில் கடவுள் என்று தொடங்கி எவ்வளவோ இடம்பெறுகின்றன. நாம் வாழும் நவீன காலச் சூழலில் வாழ்க்கையின் மையமாகக் கடவுளை, மன்னர்களை, தலைவர்களைக் கொள்வதற்கில்லை. வாழ்வின் இயக்கம், பொருளியல் என்றும், சமூகவியல் என்றும் உளவியல் என்றும் புதிய தடங்களில் செல்கிறது. ஆதிக்கங்கள் இன்று தேவையில்லை. மனிதர்கள் இன்றைய வரலாற்றுச் சூழலில் வைத்துத் தம்மைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் புரிதலுக்கு இயக்கங்கள் உதவிக்கு வருகின்றன. ஆண்/பெண் உறவுகளில் மாற்றங்கள் இல்லை என்றால் வாழ்க்கையின் அழகு அழிந்து விடும். நம் வாழ்வை விரிவுபடுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் இன்று கூடி வருகின்றன.

3. நாவல் பற்றிய கல்வி இத்தகையது. நாவலுக்குள் தான் வாழ்வின் விரிந்த பரப்பு இடம் பெறுகிறது. தனிமனிதன் என்று ஒருவனைப் புரிந்து கொள்வதற்கு அவனைச் சூழ உள்ள எத்தனையோ மனிதர்கள், நிகழ்வுகள் முதலியவற்றைச் சொல்ல வேண்டும். சமூக வாழ்வின் பல மட்டங்களில், பல தரங்களில் பல்வேறு வகையான பின்னணிகளோடு மனிதர்கள் வாழ்கிறார் கள். வாழ்வின் அனுபவங்கள் எண்ணிக்கையில் அடங்குவன அல்ல. இந்த அனுபவங்களைப் புரிந்து கொள்வதற்கும் நமக்குள்ளிருந்தே பார்வைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். உறவுகளால்தான் வாழ்வின் இயக்கம் அமைகிறது. எத்தனையோ போராட்டங்களிலும் மனிதர்கள் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். தமக்கான வாழ்வை, ஆளுமையை, ஆக்கத்திறன்களைப் பெறுவதற் காகப் போராடுகிறார்கள். மனிதர்கள் பிற மனிதர்களோடு கொள்ளும் உறவைப் போலவே, இயற்கையோடும் நெடுங்கால வரலாற்றோடும் இறுதியில் பிரபஞ்சம் வரை எத்தனையோ கண்ணிகளில் இணைந்திருக்கிறார்கள். வரலாற்றுக்குள் வந்து விட்ட எத்தனையோ சக்திகள் இந்த மனிதருக்குள் இயங்குகின்றன. இவற்றைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு மனிதர்கள் தம் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்கிறார்கள். பிரபஞ்சம் மற்றும் வரலாற்று அளவிலான பேரியக்கங்களில் இவர்கள் தம்மைக் காணமுடியும். இந்த அனுபவங்கள் கவிதைகளாகின்றன;. காவியங்களாகின்றன.

இந்த அனுபவங்களைத்தான் நாவல்கள் தமக்கு இன்றிமையாத உள்ளுறையாகக் கொண்டிருக்கின்றன. இப்படி வாழ்க்கையைக் கற்றுக் கொள்ளும் அதே முறையில் நாவல் களையும் நாம் கற்றுக் கொள்கிறோம். கதையை மற்றும் உத்திகளை மட்டுமே நாம் நாவல்களில் கற்பதில்லை. நாவலுக்குள் நம்மையும் வைத்து நம்மை நாமே கற்றுக் கொள்கிறோம். வாழ்வின் குறுகிய எல்லைக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் நாவல்களில் விரிந்த எல்லைக்குள் பயணம் செய்கிறோம். நம் அனுபவங்களை விரிந்த தளங்களில் வைத்துப் புரிந்து கொள்வதோடு நம்மை நாமே புதுப்பித்துக் கொள்கிறோம். நம்மை அறியாமல் நமக்குள் புதிய வெளிச்சங்கள் பிறக்கின்றன.

நாவல்களை இப்படிக் கற்பதன் மூலமே நாவல் நமக்குக் கல்வியாகின்றது. எத்தனையோ கோணங்களில் நம்மை நாமே உடைத்தும் தகர்த்தும் நாவல் வாசிக்கும் போது பார்த்துக் கொள்கிறோம்.

நாவலில் ஒரு படைப்பாளி கதை மட்டும் தான் சொல்கிறாரா? மனிதர்களை, வாழ்க்கைச் சூழலை, மனிதர்கள் நடத்தும்

போராட்டங்களைச் சொல்வதன் மூலம் மனிதர்கள் பற்றிய ஆய்வை நாவலாசிரியர் செய்கிறார்.

இத்தகைய ஆய்வின் போது வரலாற்றுச் சூழலைத் தொட்டுக் கொள்ளாமல் மனிதர்களை விளக்க முடியாது. அதைப் போலவே வாழ்வின் அர்த்தங்கள் எத்தகைய வரலாற்றுச் சூழலில் சிதைகின்றன. அல்லது மேம்படுகின்றன என்று நாவலாசிரியர் ஆராயும் பொழுதே அவருக்குள் மெய்யியல் இயக்கம் கொள்கிறது. இலக்கியவாதிகள் என்பவர் எல்லா மனிதருக்குமான நல்வாழ்க்கையை வேண்டுபவர்கள். மனிதர்கள் மத்தியில் சமத்துவம் நிலவவேண்டும். சமதர்மம் செயல்படவேண்டும் என்பதுதான் உண்மையான இலக்கியவாதியின் இறுதி நோக்கமாக இருக்க முடியும். எந்த ஒரு படைப்பாளியும் ஆதிக்கத்திற்குத் தன்னைச் சேவகனாக மாற்றிக் கொள்வது இயலாது. ஆதிக்கங்கள் எந்த வழியில் செயல்பட்டாலும் அவை மனிதர்களை அழிக்கின்றன. இத்தகைய புரிதல் இல்லாமல் வாழ்க்கை பற்றிய ஆய்வை விரிந்த தளங்களில் செய்ய முடியாது.

நாவல் என்பது ஒரு கல்வி. நாவலுக்குள்ளும் நம்மைத் தேடுகின்றோம். நம்மைத் திரட்டிக் கொள்கிறோம். எத்தகைய ஒரு நாவல் படித்தபோதும் அந்த நாவலுக்குள்ளிலிருந்து நமக்கான ஒரு நாவலை நம்மால் படைத்துக் கொள்ள இயலும். நமக்கும் வாழ்வியல் அனுபவங்கள் உண்டு. திறனாய்வுப் பார்வை உண்டு. நமக்கும் வரலாறு தெரியும். மெய்யியல் தெரியும். பிரபஞ்சம் நமக்குள்ளும் வந்து போகிறது. எதற்காகவும் நம்மை நாமே இழந்துவிட மாட்டோம். எங்கிருந்தும் நாம் கற்றுக்கொள்கிறோம். எவரிடத்திலிருந்தும் கற்றுக் கொள்கிறோம். எல்லோருக்குமான வாழ்க்கை வேண்டும். துயரங்கள் வாழ்வை அழிப்பன அல்ல. சிக்கல்கள் நம் பார்வையைக் கூர்மைப்படுத்துகின்றன. எல்லாத் திசைகளிலும் நாம் தேடிச் செல்லமுடியும். ஆதிவாசிகள் நமக்குள்ளும் இருக்கின்றனர். நமக்குள்ளும் குருச்சேத்திரப் போர் நிகழ்கிறது. நாமே அர்ச்சுனனாகவும், கண்ணனாகவும் இருக்கின்றோம். நமக்கு நாமே கற்பித்துக் கொள்கிறோம், கண்டடைகிறோம். இன்று இருப்பது போல வாழ்க்கை எல்லாக் காலத்திலும் இல்லை. மாற்றங்களோடு, மாற்றங்களினூடாகவும் நாம் வாழ்கிறோம். நமக்குள்ளும் வெளியிலும் நடைபெறுவது பிரபஞ்ச அளவிலான நாடகம். நாம் தனித்தவர்களாக இல்லை. நமக்குள்ளும் சாக்ரடீஸ், புத்தர், வள்ளுவர் முதலிய பெரியவர்களோடு உறவு கொண்டிருக்கிறோம். நமக்கு அழிவில்லை. இத்தகைய அகன்ற பார்வையைத் தருவது நாவல். இப்படிக் கற்பது நாவலைக் கற்கும் முறை. இதை இந்த தொகுப்பிலுள்ள நாவல்

பற்றி என் கட்டுரைகள் மெய்ப்பிக்கின்றன என்று நான் நம்புகிறேன்.

4. 1970 முதல் நாவல்கள் குறித்து நான் எழுதிய கட்டுரைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன. க.நா.சு. நாவல்கள் பற்றியும், பொன்னீலனின் 'கொள்ளைக்காரர்கள்' பற்றியும் நான் எழுதிய இரண்டு கட்டுரைகளைத் தவிர, இந்தத் தொகுப்பிலுள்ள பெரும்பாலான கட்டுரைகள் எந்த நூலிலும் இதுவரை இடம் பெறவில்லை. தொடக்கத்தில் நான் எழுதிய சில கட்டுரைகள், என் தேவைக்காக, எனக்குள் இயங்கும் பார்வையைக் கண்டு கொள்வதற்காக எழுதிய சில கட்டுரைகள் இந்தத் தொகுப்பில் இடம் பெறுகின்றன. நாவலைப் படித்த பொழுது குறிப்புகள் என்ற முறையில் பாத்திரங்கள், நிகழ்ச்சிகள், மேற்கோள்கள் என எழுதி வைத்தேன். தெளிவு குறைந்தும், எழுதப்பட்டு நீண்ட காலம் கழிந்த நிலையிலும் அந்தக் குறிப்புக்களைத் திருத்தமுற இப்பொழுது படி எடுப்பதில் பெரும் சிரமங்கள். இருந்த போதிலும் சில நண்பர்களின் அரிய முயற்சியின் பயனாகச் சில கட்டுரைகளை இந்தத் தொகுப்பில் சேர்க்க முடிந்திருக்கிறது. கோப்புகளில் மட்டுமல்லாமல் குறிப்பேடுகளிலும் இன்னும் நிறையக் கட்டுரைகள் புதைந்து கிடக்கின்றன. வெளிச்சத்திற்கு இவை வந்து சேருமா என்று தெரியவில்லை.

இவை ஒருபுறமிருக்க கண்பார்வை இல்லாத நிலையில் நாவல்களை நண்பர் படிக்கக் கேட்ட பிறகு நண்பர் உதவியோடு நான் எழுதிவைத்த எத்தனையோ கட்டுரைகள் இந்த நூலில் அதே வடிவில் இடம் பெறுகின்றன. இப்பொழுது நான் எந்த மாற்றமும் செய்யவில்லை. 1990க்கு பிறகு வெளிவந்த மேலும் சில நாவல்கள் குறித்து நான் எழுதி வெளியிட்ட மதிப்புரைகள் இந்த நூலில் இடம் பெறவில்லை. மதிப்புரைகள் கட்டுரையளவில் விரிவாக இல்லை என்பது இப்படிச் சேர்க்கப் படாமைக்கு ஒரு காரணம்.

இதுவரை வெளியான எனது எல்லாத் திறனாய்வு நூல்களிலும் தமிழ் நாவல்கள் மற்றும் நாவலாசிரியர் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக வ.ரா., சுந்தர ராமசாமி, அசோகமித்திரன் முதலியவர்கள் பற்றிய கட்டுரைகள். 1980களில் வெளிவந்த 60-க்கு மேற்பட்ட நாவல்கள் பற்றி தனிநூல் எழுதினேன். 1990களில் வெளிவந்த முக்கியமான நாவல்கள் குறித்து எழுத நினைத்தும் இதுவரை சாத்தியப்படவில்லை என்பது எனக்கு வருத்தம் தருகிறது.

ஒளி அச்சு செய்தபிறகு எல்லாக் கட்டுரைகளையும் திரும்ப வாசிக்கும் பொழுது எனக்குள் ஏற்பட்ட உணர்வை நண்பர்

களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். கடந்த முப்பதாண்டுக் கால அளவில் இலக்கியம், வாழ்க்கை பற்றி என் பார்வை மாறிவிடவில்லை. பார்வை விரிவடைந்திருக்கிறது என்று இங்கு குறிப்பிட முடியும். இன்று நான் எழுதுவதைக் காட்டிலும் முன்பு செறிவாக எழுதியிருக்கிறேன் என்பது எனக்குள் வியப்பு. லா.ச.ரா, கிருத்திகா முதலியவர்களின் நாவல்கள் பற்றிய கட்டுரை மீட்கப்படாத கட்டுரைகளில் அடங்குகின்றன. இது குறித்து எனக்குப் பெரும் வருத்தம்.

இந்தக் கட்டுரைகளை நகல் எடுப்பதிலும், ஒளி அச்சு செய்வதிலும், இரண்டு முறைக்கு மேலாகப் பிழை திருத்தம் செய்வதிலும் எனக்குப் பேருதவி செய்தவர்கள் என்ற முறையில் மு.குமரவேல், அருள்திரு. சுதாகர், சிங்கராயர், பாலைநிலவன், செங்கல்வி எனப் பலரைக் குறிப்பிட வேண்டும். ஒளி அச்சு செய்வதில் செல்வி மேரி, நண்பர் கோபி ஆகியவர்களைக் குறிப்பிட வேண்டும். இவர்களுக்குக்கெல்லாம் என் மனம் நிறைந்த நன்றிகள்.

500 பக்கங்களுக்கு மேல் செய்து வைத்திருந்த ஒளி அச்சுப் படிகளை பார்வைக்கு வைத்தவுடன் தமிழவேள் பேராசிரியர் ச. மெய்யப்பன் அவர்கள் உடனடியாக, பேரன்போடு 300 பக்க அளவில் ஒழுங்கு செய்து அனுப்புங்கள் என்று கூறினார். அவருடைய பேரன்புக்கு என்னால் என்ன நன்றி சொல்ல முடியும்! தமிழின் ஆக்கத்திற்கென அரிய பல ஆய்வு நூல்களை இடைவிடாது தொடர்ந்து வெளியிட்ட அவர் நம் வணக்கத்திற்குரியவர். இன்று அவர் நம்மிடையே இல்லை. நினைவில் வாழும் அவருக்கு இந்நூலைப் படைக்கிறேன்.

- ஞானி

உள்ளுறை

பக்கம்

பகுதி - 1

பகுதி - 2

ஜெயமோகன் :
விஷ்ணுபுரம்

1. "விஷ்ணுபுரம்" நாவல் என்று எழுதப்பட்டபோதிலும் ஒரு காவியம் என்றோ, புராணம் என்றோ வாசிப்பதற்கான கூறுகள் நிறையவே உள்ளன. நாவல் என்பதனுள் தற்கால நோக்கிலான வாழ்வியல் பற்றிய புரிதல்கள் இடம்பெற வேண்டும். காவியம் என்ற வடிவில் எழுதப்பட்டுள்ள இந்த கட்டமைப்பினுள் இருந்து, நாவல் என்று வாசிப்பதற்கான கூறுகளை நாம் இனங்காண வேண்டும்.

2. "விஷ்ணுபுரம்" நாவலில் தமிழக வரலாற்று காலம் இடம்பெறுகிறது. வரலாறு குறித்து, நாவலாசிரியர் என்ற முறையில் அவருக்கே ஆன தனிப்பார்வை இருக்க முடியும். வரலாறு பற்றிய ஆசிரியரின் கற்பிதம் என்றிதைக் குறிப்பிட முடியும். ஆசிரியரது இவ்வகைத் தனிப்பார்வை வரலாறு குறித்து ஏதாவது விளக்கம் தர முடியுமா? என்பதை பிறகு நாம் ஆராய வேண்டும்.

3. நாவலில் சுந்தரபாண்டியன் இடம்பெறுகிறான். பாண்டியரது ஆட்சி எல்லைக்குட்பட்டதாக இருந்தபோதிலும் விஷ்ணுபுரத்தில் பிராமணர்கள் தனி ஆட்சி நடத்துகின்றனர். இந்தியா முழுவதிலும் பயணம் செய்து தன் வேத ஞானத்தை நிலைநாட்டி அக்னிதத்தன், இந்த விஷ்ணுபுரத்தை அமைத்தான் என்பது ஆசிரியரது கற்பனை. பிரம்மதேயம் என்று வரலாற்றில் இடம்பெறுகிற பிராமணர்களின் தனி ஆட்சிப்பிரதேசம் போல விஷ்ணுபுரம் அமைகிறது. விஷ்ணுபுரத்தில் பிராமணர்களின் ஆட்சி மேலோங்கியதாகத் தென்பட்டபோதிலும், விஷ்ணுபுரம் கடுமையான உள்முரண்பாடுகளோடு தான் அமைகிறது. விஷ்ணுபுரம் அமைவதற்கு முன்பு இந்த வட்டாரத்தில் வாழ்ந்தவர்கள் செம்பகர்கள் என்ற ஆதிக்குடிகள். மாதரி என்பவள் இவர்களது பத்தினி தெய்வம். விஷ்ணுபுர எல்லைக்குள்ளேயே பத்தினிக்கோட்ட வழிபாடு நடைபெறுகிறது. பாண்டியனும், விஷ்ணுபுர தலைவராகிய சூர்யதத்தரும் இந்த விழாவுக்கு வருகின்றனர்.. செம்பகர்களின் மரபுரிமையை இவர்கள் இப்படி மதிக்கிறார்கள். விஷ்ணுபுரம் அழிந்தபிறகு இந்த வட்டாரத்தில் வாழ்பவர் செம்பகர். விஷ்ணுபுரத்து பிராமணர்களோடு செம்பகர்கள் முரண்பாடு கொள்ளவில்லை என்றும் இந்த பிராமணர்களோடு கடுமையான முரண்பாடு கொண்டவர்களாகிய காளாமுகர்கள் இந்த வட்டாரத்தில் மறைந்து வாழ்கின்றனர். அவர்களது தாந்திரிகம் அழிந்துவிடவில்லை. பிரசேனர் என்ற சிற்பி முதலியவர்கள் மூலம் காளாமுகர்களின் தாந்திரிகம் இங்கு உயிர்ப்புடன் செயல்படுகிறது.

விஷ்ணுபுரத்தில் மேலோங்கித் தெரிகிற பிராமணர்களின் ஆட்சி, பிறகு அழிகிறது. பிராமணர்களும் நீதியோடு செயல்படவில்லை. விஷ்ணுபுரத்தில் கணிகையர்களும், வணிகர்களும் பெருமளவில் வாழ்கின்றனர். செல்வம் கொழிக்கும் இந்த நகரில் வறியவர்களுக்குக் குறைவு இல்லை. ஆடம்பரங்களும் அழகுகளும் பேரளவில் நிறைந்திருக்கிற இந்த நகரில் அசிங்கங்களுக்கும் குறைவு இல்லை. விஷ்ணுபுரம் பல திசைகளில் கோபுரங்களும் பெரிய மண்டபங்களும் சிற்ப வேலைப்பாடுகளும் நிறைந்த நகரம். அரிய சிலை வேலைப்பாட்டு நுட்பங்கள் உள்ளன. தனக்குத்தானே பாரமாக நிற்கிறது இந்த நகரம். இந்த நகரத்தின் அழிவுக்கான சக்திகள் இதன் அகத்தினுள்ளேயே தெரிகின்றன.

4. விஷ்ணுபுரத்தின் ஆட்சித் தலைவர் சூர்யதத்தர். அவருக்கு உதவியாக நீதி சார்ந்த ஆலோசனை தருபவர் பத்மபாதர். நீதி எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஆதாரமான ஒரு நிகழ்ச்சி: வீரன் என்ற யானை பற்றிய நிகழ்ச்சி. பிராமணர்க்கு ஒரு வகை தண்டனை. தச்சனுக்கு குரூரமான தண்டனை. பாகனுக்கு மரண தண்டனை. விஷ்ணுபுரத்தில் என்றும் நீதிக்கு இடமில்லை என்ற குரல் நாவலில் கேட்கிறது.

5. ஸ்ரீபாத திருவிழாவின்போது விஷ்ணுபுரத்திற்கு சுந்தரபாண்டியன் வருகிறான். கணிகையர் கூட்டத்தோடுதான் அவன் காட்சி தருகிறான். ஏற்கனவே இவன் நோயாளி. இவனைக் கொன்றுவிட்டு பட்டத்துக்கு வர விரும்பும் இவன் தம்பி வீரபாண்டியன். வீரபாண்டியனுக்குள் இந்த உணர்வைத் தூண்டக்கூடிய சில அதிகாரிகள் / கணிகையர் இருந்தனர். ஞானசபையில் நூல் அரங்கேற்றம் நடைபெறும்பொழுது கோவிந்த பட்டர் முதலிய கோமாளிகளையும் பாராட்டி பரிசு தருகிறான் மன்னன். பண்டிதர்களின் கருத்துரைகளைப் பாராட்டுகிற சூர்யதத்தர். தரம் காரணமாக இவர்கள் இப்படி பாராட்டவில்லை. இவை எல்லாம் மரபுமுறையில் சில சடங்குத்தனமான நிகழ்ச்சிகள். மன்னனுக்கோ, சூர்யதத்தருக்கோ அறிவாற்றலோ, கவித்துவமோ இல்லை; தம் பெருமையை நிலைநாட்ட பாராட்டுவது போன்ற பாவனை. எல்லாமே இங்கு நாடகம். வீரவல்லாளன் ஆவேசத்துடன் வந்து எண்ணெய் தேய்த்த நிர்வாண உடம்போடு கணிகை லலிதாங்கியை வன்முறையோடு புணர்கிறான். இத்தோடு, சுந்தரபாண்டியனின் நிர்வாணக் காட்சிகள். திருவிழாவின் போது நகரத்தில் மல நாற்றம். மைதுனத்தில் ஈடுபடும் பெரும் கூட்டம். நகர வாழ்க்கை இப்படி அலங்கோலமாய் இருக்கிறது. மன்னனும் ஆட்சியாளர்களும் அதிகாரப் பிரியர்கள் மற்றும் அசிங்கமானவர்கள். அரண்மனைகள் மன்னர் பரம்பரையினர் பற்றி கல்கி தரும் வர்ணனைகளை

நினைத்துக் கொண்டால் ஜெயமோகன் எங்கு, எதற்காக வேறுபடுகிறார் என்று புரியும். மன்னர்கள் மற்றும் பெருநகர வாழ்க்கை குறித்து இவரது நவீன கால நோக்கிலான விமர்சனங்களையும் புரிந்து கொள்ளலாம். மன்னர்கள் கோமாளிகள்; அதிகாரிகள் வெறியர்கள்; கணிகையர் இல்லாமல் இவர்களுக்கு வாழ்க்கை இல்லை.

6. தொன்மைக் காலத்தில் செம்பகர்கள் – இவர்கள்தான் ஆதிப் பழங்குடிகள். இவர்களின் நதிகளும், ஆறுகளும், மலைகளும் பின்னர்தான் தமிழிலிருந்து சமஸ்கிருத பெயர் மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. இடையில் காளாமுகர்கள் – இவர்கள் தாந்திரிகர்கள். இவர்களுக்கும் பெரிய தத்துவம் உண்டு. இவர்களுக்கு வரலாற்றில் அழிவில்லை என்கிறது நாவல். இவர்கள் விஷ்ணுபுரத்தை அழிக்க முடியும். இடையில் விஷ்ணுபுரத்தில் தம் ஆட்சியை நிறுவியவர்கள் பௌத்தர்கள். ஞானசபையில் வேதாத்திரிகள் முதற்கொண்டு பல்வேறு மதவாதிகளையும் அஜிதன் வென்றான். அஜிதனுக்கு ஆட்சியில் பங்கெதுவும் இல்லை. பிறர் மீது ஆளுகை செலுத்துவது இவனுக்கு ஆகாது. ஆனால் சந்திரகீர்த்தி ஆட்சி அமைக்கிறான். பிட்சுக்களும் வணிகர்களும் ஒத்துழைக்கின்றனர். பௌத்த துறவிகளுக்குள்ளும் ஆட்சி அமைக்க வேண்டும், அதிகாரம் செய்ய வேண்டும் என்ற வெறித்தனம். நகரைவிட்டு பிராமணர்களை துரத்துகிறார்கள். நெடுங்காலமாக வறுமைப்பிடியில் வாழ்ந்த நிஷாதர்கள் நகருக்குள் நுழைந்து எல்லாவற்றையும் அபகரிக்கிறார்கள். பசி தீர உண்ணுகிறார்கள். இதன்பிறகு இஸ்லாமியர்களின் படையெடுப்பு. இதன் காரணமாக விஷ்ணுபுரம் அழிகிறது. புராணங்களில் மட்டுமே இடம்பெற்ற விஷ்ணுபுரத்தை தேடி யோகவிரதர் வருகிறார். அஜிதனின் இறுதிக் காலத்தில் இங்குத் தங்கி ஏராளமான பௌத்த நூல்களையும் விஷ்ணுபுரம் பற்றிய புராணங்களையும் படி எடுத்துச் சென்றவர் நரோபா என்ற திபெத் யாத்ரிகர். இவருடைய நூல்களை படித்துவிட்டுத்தான் விஷ்ணுபுரத்தை தேடிக் காண்பதற்காக யோகவிரதர் வருகிறார். இடையில் சில நூற்றாண்டுகள் கழிந்திருக்க வேண்டும். முன்பு இங்கு விஷ்ணுபுரம் இருந்ததற்கான தடயங்கள் மறைந்தன. விஷ்ணுபுரம் ஐதீகங்களில் வாழ்கிறது. யோக விரதர் இங்கு வந்த காலத்தில் ஒரு பிரளயம் வந்ததற்கான பல்வேறு அறிகுறிகள் நடக்கின்றன. செம்பகர்களின் குலத்தலைவனாகிய மூப்பனின் நெறிப்படுத்தலில் நீலியும் மற்றவர்களும் மலை ஏறிச் செல்கின்றனர். சோனா நதி பொங்கி கோபுரங்கள் அழிகின்றன. மிஞ்சியிருப்பது நீலியும் அவளைச் சார்ந்தவர்களும். மாதரி, சித்திரை, நீலியென பத்தினித் தெய்வங்களை, இந்த நாவலில் எதிர்கொள்கிறோம். காளாமுகர்களைப் பற்றி இறுதியில் தெரியவில்லை. சிற்பியிடமிருந்து அவர்கள் பறித்துச் சென்ற பிரளயதேவி சிலையுடன்

அவர்கள் மறைகின்றனர். அவர்கள் அறிவுரைப்படி சிற்பி ராஜகோபுரத்தின் முடிச்சை அவிழ்த்து விடுகிறார்.

7. விஷ்ணுபுரம் நாவலில் தத்துவ தரிசனங்கள் ஏராளமாக உள்ளன. இந்த நாவலை நமக்கு நெருக்கமாக்கச் செய்வது இந்த தத்துவ தரிசனங்கள் தான். ஞானசபையில் பிற தத்துவங்களை, தன் கூர்மையான விமர்சனங்களால் மறுதலித்து யோக சார மரபிலான தன் கால தரிசனத்தை முன் நிறுத்துகிறான் அஜிதன். பிரம்மம் முதலிய தரிசனங்கள் மரணத்தை எதிர்கொள்வதற்கு அஞ்சி தம் அழிவின்மையை முன்நிறுத்துவதற்கான தரிசனங்கள். தத்துவவாதி ஒவ்வொருவனும் தன் சுயத்தையே ஆதாரமாக்கி தரிசனங்களை முன்நிறுத்துகிறான். தத்துவங்கள் காலத்தை வளையமாக அமைக்கின்றன. வளையங்கள் சுற்றி வருகின்றன. வளையத்தை இவை வெட்டிக் கொள்வதில்லை. இப்படி விவாதிக்கிறான் அஜிதன். பௌத்த சமய துறவிகளில் வாமா முதலியவர்களின் வேறுவகையான பார்வைகளும் இங்கு இடம்பெறுகின்றன. யோகவிரதரும் ஒரு பௌத்தர். மனத்தை கடந்து செல்வது பற்றி அவரும் பேசுகிறார். மீண்டும் அஜிதன் பார்வை உட்பட எல்லாமே வளையத்துக்குள் வந்துவிடுகின்றன. யாரும் இதிலிருந்து தப்புவதில்லை.

8. ஸ்ரீபாத திருவிழாவின்போது தனது மகாபுராணத்தை அரங்கேற்றுவதற்காக காஞ்சியிலிருந்து தன் மனைவி மக்களோடு சங்கர்ஷணன் வந்தான். காசி முதற்கொண்டு பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்தவன். ஞானசபையில் ஒருமுறை இவனது காவியம் மறுக்கப்படுகிறது. அடுத்தமுறை பிறகு தந்திரமாய் சபையினுள் சென்று தன் மகாகாவியத்தை அரங்கேற்றுகிறான். பத்மாட்சி என்ற கணிகையை துணைக்கு வைத்துக் கொள்கிறான். இந்தக் காவிய அரங்கேற்றம் அவனைப் பொறுத்தவரை ஒரு கேலி நாடகம். லட்சியங்களைத் தொடர்ந்து முன்நிறுத்துவதாகிய தன் காவியம், கனவை – பிரம்மைகளை – பொய்களை ஆரவாரத்துடன் அடுக்கி வைத்திருக்கிறது என்ற உண்மையை தெரிந்தே தான் இவன் புராணத்தை அரங்கேற்றுகிறான். சபையை இவன் அவமதிக்கிறான் என்பது இவனைத் தவிர யாருக்கும் தெரியாது. பின்னர் நகரத் தெருவில் கணிகையரோடு குடிவெறியில் மயங்கிக் கிடக்கிறான். இறுதியில் மனைவியோடு வெளியேறுகிறான். இவனது காவியத்துக்கு நூற்றுக்கு மேற்பட்ட உரைகள் எழுதப்பட்டன. பத்மாட்சியின் சிலைக்கு முன்பிருந்து இந்தக் காவியத்துக்கு உரையெழுதியவர் ஸ்ரீதரர். இதை எடுத்து விளக்குகிறான் உத்தரன்.

9. நாவலில் இடம்பெறுகிற இன்னொருவன் பிங்கலன். விஷ்ணுபுரத்தில் உள்ள குருகுலத்தில் வேதம் படிக்கிறான். வேதங்களின் தத்துவ

தரிசனத்தைத் தொடக்கம் முதலே இவன் ஏற்கவில்லை. சிரவண மகாபிரபுவுடன் இவன் தொடர்புகொண்டான். சாருகேசி என்ற கணிகையோடு இவனுக்கு உறவு ஏற்படுகிறது. காமத்தின் மூலம் இவன் இறுதி முடிவை தேடுகிறான். எல்லோருக்கும் உள்ளே மகா தனிமை என்று உணர்ந்து பிங்கல சூத்திரம் எழுதினான். நெடுங்காலத்துக்குப் பிறகு இவனது தரிசனத்தைக் கண்டடைய பத்மன் புறப்படுகிறான். குகைக்குள் நுழைந்து மோகினி ஓவியத்தை கண்டு கீழிறங்கி சோனா நதிக்கரையில் தன்புணர்ச்சியில் ஈடுபடுகிறான். அதில் பிரபஞ்ச இயக்கத்தை தன்னுள் உணர்கிறான். இப்படி காமத்தின் வழியே பிரபஞ்சத்தை தரிசித்தவன் பிங்கலன்.

10. திருவடி ஸ்ரீபாத திருவிழாவின் போது லலிதாங்கி என்ற கணிகையின் அழகில் மயங்குகிறான். ஞானசபைக்கு வருகிறார் நம்பியாழ்வார். இறுதியில் அவர் குதிரைமீது ஏறி காணாமல் போகிறார். திருவடி, ஆழ்வார் ஆகிறார்.

11. சூர்யதத்தர் தன் இறுதிக் காலத்தில் தன் மகன் ஸ்வேத தத்தரை சந்திக்கிறார். தன் கணையாழியை அவனுக்குத் தர மறுக்கிறார். அதிகாரத்தைத் தன்னால் இறுதிவரை விட்டுக் கொடுக்க இயலாது என்கிறார். ஸ்வேத தத்தருக்கு இது உடன்பாடில்லை. இவரைப்போலவே தன் இறுதிக் காலத்தில் பவதத்தர் தன் பேரன் தேவதத்தனோடு உரையாடுகிறார். வேதத்தை மறந்துவிட்டு காட்டில் நிர்வாணியாய் அலைந்தார். தேவதத்தனுக்கும் அதிகாரத்தில் உடன்பாடில்லை.

12. நாவலின் இறுதியில் ஆரியதத்தர் தன் மகன் தேவதத்தனுக்கு தன் கணையாழியை அளிக்கிறார். அவன் சோலைப்பைத்தியம். புதர்களில் வாழ்பவன். மானிடமும், பசுவிடமும் பால் அருந்துபவன். இயற்கையில் கரைந்தவன். இவனுக்குள்ளும் இயற்கை குறித்த ஒரு தரிசனம்.

13. காளாமுகர்களின் தரிசனமும் நாவலில் இடம்பெறுகிறது. இப்படி பல்வேறு தரிசனங்கள் நாவலில் இடம்பெறுகின்றன. இந்த நாவலை ஆற்றல் மிக்கதாகச் செய்வது இந்த தரிசனங்கள்தான். ஜெயமோகனைத் தவிர தத்துவ தரிசனங்கள் குறித்து ஆழ்ந்த பார்வையோடு இப்படி ஒரு தமிழ் நாவலைச் செய்வதற்கு வேறு யாரும் இல்லை. ஒற்றை தரிசனம் என்பது வாழ்வியலை விளக்க முடியாது. பல்வேறு தரிசனங்களுக்கும் தேவை இருக்கிறது. தத்துவங்கள் ஓயாமல் எழுப்பும் கேள்வி நாம் எங்கிருந்து வந்தோம்? பிரபஞ்சத் தோற்றம், அதனுடன் நம் உறவு, அது அனாதியா? மரணத்திற்குப்பின் என்ன நேருகிறது? மரணத்தை வெல்வது எப்படி? இவ்வகை கேள்விகளெல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை.

த. 2.

இவற்றை நாம் எப்படி எதிர்கொள்வது? மரணபயம் தான் கோவிலை, கடவுளை, ஆத்மா நித்யமென்பதை தோற்றுவித்தது என்கிறான் அஜிதன். லட்சியங்களில் மனிதன் உறைய முடியாதென்கிறான் சங்கர்ஷணன். மாபெரும் தனிமையில் நாம் உள்ளோம் என்கிறான் பிங்கலன். விஷ்ணுபுரமே ஒரு பெரிய தர்க்கத்தின் விளைவு. தர்க்கத்தால் வாழ்க்கையை விளக்கமுடியாது. தர்க்கங்களை உதறிக் கொண்டாலொழிய நமக்கு விடுதலை இல்லை. தர்க்கத்தையும், மனத்தையும் நாம் கடந்து சென்று, இயற்கையில் கலந்துவிட வேண்டும். ஆதி மக்கள் எளிமையானவர்கள். அவர்கள் வாழ்க்கை அழகானது. இந்தப் பூமியில் வாழத் தகுதி அவர்களுக்குத் தானுண்டு. பிராமணர் தத்துவமும் வாழ்க்கை முறையும் பொய்மையானவை, அநீதியானவை. இப்படி சில பார்வைகளை இந்த நாவல் நமக்குத் தருகிறது. குழந்தைகளோடு தம் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள் பெண்கள். அவர்களது ஞானத் தேடல் அத்துடன் முடிந்து விடுகிறது என்பதையும் இந்த நாவல் தெளிவாக்குகிறது.

14. எந்த ஒரு நாகரிகமும் முந்தைய நாகரிகத்தை அழிப்பதில் தொடங்குகிறது. முந்தைய நாகரிகத்தை உள்வாங்கிக் கொள்ளாமல், புதிய நாகரிகத்தில் இயக்கம் இல்லை. தர்க்கத்தின் அடிப்படையில் தன்னை இது வளர்த்துக் கொள்கிறது. உச்சத்தை அடையும்போது பெருங்கனத்தை இது தன்னுடன் இணைத்துக் கொள்கிறது. நாகரிக அழிவுக்கு இது காரணமாகி அதன் சரிவுக்கும் வீழ்ச்சிக்கும் வழிவகுத்து வீழும்போது மீண்டும் ஆதி நிலைக்குத் திரும்புகிறது. நிறைய ஐதீகங்களைச் சேர்த்துக் கொள்கிறது. காமம், தந்திரம், உடல் என்று பேசுகிறது. கடைசியாக இது இன்னொரு நாகரிகத்துக்கு இடம் கொடுத்து அழிகிறது. விஷ்ணுபுரத்தின் நாகரிகத்தின் ஆக்கத்தையும் அழிவையும் இப்படித்தான் நாம் புரிகிறோம். விஷ்ணு ஒரு மாபெரும் குறியீடு. வரலாற்றில் இப்படி ஒரு குறியீட்டை மையப்படுத்தி வாழ்கிறோம். விஷ்ணு என்பது மனிதகுல தெய்வமாக, தத்துவமாக, ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். அதிகார குவிப்பின் குறியீடிது. அதிகாரத்தைக் களைந்து கொள்வதையும் இந்தக் குறியீடு உணர்த்தக்கூடும். விஷ்ணு புரண்டுபடுக்கிறார் என்பதை அதிகாரத்தைக் களைதல் – புதுமையை புதுப்பித்துக் கொள்ளுதல் – ஆதிக்குத் திரும்புதல் என்று அர்த்தப்படுத்தமுடியும்.

15. தமிழகச் சூழலில் பார்ப்பனியத்தின் கொடுமை குறித்து நாம் உரத்துப் பேசுகிறோம். பிராமணியத்தின் பொய்மையை ஜெயமோகன் இந்நாவலில் கூர்மையாக வெளிப்படுத்துகிறார். தமிழக வரலாற்றில் சில கட்டங்கள் குறித்த சித்திரிப்பை இந்த நாவலில் தந்திருக்கிறார். செம்பகர் எனப்படுவோர் தமிழகத்தின் ஆதிப்பழங்குடிகள். குறிஞ்சி நில மக்கள் என

கொள்ளலாம். பத்தினி வழிபாடு என்பதில் கண்ணகியை நாம் நினைவு கூறுகிறோம். பிரம்மதேயம் எனற அமைப்பில் நிர்வாகம் இப்படித்தான் நடைபெற்றதா என்று நாம் கேட்க முடியும். மன்னர்களைக் கேலிச் சித்திரமாக ஜெயமோகன் வரைந்து காட்டுகிறார். இன்றைக்குத் தேவையான சித்தரிப்பு இது. இறுதியாக ஒன்றைச் சொல்லலாம். நமது நாகரிகமும் இன்று ஆர்ப்பாட்டங்களோடு, கனத்து பெருத்து இருக்கிறது. வணிகருக்கும், கணிகையருக்கும், பிராமணருக்கும், அதிகாரிக்கும் ஆதரவான நாகரிகம் இது. தம்மைக் காத்துக் கொள்வதற்கு இவர்கள் கோவில் என்றும் கடவுள் என்றும் கற்பிக்கிறார்கள். இவர்கள் தங்கள் எல்லைக்குள் வறியவர்களை அனுமதிப்பதில்லை. இந்நாகரிகம் தன் சுமையால் தானே அழியும்; அழியவேண்டும் என்கிறது நாவல். இதன் காரணமாகத்தான் காவிய, புராண வடிவைக் கடந்து தற்கால நோக்கில் வாழ்வியல் கூறுகளை / பார்வைகளை உள்வாங்கி இது ஒரு நாவலாகிறது.

ஜெயமோகனே குறிப்பிட்டுள்ளபடி நாத்திகக் கூறுகள், அதாவது வாழ்வியலை மறுக்கும் எதிர்மறைக் கூறுகள் அதிகம் இந்நாவலில் உள்ளன. இந்நாவலில் வாழ்வியலின் ஆக்கக் கூறுகள் குறைவு. இயற்கையோடு இணைதல் என்பது இவ்வகைக் கூறுகளில் ஒன்று. கடவுளை மறுக்கும்போதே கடவுள் என்ற கருத்தாக்கத்திற்குள் இருக்கும் ஆக்கக் கூறுகளைக் கண்டறிய வேண்டும். பழைய தத்துவங்களை விரிவாக ஆராயும் இந்த நாவல், நவீன கால நோக்கில் இந்தத் தத்துவங்கள் பற்றிய பார்வையை ஆழமாக உள்வாங்கிக் கொண்டிருக்க வேண்டும். நாவலுக்குள் பயணம் செய்யும்போது ஏதோ பழங்காலத்துக்குள் பயணம் செய்வதைப் போன்ற உணர்வு – பழங்காலத்தை அங்கிருந்தே படித்துக் கொள்கின்ற உணர்வு நம்மை அடைத்துக்கொள்கிறது. நவீன கால தளம் நாவலுக்குள் குறைவாகவே இருக்கிறது. இதன் காரணமாகவே இந்த நாவலின் வாசிப்பும் கடினமாக இருக்கிறது.

16. விஷ்ணுபுரம், அண்மைக் காலத்தில் தமிழில் எழுதப்பட்டுள்ள நாவல்களில் ஒன்று என்று குறிப்பிடுவது போதாது. இது மிகச் சிக்கலான தமிழ் நாவல். 2 முறை நான் வாசித்தேன். இது எனக்கு போதவில்லை. மீண்டும் சில முறை நான் வாசிக்க வேண்டும். சிலம்பு, கம்பராமாயணம் முதலியவற்றை ஒவ்வொரு காதை / படலமாக எடுத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் படித்துப் பேசுவதைப் போல உரையாற்றுவதைப் போல – இந்த நாவலின் பல பகுதிகளைத் திரும்பவும் படித்து நமக்குள் விவாதிப்பது அவசியம். அந்தளவுக்கு செறிவும், பன்முகத் தன்மையும் உடையதாக இந்த நாவல் இருக்கிறது. இந்த நாவலை ஜெயமோகன் மரபுமுறையான செய்யுள் வடிவில் எழுதியிருந்தால் இதை ஒரு காவியம் என்றோ புராணம் என்றோ

புலவர்கள் கூட மிக எளிதில் சொல்லி விடுவார்கள். 35 வயது இளைஞர் என்பதற்காக இவரை கொண்டாடுவதிலிருந்து நாம் பின்னடைந்து விடக்கூடாது.

17. தமிழில் மெய்யியல் படிப்போ ஆய்வுகளோ இல்லை. அந்தளவுக்குத் தமிழ்ச் சமூகம் வறுமை / வெறுமை கொண்டிருக்கிறது. ஒரு சமூகம் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு இது அடையாளம். தற்காலச் சூழலில் தமிழில் மீண்டும் மெய்யியல் பார்வையை இந்தத் தமிழ் நாவல் கிளறிவிடும் என்றால் அதுவே இந்த நாவலுக்கு உரிய வெற்றியாக இருக்க முடியும். இன்றையச் சூழலில் இப்படி நடைபெறும் என்று நம்புவதற்கில்லை. ஒருவேளை ஜெயமோகன் மீது சிலர் புழுதியை வாரிக் கொட்டுவதன்மூலம், இந்த நாவலின் இன்றைய தேவையை முடக்கக்கூடும், எனினும் இந்த நாவல் என்றைக்காவது பெரும் வெற்றியைப் பெறும். சிலப்பதிகாரத்துக்கும், வள்ளுவத்துக்கும்கூட இப்படித்தான் வரலாறு வாய்த்தது.

18. இந்த விஷ்ணுபுரம் நாவல் தமிழகத்தின் வரலாற்றிலிருந்து சில கூறுகளை, தனக்குத் தளமாகக் கொண்டு இருக்கிறது. தொன்மைக் கால தமிழ்ச் சமூகம் இந்த நாவலில் இடம் பெறுகிறது. செம்பகர், பெருமூப்பன், மாதரி, அத்ரி, பத்தினி வழிபாடு, சித்திரை, கொன்றைவனத்தம்மன், நீலமூப்பன், நீலி ஆகியவர்களின் வழியே தமிழ்ச் சமூகத்தின் தொன்மைக் காலம் சொல்லப்படுகிறது. பின்னர் ஹரித்துங்கா, சோனா, வடமொழி பெயர் பெற்ற மலைகளும் ஆறுகளும் முன்பு தமிழ்ப் பெயரோடு விளங்கின. நாவலின் இறுதியில் இந்தத் தமிழ்ச் சமூகம்தான், பிரளயத்துக்குப் பிறகும் உயிர்த்திருக்கிறது. விஷ்ணுபுரம் என்பது நாமறிந்த பிரம்மதேயம் என்பதன் ஒரு பெரிய வடிவம். ஸ்ரீரங்கத்தில், இப்படி ஒரு பிராமணர்களின் ஆட்சி நடைபெற்றதாக ஜெயமோகன் நேரில் கூறினார். சுந்தரபாண்டியனின் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டு எல்லைக்குள் பாண்டியனின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஒப்புக்கொண்டு, விஷ்ணுபுரத்தில் தனியாட்சி நடத்தினர் பிராமணர்கள். விஷ்ணுபுரத்தின் கட்டடங்கள், நிர்வாக முறை, தர்க்கங்கள் முதலியனவெல்லாம் மிக விரிவாக இந்த நாவலில் சொல்லப்படுகிறது. விஷ்ணுபுரம் ஒரு பிரம்மாண்டமான அமைப்பு. தனக்குள் கனத்துத் தெரிகிற அமைப்பு. ஆதிக்கத்தைப் பேரளவில் கட்டமைத்திருக்கிற விஷ்ணுபுரத்துக்கு எதிரான கலவரங்கள், உள்ளே தொடர்ந்து நடைபெறுகின்றன. இந்த வரலாறு தொடர்ந்து நீண்டது. விஷ்ணுபுரம் அழிக்கப்படுகிறது. மீண்டும் தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது. மீண்டும் அழிவும் உயிர்ப்பித்தலும் என்பது இதன் வரலாறு. விஷ்ணுபுரத்தின் எல்லைக்குள்ளிருந்தே இந்த நகரத்தை சிதைக்கிற

முறையில் செயல்படுபவர்களில், மகாகங்காளரின் செயல்திறம் மிகச் சிறப்பானது. விஷ்ணுபுரத்தை பௌத்தர்கள் கைப்பற்றுவது இந்த வரலாற்றின் இன்னொரு கட்டம். பிராமணர்களின் விஷ்ணு ஆதிக்கத்தின் பேராதிக்கம் ஓர் எல்லை. இன்னொரு எல்லையில் தாழ்த்தப்பட்டவர்களையும் பிராமணர்களின் ஆதிக்கத்தால் சிதைவுக்கு உள்ளானவர்களையும் கொண்ட ஆழ்வார் இயக்கங்கள். இவற்றிற்கிடையே முரண் இருந்தபொழுதும் மோதல் இல்லை. இவர்களுக்குள் ஒரு கலவரம் உறைந்திருக்கிறது. விஷ்ணுபுரம் நாவலில் இடம்பெறும் தமிழக வரலாற்றுக் கூறுகள் என மேலும் சிலவற்றைச் சொல்ல முடியும்.

19. கல்கி / சாண்டில்யன் பாணியில் தமிழில் எழுதப்பெறும் வரலாற்று நாவல்களை ஒப்பிடும்பொழுதே இந்த நாவலின் தனித்தன்மை வெளிப்படையாகத் தெரிகிறது. மன்னர்கள், கோமாளிகள். படைத் தலைவர்கள் தம் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள ஏற்றவகையில் எதிரிகளோடு சமரசம் செய்துகொள்கின்றனர். தன் அரசர்களைக் காவு கொடுப்பதில் இவர்களுக்கு மனச் சிக்கல் இல்லை. வீரவள்ளலார் இத்தகையவர். விஷ்ணுபுரத்தை வீழ்த்திய பிறகு பௌத்தர்கள் ஆட்சிக்கு வருகின்றனர். மீண்டும் ஒரு அரசு உருவாக்கம் நடைபெறுகிறது. என்னதான் மகாதர்மம் என்று அஜிதன் பேசினாலும் சந்திரகீர்த்தி ஒரு அரசமைப்பை உருவாக்குகிறார். மன்னன் கணிகையர் சூழ இருக்கிறான். மாபெரும் நகரம் மலத்தில் நாறுகிறது. சந்து பொந்துகளில் குப்பை கூளங்கள். சுய புணர்ச்சி உட்பட எங்கும் மாபெரும் சீரழிவுகள். பௌத்தனின் வெற்றியை பிராமணர் அனுமதித்திருக்கக்கூடாது. ஆகவே அனுமதித்தவரை பிராமணர் கொலை செய்கின்றனர். இப்படி பல்வேறு வகைகளில் கல்கி புனிதப்படுத்திய வரலாற்று நாவலின் கூறுகளை ஜெயமோகன் கலைத்துப் போடுகிறார். தர்க்கம்தான் விஷ்ணுபுரத்தைக், கட்டமைக்கிறது. ஏராளமான தந்திரங்களோடு தான் நிர்வாகம் நடக்கிறது. இதை ஏற்படுத்திய அக்னிதத்தன் தந்திரத்தில் தேர்ந்தவன். எனினும் நெருக்கடிச் சூழலில் சூர்யதத்தரும், பவுத்தரும் தங்களைப்பற்றி – தமது நிர்வாகம்பற்றி மனம் திறந்து தன்னவர்களோடு உரையாடுகின்றனர். இவர்களின் வாரிசுகள் இவர்களோடு இல்லை. அன்றியும் எதிராக உள்ளனர். அன்றியும் எதிராளியிடமிருந்து கற்றுக் கொள்கின்றனர். நம்பியாழ்வாரை மறைத்தவர்கள் இவர்கள்தான். சிற்பியை இவர்கள் சிறை செய்தார்கள். அரசசபையிலும், வித்வத்சபை / ஞானசபையிலும் நடக்கிற கூத்துக்கள் வேடிக்கையானவை. ஒரு பிரம்மாண்டமான அமைப்பு என்பது தன்னை பெருமைப்படுத்திக் கொள்வதில் பிறருக்குத் தெரியாது என்று எண்ணி அலங்கோலங்கள் செய்கிறது. திறமை உடையவர் இவரை வெல்லலாம். சாருகேசிக்கு தன் கணவர் கோவியபட்டர் தகுதி தெரியும்.

சங்கர்ஷணன் வித்வத் சபையை அலங்கரிக்க கணிகையை தன்னோடு சேர்த்துக் கொள்கிறான். அறிவாற்றல் தளர்ந்த நிலையில் வயதான ஆழ்வாரை தம் தேவைக்கு ஏற்றாற்போல் இவர்கள் பயன்படுத்திக் கொள்ளமுடியும். வேதியர் கூடங்களில் கலவரங்கள். கலகக்காரரில் ஒருவனாக பிங்கலன். இப்படி எத்தனையோ கூறுகள் கல்கியின் வரலாற்று நாவலிலிருந்து இந்த நாவலை வேறுபடுத்துகிறது.

20. நாவலில் பல்வேறு சக்திகள் குறுக்கும் நெடுக்குமாக செயல்பட்டபோதிலும் எதிர் நிலைகள் என்ற நிலையில் இந்தச் சக்திகள் இரண்டென வகைப்படுத்த இயலும். வேதத்தின் அடிப்படையில் தர்க்கங்களால் விஷ்ணுபுரத்தை அமைத்திருக்கிற சக்திகள் ஒருபுறம்; இவர்கள் ஆதிக்கத்தில் உள்ளவர்கள். அரசதிகாரம், தனிஉடைமை, கருத்தியல் முதலிய பலவகைகளிலும் தம் ஆதிக்கத்தை இவர்கள் நிலைநிறுத்துகின்றனர். 'பிரம்மம்', 'மாயை' முதலிய கருத்துக்கள் இவர்களுக்குரியவை. அன்பு, இரக்கம் ஆகியவை இவர்களிடம் இல்லை. ஆதிக்கத்துக்குக் கருணை இல்லை. கருணை இருந்தால் ஆதிக்கம் தன்னைக் காத்துக் கொள்ள இயலாது. மாபெரும் கட்டடங்கள், இயந்திரவியல் நுட்பங்கள், ஆற்றல் மிக்க படை ஆகியவற்றோடு நடைபெறுவது இந்த ஆதிக்கம். இதற்கு எதிர்நிலையில் இருப்பவர்கள், மகாகங்காளர். இவர்களுக்கு அப்புறம் பௌத்தர்கள். பௌத்தர்களிலும் பல பிரிவுகள். அக்னிதத்தன் இருக்கும் வரை மகாகங்காளரும் இருப்பார் என்பது எதிர்நிலைகளுக்கு இடையிலான போராட்டம் என்பது இந்நூலின் ஒரு கூற்று.

லட்சியவாதம் வெறும் பிரமை. மண்தான் இனியது. தர்க்கத்தில் உருவாவது அதிகாரம். இதில் அன்புக்கு இடமில்லை. தர்க்கத்தால் மனத்தை மூடிவிட முடியாது. மனத்தைக் கடந்து செல்ல வேண்டும். மாபெரும் வெற்றிகள் ஒருவகையில் தோல்விகள். வெற்றிக்குப் பின் ஏற்படுவது வெறுமை உணர்வு. அஜிதன் சபையில் பலர் முன்னிலையில் வெற்றி பெறுகிறான்; எனினும் தனக்குள் தோற்றுப் போகிறான். சங்கர்ஷணன் லட்சியவாதத்தை உதறிக்கொண்டு மண்ணுக்கு வந்தான். பிங்கலனும் மாபெரும் தனிமையை உணர்ந்தான். காமத்தில் தன்னைக் கரைத்துக்கொண்டான்.

விஷ்ணுபுரம் என்பது இறுதியாக ஒரு குறியீடு. ஆதிக்கம் என்பதை உணர்த்துகிற குறியீடு. விஷ்ணுபுரம் மண்டபத்தில் கிடக்கிற விஷ்ணுவின் பேருருவம் என்பது தொன்மைக் காலத்தில் பெருமூப்பனுடைய வடிவம். பிராமணர்களின் ஆதிக்கம் மேலோங்கியபொழுது விஷ்ணுவின் வடிவம்.

இந்த மண்ணுக்குரியவர்கள் நாங்கள்தான் என்று கங்காளர் உரிமை கொண்டாடுகின்றனர். இது அவரது வடிவம். பௌத்தர்களுக்கு இது மகாபோதி சத்வருடைய வடிவம். அரசதிகாரம் மாறும்போது ஒவ்வொருவரும் தமக்குரியதாக மாற்றி பொருள் கூறுகின்றனர். விஷ்ணுவே அஜிதனாக வந்தான் என்று பொருள் கூறுகின்றனர். வரலாற்றுக் காலத்துக்குப் பின் எல்லாமே வரலாறும், புராணமும் ஆகிறது. இந்த பெருங்கதையை அற்புதமாக ஜெயமோகன் இந்த நாவலில் கொண்டு வந்திருக்கிறார். பெண்கள் தமக்குரிய முறையில் வாழ்வை எதிர்கொள்கின்றனர். லட்சுமிக்கு எல்லை தன் குடும்பம். கொஞ்சம் கடந்து போனால் திருவடி ஆள்வார். சாருகேசிக்கு தன் வாழ்வின் எல்லை தன் கருவில் வளரும் உத்ரன். பத்மாட்சிதான் தன் வாழ்வின் எல்லையைக் கடந்து கொஞ்சம் தத்துவத்துக்குள் கால்வைக்கிறாள். பிராமணியத்துக்கெதிரான போரில் ஜெயமோகன் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார். பௌத்த சார்பை இந்த நாவலில் கொண்டிருப்பதாக தோன்றினாலும் அதையும் கடந்து செல்கின்றார். அங்காரகன், மிருகநயனி, காலபைரவர் இந்நாவலின் ஆற்றல் மிக்கக் குறியீடுகள். எந்த ஒரு ஆதிக்கமும் பாரம் அழுத்த அழிந்து போகும். ஒரு சமூகத்தின் வீழ்ச்சிக் காலத்தில், புணர்ச்சி முதலிய போகங்களில் மனிதர் தம்மைத் தாமே அழித்துக் கொள்வர். தொன்மைக் காலத்தில் மரபியல் சார்ந்த மதிப்பீடுகளுக்கு மீண்டும், மீண்டும் புதிய எழுச்சி கிடைக்கிறது. இந்த எழுச்சிக்கு ஊற்றாக பெண்கள் இருக்கிறார்கள். இப்படி எல்லாம் இந்த நாவலை நாம் பொருள்படுத்த முடியும். நாவலில் நாத்திகத்தின் குரல் அழுத்தமாக பதிந்திருப்பதை ஜெயமோகனே உணர்ந்து சொல்லுகிறார்.

அஜிதன் பிரம்மத்தை மறுத்துக் மகா தரிசனம் என்று பேசுகிறான். பிங்கலன் மகா தனிமை என்கிறான். காமத்தில் பத்மன் ஆழ்கிறான். லட்சியவாதத்தை சங்கர்ஷணன் உதறுகிறான். இவற்றை நம்மால் கலைத்துப் பார்க்க முடியும். பிராமணியம் என்பதன் பொருளை இன்னும் ஆழப்படுத்த முடியும். நாவலின் எதிர்மறைக் குரல் மேலோங்கியிருப்பது உண்மைதான். உடன்பாட்டு முறையிலான குரலும் ஒலிக்கின்றது. மனத்தைக் கடந்து செல்லுதல் எந்தளவுக்குச் சாத்தியம்? ஏன் கடந்து செல்ல வேண்டும்? மனத்தை விரிவுபடுத்தல் என்பது ஒரு முக்கிய உண்மை.

நாவலில் சமணர்களுக்கு இடமில்லை. சைவர்கள் இந்த நாவலுக்குள் வரவில்லை. மகாங்காளரை நாம் சித்தர்கள் என்று புரிந்து கொள்ளலாம். இந்த நாவலை நமக்குள் நிலைப்படுத்த இந்த நாவலுக்குள் இன்னும் நாம் ஆழ்ந்து செல்ல வேண்டும்.

நூல் 1999

சு. வேணுகோபால் :
நுண்வெளி கிரகணங்கள்

நாவல் என்பது கதை சொல்வதாக மட்டும் இருக்கமுடியாது. வாழ்க்கையைச் சொல்ல வேண்டும். அதுவும் வாழ்க்கையின் முரண்பாடுகள், புதிர்கள் முதலியவற்றை உள்ளடக்கிய பெரும் பரப்பைச் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்லும்பொழுது நாவலுக்குள் வரலாறு இயல்பாக வந்துவிடும். வரலாற்றுச் சூழலில் வாழ்வின் அர்த்தங்கள் அழிவது பற்றியும், அர்த்தங்களை மீட்பது பற்றியும் நாவல் சொல்ல வேண்டும். எந்த வரலாற்றுக் காலத்தை நாவல் தனக்குள் கொண்டு வருவதாக இருந்த பொழுதிலும் அதற்குள் நிகழ்காலத்திற்கு ஒத்த பார்வை இருக்க வேண்டும். தவிர நாவல் என்பது ஒரு கலைப்படைப்பு. நாவல் என்பது ஒரு நவீனக்கலை. குறுக்கும் நெடுக்குமாக வாழ்க்கையை பிளந்து செல்கிற வகையில் இதன் கட்டமைப்பு இருக்க வேண்டும். இப்படி எல்லாம் நாவல் பற்றிய சிந்தனைகளோடு வேணுகோபாலின் நாவலை நாம் அணுகவேண்டியிருக்கிறது.

வேணுகோபால் ஒரு கலைஞர் என்பதை விரிவாகவே இந்த நாவல் நமக்கு மெய்ப்பிக்கிறது. உறுமி வாத்தியம் பற்றி அவர்தரும் விவரங்கள் முதல்முறையாக தமிழ் நாவலுக்குள் வந்திருக்கின்றன. உறுமி, நம்மோடு பேசுகிற வாத்தியம். நாவலில் வரும் மனிதர்களைப் பற்றி எழுதிக்கொண்டே செல்லும்பொழுது வேணுகோபாலிடம் புதுக்கவிதை கொப்பளிக்கிறது. காயத்திரியின் உணர்வுகள் கவிதைமொழியில் சொல்லப்படுகின்றன. காயத்திரி சிற்றிதழ்கள் படிப்பவள். தி. ஜானகிராமன் முதலியவர்களை ரசித்துப் படிப்பவள். இவள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு தக்க மொழிநடை, புதுக்கவிதை நடை. நாவலில் எந்த மனிதரைப்பற்றிச் சொல்லும் பொழுதும் வேணுகோபாலுக்குள் கவிதை வந்து விடுகிறது. ஒரு கலைஞர் என்று ஆசிரியரை நாம் புரிந்து கொள்வதற்கு இன்னும் மேலான கூறுகள் அவரிடம் இருக்கவேண்டும். கவிதை மொழியில் அவர் எழுதினால் போதாது. அவர் பார்வைக்குள் கவித்துவம் இயல்பாகவே ஊற்று எடுக்கவேண்டும். நாவலில் வரும் மனிதர்கள், நிகழ்ச்சிகள் முதலிய அனைத்தையும் தழுவியதாக இந்தக் கவித்துவம் செயல்பட வேண்டும். நாவலின் கரு இந்த கவித்துவத்திலிருந்து பிறக்க வேண்டும். இதைக் கொண்டுதான் இது வெற்றிகரமான நாவலா? என்பதை நாம் முடிவு செய்யமுடியும்.

ஒக்கலிகர் வாழ்க்கை பற்றி மானுடவியல் ஆய்வு மேற்கொள்கிறான் விக்னேஷ். வீடியோ கருவியோடும் பலரைச் சந்திக்கிறான். ஒக்கலிகர் வாழ்வின் பலவகை மரபுகளை விடாப்பிடியாகக் கேட்டுப் பதிவுசெய்கிறான். கூடவே இவர்கள் எல்லோரும் மனிதர்களாய் இருப்பதை நுட்பமாகக் கண்டு பதிவு செய்கிறான். ஒரு ஆய்வாளனாக மட்டும் இவன் இல்லை. இவர்களோடு இவனுடைய உறவு நெருக்கமாகிறது. ஒரு சமயம் இவன் தனக்குள் உணர்கிறான்: விவரங்களைப் பதிவு செய்வதாக ஆய்வு இருக்கமுடியாது. இந்த ஆய்வுகள் வழியே வாழ்க்கை பற்றிய தரிசனம் எழுகிறது / கிடைக்கிறது என்று கருதுகிறான் விக்னேஷ். வாழ்வின் தரிசனம் பற்றிய இந்தக் கூற்று, கவித்துவத்தின் ஒரு கீறல் என்று சொல்லலாம்.

சீரங்கன் குடிகாரர். வெறுக்கத்தக்க குடிகாரராகத்தான் நாவலின் முதல்பகுதியில் தோற்றம் தருகிறார். நாவல் வளர்ந்து செல்லும்பொழுது சீரங்கனின் பார்வைக்குள் இருக்கிற வாழ்வைப் பற்றிய தரிசனம் ஒளியோடு வெளிப்படுகிறது. சாதிகள் மரபுகள் எல்லாவற்றையும் இவர் கடந்தவர். மனிதனை மட்டும் தான் பார்க்க வேண்டும் என்கிறார். கடவுள் உண்டா? இல்லையா என்ற ராஜாங்கத்தின் கேள்விக்கு பதில் என்ற முறையில் புத்தரின் மௌனம் பற்றித்தான் சொல்லுகிறார். எத்தனையோ கசப்புக்களை செரித்துக் கொண்டவர் இவர்.

கவித்துவம் என்று மேலும் குறிப்பிடத்தக்க சில கூறுகள் இந்த நாவலில் இடம் பெறுகின்றன. சௌடம்மா ஜமீலோடு போய்விட்டார், ரங்கசாமி கொதிக்கிறார். இப்பொழுது அவரிடம் கொலைவெறி தாண்டவமாடுகிறது. சக்கர நாற்காலியில் வீட்டுக்குள் உலவிவரும் பாட்டி (சீரங்கனின் தாய்) சௌடம்மாள் சார்பில் பேசுகிறாள். சௌடம்மாளுக்கு பெரிய மனம். 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வீட்டையும், நிலபுலங்களையும் நிர்வாகம் செய்தவள் சௌடம்மாள். அவளுக்கும் உடம்புண்டு; அவளைக் குற்றம் சொல்லமுடியாது. சாதி மதங்களை கடந்ததாக பாட்டியின் பார்வை அமைகிறது. சௌடம்மாவுக்குள்ளும் வாழ்க்கை பற்றிய ஒரு தரிசனம் இருக்கத்தான் செய்கிறது. சாதி முதலிய மரபுகள் மனிதரைக் கூறு போடுகின்றன. ஒரு சாதிக்குள்ளும் பல கிளைகள். இவற்றாலும் மனிதர் பாதிக்கப்படுகின்றனர். காயத்திரி, நித்தியா ஆகியவர்களின் காதல் நிறைவேறாததற்கு சாதியின் உட்கிளைகள் காரணம் ஆகின்றன. மெல்ல, மெல்ல இந்தக் கிளைகள் முறிபடவும் செய்கின்றன. வரலாற்றில் இப்படி நிகழ்வது தவிர்க்க இயலாதது.

இப்படி அங்கங்கே வாழ்வைப்பற்றிய தரிசனங்கள் இந்த நாவலில் நமக்குக் கிடைக்கின்றன. உறுமி வாசிக்கும் கலைஞன் நமக்குள் பிரமிப்பை எழுப்புகிறான். வாழ்வின் எந்த நிகழ்ச்சியும் உறுமிக் குள்ளிருந்து ஒரு குறிப்பிட்ட ஓசை நயத்தை – பதிவை வெளிப்படுத்துகிறது. சுடலை முத்து காட்டில் மாடுகளை வசப்படுத்துபவன். ஒவ்வொரு உயிர்க்கும் ஒரு குறிப்பிட்ட ஓசை உண்டு எனச் சொல்லுகிறான். காட்டில் காட்டுத்தனமாக திரியும் எந்த ஒரு பசுவையும் நிறுத்தி அவனால் பால் கறக்க முடியும். சுடலைமுத்து ஒரு சித்தனைப்போல நமக்குத் தோன்றுகின்றான்.

நாவலின் மையம் கவித்துவத்திலிருந்து ஊற்றெடுக்கிறதா? என்ற கேள்வி நம்மை தொற்றிக் கொள்கிறது. நாவலில் சொல்லப்படும் வாழ்வியல் சிக்கல் என்ன என்பது பற்றி நாம் கவனத்தைக் குவித்து ஆராயலாம். ஒக்கலிகர் குலம் பல கிளைகளை உடையது. சில கிளைகளுக்கிடையே திருமண உறவு சாத்தியம். சில கிளைகள் சகோதர உறவு கொண்டவை. இவற்றுக்கிடையில் திருமணம் கூடாது. எனினும் இந்தத் தடைகள் தொடர்ந்து மெல்ல, மெல்லத் தகருகின்றன. காயத்திரி – சதீஷ், சித்தியா – அசோக் காதல் விவகாரங்கள் இத்தகைய சிக்கலின் பாதிப்புக்கு உள்ளானவை. இன்றைய சமூகச் சூழலில் இந்தத் தடைகள் அர்த்தமில்லாதவை. காயத்திரி தன் தந்தையை மீற முடியாதவள். நித்தியா வெளிச் செல்வதற்கு தயாராகத்தான் இருக்கிறாள். அசோக் இவளை அழைத்துக் கொள்ள இயலவில்லை. நகரத்தில் கிடைத்த வேலை அவனுக்கு உவப்பாக இல்லை. கிராமத்திற்கே வந்து சேர்கிறான்.

ஒக்கலிக குலப் பிரிவுகளுக்கு இடையில் எழும் சிக்கல்கள், நாவல் கட்டமைக்கிற ஒரு கூறு. நாவலில் வரும் சீரங்கன், ரங்கசாமி ஆகியவர்களுக்கு முற்பட்ட தலைமுறையைச் சேர்ந்தவர் மல்லையா. விடுதலைப் போராட்டத்தில் தன் வாழ்வை ஈடுபடுத்திக் கொண்டவர் மல்லையா. இவர் தீவிரவாதி. ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொண்டவர். மல்லையாவை மணந்து கொள்ள பிரியப்படுகிறவள் காமுலு அம்மாள். ராசப்பன் என்பவனுடன் ஒரு சந்தில் ஒதுங்கியதாக ஊராரால் இவள் குற்றம் சாட்டப்படுகிறாள். ஊரைவிட்டு வெளியேற்றப்படுகிறாள். வேதனையுற்ற காமுலு அம்மாள் இந்தப் பிறப்பு முழுவதும் என் வயிற்றில் கரு தங்கக்கூடாது என்று தனக்குத்தானே ஆணையிட்டுக் கொள்கிறாள். 50 ஆண்டுகள் வேற்றூரில் தனித்து வாழ்ந்தாள். அவள் இறந்த செய்தி ஊருக்கு வந்து சேருகிறது. பாட்டி திம்மையாவின் மனைவி புலம்புகிறாள். தடை கடந்து செல்லுகிறாள். நாவலில் நம்மைப் பெரிதும் கவர்கிற ஒரு அற்புதமான கிளைக் கதையென இதைச் சொல்லலாம்.

ஒக்கலிகர் மரபின் மூலவராகிய சித்தையனிலிருந்து இந்த நாவலின் கதை தொடங்குகிறது. சித்தையன் கவுல்தார்; ஏராளமான நிலங்களுக்கு சொந்தக்காரர். ஆற்றுக்கு அப்பால் உள்ள ஜமீன்தாருக்கும் இவருக்கும் ஆற்றைத் திருப்புவதில் ஏற்பட்ட பகை இறுதியில் தன் மகனை இவரே காவு கொடுக்கும் சூழலுக்குச் செல்லுகிறது. சித்தையனுக்கு இரண்டு மனைவிகள்: சீனியம்மாள் - தேவம்மாள். தேவம்மாளைத்தான் இவர் திருமணம் செய்வதாக இருந்தாராம். சீனியம்மாளைத் திருமணம் செய்துகொள்ள நேர்ந்தது. பிறகு தேவம்மாளைச் சேர்த்துக் கொண்டார். தன் குழந்தைகளில் ஒருவரை காவு கொடுக்க தேவம்மா மறுத்துவிட்டார். கணவனின் உயிர்தான் பெரியது என்று தன் மகன் கதிரய்யாவை காவு கொடுக்க சீனியம்மா ஒத்துக் கொள்கிறார். இறப்பதற்கு முன் கதிரய்யா சாபம் தருகிறான். என்னைக் கொன்றவர்கள் வாழக்கூடாது; அழிந்துபோகட்டும். பிறகு சித்தையன் கோட்டை உருவாகிறது. இங்கு கோட்டை என்பது பெரிய மாடிக் கட்டிடம். இதில்தான் ரங்கசாமி குடியிருக்கிறார். நாவலின் முடிவில் இந்தக் கோட்டை கைமாறுகிறது. இந்தக் கோட்டைக்குள் வாழ்ந்த மனிதர்களின் இன்பங்களும், துன்பங்களும் நாவலில் விரிவாகச் சொல்லப்படுகின்றன.

கதிரய்யா கொடுத்த சாபம் நிறைவேறுவது நாவலின் கரு என்று சொல்லமுடியுமா? இந்த நோக்கம் நாவலில் அழுத்தம் பெறவில்லை. சித்தையன் தன் மகனை ஏன் காவு கொடுக்க வேண்டும் என்பதுகூட நாவலில் தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஆனால் சித்தையன் சிறை செல்லவில்லை. ஆங்கிலேய கலெக்டர், ஜமீன்தார், கவுல்தார் வாழ்க்கை பற்றிய சித்தரிப்புகள் நாவலில் இடம்பெறுகின்றன. தம் ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சித்தையன் பாடுபட்டார். இறுதிவரை தக்கவைத்துக் கொண்டார் என்றே தோன்றுகிறது. ஒருவேளை இதன் அடையாளமாகவே அந்தப் பெரிய மாளிகையை எழுப்பியிருக்கவும் கூடும். சித்தையனுக்குப் பிறகும் ஒன்று இரண்டு தலைமுறைகள் கழிகின்றன. மல்லையா விடுதலை இயக்கத்தில் சேர்ந்து போராடுகிறார். மற்றவர் நாவலில் தலைகாட்டினாலும் முக்கியத்துவம் பெறவில்லை. தேவம்மா தற்கொலை செய்து கொண்டதன் மூலம் தன் கணவனை வீட்டிற்கு வரச்செய்கிறாள்.

கதிரய்யாவின் சாபத்தை ஒரு வகையில் சமய நம்பிக்கைபோல வைத்துக் கொள்வது என்றால் நாவலுக்குள் சமகாலநோக்கு வரவில்லை என்று சொல்லிவிடலாம். இதற்குச் சமூகம் சார்ந்த அர்த்தம் உண்டா? என்ற கேள்வியை நமக்குள் எழுப்பிக்கொண்டு ஆராயலாம். இப்படி உறவு

என்று பாராமல், மகன், இளையவன் என்று பாராமல் தன் அதிகாரத்தை காப்பாற்றிக் கொள்வதற்காக சித்தையன் ஆள்வைத்து தன் மகனைக் கொலை செய்கிறான் என்றால், இந்தக் குடும்பத்திற்குள் ஒரு பிசாசு புகுந்து விடுகிறது என்று பொருள். அன்பு பெரிதல்ல, உறவு முக்கியமில்லை. ஆணென்ன, பெண்ணென்ன? குழந்தை என்ன? தன் அதிகாரத்திற்கு இவர்கள் கட்டுப்பட வேண்டும். அதிகாரம்தான் இவர்களை, இந்த உறவுகளை உற்பத்தி செய்கிறது. அதிகாரம் நிலைபெற, இவை தேவையில்லை என்றால் இவர்களை ஒதுக்கிவிடலாம், ஒழித்து விடலாம். ஆனால் இந்தப்போக்கு என்றைக்கும் வெற்றி பெறுமா? வெற்றி பெறமுடியாது. அதிகாரம் உற்பத்தியான உடனே எதிர்ப்பும் உற்பத்தியாகிறது. இடையில் அகப்பட்டு அன்பு துடிக்கிறது. வாழ்க்கை அவலமாகிறது. அதிகாரத்தைத் தனக்குள் ஏற்றுக் கொண்டவனுக்கும், அதைப்போலவே அதிகாரத்தில் அகப்பட்டவனுக்கும் வாழ்க்கை அவலமாகிறது. அதிகாரத்தை ஒதுக்கிவிட்டு எப்பொழுதெல்லாம் அன்பை இவன் தழுவிக் கொள்கிறானோ அப்பொழுது இவனுக்கு தற்காலிகமாகவேனும் விடுதலை கிடைக்கிறது.

தேவம்மா – சித்தையனின் அதிகாரத்தை ஏற்கவில்லை. தேவம்மா அதிகாரத்தை ஒத்துக் கொள்ளவில்லை. தற்கொலை செய்து கொள்வதன்மூலம் தன் கணவனை தன் அன்புக்கு அவள் பணியவைத்தாள். தன் மகனைப் பறிகொடுத்த நிலையில் சீனியம்மாள் ஓயாது மனம் வருந்தினாள். உண்மை வெளித் தெரியவில்லை. சித்தையன் இறுதியிலாவது மனம் அதிர்ந்தானா? தெரியவில்லை. கதிரய்யா இட்ட சாபத்தை இப்படி சமூக நோக்கில் நாம் புரிந்து கொள்கிறோம். இப்படிப் புரிந்து கொண்டால் நாவலின் மையக் கருவுக்குள் செறிவு சேரும். அன்றியும் நம் வரலாற்றுச் சூழலில் எது மையமான சிக்கலோ அந்தச் சிக்கலை இந்த மையக்கரு வெளிப்படுத்தும். தவிர இன்றைய வரலாற்றுச் சூழலில் வாழ்வின் அர்த்தங்களைத் தருவதாகிய தரிசனம் எதுவோ அது நாவலின் மையக் கருவுக்குள் வந்துவிடும். இதன் ஆதாரத்தில் ரங்கசாமி, சீரங்கன் முதலியவர்களின் குடும்பச் சிக்கல்களை நாம் பார்த்துக் கொள்ளமுடியும். ரங்கசாமி முதலியவர்களுக்குள் கிளம்பும் எதிர்ப்புக்களையும் இணைத்துப் பார்த்துக் கொள்ளமுடியும்.

இத்தகைய பார்வை ஆசிரியருக்குள் இருக்கிறதா? என்ற கேள்விக்கு ஆம் என்று நாம் உறுதியாக பதில் சொல்ல இயலாது. வாசிப்பின் அரசியல் என்ற நவீன நோக்கிலிருந்து நாவலை இப்படி அர்த்தப்படுத்துவதற்கு நமக்கு உரிமை உண்டு. நாவலுக்குள் கிடைக்கிற சில வெளிச்சங்களைத் தொகுத்தும் இணைத்தும் இத்தகைய வாழ்வியல் தரிசனத்தை நமக்குள்

வைத்துக் காணமுடியும். இந்த நாவலில் இடம்பெறும் சமூக வரலாற்றுப் பின்னணியை நாம் குறிப்பிடவேண்டும். ஒக்கலிகர்கள் கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு வந்தவர்கள். கர்நாடகத்தில் சுல்தான் ஆட்சி ஏற்பட்டபோது அவர்களால் துரத்தப்பட்டு இவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். சுல்தான் தன் படை வீரர்களுக்கு ஒக்கலிக குலப் பெண்களை மணம் செய்துவைக்க கேட்டுக் கொண்டானாம். இவர்களும் சம்மதித்து விருந்து நடைபெற்றது. விருந்தில் அமர்வதற்கு முன்பு ஒரு பெரிய பானைக்குள்ளிருந்த மாட்டுத் தலையை இவர்கள் பார்க்க நேர்ந்தவுடன் அனைவரும் எழுந்து சுல்தானின் பிடிக்குள் இருந்து தப்ப ஓடினார்களாம். ஒக்கலிகர்கள், இடையர்கள். பசு இவர்களுக்கு தெய்வம். ஓடிய ஒக்கலிகர்களை சுல்தானின் படை துரத்தியது. இடையில் குறுக்கிட்ட ஆற்றை இவர்கள் அதிசயமாய் கடந்து சென்றனர். இவர்களின் வேண்டுகோளை ஏற்று புங்கமரம் இவர்களுக்கு வளைந்து கொடுத்ததாம். ஆற்றின் வெள்ளத்திலிருந்து இவர்கள் இவ்வாறு தப்பிச் சென்றனர். கோரைப் புற்களுக்கிடையில் மறைந்து சென்றனர். இதன் காரணமாக புங்கமரத்தை இவர்கள் வெட்டமாட்டார்கள். கோரைப்புல்லில் தொடுத்த பாயில் இவர்கள் அமரமாட்டார்கள். கதையில் வரும் பாட்டி அடிக்கடி பேசுகிறாள். தனகோபால் பாட்டியை கேலி பேசுகிறான்.

ஒக்கலிககுலம் 48 கிளைகளை உடையது. திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ளது, இவர்களது குல தெய்வக்கோயில். 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடி வழிபாடு நடத்துவார்கள். ஒக்கலிகர்களின் திருமணம் மற்றும் பல்வேறு மரபுகளும் நாவலில் சொல்லப்படுகின்றன. விவாகரத்து ஒருமுறை அல்ல, மூன்று முறை செய்து கொள்ளலாம். இவர்களில் சில கிளைகள் தாலி கட்டுவதில்லையாம். தாலி கட்டாத நிலையில் தன் மனைவியோடு ராஜாங்கம் சென்றபொழுது அவனை சிலர் கேலி செய்து, ராஜாங்கம் அடிபட்ட கதையும் சொல்லப்படுகிறது. கன்னடம் இவர்கள் தாய்மொழி என்றாலும் வெளியில் இவர்கள் கன்னடம் பேசுவதில்லை. கன்னடத்தில் பேசினால் இவர்கள் அருந்ததியர் என்று சிலர் கேவலமாகப் பார்க்கின்றனர். இவர்கள் பசுமாடுகளை அதிகம் வளர்ப்பவர்கள். சித்தையன் கோட்டையை காலிசெய்து ரங்கசாமி வரும்பொழுது சுடலைமுத்துவிடம் 120 பசு மாடுகளை ஒப்படைத்தார். இவர்களின் முக்கிய தொழில் வேளாண்மை. வேளாண்மை பற்றிய விவரங்கள் நிறைய இடம் பெறுகிறது. நவீனமுறை வேளாண்மையும் விமர்சனத்திற்கு உள்ளாகிறது. இவர்கள் தமிழர்களாக வாழ்கிறார்கள். இந்தக் குடும்பத்தில் வரும் ஜெயகரன் திராவிட இயக்க அரசியல்வாதி. தேர்தலில் ஆர்ப்பாட்டங்கள் செய்கிறான். வேலை வாங்கித் தருவதாக 30 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு அப்புறம் ஏதேதோ சொல்லி சமாளிக்க முயற்சி செய்யும்

கதையும் நாவலில் இடம்பெறுகிறது. ஏற்கனவே கூறியபடி விடுதலைப் போராட்டத்தில் மல்லையா ஈடுபட்டார். இவர்களுக்குத் தனிக் கோயில்களும், சடங்குமுறைகளும் உள்ளன. இவையெல்லாமே நாவலில் பதிவு செய்து கொள்ளப்பட்டு உள்ளன. ஒக்கலிக சமூகம் பற்றிய விவரங்களை விரிவாக உள்ளடக்கி இருக்கிறது என்ற முறையில் இதை ஒரு வட்டார நாவல் என்று சிலர் கருத இடமிருக்கிறது.

நவீனத்துவம் என இன்று பகுத்துப் பார்க்கிற தலித்தியம் மற்றும் பெண்ணியப் பார்வைகளும் இந்த நாவலில் இடம்பெறுகின்றன. ரங்கசாமியின் தோட்டத்தில் வேலை பார்க்கும் காளியப்பன் சில மாதங்கள் கேரளாவுக்குச் சென்று ஏலத்தோட்டத்தில் வேலை பார்த்துவிட்டு திரும்புகிறான். தனக்கு வரவேண்டிய பாக்கியை காளியப்பன் தரவில்லை என்பதற்காக மரத்தில் கட்டி வைத்து அடிக்கிறார். காயத்திரியும் தங்கமும் வந்து காளியப்பனை விடுவிக்கின்றனர். தீபாவளியின்போது இவர்களே பலகாரம் எடுத்துக்கொண்டு சேரிக்குச் செல்கின்றனர். அடித்தது நம்ம முதலாளிதானே என்று காளியப்பன் சொல்லுகிறான்; நமக்கு நெருடுகிறது. நாவலில் வரும் பெண்கள் பல சமயங்களில் ஆண்களுக்கு அடங்கிப் போனாலும் தம் உரிமை பற்றிய நினைவுகளைச் சுமந்து கொண்டுள்ளனர். சௌடம்மா சார்பிலான நியாயம் தூக்கலாகத் தெரிகிறது. நாவலில் சுற்றுச்சூழல் சிக்கலும் இடம்பெறுகிறது. பெரியாரியம் என்று இனம் காணத்தக்க நாத்திகப் பார்வை நாவலில் இருக்கிறது.

நாவல் வாசிப்பு கதை நிகழ்ச்சிகள் மற்றும் பாத்திரங்கள் சுவாரசியம் உடையதாக இருக்க வேண்டும். இப்படி இருந்தாலே போதும் என்று க.நா.சு. பாணியில் சொல்லப்படும் வரையறையை முன் நிறுத்திப் பார்த்தால் இந்த நாவலை சிறப்பான நாவல் என்றே முதல் வாசிப்பிலேயே கூறிவிட முடியும். நாவலில் நிறைய நிகழ்ச்சிகள், மனிதர்கள் வருகிறார்கள். தட்டையான மனிதர்கள் என சொல்லத்தக்கவர்கள் நாவலில் அதிகம் இல்லை. சொந்த முகத்தோடுவரும் மனிதர்களே அதிகம். நாவலில் தனகோபால் காணும் வித்தியாசமான கனவுகள் வாசிப்புக்குச் சுவைதருகின்றன. தனகோபால் எல்லாவற்றையும் குடைந்து, குடைந்து ஆராய்கிறான். வேடிக்கையாகப் பேசுகிறான். அம்மாவிடம் இவனுக்கு நிறைய அன்பு. அப்பா ரங்கசாமி முரட்டுகுணம் உடையவரைப் போலத் தோன்றினாலும், காயத்திரியிடமும், தனகோபாலிடமும் மனமுருகி நிற்கிறார். கதையில் எல்லா வயதினரும் வருகிறார்கள். இந்த நாவலில் முதியவர்கள் எண்ணிக்கை சற்று அதிகம் என்று எண்ணக்கூடிய அளவுக்கு உள்ளது. பாட்டிமார்கள் மரபை விடாப்பிடியாக வற்புறுத்துகின்றனர். ஒக்கலிக சமூக வழக்கப்படி இவர்கள்

கடைப்பிடிக்கும் சடங்குகளில் ஒன்று, ஓர் இரவில் பெண்கள் தனி அறையில் செய்யும் மங்கள வழிபாடு. இப்படி சில மேலும் சம்பவங்கள். அங்கங்கே சில மறைமுகமான பாலுறவு காட்சிகள். குழந்தைகள் விளையாட்டிலும்கூட இப்படி ஒரு சித்தரிப்பு. கணவன்மார் தம் மனைவியை குரூரமாக தண்டிக்கும் வகையில் பெண்ணுக்குச் செய்யும் சித்திரவதை ஒன்றை ஆசிரியர் மிக நுட்பமாகச் சொல்லுகிறார். இந்தத் துன்பத்தை அந்தப் பெண் என்றுமே மறந்துவிடமுடியாது. பெண்ணை துன்புறுத்தி பணம் கேட்கிற பத்மாவின் கணவன் சுகுமாரன். திரும்ப தன் மனைவியை அழைத்துக் கொள்ள வரும்போது இவனை மாமனார் கன்னத்தில் அறைகிறார். அப்புறம் இவன் ஒத்துப் போகிறான். குழந்தை பிறப்பு முதல் இறப்பு வரை எத்தனையோ சடங்குகள். ஆணின் வீரம், நரித்தனம், பெண்ணின் ஓயாத உழைப்பு, பொறுமை, இப்படி எத்தனையோ சித்தரிப்புக்கள், பழிவாங்கல், கொலை முதலிய காட்சிகள். காடுகளில் சுதந்திரமாக திரியும் எருதுகள். காலரா ஊரில் பரவுகிறபோது எலிகள் கொல்லப்படல். நாய்க்குட்டி வளர்ப்பு. இப்படியும் காட்சிகள். இப்படி பக்கத்திற்கு பக்கம் நம் ரசனை உணர்வைக் கிளறுகிறது, காட்சிகளும், சித்தரிப்புகளும். எல்லா நிகழ்ச்சிகளும், மனிதர்களும் நாவலின் மையத்தோடு எங்கே, எப்படி இணைகிறார்கள் என்று நாம் பார்க்கவில்லை யென்றால் மையத்திலிருந்து விடுபட்டதாயிருக்கிற எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் கூடுதலாகவே ரசிக்கமுடியும். மையப்படுத்தல் என்பதை இந்த நாவலிலிருந்து விலக்கிப் பார்க்கமுடியும். மையப்படுத்தலை ஒதுக்கிவிடுகிறபொழுது நாவல் எழுதப்படும் முறை முற்றிலும் வேறுபட்டதாகத்தான் இருக்கமுடியும். வேணுகோபால் இந்த நாவலை இப்படி எழுதவில்லை. பழைய பாணியில் எழுதி உள்ளார். ஆகவே மையத்தோடு மனிதர்களும், நிகழ்ச்சிகளும் எவ்வாறு இணைகின்றன என்று நாம் பார்க்க வேண்டி உள்ளது. சீரங்கனின் பார்வைதான் நாவலில் உச்சமான பார்வை. சீரங்கனின் வழியே தெரியவரும் பார்வையின்மூலம் நாவலில் பல மனிதர்களை இணைத்து நாம் ரசிக்க முடியும். தனகோபால் டைபாய்டு காய்ச்சலின்போது வெறி ஏறியவனைப்போலப் பேசுகிறான். ஒரு கட்டத்தில் ஒரு சாமியாடி வெளிப்படுத்தியது போல உள்வீட்டு ரகசியங்களை வெளிப்படுத்துகிறான். நமக்கு பெரும் வியப்பாக உள்ளது. ரங்கசாமியின் முகம் நமக்கு நன்கு தெரிகிறது. சௌடம்மாவை ஜமீல் மதம் மாறச் சொல்லுகிறானாம். இவளுக்கு முடியவில்லை. இந்தக் குடும்பத்திற்கு அவள் திரும்பிவந்து சேரவும் முடியாது. அவளுக்கு என்ன ஆகுமோ என்று நாம் கவலைப்படுகிறோம். காயத்திரிக்கும், நித்தியாவுக்கும் அவர்கள் விரும்பிய வண்ணம் திருமணம் நடைபெறலாம் என்ற நம்பிக்கை நாவலை படித்து முடிக்கும்போது நமக்கு எழுகிறது. சித்தையன்கோட்டையை விட்டு

வெளியேறும் குடும்பம் எப்படியிருக்குமோ என்று நாம் கவலைப்படுகிறோம். வேலைவாய்ப்பு பற்றிய மனக்குறையை அசோக்குமார் வழியே அறிகிறோம். இப்படியெல்லாம் சுவையோடு வாசிப்பதற்கு இந்த நாவலில் நிறையவே உள்ளன. நாவல் வாசிப்பில் இது ஒரு பழங்காலம். இதை நாம் கடந்துவிட்டோமா?

நாவல் என்பதன் இலக்கணம் பற்றி ஜெயமோகன் ஒரு புயலைக் கிளப்பியிருக்கிறார். இது கிளப்ப வேண்டிய புயல்தான் என்பதில் ஐயமில்லை. சுவையான நிகழ்ச்சிகள் மற்றும் முற்போக்குப் பார்வை என்றெல்லாம் சொல்லி ஒரு நாவல் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியாது. ஜே.ஜே. சில குறிப்புகள் நாவல் கொந்தளிப்பு என்னும் தத்துவத்தை மையம் கொள்கிறது. பூரணத்துவம் என்பது இல்லை என்றாலும் பூரணத்துவம் தேடி, இந்தத் தேட்டத்திலேயே தன்னை அழித்துக் கொள்கிற ஒரு கலைஞனின் கதையை சு.ரா. சொல்லுகிறார். வாழ்வின் பெரும் பரப்பு நாவலுக்குள் வந்திருக்கிறது. அறத்திற்கும் மறத்திற்கும் இடையிலான நம் கால குருச்சேத்திரப்போரை பொன்னீலன் புதிய தரிசனத்தில் சித்தரிக்கிறார். கவுரவர்களோடு ஒரு இறுதிப் போரில் பாண்டவர்களின் பக்கம் தான் நிற்பதாக நினைத்துப் போராடும் நாயகன் இறுதியில் பாண்டவர்களின் ஒரு பகுதியினர் கவுரவர்களோடு இணைந்திருப்பது கண்டு போர்க்களத்தில் இருந்து வெளியேறுகிறான். அநீதியை அழிப்பதற்கான போர் இன்னும் தீவிரமாக நெடுங்காலத்திற்கு நிகழவேண்டும் என்பதை உணருகிறான்.

இவைபோல பிரம்மாண்டமான பிரச்சனை எதையும் வேணுகோபாலின் நாவலில் நாம் காணமுடியவில்லை. சுவாரசியமாக எழுதியிருக்கிறார். 30, 40 பாத்திரங்களை ஆளுகிறார். தலைமுறைகளின் கதையைச் சொல்லுகிறார். இடைத் தொடர்புகள் குறைவாகவே உள்ளன. முற்போக்கு என்ற முறையில் கொஞ்சம் பார்வை செலுத்தவும் முடியும். வாசிப்பு என்ற முறையில் நமக்குள் கனம் சேர்த்துக் கொள்ளவும் செய்யலாம். கலை உணர்வு வேறு எந்தத் தமிழ் எழுத்தாளரைக் காட்டிலும் வேணுகோபாலிடம் கூடுதலாக உள்ளது. ஒக்கலிகர் வரலாறு சொல்வது என்று எடுத்துக்கொண்டு நாவலின் மையத்தை நழுவ விட்டுவிட்டாரோ? என்று எண்ணத் தோன்றுகிறது. கர்நாடகத்திலிருந்து வந்த இவர்கள் தமிழராகிவிட்ட கதையை நன்றாகவே சொல்லுகிறார். தமிழின் தலைசிறந்த நாவல்கள் வரிசையில் நிற்கும் தகுதிபடைத்த இந்த நாவல், நாவல் கலையின் உச்சத்தை எட்டவில்லை என்றுதான் மதிப்பிடமுடியும்.

– 18.9.97

பொன்னீலன் :
கொள்ளைக்காரர்கள்

தமிழில் தடம் பதித்துள்ள முற்போக்கு நாவலாசிரியர்களில், உணர்வழுத்தம், நுட்பமான கலை உணர்வு என்ற தனித்தன்மைகளோடு குறிப்பிடத்தக்கவர் "பொன்னீலன்". இதுவரை வெளிவந்துள்ள இவரது மூன்று நாவல்களிலும் சிறந்த நாவலாக மதிப்பிடத்தக்கது "கொள்ளைக்காரர்கள்". படித்து முடித்தவுடன் இந்த நாவலில் சட்டென்று புலப்படும் ஒரு 'குறை', குறுகலான கிடைமட்டப் பரப்பின்மீது செங்குத்தாக, பல அடுக்குகளை ஏற்றி இருப்பதுதான். பிற்பகல் நான்கு மணியிலிருந்து மறுநாள் காலை சுமார் ஆறு மணி வரை புஷ்பபாய் என்ற ஒரு பெண்ணின், தாயின் அழுத்தமான உணர்வுகளோடும், அனுபவங்களோடும் நாமும் உடன் செல்கிறோம். சுமார் இருபது ஆண்டுக்கால அவளது வாழ்வியல் அனுபவங்களும், அவளைச் சுற்றிலும் நிகழும் இருபதாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட செறிவான சமூக அனுபவங்களும் இந்தக் குறுகிய கால பயணத்தின்போது நமக்குள் கொட்டப்படுகின்றன. இவற்றின் அடியில் நாம் திணறித் தவிப்பதனால்தான் இது 'குறை' என்று நமக்குத் தோன்றுகிறது.

நாவலில் இடம்பெற்றுள்ள சமூக அனுபவங்களையும், தனி மனித அனுபவங்களையும் சேர்த்துக் கொள்வதற்கான கால அளவை இன்னும் விரித்துப் போட்டிருந்தால், இவ்வகை அனுபவங்கள் வழியே வாசகர்கள் பயணம் செய்வதற்கும், பயணத்தின்போதே தன் வாழ்வியல் அனுபவங்களையும் சேர்த்துச் செரித்துக் கொள்வதற்கும் ஆசிரியர் நமக்கு அவகாசம் தந்திருக்க முடியும். இந்நிலையில் சந்தேகமில்லாமல் நாவல் என்று இதற்குப் பெயர் சொல்வதை நம்மால் ஏற்க முடியும். தமிழிலும் பிற மொழிகளிலுமுள்ள ஒருநாள் அனுபவத்தின் வழியே வாழ்க்கையின் விரிந்த பரப்பை அலசிப் பார்த்துவிடுவது என்ற பாணியில், ஆசிரியர் ஒருவேளை இந்தப் படைப்பை உருவாக்கியிருப்பாரானால் இதைக் குறுநாவல் என்று பொருத்தமாக வகைப்படுத்தலாம். கதை என்றோ, நீண்ட கதை என்றோ இதற்குப் பெயர் சொல்வது பொருத்தமாகப் படவில்லை. பல திசைகளிலிருந்தும் வந்து மோதும் நெருக்கடிகளுக்கு இடையில் இருபதாண்டுக்கால அளவிலான பலவகை அனுபவங்களோடு புஷ்பபாயின் மனம் புரண்டு, புதிய ஒளியில் கிளர்ந்தெழுவதை உயர்வகையான கலையுணர்வோடு சித்திரிக்கும் முறையினால்தான் இந்தக் குறுநாவலில் பல பரிமாணங்களும் அடுக்குகளும் சேர்ந்திருக்கின்றன. இனி வசதி கருதி இக்குறுநாவலை நாவல் என்றே கட்டுரையில் குறிப்பிடலாம்.

2

நாவல் என்பது முதன்மையாக ஒரு கலைப் படைப்பு என்ற போதிலும் நாவலில் இடம்பெறும் மனிதர்களின் சமூக அனுபவங்களைச் சரிவரச் சித்திரிப்பதன்மூலம், நாவல் ஒரு சமூக ஆவணமாகவும், சிறப்புப்பெறும். 'கொள்ளைக்காரர்கள்' என்ற இந்த நாவல் எழுபதுக்கு முந்திய ஒரு கால் நூற்றாண்டு கால அளவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த சில வரலாற்று நிகழ்வுகளையும் சமூகச் சிக்கல்களையும் பதிவு செய்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைத் தமிழ் நாட்டோடு சேர்ப்பதற்கான போராட்டம் – பட்டம் தாணுப் பிள்ளையின் போலீஸ் அட்டகாசம் – குறைந்த கூலியில் தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள் என்பதற்காக கேரள எல்லைக்குள்ளிருந்த முந்திரிப் பருப்பு தொழிற்சாலைகள் தமிழ்நாட்டு எல்லைக்குள் இடம் பெயர்ந்தமை – நில உச்சவரம்புச் சட்ட கெடுபிடியிலிருந்து தப்பிக்க நிலங்களை விற்று விட்டு, தமிழ்நாட்டு எல்லையில் குறைந்த விலையில் எஸ்டேட்டுகளை வாங்கி, சில பத்தாண்டுகளில் பெரிய பங்களாக்களையும் செல்வங்களையும் சேர்த்துக் கொண்டமை – இத்தகைய வரலாற்று நிகழ்ச்சிகளையும், இவற்றோடு சம்பந்தப்பட்ட கொள்ளைக்காரர்களையும் இந்த நாவலில் நாம் காண்கிறோம்.

அறுபதுகளில் கடுமையான பஞ்சகால நிலைமைகளில் தமிழ்நாட்டு எல்லைக்குள்ளிருந்து கேரளாவுக்கு லாரிகளில் அரிசி கடத்திய கொள்ளைக்கார வியாபாரிகளையும், இவர்களோடு ஒத்துழைத்த அதிகார வர்க்கத்தின் அக்கிரமங்களையும் நாவல் பதிவு செய்கிறது. பத்து – இருபதாண்டுகளுக்கிடையில் கட்சிக்காரர் என்ற பெயரில் கூட்டுறவுச் சங்கங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் தலைவர்களாக அமர்ந்து மக்களின் நல்வாழ்வுக்கான ஆதாரங்களைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்டவர்களைப் பற்றியும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, போலித்தனமான போராட்டங்களில் ஈடுபடும் கட்சிக்காரர்களையும் 'கொள்ளைக்காரர்' வரிசையிலேயே ஆசிரியர் சேர்த்துச் சொல்லி இருக்கிறார். நாவல் நெடுக உணர்வு நெருக்கடிகளுக்கிடையில் தவிக்கும் புஷ்பபாயின் அவலங்களையும், அவலங்களுக்கிடையில் கிளர்ந்தெழும் போராட்ட உணர்வுகளையும் சித்திரிப்பதற்கான சமூக வரலாற்றுப் பின்னணியாகவும் இந்த விவரங்கள் பொருத்தமாக அமைகின்றன.

3

காலை நான்கு மணிக்கு எழுந்து பல பெண்களோடு சேர்ந்து இருபது மைல் நடந்து, நாஞ்சில் கிராமத் தெருக்களில்

பிச்சைக்காரிகளைப்போல கையேந்தி, ரூபாய் மூன்றுக்கு விற்ற அரிசியை ரூபாய் ஆறு என்றும், எட்டு என்றும் விலை கொடுத்து வாங்கி, பிற்பகல் நான்கு மணியிலிருந்து பஸ்ஸுக்காகக் காத்திருந்து, இரண்டாவது பஸ்ஸிலும் கண்டக்டரின் பிடிவாதத்தால் இறக்கப்பட்டு, இரவு மயங்கும் நேரத்தில் குறுக்கு வழியாக நடக்கும் பொழுது ஜீப்பில் வந்த அதிகாரிகளால், 'அரிசி கடத்தினர்' என்ற குற்றத்திற்காக அடிக்கப்பட்டு பாதை ஓரத்தில் பதுக்கிவைத்த அரிசியையும் இழந்து, நள்ளிரவில் வீட்டுக்குத் திரும்பும் புஷ்பபாயின் நெருக்கடிகளால் தாக்கப்பட்ட மன உணர்வுகள் கடுமையானவை; வழியில் தீப்பந்தத்தோடு தன்னை எதிர்ப்பட்டு, 'அரிசி கிடைக்கும் வா' என்ற ராஜம்மையின் அழைப்பை முதலில் மறுத்தாலும், பின்னர் அந்த அழைப்பின் தீவிரக் குரலுக்கு ஆட்பட்டு, பின்னிரவில் திரண்ட ஊர்வலத்தில் மெல்ல மெல்ல முன்னேறி, விடிகாலையில் லாரியை மறித்து, பின்னர் போலீசாரால் அடிபட்டு, உணர்விழக்கிறாள் புஷ்பபாய். இதுதான் புஷ்பபாயின் பனிரெண்டு அல்லது பதினான்கு மணிநேர உச்ச அளவில் மனம் தவித்து, புரண்டு, அப்புறம் ஒரு குறிப்பிட்ட திசையில் தன்னைத் திரட்டி, அத்தகைய திரட்டலில் தனக்குள் ஒளிர்ந்து, கனன்று, வெடித்த வாழ்க்கை; இந்த உணர்வு நெருக்கடிகளுக்கிடையில் புஷ்பபாயின் மன ஓட்டத்திற்குள் இணைந்தும், முரண்பட்டும், குறுக்கும் நெடுக்கும் வரும் மனிதர்கள் பலர். இவர்களில் முக்கியமானவர்கள் புஷ்பபாயின் தந்தை தேவசகாயம்; இவள் கணவன் ராஜையன். இவர்களைத் தவிர இவளுக்கெதிரிலிருந்த, இவள் வாழ்க்கையை ஒரு திசையில் திரட்டும் ராஜம்மை; அப்புறம் பாலையன். சிற்சில கணங்களே, புஷ்பபாயின் மன எல்லைக்குள் வந்தபோதிலும் நம் மனத்தில் அழுத்தமான சித்திரங்களாக நின்று மறையும் வேறு சில மனிதர்கள்.

இத்தகைய உணர்வெழுச்சிச் சித்திரிப்புகளால் இந்த நாவல் அசட்டு உணர்ச்சிக் கொந்தளிப்பாக (சென்டிமென்டலாக) மாறி இருக்கிறதா என்றால் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். உணர்வெழுச்சி மிக்க இத்தருணங்களில், தான் சம்பந்தப்பட்ட வாழ்க்கை மட்டுமல்லாமல், தன்னோடு உறவுடைய பலரது வாழ்க்கையும் புஷ்பபாயின் தீவிரமான அலசலுக்கும் பொருள்படுத்துதலுக்கும் உள்ளாகிறது. முன்னைய வாழ்க்கைத் தடத்திலிருந்து தன்னை முற்றாகப் பிய்த்துக்கொண்டு, ஒரு புதிய வாழ்க்கைத் தடத்தில் உற்சாகத்தோடு நடக்கத் தொடங்குகிறாள் புஷ்பபாய். இம்மாதிரி அணுகுமுறை 'இருத்தலியல்' என்று சிலரால் சொல்லப்பட்டாலும் பொன்னீலனுக்கு இப்படிச் சொல்வது உடன்பாடாக இருக்க முடியாது. இந்த அம்சங்கள்தான் இந்த நாவலை நம்மோடு

இணைக்கின்றன. இந்த நாவலுக்கான வெற்றியை இதன்மூலம்தான் நாம் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

4

வறுமையால் கேவலப்பட்டு, அதிகாரியினால் அடிக்கப்பட்டு, ஒரு பூச்சியைப் போலத் தூக்கி எறியப்படும் இந்தத் தருணங்களில், புஷ்பபாய், தன் தந்தையை நினைக்கிறாள்; குடிகாரக் கணவனையும் நினைத்துக் கொள்கிறாள்; தன் தம்பியை நினைத்துப் பார்க்கிறாள். தொழிற்சாலையில் தான் வேலை செய்த நாட்களை நினைத்துக் கொள்கிறாள். தம்பி, இரவில் பலரால் அடிபட்டபோதும் காலையில் மீண்டும் காலிலும் உடம்பிலும் கட்டுக்களோடு வந்து, டீக்கடை முன் பத்திரிகை படித்து, அரசியல் விமரிசனம் செய்யும் அவன் போக்கை இப்பொழுது நியாயமென நினைக்கிறாள். கன்னியாகுமரியை தமிழ் நாட்டோடு சேர்ப்பதற்கான போராட்டத்தில் சிறைப்பட்டு, சிறையிலிருந்து தப்பி வந்து, பின்னர் போலீஸ்காரர்களிடம் அகப்பட்டு, அப்புறம் காணாமல்போன (கொல்லப்பட்ட) தந்தையை நினைத்துக் கொள்கிறாள். எஸ்டேட்டில் வேலை செய்தபோது, எஜமானியின் கட்டளைக்கு எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தால், முதலாளியால் அடிக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டது முதல் தன் கணவன் குடிப்பழக்கத்திற்கு ஆளான சோகத்தை நினைத்துக் கொள்கிறாள். அதிகார வர்க்கமும் உடைமை வர்க்கமும் தன் வாழ்க்கையை அலங்கோலம் ஆக்கியிருப்பதை நினைத்துக் கொள்கிறாள். தன் வாழ்க்கைக்குள் பாறையென படிந்திருக்கும் இந்த வறுமை, பல நூற்றாண்டுகளின் வறுமை என்று உணர்கிறாள். காலங்காலமாக, தம்மைப் போன்றவர்களுக்குள் புதைந்து கிடக்கிற ஆன்மாவை, இருளைக் கிழித்துக்கொண்டு அதிலிருந்து புறப்பட்டு வருகிற ஒளியை உணர்கிறாள். ராஜம்மையின் கம்பீரமும் மன உறுதியும் அவள் அழைப்பை தன்னால் தட்ட முடியாததையும் உணர்கிறாள். தயங்கித் தயங்கி ஊர்வலத்தின் பின் பகுதியில் சேர்கிறாள். உச்ச அளவில் முழக்கங்களின் போது, சமூக உணர்வுகள் எனும் அலைகளின் மோதல்களுக்கிடையில் அவளுக்குள் அகன்று விரிந்து முன்னணிக்குச் செல்கிறாள். அரசு தடுக்காத அரிசி ஏற்றிய லாரியை தாங்கள் தடுத்தது கள்ளத்தனம் அல்ல, சமர் என்று போலீஸ் தடியடிகளுக்கிடையில் முழக்கமிடுகிறாள்.

இவ்வாறு தன் வாழ்க்கை, தன்னலம் என்ற உணர்வுகளுக்கு அடியில் குறுகி, புதைந்து சிறுத்துக் கிடக்கிற மனிதனை, சமூக மனிதனை, சில அனுபவங்கள் மூலம் அதிர்ச்சிக்குள்ளாக்கி, அவனை விழிப்புறச் செய்து; அவனுக்குள் ஆழத்தில் நீரோட்டம் போல ஓடுகிற சமூக உணர்வுகளில்,

போர்க்குணங்களில் அவனை மீண்டும் உசுப்பிவிடுகிற, அவனுக்குத் தன்னுணர்வை ஏற்படுத்துகிற தரிசனத்தை – ஓர் உயர்வகையான ஆளுமையை இந்நாவல் தருகிறது.

5

புஷ்பபாயின் இத்தகைய சமூக உணர்வெழுச்சிக்கு ஆதாரமானவை என்று கருதக்கூடிய சில குணங்கள், வறுமை மிக்க வாழ்வுக்கடியிலும் உயிர்த்திருக்கின்றன. தந்தை மறைந்ததோடு அவளது கனவுகள் சில அழிந்தன. நிலவிலிருந்து கீழிறங்கி, வெண்மையான உடைதரித்து கன்னி தேவதை தன் கருணையினால் உலகை வாழ்விக்கிற கனவு பிறகு அவளிடம் ஏற்படவில்லை. மூன்று குழந்தைகளுக்குத் தாய் என்ற முறையில் சோர்வில்லாமல் உழைத்தாள். கைக்குழந்தையின் ஆற்றாமையில் தனக்குள் பொங்கும் தாய்மை உணர்வில் தவித்துப் போனாள். நள்ளிரவில் தன் இரண்டாவது பையன், தனக்குப் பிரியமான நாய்க்குட்டியோடும் பசியோடும் உறங்குவதைப் பார்க்கிறாள். மூத்த பையன் உறங்குவதைப் பார்க்கிறபோது 'இவன் திருடியிருப்பானோ, பிச்சை எடுத்திருப்பானோ' என்று ஆதங்கப்படுகிறாள். மூப்பத்திக்கிழவி நள்ளிரவில் காய்ச்சித் தந்த கஞ்சியை உண்ண மறுக்கிறாள். பஸ் கண்டக்டர் "இறங்கு" எனக் கத்தியபோது தன்மானம் குறைவதை விரும்பாத அவள், தன் சின்னம்மையையும் கத்தி இறக்குகிறாள். தன் குழந்தைகளுக்குப் பாறையில் சுட்டுக் கொடுக்க விரும்பிய கிழங்குகளைத் தோட்டக்காரனுக்குத் தெரியாமல் தோண்டி எடுத்து, அந்த இடத்தில் அதற்கான காசுகளை வைத்துவிட்டுத் திரும்புகிறாள். தன் உடலையும், உள்ளத்தையும், சிரிப்பையும் இளைஞர்களுக்குத் தாராளமாகப் பகிர்ந்தளித்த ஓமனாவை அவள் வெறுத்தாளா? அரிசி கடத்தப்போய் அதிகாரிகளின் ஆசைக்கு இடம் கொடுத்து, பின்னர், தன் கருவைக் கலைத்து, உடல் நொடிந்துபோன சாந்தையை அவள் வெறுத்தாளா? இல்லை. அரிசியைப் பறிக்கவிடாத தாயின் வயிற்றில் பூட்ஸ் காலால் எட்டி உதைத்த அதிகாரியின் கையைக் கடித்து அவனால் அடிக்கப்படுகிறாள். தாயை ஜீப்பில் இழுத்துச் சென்றபோது அவளைத் தொடர்ந்து செல்லாத குற்றத்துக்காக வருந்துகிறாள். முன்னர் முந்திரிப் பருப்புத் தொழிற்சாலையில் இருந்து நீக்கப்பட்டபோது, தொழிற்சங்கத்தில் சேரவில்லையே என்பதற்காக இப்பொழுது வருந்துகிறாள்.

தன்னைச் சூழ்ந்திருக்கிற பெருமிதமான மலைத் தொடர்களோடும், நெடிது வளர்ந்திருக்கிற பலா முதலிய மரங்களோடும், வானத்தில் தவழும்

மேகத்தோடும் அவள் மனம் அடிக்கடி உரசி உறவு கொண்டு தவிக்கிறது. இலுப்பை மரப்பூக்களில் குடைந்து குரல் எழுப்பும் குயிலின் குரல், அவளுக்குள் எந்நேரமும் ஒலித்து வகைவகையான உணர்வலைகளை எழுப்புகிறது.

நாகரீகமான இளைஞன் ஒருவன் வழியில் எறிந்து விட்டுப்போன இயேசுவின் படத்தைத் தன் குடிசையில் மாட்டி வைத்திருக்கிறாள் புஷ்பபாய். கன்னியாஸ்திரீ ஆக வேண்டும் என்ற தன் இளமைக்கால கனவுகளை உதறி விட்டிருந்தாலும், சிலுவையில் அறையப்பட்டிருக்கும் இயேசுவோடு தன் மனத்திற்குள்ளேயே ஒரு இடையறாத உரையாடலில் புஷ்பபாய் ஈடுபட்டிருக்கிறாள். பஸ் நிறுத்தத்தில் நெடுநேரம் நின்று தவித்துக் கொண்டிருந்தபோதும், கொழுத்துப்போன முதலாளியின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கிறபோதும், எதிரில் பெட்டிக் கடைக்குள் அகங்காரம் பிடித்த கடைக்காரனின் பின்புறம் மாட்டப்பட்டிருந்த, தலை தொங்கிய இயேசுவின் படம், "பெண்ணே ! நான் என்ன செய்ய முடியும்?" என்று உருக்கத்தோடு அவளிடம் பேசுகிறது. பஸ்ஸில் பிறருக்கு இடம் கொடுக்க விரும்பாமல் இறுமாப்போடு அமர்ந்திருக்கும் கன்னியாஸ்திரீகளைப் பார்த்து "உங்களால்தானே இயேசு சிரமப்பட்டார் !" என்று தன் மனத்திற்குள் சொல்கிறாள். போராட்ட உணர்வு, தனக்குள் கொழுந்துவிடும் சமயங்களில், வானப்பரப்பில் மலை முகடுகளுக்கிடையில் சிலுவைக்குப் பதிலாக வாளேந்தி போராளிகள் பின்தொடரும் இயேசுவை அவள் காண்கிறாள். "தட்டுங்கள் – திறக்கப்படும்" என்ற வாசகம் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவள் நினைவில் புதிய புதிய அர்த்தங்களைத் தோற்றுவிக்கிறது. கடைசியாக, போலீஸ்காரனின் பூட்சாலும் தடியாலும் அடிபட்டு, தலையிலிருந்து வழியும் இரத்தம் கண்ணை மறைத்த நிலையில், "இயேசு கறுத்த சூரியனாய் – பாலையனாய்த் தெரிகிறார் ! – பாலையன் இயேசுவாய்த் தெரிகிறான்." ஊர்வலத்தில் மக்களைத் திரட்டி, போலீஸ் தாக்குதலின் போது தளர்வுறாமல் நிமிர்ந்து நின்றவன் இந்தப் பாலையன். இவ்வாறு புஷ்பபாய்க்குள் ஆறுதலாகவும் ஆற்றலாகவும் இயேசு தெரிகிறார். இயேசு ஒரு மனிதர் – ஒரு தோழர். போராட்ட வீரர், தலைவர் என்று பலநிலைகளில் அவளுக்குத் தெரிகிறார். இயேசு என்ற இறைவனுக்குள் ஒரு விடுதலை வீரன் உயிர்த்திருக்கிறான். இயேசுவைப்பற்றிய இந்த அர்த்தப்படுத்துதலை எந்த மதகுருவிடமிருந்தும் அவள் கற்கவில்லை – வாழ்க்கையிலிருந்தே கற்கிறாள்.

விடுதலை இறையியலார் இயேசுவைப் போராளியாக, மனிதராக, சித்திரிப்பதை உலக அளவில் மார்க்சிய வட்டாரத்தில் ஒப்புக்கொள்ளும் போக்கு ஏற்பட்டிருக்கிறது. இயேசு புரட்சிக்காரர் என்ற மதிப்பீடுகூட

ஏற்பட்டிருக்கிறது. பொன்னீலன் படைத்துள்ள புஷ்பபாயின் இயேசுவும் இத்தகையவர்தான். இதற்காகவும் பொன்னீலன் பாராட்டத்தக்கவர்.

இவ்வாறு பல பரிமாணங்களோடும் அடுக்குகளோடும் செறிவாக அமைந்திருக்கும் இந்த நாவல், படைப்பு என்ற முறையில் உயர்தரத்தை அடைந்திருக்கிறது. இவற்றின் இணைப்பில் செயற்கைத்தன்மை இல்லை. போலித்தனம் இல்லை. இக்காரணத்தால் இப்படைப்பு நம்மை வெகுவாகப் பாதிக்கிறது. அரசியல் ஆவேசம், கட்சிப் பிரசாரம் என்ற ஒற்றைப் பரிமாணத்தில் தவிக்கும் தட்டையான படைப்பாக இல்லாமல் பொன்னீலனின் நாவல் பலவகைப் பரிமாணங்களில் செழித்திருக்கிறது.

நாம் இதுவரையில் பார்த்த அளவில் ஒரு முற்போக்காளர் – மார்க்சியர் என்ற முறையில் பொன்னீலனின் நாவலில் சில கூடுதலான பரிமாணங்கள் நமக்குத் தென்பட்டிருக்கின்றன. இவை பற்றி விரிவான ஆய்வுக்கு இங்கு இடமில்லை எனினும் இவற்றைச் சுட்டிக் காட்டித் தொகுப்பது இங்கு தேவை.

முதலாளிகளிடம் செல்வம் சேரும் நெறியை உபரி மதிப்பு என்ற கோட்பாடு விளக்குகிறது. இந்தக் கோட்பாட்டை மனத்திலிருத்தி இந்த நாவலில் வரும் ஆதிக்கவாதிகளை முற்றாக விளக்க முடியாது. முந்திரிப் பருப்புத் தொழிற்சாலை நடத்தும் முதலாளி, முதலாளி அல்ல; எஸ்டேட் தோட்டங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, மிகக் குறைந்த அளவில் கூலி கொடுத்து வேலை வாங்கி செல்வம் திரட்டுபவனை முதலாளி என்று சொல்ல முடியவில்லை. உபரி மதிப்பு என்ற கோட்பாடு இங்கே எங்கே செயல்படுகிறது? இங்கே நடைபெறும் செயலைக் கொள்ளை என்றுதான் சொல்ல வேண்டும்! இவர்களுக்குத் தொழிலில் அக்கறை இல்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அக்கறை இல்லை. இவர்களிடம் குவியும் செல்வங்களை மீண்டும் தொழில் வளர்ச்சியில் ஈடுபடுத்துவதில்லை. அரிசி கடத்தும் வியாபாரிகளை முதலாளி வர்க்கத்தில் சேர்க்க முடியாது. இவர்கள் எல்லோரும் கொள்ளைக்காரர்கள். ஆதிமூலதனத் திரட்டலுக்காகப் பல நாடுகளில் நடைபெற்ற கொள்ளைகளோடு தான் இவர்களுடைய கொள்ளைகளையும் வைத்துப் பேசமுடியும். இவர்கள் திரட்டும் கொள்ளைகள் ஆடம்பரப் பொருள் சேர்க்கைக்கும், சாராய உற்பத்திக்கும் அல்லது விநியோகத்துக்கும் அரசு அதிகாரிகளை அல்லது அமைச்சர்களை விலைக்கு வாங்குவதற்கும், தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளைக் கொள்ளை அடிப்பதற்கும் ஆதாரமாகின்றன. இதன்மூலம் மக்களின் வாழ்வும் செல்வ ஆதாரங்களும் மேலும் மேலும் நாசமாக்கப்படுகின்றன.

ஆகவேதான் இவர்கள் வன்முறையை அளவுகடந்து பயன்படுத்தித் தொழிலாளர்களை அடித்துப் போடுகிறார்கள்; பெண்களை மானபங்கப்படுத்து றார்கள்; கிடைத்ததை எல்லாம் பறித்துக் கொள்கிறார்கள்.

இந்தச் சூழலில் ஜனநாயக முறையில் அரசு அமைந்திருப்பதாகவோ, சட்டம் - ஒழுங்குக் காப்பாற்றப்படுவதாகவோ எண்ணுவதற்கு இடமில்லை. போராட்டம் என்றால் "முதலில் போராட்டத்தை நிறுத்திக்கொள், பிறகு பேச்சுவார்த்தைக்கு வா" என்பதுதான் இவர்களுக்குத் தேவையான ஜனநாயகம். "அரிசிக்கடத்தலை தடுத்து நிறுத்துவது அரசின் வேலை, சட்டத்தின் கடமை; இதை மக்கள் எடுத்துக்கொள்வது சட்டம் - ஒழுங்கை மீறும் செயல், இவை ஜனநாயகம் இல்லை" என்று இந்த அதிகாரிகளும் அரசும் சொல்கிறார்கள். நேரு காலம் முதலே மக்களுக்கு இதைத்தான் கற்பிக்கிறார்கள். அதிகாரிகளுக்குத் தம்மைக் கட்டுப்படுத்தும் சட்டம் எதுவுமில்லை, அரசுக்கும் இல்லை. ஆகவே இவர்களும் தான் வைத்ததே சட்டம், தான் எதுவும் செய்ய முடியும் என்று சொல்கிற கொள்ளைக்காரர்கள்! 'பொன்னீலன்' இந்தக் கொள்ளைக்காரர்களைச் சரியாகவே மதிப்பிட்டு இனம்காட்டி இருக்கிறார். இந்தக் கொள்ளைகளைப் பற்றிய மார்க்சிய வரையறை என்ன? என்ற இலக்கணம்தேடி வரையறுத்துக் கொள்ளாமல் கொள்ளை - கொள்ளைக்காரர்கள் என்றே பொருத்தமாகக் குறிப்பிடுகிறார்.

வறிய நிலையில் அறநெறிகள் பற்றிப் பேச வேண்டாம். வறுமை கொடியது. கலை உணர்வுகளை, அற உணர்வுகளை இது தகர்த்துவிடும். கலை / அற உணர்வுகள் மத்தியதர வர்க்கத்தாருக்கு உரியவை. கலை உணர்வுகள், அறஉணர்வுகள் தேவை என்று பேசுவதன் மூலம், முதலாளிய வர்க்கத்துக்கே கலைஞர்கள் சேவை செய்கிறார்கள். மனிதனின் அடிப்படைக் குணம் கலை உணர்வு அல்ல, அற உணர்வும் அல்ல; வர்க்கக் குணம்தான் - இப்படியெல்லாம் மார்க்சியம் பேசி, மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்துகிற முற்போக்காளர்களுக்கு மத்தியில் பொன்னீலன் தனித்தன்மையோடு தெரிகிறார். புஷ்பபாயின் தாய்மை உணர்வுகள் பற்றிச் சொல்லுமிடங்களிலும் அவளுடைய இயல்பான அறவுணர்வுகள், இயற்கையோடு கொண்ட ஈடுபாடுகள் பற்றிப் பேசும்போதும், பிரபஞ்சத்தோடும் தனக்குள்ளும் வெளியிலும் அவள் உறவு கொள்வது பற்றி சொல்லுமிடங்களிலும் 'பொன்னீலனின்' முற்றான தனித்தன்மை தெரிகிறது.

போராட்டத்தில் தனக்கு எதுவும் நேர்ந்துவிட்டால் குழந்தைகள்

என்ன ஆவார்கள் என்று அவளுக்குள் வேதனை ஏற்படும்போது, தன் தந்தையை நினைக்கிறாள். தந்தையும் இப்படித்தான் தன் குழந்தைகளை / தன்னை விட்டுச் சிறைக்குச் சென்றார்; செத்தும் போனார். தந்தை மாதிரியே இவளும் விதிப்படி நடக்கட்டும் என்று எண்ணுவது நமக்குள் இடறத்தான் செய்கிறது. (விதி என்று பேசுவது மார்க்சியத்தோடு ஒத்துச் செல்லுமா?)

போராட்ட உணர்வு தனக்குள் கிளர்ந்தெழும் முதற் கட்டத்தில் இன்றோடு அனைத்துக் கொடுமைகளும் அற்று ஒழியும் என்று புஷ்பபாய் நம்புகிறாள். கிணற்றின் ஓரத்தில் வளர்ந்திருக்கிற செடிகளில் பூப்பறிக்கும் சிறுமியைப்போல என்று அவளுக்குள் ஏற்பட்ட உற்சாகத்தை எச்சரிக்கையோடு ஆசிரியர் சொல்கிறார். உண்மைதான், பூப்பறிக்க ஓடும் அந்தச் சிறுமியை உள்வாங்கிக் கொள்ள அருகில் காத்திருக்கும் கிணறு பற்றியும் நுட்பமாகவே குறிப்பிடுகிறார். "இது தொடக்கம் – முடிவல்ல" என்ற உணர்வை வாசகராகிய நமக்குள் ஏற்படுத்துகிறார். "அரிசியைக் கைப்பற்றுவோம் – மக்களுக்கு வழங்குவோம்" என்ற நோக்கில் இந்தப் போராட்டத்தை உருவாக்கிய ராஜம்மையும் பாலையனும், குறிப்பிட்ட இந்தச் சூழலின் பொருளியல் சக்திக்கே கட்டுப்பட்டு இயங்குவதாகத் தெரிகிறது. அதிகாரிகளுக்கு எதிரான போராட்டமாக இது விரிவு பெறலாமே தவிர அரசுக்கு எதிரான, அரசு அமைப்பை மாற்றுவதற்கான போராட்டமாக இது விரிவுபெற இடமில்லை. இத்தகைய போராட்டங்கள் நாளடைவில் அரசு அதிகாரப் பெருக்கத்திற்கே வழி அமைத்திருப்பதையும், அரசு அதிகாரப் பெருக்கத்தின் விளைவாக இத்தகைய போராட்டங்கள் கடுமையாக நசுக்கப்பட்டு, அதன் விளைவாக இத்தகைய போராட்டங்களை முன்பு செய்த சக்திகள், இன்று அரசு அதிகாரத்தோடும் முதலாளியத்தோடும் ஒத்துழைப்பதில் முடிந்திருப்பதையும் நாம் அனுபவிக்கிறோம். புஷ்பபாய் பற்றிய பொன்னீலனின் எச்சரிக்கை உணர்வை ராஜம்மைக்கும் பாலையனுக்கும் சேர்த்துச் சொல்லியிருக்கலாம்.

மார்க்சியர் கலைத்துறையில் எதார்த்தவாதம் பற்றி வற்புறுத்துகிறார்கள். சமூக வாழ்நிலைதான் உணர்வைத் தீர்மானிக்கிறது என்ற அடிப்படையில் எதார்த்தவாதம் அமைகிறது. வறுமையின் கொடிய தாக்குதலாலும், அதிகாரத்தின் கடுமையான அடக்குமுறையினாலும் மக்களின் வாழ்வில் ஏற்பட்டிருப்பவை பசி, பட்டினி, கோழைத்தனம், திருட்டு, போக்கிரித்தனம் முதலியன. இவைதான் மனித இருப்பு என்றால் இவர்கள் மனிதர்களாகவும் இருக்க முடியாது. இவர்களிடம் அறஉணர்வும் கலை உணர்வும் தங்க முடியாது. "வரலாற்றை மாற்றுவோம்" என்ற புரட்சிகர உணர்வு இவர்களுக்குள் ஏற்படமுடியாது. "எங்களிடமிருந்து

பறித்தவற்றைத் திரும்ப பறிப்போம்" என்ற உணர்வில் சமூகத்தைப் புதியதாய் மாற்றியமைக்க முடியாது. வரலாற்றின் வழியாக, கலாச்சார சேமிப்பின் வழியாக, மனிதனுக்குள் திரண்டிருக்கும் ஆற்றல்களை, உணர்வுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒருவன் மார்க்சியவாதியாக முடியாது. "திரும்பப் பறிப்போம் – நாங்கள் அனுபவிப்போம்" என்ற உணர்வு ஆதிக்கவாதிகளின் உணர்வுதான். ஆதிக்கத்தை இவ்வாறு உள்வாங்கிக் கொள்வது மார்க்சியம் அல்ல. அண்மைக் காலத்தில் அடி வாங்கியிருப்பது இந்த மார்க்சியம்தான்.

பொன்னீலனின் படைப்பில் மனிதன் மையமாகி இருக்கிறான். பொருள், அதிகாரம், வறட்டுத்தனம் மையமாகவில்லை. சூழல் மனிதனைப் பாதிக்கிறது என்பது பாதி உண்மை; அந்தச் சூழலைத் தன் தேவைக்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பவன் மனிதன். இவ்வாறு கூறியவர் மார்க்ஸ். இந்த மனிதனை நெருங்கிச் செல்வதன் மூலம் பொன்னீலன் தன் படைப்பில் வறட்டுத்தனமான யதார்த்தவாதத்தைக் கடந்திருக்கிறார். கோட்பாட்டளவில் இந்தச் சிக்கல்களை பொன்னீலன் அணுகியதாகத் தெரியவில்லை என்றபோதிலும் ஒரு கலைஞன் என்ற முறையில் படைப்பாக்கத்தின் மூலம் தனக்குள் தெளிவு பெற்றிருக்கிறார். இதற்காகவும் இந்தப் படைப்பை நாம் பாராட்டலாம்.

பொய்யான தத்துவம் பேசி மக்களின் சோசலிச உணர்வுகளை அழித்துவரும் நம் காலத்தில் நாம் மீண்டும் "கொள்ளைக்காரர்கள்" போன்ற நாவல்களைப் படித்து நமக்குள் சமூக உணர்வுகளைத் தக்க வைத்துக் கொள்வது பொருந்தும். இதற்காகவும் நாம் பொன்னீலனைப் பாராட்டலாம்.

– டிசம்பர் 1996

பொன்னீலன் :
புதிய தரிசனங்கள்

பொன்னீலன் ஏழுமுறை இந்த நாவலை திருத்தி எழுதியிருக்கிறார். 91-ல் இறுதி வடிவத்தை எழுதி முடித்திருக்கிறார். தற்பொழுது சோவியத் யூனியனின் தகர்வு உறுதிப்பட்டிருக்கிறது. இந்தத் தகர்வைத் தொடர்ந்து சோசலிசம் என்ற கோட்பாடு கடுமையான கேள்விக்கு உரியதாக மாறியிருக்கிறது. இந்தப் புதிய சூழலை தனக்குள் உள்வாங்கி புதியதாக எழுந்துள்ள பிரச்சினைகளைப் பற்றிய தனது பார்வையை புதியதாக்கிக் கொண்டு இந்த நாவலின் இறுதி வடிவத்தை பொன்னீலன் தீர்மானித்திருக்க வேண்டும். புதியதாக வகுத்துக்கொள்ள வேண்டிய பார்வையில் பொன்னீலன் எத்தனை அளவு தன்னை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார் என்பது பற்றி உறுதி சொல்வதற்கில்லை. எனினும் புதிய பார்வை / புதிய தரிசனங்கள் நாவல் நெடுகிலும் வெளிச்சமிட்டுத் தெரிகிறது. புதிய தரிசனங்களுக்காக நம்மால் கொண்டாடத்தக்கது இந்த நாவல். மேலும் புதிய தரிசனங்களை நோக்கி நமக்குள் தூண்டுதலை ஏற்படுத்தக் கூடியது இந்த நாவல்.

"புதிய தரிசனங்கள்" தமிழின் மிகப்பெரிய நாவல். 1920 பக்கங்கள், மூன்று தொகுதிகள். முதல் பாகத்தில் 20 அத்தியாயங்கள். இரண்டாவது பாகம் 10 அத்தியாயங்கள். மூன்றாவது பாகம் 25 அத்தியாயங்கள். இந்தப் பாகங்களின் பிரிவுகளுக்கான ஆதாரங்கள் நாவலில் அடங்கியுள்ளன. முதல் பாகத்தில் அவசரநிலைப் பிரகடனத்தோடு முற்றுப்பெறுகிறது. இரண்டாவது பாக தி.மு.க. அரசு விலக்கப்பட்டதோடு முடிவடைகிறது. மூன்றாவது பாகத்தில் அவசர நிலை முடிவடைகிறது. மூன்று பாகங்களும் இப்படி கால அளவில் பிரிவு செய்யப்பட்டாலும் பாகங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கும்போது சமச்சீரான தன்மை உடையதாக இல்லை. ஒவ்வொரு அத்தியாயத்தினுள்ளும் பகுதிகள் அல்லது இயல்கள் என்று சொல்லப்படும் முறையில் செய்யப்பட்ட பிரிவுகள் ஒத்தனவாக இல்லை. ஒத்த தன்மை இல்லை என்பதை ஒரு குறையெனச் சொல்ல முடியுமா? இன்னும் சீர்படுத்தியிருக்கலாம் என்பதற்கு மேல் நாம் சொல்வதற்கில்லை. அத்தியாயங்களைப் பற்றிய பிரிவினை அல்லது வகுப்பில் நாம் காணும் ஓர் வியக்கத்தக்க தன்மை என்னவென்றால் அனேகமாக பெரும்பாலான அத்தியாயங்களை, முன்பின் தொடர்ச்சி பற்றி கவலை இல்லாமல் தனித்தனியே வாசித்து ஒரு முழுமையான அனுபவத்தை வாசகர் பெறமுடியும் என்பதுதான். சில அத்தியாயங்கள் அனந்தனூரில் பெரிய

தெருக்காரார்களால் செய்யப்படும் வன்முறைகள் பற்றியதாக இருக்கின்றன. தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக பெரிய தெருக்காரார்கள் தேவைப்படுகிறபொழுதெல்லாம் வன்முறையைப் பயன்படுத்தக் கூடியவர்கள். பிற சமூகத்தினர்பால் வன்முறை செலுத்துவதோடு தன் சமூகத்தைவிட்டு விலகிச் செல்பவரிடத்தும் அப்படி விலகிச் செல்லக்கூடாது என்பதற்காக இவர்கள் வன்முறையைச் செலுத்துகிறார்கள். சுகுமாறன் மேல் இவர்கள் செலுத்தும் வன்முறை இத்தகையது. வன்முறை பற்றிய விவரிப்புகள் குறிப்பிட்ட அத்தியாயங்களில் மிக விரிவாகவே இருக்கின்றன. திரைப்படங்களில் வன்முறைக் காட்சிகள் கூடுதலாக இடம்பெறும்பொழுது எத்தகைய விமரிசனத்தை முன்வைக்கிறோமோ, அதே மாதிரியான விமரிசனங்களை இத்தகைய அத்தியாயங்களின் மீதும் நாம் சொல்ல முடியும். வன்முறையைச் சற்று அடக்கமாக ஆசிரியர் வாசித்திருக்க முடியும் என்று தோன்றுகிறது. ஒரு பெரும் கதையைச் சொல்கிறபொழுது மனிதர்கள் அல்லது நிகழ்ச்சிகள் பற்றி துப்பறிகிற அல்லது துப்புத்துலக்கும் ஒரு போக்கு இயல்பான ஒரு செயல்பாடு. நாவலில் இந்த அம்சமும் அழுத்தமாகப் பதிந்திருக்கிறது. துப்புத்துலக்கும் நாவல் என்ற விபத்து நிச்சயமாக இந்த நாவலுக்குள் இல்லை. ஆண் – பெண் உறவைப் பற்றிய ஆபாச சித்திரிப்பு என்பதும் நாவலாக்கத்திற்குள் நேர்ந்துவிடுகிற விபத்து. விபத்தில் மாட்டிக் கொள்கிற அளவுக்கு சிலசமயம் பொன்னீலன் நெருக்கமாகச் செல்வது தெரிகிறது. எனினும் விபத்துக்களில் பொன்னீலன் மாட்டிக் கொள்ளவில்லை. சுவை கருதி சில விவரிப்புகளை இவர் செய்திருப்பதாகக் கொள்ளலாம். எனினும் இவற்றை இன்னும் கொஞ்சம் குறைத்திருக்கலாம். தமிழ் நாவல்களைத் தொடர்ந்து படிக்கிற ஒரு வாசகர், ஆபாசக் காட்சி வர்ணனைகள் வரக்கூடிய எவ்வளவு சந்தர்ப்பங்களை பொன்னீலன் தவிர்த்திருக்கிறார் என்று நினைத்துப் பார்க்கிறபொழுது பெரும் வியப்படையக் கூடும்.

அளவில் மிகப்பெரிய நாவல், நூற்றுக்கு மேற்பட்ட மனிதர்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள். கணக்கிட்டால் நூற்றுக்கு மேற்பட்ட மனிதர்களை இந்த நாவலில் நாம் காணமுடியும். நிறைய நிகழ்ச்சிகள், பல்வேறு வாழ்க்கைச் சூழல்கள்; அவசர நிலை இரண்டு ஆண்டுகளே தொடர்ந்தது எனினும் இரண்டு மூன்று தலைமுறைகளை, அதற்கும் அப்பால் எட்டிப் பார்க்கிற முறையில் உள்ளடக்கியிருக்கிறது இந்த நாவல். அனேகமாக ஒரு மனிதர் மாதிரி இன்னொரு மனிதர் இல்லை. ஒவ்வொருவருக்கும் அவர்க்கே ஆன தனிமுகம். வியக்கத்தக்க முறையில் இப்படி விரிந்து செல்கிறது இந்த அகண்ட காவிரி. இந்தக் கலைத்திறத்தின் செழுமைக்காகப் பொன்னீலனை நாம் எவ்வளவு

கொண்டாடினாலும் அதற்கு இவர் தகுதியுடையவர். ஒரு பெரிய நாவல் என்ற முறையில் ஒரு நாவல் தனக்குள் காவிய பரிமாணத்தைக் கொண்டிருக்க முடியும். இத்தகைய ஒரு நாவலை காப்பியம் என்றே கூட நாம் சொல்லிவிடலாம். இந்தப் பரிமாணத்தை 'புதிய தரிசனங்கள்' எட்டியிருக்கிறதா என்ற கேள்விக்கு, எட்டியிருக்கிறது என நம்மால் பதில் சொல்லமுடியாது. மனிதர்களுக்குள், நிகழ்ச்சிகளுக்குள், வரலாற்றுக்குள் இன்னும் ஆழமாக பொன்னீலன் தேடிச் சென்றிருக்க வேண்டும். அகண்ட காவிரி என்று இந்த நாவலைச் சொல்லுவது முற்றிலும் பொருத்தமுடையதுதான். அகண்டிருக்கிற அளவுக்கு இதில் ஆழமில்லை. ஆகவே நாவலாக இது தங்கிவிட்டது. காவியமாக இது பரிமாணம் பெறவில்லை. தமிழ் நாவலைப் பொறுத்தவரை நாம் இன்னும் ஒரு டால்ஸ்டாயை அல்லது தாஸ்தாயேவ்ஸ்கியை தோற்றுவிக்கவில்லை என்பதை நினைத்துப் பார்க்கிறபோது பொன்னீலனை நாம் குறைசொல்வதற்கில்லை. அதேசமயம் ஒரு அகண்ட காவிரி என்று நாம் மகிழ்ச்சி கொள்கிற அளவுக்கு தன் அகலத்தில் இது மிக விரிவாகவே இருக்கிறது. தி.ஜானகிராமனின் 'மோகமுள்' நிறைய மனிதர்களைக் கொண்டது என்ற முறையில் 'புதிய தரிசனங்களை'ப் பற்றி சிந்திக்கிறபொழுது மோகமுள்ளை நினைத்துக் கொள்ளலாம். 'தேரோடும் வீதி' நாவலில் நிறைய மனிதர்கள் இடம்பெறுகிறார்கள். ஆனால் மனிதர்களுக்குள் நாவல் நெடுகிலும் தொடர்ச்சி இல்லை. புதிய தரிசனம் நாவலில் நூற்றுக்கணக்கான மனிதர்கள் என்று சொன்னோம். இவர்கள் தொடக்கம் முதல் இறுதிவரை நம்மோடு வருகிறார்கள். அனேகமாக ஒவ்வொருவரும் என்று உறுதியாகச் சொல்லலாம். ஒவ்வொருவரும் அவரவர்க்கான குணத்தோடு, குணத்தில் ஏற்படும் இயல்பான மாற்றங்களோடு. இதற்காக பொன்னீலனின் கலைத்தேர்ச்சியைத் தமிழ் நாவலின் வளர்ச்சிப் போக்கில் வைத்துப் பார்த்து நாம் மதிப்பிடலாம்.

நமக்குப் பழக்கமான இதிகாசங்கள், இராமாயணமும் மகாபாரதமும். புதிய தரிசனங்கள் நாவலுக்குள் இந்த இதிகாசங்களின் பாதிப்பை, நாவலைப் படிக்கிறபோது வாசகர் உணரக்கூடும். அங்கங்கே மகாபாரதம் பற்றிய குறிப்புகள் வருகின்றன. பெரிய தெருக்காரர்கள், துரியோதனன் கூட்டத்தினர். இளைஞர் மன்றத்தினர் பாண்டவர்கள். நாவலில் இடம்பெறும் பாத்திரங்களின் பலபெயர்கள் இதிகாசங்களில் இடம்பெற்ற பெயர்கள். ராகவன், ஜானகி, ரகுராமன், ரங்கசாமி, கிருஷ்ணம்மாள், தேசிகன், அர்ச்சுனன், தியாகி ராமனாதன், மேகநாதன், சரோஜினி இப்படி பல பெயர்கள். கௌரவர்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்ட விதுரனைப் போல தியாகி ராமனாதன். பாண்டவர்களுக்காக தூது செல்கிற

கண்ணனைப்போல, ராகவன்தானே பெரிய தெருக்காரர்களிடம் தூது செல்கிறான். ஆயுதங்களோடு பலர் சூழ்ந்து கொண்டபோதும், திராட்சையை ஒவ்வொன்றாக எடுத்து நிதானமாக உண்டு, அப்புறம் அமைதியாக எழுந்து வெளியேறுகிறான். வனவாசம் பற்றிய பேச்சும் வருகிறது. கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையில் தொடங்கிய அந்த குருக்ஷேத்திரப் போர் இன்றும் தொடர்கிறது, இன்னும் முற்றுப் பெறவில்லை என்பதைப் போன்ற அர்த்தத்தை இந்த நாவல் கொண்டிருப்பதாக நாம் கருதலாம். இன்னும், இந்திராகாந்தியை மகிஷாசுரவர்த்தினியாக உருவகப்படுத்தல், ராவணன் போன்ற அரக்கர் பற்றிய குறிப்புகள், இந்தியாவின் தொன்மையான மதங்கள் பற்றி அங்கங்கே விளக்கங்கள், ராகவனுக்குள் இளமைக் காலத்தில் பதிந்திருக்கிற நிமிர்ந்த தோற்றத்துடன் கூடிய விவேகானந்தர், தாய்த்தெய்வம் பற்றிய பேச்சுகள் ஆக இவற்றையும் நாம் சேர்த்துப் பார்க்க முடியும். மனிதனின் ஆன்மீகம் பற்றி, மதம் பற்றி நாவலில் விரிவான உரையாடல்கள் நடைபெறுகின்றன. மதம் என்பது ஒரு அழிவுச்சக்தி என்ற கருத்தை இந்த நாவல் மறுப்பதாகவே நாம் கொள்ளமுடியும். மதத்தினுள் செயல்படும் மனித நேயம் பற்றி நாவல் விரிவாகச் சொல்லுகிறது. வைகுண்டப் பெருமாளின் எடுப்பான தோற்றம் இந்த நாவலுக்கு தனிக் கவர்ச்சி தருகிறது. இப்படி சொன்னவுடன் இந்த நாவலுக்குள் இடம்பெறும் காந்தியம் பற்றியும் நாம் சொல்லமுடியும். தியாகி ராமநாதன் மூலமும் தியாகி வேலையா மூலமும் இந்த நாவலில் காந்தியம் மரியாதைக்குரியதாக, இன்றைய சிக்கலான சமூக வாழ்வுக்கிடையிலும் இடம்பெறக் கூடியதாகச் சித்தரிக்கப்படுகிறது. பெரிய தெருக்காரர்கள் மத்தியில் அதாவது ஆதிக்கவாதிகளுக்கு மத்தியில் மாட்டிக் கொண்டு அவர்கள் வகுத்திருக்கிற எல்லையை முற்றாகக் கடக்கமுடியாதவராக தவிக்கும் காந்தியவாதி தியாகி ராமனாதன். உழைப்பவர் கூட்டத்தினுள் இருந்து தோன்றியவர் தியாகி வேலையா. பெரிய தெருக்காரர்களின் எல்லைக்குள்ளிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள இவரால் முடிந்திருக்கிறது. இந்தியாவில் மதம், கடந்த சில பத்தாண்டுகளாகப் பெற்றிருக்கிற குரூரமான ஒரு வடிவம் ஆர்.எஸ்.எஸ். இயக்கம். நாவலில் இடம்பெறும் பிரேம் இந்த இயக்கத்தை தனக்குள்ளான ஆணவத்தோடு வெளிப்படுத்துகிறான். நாராயணசாமி கோவில் எளிய பூசாரி அண்ணாமலையை, ஏழைகளோடும் ஒருவனாக தன்னை இணைத்துக் கொண்டிருந்த அண்ணாமலையை இந்த ஆர்.எஸ்.எஸ். கடத்திக் கொண்டு போயிருப்பதையும் இந்த நாவல் சொல்லுகிறது. தற்கால நாவல் என்பது முன்னைய மரபின் பகுதியாகிய மதங்கள், இதிகாசங்கள், தத்துவங்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியான சில பரிமாணங்களைத் தனக்குள் கொண்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்களாக, நாம் மேற்கூறிய சிலவற்றைக் கொள்ள முடியும். நாவலுக்குள் ஒரு ஆன்மீகப்

பரிமாணம் இயல்பாக இடம்பெறுவதை இந்த அம்சங்களிலிருந்து நாம் புரிந்து கொள்கிறோம். எதார்த்தவாத நாவல் என்ற படைப்பு முறையில் ஊன்றியிருப்பவர் பொன்னீலன். எதார்த்தவாதப் படைப்பு முறையை சிறப்பாக இந்த நாவலில் பொன்னீலன் கடைப்பிடித்திருக்கிறார். தமிழ் நாவலின் பரப்பை இந்த எதார்த்தவாதப் படைப்புமுறை மூலம் விரிவுபடுத்தியிருக்கிறார். எதார்த்தவாத நாவலாக்கத்திற்குள்ளும் பொன்னீலன் கொண்டு வந்திருக்கும் கார்க்கித் தன்மை பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். கார்க்கியின் மனிதன் கம்பீரமானவன். உழைப்பிலிருந்து தன் மனிதப் பண்பை, மனித மாண்பை, ஆன்மீகச் செருக்கை, பிரபஞ்ச அளவில் தன்னைக் கரைத்துக் கொள்கிற தன்மையைப் பெறுகிறவன் இந்த கார்க்கி மனிதன். பொன்னீலனுக்குள் இந்த மனிதன் இயல்பாக எழுச்சி பெற்றிருக்கிறான். இயற்கையின் அழகுகளை எப்பொழுதும் தனக்குள் வரித்துக் கொள்கிறவன் இந்த மனிதன். தன் தோட்டத்துப் பலாமரத்தோடு ராகவன் எவ்வளவு ஆழமாக ஒன்றியிருக்கிறான். பலா மரத்தின் ஒரு சின்ன இலை இவனுக்குப் போதும். அதற்குள் பலாமரத்தையே காண்கிறான். பலாமரத்தின் வழியாக இவன் பிரபஞ்சம் வரை விரிந்து செல்லவும் முடியும்.

தமிழ் நாவல்களில் இடம்பெறும் முக்கியமான ஒரு அம்சம் குடும்ப வாழ்க்கை பற்றிய சித்தரிப்பு. 'புதிய தரிசனங்கள்' நாவலில் பல குடும்ப வாழ்க்கை சொல்லப்பட்டிருக்கிறது. குடும்ப வாழ்க்கையில் கணவன் மனைவிக்கிடையிலான சித்தரிப்பிற்கும் திருமணத்திற்கு முற்பட்ட காதல் வாழ்க்கை பற்றிய சித்தரிப்பிற்கும் தமிழ் நாவல்கள் கூடுதலாக இடம் தருகின்றன. கணவன் மனைவிக்கிடையிலான உறவில் ஏதாவது ஒன்றுக்கு அழுத்தம் தரும் முறையில் ஒற்றைப் பரிமாண சித்தரிப்பும் ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களுக்கு அழுத்தம் தரும் முறையிலான சித்தரிப்பும் தரப்படுகின்றன. கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றி இவர்களுக்கிடையில் பிரிவு நேர்தலும் பிரிவுக்கு முன்னரோ பின்னரோ ஆணுக்கு இன்னொரு பெண்ணுடன் உறவு நேரிடுவது என்ற முறையிலும் குடும்ப வாழ்க்கை பற்றிய சித்தரிப்புகள் அமைகின்றன. சீதனம் அல்லது வேறு கொடுமை காரணமாக கணவனை விட்டு மனைவி தன் சகோதரர் வீட்டுக்கு வருகிறாள். தன் அண்ணியோடு அன்பாகப் பழகுகிற அவள் கொழுந்தன் மீது அண்ணனுக்கு சந்தேகம் ஏற்படுகிறது. ஆணைக்காட்டிலும் பெண் எதார்த்தத்தோடு அதிகம் ஒன்றி இருக்கிறாள். ஆண் அரசியல் அல்லது தொழில் உலகத்தோடு தன்னை முற்றாக இணைத்துக்கொண்டிருக்கிறான். எதார்த்தம் நோக்கி அவனை இழுத்து வரக்கூடியவளாக பெண் இருக்கிறாள். விதவைக்கு வாழ்க்கை

தேவையில்லையா? அன்பு தேவையில்லையா? ஆனால் விதவையை சமூகம் பந்தாடத்தான் செய்கிறது. சாதிப்பிரிவினை தவிர ஏற்றத்தாழ்வுகள் மனிதரின் காதலை அழிக்கத்தான் செய்கின்றன. குடும்ப வாழ்க்கையில் பெற்றோருக்கும் மகனுக்குமிடையில், குறிப்பாக தந்தைக்கும் மகனுக்குமிடையில் சில சமயம் பிரச்னைகள் முற்றிவிடுகின்றன. மகனுக்காக தாய் தவிக்கிறாள். இப்படியெல்லாம் குடும்ப வாழ்க்கை பற்றிய சித்தரிப்புகள் பல்வேறு வகைப்பட்ட வடிவங்களும் வண்ணங்களும் பெறுகின்றன. 'புதிய தரிசனங்கள்' நாவலில் இவ்வகைச் சித்தரிப்புகள் விரிவாகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றன.

ராகவன் மனைவி ஜானகி ராகவனை எப்பொழுதும் எதார்த்தத் தளம் நோக்கி அன்பாக நயமாக ஒரு கேலிப் புன்னகையோடு இழுக்கிறாள். சுகுமாரன் தன் மனைவி மோகனாவோடு கடுமையாகப் போராடுகிறான். அவள் இரண்டு லட்சம் சீதனம் கொண்டு வந்தவள். அவளுக்கு கிராம வாழ்க்கை பிடிபடவில்லை. ஒரு சிறு நகரத்தில் சுகுமாரன் ஒரு ஜவுளிக்கடை வைத்துக் கொள்ளவேண்டும் என்று அவனைத் தூண்டி, விரட்டி, தன் சீதனப் பெருமை சொல்லி அவமதிக்கிறாள். இவனுக்குத் தோட்டம் பிடிக்கிறது. உழைப்பு பிடிக்கிறது. ஜோதியின் அன்பும் அழகும் பிடிக்கின்றன. இறுதியில் இவன் உறவுக்காரர்களால் பெரிய தெருக்காரர்களால் கைவிலங்கிடப்பட்டு, அப்புறம் பைத்தியக்காரனாக தெருவில் திரிகிறான். கடத்திச் செல்லப்பட்ட ஜோதி எங்கோ ஒரு கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். அப்புறம் அவள் முகம் நமக்குத் தெரியவில்லை. பூரணி விதவை, தொழிலாளி, பலரிடம் கை மாறியவள். இன்னொரு தொழிலாளி வலம்புரியோடு வாழ விரும்புகிறவள். காளியப்பன் இவளைக் கவர்ந்து கொண்டான். இன்னொரு கட்டத்தில் இசக்கி என்ற கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். நாவலின் இறுதியில் பூரணி திரும்பவும் மலர்ந்த முகத்தோடு நம் முன் வருகிறாள். பெரிய தெருக்காரர்களால் நொறுக்கப்பட்ட குடியிருப்புக்காரர்களுக்கு உதவி செய்கிறாள். வலம்புரிக்கு தன் அன்பான முகம் காட்டுகிறாள். பூரணிக்குள்ளும் காதல் சுடர்விடத்தான் செய்கிறது – சேற்றுக்குள் விளைகிற செந்தாமரை மாதிரி.

இந்த நாவலில் சில அற்புதமான காதல் கதைகள் இடம்பெற்றுள்ளன. செல்லையாவும் மீனாட்சியும் அன்பான காதலர்கள். இவர்களைப்போலவே தேசிகனும், செண்பகமும். தேசிகனின் அன்பு இல்லை எனத் தெரிகிறபோது செண்பகம் தன் உயிரை அழித்துக் கொள்ள முனைகிறாள். அப்புறம் இவளைக் காப்பாற்ற தேசிகன் என்னமாய்த் துடிக்கிறான். செல்லையாவின் கடுமையான உழைப்புக்கு சற்றும் தளராது

ஈடுகொடுக்கிறவள் மீனாட்சி. இவள் கோபத்திற்குள்ளும் எப்பொழுதும் குளிர்ச்சியே நிறைந்திருக்கிறது. நடேசன் மீனாவைக் காதலிக்கிறான். இந்தக் காதல் ஒரு தனிவகை. மீனாவுக்கு கம்யூனிசம் கற்றுக் கொடுக்கிறான் நடேசன். அப்பொழுதெல்லாம் மீனாவின் உடை, செருப்பு எல்லாமே சிவப்பாக இருக்கும். கட்சி வேலைக்கிடையிலும் மீனாவைத் தேடிச் செல்கிறவன் நடேசன். நடேசனை தனக்கு அடிமைப்படுத்தத்தான் மீனா விரும்புகிறாள். முந்திரி ஆலை அதிபர் காளியப்பனின் மகள் மீனா. இவளை நடேசன் காதலிக்கலாமா? இந்தக் காதல் நிறைவேறுமா? தொழிற்சாலையில் போராட்டம் வெடிக்கிறபோது மீனாவின் சொற்களுக்குத் தொழிலாளர்கள் கட்டுப்படவில்லை. மோகன்தாஸ் வந்து சேர்கிறான். அவன் மீனாவைக் கொண்டு செல்கிறான். இனம் இனத்தோடு சேரும். நடேசனுக்கு இந்த ஏமாற்றம் தேவைதான். சிவப்பு உடையிலா / அலங்காரத்திலா கம்யூனிசம் கற்றுக்கொள்ள முடியும்? முதலாளிகளுக்கு கம்யூனிசம் ஏறத்தான் செய்யுமா? ஏழைகளுக்கிடையில்தான் காதலும் அன்பும் தேவை, அன்றியும் சாத்தியம். பொன்னீலன் சரியாகவே சித்தரிக்கிறார்.

பெரிய தெருக்காரர்கள் பற்றி கொஞ்சம் பார்வை செலுத்தலாம். மேகநாதன் மனைவி பர்வதம். இவர் மிகப்பெரிய மனிதர். ஆதிக்கவெறியில் இவர் தலை தடுமாறுகிறபொழுதெல்லாம் பர்வதம் எதார்த்தம் சொல்கிறவள்; காங்கிரசை நம்பி பயனில்லை, தி.மு.க.வில் சேர்ந்து விடுங்கள் என்கிறாள். திலகத்தை அடித்து நொறுக்குகிறவன் தங்கராஜா. சரோஜினியின் மேல் திருமாலுக்கு எப்பொழுதுமே சந்தேகம். ஆத்திரம் வருகிறபொழுதெல்லாம் அவளை அடித்து நொறுக்குவான். பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்ட பெண்கள் என்ன செய்யமுடியும்? ஆத்திரம் இருந்தாலும் அடங்கிக் கிடக்கிறார்கள். தவிர, பெரிய தெருக்காரர்களின் பெருமையை இவர்கள், கணவன்மார்களுக்காகக் காப்பாற்றி வைக்கவேண்டும். ஆடையும் அணிகலன்களும் வகைவகையான உணவும் இவர்களின் வாழ்வை நிறைத்துக் கொள்கின்றன. சுகுமாரன் ஜோதியைக் காதலிப்பதை சரோஜினியால்கூட சகித்துக் கொள்ள முடிவதில்லை. இப்படித்தான் இவர்களுக்கு வாழ்க்கை என்று பொன்னீலன் சொல்வதாகத் தெரிகிறது. குடும்பத்துக்கு வெளியில் இவர்கள் உறவு கொண்டிருக்கிறார்கள் என்ற முறையில் இவர்களை மாசுபடுத்தவில்லை பொன்னீலன். இந்தப் பெரிய மனிதர்கள் தம் மனைவியரைச் சந்தேகிக்கலாம், கேவலப்படுத்தலாம். பொன்னீலன் கேவலப்படுத்தவில்லை. இவருக்குள் நிறைந்திருக்கிற மனிதநேயம் பரிதாபத்துக்குரிய அந்தப் பெண்களைக் கேவலப்படுத்த முடியாது.

தீ.

நாவலில் சிலரது குடும்பவாழ்க்கை முழு அளவில் சொல்லப்படுகிறது. ராகவனின் தாய், மனைவி, இரு குழந்தைகள், ராகவனின் படிப்பு, அரசியல்; உலகம்மை வேதம் படித்தல், குழந்தைகள் தோட்டத்தில் விளையாடுதல், அப்பாவோடு கொஞ்சுதல் என்று தொடங்கி ராகவன் குடும்பத்தை முழு அளவில் நாம் காண்கிறோம். மேகநாதன் இவர்களுக்கு உறவினன். ராகவனின் அரசியல் வாழ்வில் கடுமையான ஏற்றத்தாழ்வுகள். இவனுக்கு நிறையத் தோழர்கள். ஜானகி எல்லாவற்றுக்கும் விரிந்து இடம் தருகிறாள். செல்லையாவின் குடும்ப வாழ்வு இதே அளவில் முழுமையானது. குளக்கரை மேட்டில் நிலம் திருத்துகிறான். அப்பா ஆறுமுகம் எவ்வளவு கிடைத்தாலும் குடிக்கிறவர். நிலச்சொந்தக்காரர் என்று சொல்லி உரிமை கொண்டாடி நிலத்தின் உரிமையைப் பறிக்கிற சிதம்பரதாணுவின் காலில் விழுகிறவர் ஆறுமுகம். ஒரு நாடகம்போலக்கூட இதை அவர் செய்திருக்கக் கூடும். இவர் எல்லாவற்றையும் குடிவெறியில் செய்கிறவர். செல்லையாவின் தங்கை செண்பகம். காதலி மீனாட்சி. அம்மா உலகம்மை. இவர்கள் அனைவரும் உழைப்பின் திருவுருவங்கள். தன்நிலத்தை, விளைச்சலை உயிரெனக் காப்பாற்றக்கூடியவன் செல்லையா. அப்பாவின் அடியை அன்போடு தாங்கிக் கொள்பவன். பெரிய தெருக்காரர்களின் ஆணவத்தை எள் முனையளவும் இவன் ஏற்க மாட்டான். இந்த ஆறுமுகம் தான் தன் மகன் செல்லையா அடித்து நொறுக்கப்பட்டபொழுது இதே குடிவெறியில் மேகநாதன் வீட்டுக்கு முன்பு நின்று சபிக்கிறார். கோட்டை அழியும். அதிகாரம் அழியும். கோட்டைகள் அழிந்த இடத்தில் கழுதைகள் மேயும். செல்லையாவின் சாவைத் தாங்கிக் கொள்ளாத நிலையில் ஆறுமுகத்திடம் வெடிக்கும் நெருப்பு இது.

சுடலையாண்டி, ஊசிக் காட்டான் என்று தொடங்கி குடியிருப்பில் இருக்கும் இன்னும் சிலர் பற்றியும் சொல்ல வேண்டும். வலம்புரியின் வீட்டின் முன் வந்து நிற்கிற இன்ஸ்பெக்டர் உள்ளே ஆயுதம் இருக்கிறதா என்று சோதனை போட வேண்டுமாம். உள்ளே இருந்தவர் இரு பெண்கள். வலம்புரியின் தாய் உறுதியோடு சொல்கிறார். "உள்ளே காலை வைத்தால் காலை வெட்டுவேன்". இன்ஸ்பெக்டர் காலை வைக்கவில்லை. பெரிய தெருக்காரர்களின் வாழ்க்கை அருவருக்கத்தக்கதென்கிறார். குடியிருப்புக்காரர்களின் உழைப்பையும் உற்சாகத்தையும் மேன்மைப்படுத்திச் சொல்கிறார் பொன்னீலன். இவர்களுக்குத் தத்துவம் தெரியாது. அரசியல் தெரியாது. கற்றுத் தந்தாலும் அதில் உறுதிகொள்ளத் தெரியாது. எனினும் இந்த உழைப்பாளிகள் தான் மனிதர்கள். மனிதர்களாக வாழ்கிறவர்கள். சுடலையாண்டி இறுதியில் மேகநாதனைப் பார்த்துக் கேட்கிறார். "என்

மகளுக்கு மாப்பிள்ளை பார்க்க நீ யார்?" தன் மகள் ஜோதியை இழந்த சோகத்தில் துடிக்கிறார் சுடலையாண்டி. இரவில் சுகுமாரனோடு ஜோதி இருந்தபோது வீட்டில் அவளைக் காணாத நிலையில் ஆத்திரப்பட்டு அரிவாளை எடுத்தவர் சுடலையாண்டி. எளியவர் வாழ்க்கையை பொன்னீலன் பெருமைப்படுத்துகிறார். இலக்கியம் என்பது பொன்னீலனிடத்தில் இப்படித்தான் நிறைவுபடுகிறது, அர்த்தப்படுகிறது. கரிச்சான், பாண்டி என்ற அடியாட்களும் இதே குடியிருப்பில் பிறந்தவர்கள்தான். ஆனால் ஆதிக்கச் சமூகம் இவர்களை அடிமை கொண்ட நிலையில் இவர்களின் மனிதப்பண்பை அழித்து சீர்குலைத்து இவர்களை அடியாட்களாக மாற்றியிருக்கிறது. மனிதர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பனவற்றை சொல்வதற்கான சிறந்த வடிவம் நாவல். மனிதர்கள் அவர்களின் பிரச்சினைகள் என்பன சமூகக் களத்தில் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில்தான் நடைபெறுகின்றன. இம்முறையில் சமூகத்தை, வரலாற்றைப் பதிவுசெய்வதாகவும் நாவல் அமைகிறது. நாவலாசிரியர்களின் சமூகக் கண்ணோட்டம், சமூகப் பிரச்சினை பற்றிய சித்தரிப்பில் ஒரு வடிவமைப்பை அல்லது கட்டமைப்பை முன்வைக்கிறது. மனிதன் என்றால் யார் என்பதில் தொடங்கி குறிப்பிட்ட காலச் சூழலில் எத்தகைய சமூகப் பிரிவுகளுக்கிடையில் எவற்றின் காரணமாக சிக்கல் அல்லது மோதல் ஏற்படுகிறது? மோதலின் வழியே மனிதர்கள் என்ன ஆகிறார்கள்? சிக்கலுக்குத் தீர்வு கிடைக்கிறதா? மரபோடு தொடர்புடையவர்கள் இவர்கள் என்ற முறையில் மரபை என்ன செய்கிறார்கள்? அல்லது மரபு இவர்களுக்குள் பெறும் மாற்றம் என்ன? குறிப்பிட்ட சூழலில் ஆண்கள், பெண்கள், எத்தகைய மாற்றம் பெறுகின்றனர்? – இவை பற்றியெல்லாம் நாவல் சித்தரிக்கிறது. மனிதர்கள் தமக்கென சில உளவியல் பண்புகளைக் கொண்டிருக்கிறார்கள். உளவியல் தேவை உடையவர்கள் மனிதர்கள். மனிதர்கள் புறஉலகத்தோடு கொள்ளும் உறவும் சிக்கலும் போலவே அக உலகத்தோடு கொள்ளும் முரணும் மிக முக்கியமானது. நம் சமூகத்தில் சாதி, மதம் என்பன சில குறிப்பிட்ட சூழலில் அதிக அளவு ஆற்றலைப் பெறுகின்றன. சாதி மோதல்கள் உருவாகின்றன. மதம் மோதல்களை உருவாக்குகிறது. புதிய தொழில்கள், புதிய வாழ்க்கை முறைகளை ஏற்படுத்துகின்றன. பழைய வாழ்க்கை முறையைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. புதிய தொழில்முறைகள் உருவாகும்போது மரபு முறையிலான தொழில்களில் ஈடுபட்டவர்கள் அழிந்துபோகிறார்கள். நில உடைமை செல்வாக்குப் பெற்றது ஒரு காலம். இயந்திரத் தொழில் செல்வாக்குப் பெறுவது நம் காலம். அரசு அதிகாரிகள் என்ற ஒரு சமூகப்பிரிவு நம் காலத்தில் பலம்பெற்று வருகிறது. அரசு அதிகாரத்தில் பங்குபெற கட்சிகள் முனைகின்றன. கட்சிகளுக்கிடையில் உள்ள இயல்பான முரண்கள், சிலசமயம் பகை

முரண்கள் ஆகின்றன. ஒரு கட்சி இன்னொரு கட்சியை அழித்தாக வேண்டும். ஒரு கட்சிக்குள்ளும் பிளவுகள் ஏற்படுகின்றன. பணத்திற்குத் தான் ஆதிக்கம் சேர்கிறது. வியாபாரிகளும், லேவாதேவிக்காரர்களும் விரைவில் செல்வம் திரட்டுகிறார்கள். நம் அரசியல் சூழல் நாளுக்கு நாள் அதிக அளவில் போக்கிரிகளை உற்பத்தி செய்கிறது. சமூக வாழ்க்கையைச் சித்தரிப்பது என்று தொடங்கும் நாவல் சமூகப் பிரிவின் கிளைகள் வழியே, சிக்கல்களின் வழியே விரிந்து செல்கிறது. தனிமனிதனின் சூழல் என்பது, எப்பொழுதும் குறுகிய அளவில் அமைவதில்லை. தனிமனிதன் தனக்குள்ளும் புறத்திலும் சந்திக்கும் பிரச்சினைகள் எனத் தொடங்கினால் அகத்தினுள்ளும் புறத்தினுள்ளும் நெடும்பயணம் மேற்கொண்டாக வேண்டும். சிறுகதைக்குள்ளும், குறுநாவலுக்குள்ளும் விரிந்து செல்லும் வாழ்க்கை முழு அளவு அகப்படுவதில்லை. ஆகவேதான் நாவலைப் பெரிய அளவில் உருவாக்க வேண்டியிருக்கிறது. நான்கு அல்லது ஐந்து குறுநாவல்களின் தொகுப்பு என நாவலைச் சொல்ல முடியாது. நம் தேவை அல்லது வாய்ப்பு கருதி 200 அல்லது 300 பக்க அளவில் ஒரு நாவலை முடித்துக் கொள்ளலாம். இதற்குள் சமூக வாழ்க்கை போதுமான அளவில் அல்லது முழு அளவில் சொல்லப்படக் கூடுமா? ஒரு நல்ல நாவல் என்பது அங்கங்கே, இடைவெளிகள் விட்டிருக்க வேண்டும். வாசகன் தனக்குள் தொடர்ந்து செல்லும் முறையில் திறப்புகளை வைத்திருக்க வேண்டும். பொன்னீலன் உருவாக்கி வைத்திருப்பது பெரியதொரு விரிவான நாவல். சமூக வாழ்க்கை என்ற முறையில் கூடியவரையில் அதிக அளவில் சித்தரிப்பதற்கு இந்த நாவல் பொருத்தமானதாக இருக்கிறது. இதன் தகுதி பற்றி நாம் தொடர்ந்து ஆய்வு செய்யத்தான் வேண்டும்.

'புதிய தரிசனங்கள்' நாவலில் பொன்னீலன் எத்தகைய சமூகத்தைச் சித்தரிக்கிறார்? சமூகப் பிரச்சினைகள் என எவற்றைச் சொல்லுகிறார்? எத்தகைய வரலாற்றுச் சூழலில் வைத்துச் சொல்கிறார்? தீர்வு சொல்கிறாரா? என்றெல்லாம் நாம் தொடர்ந்து கேள்விகள் எழுப்பலாம். சுருக்கமாக சிலவற்றைச் சொல்லலாம்.

அனந்தனூர் கிராமத்தில் மேட்டுக்குடிகள் என பெரிய தெருக்காரர்களைச் சொல்லலாம். சென்ற நூற்றாண்டில் இவர்கள் சமூகத்தின் அடித்தளத்தில் இருந்தவர்கள். அப்புறம் படிப்படியாக சமூகத்தோடு மோதி, எழுந்து சமூகத்தின் உயர்மட்டத்துக்கு வந்திருக்கிறார்கள். நாகர்கோவிலைச் சுற்றியுள்ள கன்னியாகுமரி மாவட்டம்தான் நாவலின் களம். ஆகவே பெரிய தெருக்காரர்கள் நாடார் என்ற சாதிப் பிரிவைச் சேர்ந்தவர்கள். சாதிப்பெயர் நாவலில்

சொல்லப்படவில்லை. இந்த நுட்பம் ஒரு அழகு. பெரிய தெருக்காரர்களுக்கும் குடியிருப்பில் வாழ்பவர்களுக்கும் இடையில் இப்பொழுது கடும் பகை. இவர்களை நண்டு தின்னிகள் என்று பெரியதெருக்காரர்கள் விடாப்பிடியாக இகழ்ந்துரைக்கிறார்கள். இவர்கள் செல்வம் திரட்டி உயர்நிலைக்கு வருகிறபோது இவர்களைப் பார்த்து நண்டு தின்னிகள் என்று சொல்லி அவர்கள் மட்டம் தட்டுகிறார்கள். இப்பொழுதும் இவர்கள் நண்டு தின்னுகிறார்களா? நாவலில் இத்தகைய சித்திரிப்பு இல்லை. இவர்கள் நிலத்தில் உழைக்கிறார்கள். பெரிய தெருக்காரர்களிடம் நிலத்தைக் குத்தகை பிடித்து உழைக்கிறார்கள். சாதி வகையில் இவர்கள் பள்ளர்கள் என்று புரிந்து கொள்கிறோம். தாழ்த்தப்பட்டவர்கள் என இவர்கள் சொல்லப்பட்ட போதிலும் தாழ்த்தப்பட்டவர்களில் இவர்கள் மேல்நிலைக்கு வந்தவர்கள்; இன்னும் கீழ்நிலையில் உள்ள சாதிகளைப் பற்றி நாவல் சொல்லவில்லை. ஊரில் மேலத்தெருவும், நடுத்தெருவும் இருக்கின்றன. பெரிய தெருக்காரர்களைப் பொறுத்தவரை, ஊருக்குள் தமக்குக் கிடைத்த ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ள முனைந்து செயல்படுகிறார்கள். அடியாட்களைத் திரட்டிக் கொள்கிறார்கள். வன்முறையை நம்பித்தான் இவர்கள் தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இவர்களில் சிலர் அரசு அதிகாரத்தில் இடம்பெற்றவர்கள். இவர்கள் தொடர்ந்து அரசு அதிகாரத்தை ஊழலுக்கு உட்படுத்தவும் முடியும். மற்றபடி உள்ளே நுழைந்து பார்த்தால் இவர்களின் செல்வம் அழிந்து வருவதும் தெரிகிறது. பெரிய தெரு மேகநாதன் வியாபாரி ராமச்சந்திரனிடம் தொடர்ந்து கடன்பெற்று வருகிறார். தங்கராஜா கடன் பெறுகிறார். சுகுமாரன் தன் தோட்டத்தை அவரிடம் அடகு வைக்கிறான். ராமச்சந்திரன் கீழ்நிலையிலிருந்து மேலே வந்தவன். மலையாளத்து அழகியை மனைவியாக தன் வீட்டில் வைத்திருக்கிறான். அவனது வீடு, மிகப்பெரிய அலங்காரமான வீடு. பெரிய தெருக்காரனுக்கு ஆத்திரம்தான் வருகிறது. நண்டுதின்னி என்று இவர்களால் ஏசப்படுகிற சாதியிலிருந்து மேலுக்கு வந்தவர் காளியப்பன். முந்திரி ஆலை வைத்திருக்கிறார். இவர் மகன் செல்வேந்திரன் ஆலையை நிர்வாகம் செய்கிறான். பெரிய தெருக்காரர்கள், முந்திரியைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள். அவசரச் சட்டம் பதுக்கலை வெளிக்கொண்டு வருகிறது. முந்திரி விலை சரிவதைப் பயன்படுத்திக் கொண்டு தரமான முந்திரியைக்கூட விலையைக் குறைத்து செல்வேந்திரன் வாங்கிக் குவிக்கிறான். காளியப்பன் தந்திரம் தெரிந்தவர். தொழிலாளர்கள் பிரச்சினையை எப்படிச் சரிக்கட்டுவது என்பதைத் தெரிந்தவர். கட்சிக்காரர்களையும் சரிப்படுத்திக் கொள்கிறார். காளியப்பனின் வளர்ச்சியைக் கண்டு பெரிய தெருக்காரர்கள் ஆத்திரம் கொள்ளமுடியுமே தவிர காளியப்பனை அழித்துவிட முடியாது. குடியிருப்புக்காரர்களுக்கெதிராக

காளியப்பனை தங்களோடு சேர்த்துக் கொள்ளவேண்டும். அம்மன் கொடை நடத்துகிறார்கள். அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இந்த விழா வெற்றி தரவில்லை. அதற்கு மாறாக குடியிருப்பு இளைஞர்களின் தீவிர முனைப்பின் விளைவாக அவர்களைக் கோயிலுக்கு உள்ளே விட நேர்ந்ததோடு திருக்கண் சாத்துகிற உரிமையையும் அவர்களுக்குத் தரவேண்டியிருக்கிறது. குடியிருப்புப் பகுதிக்கு அம்மன்தேர் எடுத்துச் செல்கிற நிலவரமும் ஏற்படுகிறது. அம்மன் கொடையைப் பயன்படுத்தி குடியிருப்புக்காரர்களை ஒடுக்கும் அவர்களின் திட்டம் நிறைவேறவில்லை. இடையில் சில கடுமையான மோதல்கள். இறுதியாக, காளியப்பன் மகள் மீனா, மோகன்தாசின் காதலியாகிறாள். அரசு அதிகாரத்தின் உதவியால் மோகன்தாஸ் மிகப்பெரும் தரகு நிறுவனத்தின் அதிபர்; செல்வேந்திரன் அவனுக்கு மிக நெருக்கமான நண்பர். இவன் கூட்டாளியும் ஆகலாம். அவசர நிலையின் போது குடியிருப்புக்காரர்களை கொஞ்சம் பழிதீர்த்துக் கொண்டார்கள். அவசர நிலை ரத்து ஆனபோது குடியிருப்புக்காரர்களை மீண்டும் எதிர்தளத்தில் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. உடைமை வகையிலான முரண்பாடு மட்டுமல்ல இது. சாதி முரண்பாடும் சேர்ந்திருக்கிறது. இப்பொழுதைக்கு இது தீராது. இளைஞர் மன்றத்தை உருவாக்கியதன்மூலம் குடியிருப்பு மக்கள் இவர்களுக்கான எதிரணியை பலமாகக் கட்டியிருக்கிறார்கள். பிரச்சினை தொடர்ந்து முற்றுகிறபோது, பெரிய தெருக்காரர்களின் ஆதிக்கத்தை இவர்கள் சரியாகப் புரிந்து கொண்டு அவர்களின் பிடியிலிருந்து விலகிச் செல்கிறார்கள். காளியப்பன் என்ற முதலாளியும் இவர்களை அடக்கி வைக்கத்தான் விரும்புகிறார். ஒரு கட்டத்தில் நாவல் முடிவடைகிறது. பிரச்சனைகளும் மோதல்களும் தொடரும். சீர்குலைந்துவரும் நிலஉடைமையும், பெருகிவரும் முதலாளியமும் தீவிரப்பட்டு வரும் அரசு அதிகாரமும் இணைந்து ஓர் அணியில் நிற்கின்றன. எதிர்அணியில் அடித்தளமக்கள். சாதிப் போராட்டம் அதன் உள்ளடக்கத்தில் வர்க்கப் போராட்டமாக மாறி வருகிறது.

பெரிய தெருக்காரர்கள் தமக்குள் ஒரு கட்டமைப்பாக இல்லை. அவர்களுக்குள் முரண்கள் செயல்படுகின்றன. சுகுமாரன் இவர்களிடமிருந்து பிரிந்து இளைஞர் மன்றத்தினரோடு கொஞ்ச காலம் சேர்ந்திருந்தான். இப்பொழுது அவனை அடித்து நொறுக்கி விலங்கிட்டு பைத்தியக்காரனாக்கியதன் மூலம் தமக்குள்ளிருந்து அவனை வெளியேற்றிவிட்டார்கள். ஊர்த்தலைவன், பொன்னுசாமி; பொன்னுசாமி இவர்களோடுதான் இருக்கிறான். எனினும் அவனை தமக்குச் சமமாக நடத்துவதில்லை. இவர்களின் தேவையை அவன் நிறைவேற்றித் தரவேண்டும். ராகவன் படித்தவன். ஊருக்குள் செல்வாக்கு மிகுந்தவன்.

இளைஞர் மன்றத்தை உருவாக்கியவன். கட்சிக்காரர்கள்மூலம் இவன் செல்வாக்கு நெடுந்தொலைவு விரிந்திருக்கிறது. தேவைப்படுகிற பொழுதெல்லாம் மேகநாதனும் மற்றவர்களும் இவனைத் தம்பி என்பார்கள். மோகன்தாஸ் சித்தப்பா என்று அழைப்பான். இப்படி அழைப்பதினுள்ளும் ஒரு குத்தல் இருக்கும். ராகவன் இதனால் புண்பட்டானா? இல்லவே இல்லை. இவன் தன்னை வளர்த்துக் கொண்டிருக்கிறான். இளமைக் காலத்தில் விவேகானந்தரது வழியே தன்னைக் கண்டு அப்புறம் மார்க்சின் வழியில் தன் ஆளுமையைப் பெற்றிருக்கிறான். ராகவனை அழிக்க முடியாது. குடியிருப்பு இளைஞர்களோடு இவன் சேர்ந்தான். இவன் ஏன் சேர்ந்தான்? ராகவனின் தாய் அழகம்மை எப்பொழுதும் வேதம் படிக்கிறாள், இதிகாசம் படிக்கிறாள். பலருக்கு இவற்றின் அர்த்தம் சொல்கிறாள். இவளது அறிவு ராகவனுக்குள் வளம் சேர்த்திருக்கிறது. வைப்பாட்டியின் மகன் என்பதும், சாதியில் தாழ்ந்தவன் – நண்டு தின்னி என்பதும், ஒத்த அர்த்தச் செறிவுடைய கூற்றுகள். ராகவன், குடியிருப்பு இளைஞர்களுக்குள் தன்னைக் கண்டிருக்கிறான். ராகவனுக்குள் செயல்பட்டது ஞானமார்க்கம். கர்மயோகம் என்ற அடிப்படையில் அர்த்தப்படுகிற ஞானமார்க்கம். மார்க்சியத்தை நோக்கி இந்த நெறி அவனை உந்தியிருக்கக் கூடும். கட்சிக்குள் இருக்கும் அவனுக்குள் இன்னொரு முரண்பாடு முற்றி வெடிக்கிறது. சோசலிசமும் சர்வாதிகாரமும் / பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் ஒத்துப் போக முடியாது என்று அவன் முடிவுக்கு வருகிறான். மக்கள் தான் எதையும் தீர்மானிக்க வேண்டும். மக்கள்தான் வரலாற்று நாயகர்கள். ராகவனின் 'இழிந்த பிறப்பு' இப்படி அவனுக்குள் இயங்கியிருக்க முடியும். இந்தப் பரிமாணத்தை பொன்னீலன் ராகவனுக்குள் காணவில்லை.

பெரிய தெருவுக்கும் குடியிருப்பு பகுதியினர்க்கும் இடையில் ஏற்பட்ட இன்னொரு சிக்கலையும் இங்கு குறிப்பிட வேண்டும். செல்லையா குளத்துமேட்டில் பக்குவப்படுத்தி வேளாண்மை செய்யும் நிலத்திலிருந்து நிலச்சொந்தக்காரர் மூலம் செல்லையாவை வெளியேற்ற தங்கராஜா செய்த முயற்சி தோற்றுவிட்டது. அதைப்போலவே புறம்போக்கு நிலத்தில் குடிசை போட்டுகொண்டு அல்லது வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றி அந்த நிலத்தைத் தமக்குரியதாக மாற்றிக்கொள்ள பெரிய தெருக்காரர்கள் பெருமுயற்சி மேற்கொண்டனர். எங்களைக் கேட்டால் நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோமா என்றெல்லாம் கேட்டனர். மனுநீதி நாளுக்கு மாவட்ட ஆட்சியர் வந்திருந்தபோது வீட்டுமனைக்கு மனுச் செய்தவர்களை எப்படியாவது சமாளிக்கவும் முயன்றனர். இளைஞர் மன்றத்தினர் உறுதியாக இருந்து அவர்கள் முயற்சியை முறியடித்தனர்.

வீட்டு மனைகள் இவர்களுக்கு உரிமையாகியிருக்க வேண்டும். அந்த இடத்தில் இந்திரா நகர் எழுந்தது. அல்லது இந்திரா நகர் என்று பெயரிடப்பட்டது. இன்னும் ஒரு முயற்சியை பெரிய தெருக்காரர்கள் செய்தனர். இராமச்சந்திரன் சலவைத் தொழிலாளிகளையும் இன்னும் சிலரையும் அவர்கள் குடியிருக்கும் இடத்திலிருந்து வெளியேற்றி ஊர் மக்களின் நன்மைக்காக அங்கு ஒரு பூங்கா அமைக்கும் திட்டத்தை முதலில் ராகவனிடம் முன்வைத்தார். பின்னர் மேகநாதனிடம் சொன்னார். குடியிருந்தவர்களை வெளியேற்றி அந்த இடத்தை தான் பிடித்துக் கொள்வது இராமச்சந்திரனின் திட்டம். பூங்கா என்று சொல்வது பொதுநலத்தின் பெயரால் அவன் செய்ய விரும்பும் ஏமாற்று. சஞ்சய் காந்தியின் ஆளுகை தீவிரப்பட்ட நிலையில் குடியிருப்புப் பகுதிக்குள் புல்டோசர் வருகிறது. இராகவன் முதலியவர் தலைமறைவாக இருந்தனர். ஊசி கொண்டானும் சிவலிங்கமும் தாடி ரங்கசாமியின் உதவி கோரிச் சென்றனர். ரங்கசாமி மறுத்துவிட்டார். கலா முதலியவர்களோடு சென்று தங்கள் கொடியோடு புல்டோசருக்கு முன் தரையில் படுத்தனர். குடியிருப்பு நிலம் காப்பாற்றப்பட்டது. புறம்போக்கு நிலத்தை தங்கள் அனுமதியில்லாமல் அவர்கள் அனுபவிக்கக்கூடாது என்ற பெரிய தெருக்காரர்கள் திட்டம் இப்படி தோல்வியுற்றது. ஊருக்குள் கலவரம் மிகுந்த நிலையில், இனிமேல் இளைஞர் மன்றத்தோடு சேர்ந்திருக்கமாட்டேன் என்றெல்லாம் சிலரிடம் மிரட்டி வாக்குறுதி பெறவும் பெரிய தெருக்காரர்கள் முனைந்தனர். சந்தர்ப்பம் நேருகிறபோது செல்லையாவைக் கொல்ல வேண்டும், இளைஞர் மன்றத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் ஒழிக்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் செயல்படுகின்றனர்.

அனந்தனூர் கிராமத்தினுள்ளும் கட்சிகள் பல செயல்படுகின்றன. பெரிய தெருக்காரர்கள் காமராசர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள். அதாவது சின்டிகேட் காங்கிரசின் தொடர்ச்சியாக இருப்பவர்கள். இந்திராவின் ஆட்சி இவர்களுக்கு அறவே பிடிக்கவில்லை. அவசர நிலைப் பிரகடனத்தை இவர்கள் ஏற்கவில்லை. ஊருக்குள் இந்திரா காங்கிரசும் செயல்படுகிறது. நாராயணன் இதன் தலைவர், மாவட்டத் தலைவர் . முதலில் ராஜா, பிறகு சுப்பையா. முந்திரி ஆலை அதிபர் காளியப்பன் இப்பொழுது இந்திரா காங்கிரசில் இருக்கிறார். முன்பு அவர் திராவிட இயக்கத்தில் இருந்திருக்க வேண்டும். இந்திரா காங்கிரஸ் என்ற முறையில் இளைஞர் மன்றத்தினரோடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோடும் நல்லுறவில் இருக்கிறார். இந்திரா காங்கிரசுக்குள் சஞ்சய் காந்தி தலைமையிலான இளைஞர் காங்கிரஸ் வலுப்பெற்றபோது கம்யூனிஸ்ட்களை அடக்கி வைக்க வேண்டும் என்ற கருத்துடையவராக மாறுகிறார். முந்திரி ஆலையில்

தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அவசர நிலைப் பிரகடனத்தையடுத்து தொழிலாளர் போராட்டத்துக்கு அனுமதி இல்லை என்ற நிலையிலும் தொழிலாளர் போராடுகின்றனர். காளியப்பனால் இதை ஏற்கமுடியாது. ஊருக்குள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோடு மார்க்சிஸ்ட் கட்சியும் செயல்படுகிறது. ரங்கசாமி இதன் தலைவர். இரு கட்சிகளும் எந்த நேரத்திலும் எதிர்நிலையில் செயல்படுகின்றன. சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் அடுத்தவனைக் கவிழ்த்தாக வேண்டும். உதவி கேட்டு வந்தால் ஒப்புக் கொள்ளக்கூடாது. கடுமையான கலவரத்தின்போதுகூட ரங்கசாமி இளைஞர் மன்றத்தினர்க்கு உதவியாக இல்லை. தன் கட்சியைச் சார்ந்த ஐயா பழம் போன்றவர்கள். ஆலையில் போராட்டம், ஊருக்குள் கலவரம் என்று வருகிறபோது தொழிலாளிகள் / மக்கள் சார்பில் செயல்படுகின்றனர். கட்சியின் இறுக்கமான நிலைபாட்டிலிருந்து ரங்கசாமியால் அணு அளவும் விலக முடியாது. மார்க்சிய லெனினியக் கட்சியும் ஊருக்குள் தலைமறைவாக வந்து போகிறது. ரகுராமன் இக்கட்சியை சார்ந்தவர். உறவு முறையில் ரங்கசாமியின் தம்பி. ரத்த உறவு பற்றி ரங்கசாமிக்கு அக்கறை இல்லை. இளைஞர் மன்றத்தினரின் அரசியல் நிலைபாடு தனக்கு உடன்பாடு இல்லை என்றாலும் ஊருக்குள் மோதல் வரும்பொழுதெல்லாம் ரகுராமன் அவர்களோடுதான் இருக்கிறான். எப்படியாவது அவர்களை வென்றெடுக்க வேண்டுமென்பது அவன் நோக்கமாக இருக்கலாம். ஊருக்குள் தி.மு.க. வுக்கு செல்வாக்கு இருக்கிறது. இளஞ்சேரன் இதன் தலைவன். இவனோடு இருந்தவன் சின்னத்துரை கண்ணன் எம்.ஜி.ஆரின் ரசிகன், கட்சிக்காரன். இளஞ்சேரன் நிறைய செல்வம் சேர்த்துக் கொண்டவர். பெரிய வீடு, புதிய அழகான மனைவி. நடைபெறுவது கலைஞர் ஆட்சி. மிரட்டி தன் அதிகாரத்தை செயல்படுத்துகிறவர். லஞ்சம் வாங்காமல் காரியம் செய்யமாட்டார். காவல் நிலையம், பிற அரசு அலுவலகம் ஆகியவற்றின் மூலம் தன் ஆளுகையை மேம்படுத்திக் கொள்கிறவர். அனந்தனூர் என்ற இந்தச் சிற்றூருக்குள் ஆர்.எஸ்.எஸ். காரர்களும் செயல்படுகின்றனர். பிரேம் இதன் அமைப்பாளன். இந்து மதம் பற்றிய அறிவுத்திறனோடு துணிச்சலாக எப்பொழுதும் செயல்படுகிறவன். அடிதடிக்கு அஞ்சாதவன். இவன் செல்வாக்கு ஊருக்குள் வளர்ந்து கொண்டுதானிருக்கிறது. அவசர நிலைக் காலத்தில் இந்திரா காங்கிரசும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரு சார்பெடுக்க அதன் எதிர்நிலையில் பிற கட்சிகள் இணைந்திருக்கின்றன. இந்திராவை ஃபாசிஸ்டு என்று சொல்லி ரகுராமன் இவர்களோடு சேர்ந்திருக்க வேண்டும், ஆனால் சேரவில்லை. தன் முரண்பாட்டை வெளிப்படுத்திக் கொண்டே ரங்கசாமி இவர்களோடு இருக்கிறான்.

அனந்தனூர் என்ற சிற்றூருக்குள் இப்படி கட்சிகளுக்கிடையிலான உறவும் பகையும் மோதலும் நிலவுகின்றன. புதிய தரிசனங்கள் நாவலை கட்சிகளுக்கிடையிலான உறவும் பகையும் என்ற தளத்தில் முழுமையாக வாசிக்க முடியும். '75–'77 ஆகிய இரண்டு ஆண்டுகளின்போது கட்சிகளுக்கிடையில் உறவும் பகையும் கடுமையாகின்றன. நிலைபாடுகள் மாறுகின்றன. இந்த இரண்டாண்டுக்கால அரசியல் என்பது இதற்கு முன்னர் பல ஆண்டுகளாக, சில / பல பத்தாண்டுகளாக தொடரும் அரசியலின் இன்னொரு கட்டத் தொடர்ச்சி என்றும் வெடிப்பு என்றும் சொல்லலாம். இந்த இரண்டாண்டு கால அரசியலைப் புரிந்து கொள்வதற்கு வெகுதொலைவு முன்செல்ல வேண்டியிருக்கிறது. சில பத்தாண்டுகளுக்கு முன்பு காந்திய அரசியலோடு தம்மை இணைத்துக் கொண்ட தியாகி ராமநாதனையும் தியாகி வேலையாவையும், திரும்பவும் இந்த இரண்டாண்டு சூழலுக்குள் – இந்த இரண்டாண்டு சிக்கலுக்குள் செயல்படுவதைப் பார்க்கிறோம். இந்தியாவின் பாரம்பரியத்தின் மிக முக்கியமான இந்து மதம் இப்பொழுது அரசியலாக மாற்றப்பட்டிருக்கிறது. பல நூற்றாண்டுகளாக நிலவிவரும் சாதிய முறை இன்னும் வலுவோடு நிலவுகிறது. உடைமை முறையின் வடிவங்கள் அங்குமிங்குமாக சில மாற்றங்கள் பெற்றபோதும் உடைமை இன்னும் ஆதிக்கத்தில்தான் இருக்கிறது. தமிழர் பண்பாடு பற்றிய பேச்சு நாவலின் கால எல்லைக்குள் சீர்குலைந்த சக்தியாகத் தெரிகிறது. முன்னர் தாழ்த்தப்பட்ட சாதிகள் என்று இருந்தவை, முண்டியடித்துக் கொண்டு மேலுக்கு வந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு இரண்டாண்டு காலகட்டத்தினுள் தொடர்ந்து ஆற்றோட்டமாக வெள்ளமும் சகதியுமாக வந்து கொண்டிருக்கிற சமூக இயக்கமாக நாம் பார்க்கிறோம். இரண்டாண்டுக் காலம் என்ற எல்லைக்குள் வந்து தெரிகிற வரலாற்றை நாம் பார்க்கிறோம். கைப்பிடிக்குள் கடலை அடக்க பேராற்றல் வேண்டும். பொன்னீலன் என்ற கலைஞருக்கு இத்தகைய பேராற்றல் இருப்பதை நாவல் வெளிப்படுத்துகிறது. இவ்வளவு சக்திகளும் ஒரு சிற்றூரில் திரண்டு வெடித்து மோதி அப்புறம் மீண்டும் தமக்கான அணியை சரிவர வகுத்துக் கொண்டனவா? இது எதார்த்தம்தானா? என்ற கேள்வி அவசியமில்லை. விரிந்த அளவில், நாடு தழுவிய ஒரு பெரும் போராட்டத்தை அனந்தனூர் என்ற சிற்றூருக்குள் வைத்துக் காண்கிற காட்சி இந்த நாவல். கலை இயக்கம் என்பது இத்தகைய செயல்பாடும்தான். அனந்தனூர் எங்கிருக்கிறது என்று நாம் தேடிப்பார்க்க வேண்டியதில்லை. நாவலில் சொல்லப்படும் அனைத்து நிகழ்ச்சிக்கும் முன்மாதிரி அதே வடிவில் இருக்கின்றனவா என்று தேட வேண்டியதுமில்லை. ஒவ்வொரு ஊரிலும் சிறிய அளவிலோ பேரளவிலோ இந்த வடிவிலோ வேறு வடிவத்திலோ நடைபெற்ற வரலாற்றின் ஒரு கோலத்தைத்தான் ஆசிரியர் இந்த நாவலில்

வடித்திருக்கிறார். வரலாற்றைக் கலை வடிவத்தில் பதிந்து வைக்க வேண்டுமென்ற ஓர் அரிய கடமையை பொன்னீலன் இந்த நாவல் மூலம் நிறைவேற்றியிருக்கிறார். நெருக்கடி நிலைக் காலத்தில் உள்ளூர் அரசியலில் சில முக்கியமான நிகழ்ச்சிகளை இங்கு தொகுத்துக் கொள்ளலாம். இந்திராவின் ஆட்சியை எதிர்த்து ஜெயபிரகாஷ் நாராயணின் போராட்டம் நடைபெறுகிறது. இந்திராவின் சோசலிசத்தை இ.க.க. (சி.பி.ஐ.) ஆதரிக்கிறது. வங்கிகளை தேசிய மயமாக்கல், மன்னர் மான்ய ஒழிப்பு ஆகியவற்றை ஆதாரமாக வைத்து இந்திரா செயல்படுத்தப்போவது சோசலிசம்தான் என்று இ.க.க. முடிவு செய்கிறது. அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பை மறுத்து இந்திரா காந்தி அவசர நிலைப் பிரகடனம் வெளியிட்டார். எதிர்க் கட்சிகளைச் சிறையிலிட்டார். பத்திரிகைச் சுதந்திரம் முதலியவற்றைக் கட்டுப்படுத்தினார். எதிர்க் கட்சிகளின் போராட்டத்தை ஏகாதிபத்தியத் தூண்டுதலால் நடைபெறும் சதி என்றும் ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவான தூண்டுதல் என்றும் சோசலிசத்தை சீர்குலைப்பதற்கான திட்டம் என்றும் இந்திரா கூறியதை இ.க.க. வும் ஏற்றது. இந்திராவின் சோசலிசத்தைத் தொடக்கத்திலிருந்தே மா.க. (சி.பி.எம்) ஏற்கவில்லை. இந்திரா அரசை சோவியத் யூனியன் தொடர்ந்து ஆதரித்ததைக்கூட மா.க. ஒப்புக்கொள்ளவில்லை. சீனாவில் சோசலிசம் மாவோ தலைமையில் செயல்படுவதை மா.க. வரவேற்றது. அவசர நிலை மா.க. வைக் கடுமையாக பாதித்தது. ஆர்.எஸ்.எஸ். தலைமறைவு இயக்கம் நடத்தியது. இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்தை ஏற்கனவே நாங்கள் செயல்படுத்தி வருகிறோம் என்று கலைஞர் கூறிவந்தார். தடைசெய்யப்பட்ட இயக்கங்கள் தமிழகத்தில் தலைமறைவாகச் செயல்பட்டன. தி.மு.க. அரசு நீக்கப்பட்டது. இந்திராவின் 20 அம்சத் திட்டம் பெயரளவுக்குச் செயல்பட்டது. கள்ளக் கடத்தல் கண்டுபிடிப்பு, பதுக்கல்வேட்டை ஆகியன அங்குமிங்கும் நடைபெற்றன. குத்தகைதாரரை நிலத்தை விட்டு வெளியேற்றக்கூடாது. குடியிருப்பவரை வெளியேற்றக் கூடாது. கடனுக்காக அடகுவைத்த பொருட்களைத் திருப்பித் தரவேண்டும். இந்த 20 அம்சத் திட்டத்தை செயல்படுத்த இ.க.க. முனைப்புக் காட்டியது. அனந்தனூர் இளைஞர் மன்றத்தினர் ஊருக்குள் நடைப்பயணம் மேற்கொண்டனர். தங்கராஜா வீட்டில் பிடித்து வைக்கப்பட்ட நகை மீட்கப்பட்டது. ராகவனின் தாய் அடகு பிடித்த பாத்திரம் திரும்பத் தரப்பட்டது. பெரிய தெரு ஆத்திரம் கொண்டது. முந்திரித் தொழிற்சாலையில் தொழிலாளிகளின் போராட்டம் எதிர்பாராத முறையில் திடீரென வெடித்தது. அவசர நிலை தங்கள் போராட்ட உரிமைகளை அழிப்பதன்மூலம் முதலாளிக்குத் தான் சாதகமாக இருக்கிறது என்பதை தொழிலாளிகள் உணர்ந்து கொண்டனர். போராட்டம் கூடாது இந்திரா காங்கிரசோடு உள்ள நட்புறவைப் பாராட்ட வேண்டும் என்பதில்

விடாப்பிடியாக இருக்கும் இ.க.க. தலைமையை மீறி போராட்டம் வெடித்தது. மா.க. போராட்டத்தை நடத்த முன்வந்தது. நாளடைவில் இந்திரா காங்கிரசுக்கும், இ.க.க. வுக்கும் இடையில் முரண் தொடங்கி வளர்ந்தது. சஞ்சய் காந்தி தன் 5 அம்சத் திட்டத்தை அறிவித்தார். 20+5=25 என்ற திட்டத்தைச் செயல்படுத்த இ.க.க விரும்பியது. இதற்கு ஆதரவு இல்லை. குடும்பக் கட்டுப்பாடு என்ற ஒரம்சம் முதன்மை பெற்றது. இந்தியாவின் விடுதலைக்கு துரோகம் செய்தவர்கள். கம்யூனிஸ்டுகள் என்ற தாக்குதல் இந்திரா காந்தியிடமிருந்தே எழுந்தது. இ.க.க. வைத் தகர்ப்பதற்கு இதுதான் தக்க சந்தர்ப்பம் என மேட்டுத்தெரு தன் தாக்குதலைத் தொடுத்தது. பூங்கா அமைப்பதற்கு புல்டோசர்களைக் கொண்டு குடிசைகளை அழிக்கும் திட்டமும் 5 அம்சத் திட்டத்தில் ஓர் அம்சம்தான். ஒரு குட்டிப் பிரளயம் நடைபெற்று முடிவடைகிறது. இ.க.க. வினர் உயிரோடு தப்பிப் பிழைத்தனர். அனந்தனூரில் இப்படி ஒரு பிரளயம் நடைபெற்றதை நாவல் சொல்லுகிறது. சர்வாதிகாரமா? ஜனநாயகமா என்ற குரல் ராகவனுக்குள் ஓங்கி ஒலிக்கிறது. இந்திரா செய்வது சர்வாதிகாரம். சோசலிசத்தை சர்வாதிகாரம் மூலம் கொண்டுவர முடியாது. மக்கள் விரும்பாத சோசலிசத்தை அவர்கள் மீது திணிக்க முடியாது. இப்படி ராகவன் முடிவு செய்தார். கட்சியிலிருந்து வெளியேறுகிறார். இங்கு நாவல் முடிவடைகிறது. பெரிய தெருவில் ஒரு பகுதி இ.க.க. வோடு சமரசத்திற்கு வந்தபோதிலும் இவர்கள் ஏற்கவில்லை. மா.க. இப்பொழுதும் ஒதுங்கியே நிற்கிறது. இனி இரண்டாண்டுக்குமுன் இருந்த அரசியல் தொடர்ந்து நடைபெறும். ஒரு பெருமூச்சுக்குப் பிறகு இனி அவர்கள் நிதானமாக இயங்க முடியும். நாவலில் முற்பட்டு நிற்கிற அவசரநிலைக் காலத்து கட்சி அரசியல் இதுதான். ஆர்.எஸ்.எஸ். காரர்கள் இக்காலத்தில் தீவிரமாக இயங்கினர். தேவைப்படும்போது வெடிகுண்டுகளைப் பயன்படுத்தினர். ரகுராமன் தலைமறைவானான். தி.மு.க. வினர் சிறை சென்று திரும்பினர். மா.க. செயல்படாது இருந்ததன்மூலம் தன்னைத் தக்க வைத்துக் கொண்டது. மோகன்தாஸ் மூலம் பெரிய தெருவும், செல்வேந்திரன்மூலம் இந்திரா காங்கிரசும் ஊரின் தலைமையை இப்பொழுது கைப்பற்றுகின்றன.

இப்பொழுது இந்த நாவலுக்குள் செயல்படும் பொன்னீலனின் அரசியல் நிலைபாடு பற்றிப் பார்க்கலாம். நாவலுக்குள் இடையறாது இயங்குவது ராகவனின் பார்வை. ராகவன் என்ற மையத்திலிருந்துதான் நாவல் விரிவடைகிறது என்று சொல்லலாம். ராகவன் இறுதியில் இ.க.க.வின் பார்வையிலிருந்து வேறுபட்டுப் பிரிகிறான். பொன்னீலனுக்கு ராகவனின் இந்த நிலைபாடு உடன்பாடென்று கொள்ளலாம். அப்படியானால் ராகவன் இளைஞர் மன்றத்தோடும் இ.க.க.வுடனும்

நீண்டகாலம் ஆழ்ந்த உறவு கொண்டு அனுபவங்கள் பல பெற்றவன். சோசலிசத்தை ராகவன் பெரிதும் விரும்புகிறான். சுகுமாரன் தன்னோடு முரண்படும் பொழுதெல்லாம் சுகுமாரனைத் தொடர்ந்து புரிந்து கொள்ளவே விரும்புகிறான். இந்திராவின் அவசரநிலைப் பிரகடனத்தை உடனே சுகுமாரன் கண்டிக்கிறான். 20 அம்சத் திட்டப் பாதயாத்திரைக்காக ஊருக்குள் பயணம் செய்தபொழுது சுகுமாரன் கண்டிக்கிறான். சிறிய ஊசியால் கிளறி எடுக்க வேண்டிய முள்ளை அரிவாளைக் கொண்டு அகற்றக் கூடாது. சுகுமாரன் கருத்தைச் சொல்வதற்கு நாம் இந்த மரபுத் தொடரைப் பயன்படுத்தலாம். ராகவனின் வீட்டுக்குள்ளிருந்தே அடகுபிடித்த பாத்திரத்தை வெளியேற்ற நேர்கிறது. நீதியை நிலைநாட்டுகிறபொழுதே கசப்பும் சேர்கிறது. தங்கராஜா தன்னிடம் நகை இல்லை என்று மறுத்து விடுகிறான். திலகம் கொண்டு வந்து தருகிறாள். அவமானப்பட்ட உணர்வோடு பகை கூடுகிறது. இதையெல்லாம் பிறகுதான் ராகவன் உணர்ந்து கொள்கிறான். சோசலிசத்தை நிலைநாட்டத்தான் இந்திரா சர்வாதிகாரத்தைச் செயல்படுத்துகிறார். சர்வாதிகாரம் இல்லாமல் சோசலிசத்தை நிலைநாட்ட முடியாது. சோவியத் யூனியன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கொண்டுதான் சோசலிசத்தை நிலைநாட்டியது. அதனால் சர்வாதிகாரம் தவறில்லை. என்ன நேர்கிறது? சோசலிசம் தேவையென்றால் தொழிலாளி போராடக் கூடாது. இதனால் யாருக்கு லாபம்? யாருக்கு அதிகாரம் கூடுகிறது? காளியப்பனுக்கு இலாபம் கூடுகிறது. அதிகாரமும் கூடுகிறது. அவசர நிலை என்று பெயர் சொல்லி தொழிலாளர் போராட்டத்தை ஒடுக்கும் பொழுதே சோசலிசத்திற்கான ஆக்கம் கூடவா செய்யும்? ராகவன் தடுமாறத்தான் செய்கிறான். இந்திரா காங்கிரசோடு முழுஅளவில் ஒத்துழைத்தது சரிதானா? என்ற கேள்வி ராகவனுக்கு எழுகிறது. உள்ளூர் கட்சி செயலாளர் நடேசன் குரலை உயர்த்துகிறான். மாவட்டக் கட்சிச் செயலாளர் தோழர் வேலாயுதம் அறிவுரை கூறுகிறார். இந்திரா காங்கிரசோடு பகை வேண்டாம். எந்த அளவிலும் உடன்பாடுதான் முக்கியம். அவர்கள் அடித்தால் திருப்பி அடிக்காதே. அடி வாங்கிக் கொள். தேசம் பெரிது; ஜனநாயக சக்திகளை நாம் தான் வளர்த்தெடுக்க வேண்டும். ஏகாதிபத்தியத்தின் சதிக்கு நாம் இரையாகக் கூடாது. கட்சிக் கட்டளை முக்கியம். ஊருக்குள் கலவரம் நடக்கிறது. செல்லையா கடுமையாக தாக்கப்பட்டிருக்கிறான். அவன் பெரும்பாலும் இறந்து போயிருக்கலாம். மாவட்டச் செயலாளர், கட்சிக் கூட்டத்தில் இருக்கிறார். இறங்கி வரவில்லை. இப்படிச் செல்லுகிறது ராகவனின் அனுபவம். ஒவ்வொரு முறையும் ராகவனின் மனச்சாட்சி அதிர்கிறது. ராகவனுக்குள்ளிருந்து சுகுமாரன் கேள்வி எழுப்புகிறான். சுகுமாரனுக்கு இத்தகைய புரிதல் எவ்வாறு சாத்தியம்? ராகவனுக்குப்

புரியவில்லை. இறுதியாகப் பார்க்கும்பொழுது சுகுமாரன் பைத்தியமாகி விட்டான். சுகுமாரன் நிலைதான் சரி. எந்தக் காரணத்துக்காகவும் கட்சிக்குள்ளும் சரி, வெளியிலும் சரி, முழு அளவில் ஜனநாயகம் இயங்கவேண்டும். வாழவேண்டும். கடைசியாக நடேசன் அழைக்கிறான். அவனோடு ராகவன் செல்லமுடியவில்லை; பிரிகிறான்.

இளைஞர் மன்றத்தை உருவாக்கி வளர்த்தெடுத்தவன் ராகவன். ஆனால், கட்சிச் செயலாளரானவுடன் நடேசன் குரல் உயர்கிறது. சில சமயங்களில் இராகவனைக்கூட கீழ்நோக்கிப் பார்க்கிறான். ராகவனுக்கு அறிவுரை சொல்கிறான். அம்மன்கொடை கலவரத்தின் போது தன் தோழர்களோடு நடேசன் இல்லை. அப்புறம் வந்து அறிவுரை சொல்கிறான். மதவாதியோடு நமக்கு என்ன உறவு என்று இன்னொரு சமயம் கேட்கிறான். ராகவனை இன்னொரு சமயம் மட்டம் தட்டவும் செய்கிறான். அண்ணாச்சி என்று அழைத்தவன் தோழரே என்று அறிவுரை சொல்கிறான். கட்சி அதிகாரம் நடேசனுக்குள் தோழமையை வளர்க்கவில்லை. கட்சியின் தவறான நிலைப்பாட்டை எப்பொழுதும் நியாயப்படுத்துகிறான் நடேசன். கட்சி இப்படி ஒருவனைக் கெடுக்கத்தான் வேண்டுமா? தோழர் வேலாயுதம் மேடையேறினால் அகில உலகப் பிரச்சினைகள் அத்தனையும் பேசிவிட்டுத்தான் உள்ளூர்ப் பிரச்சினைக்கு வருகிறார். செல்லையா அடிபட்டிருக்கிறான் என்ற செய்தியை அவர் காதில் வாங்கிக் கொள்ள நெடுநேரம் ஆகிறது. தன் அறிவாற்றலில், தன் குரலைத் தானே ரசிப்பதில் எத்தனை மோகம் இந்தத் தலைவருக்கு? தோழர் கோலப்பன் அன்பே உருவானவர். இவரிடத்தில் ஆணவம் சிறிதும் இல்லை. எல்லாப் பிரச்சினைகளிலும் தோழர்களிடம் இறங்கி வந்து ஈடுபடுகிறார். கட்சிக்குள் இப்படியும் ஒரு மனிதர். தோழர் வேலாயுதத்திற்கு நேர் எதிரான மனிதர். இவரும்கூட ஒருமுறை அறிவுரை சொன்னார். இந்திரா காங்கிரசோடு ஒத்துச் செல்லுங்கள். இறுதியில் இவர் நடேசனுக்குச் சொல்கிறார்: கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை. மேலிருந்து அதிகாரம் செய்து கொண்டிருந்தால் மக்கள் என்ன ஆவது? தோழர் கோலப்பன் கட்சியோடு என்றும் இருப்பார். ராகவனால்தான் முடியவில்லை. ராகவனுக்குள் உறுத்திக் கொண்டிருக்கும் சந்தேகங்கள், சஞ்சலங்கள், பொன்னீலனுக்குள்ளும் இயங்கியவை என்று நாம் கொள்ளலாம். கட்சி தனக்குள் இறுகிப்போவதை பொன்னீலன் ஏற்கவில்லை. இந்திராவின் சர்வாதிகாரம் சஞ்சய் காந்தியின் சர்வாதிகாரமாக மாறுகிறது. சோசலிசத்தின் குரல்வளை முற்றிலும் ஒடுக்கப்படுகிறது. மிஞ்சியிருப்பது சர்வாதிகாரமே. இப்பொழுது தெரிகிறது. சோசலிசத்திற்காக இந்த சர்வாதிகாரம் நுழையவில்லை. சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காகத்

தான் சோசலிசம் பற்றிய பேச்சு. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், மார்க்சியத்திற்கு ஒத்தது என்ற மனப்பான்மைதான் இந்திராவின் சோசலிசத்தை இவர்கள் ஏற்கத் தூண்டியிருக்க வேண்டும். மேலிருந்து திணிக்கப்படுவதா சோசலிசம்? மக்கள் தாமாக வரித்துக் கொள்வது, செயல்படுத்துவது இல்லையா சோசலிசம்? ராகவனிடம் போதிய தெளிவில்லை. எனினும் மனச்சாட்சியின் உறுத்தல் காரணமாக நின்ற இடத்தில் அவனால் உறுதியாக நிற்கமுடியவில்லை.

இ.க.க. பற்றிய விமர்சனத்தோடு பொன்னீலன் ஏற்றுக் கொள்கிறார். இது போதுமானதா, இல்லையா என்பது இப்பொழுது இங்கு முக்கியமில்லை. அவசர நிலைக் காலத்து அனுபவத்தின் வழியே இ.க.க. பற்றிய விமர்சனத்தோடு சோவியத் யூனியன் பற்றி மார்க்சியத்தின் அடிப்படைகள் பற்றி இன்னும் தீவிரமான ஆய்வுக்குள் பொன்னீலன் சென்றிருக்க முடியும். இப்படி நாவல் இல்லை. மதம் பற்றி மார்க்சியரின் வறட்டுப்பார்வை பொன்னீலனிடம் இல்லை. மனித வாழ்க்கை பற்றிக்கூட வறட்டுப்பார்வை பொன்னீலனிடம் இல்லை. காதல், அன்பு ஆகியவற்றில் பொன்னீலன் குற்றம் காணவில்லை. வர்க்கப் பார்வை என்று சொல்லி அன்பை பொன்னீலன் அவமதிக்கவில்லை.

ராகவன் வழியே செயல்பட்ட இ.க.க. வின் பார்வையை பொன்னீலன் ஏற்றுக் கொள்கிற காரணத்தால் ரங்கசாமியையும் ரகுராமனையும் சரியாகச் சித்தரிக்க இயலவில்லை. ரங்கசாமி எப்பொழுதும் முகத்தை இறுக்கிக் கொண்டுதான் திரிகிறார். ரகுராமனின் செயல்கள் பல சமயங்களில் சிறு பிள்ளைத்தனமாக கோமாளித்தனமாகத் தோன்றும் முறையில் சித்தரிக்கப்படுகின்றன. அவர்கள் பார்வையிலிருந்தும் இந்தியாவின் அரசியல் பற்றி ஒரு விரிவான பார்வையை தர முடியும். நாவலுக்குள் வந்துள்ள அனைத்துப் பிரச்னைகள் பற்றியும் அவர்களுக்கான பார்வை உண்டு. பொன்னீலனை அன்றி மா.க. படைப்பாளி ஒருவர் இந்த நாவலை தன் கோணத்தில் கட்டமைக்கமுடியும். மா.லெ. கட்சி சார்ந்த படைப்பாளி ஒருவர் இதே போன்ற நாவல் ஒன்றைக் கட்டமைக்க முடியும். இப்படிச் சித்தரிக்கிறபொழுது, இ.க.க. சார்பிலுள்ள பொன்னீலன் என்ற கலைஞர் கட்டமைத்திருக்கிற நாவல் என்ற அணுகலோடுதான் இந்த நாவலை நாம் வாசிக்கிறோம். கூடவே இன்னொன்றையும் சொல்லவேண்டும். வாழ்வைப் பற்றிய பார்வை என்ற முறையில் மா.க. படைப்பாளியும், மா.லெ. படைப்பாளியும் பெரிதும் வேறுபடவும் கூடும். பொன்னீலன் காதலைப் போற்றுகிறவர். மதத்தை நேசமுறையில் அணுகுகிறவர். இத்தகைய அணுகுமுறை பிறரிடம் இல்லாமல் போகலாம். காதல் என்பது எப்பொழுதும்

செவ்வானம் என்று எழுதலாம். மதம் எந்த அளவிலும் அபின்தான் என்றும் எழுதலாம். ராகவன் அறிவு ஜீவி குட்டி பூர்சுவா. ஆகவேதான் தனக்குள் சந்தேகங்களோடும் சஞ்சலங்களோடும் தடுமாறுகிறான் என்று சொல்லி, நாவலில் ராகவன் குரலை அமுக்கவும் செய்யலாம். இதேபோல சுகுமாரன் இன்னும் கடுமையான குற்றச்சாட்டுக்கு உள்ளாகலாம். நிலப்பிரபுத்துவ உறவுச் சீர்குலைவிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இயலாதவன் என்றும் சொல்லலாம்.

பொன்னீலன் பார்வையின் சில நல்ல அம்சங்களை இங்கு மேலும் சொல்லலாம். நடேசனும் ரங்கசாமியும் எப்பொழுதும் எதிர்நிலையில் இயங்குகிறவர்கள். தொழிலாளர் பிரச்சினை என்றாலும் குடியிருப்புப் பிரச்சினை என்றாலும் மக்களின் பிரச்சினை என்று இவர்கள் சேர்ந்து இயங்க மாட்டார்கள். எதிரிகள் மாதிரி இவர்கள் முறைத்துக் கொள்வார்கள். உண்மையில் இவர்கள் எதிரிகள்தானா என்ற கேள்வி நாவலை வாசிக்கும் நமக்குள் எழும். இம்மாதிரி உணர்வுகளோடுதான் பொன்னீலன் இவர்களின் எதிர்நிலைகளைச் சித்தரிக்க வேண்டும். முந்திரி ஆலையில் போராட்டம் வெடிக்கிறது. ரங்கசாமியோடு தேசிகன் சேர்ந்து கொள்கிறான். தேசிகன் இளைஞர் மன்றத்தினன். தொழிலாளி பிரச்சினை என்றவுடன் தேசிகன் ரங்கசாமியை எதிரி என்று கருதவில்லை. இதேபோல் ஊருக்குள் கலவரம் முற்றுகிற சமயத்தில் ரங்கசாமிக்குத் தெரியாமல், ஐயாப்பழம், இ.க.க. தோழர்களுடன் இணைந்து செயல்படுகிறான். குடியிருப்பை அழித்து பூங்கா அமைக்கும் பிரச்சினையிலும் இப்படி இணைந்து கொள்கிறார்கள். செல்லையா தனக்குள் தொடர்ந்து கேள்வி கேட்டுக் கொள்கிறான். யாருடைய நிலைப்பாடு சரி? ராகவனா ரங்கசாமியா, ரகுராமனா யாருடைய நிலைப்பாடு சரி? செல்லையாவோடுதான் ரகுராமன் நெருக்கமாக இருக்கிறான். அர்ச்சுனனும் நெருங்கியிருக்கிறான். மாவோவை இவர்கள் விரும்பிக் கற்கிறார்கள். ரகுராமன் தந்த வெடிகுண்டுகளை, தேவையில்லாமல் செல்லையா பயன்படுத்திக் கொள்ளவில்லை. தேவைப்படுகிறபோது செல்லையா துணிந்து ஆயுதம் எடுக்கிறான். ஆயுதம் எடுப்பதை இ.க.க. ஆதரிக்கவில்லை. ராகவன் ஆயுதம் எடுக்கச் சொல்லவுமில்லை; செல்லையா முதலியவர் ஆயுதம் எடுப்பதை ராகவன் மறுக்கவுமில்லை. நடேசனும்கூட மறுப்பதற்கான நியாயம் இல்லை.

நாவலின் இறுதிக் கட்டத்தில் தன் தோழர்களை விட்டு ராகவன் பிரிந்து செல்லும்போது, தேசிகனும் ரவீந்திரனும் மேலே செல்ல முடியாமல் நின்று விடுகிறார்கள். மின் கம்பத்தைப் பற்றிக் கொண்டு ராகவன்

கதறுகிறான். அவனுக்குள்ளிருந்து ஒரு பகுதி தோழர்களோடு செல்ல விரும்புகிறது. இன்னொரு பகுதி ராகவனோடு. இவனது மனவேதனை உச்ச அளவிலானது. பிரிந்து செல்லும் முன் ராகவன் தனக்குள் அழுது தீர்த்தான். அவன் மனைவி ஜானகி 'இவர்கள் நீங்கள் வளர்த்த தம்பிகள். இவர்கள் தவறு செய்தால் தட்டிக் கேளுங்கள், திருத்துங்கள்' என்கிறாள். தனி ஒருவனாக இருந்து இவர்களைத் தட்டிக் கேட்க முடியாது. திருத்தமுடியாது. மேலிருந்து இவர்கள் இயக்கப்படுகிறார்கள். இப்படி ராகவன் சிந்திக்கிறானா? தெரியவில்லை. பிரிந்து செல்கிறான். தேசிகனுக்குள் ஒருமுறை கூட குழப்பம் வந்ததில்லை. செல்லையாவுக்குள் அடிக்கடி கேள்விகள். தீவிரமாக அவனால் சிந்தித்து முடிவுக்கு வர இயலவில்லை. இதுவரை ராகவனோடுதான் வந்திருக்கிறான். அவனைப் பொறுத்தவரை ராகவன்தான் நம்பகமானவன். இனி தனக்கு யார் வழிகாட்ட முடியும்? ஒதுங்கிப் போய் ராகவன் என்ன செய்ய முடியும்? மார்க்சியத்தை விட்டு இவனால் விலகிப் போகமுடியுமா? கட்சியோடு அல்லது கட்சிக்குள்ளிருக்கும் சில தோழர்களாவது இத்தகைய முரண்பட்ட மனநிலையோடுதான் இன்றும் இருக்கிறார்கள்; இயங்குகிறார்கள். தலைவர்களுள் கோலப்பன் மாதிரியும் வேலாயுதம் மாதிரியும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வளவுதானா? கட்சிக்குள் அல்லது தொழிற்சங்கத்திற்குள் இருந்து தமக்கென செல்வம் சேர்த்துக் கொள்கிறார்கள். கட்சிக்குள் தோழர்களை அதிகாரமும் செய்கிறார்கள். இவர்கள் வழியே முதலாளியம் கட்சிக்குள் ஊடுருவியிருக்கிறது. முதலாளிய அரசியலை இவர்கள் செயல்படுத்துகிறார்கள். முதலாளியத்தைத் தாங்குகிறார்கள். முதலாளியம் கட்சிக்குள் மறைமுகமாக நுழைந்து ஆதிக்கம் பெறும்பொழுது பெயரளவில் மார்க்சிய உச்சாடனம் நடைபெறுகிறது. மார்க்சியம் அழிகிறது. இப்படியும் கட்சிக்காரர்கள் சிந்திக்கவில்லை. இவ்வகை விமர்சனங்கள் நாவலில் இல்லை. ராகவனைத் தன்னிடம் தக்கவைத்துக் கொள்ளாத கட்சி எத்தகைய கட்சியாக இருக்கும்? தேசிகன்மாதிரி அப்பழுக்கற்ற மனிதர்களிடம் கட்சி என்னதான் எதிர்பார்க்கிறது? நடேசனைக் கட்சி செயலாளராக தேர்ந்தெடுக்கும்பொழுது அனந்தனூர்க் கிளையில் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகளின் பட்டியலை தோழர் வேலாயுதம் முன்வைக்கிறார். உறுப்பினர்கள் யார் பெயரையும் முன்மொழிவதை வேலாயுதம் ஏற்கவில்லை. இதுதான் நடைமுறை என்கிறார். இதற்கு என்ன பொருள்? நடேசனை என்ன காரணத்திற்காக கட்சிக்கிளை செயலாளராக அவர் முன்வைக்கிறார். ஒவ்வொரு முறையும் நடேசன் தோழர்களுக்குச் சொல்லும்பொழுதே கட்சிக் கட்டளை என்று சொல்கிறான். அப்படியானால் கட்சிக்கிளைக்குத் தெரியாமல் மாவட்டத் தலைவரோடு அவன் உறவுகொண்டு கட்சியின் ஆணையைப் பெறுகிறான் என்பதுதான் பொருள். 20 அம்சத்திட்டத்தின் ஒரு பகுதியாக புறம்போக்குநிலத்தில், வீடு

இல்லாதவர்களுக்கு வீட்டு மனை ஒதுக்குதல் என்பதைச் செயல்படுத்த வீடு இல்லாதவர்களிடம் இளைஞர் மன்றத்தினர் மனு பெறுகிறார்கள். ரத்தினம் தனக்கு வீட்டுமனை தேவையென்று விண்ணப்பம் செய்திருக்கிறான். விவாதத்தின்போது ரத்தினத்தின் தந்தைக்கு வீடு இருக்கிறது என்ற விவரத்தை ஒருவர் முன்வைக்கிறார். தந்தையின் வீடு மகனுக்கு வந்து சேரும் என்றாலும் இப்போது ரத்தினத்தின் பெயரில் வீடு இல்லை. பொன்னீலனுக்கு இந்த உண்மை தெரிந்திருக்க வேண்டும். கட்சி, கட்சித்தலைவர்கள் பற்றிய விமர்சனங்கள்வழியே பொன்னீலனின் பார்வை வெளிப்படவில்லை. இத்தகைய வெளிப்பாடு பொன்னீலனை கட்சி எல்லைக்கு வெளியே நிறுத்திவிடும். சோவியத் யூனியன்பற்றி நாவலில் வெளிப்படையான விமர்சனம் இல்லை. சர்வாதிகாரத்தின் மூலம் சோசலிசத்தைக் கொண்டுவர முடியாது என்ற கருத்தின்வழியே சோவியத் யூனியன் பற்றிய விமர்சனம் நாவலில் அடங்கியிருப்பதாக நாம் கருதமுடியும். இங்கும் சர்வாதிகாரம் விமர்சனம் செய்யப்படுகிறதே ஒழிய சோசலிசம் என்ற பெயரில் முதலாளியத்தைச் செயல்படுத்தும் முறையில்தான் சர்வாதிகாரம் இடம்பெறுகிறது என்ற புரிதல் நாவலில் இலலை. மதம் பற்றி வித்தியாசமான பார்வையை முன்வைக்கிற பொன்னீலன் தனிஉடைமை எவ்வாறு முதலாளிகளை மட்டுமல்லாமல் மார்க்சியரையும் பற்றியிருக்கிறது என்பது பற்றிப் பேசவில்லை. இந்திரா காங்கிரசின் மூலம் ஆட்சியதிகாரத்தின் எல்லைக்குள் செல்வதில்தான் கட்சிக்காரர்கள் ஆர்வம் கொள்கிறார்கள். அரசியலதிகாரத்தை இவர்கள் கைப்பற்றி செயல்படுத்துவதற்குப் பதிலாக அரசியலதிகாரம் இவர்களைக் கைப்பற்றிக் கொள்ளும் என்பது பற்றி இவர்களுக்குச் சிந்தனை இல்லை. தம் உழைப்பின் விளைவாக வரும் ஆக்கம்தான் தம்மை உருவாக்கும். பிறர் தோள்மீது சவாரி செய்வது என்பது எப்பொழுதும் ஆபத்தை எதிர்கொள்வதாகத்தான் இருக்கும். கூடுதலாக இன்னொரு செய்தியை நடேசன் சொல்கிறான். ரத்தினத்துக்கு வீடு தரச் சொல்லி காளியப்பன் பரிந்துரை செய்திருக்கிறார். இதற்குமேல் விவாதத்துக்கு அவசியமில்லை. ரத்தினம் ஒரு வியாபாரி. இவன்மூலம் நமக்குத் தெரியவரும் இன்னொரு பிரச்சினை பற்றியும் இங்கு நாம் குறிப்பிட வேண்டும். பாலம்மை விதவை. தன் மகள் சீதனத்துக்கு என இவள் சேர்த்து வைத்திருந்த ஐநூறு ரூபாயை ரத்தினத்துக்குக் கடனாகத் தந்திருக்கிறார். வட்டியின் மூலம் சீதனத்துக்கான தொகை சற்றுக் கூடுதலாகும். கடன் தருவதற்குமுன் ரத்தினம் நகை ஒன்றை பாலம்மையிடம் அடகு வைத்திருக்கிறான். 20 அம்சத் திட்டம் வந்திருக்கிறது. இதன்படி கடனைத் திருப்பித் தரவேண்டியதில்லை. அடகுபிடித்த பொருளை அப்படியே திருப்பித் தந்துவிட வேண்டும். சட்டம் இப்பொழுது வியாபாரிக்கு சாதகமாகவும் ஏழை விதவைக்கு எதிராகவும் செயல்படுகிறது. அநியாயம் வெளிப்படையானது.

ஒருவேளை நடேசன் தன் கருத்தைச் சொல்வதென்றால் சட்டப்படிதான் நாம் செயல்பட வேண்டும் என்று சொல்லியிருப்பான்.

ராகவனுக்கு முன்பு இதேபோல ஒரு பிரச்சினை எழுகிறது. அம்மாதான் இன்னொருவர் பாத்திரத்தை அடகு பிடித்திருக்கிறாள். மகனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அம்மா இப்படி செய்திருக்கிறாள். இதில் ராகவனுக்கு என்ன பொறுப்பு? பாலம்மையின் மகன் செய்யும் கலவரத்தின் விளைவாக பாலம்மையை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்கிறாள் ராகவனின் தாய். தாய் பெயரில்தான் வீடு இருக்கிறது. மேட்டுத்தெரு தலையிட்டபோதும் அழகம்மை தன் உறுதியிலிருந்து தளரவில்லை. பாலம்மை வெளியேறுகிறாள். இதில் ராவனுக்குப் பொறுப்பில்லை. இத்தகைய சிக்கல்களை நாவல் எதிர்கொள்ளவில்லை. குறைந்த அளவு ராகவனின் மனச் சாட்சிக்குள் கடுமையான உறுத்தல் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு தோழர் ராகவனை விமரிசனம் செய்கிறார். வீட்டுக்குள்ளேயே உள்ள பிரச்சினையை தீர்க்க முடியாதவன் ராகவன். வெளியே உள்ள பிரச்சினையைத் தீர்க்க கிளம்பியிருக்கிறான். தோழரே இது சரியில்லை என்கிறான். உண்மைதான். வீட்டுக்குள்ளும் ஆழ்ந்த நோக்கில், ஒவ்வொருவருக்குள்ளும் பிரச்சினை நுழைந்து பதுங்கியிருக்கிறது. இதைக் கண்டுகொள்வதற்குக்கூட ஒரு பார்வை வேண்டும். தன்னைத் தானே தோண்டிக் கொள்கிற பார்வையாக அது இருக்க வேண்டும். இப்படித் தோண்டிக் கொள்ளத் தொடங்கினால், கம்யூனிசம் என்ன ஆன்மீகமா என்ற கேள்விகூட எழக்கூடும். இதை எதிர்கொள்ளத்தான் வேண்டும். பொன்னீலன் முக்கியமான பிரச்சினைகளை நெருங்கிச் செல்கிறார் என்பது தெளிவு. விளிம்பில் நிற்கிறார். கவனித்துப் பார்த்தால் காலருகில் பெரிய பள்ளம். பொன்னீலன் அதற்குள் விழவில்லை. மனச்சாட்சியின் தூண்டுதலோடு செயல்பட விரும்புகிற படிப்பாளி ராகவன் அரசுப் பணியில் இருக்கிறவர். அரசுப் பணியிலிருந்தும் இவர் விலகவில்லை. மார்க்சிய அறிவாளியாக இவர் விளங்க முடியுமே ஒழிய கட்சி ஊழியராக சிறப்புற முடியுமா?

இந்திரா காங்கிரசுக்கும் இளைஞர் மன்றத்திற்கும் முரண்பாடு வெடிக்கிற தொடக்கநிலையில் காங்கிரசைச் சேர்ந்த நாராயணன் ஒரு பிரச்சினையைக் கிளப்புகிறார். பூரணியோடு வலம்புரி கொண்டிருக்கிற தகாத உறவால் இளைஞர் மன்றத்தினர்க்கு அவமானம் ஏற்படுகிறது. வலம்புரியை வெளியேற்ற வேண்டும் என்பது இவர் கோரிக்கை. வலம்புரி வெளியேற்றப்படுகிறான். சுகுமாரன் மோகனாவோடு வாழ்ந்து கொண்டிருக்கிற பொழுது ஜோதியோடு உறவுகொண்டிருக்கிறான். இந்தப் பிரச்னை மன்றத்தில் கடுமையாக விவாதிக்கப்படுகிறது. ஒன்று ஜோதியின்

உறவை வெட்டிக் கொள்ள வேண்டும் அல்லது மோகனாவை மணவிலக்கு செய்துவிட்டு ஜோதியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும். சுகுமாரன் பதில் சொல்ல வேண்டும். குழப்பம் கூடாது. இந்த விவாதத்தில் ராகவன் இலலை. மன்றம் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று செல்லையா இறுதியாகச் சொல்லுகிறான். பூசாரி வைகுண்டப் பெருமாளும் ராகவனும் சுகுமாரனோடு பேசி தீர்வு காண வேண்டுமென்கிறான் செல்லையா. பிரச்னை வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. சுகுமாரனை வெளியேற்ற 15 பேர் வாக்கு அளிக்கின்றனர். வெளியேற்றக் கூடாது என 13 பேர். சுகுமாரன் வெளியேற்றப்படுகிறான். தேசிகனின் காதலை வலம்புரி குறைசொல்கிறான். அதாவது தான் பூரணியைக் காதலிப்பதைப் போலவே தேசிகன் செண்பகத்தைக் காதலிக்கிறான். தனக்கொரு நீதி அவனுக்கொரு நீதியா என்பது அவன் கேள்வி. தேசிகன் தன்னளவில் முடிவு செய்து கொள்கிறான். இனி அவன் செண்பகத்தைப் பார்க்க மாட்டான். பூரணியின் உறவையும் வலம்புரி விட்டுவிடுகிறான். அரசியல் சூழல் கருதித்தான் மன்றம் இந்தப் பிரச்சினைகளை விவாதிக்கிறது. மன்றத்திற்கு மக்கள் மத்தியில் பெருமை குறையவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த விவாதங்கள். வலம்புரிக்கோ சுகுமாரனுக்கோ அவர்களின் பிரச்சினைத் தீர்வுக்கு உதவி செய்வது மன்றத்தின் நோக்கம் அல்ல. மன்றத்திற்குள் கொண்டுவரப் படுவது கெடுபிடி அரசியல். வாக்கெடுப்பின் மூலமா இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும்? செல்லையா மீனாட்சியோடு கொண்டிருக்கிற காதல், மன்றத்தின் பார்வைக்கு வரவில்லை. தேசிகன் காதலால் யாருக்கும் தீங்கு இல்லை. பூரணியோடு வலம்புரி கொண்ட உறவை காதல் என மன்றம் கொள்வதாகத் தெரியவில்லை. சுகுமாரன் ராகவனிடம் தன் வேதனை சொன்னபொழுது அவனாக திருமாலிடம் பேசச் செல்கிறான். சுகுமாரனுக்கு எந்த அளவிலும் உதவிசெய்யும் நோக்கம் திருமாலுக்கு இல்லை. பிரச்னையை திருமால் திசை திருப்புகிறான். ராகவனைக் கடிந்துரைத்து வெளியேற்றுகிறான். தன் மனைவி சரோஜினியை அடித்து நொறுக்குகிறான். ராகவன் இந்தப் பிரச்னைக்கு தீர்வாக எதை தன் மனத்தில் கொண்டிருந்தான்? நமக்கு எழும் ஒரு அடிப்படையான சிக்கல்: காதல், திருமணம், விதவைத் திருமணம், மணவிலக்கு இவை பற்றியெல்லாம் கட்சிக்கென ஒரு கொள்கை இருக்கிறதா? கட்சிக்குள் விவாதம் இருக்கிறதா? பாலியல் பற்றி கட்சிக்கு என்ன கொள்கை? ரத்த உறவுகள் மதிக்கப்பட வேண்டாமா? வேண்டுமா? ரங்கசாமியை அவன் மனைவி கிருஷ்ணம்மாள் கேட்கிறாள். பந்தம், பாசம், உறவு இவையெல்லாம் உங்களுக்கு இல்லை. நாவலின் இறுதியில் ஜானகி ராகவனைக் கேட்கிறாள். இவர்கள் உங்கள் தம்பிகள். இவர்களை விட்டுப் பிரியலாமா? ஒருவன் / கட்சிக்காரன் குடிக்கலாமா? கூடாதா? சொத்து

வைத்துக் கொள்ளலாமா? கூடாதா? இப்படித் தொடங்கி நிறையக் கேள்விகள் கேட்கப்பட வேண்டும். பெண் தன்னை அழகுபடுத்திக் கொள்வது பற்றி கட்சிக் கண்ணோட்டம் என்ன? அகம்பாவம், தற்பெருமை பற்றி கட்சியின் பார்வை என்ன? குழந்தைக்கு எவ்வகைக் கல்வி கற்பிக்க வேண்டும்? இப்படியெல்லாம் கட்சிக்குள் விவாதங்கள் தேவை. அரசியல் என்ற உரைகல்லில் மட்டுமே எல்லாப் பிரச்சினைகளையும் உரைத்து தீர்மானிக்க முடியுமா? இப்படி அரசியல் முழக்கத்தில் மட்டும் ஊன்றியிருக்கிறவன் கட்சிக்காரன். இவன் நடேசன். செல்லையாவுக்கும் தேசிகனுக்கும் ஐயாப்பழத்திற்கும் இந்தக் கட்டளைகள் பயன்படுவதில்லை. இறுதியில் ராகவனுக்கும் இதே தான் பிரச்சினை. பூரணியோடு வலம்புரி கொள்ளும் உறவை பொன்னீலன்குற்றம் உடையதாகச் சொல்லவில்லை. இறுதியில் பூரணி குற்றமற்றவளாகத்தான் நம்முன் வருகிறாள். பூரணி தனக்கான நியாயத்தைச் சொல்ல முடியும். நாவலில் பூரணியின் குரல் இல்லை அல்லது ஆசிரியர் பூரணிக்குக் குரல் கொடுக்கவில்லை. பூரணி குற்றமற்றவள் என்பதற்கு பூரணியின் சார்பில் சொல்லப்படும் நியாயம் / கொள்கை என்னவாக இருக்கமுடியும்? பெண்ணியம் என்று இன்று முன்வைக்கப்படுகிற பார்வையின் ஒளியில்தான் பூரணியின் சார்பிலான கொள்கையை நாம் விளக்கமுடியும். அப்படியானால் கணவன் மனைவி உறவு, ஆண் பெண் உறவு அவ்வளவும் இப்பொழுது கேள்விக்குள்ளாகும். குடும்ப உறவு கேள்விக்குள்ளாகும். குடும்பம் கேள்விக்குள்ளாகும். அரசியல் அதிகாரமே குறி என்று தன் பார்வையை ஒருமுனைப் படுத்தியிருக்கும் ஒரு கட்சிக்கு இத்தகைய ஆய்வு சாத்தியமில்லை. அரசியல் அதிகாரத்தை நாம் கைப்பற்றிக்கொண்டால் சரி. மற்றபடி வாழ்க்கை அதன் பழைய தடத்திலேயே சென்று கொண்டிருக்கட்டும். பிரச்சினை முற்றுகிறபொழுது தற்காலிகமாக ஏதாவது ஒரு தீர்வை வைத்துக் கொள்ளலாம் அல்லது பிரச்சினை இல்லை என்று வெட்டி விடலாம் – இதுபோதும் என்பது தான் கட்சியின் நிலை. இங்கு மார்க்சியம் சுருங்கித்தான் போகும். மார்க்சியம் வெறும் அரசியல் பொருளாதாரக் கோட்பாடாகத்தான் இங்கு இருக்கமுடியும். மதம்பற்றி மரபு ரீதியான மார்க்சியத்திற்குள் புதிய திசைதேடும் ராகவன், குடும்பம், பாலியல் முதலிய சிக்கல்களைக் கேள்விக்குட்படுத்தவே இல்லை. தகாத உறவென்று குற்றம் சொல்லி வெளிப்பார்வைக்கு தள்ளிவைக்கப்படுகிற உறவுகள் கட்சிக்குள் இல்லையா? இது பற்றி நாவல் முழுமையாக மௌனம் சாதிக்கிறது.

– 1993

குறிப்பு :– என் கட்டுரையை தோழர் பொன்னீலன் அவர்களுக்கு அனுப்பியிருந்தேன். 17.9.93 அன்று எனக்கு அவர் எழுதிய பதிலில் தன்

நிலைப்பாடுகள் சிலவற்றைத் தெளிவுபடுத்தியிருந்தார். அவற்றை இங்கு குறிப்பிடுகிறார்.

- 7. ரகுராமன், ரங்கசாமி – இரண்டு பாத்திரங்கள் வழியேயும் சொல்லத்தக்கவை நிறையவே உள்ளன. ரங்கசாமி வழியே சொல்ல வேண்டியவற்றைச் சொல்லியதாக எனக்கு நினைவு. ரகுராமன் நிலையை இன்னும் தெளிவுபடுத்தியிருக்கலாம்.

- 8. கட்சித் தலைவர்கள் பற்றிய விமர்சனங்கள் வழியே என் பார்வையை முடிந்த அளவு அதிகமாகச் சொல்லியிருக்கிறேன் என்றே கருதுகிறேன். கட்சி காதல் பற்றி நினைப்பது, பெண் பற்றி நினைப்பது, புரட்சி பற்றி நினைப்பது எல்லாம் தொட்டிருக்கிறேன். சாதி பற்றி இன்னும் யோசிக்க இடம் உண்டு.

- இப்படி ஏக்கங்கள் நிறைய எழுந்துள்ளன. அரசியல் தளம் எனக்கு ஏற்படுத்திய உறுத்தல், மற்றவற்றின் மீது நிழல் படியச் செய்து விட்டதோ? கலைஞன் முழுப் பார்வையை – முப்பரிமாணப் பார்வையை எப்போதும் கொண்டிருக்க வேண்டும். இதுதான் ஸ்திரப்பிரஞ்ஞை படைப்பாளிக்கு இது மிக முக்கியம்.

- கட்சித் தலைவர்கள் பற்றி பொன்னீலனின் பார்வை வெளிப்பட்டிருக்கிறது. நடேசன் வாயிலாக கட்சியில் ஊசலாட்டம் நுட்பமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. கோலப்பன் வாயிலாகவும் கட்சி பற்றி விமர்சனங்கள் சொல்லப்படுகின்றன.

- பக்கம் 18–ல் அரசியல் அதிகாரம் இவர்களைக் கைப்பற்றிக் கொள்ளும் என்பது பற்றி இவர்களுக்கு சிந்தனை இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்தச் சிந்தனைக் குறைபாடு தானே நாவலின் மையப் பொருள்களில் ஒன்று. வாய்ப்புள்ள இடத்தில எல்லாம் சொல்லி வந்திருக்கிறேன்.

சி.ஆர். இரவிந்திரன் :
ஈரம் கசிந்த நிலம்

1. தலைகுனிஞ்சாக் கவுண்டர், கண்ணுச்சாமி, செங்கண்ணன், செல்லம்மாள், அம்மலை, ஆகியவர்கள் தொடர்புடைய கதை அநேகமாக நாவலின் மையத்திலிருந்து வேறுபட்டு இயங்குகிறது. தொடக்கத்தில் நிறுவப்படும் அம்மணியின் ஆளுமை, கண்ணுச்சாமியைக் காதலிக்கத் தொடங்கியதும் தளர்கிறது என்றே சொல்லவேண்டும். கண்ணுச்சாமி ஆளுமைத் திறம் அற்றவன். நகரச் சார்பு உடையவன். வேளாண்மையில் தன் இருப்பை உணர்கிற அம்மணி, கண்ணுச்சாமியைக் காதலிப்பதற்கான நியாயம் இல்லை. அவன் அமைதியானவன், படித்தவன் என்று வைத்துக் கொண்டால் இதன் காரணமாக் அம்மணிக்குள் மனச்சிக்கல் ஏற்பட்டிருக்க வேண்டும். செங்கண்ணனிடம் அடிபடும்பொழுது, அம்மணியின் மனஉறுதி வியக்கத்தக்க முறையில் நிமிர்ந்து நிற்கிறது.

தலைகுனிஞ்சாக்கவுண்டர் தன் பேரன் கண்ணுச்சாமிக்கு அம்மணியை மணம் முடித்துத் தருகிற செயலில் சற்றும் உடன்பாடு தெரிவிக்கவில்லை. கண்ணுச்சாமியின் திருமணத்தின் மூலம் தன் தகுதி உயர்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். பழைய தலைக்குனிவை மறைத்துக் கொள்ள விரும்புகிறார். எனினும் கண்ணுச்சாமி திருமணப்பேச்சு எழுகிறபோதே பழமை திரும்ப அவர் முகத்தில் அடிக்கும். அம்மணியைக் காணாமல் கண்ணுச்சாமி தடுமாறுகிறான்.

இந்தக் கதைக்கு அச்சாணியாக எதைக் கொள்ள முடியும்? மரமேறியோடு மகள் ஓடிவிட்டாள். அப்பொழுது தலைகுனிந்தவர் இப்பொழுது நிமிர விரும்புகிறார். கதையை வளர்த்திருந்தால் அவர் தலைநிமிர முடியாது என்பதைக் காட்டியிருக்கலாம். ஆனால் சி.ஆர். ரவீந்திரனிடம் அம்மணி – கண்ணுச்சாமி காதல் கதையாக மட்டுமே இது தங்கிவிட்டது. சாதிச் சிக்கல் என்ற கரு, அதன் மையத்தில் வெளிப்படவில்லை.

2. நாவலின் மையமென நிலஉடைமையாளர்க்கும் குத்தகைதாரர்க்கும் இடையில் ஏற்படும் முரண்பாட்டைக் கொள்ளலாம். வியக்கத்தக்க முறையில் செயல் தீவிரத்தோடு கதை நடைபெற இந்தக் கரு பயன்படுகிறது. தென்னை மரத்தில் துரைசாமியை காளிச்சாமி கட்டிவைக்கிறான். கடைசியில் காளிச்சாமியை துரை கொன்றான். குத்தகைதாரர் சட்டம் தரும் பாதுகாப்பை காளிச்சாமி தனக்கு உறுதியான ஆதாரமாகக் கொள்கிறான்.

காளிச்சாமியின் அண்ணன் கண்ணையனுக்கும் இதேபோல பிரச்சினை. ஆனால் காளிச்சாமி அளவுக்கு கண்ணையன் உறுதியோடு செயல்படவில்லை. ஏற்கனவே அவன் பட்ட கடன் தொல்லைகள் ஒரு காரணம். மன உறுதிக் குறைவு என்பது இன்னொரு காரணம். இவற்றைவிட காளிச்சாமிக்கு வாய்த்த தெய்வானை போன்ற மனைவி கண்ணையனுக்கு இல்லை.

கதையின் ஒரு முக்கியக்கூறு, குத்தகைக்கு நிலம் பெற்றவன், செல்வத்தில் உயர்கிறான். நகர்ப்புறத்தவர் தொடர்போடு செல்வாக்குப் பெறுகிறான். காளிச்சாமியிடம் சேர்ந்த செல்வம் அவனது ஆணவத்தை வளர்ப்பதாகவும் தெரிகிறது. உள்ளூரில் துரை போன்றவரின் ஆணவத்திற்கு இது எதிர்வினையாகவும் இருக்கக்கூடும். இன்னுமொரு காரணம், காளிச்சாமியின் குடும்பத்தினர் வேற்றூர்க்காரர்கள்; உள்ளூர், இவர்களை ஏற்கவில்லை.

3. குத்தகைதாரர் என்ற பிரச்னையோடு தொடர்பு கொண்டு அதேசமயம், இதைவிட விரிந்த இன்னொரு முரண்பாடு கதைக்குள் முக்கியத்துவம் பெறுகிறது. இதுதான் நாவலின் அச்சு எனச் சொல்லலாம். நிலச்சொந்தக்காரர் வெடிக்கார வேலாக் கவுண்டர். இவருக்கும் குத்தகைதாரருக்கும் முரண் எழுகிறபோது ஊர்த்தலைவர் பெரியசாமி கவுண்டர் வருகிறார். ஊர்க்கூட்டம் நடைபெறுகிறது. ஊர் வளமையைக் காப்பாற்ற வேண்டும் என்கிறார் பெரியசாமி கவுண்டர். குத்தகையைப் பதிவு செய்ய வேண்டாம் என்பது அவரது கோரிக்கை. குத்தகைதாரர்கள் இதை ஏற்கவில்லை. பதிவு செய்து கொண்டால் கடன்வசதிகள் கிடைக்கின்றன என்பதும் அவர்களது வாதம். பிரச்னை எழுந்தால் காவல் நிலையத்திற்கோ நீதிமன்றத்திற்கோ செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் ஊர்க் கட்டுப்பாட்டை சந்திக்க நேரும் என்கிறார் பெரியசாமி கவுண்டர். இந்த மிரட்டல்களை அவர் செயல்படுத்தவும் முடியவில்லை. அவர் அதிகாரம் கலகலத்துப் போகிறது. வெடிக்கார வேலப்பகவுண்டரின் செல்வம், செல்வாக்கு, அதிகாரம், தன்மானம் எல்லாமே சரிகின்றன. சரிந்த நிலையில் மனம் சிதைந்து பழிவாங்கும் மனநிலையை அடைகின்றார். இதேபோல பெரியசாமிக் கவுண்டருக்கும் வருத்தம். பஞ்சாயத்து, ஊர்க் கட்டுப்பாடு என்ற நிறுவன கதைகள் தகர்கின்றன.

நம் கிராமப் புறங்களில் 60/70 களில் ஏற்பட்ட இந்த மாற்றங்களை இந்த நாவல் சித்திரிக்கிறது. இதை ஆசிரியர் எவ்வளவு சரியாகச் சித்தரித்தார் என்ற கேள்விக்கு இடமிருந்தாலும், இந்த அம்சத்தை இந்த

நாவலில் சித்தரித்ததற்காக ஆசிரியரை நாம் பாராட்டலாம். கிராமப்புறங்களில் முதலாளியம் தொடர்ந்து நுழைந்து செல்வாக்குப் பெறத் தொடங்கியதை, நாவலில் சொல்லப்படும் பிரச்னைக்கு ஆதாரத் தளமென நாம் புரிந்து கொள்ளமுடியும். குத்தகைதாரர் சட்டத்தைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு கடன் வசதி, வங்கிகள் வரவு, உரம், புதிய கருவிகள், டிராக்டர், காவல்நிலையம் முதலியவை கிராமத்திற்குள் வந்து சேர்கின்றன. பஞ்சாயத்து என்பது ஊர்ப்பெரியமனிதர்களின்–நில உடைமையாளர்களின் நிறுவனமாக மாறியதைத் தொடர்ந்து அது கிராமத்தில் தன் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள இயலாது, தவிர்க்க முடியாமல் அது சிதைகிறது. அடுத்து வரும் சமூகம் குரூரமாகத்தான் இருக்கும். கிராமத்திற்குள் கட்சியின் வருகை நாவலில் சொல்லப்படவில்லை. இனி கட்சிகள் வரும். துரை முக்கியப் புள்ளியாக மாறுவான். காப்பிக்கடை வருகை மட்டுமே நாவலில் சொல்லப்படுகிறது. மளிகைக்கடை, பஸ் முதலியவனவும் கிராமத்துக்கு வரும்.

4. ஒரு கிராமத்தைப் பற்றிய சமூகவியல் என்ற ஆய்வு நோக்கில் பார்க்கும்பொழுது நிறைய விவரங்களை இந்த நாவல் தனக்குள் கொண்டுள்ளது. கிராமத்து வேளாண்மை முறை, ஊர் அமைப்பு, பல கிராமங்களுக்கிடையில் வண்டிப்பாதை அல்லது சாலை, நீரோடை, ஏரி அல்லது குளம் முதலிய விவரங்கள், சாகுபடிமுறை, குடியானவர்க்கு நெருக்கமான கால்நடைகள், நாய்கள் பற்றிய விவரங்கள், ஊருக்குள் சாதிய நிலவரங்கள், பண்ணையில் வேலை செய்யும் மாதாரி, செருப்பு தைக்கும் மாதாரி, திருட்டு, கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள வலையர்கள் பற்றிய விவரங்கள், விவசாயக் குடும்பங்களில் பெண்களின் உழைப்பு நிர்வாகம், ஊர்க்குள் காளிகோவில், விழா வசூல், விழாவின் போது நிகழ்ச்சிகள், கும்மி கோலாட்டம் பற்றிய செய்திகள், ஊர்க்கூட்டம், நடைமுறை இவ்வாறாக நிறைய விவாங்கள் நாவலில் இடம்பெற்றுள்ளன. இந்தக் கிராமத்தின் நிலவியல் தோற்றத்தை ஒரு வரைபடத்தில் குறித்துவிடும் அளவுக்கு துல்லியமாய் விவரங்கள் தரப்படுகின்றன. வலையர்களின் வாழ்க்கை அசாதாரணமானது. கிராமத்தில் ஆசாரிகளின் தொழில் மிகுந்த முக்கியத்துவம் உடையது. குயவர்களும் முக்கியத்துவம் உடையவர்கள். இந்த நாவலில் வரும் அய்யாவு ஆசாரி தனிச்சிறப்பான மனிதர். சாக்குப்பை நாயக்கரின் காப்பிக் கடையில் கவுண்டர் பலர் கூடுகின்றனர். ஊர்ப்பெரிய மனிதர்கள் இங்கு கூடுவதில்லை. சிறுநில விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் இங்கு கூடுகின்றனர். ஊர்நிலவரங்கள் பற்றிய தகவல்கள் இங்கு பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. பரிமாற்றத்துக்கிடையில் நகைச்சுவை ஒரு முக்கிய

உணர்வு. இந்த நகைச்சுவை இல்லாமல் மனிதர் இங்கு வாழ முடியாது. இழப்பையும் தம் அவமானங்களையும் நகைச்சுவையின் மூலம் தமக்குள் சரிப்படுத்திக் கொள்கிறார்கள்.

கொங்கு நாட்டுப்புறம் இந்த நாவலில், அதன் சீர், சிறப்பு, பொலிவு சிதைவு ஆகியவற்றின் மூலம் சிறப்பாக இடம்பெறுகிறது. இவை பற்றியெல்லாம் நூலிலிருந்து நிறைய விவரங்களோடு நாம் விவாதிக்க வேண்டும். கொங்கு நாட்டுப்புறத்தின் முக்கிய அம்சங்கள் எவை என்ற விரிவான புரிதலோடு இந்த நாவலில் வெளிப்பட்டிருக்கும் கிராமம் பற்றி விவாதிக்க வேண்டும். மேலும் ஒன்று: ஆசிரியரின் வாழ்வியல் அனுபவங்கள் அங்கங்கே வெளிப்பட்டிருக்கின்றன என்றால் இவை பற்றியும் நாம் பிரித்தறிய வேண்டும். அல்லது புரிந்து கொள்ளவேண்டும். ஆசிரியரின் உழவுத்தொழில் சார்ந்த அனுபவங்கள் இந்த கொங்கு நாட்டு நாவலை சரியான வண்ணத்தில் படைக்க உதவியுள்ளன. காதலும் வன்முறையும் நாவலின் கட்டமைப்பை உருவாக்கியுள்ளன. வரலாறு சொல்லாமல் நாவல் எழுத இயலாது என்பதை இந்த நாவல் மெய்ப்பிக்கிறது. இந்த நாவலின் மையத்தில் உறைந்துள்ள ஆழ்ந்த உணர்வு, சோகம். நிறைய மனிதர்கள் இந்த நாவலில் சோகத்தில் வளம் பெறுகிறார்கள். சோகத்தை அவ்வப்பொழுது உதறிக் கொண்டு மனிதர்கள் சிரித்துப் பேசி உறவாடுகிறார்கள். மனிதர்கள் தமக்குள் அங்கங்கே மறைந்து வாழ்கிறார்கள். இவற்றையெல்லாம் இந்த நாவல் சொல்லுகிறது. கொங்கு நாட்டின் மேற்குப்பகுதி இந்த் நாவலின் களம். தமிழ்நாவலில் இந்தப்பகுதி ஆசிரியர் மூலம் இலக்கியத்தில் இடம்பெறுகிறது. கடைசியாக, வானம், பூமி, மலை, ஆறு, நிலம், பயிர்கள், கால்நடைகள் இவற்றோடு மனிதர்கள் இவற்றின் கதை சொல்வது இந்த நாவல். இந்த நாவலில் சொல்லப்படுவது சென்ற தலைமுறையினரின் கதை. இதை ஏன் இப்பொழுது இன்றைய தலைமுறைக்கு ஆசிரியர் சொல்லவேண்டும்? இந்த நிலத்தின் இன்றைய கதை என்ன? இவை பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும்.

– 13.1.1993

சிவகாமி :
ஆனந்தாயி

நம் காலத்தில் கிராமப்புறம் பெற்றுவரும் மாற்றங்களை ஒட்டி எழும் சிக்கல்களை உச்ச அளவில் சொல்லும் நாவல்களில் சிவகாமி அவர்களின் இந்த நாவல் சில வித்தியாசமான அம்சங்களை உள்ளடக்கியிருப்பதன்மூலம் வாசகர்களின் ஆழ்ந்த கவனத்திற்கு இது உள்ளாகிறது.

பெரியண்ணன், காடு – தோட்ட வேலைகளைப் புறக்கணித்து காண்ட்ராக்டர் தொழிலில் ஈடுபடுகிறான். அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெற்று, அவர்களுக்கும் தேவையானவற்றைச் செய்து நிறைய சம்பாதிக்கிறான். எம்.எல்.ஏ.வுக்கும் இவன் வேண்டியவன். இடையில் லட்சுமியின் மீது தன் முழுக்கவனமும் திரும்பிவிட்டதால் நிறையச் செலவு செய்து உள்ளூரில் செல்வாக்கு இழக்கிறான். கங்காணி குடும்பத்தின் செல்வாக்கு உயர்கிறது. அதைப் பொறுக்க முடியாமல் அவர்களோடு கைகலப்பில் ஈடுபட்டுத், தனக்குத் துணைவந்த அய்யாக் கண்ணு கொல்லப்பட்டதோடு தானும் வெட்டுக் காயங்களைப் பெறுகிறான். இறுதியில், சிறுநகரமாக உருவாகிவிட்ட தன் உள்ளூரில் தன் மகனோடு சேர்ந்து ஒரு கடை வைத்துக் கொள்கிறான்.

பெரியண்ணனைப் பற்றிய இந்தக் கதையில், இந்த நாவலில் மட்டுமே சொல்லப்படுவதான தனித்தன்மைகளெனப் பெரிதாக ஏதும் இல்லை. பெரியண்ணனுக்கும் கங்காணி குடும்பத்திற்கும் ஏற்படும் தகராறு கிராமப்புறங்களில் வழக்கமான ஒன்றுதான். மாவட்டத்தின் தலைநகரம் நாளடைவில் சிறிய கிராமங்களையும் தன் ஆதிக்கத்திற்குள் / நாகரிகத்திற்குள் இழுத்துக் கொள்வதும் நம் காலத்து நிகழ்வுதான். தமிழ் நாவல்கள் ஏற்கனவே இவற்றைப் பதிவு செய்துள்ளன.

இவற்றைத் தவிர்த்துப் பார்க்கும்பொழுது இந்த நாவலின் தனித்தன்மைகள் துலக்கமாகத் தெரியவருகின்றன. இந்த நாவல் முழுவதும் நம் காலத்துக் கிராமப்புறங்களில் பெண்கள் படும் துயரங்களை விரிவாக, ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு கதை என்ற முறையில், வாசகர்களின் மனத்தில் தங்கும் வகையில் ஆசிரியர் சித்திரித்துள்ளார்.

பெரியண்ணன் மனைவி ஆனந்தாயி ஆறு குழந்தைகளைப் பெற்றவள். பெரியண்ணன், கிராமப்புறத்து உழவர் குடும்பத்தில் கணவன்

என்ற முறையில் தன் மனைவியின் மீது தன் ஆதிக்கத்தை முழுஅளவில் செலுத்தும் மனிதன். பிரசவவேதனையில் இவள் துடித்துக் கொண்டிருக்கும்பொழுது கூட மாடியில் இன்னொருத்தியோடு குலவிக் கொண்டிருப்பவன். கணவன் புறக்கணித்தாலும் காடு தோட்டங்களை இவள் கவனிக்கிறாள். வாரம்தோறும் தவறாமல் கணவனால் கடுமையாக மயங்கி விழும்வரை உதைக்கப்படுகிறாள். தற்கொலையை இவள் சிந்திக்கிறபொழுது, குழந்தைகள் என்னாவது என்ற எண்ணத்தில் அதை உதறிக் கொள்ளுகிறாள். இரவில் தன்னைச் சுரண்டும் கணவனுக்கு இடம் தர மறுக்காமல் தானும் உடல் இச்சை தீர்கிறாள். தன் மகள் தனம் தன்னை இதற்காக அருவெறுப்போடு இகழ்ந்துரைக்கிறாள். லட்சுமி என்பவளை தன் கணவன் தன் வீட்டிலேயே வைத்து கொஞ்சும்பொழுது, அவளும் தன் கணவனால் அடிபடும்பொழுது, அவளுக்காகவும் வருந்துகிறாள். இவனை விட்டுத் தொலைந்தால் என்ன என்ற நம் காலத்துக்குரிய பெண்ணியச் சிந்தனை இவளுக்குள் பலமுறை எழுகிறது. தன் மாமியார்கூட இவளைத் தூண்டுகிறாள். இவளால் இப்படிச் சிந்திக்க முடியும். ஆனால் அதைச் செயல்படுத்த முடியாது. நம் உழவர் குடும்பத்துப் பெண்ணின் மனநிலைதான் இது. இவளுக்குள் நெடுங்காலத்துப் பாரம்பரியம் உறைந்து கிடக்கிறது. இவள் கணவனிடம் படும் அடி உதைகள் வாசகர்களின் மனத்தைத் தகர்க்கக்கூடியவை.

பெரியண்ணன் தன் வீட்டிலேயே கூட்டி வைத்துக் கொண்ட ஒருத்தி லட்சுமி. இவளது வித்தியாசமான விரிவான கதை நாவலை நிறைத்திருக்கிறது. தென் மாவட்டத்தில் ஒரு சீனித் தேவரின் மகள் இவள். கிராமத்து மண்ணும் உறவுகளும் இறுதிவரை இவளிடம் வேர்களாய், பாறையாய்ப் பதிந்திருக்கின்றன. திருமண வாழ்க்கை இவளுக்கு வாய்ப்பாக அமையவில்லை. எங்கெங்கோ கைமாறி இறுதியாக தண்டபாணி என்னும் தரகன் மூலம் பெரியண்ணனை வந்து சேர்கிறாள். இவளிடம் பெரியண்ணன் கொண்ட காமம் அவள் இறந்த பின்னும்கூட அவனுக்குத் தீரவில்லை. பெரியண்ணன் இவளை உதைக்கிறபொழுது, இவள் திருப்பி எட்டி உதைத்தாள். அரிவாளை எடுத்துக்கொண்டு அவனை வெட்டத் தயாரானாள். தன்னைச் சின்னம்மா என்று அழைத்த மணி இவளை நெஞ்சில் எட்டி உதைத்தபோது இவள் கலங்கிப் போனாள். இந்தச் சோகம் இவளுக்கு இறுதிவரை இருந்தது. பெரியண்ணனை வெறுத்து தன் ஊருக்குச் சென்றாள். லாரிக்காரனோடு ஓடினாள். தன்னைவிட இளைய ராஜமாணிக்கத்தோடு ஓடினாள். பெரியண்ணன் இவளைத் தேடி இழுத்து வந்தான். தான் செத்தாலும் தன் கறி தன் ஊரில்தான் விழும் என்ற உறுதி கொண்டிருந்த இவள், கடைசியாக என்ட்ரின் நஞ்சு அருந்தி உயிர் நீத்தாள்.

வலுவான ஆளுமை உள்ள இவளுக்கு நம் காலச் சூழலில் வளமான – மரியாதைக்குகந்த வாழ்க்கை மறுக்கப்பட்டிருக்கிறது. அன்பும் ஆளுமையும் நிறைந்த மனிதப்பெண் இவள். கோவிலில் துர்க்கையாக, பெரிய அலுவலகங்களில் நிர்வாகியாக வாழும் தகுதியுடையவள் இந்த லட்சுமி. இவளைச் சீரழிக்கிற நம் கால வரலாற்றின் சோகம் சொல்லிமுடியாதது. மணி இவளை அடித்தான். தனம் இவளை வேசி என வசை மாரி பொழிந்தாள். பெரியண்ணனைத் தண்டிக்க பலரோடு ஓடினாள். தன் ஊர் மண்ணை மறக்க இயலாமல் செத்துப் போனாள்.

சிவகாமியின் கைவண்ணத்தில் இவள் லட்சுமியாய் உருப்பெற்றிருக்கிறாள்.

பெரியண்ணனின் தாயார் வெள்ளையம்மாள். மாடிக்குச் செல்லும் சந்தில் இவள் முடங்கிக் கிடக்கிறாள். விவசாயக் குடும்பங்களின் நெடுங்காலப் பாரம்பரியம் இவளுக்குள் நீரோட்டமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. குடும்பத்து நிகழ்வுகள் அனைத்தும் இவள் பார்வையில். பார்வை குறைந்தபோதும், மனத்தில் பட்டு தொடர்ச்சியான எதிர்வினைகளைத் தருகின்றன. வெளியூரிலிருந்து தன் கணவனோடு இந்த ஊருக்கு வந்து கொஞ்சம் நிலம் வாங்கி அதைப் பண்படுத்தி செழிப்பாக்கிய கால நினைவுகளிலிருந்து இவள் தன்னை விடுவித்துக் கொள்ள இயலவில்லை. இப்பொழுது கணவன் இல்லை. கண்பார்வையும் மங்கிவிட்டது. யாராவது அந்த நிலத்திற்குத் தன்னை அழைத்துச் செல்ல மாட்டார்களா என அந்த முதியவள் காத்திருக்கிறாள். தன் கணவன் எப்படி இறந்தான்? மகன் பெரியண்ணன் ஆடு வாங்கி வளர்க்கிறான். ஒருசமயம் தன் கையில் காசு இல்லாதபோது மகனிடம் காசு கேட்க அவன் பொய் சொல்லி தன் காசை மறைத்துக் கொள்கிறான். தன்மானமிக்க கிழவர் என்ன செய்தார்? அதிகாலையில் எழுந்து மாடு கன்றுகளைக் கவனித்துவிட்டு நிலத்திற்குச் சென்று, எருக்கலை ஒடித்து அதன் பாலைச் சேகரித்து உண்டு இறந்து கிடக்கிறார். பெரியண்ணன் குடும்பத்து மனிதர்களுக்கு இவள் தான் ஆதி / காவல் தெய்வம். குழந்தைகளுக்கு படிப்பு எதற்கு? காடு, தோட்டங்களைக் கவனிக்க வேண்டும். இப்படி ஓயாமல் இந்த முதியவள் பேசுகிறாள்.

இந்த மூவரைத் தவிர, இவர்களைப் போலவே ஆற்றலும் அழுத்தமும் மிக்க இன்னும் பல பெண்களின் கதைகளை இந்த நாவல் கொண்டிருக்கிறது. செத்துப் போன அய்யாக்கண்ணுவின் மனைவி அங்கம்மா. ஆனந்தாயி வீட்டுக்கு அடிக்கடி வந்து தன் சோகம் சொல்லி கம்பு, சோளம் என வாங்கிச் செல்கிறாள். வடக்கத்தியான் மகள்

பூங்காவனம், வீட்டில் இரு என்று அம்மா சொன்னபோதும் பசியோடு கணக்குத் தேர்வுக்குச் சென்று திரும்பி வருகிறபோது காலையிலிருந்தே பேதியால் துன்புற்றுக் கொண்டிருந்த தன் தந்தை இறந்து கிடப்பதைப் பார்க்கிறாள். அத்துடன் அவள் படிப்பு முடிந்தது. காடு தோட்டங்களுக்குத் தன் அம்மாவோடு போய்வருகிறாள். கங்காணி வீட்டில் ஒருசமயம் வேலைக்காரியாய் பணிபுரிகிறாள். நாய்க்கர் வீட்டில் வேலை பார்த்தபோது துரைசாமி இவளை ஏமாற்றினான். கருக்கொண்ட நிலையில் அவளை விட்டுப் போனான். குழந்தை பெற்று வளர்க்கிறபோது வந்தவனை வெளியே போடா என்று விரட்டியடிக்கிறாள். சமாதானம் செய்ய வந்தவர்களிடம், இரண்டாம் குழந்தையும் கொடுத்துவிட்டு இவன் ஓடிப் போனால் நான் என்ன செய்யமுடியும் என்று சொல்லி வைராக்கியத்தோடு வாழ்கிறாள். இவளுக்குள் செயல்படும் பெண்ணியம் இவள் புத்தகத்திலிருந்து கற்றுக் கொண்டதல்ல. தன் குடும்பச் சூழலில் கிராமச் சூழலில் இவள் கற்றுக்கொண்ட அனுபவக்கல்வி. ஆனந்தாயியின் இரண்டாவது மகள் தனம் சிறுவயதிலிருந்தே வம்பும், வழக்கும் எனத் திரிபவள். வெட்டிப் போட்டாலும் இவள் வாய் அடங்காது. அம்மாவின் காமத்தையும் அருவெறுத்துப் பேசுகிறாள். அப்பாவையும் நேர்முகத்தில் திட்டுகிறாள். திருமணத்திற்குப் பிறகு இவள் கணவனிடம் பட்ட அடிகள் கொஞ்சமல்ல. இவளும் ஒருசமயம் பக்கத்து வீட்டு டானியலைக் காதலித்தாள். டானியலின் குடும்பம் பெந்தகொஸ்தெ குடும்பம். பெந்தகொஸ்தெ கோட்பாட்டில் முழுமையாக கரைந்து இறுகிப் போனவர்கள் அந்தக் குடும்பத்தினர். கிராமத்துக்கு இது ஒரு வினோதமான புதுவரவு. டேனியலை பெரியண்ணன் கூப்பிட்டு உதைத்தான். அவன் தற்கொலை செய்துகொண்டான். தனத்தின் காதல் தீர்ந்தது. அவள் மன வக்கரிப்பு இன்னும் அதிகப்பட்டிருக்கும். பள்ளிச்சூழல்; தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் பெறும் ஆனந்தம். வீட்டில் வேலையென எதையும் தொடவிரும்புவதில்லை. கலாவும் இப்படித்தான் இருந்தாள். இளைய பெண்களின் இத்தகைய போக்குகளை கச்சிதமாக ஆசிரியர் சொல்லுகிறார். ஊறலாயி என்று இன்னொருத்தி. ஊரில் கள்ளச்சாராயம் விற்பவன் குள்ளன். அவன் மனைவி ஊறலாயி. யார் எதைச் சொன்னாலும், அதைத் திரித்துப் புரட்டி எதிர்மறைப் பொருள் எடுத்து வாய்கோணாமல் பேசுபவள் ஊறலாயி. போலீஸ்காரன் அழைத்துச் செல்கிறபோதும் எதிர்வீட்டின் முன்நின்று அவர்களைக் குத்தலாகப் பேசி நகர்கிறாள்.

இந்தப் பெண்களெல்லாம் நம் கிராமத்தின் விளைச்சல்கள். ஆனந்தாயி, வெள்ளையம்மாள், இவர்களுக்குள் பாரம்பரியத்தோடு கூடிய நிறைவான ஒருவகை விளைச்சல். தனம் முதலியவர்களிடம் இன்னொரு

வகை விளைச்சல். எங்கிருந்தோ வந்த ஒரு புதிய நாகரிகம், பிசாசு மாதிரி இவர்களைக் கவ்விக் கொள்கிறது. பிசாசின் கொடிய கரங்களில் சிக்கித் தவித்து இவர்கள் கத்துகிறார்கள். இம்மாதிரி ஒரு விளைச்சல் மணி என்ற ஆண் பாத்திரம். அப்பாவுக்கு இவன் நேர்வாரிசு. அப்பாவைக்கூட இவன் எப்பொழுதாவது அடிக்கக் கூடும். இந்த நாவலிலேயே நமக்குள் நகைச்சுவை உணர்வைத் தூண்டும் ஒரு பாத்திரம் டிங்குமல்லி. இது அவனுக்குப் பட்டப்பெயர். எதைப் பேசினாலும் தமிழ் உணர்வோடு எதுகை – மோனை வரிசையில் வார்த்தைகளை அடுக்கிப் பேசுவான். பட்டப்பெயர் சொன்னால், கெட்ட கெட்ட வார்த்தைகளை இதே வரிசையில் அடுக்கிக் கொட்டுவான். இவற்றையெல்லாம் சொன்னபிறகு நாவலில் இன்னும் பாதிப்பகுதியை நிறைத்துக் கொண்டிருப்பது கிராமத்து வாழ்வியல். தோட்டம், காடு, ஆடு, மாடுகள் பயிர்வகைகள், வயல்வேலை, நாற்று நடவு, பெண்கள் சிறுவாடு சேர்த்தல்; அதிசயமாய் வீட்டில், இட்லி பலகாரம். சோற்றுத் தட்டின் முன் எப்போதும் அமர்ந்திருக்கும் குழந்தைகள், பத்து வயதிலும் தாயின் மடியில் அமர்ந்து பாலருந்தும் குழந்தை, சட்டியில் எப்போதும் குளிர்ந்து கிடக்கும் கம்மஞ்சோறு, காடு கரை நோக்கி கூலி வேலைக்குச் செல்லும் பெண்கள், வாய்க்காலில் வரும் நீரை தனது வயலுக்குத் திருப்பிக் கொள்ளும்போது ஏற்படும் சண்டை சச்சரவுகள், கூலி வேலைக்கு வரும் சின்னச்சாமி வீட்டுக்குள் அடிக்கடி எட்டிப் பார்த்து ஏதாவது பெற்றுக் கொள்கிற அவன் குணம், பாடம் சொல்லித் தரும்போதே பெண்ணின் உடல் தடவும் வாத்தியார், அப்பா மறைத்து வைத்திருக்கும் சாராயத்தை தந்திரமாய் எடுத்துக் குடிக்கிற மகன் – இப்படி கிராமப்புறத்துக் காட்சிகள் நூற்றுக் கணக்கில். இவற்றின் அழகை அனுபவிக்க இந்த நாவலை இன்னும் சிலமுறை படிக்கலாம். உண்மையில் நம் கிராமப்புறம் சிவகாமி போன்ற வளமான எழுத்தாளர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்று நாம் மனமுவந்து கூற முடியும். இத்தனை அழகோடு நம் கிராமத்தை யார் சொன்னார்கள்? இன்னும் எத்தனையோ பேர் சொன்னாலும் தீராத அழகுடையவை நம் கிராமங்கள்.

ஆனந்தாயி - மேலும் சில குறிப்புக்கள் :-

1. ஆனந்தாயி நாவலில் இந்திய / தமிழகச் சூழலில் கூடியவரை அறுபது கால சமூக நிலவரங்கள் / முரண்பாடுகள் என்று சொல்லத்தக்க முறையிலான சமூகச் சித்தரிப்பு இடம் பெற்றிருப்பதாகக் கொள்ளலாம். நம் சமூகத்தில் ஒப்பந்தக்காரர்கள், எம்.எல்.ஏ.க்கள், அரசு அதிகாரிகள் (தேர்தல்கள்) ஆகியவர்களுக்கிடையிலான கூட்டுறவுகள் இக்காலத்தில் தான் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கின என்று கருதலாம். நகரத்திற்கும்

கிராமத்திற்கும் இடையிலான முரண் வெளிப்படுகிறது. ஒரு சிறு கிராமம் எப்படி நகரமாக வளர்ச்சி பெறுகிறது என்பது நாவலில் தெரிகிறது. சமூகத்தில் உற்பத்தியாகும் செல்வத்தை மேல் தட்டில் இருப்பவர்கள் எதைச் செய்தும் அபகரிப்பது என்ற போக்கு அதிகரிக்கிறது. பெரியண்ணன் விவசாயத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறான். காசு ஏற்கனவே அவன் தந்தையைப் பலி வாங்கிவிட்டது. குடும்பத்திற்குள்ளும் அவன் சுரண்டலை நடத்துகிறான். விவசாய வேலைகள் ஆனந்தாயியின் தலையில் சுமத்தப்படுகின்றன. பசுமைப்புரட்சியின் எதிர்நிலைகள் / நாசங்கள் நாவலில் சொல்லப்படுகின்றன. பெரியண்ணன் குடும்பத்தில் வெளிப்படும் தீய போக்குகளைப் போலவே கங்காணியின் குடும்பத்திலும் தீய போக்குகள் (அன்புச் செல்வம், நொள்ளைக் கண்ணன், மாணிக்கம் ஆகியவர்கள் மூலம்) வெளிப்படுகின்றன.

2. பெரியண்ணன் வன்முறையின் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றான். விவசாயப் பாரம்பரியத்தின் நற்குணங்கள் அவனிடமிருந்து கழன்றுவிட்டன. நிலப்பிரபுத்துவத்தின் ஒரு கோர முகம் மட்டும் அவனிடம் தங்கி அப்புறம் பெருத்திருக்கிறது. தன்னிடம் செல்வம் பெருகுவதற்கேற்ப ஊரில் தன் ஆதிக்கம் நிலைபெற வேண்டும் எனக் கருதுகிறான். அதேசமயம் ஊரிலிருந்து அந்நியப்பட்டு வருகிறான். கங்காணிக்கு ஊரில் நிலபுலன்கள் இருக்கின்றன. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றான். பெரியண்ணனைப் போல அவன் செல்வத்தை விரயப்படுத்தவில்லை. பெரியண்ணன் தன் வன்முறையை மனைவி மீது மட்டுமல்லாமல் லட்சுமியின் மீது, மகள் தனத்தின் மீது செலுத்துகிறான். இறுதியில் கங்காணி குடும்பத்தின் மீதும் செலுத்துகிறான். இவனது வன்முறை லட்சுமிக்குள் இவனுக்கு எதிரான வன்முறையைக் கிளப்புகிறது. லட்சுமி இவனிடமிருந்து தப்ப முயற்சி செய்கிறாள். திரும்பவும் இவன் எல்லைக்குள் மாட்டிக் கொள்கிறபோது இறுதியில் தன்னை அழித்துக் கொள்கிறாள். தேள் தன் குஞ்சுகளைக் கொட்டிக்கொட்டி அதற்கு விஷம் ஏற்றுகிறது என்று மரபில் ஒரு நம்பிக்கை இருக்கிறது. இதற்கு ஒத்த முறையில் மணியையும் தனத்தையும் கண்டிப்பதன் மூலம், பெரியண்ணன் செலுத்திய வன்முறை முதலில் அவர்களுக்குள் எதிர்நிலையாகத் தங்கி பிறகு அதை அவர்கள் உள்வாங்கிக் கொண்டு நாளடைவில் வன்முறையாளராக மாறுகிறார்கள். இந்த வன்முறை அவர்களுக்குள் தங்கி, இதன் மையத்தில் அவர்களின் ஆளுமையைக் குறுக்கி அழிக்கிறது. இந்த வன்முறையிலிருந்து இனி மணியாலும், தனத்தாலும் விடுபடுவது சாத்தியமில்லை. இம்முறையில் பெரியண்ணன் முதலிய வன்முறைக்காரர்களுக்கு என்றும் விடுதலை சாத்தியமில்லை. இவர்களுக்கு அகன்ற வானம் இல்லை. பசுமை நிறைந்த வயல்வெளிகள் இல்லை. இவர்களுக்குள் பறவைகள் பாடமுடியாது.

3. நம் இந்திய / தமிழகச் சமூகத்தின் ஐயாயிரம் அல்லது பத்தாயிரம் ஆண்டுகள் நிலவிவருகிற தொன்மையான பண்பாடு என்பது உழவர் சமூகத்தைச் சார்ந்தது. பாட்டி வெள்ளையம்மாள் இந்த உழவர் சமூகத்தின் பண்பாட்டை ஓயாமல் எதிரொலிக்கிறாள். இதனுள் எதிர்மறைக் குணங்கள் உண்டு என்றாலும் இது தன் ஆழத்தில் சமூகத்தைத் தாங்கும் விரிந்த மனத்தைக் கொண்டதாக இருக்கிறது. விவசாயத்தோடு தன்னைக் கரைத்துக் கொண்ட ஆனந்தாயிக்குள் அவளை அற்புதமான தாயாக உருவாக்கியிருக்கிறது. நாவலின் இறுதியில் ஆனந்தாயி தானும் பாட்டியாகி அந்த வெள்ளையம்மாளைப் போல, தனக்குள் தொடர்ந்து வருகிற அந்த முதிர்ந்த பண்பாட்டை ஒலிப்பவளாக மாறுவதைக் காண்கிறோம். அவள் இந்தப் பண்பாட்டை தன் தாயிடமிருந்து இயல்பாகவே பெற்றிருக்கிறாள். கங்காணியின் குடும்பத்தினுள் இந்தப் பண்பாடு வெளிப்படையாகத் தெரியவில்லை. வடக்கத்தியான் குடும்பத்தினுள்ளும் இந்தப் பண்பாடு வெளிப்படையாகத் தெரியவில்லை. அன்றாடம் சோற்றுக்கே திண்டாடும் நிலை ஏற்பட்டபிறகு இந்தப் பண்பாடு அவர்களுக்குள் தங்க முடியாது. பூங்காவனம் ஒரு விந்தைப்பிறவி என்று சொல்லத்தக்கவள். உண்மையில் இந்த நாவல் தன் ஆழத்தில் விவசாயப் பண்பாட்டிற்கும், பணத்தையே குறியாக வைத்து இயங்கும் இன்னொரு பண்பாட்டிற்கும் இடையில் உள்ள முரண் நிலையால் கட்டமைக்கப்படுகிறது என்று கூறலாம். இந்த இரண்டாவது பண்பாடு முதலாளியம் என்பதன் மூல வடிவம் அல்ல. இந்தியச் சமூகத்தில் வளர்ச்சி பெற்ற முதலாளியம், தரகுத்தனமான அல்லது பொறுக்கித்தனமான முதலாளியம். இந்தப் பொறுக்கித்தனம்தான் ஊழல், வன்முறை ஆகியவற்றை தனக்கு இயல்புகளாகக் கொண்டிருக்கிறது. விவசாயப் பண்பாடு பொறுக்கித்தனமான முதலாளியத்தால் கடுமையாகச் சீர்குலைக்கப்படும். விவசாயப் பண்பாடு தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. பொறுக்கித்தனம் எத்தகைய சாகசத்தையும் பயன்படுத்தி தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும். இன்றைய வரலாறு இதைத்தான் நமக்கு மெய்ப்பிக்கிறது. நாவலின் இறுதியில் நாம் என்ன உணர்கிறோம்? நாவலின் இறுதியில் நாம் என்ன பார்க்கிறோம்? வாசிக்கும்பொழுதே நமக்குள் சில கலவரங்கள் எழுந்துள்ளன. இந்தக் கலவரங்கள் நமக்குள் அடங்குகிற மாதிரி நாவலின் முடிவு இல்லை. பெரியண்ணன் கிளப்பிவிட்ட வன்முறை மணிக்குள் தொடர்கிறது. நீலவேணி முடமாகிக் கிடக்கிறாள். வடக்கத்தியான் மனைவிக்கு வாழ்க்கை இல்லை. பூங்காவனம் தன் ஆற்றலில் தனித்து வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறாள். கலா தப்பி விட்டாள். படைப்புத் திறனற்ற வாழ்க்கைக்குள் தனக்கு வழி தேடிக் கொண்டாள்.

த.6.

4. இந்த நாவலில் காமம் முழு அளவில் தன் ஆதிக்கத்தை செலுத்துகிறது. தேங்கிய, நாறிக்கொண்டிருக்கும் நம் சமூகத்தில் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? குறிப்பிட்ட வயதில் காமம் நமக்குள் ஊறுகிறது. இதை அடக்கி, முற்றாகக் களைந்து விட வேண்டுமென்று நம் மரபில் உள்ள வாய்வேதாந்தம் பறை சாற்றினாலும் அது உண்மையல்ல என்பதை நாம் எல்லாக் காலங்களிலும் பார்க்கிறோம். விசுவாமித்திரர் கதை திரும்பத் திரும்ப நடைபெறுகிறது. காமத்தை எதிர்கொள்ளும் முறை இது அல்ல என்பதை, நம் காலத்தில் நாம் சரியான முறையில் புரிந்துள்ளோம். ஃபிராய்டு தொடங்கி இதற்கான மெய்யியல் புரிதல் நமக்கு நேர்ந்திருக்கிறது. ரஜனீஷ் முதலியவர்களை நாம் இங்கு நினைத்துக் கொள்ளலாம். பொறுக்கித்தனமான முதலாளிய சமூகம் காமத்தை விலைப் பொருளாக்கி, விளம்பரப்படுத்தி, தீர்க்கமுடியாத முரண்பாடுகளோடு ஒரு மனிதனை மாட்டி வைத்து, இதன்மூலம் காமத்தின் ஆட்சியை பல மடங்கு பெருக்கியிருக்கிறது. இந்த நிலையிலிருந்து நாம் தப்பமுடியாது. பெரியண்ணன் ஆனந்தாயோடு நடத்தும் கூத்துக்களை தனம் பார்க்க நேர்ந்தபொழுது முதலில் கடுமையான அருவெறுப்பு கொள்கிறாள். அப்புறம் டேனியலோடு காதலில் சிக்கிக் கொள்கிறாள். ஆனந்தாயிக்கு எவ்வளவு உடல் சோர்வு இருந்தபோதிலும் ஒரு இயல்பான தேவை என்ற முறையில் காமத்தை நுகர்கிறாள். பூங்காவனத்திற்கும் இந்த உடல் தேவை நிறைவுறத்தான் வேண்டும். ராமசாமியை அவள் உதறிக் கொண்டது, அவளது ஆற்றலைக் காண்பிக்கிறது. பூங்காவனம் ராமசாமியோடு உடலுறவு கொண்டதை வைத்து அவளைக் குற்றம் சொல்ல முடியாது. நீலவேணி நம்முன் பரிதாபமாக நிற்கிறாள். லட்சுமியின் வாழ்க்கை கொடுமையானது. பரிதாபத்துக்குரிய காமத்திலிருந்து அவள் தன்னை விடுவித்துக் கொண்டபோதும் காமநுகர்வுக்கான கருவியாகவே இறுதிவரை சீரழிக்கப்படுகிறாள். சாவுதான் அவளுக்கு விடுதலை தருகிறது. ஆனந்தாயி தனக்குள் தொடர்ந்து சிலுவையைத் தாங்கியிருக்கிறாள். சிலுவையைத் தன் உடலின் அங்கமாகவே அவள் மாற்றிக் கொண்டுவிட்டாள். லட்சுமிக்கு இது சாத்தியமில்லை. அவள் வெளியிலிருந்து வந்தவள். அவள் குடும்பமும், ஊரும் அவளை உதறி விட்டன. அவள் விடுதலைக்கான வழிகள் முற்றாக அடைபட்டுவிட்டன.

5. நாவலின் வடிவம் பற்றி இங்கு சிலவற்றைச் சொல்லலாம். நாவலின் மையமாக இருப்பவள் ஆனந்தாயி. பெரியண்ணன், ஆனந்தாயி, லட்சுமி ஆகியவர்களுக்கிடையில்தான் நாவலின் மையம் இயங்குகிறது என்றும் சொல்லலாம். நாவலில் ஒற்றை மையம் நாவலின் வடிவத்தைக் குரூரமான முறையில் குறுக்கிவிடுகிறது. நாவலில் பல மையங்கள் இயங்கவேண்டும்.

இதை இப்படி விளக்க வேண்டும். லட்சுமி ராஜமாணிக்கத்தோடு போகிறாள். மாணிக்கத்தோடு இருக்கும்போது அவள் மனநிலை என்ன என்ற தனிக்காட்சி நாவலில் இல்லை. முதல் முறை பெரியண்ணனிடமிருந்து லட்சுமி தப்பிச் செல்லும்பொழுது தன் பிறந்தகத்தை அடைகிறாள். பிறந்தகச் சூழலில் வைத்து லட்சுமியின் மனநிலை தனித்துச் சொல்லப்படவில்லை. பெரியண்ணனோடு வாசகராகிய நாமும் செல்கிறோம். பெரியண்ணனுக்குள்ளிருந்து நாம் பார்க்கிறோம். லட்சுமிக்குள்ளிருந்து நாம் பார்க்கவில்லை. நீலவேணிக்குள்ளிருந்து ஒரு பார்வை வீச்சு நாவலுக்குள் படர்ந்திருக்க வேண்டும். அங்கமுத்து மூலமும் ஒரு பார்வை விரிவடைய முடியும். தான் எந்த முரண்பாட்டினுள் அகப்பட்டுள்ளோம் என்று தனம் சிந்திக்கமாட்டாளா அல்லது இந்த முரண்பாடுகள் தனத்தின் கனவுக்காட்சிகளுக்குள் வெளிப்பட்டிருக்க முடியாதா? இப்படி ஒரு திசையிலிருந்து அல்லது ஒரு பக்கத்திலிருந்து மனிதர்களை நாம் பார்ப்பதற்கு மாறாக இன்னும் முரண்பட்ட கோணங்களிலிருந்து மனிதர்களை நாம் பார்க்க வேண்டும். நாவல் என்ற கலையின் பார்வையில் நிச்சயம் யாரையும் குற்றவாளியாக்கக் கூடாது. பெரியண்ணனுக்குள் எது புகுந்து அவனை வன்முறையாளனாக காமுகனாக மாற்றியது? பெரியண்ணன் தனக்குள் வெளிப்படுகிற ஆதிக்க உணர்வைத் தான் அனுபவிக்கிற பொழுதே, தான் நிம்மதியற்றுப் போவதை உணர்ந்திருக்க மாட்டானா? இப்படித்தான் நாவல் ஒவ்வொருவருக்குள்ளும் புகுந்து அந்தக் குறிப்பிட்ட நபர் தன்னைத்தானே பார்க்க முடியாமல் தன்னை அடைத்துக் கொண்டிருக்கிற பக்கத்தையும் கிளறி / தகர்த்து அவனுக்குள் இருக்கும் அந்தப் பக்கத்தை அவனுக்கு அல்லது வாசகராகிய நமக்குப் புலப்படுத்துவதாக இருக்க வேண்டும். இப்படிக் கேட்கலாம், நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம்: பெரியண்ணன் நமக்குள் இல்லையா? பூங்காவனத்தை நாம் ஒப்புக் கொள்கிறோமா? ஆனந்தாயி இத்தனை பொறுமையோடு ஏன் இருக்கிறாள்? மணி குற்றவாளியா? தனம் தனக்குள் ஏன் இப்படி சீறுகிறாள்? இப்படியெல்லாம் கேட்டுக் கொண்டால், நாவலில் வரும் மனிதர்களின் மறுபக்கங்களின் மௌனங்கள் நமக்குள் உடைபடும். அப்பொழுது நம்மை நாமே வாசிக்கிறோம். இப்பொழுது நாவல் வாசிப்பு என்பது நாவல் வாசிப்பாக இல்லை. நம் காலத்தை, நம் வரலாற்றை நமக்குள்ளான முரண்களை, நம்மை நாமே வாசிக்கிறோம்.

பாலகுமாரன் :
கனவுகள் விற்பவன்

ஆன்மீகம் என்ற அம்சத்தை ஒரு முக்கியமான கூறாகக் கொண்டு பாலகுமாரன் படைத்து வருகிற நாவல்களில் குறிப்பிடத்தக்க நாவலென 'கனவுகள் விற்பவ'னைச் சொல்லலாம். முதலாளியத்தின் கூறுகளைக் கொண்டு அமைந்த எதார்த்தவாதம் என்ற போக்கை, ஆன்மீகம் என்ற அம்சம் மறுக்கத்தான் செய்யும். இதனால் நாவல் என்ற கலையின் கட்டமைப்பு சிதைவதாகவும் சிலர் கருதலாம். சிதைகிறது என்று வைத்துக் கொண்டால் இந்த நாவலின் திசைவழி எது என்ற கேள்வி எழும். இதை விவாதிக்கும் முன் 'கனவுகள் விற்பவன்' எப்படி நாவலாகிறது என்பது பற்றிப் பார்க்கலாம்.

இந்த நாவல் சில மனிதர்களின் கதையைச் சொல்லுகிறது. இவர்கள் மூலம் ஒரு கிராமத்தின் கதையைச் சொல்லுகிறது. பால்காரன் பார்த்தசாரதி தன் வீட்டுச் சுவர் எல்லை கடந்து அடுத்த வீட்டு செல்வமணியின் மனைவி மரகதத்தோடு அவள் இச்சை தீர்க்கும் முறையில் உறவு கொள்கிறான். நெடுஞ்சாலையை வெட்டி தண்ணீர்க் குழாய் போடுகிற செயலை – இருபது முப்பதுபேர் செய்யவேண்டிய வேலையை ஊர்நன்மைக்காக தானே செய்து முடிக்கிறான். இவன் உதவிக்கு வருபவர்: மரகதமும் பைப்புக்காரர் மகள் கலாவதியும். இவர்களோடு வீட்டுத் திண்ணையில் அசங்காது அமர்ந்திருக்கும் ஒரு கிழவர். பாலு அய்யர் திருடவில்லை. ஆனால் திருட்டுக் குற்றம் சாட்டி நிறுவனம் இவரை வெளியேற்றுகிறது. மனைவி சரஸ்வதி இதை ஒரு வாய்ப்பு என்கிறாள். திண்ணைக் கிழவர் ஆசியுடன் ஏரிக்கரை கிராமத்தில் விபூதி, குங்குமம், ஊதுபத்தி என ஒரு சிறு கடை வைக்கிறார். குழாயடிச் சண்டையிலிருந்து விலகி நிற்பதற்காக கிழவர் அறிவுரைப்படி பார்த்தசாரதியும் பாலு அய்யரும் பஸ் ஏறிச் சென்ற இடத்தில் சில அனுபவங்களோடு திரும்புகிறார்கள். குளக்கரையில் ஏற்பட்ட அனுபவமும் கடற்கரையில் ஏற்பட்ட அனுபவமும் பாலு அய்யரை முற்றாக மாற்றின. குழாயடியில் கிடைத்த கல்லை வைதது தாயம்மாள் / சக்தி கோவில் கட்ட பார்த்தசாரதியோடு பாலு அய்யர் முடிவு செய்கிறார். சூனியக்காரரென கிழவரைக் கொன்ற ஊர் மக்கள் பாலு அய்யரையும் கொன்று புதைத்தனர். பார்த்தசாரதி கலாவதியையும் பம்புக்காரரையும் உடன் அழைத்துக் கொண்டு ஊரை விட்டு வெளியேறுகிறான். குழாயடிக் கல்லை மரகதம் மறைத்து வைக்கிறாள். பார்த்தசாரதியின் கரு மரகதத்தின் வயிற்றில் வளர்கிறது. ஆன்மீகம் என்ற அம்சத்தைக் குறைத்து / நீக்கி சொன்ன கதை இது.

இப்படி சொல்கிற கதையிலும் வாசகரை பாலகுமாரன் வழக்கமாய்க் கவரும் அம்சங்கள் பல இழைந்திருக்கின்றன. ஊர்நன்மைக்காக உழைக்கிறான் சாரதி. இவனை மரகதம் உடல் உறவுக்கு அழைப்பதில் தவறில்லை. செல்வமணியால் நிறைவுறாத இவள் சாரதியால் நிறைவுறுகிறாள். உடல் இன்பம் தவறல்ல. உள்ளக் கலப்புக்கு வாய்ப்பு வேண்டும். மரகதம் சாரதியை தனக்கென அபகரித்துக் கொள்ளவும் விரும்புவதில்லை. சாரதி கலாவதிக்கும் உரியவன்தான். பாலு அய்யரும் சரஸ்வதியும் உடலும் மனமும் ஒத்து இணைந்த கணவன் மனைவியர். நாவல் பெண்ணின் பெருமையை நிறையப் பேசுகிறது. ஆணைவிட பெண்ணுக்கு முதன்மை சொல்லுகிறது. உயிரைத் தழையவைக்கும் அன்பு பற்றி நாவல் சொல்லுகிறது. தவறுகள் / குற்றங்கள் எனச் சொல்லப்படுபவை தவறுகள் அல்ல; அனுபவங்கள். தவறுகள் வாழ்வுக்குத் தேவை. தவறுகள் மூலமும் அன்பைக் கற்க வேண்டும். அன்பு செய்வதுதான் வாழ்க்கை. வேதம் சொல்வது மாதிரி அன்பு பற்றி, பெண்ணை மரியாதை செய்வது பற்றி பாலகுமாரன் நிறையச் சொல்லுகிறார். வாசகர்கள் குறிப்பாக பெண்கள் கிறங்குகின்றனர். இதற்கேற்றவாறு பாலகுமாரனின் தமிழ்நடை. சின்னச்சின்ன வாக்கியங்கள். கேள்வியோடும் பதிலோடும் தொடரும் அழகிய வாக்கியங்கள். குடும்பச் சூழலிலும் சமூகச் சூழலிலும் அடிமைத்தனம் என்ற தண்டனையை சுமந்து திரிகிற பெண்களுக்கு, அவர்களின் உள்ளத்தில் நுழைந்து அவர்களின் அருமை பெருமை சொல்லி அவர்களுக்குள் அன்புஊற்றைப் பெருக்கி, அன்பால் அவர்களை நனையச் செய்துப் படிக்கிற பொழுதேனும் அவர்களுக்கு விடுதலை தருவதில் பாலகுமாரன் பெண்வாசகர்களால் கொண்டாடப்படுகிறார்.

இந்த நாவலில முக்கியமாக இடம்பெறும் ஆன்மீக அம்சம் பற்றி இப்பொழுது கவனம் கொள்ளலாம். கிழவர் ஒரு சித்தர். திண்ணையில் 48 ஆண்டுகளாக அமர்ந்திருக்கிறார். அவர் பார்வைபட்ட இடத்தில் விந்தைகள் நடக்கின்றன. அவர் பார்வைபட்ட பார்த்தசாரதிக் குழாய் அமைக்கும் பிரச்னை எளிதாகத் தீர்கிறது. பாலு அய்யர் கடை வியாபாரம் சிறக்கிறது. குழாயடியில் கிடைத்த கல் உருவம், அம்மன் உருவம். இதற்கு கோயில் கட்டவேண்டும். ஊர்ச் சண்டையில் மாட்டிக் கொள்ள நேரும் என்று சாரதியையும் பாலு அய்யரையும் கிழவர் வெளியேறச் சொல்கிறார். கடற்கரையில் தொழுநோயாளியாக இருக்கும் அம்மையை தரிசிக்கின்றனர். அவர் ஒரு சித்தர். நாய்களோடு விளையாடும் சித்தர். அவர் உடம்பின் புண்கள் அழகிய மலர்கள். பாலு அய்யரை அவர் கட்டித் தழுவி அவருக்குள் ஒளியைப் பெருக்குகிறார். விலகிநிற்கிற சாரதியை தன்னிடத்தே

ஈர்த்துக்கொள்கிறார். கிழவரை சூன்யக்காரரென ஊர்மக்கள் கொன்று புதைக்கின்றனர். பாலு அய்யரும் புதைக்கப்படுகிறார். கல் உருவத்தை மரகதம் தன் வீட்டுக் கொல்லையில் மண்ணுக்குள் மறைத்து வைக்கிறாள். எதிர்காலத்தில் இங்கு கோயில் எழும். அண்மையில் ராம் சுரத்குமார் பற்றி பாலகுமாரன் அதிகம் எழுதுகிறார். கிழவருக்குள் ராம் சுரத்குமாரின் சில குணங்கள் தெரிகின்றன. கடற்கரைக் கிழவியிடம் ஆனந்தமயி தென்படுகிறார். இவர்கள் சித்தர்கள். இவர்கள் சில அற்புதங்கள் செய்கிறார்கள். இவர்களின் அற்புதங்கள் நம்மால் மறுக்கக் கூடியனவாக இல்லை. இவற்றை மறுத்துப் பேசிப் பயனில்லை. இந்த அற்புதங்களில் ஆட்பட நாம் மறுத்து நிற்கலாம். நம் அறிவுவாதத்தை மறுப்பவை இந்த அற்புதங்கள். சித்தர் செய்யும் அற்புதங்கள் எதார்த்தத்தை ஒதுக்குகின்றன. அற்புதத்தின் இயங்குநெறி நமக்கு தெரியவில்லை. அற்புதங்கள் தேவையில்லை என்றும் பரமஹம்ச நெறியில் ஒதுக்குவதும் சாத்தியம்தான்.

சித்தர் நெறி என்ற இந்த அம்சத்தைக் காட்டிலும் வலுவான இன்னொரு அம்சம் இந்த நாவலில் அமைந்திருப்பதை நாம் காணத் தவறக்கூடாது. பாலகுமாரனின் படைப்புத் திறன் இங்கு இருக்கிறது. இந்தியாவில் நெடுங்காலமாக நிலவிவரும் சாக்தம் என்ற சக்தி வழிபாடு பற்றியும், தொன்மைக் காலத்தில் தலைமைத் தன்மை கொண்டிருந்து, அப்புறம் வீழ்த்தப்பட்ட தாய்வழிச் சமூகம் பற்றியும் ஒரு ஆழ்ந்த புரிதலோடு பெண் / பெண்மை பற்றி பாலகுமாரன் பேசுகிறார். பெண் முதன்மையானவள். எல்லாவற்றுக்கும் அவளே மூலம் / ஆதாரம். பெண்ணுக்குள் அனைத்தும் அடங்கியிருக்கின்றன. ஆண் என்பவன் பெண்ணுக்கு கணவன், மகன், குழந்தை, தந்தை. எந்த வடிவத்திலும் பெண் ஆணோடு உறவு கொள்ளலாம். இதனால் அவள் களங்கப்படுவதில்லை. அவள் நிறைவுடையவள், அவள் பூரணமானவள். அவள் தாய், தெய்வம், படைப்பவள், காப்பவள், அழிப்பவள். அவளிடமிருந்து இயக்கம் பெற்றபொழுதே ஆண் செயல்படுகிறான். ஆணுக்கு ஆக்கம் தருபவள் பெண். ஆணை வழிநடத்துபவள் பெண். கருணையால் அவன் குற்றம் தீர்ப்பவள் பெண். அவனைக் கொண்டு அவனை இயக்கி அவள் மகவைப் படைக்கிறாள். இதில் ஆணின் பங்கு சிறியது. படைப்பில் பெண்ணின் பகுதி முதன்மையானது. கணவன் என்ற வடிவத்தில் இருப்பவனுக்கு பெண் தன்னை முழுமையாக அடிமைப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. ஆண் செய்த அடிமைத்தனத்திலிருந்து பெண் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு மேலும் பாலகுமாரன் பேசுகிறார். நிலம் எப்பொழுது

உடைமை ஆயிற்றோ, அப்பொழுதே பெண் அடிமைப்படுத்தப்பட்டாள். தனி உடைமை ஒழிய வேண்டும். அதிகாரம் ஒழிய வேண்டும். பொதுமை நிலவும் அந்தக் காலத்தில் பெண் தனக்குரிய முழுமையைப் பெறுவாள். பெண், சக்தி; காளி. அவள் வழிபாட்டுக்குரியவள். தனிஉடைமை ஒழிந்த எதிர்காலத்தில் தன் முழுப்பொலிவைப் பெறுவாள். நாவலின் இறுதியில் கல் உருவத்தை – அம்மை வடிவத்தை மரகதம் புதைத்து வைக்கிறாள். புதைத்து வைப்பதற்கு இதுதான் அர்த்தம். சாரதியிடம் மரகதம் கருத்தரிப்பது இந்த அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். தனி உடைமை ஆதிக்கம் பெறும் சமூகத்தில் சித்தர்களுக்கு இடமில்லை. அவர்கள் ஒதுங்கி வாழ்கிறார்கள்; ஒதுக்கப்படுகிறார்கள். கொன்று புதைக்கப்படுகிறார்கள். பாலு அய்யருக்கு சாதி இல்லை, மதம் இல்லை. பார்ப்பனர் என்ற உணர்வைக் கடந்தவர் அவர்.

ஆழ்ந்து பார்க்கும்பொழுது RADICAL FEMINISM பெண்ணியத்தின் அடிப்படைவாதம், சாக்த வழிபாட்டின் மூலம் பொருள் பெறுகிறது. சமூகவியல் என்ற தளத்தில் பாலகுமாரன் தனிஉடைமையைக் கடப்பதில்லை. ஆன்மிகம் என்ற ஆழ்ந்த நெறியில் பாலகுமாரன் தனிஉடைமையைக் கடந்து செல்கிறார். தாய்வழிச் சமூகம் அழிக்கப்பட்டு ஆண் ஆதிக்கச் சமூகம் செய்யும் கொடுமைகள் பாலகுமாரனுக்கு உடன்பாடில்லை. பெண்ணை முதன்மைப்படுத்தி வரலாற்றின் வழியே தன்னைப் புரிந்து கொண்டு பெண்ணின் பழங்கால வரலாற்றையும் தற்கால / எதிர்கால வரலாற்றையும் ஒருசேர இணைத்துப் பார்க்கிறார் பாலகுமாரன். தனி உடைமையை ஒதுக்கும் உணர்வைப் பெறுகிறார். முதலாளியம் கொண்டாடும் தனிஉடைமையை விலக்கிப் பார்ப்பதன் மூலம், முதலாளிய எல்லையை தன் நாவலுக்குள் கடந்து செல்கிறார் பாலகுமாரன். எதார்த்தவாத நாவல் என்ற கட்டமைப்பின் சில கூறுகள் பாலகுமாரன் நாவலில் தகர்ந்திருப்பது இதனால்தான். பெண்ணோடு உடல் உறவைத் தவிர்க்கிற ஆன்மிகம் பாலகுமாரனிடம் இல்லை. பரமஹம்சர் – சாரதாதேவி வாழ்வில் அத்வைதம் பெண்ணைத் தவிர்க்கிறது. சாக்த நெறி என்ற சக்திநெறி ஆண் பெண் உறவின் தெய்வநிலை பற்றிச் சொல்லுகிறது. பார்த்தசாரதி என்ற பெயர் வழியே பாலகுமாரன் கிருஷ்ணன் என்ற தெய்வத்தை, இத்தெய்வம் பற்றிய சில உணர்வுகளை நமக்குள் எழுப்புகிறார். கண்ணன் பெண்களுக்குரியவன். பெண்களை மகிமைப்படுத்துபவன். பெண்களை நிறைவு செய்பவன். நவீன அறிவியல் தொழில்நுட்பத்தின் வழியே நமக்குள் செறிந்திருக்கிற அறிவுவாதம் நமக்கு விடுதலை தராது. மரகதத்தோடு கொள்ளும் உறவுக்காக கிழவர் சாரதியைக் கடிந்துகொள்ளவில்லை. அறிவுவாதம் செயல்பட அனுமதிக்காதபொழுதே

தியானம் சாத்தியம். பெண்ணின் முன்னைய வரலாற்றையும் எதிர்காலத்தையும் இணைத்துப் பார்க்கிற சிந்தனைக்கு, பெண்ணைப் பற்றிய வரலாற்று அறிவு தேவைதான். வரலாற்று அறிவு இங்கு மடங்கி நிற்க, சிந்தனை அனைத்தையும் செரித்துக் கொண்டு இயங்குகிறது; முன்செல்கிறது. தியானம் என்பது புலன் நெறியின் மறுப்பல்ல. புலன் அறிவின் கட்டுப்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது தியானம். தியானம் என்பது ஆழ்ந்த சிந்தனை. தனக்குள் ஆழ்ந்து செல்லுதல். பிரபஞ்சம் / இயற்கை நமக்குத் தாய். சமூகம் / வரலாறு, நமக்குத் தாய். இந்தத் தாய் நம்மைப் படைக்கிறாள், காக்கிறாள், அழிக்கிறாள். அழிப்பதன் மூலமும் கருணை செய்கிறாள். பெண் / பெண் வரலாறு என்பதன் மூலம் நமக்குள் செரித்துக் கொள்ள வேண்டியது இந்தத் தாய்மை. தாய்மையின் ஒரு வடிவம் பெண்.

பாலகுமாரன் நாவல்களை விரும்பிப் படிக்கிற வாசகர்கள், பெண் வரலாற்றின் வழியே தனி உடைமையை கடந்து செல்கிற பார்வையைப் பெறுவார்களா / பெறுகிறார்களா என்பது தெரியவில்லை. ஆன்மிக நெறியில் இயங்கி தனி உடைமையை மறுக்கிற பாலகுமாரன் இன்றைய சமூகச் சூழலில் ஆதிக்கம் பெற்றுள்ள தனி உடைமையையும் அதனை மையம் கொண்ட அதிகாரத்தையும் மறுப்பதாகத் தெரியவில்லை. மறுக்க வேண்டும் என்பது நம் எதிர்பார்ப்பு. தீவிர பெண்நிலைவாதம் பேசுபவர்கள் தனி உடைமையை மறுக்கிறார்களா? மறுக்க வேண்டும். அறிவுவாதிகளின் அதிகாரத்தில் ஆன்மீகத்திற்கு மரியாதை இல்லை. அதிகாரம் விடுதலைக்கு வழி விடுவதில்லை. பெண் தன் மூலம் தன்னைக் கடந்து இயற்கையோடும், சமூகத்தோடும், வரலாற்றோடும் இணைய வேண்டும். இப்படி சில தூண்டுதல்களை நமக்குத் தருகிறது இந்த நாவல்.

ம.ந. இராமசாமி :
கனவு பூமி

ம.ந. ராமசாமி அவர்கள் எழுதிய முதல் நாவல். காந்திமதி என்ற பெண்ணை மையப்படுத்தி, முன்னுரையில் இவர் கூறுகிறபடி இன்னும் ஒரு நூறாண்டுக்கேனும் சாதியை ஒழிக்க முடியாது என்ற கருத்தை விளக்கும் முறையில் இந்த நாவலைப் படைத்துள்ளார். தமிழகச் சூழலிலிருந்து காந்திமதியின் வாழ்க்கையை எடுத்திருப்பதாகவும் ஆசிரியர் சொல்கிறார். இந்த உண்மையை நாம் மறுக்க வேண்டியதில்லை. நாவலாக்கத்தில் நிறைய குறைகள் தெரிகின்றன. ஆசிரியரது நோக்கம் வாழ்க்கைச் சூழலிலிருந்து ஓர் உண்மையை எடுத்து விளக்குவதுதான். இதன் காரணமாக நாவலாக்கத்திலும் நிறைய குறைகள் ஏற்பட்டுள்ளன.

சாணிதட்டி விற்கும் பாட்டியிடமிருந்து, தான் பார்ப்பனனுக்குப் பிறந்தவள் என்ற உண்மையை காந்திமதி அறிந்து கொள்கிறாள். தன் அப்பா குடிகாரன். ஆகவே டாக்டர் சுந்தரராஜன் தன்னை அழைத்தபோது அவனுக்கு செவ்வந்தி உடன்பட்டாள். இப்படிப் பிறந்தவள்தான் காந்திமதி. தான் பார்ப்பனப் பெண் என்ற உணர்வுக் கிளர்ச்சி ஏற்பட்டபின், அதே தெருவில் டாக்டர் வீட்டில் காந்திமதி வேலைக்காரியாகிறாள். தன் வீட்டில் தான் வாழவேண்டும். பார்ப்பனர் நடத்தையை, மொழியைப் பின்பற்ற வேண்டும். டாக்டரின் மனைவியை அம்மா என்றும், ராஜுவை அண்ணன் என்றும், விசாலத்தைத் தங்கை என்றும் அழைத்துப் பழகுகிறாள். அவர்கள் வீட்டில் இவள் தாழ்ந்த சாதி வேலைக்காரிதான். ராஜா வழக்குரைஞன். தவிர, முற்போக்குவாதி. அம்மாவும், பாட்டியும், ஆசாரங்களைக் கடைப்பிடிக்கிறவர்கள். ஓர் இரவு டாக்டர் தன் அறைக்கு அழைக்கிறார். டாக்டரிடம் முகத்தில் அடித்த மாதிரி உண்மையைச் சொல்லி மிரட்டலாய் அவரிடம் பணம் பெற்றுக்கொண்டு பாட்டியிடம் கூடச் சொல்லாமல் காந்திமதி ஊரைவிட்டுக் கிளம்புகிறாள். வழியில் மதுரை, கடைசியாகக் கோவைக்குச் செல்கிறாள். போலிஸ் அதிகாரியிடமிருந்து தப்புகிறாள். பஸ் டிரைவர் தொழிற்சங்கவாதி சின்னதம்பியின் வீட்டில் தங்குகிறாள். தொடக்கத்தில் இருந்தே காய்கறி வியாபாரம் செய்வதை இலக்காகக் கொண்டிருந்தாள். அண்ணன் என்று முறை வைத்து சின்னதம்பியை அழைத்தாள். அவரது பெருந்தன்மை, இவளுக்குப் பாதுகாப்பு. அப்புறம் இவளே அவரை மணம் கொள்ள விரும்பினாள். மோதிரங்களும் தாலியும் செய்தாயிற்று. விபத்தில் சின்னதம்பி இறந்தார். திருச்சிக்குச் சென்று காய்கறி வியாபாரியானாள். இவள் உடல் அழகை ரசித்த பஸ் கண்டக்டர் ரங்கன் தன் வீட்டுக்கு வலிய அழைத்தான். அவன் பார்ப்பனன். அவனுக்கு இவள் ஆசைநாயகி. எல்லா இடங்களிலும் தன்னைப் பார்ப்பனப்

பெண் என்றே சொல்லிப் பழகினாள். பையன் பிறந்தான். ரங்கன் கோழை. பையனை தன் மகனாக கருதி, அவன் அன்பு செய்யவில்லை. இவளிடம் சொல்லிக்கொண்டு இவளிடமிருந்து விலகி இவன் தன் உறவில் வேறொரு பெண்ணை மணந்துகொண்டான். தன் கடையை கவனித்த பெண்ணிடம் கடையை ஒப்படைத்துவிட்டு தன் சொந்த ஊருக்குச் சென்றாள் காந்திமதி. இப்போது டாக்டரும் அம்மாவும் இல்லை. ராஜூ அண்ணனிடம் தன் குழந்தையை பார்ப்பனனாக வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறாள். தன் பாட்டிக்கு ஆதரவாக அப்புறம் சாணி தட்டுகிறாள். இப்படிச் செல்கிறது கதை.

தான் பார்ப்பனப் பெண் என்று அறிந்தவுடன் காந்திமதி தன் மனத்தினுள் கொண்ட உள்ளக் கிளர்ச்சியையும், அதைச் செயல்படுத்தும் முறையில் டாக்டர் வீட்டில் வேலைக்குச் சேர்ந்து, பார்ப்பனர் வீட்டு பழக்கவழக்கங்களையும், மொழியையும் உறவு முறையையும் ஆர்வத்தோடு கற்றுக் கொள்வதையும் ஆசிரியர் சிறப்பாக விவரிக்கிறார். பாட்டிக்கும் அவளுக்கும் இடையில் உறவுச் சிக்கல் ஏற்பட்டிருக்க வேண்டும். இதை ஆசிரியர் சித்திரிக்கவில்லை. பத்து, மடி பற்றிய விவரிப்புகளில் பக்கங்கள் வீணாகின்றன. ராஜா வழக்குரைஞன்; தவிர கம்யூனிஸ்ட் கட்சிக்காரன். பார்ப்பனச் சடங்கு முறைகளைக் கேலி செய்கிறவன். இம்முறையிலும் சில விவாதங்கள் பல பக்கங்களை அடைத்துக் கொள்கின்றன. ராஜூவின் பிரச்சார நோக்கத்தை விவரிப்பதனால் நாவலின் படைப்பியக்கம் தவறுகிறது. காந்திமதி துணிச்சலான பெண்தான். இல்லை என்றால் டாக்டர் வீட்டு வேலைக்கு வந்திருக்கமாட்டாள். காய்கறி வியாபாரம் செய்ய வேண்டுமென்ற விருப்பம் இவளுக்கு எப்பொழுது முளைவிட்டது? துணிந்து ஊரைவிட்டு வெளியேறி காய்கறி வியாபாரம் செய்யும் ஒரே நோக்கத்துடன் மதுரை கடந்து கோவை செல்கிறாள். ஆனால் உடனடியாக காய்கறி வியாபாரத்தில் ஈடுபடவில்லை. இரண்டாம் பாகத்தில் பெரும்பகுதி, வெற்றுக்கதை, கதையென்றும் கூட சொல்ல முடியாது. சின்னத்தம்பியிடம் அடைக்கலம் புகுந்தபிறகு கதை மீண்டும் வளர்கிறது. ராஜூவைப் போலவே சின்னத்தம்பியும் ஒரு கம்யூனிஸ்ட். அன்றியும் தொழிற்சங்கவாதி. கம்யூனிஸ்ட்டுக்களை பெரும் மரியாதையோடு ஆசிரியர் சித்தரிக்கிறார். தொழிற்சங்கவாதியின் நடவடிக்கைகளென பல பக்கங்கள். பிரச்சார வாடை என்று இந்த உணர்வைச் சொல்லலாம். சின்னத்தம்பியிடம் அண்ணன் என்று பழகியவள், பிறகு அவளாகவே மண உறவுக்கு அழைக்கிறாள். சின்னத்தம்பியும் உடனே இணங்குகிறார். இருவருக்குள்ளும் ஏற்படக்கூடிய மனத்தளவிலான சிக்கல்கள், போராட்டங்கள் இங்கு சொல்லப்படவில்லை. நாவலாக்கத்திற்கு இது தேவை. கதை சொல்பவர்க்கு இது தேவை இல்லைதான். திருச்சியில் காய்கறி வியாபாரி ஆகிவிட்டாள். இடையில்

ஆண்களோடு சில உறவுகள் இவளுக்கு ஏற்பட்டிருக்கும் போலத் தெரிகிறது. இதைச் சொல்லாமல் தவிர்த்தது குறை அல்ல. நிறை என்றே மதிக்கலாம். ஒரு பார்ப்பனனுக்கு ஆசை நாயகியாக இருப்பதைக்கூட இவள் விரும்புகிறாள். தான் உயர் சாதி என்ற உணர்வின் ஆதிக்கத்திலிருந்து இவள் விடுபடவில்லை. ஆனால் என்ன செய்ய முடியும்? முறைகேடாகப் பிறந்தவள் தன் சாதி உயர்வை எப்படிக் காப்பாற்றிக் கொள்ள முடியும்? ஆனால் காந்திமதி மிக நல்லவள். ரங்கனை தனக்கே உரியவனாக்கிக் கொள்வது அவள் நோக்கமில்லை. அவனுக்குத் தன் சாதி வேண்டும். தன் உறவில் பெண் தேடிச் சென்றுவிடுகிறான். சுந்தரமும் முறை தவறிப் பிறந்த பையன்தானே. காந்திமதிக்கு ஏற்பட்ட அவமானங்கள் அவனுக்கும் தானே நேரும்? தாய்மையை அனுபவிக்க விரும்பும் ஒரு பெண்ணின் இயல்பான குணம் தன் மகனுக்குத் தீங்கு செய்வதை உணர்ந்தே தாய் இதைச் செய்திருக்கிறாள். சொந்த ஊருக்கு வந்து சேர்கிறாள். பார்ப்பனர் சடங்கு முறைகளை வெறுப்பவன் ராஜூ. தன் பையன்களுக்கே பூணூல் போட மறுக்கிறவன் ராஜூ காந்திமதியின் பையனை பார்ப்பனனாக ராஜூ எப்படி வளர்க்க முடியும்? வளர்க்க முடியாது. எனினும் இந்த வீட்டுச் சூழலில் அவன் வளரட்டும். காந்திமதியின் சாதிச் செருக்கு, எப்படியோ தொலைந்திருக்க வேண்டும். பாட்டியோடு சென்று சேர்ந்து கொள்கிறாள். சாணி தட்டுகிறாள். சாதி உணர்வு இவ்வளவு தொலைவுக்கு அவளைச் செலுத்தியிருக்கிறது. மனப்போராட்டங்களை விவரித்திருக்க வேண்டிய இடங்களில் எல்லாம் ஆசிரியர் இப்படிச் செய்யவில்லை.

முன்பே கூறியபடி, நாவலாக்கத்தில் இது மிகப்பெரிய குறை. இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு சாதி ஒழியாது என்பதைச் சொல்வதற்கு தான் இந்தக் கதை. தாழ்த்தப்பட்ட பெண்ணுக்குள்ளும் கிளர்ந்தெழுந்த சாதி உணர்வு, பலவகை அனுபவங்களுக்குப் பிறகும் அடங்கவில்லை. கதையை வேறு திசையில் ஆசிரியர் கொண்டு சென்றிருக்கலாம். சுந்தரராஜனைப் பழி வாங்கியிருக்கலாம். ராஜூவோடு வழக்காடி சொத்தில் ஒரு பகுதியை வாங்கியிருக்கலாம். இப்படிச் செய்வதுகூட யதார்த்தத்திற்கு ஒத்ததுதான். காய்கறி வியாபாரியாகும் ஆசை இவளுக்கு எப்படி வந்தது? சாதியில் தாழ்ந்தது இதற்கொரு காரணமா? வேற்றூர் செல்லும் துணிச்சலுக்குக் கூட இப்படித்தான் காரணம் சொல்ல முடியும். அதாவது தன்னைப் பார்ப்பனப் பெண்ணாக உணர்வது ஒரு பக்கம். அதன் எதிர்ப்பக்கத்தில் தான் தாழ்ந்த சாதிப்பெண், முறை கேடாகப் பிறந்தவள். இந்த முரணுக்கிடையில் அவளது போராட்டம். நாவலுக்கு இது நல்ல கருப்பொருள். ரங்கனோடு உடல் அளவில் உறவு கொண்டு வாழ்ந்தபோது அவளுக்கு இன்னொரு வகையான போராட்டம். ஒருவனுக்கு மனைவியாக இருக்கிற தகுதி தனக்கு இல்லை. அதேசமயம் மனைவியாக, தாயாக வாழ

வேண்டுமென்ற ஆசை. தான் சம்பாதிக்கிறவள், தன்னிடம் பணம் பெற்றுக் கொள்கிறவன் ரங்கன். இந்த முறையிலும் போராட்டம் மிகுந்திருக்கலாம். காளிமுத்து என்ற போக்கிரியை கன்னத்தில் அறைந்தாள். கதையில் காளிமுத்து ஒடுங்கிவிட்டான். குப்பத்தில் பிரச்சினை ஒடுங்கிவிடுமா? இந்த முரணும் கதையில் அழுத்தம் பெறவில்லை. கடைசிக் கட்டத்திலும் இதே சிக்கல். பையன் பார்ப்பனன் வீட்டில் வளர்கிறான்; பார்ப்பனனாக வளர மாட்டான். பார்ப்பனத்தி ஆகும் ஆசை தன்னை என்னவெல்லாம் செய்திருக்கிறது? பாட்டியின் வாழ்க்கை எவ்வளவு தூய்மையானது? இப்படிச் சிந்தித்தாளா? இல்லை. கதை, நாவலாகவில்லை என்று ஒரே வரியில் நம் திறனாய்வை முடித்துக் கொள்ளலாம்.

இப்பொழுது, ஆசிரியர் நோக்கத்திலிருந்து இந்தக் கதையைப் பார்க்கலாம். சாதி உணர்வு யாருக்குத்தான் இல்லை என்று கேட்கும் ஆசிரியர், கம்யூனிஸ்டுக்கு சாதி இல்லை என்ற முறையில் கதை சொல்கிறார். இது சரிதானா? நாவலில் சின்னத்தம்பி ஒரு தெய்வப்பிறவி. இவரை மனிதப் பிறவியாக நாவலில் படைக்கவில்லை. ரங்கன் மாதிரி அரை குறைகள், நிறையவே இங்கு இருக்கிறார்கள். டாக்டர் சுந்தரராஜனுக்கு இன்னும் பெண் சபலம் போகவில்லை. மகள் என்று அறிந்தபிறகு அவருக்குள் மனத் தடுமாற்றம் ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. அம்மா மிக நல்லவள். தன் மகளாக காந்திமதி இல்லையே என்ற தன் மனக்குறையை ஒரு சமயம் தெரிவிக்கிறாள். தனக்கு மகள் என்ற உரிமையுடையவள் என்று அவள் அறிந்திருந்தால், அவளது எதிர்வினை என்னவாக இருந்திருக்கும்? காந்திமதியை தனக்குத் தங்கை என்று அறிந்தவுடன் ராஜூ அவ்வளவு எளிமையாக ஏற்றுக் கொள்வானா? ராஜூவும் கதையைப் பொறுத்தவரை ஒரு தெய்வப் பிறவிதான். காந்திமதி ஒரு பார்ப்பனப் பெண்தான் என்று அறிந்தபோது, அவளை உடலுறவுக்கு அழைக்கிறான் பெரிய போலீஸ் அதிகாரி. பார்ப்பனனாக இருந்திருந்தால் இவளை அழைத்திருக்க மாட்டான். பார்ப்பனப் பெண்ணைத் தொட்டு அனுபவிக்கிறான், இந்தப் பெரிய மனிதன். கதையில் வரும் ராஜராஜேஸ்வரி ஒரு அற்புதமான பெண்.

கதையில் முதல் பாகமும் மூன்றாம் பாகமும் சிறப்பானவை. முதல் பாகத்தைவிட சிறப்பானது மூன்றாம் பாகம். இரண்டாம் பாகத்தில் இறுதிப் பகுதியை வைத்துக்கொண்டு முதற்பகுதியை நீக்கிவிடலாம். நேர்க்கோட்டில் செல்லும் கதை. காந்திமதியைத் தவிர, பிறரது நோக்கு நிலைகளுக்கு கதை நகரவே இல்லை. மாறுபட்ட கோணங்களில் கதை சொல்வது, நாவலுக்கு வலிமை. நாவலில் மனிதப் பிறவிகளுக்குத்தான் இடம் உண்டு. காந்திமதிக்குள், உயர் சாதிப் பெண் என்ற உணர்வுக்கும், தாழ்த்தப்பட்ட சாதி என்ற உணர்வுக்குமிடையிலான போராட்டத்தின் விளைவை ஒரு தரமான நாவலாகப் படைத்திருக்க முடியும். நேர்கோட்டுக் கதை, நம்

காலத்தில் ஒரு நாவலுக்கு பலகீனம்தான். எனினும், சாதி உணர்வுக்கு அழிவில்லை என்பதை ஆசிரியர் விடாப்பிடியாக, ஓரளவு வெற்றியுடன் இக்கதை மூலம் சொல்லி இருக்கிறார். தன் நோக்கத்தை ஆசிரியர் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார் என்று சொல்ல முடியவில்லை. சாதி இன்னும் ஒரு நூற்றாண்டுக்கேனும் உயிர்வாழும் என்பதில் நமக்கும் ஐயமில்லை. ஆனால் இந்தக் கதையை வைத்து இக்கருத்தை உறுதிப்படுத்த முடியாது. சாதி அழிந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் கதை உறுதிப்படுத்துகிறது. உண்மையில், சாதி மனிதனுக்குள் எங்கெல்லாம் புரையேறியிருக்கிறது என்பதில் ஆசிரியரின் கவனம் செல்லவில்லை. கம்யூனிஸ்டுகளுக்கும் சாதி உணர்வு இருக்கத்தான் செய்கிறது. கம்யூனிஸ்டும் தன் சாதி உணர்வுக்கு எதிராக குறைந்த அளவுக்கேனும் சிந்திக்கிறான். சாதியைக் காப்பாற்றும் சக்திகள் நம் சமூகத்தில் அங்கங்கே தம்மைப் பாதுகாப்புடன் தக்கவைத்துக் கொள்கின்றன. அங்கெல்லாம் நாவல் பயணம் செய்யவில்லை.

– 31.7.93

★ ★ ★

எழுதி முடித்த சில நாட்களில் இக்கட்டுரையைப் படித்த பிறகு ம.ந. ராமசாமி அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறினார்: காவல்துறை யிடமிருந்து சின்னதம்பியின் கையைப் பற்றி காந்திமதி அழைத்துச் சென்ற நிகழ்ச்சி இதே கோவை நகரில் நடந்த நிகழ்ச்சி பஸ் தொழிலாளர் போராட்டத்தின்போது நானே இதை நேரில் பார்த்தேன். என் உறவினர் பையன் ஒருவனை காய்கறி விற்கும் பெண் ஒருத்தி என் கதையில் வருகிற மாதிரி அழைத்துச் சென்று வைத்துக் கொண்டாள். அந்தப் பெண் பிராமணப் பெண் அல்ல. கதையின் இறுதி நிகழ்ச்சி, கதையின் இயல்பான போக்கில் தானே ஏற்பட்ட முடிவு. சுந்தரராஜன் வீட்டில் காந்திமதி வேலைக்குப் போகிற நிகழ்ச்சி, என் கற்பனை. நான் பார்த்த கம்யூனிஸ்டுகளிடம் சாதி உணர்வு இல்லை. கம்யூனிஸ்டுகளிடம் நிறைய அகம்பாவம் இருக்கிறது. நானே அனுபவித்திருக்கிறேன். ராஜராஜேஸ்வரி என்ற அந்தச் சிறுமியை கோவையில் கோவிலில் நடைபெற்ற ஒரு திருவிழாவின்போது சந்தித்திருக்கிறேன். கென்னடி தியேட்டரில் தன் அப்பாவுக்கு வேலை வாங்கித் தந்ததாக முறுக்கு விற்ற அந்தப் பெண் கூறினாள். உளவியலுக்குள் நான் செல்வதில்லை. காரணம், வருகிற வாழ்க்கையை இயல்பாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தனக்குள் முரண்பட்டு மனத்தை குடைந்து கொண்டிருப்பதால் என்ன பயன்? மற்றபடி எனக்கு ஒரு பார்வை இருக்கிற மாதிரி, உங்களுக்கு இன்னொரு பார்வை இருக்கிறது. பிராமணச் சாதிக்குள்ளும் சாதி ஏற்றத்தாழ்வு, மிகத் தாழ்த்தப்பட்ட சாதிப்பிரிவு உண்டு.

பெருமாள் முருகன் : ஏறுவெயில்

1. 'ஏறுவெயில்' – ஒரு நாவல் என்பதற்கான எத்தகைய அம்சங்களைக் கொண்டுள்ளது?

தமிழில் கதைத் திரட்சி, கதைப்பின்னல் குறைந்து வருகிற முறையில் நாவல்கள் உருவாகி வருகின்றன. இத்தகைய நாவல்களில் கதைக்கு முக்கியத்துவம் இல்லை. மாறாக மனிதர்கள் முதன்மைப்படுத்தப் படுகிறார்கள். கால, இடச்சூழலில் வைத்தே மனிதர் பற்றிச் சொல்லமுடியும். இப்படிச் சொல்லும்பொழுதே மெல்லிதான கதை அம்சம் வந்துவிடும். ஒரு நாவலுக்கு இதுபோதும். 'ஏறுவெயில்' நாவல் கதைத் திரட்சியை மறுத்தபோதிலும் கதைப்பின்னலின் சில கூறுகளைத் தனக்குள் பிடித்து வைத்துள்ளது. பொன்னையனை மையப்படுத்துவது ஓர் அம்சம். சொல்லவந்த கதைக்கு ஒரு முடிவைத் தரவேண்டும் என்ற ஆசிரியர் விருப்பம் தெரிகிறது. இந்த அம்சம் வலுவாக இல்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதுதவிர, தமிழ்நாவலின் பழைய போக்கு, முற்றாக இந்த நாவலில் இல்லை. குறிப்பாக காதலை மையப்படுத்தும் போக்கு இதில் இல்லை. ஒரு குடும்பத்தின் கதை என்ற வடிவத்தின் மூலம் ஒரு கிராமத்தின் கதை, ஒரு வரலாற்றுக் கட்டத்தின் கதை இந்த நாவலில் இடம் பெறுகிறது. தாத்தாவின் அவலம் சிலசமயம் மையத்திற்கு வருகிறது. தாத்தாவும் பொன்னையனும் பொன்னையனோடு நாயும் கொள்ளும் உறவு நாவலில் அழுத்தம் பெறுகிறது. உணர்ச்சிகரமாக கதை சொல்லுதல் என்ற குணத்தை இது பெறுகிறது. வாழ்வில் உணர்ச்சியின் பங்கை நாம் மறுக்க வேண்டியதில்லை. இறந்து புழுத்த நாயை கூடையில் போட்டு பொன்னையன் எடுத்துச் செல்கிறான். இவ்வகைச் சித்தரிப்பில் மிகையுணர்ச்சி வெளிப்படுகிறது. இந்த நாவலில் நாய் ஒரு மனிதப் பாத்திரமாகியிருக்கிற அழகு வாசகரைப் பெரிதும் கவரும். தன்னைத் தாய்போல மடியில் தாங்கி வளர்த்த மாரியுடன் பொன்னையன் உடல்உறவுக்கு நெருங்க முடியவில்லை. அப்புறம் இவன் பதற்றம் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. பண்பாட்டை மனிதன் இழக்கமுடிவதில்லை. நவீனத்துவம் இப்போக்கை மறுக்கும். இது பழைய நாவல்முறை என்று குறைசொல்லும். எனினும் இந்தப் போக்கை நாம் ஒதுக்க முடியாது.

நாவல், தான் எழும் சமூக வரலாற்றுச் சூழலை தனக்குள் கொண்டிருக்கும் என்பது ஒரு முக்கியமான உண்மை. 1960-க்கும் 80-க்கும் இடைப்பட்ட நம் கிராமப்புறத்து மாற்றங்களை இந்த நாவல் சில அம்சங்களில் துல்லியமாய்ச் சித்தரிக்கிறது. இந்த அம்சம்தான் இந்த நாவலை நமக்கு முக்கியப்படுத்துகிறது. திருச்செங்கோடு / கூட்டப்பள்ளி வட்டாரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் நாவலில் இடம்பெறுகின்றன. குடியானவர் தம் நிலத்தை விற்ற இடத்தில் காலனி ஏற்படுகிறது. நிலம் விற்ற பணம் ஃபைனான்ஸ்களில் போடப்படுகிறது. விசைத்தறி, லாரி வாங்குபவர்கள் ஃபைனான்சில் கடன் பெறுகிறார்கள். கடன்தொகை சரியாகத் திரும்பிவருவதில்லை. ஃபைனான்ஸ்கள் கவிழ்கின்றன. விவசாயிகள் ஸ்கூட்டரில் பறக்கிறார்கள். ஊருக்குள் தியேட்டர் வந்திருக்கிறது. வெளியூரில் கல்லூரிப் படிப்புக்காக இளைஞர் செல்கின்றனர். வேளாண்மை அழிந்து வருகிறது. பாரம்பரிய சமூகம் கட்டுத் தளர்கிற நிலையில் உதிரிகள் உற்பத்தியாகிறார்கள். இவர்கள் புதிய கட்சிகளில் பிரமுகர்கள். குடியானவர்களிடமிருந்தும் கிராமப்புறத்து மக்களிடமிருந்தும் இந்த உதிரிகளும் வியாபாரிகளும் நகர்ப்புறத்தவர்களும் உபரி மதிப்பைக் கொண்டு செல்கிறார்கள். நகரமும் காலனிக்காரர்களும் வியாபாரிகளும் வலுப்பெற்று வருகிறார்கள். லாரி, ஸ்கூட்டர் உற்பத்தி தொலைவில் அந்நிய நாட்டு மூலதனத்தோடு நடைபெறுகிறது. ஆழ்ந்து பார்த்தால் நவீன காலனியாதிக்கம் நகரங்களின் வழியாக கிராமப்புறங்களைத் தனக்குள் அகப்படுத்தி வருவதைத் தொடர்ந்து கிராமப்புற மனிதர்கள் தமக்குள் உறவு சிதைவதை, இதன் தொடர்ச்சியாக தனிமனிதர்கள் தமக்குள் சிதைந்து நொறுங்கி சீரழிவதை, மதுவெறிக்கும் ஆணவத்திற்கும் இடம் கொடுப்பதை, தற்கொலைகள் நடைபெறுவதை நாம் புரிந்து கொள்ளலாம். 'ஏறுவெயில்' நாவல், இவ்வகைச் சமூக நிகழ்வைச் சித்தரிக்கிறது. பிற முற்போக்கு நாவல்களிலிருந்து, தன் சமகாலத்தைச் சித்தரிப்பதன்மூலம் இவ்வகையில் இந்நாவல் குறிப்பாக வேறுபட்டிருக்கிறது.

2. 'ஏறுவெயில்' - கொங்கு வட்டார நாவல் என்று சொல்லலாமா? எந்த ஆதாரத்தில்?

வட்டார நாவல் என்ற தொடரை இன்று சிலர் அர்த்தப்படுத்தும்பொழுது, வட்டாரமும் நாவலும் ஒன்றை மற்றது மறுக்கிறமுறையில் பொருத்தமில்லாத / விநோதமான தொடர் என்று கூறுகின்றனர். நாவல் என்பதன் பல அம்சங்களில் ஒன்று வட்டாரத்தன்மை. ஒரு நாவலில் இந்தத் தன்மை இருக்கலாம் அல்லது இல்லாமலிருக்கலாம். ஆகவே ஒரு நாவலின் இன்றியமையாத அம்சம், வட்டாரத் தன்மை என்று கொள்ள வேண்டியதில்லை. நாவலில் வரும்

மனிதர்களைச் சித்தரிக்கும்பொழுது குறிப்பிட்ட வட்டாரத்தின் குணம் மனிதர்கள் மூலம் பல வண்ணங்களில் வெளிப்படுவதை எப்படி ஒதுக்க முடியும்? மனிதர்களை, அவர்கள் வாழும் நிலத்திலிருந்தும் வரலாற்றுக் கட்டத்திலிருந்தும் பிரித்துப் பார்க்க முடியாது. அதேபோல வட்டாரத் தன்மைகளைச் சொல்வதற்காக எழுதுவதே நாவல் என்றும் ஆகிவிடாது. இத்தகைய கவனம் நமக்கு இருப்பது போதும்.

'ஏறுவெயில்' ஒரு வட்டார நாவல் என்று சொல்வதற்கு தேவையான பல அம்சங்கள் நாவலில் இடம்பெற்றுள்ளன. கொங்கு வட்டார மொழி, சற்று மிகையான வசைச் சொற்களுடன் நாவலில் இடம் பெறுகிறது. வட்டாரத் தன்மையை அழிக்கிற நகர நாகரிகம் கிராமத்துக்குள் நுழைந்து வருகிற அதே சமயத்தில், கொங்கு மனிதர்கள் என்று சிறப்பித்துச் சொல்கிற சில மனிதர்கள் இந்த நாவலில் இருக்கிறார்கள். தாத்தாவும் பேரனும் இவர்களில் முக்கியமானவர்கள். விவசாயக் குடும்பங்களில் நிலஉடமை முறையின் பாதிப்புக்கள் தொடர்கின்றன. விவசாயக் குடும்பங்களில் பெண்ணின் உழைப்பு அடிப்படையானது. எனினும் ஆண் இங்கு பெண்ணை மதிப்பதில்லை. கணவன், மனைவியை அடித்து நொறுக்குவான். வசை மொழிகளை எடுத்தெறிவான். இந்த அம்சமும் நாவலில் இடம்பெறுகிறது. சினிமா, குடி, காதல், உடன்போக்கு என்ற விரும்பத்தகாத சில போக்குகள் கிராமங்களில் 'அதிகாரம்' செலுத்துகின்றன. இவற்றைக் காட்டிலும் தம்மிடமிருந்து அன்பை விலக்கிக் கொள்ள முடியாமல் அன்பால் உருவாகும் மனிதர்கள் கொங்கின் நற்குணத்தைக் கொண்டவர்கள். தவிர, மண்ணிலிருந்து இந்த மனிதர்களைப் பிரித்துப் பார்க்கவே முடியாது. இந்த அம்சம் நாவலில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாயின்மூலம் சொல்லப்படுவது இந்த அற்புத குணம்தான். அன்பையும் மண்ணின் மீது மனிதன் கொண்ட பற்றையும் வேளாண்மையையும் விலக்கிப் பார்த்தால் அப்புறம் கொங்கு என்று எதுவுமில்லை. கொங்கின் இந்த மரபு அழியக் கூடாது. கொங்கு வட்டார நாவல் தமிழிலக்கியப் பரப்பில் இந்தப் பண்பின் அழுத்தத்தால்தான் தனித்துவம் பெறுகிறது. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நாகரிகத்தின் முக்கியக்கூறு இது என்ற முறையில் பிறமொழி இலக்கியத்தினுள்ளும் இதனைப் பார்க்கலாம். பெரும்பகுதி மானாவாரி நிலம்; சிறுபகுதி தோட்டங்கள். ஆண்டு முழுவதும் நீர்வரத்துடைய ஆறு இல்லை. உழைப்பின் கடுமை இங்கு அதிகம். உழைக்கிற மனிதர்கள் பிறர் துன்பம் அறிந்தவர்கள். துன்பப்படுகிறவர்கள் பகிர்ந்து கொள்வார்கள். அன்பு செய்வார்கள். இதுதான் கொங்கு வட்டாரம் முற்போக்கு என்று பேசி பெருமாள் முருகன் இந்த அன்பை ஒதுக்கவில்லை.

3. 'ஏறுவெயில்' சோசலிச எதார்த்தவாத நாவலா?

சோசலிச எதார்த்தவாதம் என்பது தமிழகச சூழலில் அண்மைக் காலத்தில் விவாதத்திற்குள்ளாகியிருப்பது வரவேற்கத்தக்கது. சோவியத் யூனியனில் சோசலிச எதார்த்தவாதம் பற்றி சில பத்தாண்டுகள் பேசினார்கள். சோசலிசத்தை நோக்கி செல்லும் எதார்த்தம் பற்றியது சோசலிச எதார்த்தவாத நாவல் என்று கொண்டால் சோவியத் யூனியனுக்கேகூட இது பொருந்தாது. சோவியத் யூனியனில் உருவானது சோசலிசம் அல்ல. இந்தியச் சூழலில் சோசலிசம் பற்றி பேச்சு இருந்ததே தவிர சோசலிசத்தை நோக்கிச் செல்வதற்கான போராட்டம் இந்தியாவில் நடைபெறவில்லை. புதிய ஜனநாயகப் புரட்சி என்பதைக் கடந்த பிறகுதான் சோசலிசம் பற்றி பேசமுடியும். இந்த ஜனநாயகப் புரட்சிக்கும் கூட இந்தியாவில் இடம் இல்லை. மார்க்சியக் கட்சிகள் இருந்தன. நாம் மறுக்கவில்லை. கட்சிகளுக்குள் பொருளாதாரவாதம் மேலோங்கியிருந்தது / இருக்கிறது. தொழிற்சங்கவாதம் மேலோங்கியிருக்கிறது. ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவது மார்க்சியக் கட்சிகளின் நோக்கம். கைப்பற்றிய பிறகும் சோசலிசம் நோக்கி செல்ல முடியாது. ஜனநாயகப் புரட்சி முற்றுப் பெறும் நிலையில்தான் சோசலிசம் நோக்கிய பயணத்தைத் தொடங்க முடியும். சோசலிசம் பற்றிப் பேசி ஜனநாயகப் புரட்சியை ஓரளவு தூண்ட முடியும் என்பதும் உண்மைதான். ஆனால் சோசலிசம் பற்றிய புரிதலினுள்ளும் விளக்கங்கள் வழியேயும் இடம்பெற்றது முதலாளியம்தான். அப்படியானால் சோசலிசம் என்றால் என்ன? என்பது பற்றி மீண்டும் தோண்டித் துருவி ஆராய்ந்து பார்க்க வேண்டும். மார்க்ஸ் முதல் மாவோ வரை புரட்சிகர வரலாற்று அனுபவங்கள் வழியே நாம் ஆழ்ந்து பார்க்க வேண்டும்.

சோசலிச எதார்த்தவாதம் என்ற தொடர்வழியே நம் சூழலில் நாம் எதை வைத்தோம் / புரிந்துகொண்டோம் என்ற கேள்வியை நாம் எழுப்பிக் கொண்டால் ஓரளவு தெளிவு கிடைக்கும். வர்க்கப் போராட்டம் என்பதை மையப்படுத்தி அல்லது ஊடகமாக்கி நம் வாழ்க்கையை, வரலாற்றை, சமூக அனுபவங்களை நாம் புரிந்து கொள்கிறோம். போராட்டமில்லாமல் வாழ்க்கையில்லை. தனி உடைமை மனிதர்களைக் கூறுபோட வேண்டியதில்லை. தனிஉடைமையை ஒழிக்கத்தான் வேண்டும். முதலாளியத்தை, ஏகாதிபத்தியத்தை நாம் எந்த முனையிலும் ஏற்பதற்கில்லை. அரசு அதிகாரத்தின் ஆளுகைக்கு நாம் உட்பட வேண்டியதில்லை. வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்கள். வரலாற்றின் கடுமையான சிக்கல்களுக்குள் நாம் மாட்டியிருக்கிறோம். நமக்குள்ளும் சிக்கல்கள்

பதிந்திருக்கின்றன. நம்மை விடுவித்துக் கொள்ளவேண்டும். நமக்கு உள்ளும் வெளியிலும் கடுமையாகப் போராட வேண்டும். உயிரைக் கொடுத்துப் போராட வேண்டும். உலகம் நமக்கு வசப்பட வேண்டும். இம்மாதிரிப் புரிதலோடுதான் நாம் வாழ்க்கையைப் பார்க்கிறோம். இலக்கியத்தைப் படிக்கிறோம். இலக்கியம் படைக்கிறோம். சமூக / வரலாற்றுச் சூழலில் வைத்து மனிதர்களைப் பார்க்கிறோம் / சித்தரிக்கிறோம். சமூகச் சூழல் பற்றிய நம் தேவைகள் பற்றிய சில புரிதல்கள், கருத்துக்கள் பார்வைகள் -- இவற்றை எதார்த்தவாதம் என்கிறோம். நம் சமூகச் சூழலில் செறிந்திருக்கிற முதலாளியத்தோடு - ஏகாதிபத்தியத்தோடு - அரசு அதிகாரத்தோடு இவற்றைக் கடப்பதற்காக என்று கருதிப் போராடுகிறோம். இதற்குப் பெயர் எதார்த்தவாதம்.

சோசலிசம் நம் விருப்பமாக நம் உணர்வில், சிந்தனையில் இருக்கிறது. புறத்தில், இன்றைய சூழலில் சோசலிசம் இல்லை. வெகுதொலைவில் அது தள்ளிப் போகிறது. சோசலிசக் கனவை, இன்றைய சூழலில் வைத்து செயல்படுத்த முடியாது. ஆனால் சோசலிசம் பற்றிய கனவுகளோடு--விருப்பங்களோடு இருந்து முதலாளியப் பிடிப்புக்குள்ளிருந்து விடுபட முடியாமல், முதலாளியப் பிடிப்பைத் தகர்க்க முடியாமல் வாழ்கிறோம். சோசலிச எதார்த்தவாதம் என்ற தொடரைக்காட்டிலும் மார்க்சிய எதார்த்தவாதம் என்ற பொதுப்பெயர் பெரும்பாலும் பொருந்தலாம். இங்கும் ஒரு எச்சரிக்கை தேவை. எதார்த்தவாதம் என்பதன் மூலம் முதலாளிய எல்லைக்குள்தான் நாம் இருக்கிறோம், சிந்திக்கிறோம், செயல்படுகிறோம். ஜனநாயகப் புரட்சி முடிந்தபிறகுதான், முதலாளியம் செறிந்திருக்கிற எதார்த்தவாதத்தை கடந்து செல்லமுடியும். மார்க்சிய எதார்த்தவாதம் என்ற தொடரைச் சரியாகப் பொருள்படுத்தினால் முதலாளியத்தின் செறிவிலிருந்து விடுபட இயலாமல் ஒன்று மற்றதை மறுக்கிற இரு சொற்களின் சேர்க்கையாக இத்தொடரைக் காணமுடியும்.

ஏறுவெயில் நாவலில், நகரங்களின் வழியே கிராமப்புறங்களை தனக்குள் அகப்படுத்துகிற நவீன காலனியாதிக்கம் பற்றி முன்பே குறிப்பிட்டோம். கட்சிக்காரர்கள், உதிரிவர்க்கத்தின் மனப்பான்மையோடு நவீன காலனியாதிக்கத்தோடு ஒத்துழைப்பதையும் கண்டோம். காலனிக்காரர்களுக்கும் குடியானவர்களுக்கும் நிரந்தரமான பகை. இடையில் சில உறவுகள். தாழ்த்தப்பட்ட சமூகத்தினரோடு உறவை மீறி பகை வெடிக்கிறது. கிராமங்கள் வற்றிக் காய்கின்றன. வேளாண்மைக்கு வழி இல்லை. மக்களைத் திரட்டிப் போராடுகிற கட்சி இல்லை. சுரண்டும் கட்சிக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து இன்னும் கிராமத்திற்கு விடுதலை

இல்லை. பெருமாள் முருகன் தரும் சித்தரிப்புகளுக்கிடையில் வர்க்கப் போராட்டம் வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால் ஆழ்ந்துபார்க்கிற பொழுது இங்கு தெரிவது வேறு என்ன? இயக்கமற்றதென தோற்றம் தருகிற இந்த பூமியில் வர்க்கங்களுக்கிடையில் போருக்கான கனல் மெல்ல சூழ்ந்து வருகிறது. சிதைகிற மனிதர்கள் முற்றாக அழிந்து போவார்களா? மனிதர்களைச் சிதைக்கிற சூழல், அதனைத் தகர்க்கும் எதிர்வினையைத் தோற்றுவிக்காமல் இருக்க முடியுமா? கட்சிக்காரர்களின் உதிரிக்குணம் நாவலில் விமர்சிக்கப்படுகிறது. காலனியாதிக்கம் என்ற பெயர் சொல்லப்படாவிட்டாலும் அந்த ஆதிக்கம் மனிதர்களைக் கைப்பற்றுவது நாவலில் தெரிகிறது. மண் இன்னும் புனிதமானதுதான். அன்பில்லாமல் மனிதன் வாழமுடியாது. இந்தச் சூழலில் வர்க்கப் போர் வெடிக்கத்தான் செய்யும். மக்களைத் திரட்டுவதற்கான இயக்கம் நோக்கி இந்தச் சூழல் திறந்து கிடக்கிறது. பெருமாள் முருகன் இன்னும் நுழைந்து பார்க்காத பிரதேசங்கள் நமக்குத் தெரிகின்றன. அதாவது ஆழ்ந்து பார்க்கும்பொழுது பெருமாள் முருகனின் சித்தரிப்பின் வழியே இந்தப் பிரதேசங்கள் நமக்குத் தென்படுகின்றன. மனிதர்களின் ஏக்கங்கள், பெருமூச்சுக்கள், கோபதாபங்கள், வெற்றுப் பகைமைகள் - இவற்றின் வழியேயும் நடைபெறுகிறது வர்க்கப் போராட்டம். நகரங்களுக்கு எதிராக - வணிகர்களுக்கு எதிராக - லேவா தேவிக்காரர்களுக்கு எதிராக - நுகர்வு வெறிக்கெதிராக - தொகுத்துச் சொன்னால் நவீன காலனியாதிக்கத்திற்கு எதிராக, மக்களின் மனங்களில் ஒரு போருக்கான மேகங்கள் திரள்கின்றன.

இந்த நாவலில் இயற்பண்புவாத போக்கிலான சித்தரிப்புகள் நிறைய இடம்பெறுவது உண்மைதான். இயற்பண்புவாதத்தையும் எதார்த்தவாதத்தையும் ஒன்றை மற்றது மறுப்பது போன்ற எதிர்நிலைப்படுத்தலாமா என்றால் இப்படி எதிர்நிலைப்படுத்துவது கூடாது; தகாது என்றே பதில் சொல்லலாம். திட்டவட்டமான வர்க்கப் பகுப்புக்குள் மனிதர்கள் அகப்படுவதில்லை. சாதிகள் இன்னும் இயங்குகின்றன. சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் சமூகப் பிரிவினர் தமக்குள் ஒற்றுமை காணாமல் முரண்பட்டு, ஒருவர்க்கொருவர் பகைத்து வீண் சண்டைகளில் ஈடுபடுகிறார்கள்.

அறிவழகன் :
கழிசடை

அறிவழகனின் முதல் நாவல். முதல் தலித் நாவல் என்று இவர் சொல்லுகிறார். தலித் நாவல் என்ற முறையில் நிறைய விவரங்களோடு நாவல் எழுதப்பட்டிருக்கிறது. அனுமந்தையா ஒரு நகராட்சியில் பணிபுரிகிற தோட்டி. 22 ஆண்டுகள் வேலை செய்தான். ராசப்பன் என்ற தன் சொந்தப் பெயரை இழந்து அனுமந்தையா ஆனவன். நாவலில் தோட்டிகளில் பல ரகத்தவர். நகரசுத்தித் தொழிலில் பணிபுரியும் இன்ஸ்பெக்டர், மேஸ்திரிகள் பற்றிய விவரங்கள். தோட்டிகளில் சிலவகையினர். வேலையில் சேர்ந்த முதற்காலத்தில் மலம் அள்ள வேண்டும். பிறகு தெருக் கூட்டுதல், கால்வாய் சுத்தப்படுத்துதல், இப்படி வேலை உயர்வு கிடைக்கும். மாட்டுத் தொழுவில் வேலை செய்வது, சிலர்க்கே வாய்த்த சிறப்புத் தொழில். சுடலையில் பிணம் எரிப்பது ஒரு தனித்தொழில். சாக்கடைக் குழாய்களுக்குள்ளிருந்து அடைப்பை நீக்குவது ஆபத்தான வேலை. தோட்டிகளைப் பொறுத்தவரை, மாதம் முழுவதும் யாரும் வேலைக்கு வருவதில்லை. குடியில்லாமல் இவர்கள் வாழ முடியாது. அவ்வப்பொழுது நோய்வாய்ப்படுகிறார்கள். கிடைக்கிற ஊதியம் போதுவதில்லை. வட்டிக்காரர்களிடம் எப்பொழுதும் இவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அடி, உதைகூட கிடைக்கிறது. மேஸ்திரிகள் இவர்களை விரட்டிவிட்டு தினக்கூலிகளுக்கு வேலை கொடுப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். தினக்கூலியிடம் பிடித்தம் செய்து கொள்ளலாம். மாட்டுத் தொழுவத்தில் திருடலாம். சுத்தம் செய்யப் போகிற இடங்களில் கெஞ்சிக் கேட்டு காசு வாங்கிக் கொள்ளலாம். செத்து அழுகிப்போன நாயைப் புதைத்தால் ரூபாய் பத்து, இருபது என கிடைக்கும். அநாதையாய்ச் செத்துப் போகிற பிணங்களை தெருவில் வைத்து காசு வாங்கலாம். அப்புறம் குடிக்கலாம். சிலசமயம் கஞ்சா. அதிசயமாக 'மேப்பு'. கொஞ்சம் உறிஞ்சியவுடன் மனிதன் சாய்ந்து விடுகிறான். நாய்களைப் பிடிக்கவும் தோட்டிகளை அனுப்புகிறார்கள். கொஞ்சம் அறிவுபூர்வமாக செய்ய வேண்டிய வேலை. முதலியார் வீட்டு நாயை வலைபோட்டுப் பிடித்துக் கொன்று விட்டால் அடி உதை கிடைக்கும். யாரும் வந்து தடுக்க மாட்டார்கள். கிடைக்கிற காசைக் கொண்டு முதலில் சாராயம் குடிக்க வேண்டும். மிகுந்திருந்தால்தான் குடும்பத்திற்கு அப்பணம் கிடைக்கும். குழந்தைகளைப் படிக்க வைக்கமுடியாது. விடுதலை நாள் என்று பையன் கதர்ச்சட்டை கேட்பான். ஏன் இவன் பிறந்தான் என்று அப்பன் நொந்து கொள்வான். வட்டிக்காரனிடம் அகப்பட்டுக் கொண்டால், அவன் வீட்டுக்கே வந்து விடுவான். மனைவி அவனிடம் படுத்தால்தான் அவன் வாயை

அடைக்கமுடியும். தோட்டி காசநோய்க்கு ஆளாகிறான். இப்படி நோய்கண்டவன், தன் மனைவியையோ மகனையோ, தன் வேலைக்கு வைத்துக் கொள்ள முடியும்.

அனுமந்தையா என்ற தோட்டியின் மூலம் நகர சுத்தித் தொழிலாளிகளின் வாழ்நிலைகள் விரிவாக இந்த நாவலில் சொல்லப்படுகின்றன. தோட்டியின் வாழ்வுக்குள் வாசகன் தொடர்ந்து செல்லுகிறான். கீழ்த்தளத்தில் நடைபெறும் வாழ்வியல் விவரங்கள் நிறைய இந்த நாவலில் கிடைக்கின்றன. அருவெறுப்பான வாழ்க்கைக்குள் வாசகன் நுழைந்து செல்கிறான். இந்த வாழ்வியல் அனுபவங்கள் நம் வாசகர்களுக்குத் தேவைதான்.

அனுமந்தையாவின் கதையும் அவன் கதையோடு சேர்ந்து செல்கிற மேலும் பலரது கதைகளும் இந்த நாவலில் கிடைக்கின்றன.

இருபத்திரண்டு வருடம் அனுமந்தையா பெரும் சலிப்போடு வேலை பார்த்திருக்கிறான். அப்பொழுது கிடைத்த காசையெல்லாம் குடியில் செலவழிக்கிறான். இதற்கு இவன் சொல்லும் காரணம், இவன் மனைவி கொண்டம்மா, வெளியில் திரிகிறாள். வேசியாகிவிட்டாள். இதனால் இவனுக்கு மனவேதனை. மனவேதனையை மறப்பதற்காக இவன் குடிக்கிறான். மாணிக்கத்திடம் கடன்பட்டான். வட்டிகூட தர இயலவில்லை. வீட்டுக்கு அவன் வந்தபோது இவன் வெளியேறி விட்டான். திரும்பிச் சென்ற போது மாணிக்கம் வெளியேறினான். நீ செய்த காரியத்திற்காக, நீ செய்த காரியத்தை மறைப்பதற்காக நான் இப்படிச் செய்கிறேன் என்கிறாள் கொண்டம்மாள். கொண்டம்மாளை இவன் அடிக்கடி அடிக்கிறான். அவள் இவனை விட்டுப் போய்விட்ட சமயங்களில் அவளுக்காக ஏங்குகிறான். அவள் அன்பை நினைத்துக் கொள்கிறான். அவள் திரும்பிவரவேண்டும் என்று நினைக்கிறான். அவளும் திரும்பி வருகிறாள். அவளை அணைத்துக் கொள்கிறான். கடைசிக் குழந்தை மாத்தையா. எப்போதும் நோயில் துவள்கிறான். குப்பைத் தொட்டியிலிருந்து இவன் கண்டெடுத்து வளர்த்த பெண் லட்சுமி. அப்பாவை இவள்தான் காப்பாற்றுகிறாள். அனுமந்தையா நினைக்கிறான். இவள் உயர்சாதிப் பெண்ணாக இருக்க வேண்டும். ஆகவேதான் இவள் இவ்வளவு நல்லவளாக இருக்கிறாள்.

கிராமத்திலிருந்து நகரத்துக்கு வந்தவன் இராசப்பன். அப்பொழுது அவன் சிறுவன். பசி மயக்கத்தில் இவன் தெருவில் கிடந்தபோது, இவனைத் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றவள் கொண்டம்மா. அப்பாவிடம்

சொல்லி இவளை முனிசிபாலிட்டியில் சேர்த்தாள். சுடுகாட்டில் பிணம் எரிக்கும் சுடலையை மணக்கும்படி அம்மா வற்புறுத்தியபோது மறுத்தாள். அனுமந்தையாவைத்தான் கட்டிக் கொள்வேனென்று சொல்லி அவனையே கட்டிக் கொண்டாள். இந்தக் கொண்டம்மாதான் கணவனின் மானம் காக்க மாணிக்கத்தோடு படுத்தாள். இவளை மீறி அனுமந்தையா செல்ல முடியாது.

சுடுகாட்டில் பிணம் சுடுகிறவன் சுடலை. இவன் கட்டிக் கொள்ள விரும்பிய பெண்ணை அனுமந்தையா அடைந்தான். பல ஆண்டுகளுக்குப் பிறகு சுடலையை அனுமந்தையா சந்தித்தான். மச்சான் என்று உபசரித்து இவனுக்கு சாராயம் வாங்கிக் கொடுக்கிறான் சுடலை.

நல்ல பண்புகள் உயர்சாதிக்காரனுக்கே உரியவையா? மனிதன் எந்தச் சூழலிலும் இருக்கிறான். இராமக் கோனார் சந்தில் ஒரு கிழவி இட்லிக்கடை வைத்திருந்தாள். அவளுக்கு உறவினர் யாரும் இல்லை. இட்லி வாங்கிச் சாப்பிடுகிறவர் அவளை ஏமாற்றலாம். அதைப் பெரிதாக அவள் கண்டு கொள்வதில்லை. பாட்டி செத்துப் போனாள். பாட்டி அனாதைப் பிணம் ஆகிவிட்டாள். அவளை சுடுகாட்டுக்கு எடுத்துச்சென்று சுடலையின்மூலம் அடக்கம் செய்கிற பாக்கியம் அனுமந்தையாவுக்குக் கிடைக்கிறது. உடல்மீது எருக்கள் அடுக்கி பிறகு மண்பூசி கடைசியாக மீதம் இருக்கிற கிழவியின் முகத்தை ஆசையோடு பார்த்துக் கொண்டான் அனுமந்தையா. பிறகு கிழவிக்கு கொள்ளி வைக்கிறான். அனுமந்தையாவும் தனக்குள் அன்பில் நனைகிறான். இன்னும் இப்படி பல கதைகள். பர்மா கொண்டையா, பர்மாவிலிருந்து துரத்தப்பட்டு இந்த நகராட்சியில் வேலைக்கு வந்தவன். வட்டிக்குப் பணம் கொடுத்து இப்பொழுது உடல் கொழுத்திருக்கிறான். மொய்தீன் மேஸ்திரி, எப்பொழுதுமே கெட்ட எண்ணத்தோடு அனுமந்தையாவை விரட்டுகிறான். கேசவலு மேஸ்திரி நல்லவர். சாராயம் காய்ச்சி விற்பனை செய்யும் ஜோசப் சாராயம் குடித்த கடனைத் திருப்பிச் செலுத்தாதவனை தன் அடியாட்கள்மூலம் இழுத்துவரச் செய்து சாட்டையால் விளாசி அனுப்புகிறவர். இன்னும் இப்படி பலரது கதைகள்.

அனுமந்தையாவின் பெற்றோர் பற்றி அழகான கதை. இவன் சிறுவனாயிருக்கிறபோது இவன் அம்மாவை இழந்தான். காய்ச்சலால் துடித்துக் கொண்டிருந்தாள். அடுப்பில் வெந்நீர் போட்டுத்தர இவன் அடுப்பைப் பற்ற வைத்தான். வீடு முழுவதும் புகை. அம்மா இருமினாள். பக்கத்து வீட்டில் ஒரு சூனியக்காரி. அவள் வந்து மந்திரித்துப் போனாள். அவள் தன்னைக் கொன்று விடுவாளென்று அம்மா அஞ்சினாள். மறுநாள் அம்மா செத்துக் கிடந்தாள். அப்பாவுக்கும் அந்த ஊரிலுள்ள

பெருந்தனக்காரருக்கும் நெருக்கமான உறவு. அவர் தொழுநோயாளி. கை கால்கள் அற்று விழுந்துவிட்டன. கடைசியாக அவரது உருக்கமான வேண்டுகோளை ஏற்று, முனியன் அவர் கழுத்தில் கயிற்றை மாட்டி தொங்கவிட்டான். நாவலில் இன்னொரு கதை. நாகாத்தினம் சொன்ன கதை. அங்காளம்மன் கோவில் திருவிழா பற்றிய கதை. மிக அழகான கதை.

நாவலில் கடைசி நிகழ்ச்சி. அனுமந்தையாவுக்கு காசநோய். தன் மகன் சின்னுவய்யாவை உதவிக்கு அழைத்துச் செல்கிறான். சாக்கடைக் குழிக்குள் இறங்கி அடைப்பை அகற்ற வேண்டிய வேலை. சாக்கடைக்குள் நச்சுக்காற்று. உள்ளே இருவர் இறங்கிய சமயம், வெளியே உள்ள ஒருவன் வெளிச்சம் காட்ட தீப்பெட்டி உரச, உள்ளே இருந்தவர்க்கு தீப்பற்றி எரிந்தனர். தன் வாழ்வுக்கு ஆதாரமான தன் மகனை அனுமந்தையா இழந்தான்.

இப்படி நாவலுக்கு ஆதாரமான பல நிகழ்ச்சிகள். அனுமந்தையாவோடு சேர்ந்து அவன் வாழ்க்கைக் கதைகளை ஆசிரியர் சொல்கிறார். நாம் சேகரித்துக் கொள்கிறோம். அனுமந்தையாவின் உணர்வு நிலைகளை மீறியும் அனுமந்தையாவுக்குள் சென்று ஆசிரியர் கதை சொல்கிறார். தமிழ் நாவலுக்குள் முற்றிலும் புதியதொரு சமூக அனுபவம். கதை சொல்வதில் ஆசிரியரது தேர்ச்சி குறைவு என்பதை வைத்து இந்த நாவலை ஒதுக்கிவிட முடியாது. இவர் சொல்லும் நகரச் சுத்தித் தொழிலாளர் வாழ்க்கை அனுபவங்கள் உண்மையானவை. இங்கு கற்பனைக்கு இடமில்லை. தோட்டிகளுக்குள்ளும் அசலான மனிதர்களைப் பார்க்கிறோம். அனுமந்தையா குடிக்கிறான். சோம்பேறியாக இருக்கிறான். வேலைக்குப் போவதில்லை. மனைவியை அடிக்கிறான். இவன் இப்படி இருப்பதைப் புரிந்து கொள்கிறோம். இவனை நாம் குற்றம் சொல்லமுடியாது. இவனிடமிருந்து வெளியேற்றப்பட்ட வாழ்க்கையை நாம்தான் வாழ்கிறோம். இந்த உணர்வை நாம் பெறுவதற்காக இந்த நாவலை நாம் வாசிக்கத்தான் வேண்டும். சமூகச் சிக்கல், அவலம், நெருக்கடிகள் ஆகியவற்றை சொல்வதற்கான வடிவம் நாவல். இந்த அனுபவத்தை சொல்கிற நாவல் கலைப்படைப்பாகவும் இருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். இல்லையென்றாலும் குற்றமில்லை, கெட்டியான சமூக அனுபவத்தைச் சொல்லி இருப்பதன்மூலம் இந்த நாவல் நமக்குள் தங்குகிறது. அறிவழகன் பாராட்டுக்குரியவர்தான். தலித் இலக்கியம் தமிழுக்குப் பெரிதும் தேவை என்பதை இந்த நாவல் மெய்ப்பிக்கிறது.

– 24.9.93

லட்சுமி கண்ணன் :
ஆத்துக்குப் போகணும்

'காவேரி' என்ற புனைபெயரில் சிறுகதைகள் எழுதி வந்த திருமதி லட்சுமி கண்ணன் அவர்களின் நாவல் 'ஆத்துக்குப் போகணும்'. பெண் விடுதலையைப் பல பரிமாணங்களோடு அற்புதமான தமிழ்நடையில் எழுதுபவர் இவர்.

ஆத்துக்குப் போகணும்' நாவலில் பெண் பதறிக் கொண்டு – பரிதவித்துக் கொண்டு இருக்கிறாள். வெளியேற வழியில்லாமல், தன் வளைக்குள்ளே அகப்பட்ட எலி மாதிரி – இந்த மோசமான உவமைக்கு மன்னியுங்கள் – பெண் தவித்துக் கொண்டு இருக்கிறாள். கணவன் என்ற பெயரில் பற்பல சமூக நியதிகளுக்குக் கட்டுப்பட்டு, தன் ஆளுமையை உணர்ந்து – தன் ஆளுமை அழிவைத் தானே பார்த்துக்கொண்டு இருக்கும் நிலை கொடியது.

தன் வளைக்குள்ளிருந்து தப்ப முடியாதபொழுது – எங்கேனும் ஒரு துவாரத்திலிருந்து வரும் சிறிய ஒளிக்காக பெண் காத்திருக்கிறாள் ! இவள் வேதனை சகிக்கக் கூடியதாக இல்லை. "ஆத்துக்குப் போகணும்" – நாவலைப் படிப்பவர் இந்தப் பிறாண்டலை நிச்சயம் அனுபவிக்க முடியும்.

காயத்ரி – மைசூரில் தாத்தாவின் வீட்டில், தாத்தாவோடும் விளையாட்டுத் தோழிகளோடும் – அழகான வீடு – சுற்றிலும் அழகான தோட்டம் – இவற்றோடு ஆடிப்பாடி மகிழ்ந்து தன் இளமையில் – ஒரு பெண்ணாக மெருகேறியவள் – அப்புறம் தாத்தா – தோழிகள், இளமை, இணக்கமான உறவுகள் – எல்லாவற்றையும் இழந்து – டெல்லியில் குடித்தனம் செய்கிறாள் – கணவர் நல்லவர் – குறை சொல்லவே முடியாது. ஒரு பிளாட் வாங்கக் கடுமையான முயற்சிகள் – வீட்டிலும் அலுவலகத்திலும் வேலைகள் அமைதி இல்லை. நிம்மதி இல்லை. தனக்குள் துடித்துக் கொண்டிருக்கும் ஆளுமை வளர்ச்சிக்கு இடம் இல்லை. புழுங்கித் தவிக்கிறாள். தாத்தா வீடு கனவிலும் நனவிலும் அவளை அழைக்கிறது. தாத்தா இறந்து – அப்புறம் என்ன என்னவோ நேர்ந்து, கடைசியாகக் கைமாறிய வீட்டை ஒருமுறை பார்க்கச் செல்லுகிறாள். இணக்கமான, புதிய உறவுகள் தழைத்த அந்த அற்புத வீடாக இல்லை. எந்த வீடு இவளுக்கு விடுதலை தரும்! காயத்ரி எதையும் காப்பாற்றிக் கொள்ளவும் முடியவில்லை. விடுதலையும் இல்லை.

காயத்ரியின் தோழி – ரமா – படித்தவர் – பேராசிரியர். காயத்ரி தன் கட்டுகளோடு இருந்து விடுகிறாள். ரமா இவளைவிடத் தீவிரவாதி. இவர் தீவிரம் மேலும் சில தொலைவுக்கு. கணவன் துரை. அலுவலகம், அவனுக்கு வாழ்க்கை. வளர்ச்சிக்கான மனைவியின் துடிப்புக்கள் அவனுக்குப் புரியாதவை. ஏற்க முடியாதவை. மனைவி ஒரு எழுத்தாளர். எழுத்தில் அவள் விடுதலை வேண்டுகிறாள். தனக்கு வராத விடுதலை மனைவிக்கு எப்படி வரலாம்? துரை ஒப்புக் கொள்வானா? மறுக்கவும் முடியுமா? பாவம்! அவனுக்கும் புழுக்கம்.

துரை ஏன் இப்படி இருக்கிறான்? காயத்ரி ஒரு சமயம், தென்னாடு வரும்போது ரமாவின் வேண்டுகோளை ஏற்று துரையின் பெற்றோர்களைப் பார்த்து வரச் செல்லுகிறாள். கிராமிய வாழ்க்கை – தனக்குள் அடைத்துக் கொண்ட மனிதர்கள் – முகத்தில் சிடுசிடுப்பு – எந்நேரமும் – கதவைத் தட்டும்போதே – யார் என்ற அதட்டலோடு திறக்கிறார்கள். கையில் பை – பார்த்தவுடன் உள்ளே அழைக்கிறார்கள். ஏதாவது சாப்பிடுகிறாயா? கேள்வி. கேள்வியின் தோரணையிலேயே மனம் சுண்டி விடுகிறது. இல்லை – இப்பொழுதுதான் சாப்பிட்டு வந்தேன் – முடிகிறது. உறவும் கலப்பும். இனி வெளியேறியாக வேண்டும். இந்தச் சூழலில் 'வளர்ந்தவன்' – இல்லை – சிறுத்தவன் – திரிந்து போனவன் துரை. ரமா என்ன செய்வாள்? எலிவளைக்குள்ளிருந்து ஒளி தேடுகிறாள். கிடைத்தது ஒரு இலக்கியப் பேராசிரியர் உறவு! கொஞ்சம் இதமாக இருக்கும் சில காலத்திற்கு. துரைக்குத் தெரியவரும். அப்புறம், ரமாவின் ஆளுமை சிதறி வெடிக்கும் ! – என்ன ஆவாளோ, ரமா !

நாவலில் வரும் முதன்மையான பாத்திரங்களும் – அவர்களின் பிரச்சினையும் கதையும் – இதுதான். கதையில் இவர்கள் முதன்மையானவர்கள். இவர்களோடு மேலும் பலர். அவர்களுக்குப் பல பிரச்சினைகள். அவர்கள் சூழலும் அனுபவங்களும் வெவ்வேறு. அந்த மனிதர்களுக்குள்ளும் ஒரு வாழ்க்கை திரிந்து – கோணல் மாணலாக நடந்து கொண்டு நொண்டியடித்துக் கொண்டு இருக்கும். படிக்கும்போதே, நம் மனத்தில் அவர்கள் கதையை நாம் விரித்துக் கொள்ள வேண்டும்.

டெல்லி – நகர வாழ்க்கை – அலுவலகங்களில் வேலை. வேலைக்காக, உணவுக்காக, பாதுகாப்புக்காக. அடுத்தவர் முகம் பார்த்து வாழவேண்டும். அதிகாரம் கிடைத்தால் கொஞ்சம் அடுத்தவரை அதட்டி, மகிழலாம். அந்த மகிழ்ச்சி, தற்காலிகமானது. உள்ளே ஆபத்து மறைந்திருக்கும். அதிகாரம், புலிகளை உறும வைக்கும் தான். ஏமாந்த

நேரத்தில் தன்னைத் தாக்கி அழிக்கும். தாக்குவதும தாக்கப்படுவதும் வாழ்க்கை அல்ல. மனிதர் மனத்தில் போட்டி பொறாமை, வம்புகள், காய்ச்சல்கள். பொருள் துரத்தும் வாழ்க்கை, அதற்காக அவமானங்கள், பயங்கள். கிடைத்தது கை நழுவிப்போகிறது. பிடித்த கிளை, கை முறிகிறது. வளர்த்த பையன் மார்பில் பாய்கிறான். எதுவும் இங்கு சுகமாக இல்லை. பாதுகாப்பாக இல்லை. வாழ்க்கை, கிழிந்து தொங்குகிறது அவரவர் முகத்தில். இளமைக்கால நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், ஆசைகள், நம் கணமுன் நம் குழந்தைகள் சாவது மாதிரி அழிகின்றன. அழிவது கொஞ்சம் கவிதைகளோடும். மனிதர் ஒருவரை மற்றவர் பயன்படுத்துகின்றனர். கருவியாக வாழ்வதில் சுகமில்லை. அலுவலகம், தொழிற்சாலைகளுக்கு மட்டும் அல்ல இந்த விதி. குடும்பத்திற்குள்ளும் இதன் ஆட்சி. மனைவியாக தாயாக இருப்பது, இப்படித்தான். அழகான அடிமை மனைவி. அன்பான அடிமை, தாய். கணவன் அதிகார மிதப்பில் சில காலம் இருக்கலாம். மிதவை எந்நேரமும் கிழிந்து விடலாம். கணவனாக இருப்பது, கொஞ்சம் கூடுதல் சுகம் என்பது தவிர, இந்தச் சுகமே வேதனையாகவும் வாய்ப்பு இருக்கிறது. மனிதர்கள், தம் ஆளுமையை வளர்க்க வழி இல்லை. கலை, கற்பனை, அறிவுத்திறன் இவற்றை வளர்க்க வழி இல்லை. கலை, கற்பனை, அறிவுத்திறன், இவற்றை வளர்க்க வழி இல்லை. மனிதர்களை வளர்ப்பது அன்பான, சுரண்டலற்ற உறவுகள்; மனிதர்கள் தழைப்பது நல்லுறவுகளில். நல்லுறவுகளுக்கு வழி இல்லாதபோது, கொடுமைகள், அதிகாரங்கள்; விளைவாகக் கோணல் மாணல்கள். இளம்பிள்ளை வாதத்தால், உடலும் மனமும் குறுகிய மாதிரி, கோணலாகிய மாதிரி. இது வெளித்தெரிவதில்லை. நோய் என அறியாதபோது, அதன் ஆதிக்கமும் அதிகமாகிறது.

காயத்ரியின், ரமாவின் வேதனைகளை நுணுக்கமாய் விவரிக்கும் நாவலாசிரியர், துரையின் வேதனையைச் சொல்லவில்லை. பெண் மட்டும்தான் இங்கு அடிமைப்பட்டு அவலத்தில் துடிக்கிறாளா? ஆண்கள் இங்கே, என்ன வாழ்ந்தார்கள்? இருவர்க்கும் இங்கு 'வீடு' இல்லை. இளமைக்காலம் திரும்பவராது. இடையிடையே கிட்டும் சிறிய ஒளி, உலகத்தைக் காட்டாது. பொறுமல்களால் மனிதர் மேலும் சிறுத்துப் போவர். நோயுறுவர். பாவம், இந்த மனிதர்களும் நாமும்.

நாவலைப் படித்து முடிக்கும்போது, புரிதல் கொள்கிறோம் - நாம எல்லோரும் எலி வளைக்குள் மாட்டிக் கொண்டிருப்பதை - நாவலை நீங்களும் படியுங்கள் - காயத்ரியோடும் ரமாவோடும் சேர்ந்து நடந்து பயணம் சென்று பற்பல அனுபவங்களைப் பெற - நம் வாழ்க்கை

அனுபவங்களை மறுபடியும் ஒரு புதிய ஒளியில் திரும்பப் பார்த்துக் கொள்ள – மற்றவர் ஆளுமையை நாம் நாசமாக்காதிருக்க – நம் ஆளுமை நாசப்படாதிருக்க –முடியுமானால், வளர்த்துக் கொள்ள முடியாவிட்டால், சேர்ந்து போராட – புரிந்து கொள்ள (அல்லது சாக).

காவ்யா வெளியீடு இந்த நாவல். லட்சுமி கண்ணனின் அழகான – தமிழுக்கு அழகு. சேர்க்கும் தமிழ் நடையை ரசிக்க நீங்கள் படிக்கத்தான் வேண்டும். படிக்கும்போது நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள் – தமிழில் புதிய பிரச்சினைகளோடு புதிய நடையில், ஒரு நல்ல நாவலாசிரியர் பிறந்திருப்பதை. சிகரங்கள் இவருக்கு எதிர்காலத்தில் எளிதாகக் கிட்டும் குடும்ப சுகம், ஆடை அணிகலன் என்று எழுதித் தள்ளி – நாவல் என்ற கலையை நாசமாக்கும் பெண் எழுத்தாளர்களுக்கு இடையில், இவரது கலையாக்கத்தின் தனித்தன்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.

சு. சமுத்திரம் :
பாலைப்புறா

மதிப்பிற்குரிய திரு. சு. சமுத்திரம் அவர்களுக்கு,

நாவலின் முன்னுரையில் நீங்கள் குறிப்பிட்டுள்ள இந்த நாவல் வாசிப்பிற்கான அணுகுமுறை குறித்து எனக்கு உங்களோடு முரண்பாடு இல்லை. கலைத் தரத்தை முன்னிறுத்தி படிப்பாளிகளுக்காக நீங்கள் எழுதுவதில்லை. மக்களுக்காக எழுதுகிறீர்கள். இதற்காக உரத்த குரலில் எழுதுகிறீர்கள். இதற்காகவும் உங்களிடம் எனக்கு மரியாதை உண்டு. எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதை நோக்கமாக கொண்ட ஒரு நாவல் – அன்றியும் சராசரி மக்களின் உணர்வு ஏற்ற இறக்கங்களின் வழியே படிக்கப்படும் ஒரு நாவல். அதற்கேயான கலைத்தரத்துடன் இயங்குவதை படிப்பாளிகள் என்பவர்களும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இப்படி சொல்வதன் மூலம் நாவல் குறித்த எனது அனுபவத்தை முற்றாக நான் சொல்லிவிடவில்லை. இப்பொழுது இதுபற்றி நான் எழுதவேண்டும். நானும் ஒரு படிப்பாளி. கலைத் தரத்தை பெரிதும் நேசிப்பவன். அடுக்கு மொழிகூட எனக்குப் பிடிப்பதில்லை. கரடுமுரடான நடை எனக்குப் பிடிப்பதில்லை. வன்முறை, பொருள் பற்று ஆகியவற்றோடு வெறித்தனமாக நடந்து கொள்ளும் மனிதர்கள் குறித்த விரிவான சித்தரிப்பை ஒரு கலைப்படைப்பாகிய நாவலில் பின்னுக்குத் தள்ளிவிட வேண்டுமே ஒழிய இவற்றை முன்னணிக்குக் கொண்டு வருவதுகூட எனக்குப் பிடிப்பதில்லை. அதிகார பீடங்களில் அமர்ந்திருக்கும் கயவர்கள் குறித்த சித்தரிப்புகள் என் மனதை பெரிதும் துன்புறுத்துகின்றன. அன்றாட வாழ்க்கையில் அரசியல், வாணிபம் முதலிய களங்களில் இவர்களை சந்திக்க நேரும்போது மனத்தில் எழும் ஆத்திரத்திற்கு அளவில்லை. இந்தக் கயவர்களையும், கொடுமைகளையும் சமூகத்திலிருந்து துடைத்து ஒழித்திருக்க வேண்டிய நம் கட்சிகள் இவர்களோடு சமரசம் செய்து கொண்ட நிலை குறித்துதான் எனக்கு கூடுதலான வருத்தமும், கோபமும். இவர்களையெல்லாம் நாவல்களிலும் சிறுகதைகளிலும் சித்தரிப்பதன் மூலமாகத்தான் இவர்களை ஒழிக்கப் போகிறோமா? இத்தகைய சித்தரிப்புகளை வணிகமுறைக்கு பயன்படுத்திக் கொள்ளாத உங்களை நான் நோவதற்கில்லை.

இந்நிலையில் எனக்கு என்ன தோன்றுகிறது? இந்த கயவர்களின் அக மனத்தினுள் பயணம் செய்து இவர்கள் ஏன் இப்படி நரிகள் ஆகிவிட்டார்கள், புழுக்கள் ஆகிவிட்டார்கள் என்பது குறித்த ஆழமான ஆய்வில் ஒரு நாவலாசிரியன் ஈடுபட வேண்டும். அதாவது புறத்தில் கொடியவனைப் போலவும் ஆணவம் மிக்கவன் போலவும் தோன்றும் இவன்

மனிதப் பண்பில் எவ்வளவு சிறுத்து விட்டான்; வரலாற்று வழியே வந்த மனிதப் பேராற்றல்கள் என்பதிலிருந்து இவன் எவ்வளவு குறுகிவிட்டான். இவனுக்கு வானம் இல்லை. இயற்கையின் இன்பங்கள் இல்லை. நல்லுறவுகள், பரவசங்கள் இல்லை. இவன் இயற்கையிலிருந்தும் சமூகம், தனக்குள்ளும் கூட அந்நியப்பட்டவன். இவனுக்குள் அச்சம் குடிகொண்டுள்ளது. தனக்குள் உள்ள வெறுமைகளை மறைத்து இவன் வேடம் போடுகிறான். இத்தகைய ஒரு சித்தரிப்பின் உள்ளேதான் இவனை நாவலுக்குள் முழுமைப்படுத்த முடியும். இத்தகைய சித்தரிப்பு இவனுக்கே இவனை உணர்த்தக் கூடும். இத்தகைய சித்தரிப்பின் மூலம் கலையின் உயர்தரங்களும் கைகூடும்.

முற்போக்குவாதிகள் இப்படிச் செய்வதில்லை. இத்தகைய அற்புதமான கலையில் தேர்ந்தவர் கார்க்கி. நாமும் ஏன் இந்த நெறியில் செல்லக்கூடாது என்பது என் கேள்வி. "புதிய திரிபுரங்கள்" எழுதிய உங்களுக்கு இந்த நெறி சாத்தியம்தான். 'வாடாமல்லி' நாவலில் இந்நெறியில் நீங்கள் அடியெடுத்து வைத்ததாகத்தான் உணர்ந்தேன். "பாலைப்புறா"விலும் கூட இந்தப் போக்கின் சில கூறுகள் எனக்கு மகிழ்வைத் தந்தன. கடவுள் என்ற உணர்வு நாவலில் இடம் பெறுகிறது. இறுதியில் மனோகரை எஸ்தர் மட்டும் அல்லாமல் கலைவாணியும் நெருங்கிச் செல்லுகிறாள். இத்தகைய உணர்வின் குவிமையமாக டாக்டர் அசோக் திகழ்கிறான். இத்தகையவர்களுக்கு உரிய இயக்கத்தில் நாவல் சென்று இருக்க முடியும். தவசிப்பிள்ளைக்குள்ளும் கூட உங்கள் பார்வை ஆழமாக சென்று அவரது மறுபக்கத்தைச் சித்தரித்திருக்க முடியும். டாக்டர் சுமதியையும் இத்தகைய பார்வையில் அணுகியிருக்க முடியும்.

நம் சமூகத்தில் குடும்பத்திற்குள் மட்டுமல்லாமல் வேறுவகையுான நிறுவனங்களிலும் வன்முறை உள்ளுறைந்து கிடக்கிறது. நம் சமூகத்தின் அடித்தளம் / சமூக அமைப்பு இப்படி இயல்பாக வன்முறையைத் தொடர்ந்து உற்பத்தி செய்கிறது. மார்க்ஸ் கூறிய மறுஉற்பத்தி என்பதனுள் இதையும் உள்ளடக்கி நாம் பார்க்க முடியும். தனியுடைமைச் சமூகம் வன்முறை செலுத்தாமல் இயங்க முடியாது. பொருள் மற்றும் அதிகாரத்தைத் திரட்ட வன்முறை. குடும்பத்திற்குள்ளும் ஆணின் வன்முறை. சமூகத்தில் உயர்சாதியின் வன்முறை.

தனியுடைமைச் சமூகம் இப்படி வன்முறை மூலம்தான் தன்னை வளர்த்துக் கொள்கிறது. குடும்பத்திற்குள் ஆண் ஆதிக்கத்திற்கெதிராக பெண்ணும் தனக்கு இயன்ற வகையில் வன்முறையில் ஈடுபட நேர்கிறது. பெண்ணுக்குள்ளும் இப்படி உற்பத்தியாகும் குரூரம் என்பது இப்படி குடும்பத்திற்குள்ளும் வெளியிலும் செயல்படும் ஆதிக்கத்திற்கு எதிர்வினை.

வன்முறை குறித்த சித்தரிப்பு என்பது சமூகத்தின் அடித்தளத்தை கிள்ளி வெளிப்படுத்துவதாகவும் இருக்க முடியும். இதுவும்கூட ஒரு நாவலாசிரியருக்கு கிடைத்திருக்கிற வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும். நாவலில் ஒரு கதை பெறுகிற முக்கியத்துவம் என்பது இத்தகைய சித்தரிப்புக்களையும் உள்ளடக்கியதாக இருக்க முடியும். உங்கள் பார்வைக்குள் இந்த அம்சமும் வரக்கூடியதுதான்.

எய்ட்ஸ் குறித்து விழிப்புணர்வைத் தூண்டுவது உங்களின் முக்கிய திட்டம். எய்ட்ஸ் நோய் தாக்கிய மனிதர்களுக்கு, ஏற்கெனவே சில அடித்தளங்களோடு இருக்கிற நம் சமூகம் எத்தகைய எதிர்வினைகளைத் தருகிறதென்ற முறையில் இந்தக் கதை நாவலின் பல பரிமாணங்களில் விரிவு பெறுகிறது. நோய் தன்னைத் தாக்கியிருப்பது தெரிந்தே மனோகர் என்ற ஆண் நம் சமூக வழக்கப்படி ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள முடிகிறது.

நல்ல நெறியில் செயல்படும் எவரையும் மாதர் சங்கமோ பிற நிறுவனங்களோ ஏற்றுக்கொள்ளாமல் வெளியேற்றுவதுகூட நம் சமூக நடைமுறைக்கு ஒத்த செயல்பாடுதான். மகனிடமிருந்து கூட எல்லாவற்றையும் பறித்துக்கொள்ளும் ஒரு தந்தையின் போக்கையும் இப்படித்தான் புரிந்து கொள்கிறோம். எல்லாவற்றையும் தனது செல்வாக்கிற்கு உரியதாக மாற்றிக் கொள்ளும் சுமதியையும் பிளவுபட்ட நம் சமூகம்தான் உற்பத்தி செய்கிறது. போதைப்பொருள் விற்பனை யாளர்களுக்கு நம் சமூகம் தரும் வாய்ப்புகள் தொடர்ந்து அதிகரிக்கத்தான் செய்கின்றன.

இப்படி நம் சமூகம் பிளவுபட்டு வெறித்தனங்களை உற்பத்தி செய்வதாக இருந்தபோதிலும் இத்தகைய போக்கிற்கு எதிரான இயக்கமும் காலம்காலமாக எந்த சமூகத்தின் உள்ளும் தொடரத்தான் செய்கிறது. இதுதான் சமூகத்தின் உயிர் ஆற்றல். கலைவாணிக்குள்ளும் அசோக் மற்றும் எஸ்தருக்குள்ளும் ஏற்படும் இந்த ஆற்றல்தான் சமூகத்தை வாழவைக்கிறது.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்று வள்ளுவர் கூறுவது இந்த உண்மையைத் தான். ஒரு தாய்க்குள் இந்தப் பண்பாடுதான் குடும்பத்தை வாழவைக்கிறது. தந்தை ஒரு மிருகமாக இருக்கலாம். ஆனால் தாய் ஒரு தெய்வமாக இருக்கிறாள்.

ஆக, எய்ட்ஸ் என்ற ஒரு கருவியை பயன்படுத்தி நம் சமூகத்தின் பல்வேறு நிறுவனங்களையும் உடைத்து அல்லது கலைத்துப் பார்க்கிற ஒரு விரிந்த பார்வையின் வழியே நாவல் உருவாகி இருக்கிறது. நாவலாக்கம் இப்படி பல பரிமாணங்களில் விரிவு பெற்றிருக்கிறது.

நம் சமூகத்தில் தீண்டாமை எத்தனையோ வடிவங்களில் செயல்படுகிறது. மாதவிலக்கு என்பதுகூட ஒரு வகையில் தீண்டாமை. சிலவகை நோய்கள், தீண்டாமைக்கு காரணம். குஷ்டரோகி அடுத்தவரால் தீண்டப்படுவதில்லை. ஏழையைப் பணக்காரர் தொடுவதில்லை. இவ்வாறு தீண்டாமைக்கு உட்படும் மனிதர்களின் சோகம் கொடியது. வெறிநாய்க் கடியால் பாதிப்புக்குள்ளானவர்களின் இறுதி நாட்கள் குறித்து நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். எய்ட்ஸ் நோய் வந்தவர்கள் எப்படியெல்லாம் தீண்டாமைக்கும், கேவலத்திற்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதை உங்கள் நாவல் மூலம்தான் அறிகிறேன். எய்ட்ஸ் நோய்க்கு தனிநபரை காரணம் ஆக்க முடியாது. வாழ்க்கையில் இன்பம் முக்கியம். பெண்ணுறவு பேரின்பம், காமமில்லாமல் கடவுளுமில்லை. ஆண் துணையில்லாமல் பெண்ணிற்கு வாழ்க்கை இல்லை. இப்படியெல்லாம் உணர்வுகளும் கருத்துகளும் நிலவுகின்ற நம் சமூகமதான் எய்ட்ஸ் நோயின் பெருக்கத்திற்குக் காரணம் என்பதை மிகப்பெரிய அளவில் வணிகப் பொருளாக்கிவிட்டது தனியுடைமைச் சமூகம். இந்தச் சமூகம் மனிதர்களை துன்புறுத்துவதன் உச்சங்களை உங்கள் நாவல் துல்லியமாகச் சித்தரிக்கிறது. அந்தக் கடற்கரைக்காட்சி வாசகர் நெஞ்சத்தில் அதிர்ச்சி அலைகளை நிரப்புகிறது. எய்ட்ஸ் கூடவே கூடாது என்று ஒருவர் உண்மையிலேயே விரும்புவாரென்றால் அவருக்குள் எழவேண்டிய முக்கியமான குரல் – இந்த சமூகத்தை உடனடியாக மாற்று என்பதாகத்தான் இருக்க முடியும். உங்கள் நாவல் குறித்து எழும் விமர்சனங்கள் இத்தகைய உணர்வை வாசகர்களுக்கு எழுப்புவதாக இருக்க வேண்டும்.

சித்திரிப்பு குறித்து ஒரு வார்த்தை – இராவணனைப் போல் இந்த மனிதன், இவன் ஒரு நரி என நாவலாசிரியர் எழுதக்கூடாது. இப்படி எழுதினால் அந்த ஒரு வரியிலேயே கதை முடிவடைந்து விடுகிறது. இப்படிச் சொல்லுவது ஆசிரியரின் தீர்ப்பு. எந்த ஒரு மனிதனுள்ளும் இராமனும் இருப்பான், இராவணனும் இருப்பான். தனக்குள் அவன் போராடிக் கொண்டிருப்பான். இந்த இயக்கத்தை சிதைத்து விடுகிறது ஆசிரியரின் தீர்ப்பு.

இவன் எப்படி நரியானான் என நிகழ்ச்சிகள்மூலம் விளக்க வேண்டும். பாத்திர இயக்கத்திற்குள் ஆசிரியர் அமுங்கி இருக்க வேண்டும். பாத்திரங்களுக்கு எதிர்மறையாகவோ, உடன்பாடாகவோ விமர்சனம் வேண்டாம். இன்றைய சமூகச் சூழல் எல்லாரையும் பாதித்து இருக்கிறது. கயவர்கள் யார்? என்பது மக்களுக்கு தெரியும். இவன் எப்படி கயவனானான் என்று சித்தரிக்கும்போதே படிக்கும் வாசகனுக்குள்ளும் அறவழி தூண்டி அவன் வழி தவறிச் செல்வதைத் தடுக்கமுடியும். கலைப் படைப்பிற்கான தேவையும் இங்குதான் இருக்கிறது.

கே. டானியல் :
பஞ்சகோணங்கள்

1. கே. டானியலின் "பஞ்சகோணங்கள்" நாவலின் முன்னுரைகளில் அ. மார்க்சும், டேனியலும், இலங்கையில் மட்டுமல்லாமல் தமிழகத்திலும் சாதிச் சிக்கல் பற்றி விவாதிக்கிறார்கள். "பஞ்சமர்" நாவல் வரிசையில் பஞ்சகோணங்களும் சேர்கிறது. தாழ்த்தப்பட்டவர் எனப்படும் பள்ளர்கள் தன்னாகம் பகுதியில் உயர்சாதியினராகிய வேளாளர்களை எதிர்த்து உரிமைக்குரல் எழுப்புகிறார்கள். 68க்கு முன்னரும் 74 வரையிலான கால அளவிலும் சிங்கள ராணுவத்தின் தாக்குதல் அதிகரிக்கிறது. தமிழர் நிலங்களை சிங்களவர்கள் அபகரிக்கிறார்கள். தமிழ் இளைஞர்களுக்கு உயர் கல்வியும் அரசு வேலைவாய்ப்பும் மறுக்கப்படுகின்றன. தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றனர். தீண்டத்தகாதவர்களாக நடத்தப்படுகின்றனர். சிங்களவர்கள் தமிழர்களுக்குச் செய்யும் இந்தக் கொடுமைகளை வேளாளர் சாதியினர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நெடுங்காலமாகச் செய்து வருகின்றனர். சிங்கள ராணுவத்தினர்க்கெதிராக தமிழ் இளைஞர்கள் இப்போது ஆயுதம் எடுத்துப் போராடத் துவங்கி விட்டனர். போராடும் இளைஞர்கள் – தமிழர்கள் – தமக்குள் உள்ள வேற்றுமைகள் மறந்து ஒரு முனைப்பட்டு சிங்களவர்க்கெதிராக போராட வேண்டும் என கூறுகின்றனர்.

இந்தச் சூழலில் தாழ்த்தப்பட்ட மக்கள் திரண்டு தம் கோரிக்கைகளைக் கேட்கிறார்கள். நாங்களும் தமிழர்கள் என்றால் எங்கள் மீது உயர்சாதியினர் செய்யும் ஒடுக்குமுறைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். தோட்டங்களில் சிரட்டையில் தேத்தண்ணீரும் சட்டியில் சோறும் தருவதைக் கைவிட்டு உலோகப் பாத்திரங்களில் தரவேண்டும். கூலி உயர்வு தரவேண்டும். வேளாளரின் காணி நிலங்களில் வீடு கட்டிக் கொள்ள நிலம் தரவேண்டும். கோயில்களில் தங்களையும் அனுமதிக்க வேண்டும். தமிழர்கள் ஒன்று என்றால் சிங்களவர்களுக்கு எதிராக உயர்சாதியினர் கேட்கும் உரிமைகளை எங்களுக்கும் உயர்சாதியினர் தரவேண்டும். இதற்கு தமிழ் இளைஞர் இயக்கத்தினர் என்ன பதில் கூறுகிறார்கள்? தாங்கள் அமைக்கவிருக்கும் சோசலிசக் குடியரசில் இந்த உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படும். அது வரை ஒன்றுபட்டுப் போராட வேண்டும். இதற்கு தாழ்த்தப்பட்டவர்களின் பதில், இதுவரை இந்த உரிமைகள் தராத உயர்சாதியினர், தமது அரசு அதிகாரத்தில் இந்த உரிமைகளை எங்களுக்கு வழங்குவார்கள் என்பதை எப்படி நாங்கள் நம்பமுடியும்?

இந்தக் கேள்விகள் நாவலின் முன்னுரைகளில் விவாதிக்கப்படுகின்றன. வர்க்கச் சிக்கலும் சாதியச் சிக்கலும் எதிர்த் திசைகளில் இயங்குவது சொல்லப்படுகிறது. டேனியல் வர்க்கப் போராட்டத்தில் நம்பிக்கை உடையவர். தமிழர் தேசிய இன விடுதலையில் சாதியச் சிக்கலை எப்படி வர்க்கப் போராட்டத்தின் பகுதியாக்குவது என்ற முறையில் சிக்கலை விவாதிக்கிறார். சாதியச் சிக்கலுக்கு அழுத்தம் தருகிறார். இந்தச் சிக்கல் பற்றி நாம் இறுதியில் விவாதிக்கலாம். முதலில் பஞ்சகோணங்கள் எப்படி நாவலாக அமைந்திருக்கிறது என்பதை நாம் விவாதிக்க வேண்டும். யதார்த்த முறையிலான நாவல் என்பதால், சமூகச் சிக்கல்கள் நாவலில் முக்கியமான அங்கமாகியிருக்கிறது. முக்கிய அங்கம் என்பதால் இந்தச் சிக்கல் மட்டுமே நம் பார்வையை அடைத்துக் கொள்ள வேண்டியதில்லை. அன்றியும் நாவல் வடிவில் இந்தச் சிக்கலைப் போதுமான அளவுகூட விவாதிப்பதும் சாத்தியமில்லை. இந்தச் சிக்கல் நாவலின் கட்டமைப்பில், பாத்திர ஆக்கத்தில் எத்தகைய பங்கு வகிக்கிறது என்றெல்லாம் விவாதிப்பதற்கு இடமிருக்கிறது. நாவல் என்ற அழகியலை நாம் இழந்துவிடக் கூடாது. ஆகவே இப்பொழுது நாவல் பற்றி விவாதிக்கலாம்.

2. நாவலில் இளைய தம்பியர், ராசரத்தினத்தார், மருதப்பர் ஆகிய மூவரும் நிலபுலன்கள் உடையவர்கள். மருதப்பர் பரம்பரைப் பணக்காரர். ராசரத்தினத்தார் கந்தசாமி கோவில் நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர். இவர்கள் இருவரும் உயர்சாதி வேளாளர். இவர்களின் வரிசையில் இளைய தம்பியர் சேர்ந்திருக்கிறார். இவர் தோட்டமும், கல்லுடைக்கும் கிரசர் இயந்திரமும் வைத்திருக்கிறார். இவர் நயினாரைப் போல ஆதிக்கம் செய்ய முயற்சி செய்கிறார். ஆனால் இவர் கோவிய சாதியிலிருந்து வந்தவர். புதுப்பணக்காரர். அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பவர் என்று பரம்பரைப் பணக்காரரால் இவர் விமர்சனம் செய்யப்படுகிறார். நாவலில் முன்நிற்பவர் ஆதிக்கத்தார் வரிசையில் இளைய தம்பியர்தான்.

ஊரில் பள்ளர்கள் தம் குடியிருப்புகளில் வாழ்கிறார்கள். உயர் சாதியினரின் தோட்டங்களிலும் வீடுகளிலும் இவர்கள் வேலை பார்க்கின்றனர். தமிழர் நிலப்பகுதிகளில் ஏற்கனவே இவர்கள் மத்தியில் உரிமைக்குரல்கள் எழுந்திருக்கின்றன. சில வெற்றிகளையும் இவர்கள் ஈட்டியிருக்கிறார்கள். நாவலில் வரும் இந்தப் பள்ளர் குடியிருப்பிலும் உரிமைக்குரல் எழுகிறது. இளைய தம்பியர் தோட்டத்தில் வேலை செய்யும் பள்ளிகள், முதற்குரல் எழுப்புகிறார்கள். சிரட்டையில் காப்பி குடிக்க மாட்டோம். சட்டியில் சோறு உண்ணமாட்டோம். இப்படிச் சொல்லிவிட்டு

தம் குடியிருப்புக்குப் போய்விடுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் சுப்பையா வாத்தியார் இடையில் வருகிறார். அலுமினிய பாத்திரங்களில் தேத்தண்ணீரும் உணவும் தருவது என்று முடிவாகிறது. இந்த முடிவை வேளாளர் சாதி முழுமையாக ஏற்க மறுக்கிறது. காணிகளில் எப்படியோ நடக்கட்டும். வீடுகளில் நயினாத்திகள் இதைச் செயல்படுத்த மறுக்கிறார்கள். நாவல் இந்தப் பிரச்னையின் தீவிரத்தோடுதான் தொடங்குகிறது. அடுத்த கட்டத்தில் தோட்டங்களிலும் கிரசர் வேலையிலும் கூலி உயர்வு கேட்கிறார்கள். ராசரெத்தினத்தாரிடம் கோயில் நுழைவுக்கு அனுமதி கேட்கிறார்கள். இந்தக் கட்டத்தில்தான் சிங்கள ராணுவம் ஊருக்குள் நுழைகிறது. பிரச்சனைகள் இப்பொழுது பன்முகப்படுகின்றன. எனினும் இறுதிவரை தாழ்த்தப்பட்டவரின் உரிமை முழக்கம் தொடர்ந்து கேட்கிறது. கிருட்டிணர் வழிகாட்டலில் இளைஞர்கள் திரண்டிருக்கிறார்கள். இவர்களோடு வாத்தியார் இணைந்திருக்கிறார். போராட்டம் இனி தீவிரப்படும். ராணுவத்தின் தலையீடு இந்தப் பிரச்சனையில் இனி சிதறலை ஏற்படுத்தலாம். இந்தக் கட்டத்தில் நாவல் முடிவடைகிறது. நாவல் முழுவதும் தாழ்த்தப்பட்டவரின் உரிமைக்கான நியாயங்கள் முதன்மை பெறுகின்றன. இவர்களுக்கெதிராக இருக்கும் ஆதிக்கத்தார் உள்ளும் புறமும் சிதைந்து வருகிறார்கள். ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள அடியாட்கள் துணையோடு சில செயல்களை மேற்கொள்கிறார்கள். தமிழ் இளைஞர்களின் பின்னால் இருப்பதன்மூலம் தம் ஆதிக்கத்தைக் காத்துக் கொள்ளவும் முயற்சி செய்கிறார்கள். உயர் சாதியினர் வீடுகளில் வெளியில் வீரத்தோடு முழங்கும் ஆடவர்கள் தம் மனைவிமார்களுக்கு அஞ்சி ஒடுங்கிக் கிடக்கிறார்கள். இளைய தம்பியரோடு ஒத்துழைக்க விரும்பிய ராசரெத்தினர் அவரை விட்டு விலகிக் கொள்கிறார். மருதப்பரும் விலகிக் கொண்டார். மருதப்பரிடம் முன்னொரு காலத்தில் வேலை பார்த்தவர் இளைய தம்பி. இளைய தம்பியின் திமிரை அடக்கவேண்டுமென்று பேசிய மருதப்பர் ஒரு கட்டத்தில் தானே அடங்கி விடுகிறார். இளைய தம்பியர் சுருளியன் என்ற தன் அடியாள் மூலம், ஒரு சமயம் வேலையாள் கறுப்பையனைக் கொன்று புதைத்தார். வாத்தியாரை அடித்து நொறுக்கி சந்தைக் கடையில் எறிந்தார். காவல் துறையின் உதவியோடு, வழக்கில்லாமல் தப்பிக் கொண்டார். அடுத்த கட்டத்தில் இவர் என்ன செய்வார் என்பது தெரியவில்லை. ராசரெத்தினத்தார், தாழ்த்தப்பட்டவர்களுக்கு கோவிலைத் திறந்துவிட மறுத்து விடலாம். மழுவராயர் குடியிருப்பில் தீப்பற்றி எரிகிறது. சில இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். வாத்தியாரை இராணுவம் பிடித்துக் கொண்டு சென்றது. கிருட்டிணர் தலைமையில் இளைஞர்கள் உறுதியாக இருக்கிறார்கள். இப்படி நாவல் முடிவடைகிறது.

நாவலில் இவ்வாறு எதிர்நிலைகள் இருவகைப்படுத்தப்பட்டிருக்கிறது. எதிர் நிலைகளுக்கிடையிலான உறவும் பகையும் அழுத்தமாகச் சொல்லப்படுகின்றன. கறுப்பையனைக் கொன்று இளைய தம்பியார் தன் தோட்டத்தில் புதைத்து விடுகிறார். கறுப்பையனின் தந்தை வேலுசாமி வந்தபொழுது நிலைமையைத் திறமையாகச் சமாளிக்கிறார். வாத்தியார் எவ்வளவு முயன்றும் இந்த ரகசியச் சூழலுக்குள் உடைப்பை ஏற்படுத்த முடியவில்லை. இதிலிருந்து வாத்தியார் பத்திரமாக வெளியேறுவதைத் தவிர வேறு வழியேயில்லை. கறுப்பையனை இளைய தம்பியார் ஏன் கொன்றார்? இளைய தம்பியார் பூதி என்ற பள்ளியை தனக்கு வைப்பாக வைத்துக் கொண்டிருக்கிறார். மனைவி விசாலாட்சிக்கு இது கடுமையான அருவெறுப்பைத் தருகிறது. ஊருக்குள் இந்தச் செய்தி பரவுகிறது. இளைய தம்பியார் மீது பூதியின் செல்வாக்கு அதிகம்தான். பள்ளிகளுக்கு உலோகப் பாத்திரங்களை பூதியின் வற்புறுத்தலால்தான் இளைய தம்பியார் தந்தார். ஊர் இப்படித்தான் வளைத்துப் பேசுகிறது. விசாலாட்சி தன் கணவனை கடுமையாக இகழ்ந்து பேசுகிறாள். தொடப்பத்தால் அவரை அடிக்கிறாள். தன் தாலியைப் பிடுங்கி கணவன் முகத்தில் எறிகிறாள். நள்ளிரவில் இந்த நிகழ்ச்சி நடந்தது. கிரசர் கொட்டிலில் படுத்திருந்த கறுப்பையன் மூலம்தான் இந்தச் செய்தி ஊருக்குள் பரவியிருக்க வேண்டும். ஊருக்குள் தனக்கு பெருத்த அவமானம். இந்த ஆத்திரத்தில் கறுப்பையனைக் கொன்று புதைக்கிறார்.

கறுப்பையன் கொலையை மையப்படுத்துகிற நாவலின் இந்தப் பகுதி மிகச்சிறப்பாக நாவலில் வந்திருக்கிறது. நாவலின் பாதிப்பகுதி இந்த நிகழ்ச்சியைக் கோர்வையாகச் சொல்லுகிறது.

நாவலில் முதன்மைப் பாத்திரங்கள் என்று வரிசைப்படுத்தினால் வாத்தியாரும் பூதியும்தான் முதல் வரிசைக்கு வருகிறார்கள். இவர்களை அடுத்து செல்லியைச் சொல்லவேண்டும். கிருட்டிணர் தொலைவில் மட்டும் தெரிகிற சிறந்த மனிதர். அவர் வழியாக நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுவதில்லை. அவர் செம்மாப்புடைய மனிதர். பெருமிதமானவர். நிகழ்ச்சிகளை முன்னும் பின்னும் கோவைப்படுத்தி தன் பார்வையைச் சிறப்பாக வெளிப்படுத்துகிறவர். நீண்டகாலப் போராட்ட அனுபவமுடையவர். இளைஞர்களால் வழிபாட்டு உணர்வோடு மதிக்கப் பெறுபவர்.

தனக்கு உள்ளும் புறமும் சில / பல சிக்கல்களை எதிர்கொண்டு, சிக்கல்களின் பாதிப்புக்குள்ளாகி அவற்றின் வழியே தனக்கென தீர்வு என ஏற்படுத்திக் கொண்டு அல்லது சரியான தீர்வை செயல்படுத்துவதன் மூலம்

தன்னைச் சிதைத்துக் கொள்கிற, அல்லது தானே சிதைந்து விடுகிற மனிதர்களைத்தான் நாவலில் பாத்திரங்கள் என நாம் வரையறுக்க முடியும். கிருட்டிணர் நம் முன் தெரிகிறபோது முழுமையான மனிதர். தனக்குள் சிக்கல் தீர்ந்தவர். ஆனால் வாத்தியார், பூதி, செல்லி ஆகியவர்கள் தமக்குள்ளும் புறத்திலும் தங்களைப் பாதிக்கிற சிக்கல்களிலிருந்து அறிவுத் தெளிவோடு, பண்பாட்டு உணர்வோடு மேலேறி வருகிறார்கள். நாவலில் இவர்கள் நம்மை இதனால்தான் கவர்கிறார்கள். வாத்தியார் தம் நாற்பத்தைந்தாம் வயதிலேயே உடல்நலக் குறைவு காரணமாக ஒய்வு பெற்றவர். வாத்தியார் உயர்சாதிக்காரர்தான். இளைய தம்பியரோடு பேசி ஊருக்குள் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பினார். தொடக்கத்தில் அவர் வெற்றி பெறுகிறார். வெற்றி தொடரவில்லை. தாழ்த்தப்பட்டவர் சார்பில் நியாயம் கண்டு அவர்களோடு படிப்படியாக இணைந்து கொள்கிறார். ஒரு கட்டத்தில் செல்லியின்பால் இவர் மனம் செல்கிறது. தனக்குள் போராடுகிறார். செல்லி தன் கணவனின் சந்தேகத்திற்குள்ளாகி அவனை விட்டு ஊருக்கு வந்தவள். ஊரில் தோட்ட வேலைகளுக்குச் செல்லும் பள்ளிகளுக்கு பூதிதான் தலைவி. பூதிக்கு அடுத்தபடி அவ்வப்பொழுது நியாயங்களை வெடிப்புறக் கேட்பவள் செல்லிதான். இவளிடம் அச்சம் இல்லை. தாழ்வுணர்ச்சி இல்லை. இவள் குணம் கண்டு வாத்தியார் மனம் இவளிடம் செல்கிறது. இதற்கு இன்னொரு ஆழ்ந்த காரணமும் இருக்கிறது. உருப்பிராய் சைவப் பள்ளியில் இவர் வேலை பார்த்த பள்ளியில் உடன்பணிபுரிந்த இன்னொரு ஆசிரியை. அவளுக்கு நாவலில் பெயர் இல்லை. அவள் மோகினி. காதல் என்றால் அங்கும் இங்கும் காதலியை அழைத்துச் செல்ல வேண்டும். தேவைப்படுகிறபொழுது உடல் உறவில் ஈடுபட வேண்டும். வாத்தியாருக்குள் அச்சம். மோகினி வாத்தியாரை உதறிவிடுவதற்கு இது காரணமாக இருக்கக் கூடும். ஒருசமயம் ஒரு டாக்டர் இவளைப் பெண்பார்க்க வருகிறார். வாத்தியாரோடு மோகினிக்கு ஒரு உரையாடல். வாத்தியார் சாதியில் முன்பொரு சமயம் அவர் சாதிப் பெண்ணைப் பள்ளன் ஒருவன் கொண்டு போய்விட்டான். இதை மோகினி வாத்தியாருக்குள் உறுத்துகிற மாதிரி நினைவுபடுத்துகிறாள். இந்த நினைவுபடுத்தலின் அர்த்தத்தைச் சரியாகவே வாத்தியார் புரிந்துகொண்டார். மோகினி டாக்டரைத்தான் மணம் செய்து கொண்டாள். அதற்குப்பின் வாத்தியார் மனம் தடுமாறவில்லை. காதல் தோல்வி காரணமாக மனம் உடைந்து விடுவாரென்று கருதியவர்கள் ஆச்சரியப்படுகிற மாதிரி இவர் இருந்தார். இவர் மனத்தில் குழப்பம் இல்லை. போராட்டக் காலங்களில் செல்லியை இவர் பார்க்கிறார். திருமணம் வேண்டாம் என்று இருந்தவர்க்குள் செல்லி நுழைந்து விடுகிறாள். தனக்கு ஒத்தவள் செல்லிதான் என்று முடிவு செய்கிறார்.

பள்ளியோடுதான் தனக்கு வாழ்வு. மோகினியோடு சேர்ந்து வாழ்வின் உயர்தளங்களுக்குள் அவரால் செல்ல முடியாது. தரையில் நடைபெறும் வாழ்வில்தான் அவர் இயங்க முடியும். பள்ளிதான் தனக்கு உற்ற துணை. இப்படித்தான் அவர் கருதியிருக்க முடியும். டேனியல் அற்புதமாகத்தான் இந்தக் கதையைச் சொல்லுகிறார். கதைக் கலையில் இது ஒரு சாதனை.

வாத்தியாரைப் பற்றி இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டும். தங்கை சீதையின் வீட்டோடு அவர் தங்கியிருக்கிறார். சீதைக்கு தன் அண்ணன் ஒரு மனித தெய்வம். மச்சான் கந்தையர் வாய் பேசமாட்டார். வாத்தியாரை ஒரு கொசு கூட தீண்டக்கூடாது. அப்படி வாத்தியாருக்கு காவலாக நிற்பவர் கந்தையர். அவர் மகன் விவேகானந்தன். தமிழ் இளைஞர்களின் இயக்கத்தில் தொடர்பு கொண்டவன். அவன் தன் மாமனைச் சந்தேகிக்கிறான். வீட்டை விட்டுப் போகச் சொல்கிறான். கந்தையர் அவனை நொறுங்கப் புடைக்கிறார். நாவலின் இறுதியில் சிங்கள இராணுவத்தார் இந்த வீட்டில் சோதனை நடத்தி ஒரு சாக்கில் கட்டியிருந்த ஆயுதங்களை எடுக்கிறார்கள். விவேகானந்தன் இளைஞன். அவனை இராணுவம் பிடித்துச் செல்வதா? அப்பாவும் அம்மாவும் எவ்வளவு துன்புறுவர்? வாத்தியார் முன்வருகிறார். இராணுவம் அவரை அடித்து உதைத்து இழுத்துச் செல்கிறது. அவர் உயிரோடு திரும்புவாரா? தெரியவில்லை. திரும்பவும் செய்யலாம்.

இந்தக் காட்சி நாவலில் ஒரு அற்புதம். சீதை, கந்தையர், விவேகானந்தன் ஆகியவர் உணர்வுகள் பற்றி ஆசிரியர் ஒரு சொல் கூடச் சொல்லவில்லை. இப்படி சொல்ல நமக்குத் தேவைப்படவில்லை. இந்தச் சூழலுக்குள் நாம் இருக்கிறோம். ஒவ்வொருவர் உணர்வையும் புரிந்து கொள்கிறோம். வாத்தியாருக்கு மறுநாள் செல்லியோடு திருமணம். இப்பொழுது ராணுவத்தார் அவரை இழுத்துச் செல்கின்றனர். சீதைக்கு இவர் மனித தெய்வம். தன்னைப் பொறுத்தவரை இவர் மனிதர். தன் தங்கைக்கு இவர் இப்படித்தான் ஒரு அண்ணனாகச் செயல்படமுடியும். கந்தையர் இவர்க்குத் தோழன். தன்னை வழிபடும் தோழன். கந்தையரின் அன்புக்கு தகுதியுடையவராக வாத்தியார் செயல்படமுடியும். தன்னை வெறுத்தவன் விவேகானந்தன். அவன் இளைஞன். அவன் உயிரோடிருந்தால் ஏதாவது செய்வான். தமிழர்களின் போராட்டத்தில் அவன் ஏதாவது செய்வான். அவன் தேர்ந்து கொண்ட நெறியில் அவன் செல்லவேண்டும். அவனை இப்பொழுது காப்பாற்றி வைக்க வேண்டும். வாத்தியாரின் செயலை தாழ்த்தப்பட்டவர் சமூகம் குறை சொல்லுமா? சொல்லாது. வாத்தியாரை இந்தச் சமூகத்திற்குத் தெரியும். வாத்தியாரின்

செயலை அந்தச் சமூகம் புரிந்து கொள்ளும். இத்தகைய மனிதரை நிகழ்கால வாழ்வில் நாம் காண்கிறோம். யதார்த்தக்கதை இவரைப் பற்றிச் சொல்கிறது. காவியங்களில் இவரைக் காண்கிறோம். இப்படி ஒரு அற்புத மனிதரை டேனியல் படைத்திருக்கிறார்.

இனி பூதியைப் பற்றிச் சொல்லலாம். எப்படியோ இளைய தம்பியருக்கு இவள் வைப்பாகச் சேர்ந்திருந்தாள். பண்ணை வேலைகளில் பள்ளிகளை இவள்தான் நெறிப்படுத்துகிறவள். இவளுக்குக் கணவன் இல்லை. சனிக்கிழமைகளில் கிரசர் கொட்டிலில் இளைய தம்பி இவளை ஆண்டு அனுபவிக்கிறார். இளைய தம்பி தன் கோபத்தை – ஆத்திரத்தை சிலசமயம் பூதியின் மீது முழுமையாகச் செலுத்துகிறார். அவளை அடித்து நொறுக்கி அழவைத்து பின் அனுபவிக்கிறவர். இப்படி அவர்க்கு ஒரு குரூரமான குணம். இதற்கு முந்திய வாழ்வில் அவர் பட்ட அடிகள் அவரை இவ்வாறு வார்த்திருக்கலாம். ஒரு கட்டத்தில் பூதி இவரை விட்டு விலகிவிடுகிறாள். இளைய தம்பி எவ்வளவோ சொல்லியும் பூதி செல்லவில்லை. தனக்குரிய இடம் எதுவென்று அவள் தேர்ந்து கொண்டாள். தன் சாதியினரோடுதான் தனக்கு வாழ்க்கை. இளைய தம்பிக்கு இவள் முந்தானை விரித்தவள். ஊர் இவளை இப்படி தாக்கிய பொழுதெல்லாம் பூதி இந்த உண்மையை மறைக்கிறாளா? இல்லவே இல்லை. இளைய தம்பியருக்குத்தான் முந்தானை விரித்தேன். இன்னொருவனுக்கு விரிக்கமாட்டேன். இப்படி பூதி தன் கற்பை நிரூபிக்கிறாள். வாத்தியாருக்கும் பூதிக்கும் தொடர்பு என்று இளையதம்பி கட்டிய கதையை இவள் தூசாக நினைக்கிறாள். போராடும் பள்ளிகளுக்கும் இளைஞர்களுக்கும் இவள் ஒரு வகையில் தாய். செல்லி தனக்குள் வாத்தியாரை விரும்புகிறாள். இதை அறிந்தவுடன் பூதி தனக்குள் திகைக்கிறாள். அப்புறம் ஏற்றுக் கொள்கிறாள். இப்பொழுது செல்லிக்கும் இவள் தாய். இப்படி இயங்குகிறது பூதி என்ற பாத்திரம்.

செல்லியின் கதையை ஓரளவு சொல்லிவிட்டோம். கணவனைப் பிரிந்து ஏழாண்டுக் காலம் வாழ்ந்து விட்டாள். கணவன் சாவுக்கு பூதி சொல்லியம் செல்லி செல்லவில்லை. மறுத்து விடுகிறாள். ஒருசமயம் வாத்தியாரைப் பூதி பாராட்டிப் பேசியபோது இவரை அசைக்கிறேனா, இல்லையா என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள் தான் செல்லி. அப்புறம் செல்லி தனக்குள்ளேயே கரைந்து நீராகி விடுகிறாள். வாத்தியாருக்காகத் தவிக்கிறாள். கடைசியில் வாத்தியார் இவளைத் திருமணம் செய்து கொள்ள முடிவெடுக்கிறார். மறுநாள் திருமணம். இரவெல்லாம் செல்லி தனக்குள் கலங்குகிறாள். எங்கெங்கோ நடந்த

சம்பவங்கள் இவள் நினைவுக்கு வருகின்றன. வேளாளனும் பள்ளியும் திருமணம் செய்து கொண்டால் என்ன நடக்கும்? என்ன நடந்தது? கொலை விழும். வீடுகள் பற்றி எரியும். உயிர் வாழ முடியாது. செல்லி முடிவு செய்கிறாள். எனக்குத் திருமணம் வேண்டாம். வாத்தியாருக்கு நான் வைப்பாக இருந்து கொள்கிறேன். செல்லியின் தியாக உணர்வை சொல்ல வார்த்தைகள் இல்லை. வைப்பாக இருப்பதன்மூலம்தான் வாத்தியாருக்கு தான் உதவி செய்ய முடியும். துணையாக முடியும். வாத்தியார் உயிரோடிருக்க முடியும். இப்படி செய்வதன் மூலம் செல்லி தன்னை இழக்கிறாளா? அவமதிப்புக் கொள்கிறாளா? செல்லி என்னவாகிறாள்? பூதியையும் செல்லியையும் நாம் எங்கே காணமுடியும்? காவியங்களில் காணலாம். இவர்களுக்குள் நிறைந்திருக்கிற பண்பாட்டுச் செழுமையை இவர்கள் எங்கே இருந்து பெற்றார்கள்? உழைப்பிலிருந்து பெற்றார்கள் என்று சொல்வது ஒரு காரணம். வரலாற்றிலிருந்து பெற்றார்கள் என்பதும் இன்னொரு காரணம். இவர்கள், இப்பொழுது கேட்கலாம். இவர்கள் என்ன சாதி? இவர்கள் மனித சாதி. உழைப்பாளி மக்கள் மத்தியில்தான் இத்தகைய மனிதர் உருவாக முடியும். இவர்களிடம் வெளிப்படும் பண்பாடு உயர்சாதிப் பண்பாடா? இல்லை. உயர்வாகச் சொல்லும் பண்பாடு. உயர்வு தாழ்வு என்று இங்கு எதிர்நிலைப்படுத்துகிறோமா, இல்லையா? இப்படித் தான் வரலாற்றில் மனிதன் உயர்ந்து நிற்கிறான். உயரமாக நிற்கிறான். தன்னை உரமாக்கி தன் சூழலை உயர்த்துகிறான். இதன் மூலம் சமூகத்திற்கு அறத்தைப் படைத்திருக்கிறான். இந்த அறம் ஒரு ஒளிவிளக்கு. இதன் ஒளியில் சமூகம், தான் செல்லும் வழியறிந்து செல்லும். டேனியல் அவர்களை இதற்காக நாம் பாராட்டுகிறோம். மனிதர்களுக்குள் அற்புதம் கண்டவர் - படைத்தவர் டேனியல். மார்க்கண்டன் என்று இன்னொரு பாத்திரம். வாத்தியாரைப் போல நாவலின் மையத்தில் இல்லை. எனினும் இரண்டொரு முறை மையத்தைக் கடந்து செல்கிறான். செல்லக் கண்டன் காணியில் பனை ஏறுகிறவன். பரம்பரைத் தொழில். ராசரெத்தினம் மகன் சந்திரனோடு இவன் நெருக்கமாக இருக்கிறான். கண்டி பல்கலைக் கழகத்தில் படிப்பைத் தொடர முடியாமல் தன் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தவர்களில் சந்திரனும் ஒருவன். தமிழர்கள் போராட்ட இயக்கத்தில் சந்திரன் சேர்ந்திருக்கிறான். மார்க்கண்டனும் சந்திரன் மூலம் இயக்கத்தாரோடு உறவு கொள்பவன். இதற்காக இவன் தாழ்த்தப்பட்டவர்களின் குறை கூறலுக்கும் ஆளாகிறான். ஒரு சமயம் செல்லக் கண்டர் வீட்டுக் கிணற்றில் அவர் மகள் விழுந்துவிட்டாள். ஏன் விழுந்தாள் என்பது சொல்லப்படவில்லை. மார்க்கண்டன் கிணற்றில் குதித்து அவளை வெளியே எடுத்து வருகிறான். இதைக் கேட்டவுடன் பூதிக்கு பெரும் சிரிப்பு: இனி கிணற்று நீர

முழுவதையும் இறைத்து வெளியில் கொட்ட வேண்டும். தாழ்த்தப்பட்டவரால் கிணற்று நீர் தீட்டுப்பட்டுவிட்டது. கிணற்று நீரை வெளியேற்றலாம். இவன் தொட்டுத் தூக்கிவந்த பெண்ணை என்ன செய்வது? இன்னொரு முறை வாத்தியார் அடிபட்டு சாவை எதிர்நோக்கிக் கிடந்தார். மார்க்கண்டன் மீது சிலர்க்கு சந்தேகம். இதைத் தெரிந்தபோது மார்க்கண்டன் துடிக்கிறான். அவரை நான் தெய்வமாக நினைக்கிறேன் என்றான். வாத்தியாருக்கு ரத்தம் தேவைப்பட்டபோது, நான்தான் தருவேன் என்று முந்திச் செல்கிறான். நாவலின் இறுதியில் தமிழ் இயக்கத் தலைவரைச் சந்திக்க சந்திரனோடு சைக்கிளில் செல்கிறான். இளைஞர்கள் உறுதி மேற்கொள்வதற்காக நடக்கிற கூட்டம். சிங்களவர்களிடம் தமிழர்கள் இப்பொழுது கேட்கும் உரிமைகளை தமிழர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தருவார்களா என்று கேள்வி எழுப்பினான். சில நாட்களுக்குப் பிறகு இவன் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடக்கிறான். சந்திரனும் கொல்லப்பட்டான். யார் கொன்றார்கள் என்று கதையில் வெளிப்படையாக இல்லை. மறைத்துச் சொல்வதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. வாசகன் அர்த்தம் தேடவேண்டும். சிங்களப் படை இவர்களைக் கொன்றிருக்குமா? இருக்கலாம். ஆனால் சூழலை வைத்துப் பார்க்கும்பொழுது தமிழ் இளைஞர் படை தான் மார்க்கண்டனைக் கொன்றிருக்க வேண்டும். இவனை அழைத்து வந்த சந்திரனையும் இந்தக் காரணத்திற்காகக் கொன்றிருக்க வேண்டும். ஒரு வகையில் இது எச்சரிக்கைப் போராட்டத்தை இருமுனைப்படுத்த வேண்டாம். இருமுனைப்படுத்துகிறவர்களோடு ஒத்துழைக்க வேண்டாம். இப்படி அர்த்தப்படுத்துவதற்கு சூழல் இடம் தருகிறது. மார்க்கண்டன் சரியான நேரத்தில் கேள்வி கேட்டான். கேட்டதற்கு உரிய பலனை அனுபவித்தான். இதுபற்றி பிறகு பேசலாம். வாத்தியார், பூதி, செல்லி ஆகியவர்களின் வரிசையில் மார்க்கண்டனையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம். இவனும் உண்மை தேடுகிறவன். வாத்தியார், உண்மைத் தேட்டத்தில் ஒரு இடத்தில் நிற்கிறார். தேடலின் அடுத்த இடத்தில் மார்க்கண்டன் நிற்கிறான். உரிமைகளுக்காக உயிர் கொடுக்கும் மனிதச் சின்னம் மார்க்கண்டன்.

இவர்களைப் பற்றி விவாதிக்கும்பொழுது நம் சூழலில் – நம் தமிழகச் சூழலில் எழும் ஒரு கேள்வி: தலித் பண்பாடு என்றும், எதிர்க் கலாச்சாரம் என்றும் பேசுகிறவர்கள், இம்மாதிரிப் பாத்திரங்களை ஒப்புக் கொள்வார்களா? வாத்தியார் என்ன இருந்தாலும் உயர்சாதிக்காரர் என்றல்லவா பேசுவார்கள்? கற்புக்கும் பண்பாட்டுக்கும் என்ன மரியாதை இருக்கிறது என்றல்லவா கேட்பார்கள்! கற்பு என்பதும் பண்பாடு என்பதும் உயர்சாதி – சைவ வேளாளர்கள் சொல்லி வைக்கும் பண்புகள் அல்லவா?

செல்வி உயர்சாதிக்காரனை எப்படி காதலிக்கலாம்? மார்க்கண்டன் எப்படி சந்திரனோடு சேரலாம்? சந்திரனோடு சேர்ந்தால் இப்படித்தான் கொல்லப்படுவான். டேனியலுக்குள்ளும் எப்படி இந்தப் பண்பாடு ஆதிக்கம் பெறுகிறது? ஆளும் வர்க்கப் பண்பாட்டுக்கு இவர் எப்படி வசப்பட்டார்? இப்படியெல்லாம் இவர்கள் கேட்கலாம். கேட்க வேண்டும். பதில் சொல்வது நம் பொறுப்பல்ல. அவர்கள்தான் தமக்கான பதிலைத் தேடிக் கண்டடைய வேண்டும். பூதி எவ்வளவு கம்பீரமானவள்? ஊரறிய ஒப்புக்கொண்டு பேசுகிறாள். வாத்தியார் இன்னொருவர்க்காக சாகிறார். சரியான நேரத்தில் கேள்வி கேட்டு மார்க்கண்டன் சாகிறான். செல்வி தன்னை வாத்தியாருக்கு வைப்பாக்கிக் கொள்ள முடிவு செய்கிறாள். தங்களை இப்படியெல்லாம் இவர்கள் தாழ்த்திக் கொள்கிறார்களா! இல்லை, இவர்கள் தம்மை தாழ்த்திக் கொள்ளவில்லை; உயர்த்திக் கொள்கிறார்கள். இப்படிச் சொல்வதுகூட, உயர்சாதிப் பண்பாடுதானா!

நாவலில் இடம்பெறும் பிற பாத்திரங்கள் அல்லது மனிதர்கள் பற்றிச் சுருக்கமாகச் சொல்லலாம். வாத்தியார் போன்ற பாத்திர வரிசையில் வருபவர் கந்தையர். எனினும் இவர்க்குள் அகச்சிக்கல் என்பது அறவே இலலை. தொடக்கத்திலிருந்து இறுதிவரை தனக்குள் நிறைவான பாத்திரம். இவர் மனைவி சீதை. வழக்கம்போல உயர்சாதிக் குடும்பப்பெண். அண்ணனை நேசிக்கும் அதே அளவுக்கு அண்ணனிடம் உறவு கொண்டிருப்பதற்காக பூதியைக் கடும் சொற்களால் திட்டுகிறாள். ஒரு பள்ளியை அண்ணன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது, இதனால் தங்கள் குடும்ப வாழ்வு சிதையும் என்று அஞ்சுகிறாள். நாவலில் நிறைய இளைஞர்கள் வருகிறார்கள். உயர்சாதியில் சந்திரன் போன்றவர். தாழ்த்தப்பட்டவர்களில் முருகையன் முதலியவர்கள். இவர்கள் அனைவரும் தமக்கான குறிக்கோளில் மனம் வைத்து குறிப்பிட்ட இலக்கு நோக்கிச் செல்லும் அம்புபோல உற்சாகத்தோடு செயல்படுகிறார்கள். இவர்களுக்குள்ளும் அகப்போராட்டம் இல்லை.

உயர்சாதிக் குடும்பங்களில் ராசரத்தினத்தார் குடும்பம், மருதப்பர் குடும்பம் பற்றி நாவல் சொல்லுகிறது. இவர்களும் ஒற்றை வார்ப்பு மனிதர்கள். இளைய தம்பியர் உயர் சாதித் தகுதிக்காக தொடர்ந்து முயற்சி செய்கிறவர். இவர் முயற்சிகள் கை கூடவில்லை. ராசரத்தினத்தார் போன்றவர் இவரது வளர்ச்சிக்கு உதவியாக இல்லை. நாவலில் இளைய தம்பியர் பற்றி ஆசிரியர்க்கே கூட அனுதாபம் இல்லை. தாழ்ந்த சாதியிலிருந்து ஒருவர் முனைந்து முற்பட்டு உயர்வதற்கான முயற்சிகளை உயர்சாதியினர் ஏற்கமாட்டார்கள். முறியடிக்கத்தான் செய்வார்கள்.

தாழ்நிலையிலிருந்து தனக்குள் எத்தனையோ அனுபவக் கீறல்கள் மற்றும் உடைசல்களோடுதான் இளைய தம்பியர் தன் தகுதியை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்கிறார். தன் மனத்துக்குள்ளிருக்கும் கீறல்கள் அவர்க்குள்ளும் வேதனைகளை – குழப்பங்களை தராமல் இருக்க முடியாது. அவர் மனைவி விசாலாட்சி உயர்சாதி குடும்பத்தவராகத்தான் தெரிகிறார். சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் மனைவி அவரை மட்டம் தட்டுகிறார். தன் சாதியத் தரத்திற்கேற்ற முறையில் பூதியிடம்தான் அவர் இணக்கம் காண்கிறார். நாவலின் இறுதியில் அவர் செயலற்றவராகத்தான் தெரிகிறார். இவர்க்கு அடியாளாக வாய்த்தவன் சுருளி. அவனுக்குள் சிறிதளவும் மனச்சிக்கல் இல்லை. யார் கையிலாவது அவன் அடிபட்டுத்தான் சாவான். அடியாட்கள் என்பவர் இத்தகைய முரட்டுமனிதர்கள்தான். இவர்களை அனுதாபத்தோடு ஒரு எழுத்தாளர் சித்தரிக்க முடியுமா? நாம் சிந்திக்க வேண்டும். இளையதம்பியரை இப்படி சித்திரித்திருக்க முடியும். நாவலில் ஒரு கூடுதல் பரிமாணமாக இது இருக்க முடியும்.

நாவலில் இடம்பெறும் பெண்கள் பற்றி சில சொல்லவேண்டும். விசாலாட்சி, கனகம், அன்னலட்சுமி ஆகிய மூவரும் ஆதிக்கவாதிகளின் மனைவிகள். உயர்சாதிப் பெண்கள். தம் கணவரைத் தம் கட்டுக்குள் வைத்திருக்கும் ஆளுமை என்ற ஒற்றைப் பரிமாணத்தில் இவர்கள் தேர்ந்திருக்கிறார்கள். தம் குடும்ப எல்லைக்குள் சாதியத் தகர்வை இவர்கள் ஏற்பதில்லை. இவர்களுக்குள் எழும் காமக் கிளர்ச்சிகளை பிற நாவல்களில் டேனியல் சித்திரிக்கிற அளவுக்கு இந்த நாவலில் செய்யவில்லை. சந்தர்ப்பம் நேருமானால் விசாலாட்சியைப் போலவே கனகமும் அன்னலட்சுமியும் நடந்து கொள்வார்கள். சீதையை இவர்களோடு இந்த ஒரு அம்சத்தில் மட்டும் சேர்த்துச் சொல்ல முடியாது. இந்த மேல்சாதியினரோடு ஒப்பிடும்போது தாழ்த்தப்பட்ட சாதியினரின் பெண்கள் ஆக்கத் திறன் மிக்கவர்களாகத் தெரிகிறார்கள். பூதி, செல்லி ஆகியவர்களைத் தவிர மார்க்கண்டனின் தாயாரும் இத்தகையவர். இளம்பெண்கள் இரண்டொருவர் நாவலில் வருகிறார்கள். இவர்களின் முகம் நமக்கு சரியாகத் தெரியவில்லை.

இந்த இடத்தில் டேனியல் தன் நாவலாக்கம், பாத்திரப் படைப்பு பற்றி குறிப்பிட்டிருக்கிற ஒரு செய்தியை நாம் நினைவு கொள்ள வேண்டும். பாத்திரங்களை டேனியல் தன் விருப்பத்திற்கேற்றவாறு நகர்த்துவதில்லை என்கிறார். தான் படைத்துக் கொண்ட பாத்திரங்கள் அவரவர்க்கான நெறிப்படி இயங்குவதை தான் முழு அளவில் அனுமதிப்பதாகச் சொல்கிறார். தம் விதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்வதைப் பாத்திரங்களுக்கு அவர் அனுமதிக்கிறார். இத்தகைய கூற்று டேனியலை ஒரு உயர்தரக் கலைஞராக நமக்குக் காண்பிக்கிறது. இந்தக் கூற்றின் உண்மை பற்றி நாம் பார்க்க

வேண்டும். பாத்திரங்களுக்கு இப்படி அவரவர் உரிமைகளை அனுமதிக்கிற அளவுக்கு டேனியல் தனக்குள் மனவிரிவுடையவராக, சுதந்திர உணர்வு உடையவராக நமக்குத் தெரிகிறார். இத்தகைய உரிமையை அனுமதிக்கிற பொழுதுதான் சுதந்திரம் தழைக்கும். மனிதர்கள் வளர்ச்சி பெறுவார்கள். கலைக்குள் காணுகின்ற இந்த உண்மை சமூகத்திற்கு சரியாகவே பொருந்தும்.

வாத்தியார் உயர்சாதிக்காரர். என்ன இருந்தாலும் தாழ்ந்த சாதியாரோடு அவர் ஒத்துச் செல்லமுடியாது. உயர்சாதிக்காரருக்குள் கோணல்கள் – குரூரங்கள் இருக்கும். இவற்றைத்தான் அவரால் செயல்படுத்தமுடியும். அதைப்போலவே தாழ்ந்த சாதியாருக்குள் தாழ்வுணர்ச்சி இருக்கும். சின்னத்தனங்கள் இருக்கும். பொய்புரட்டுகள் இருக்கும். இவர்களால் நேரிய பாதையில் உறுதியாகச் செல்லமுடியாது. இப்படி சமூகத்தில் நிலவும் பொதுவான நம்பிக்கைகளை ஆதாரமாக வைத்து டேனியல் தன் பாத்திரங்களைப் படைக்கவில்லை. தனக்குள்ளிருந்துதான் பாத்திரங்களைப் படைக்கிறார். வாத்தியார் அறநெறியிலிருந்து பிறழ மாட்டார். அவரைப்போல பூதியும், செல்லியும் அறத்திலிருந்து பிறழமாட்டார்கள். இத்தகையவர் மூலம்தான் சமூகம் மேன்மையுறும். சமூக வரலாற்றிலிருந்து இந்த உண்மையை டேனியல் கண்டறிந்தவராகத் தெரிகிறார். கிருட்டிணர் என்ற பாத்திரத்துக்குள் டேனியல்தான் இருக்கிறார் என்று நாம் கணிக்கலாம். அப்படியானால் டேனியல் தனக்குள்ளிருக்கும் அற உணர்வைப் பதித்து தன் பாத்திரங்களை உருவாக்குகிறார் என்று சொல்லலாம். உயர்சாதிக்காரர், தம் ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். ஆதிக்க உணர்வு அவர்களுக்குள் ஆழமாகப் பதிந்திருக்கிறது. வாத்தியார் ஒருவேளை நிலச் சொந்தக்காரராக இருந்திருந்தால் ஆதிக்க உணர்வில்தான் அவரும் ஊன்றியிருந்திருக்க முடியும். இவருக்கான வாழ்க்கை வசதி இவரை ஆசிரியராகத்தான் கொண்டு சேர்த்தது. இப்படிப் பார்க்கும்பொழுது ஆசிரியர் தன் பாத்திரங்களின் வழியே தன்னைத் திரும்பப் படைத்துக் கொள்கிறார். தனக்குள்ளிருக்கும் சுதந்திரத்தை அற அடிப்படையில்தான் இவர் வகுத்திருக்கிறார். பாத்திரங்களுக்கு இவர் தரும் சுதந்திரம் இந்த அடிப்படையிலானதுதான் – இப்படிச் சொல்லலாமா? இப்படித்தான் சொல்ல முடியும் எனத் தோன்றுகிறது. முன்னுரையில் டேனியல் இன்னொன்றையும் குறிப்பிடுகிறார். அடிமைகள் நாவலுக்கு விவரங்கள் சேகரித்த காலத்தில், தான் சேகரித்த விவரங்களிலிருந்துதான் இந்த நாவலை – மனிதர்களை அவர் படைத்திருக்கிறார். இம்மாதிரி மனிதர்கள் அவர் தன் களத்தில் கண்ட மனிதர்கள்தான்.

"பஞ்ச கோணங்கள்" நாவலின் வேறு சில அம்சங்களையும் இங்கு தொகுத்துரைக்கலாம்: நாவலில் சுன்னாகம் முதலிய பகுதிகளை உள்ளடக்கிய தமிழ்ப் பிரதேசத்தின் வரலாற்று அம்சங்கள் சில அங்கங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்திய சில போராட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கந்தசாமி கோவில் நுழைவுக்காக நடைபெற்ற போராட்டம். செல்லி தன் இறுதிக் கட்டத்தில் தன் நினைவுகளாக சொன்ன சில செய்திகள் சொல்லப்படுகின்றன. உயர்சாதி ஆணும், தாழ்ந்த சாதிப் பெண்ணும் திருமணம் செய்ய நேர்ந்த சமயங்களில் உயர்சாதிக்காரர்களால் இவர்கள் எவ்வளவு கொடூரமாக கொல்லப்பட்டார்கள் அல்லது சிதைக்கப்பட்டார்கள் என்ற முறையில் வரும் பல செய்திகள் அன்றைய சமூக வாழ்வில் அப்படியே நடந்த நிகழ்ச்சிகளாகத்தான் நமக்குத் தோன்றுகிறது.

நாவலில் வேளாண்மை தொடர்பான பல விவரங்கள் சிறப்பாக சித்திரிக்கப்பட்டுள்ளன. வெங்காயம் அறுவடை, பக்குவப்படுத்தல் பற்றிய விவரங்களை இங்கு குறிப்பிடலாம். கல் உடைக்கும் கிரசர் வேலைகளும் விவரிக்கப்படுகின்றன. இளவேனில், முதுவேனில் என்று மாறி வரும் பருவங்களும் இத்தகைய மாறுதல்களுக்கு ஏற்றமுறையில் விவசாய வேலைகளில் ஏற்படும் மாறுதல்களும் அங்கங்கே அழகாக இடம்பெறுகின்றன. உணவு வகைகளை டேனியல் எப்பொழுதும் நுட்பமாக எடுத்துரைக்கிறார். கதை முழுவதும் யாழ்ப்பாணத்தமிழ் கொஞ்சி விளையாடுகிறது. எல்லாச் சொற்களும் தொடர்களும் நமக்குப் புரியவில்லை என்றபோதிலும் இவற்றின் அழகில் நாம் மயங்கித்தான் போகிறோம். டானியலின் பல நாவல்களிலிருந்து யாழ்ப்பாண / நாட்டார் வழக்காற்று சொல் அகராதி ஒன்றைத் தொகுக்க முடியும்போலத் தோன்றுகிறது. யாராவது ஒரு ஆய்வாளர், இந்த அழகுக் கலையைச் செய்து முடிக்கவேண்டும்.

நாவலாக்கத்தில் எதிர்நிலைகள் இரண்டாக அமைந்திருக்கின்றன என்று முன்பு குறிப்பிட்டோம். கூர்ந்து கவனித்தால் மூன்றாவது அணியொன்றும் செயல்படுவதை நாம் பார்க்க முடியும். எதிர்எதிர்நிலைகளின் மூன்றாவது அணி அல்லது கிளை போதுமான அளவுக்குக் கண்டுகொள்ளப்படவில்லை. தமிழ் இளைஞர்கள் இயக்கமாகத் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள்தான் இந்த மூன்றாவது அணி. இவர்களில் பல்கலைக் கழகப் படிப்பைத் தொடர முடியாமல் வெளியேறிய இளைஞர்கள் சிலர் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த மார்க்கண்டன் இவர்களோடு சேர்ந்து கொள்ள

விரும்புகிறான். ஆனால் இவன் தெளிவு கொள்ளும் முறையில் இவனுக்கு விளக்கம் தரப்படவில்லை. இன்னும் உள்ள பலர் முகங்கள் நமக்குத் தெரியவில்லை. தலைவர் கண்ணாடியணிந்து வருகிறார் - கருப்புக் கண்ணாடி. இவர் தன் முகத்தை இப்படி மறைத்துக் கொள்கிறவரா, அல்லது மற்றவரை அச்சுறுத்துகிறவரா, தெரியவில்லை. 68-74 காலம் என்று சொல்கிறபோது ஈழத் தமிழர் மத்தியில் செயல்பட்ட எந்த இயக்கத்தவராக இவர்களைக் கொள்வது? கண்ணாடி அணிந்த தலைவர் யார்? இன்றைய நிலவரங்களை வைத்து இவர்களை விடுதலைப் புலிகள் என நாம் கருதுவது பொருந்துமா? எனினும் இவர்கள் ஆயுதம் தரித்துப் போராடுகிறவர்கள். ஆயுதப் போர் நெறியை இவர்கள் கடைப்பிடிக்கிறவர்கள். இந்த நெறிக்காக டேனியல் இவர்களைக் குறை கூறுபவராகவும் தெரியவில்லை. இவர்கள் உயர்சாதியினர் என்பதைத்தான் டேனியல் அழுத்திக் கூறுகிறார். இவர்கள் இளைஞர்கள். இவர்கள் உயர்சாதி - சைவ வேளாள குடும்பத்தில் இருந்துதான் வந்தவர்களா? சந்திரன் இப்படித்தான் வந்தவன். இன்னும் பலர் இப்படித்தான் வந்திருக்க வேண்டும். இலங்கை சிங்கள அரசு ஆதிக்கத்திலிருந்து தமிழ் நிலத்தை வென்றெடுப்பது இவர்கள் நோக்கம். சாவு இவர்களை எப்பொழுதும் சூழ்ந்திருக்கிறது. இந்த இளைஞர்கள் தம் சாதி மரபுக்கொத்த ஆதிக்கக் களங்களில் / நிலங்களில் இல்லை. இந்த இளைஞர்களை இவர்களின் பெற்றோர் தம் மரபு ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் விருப்பத்தோடு அனுப்பினார்களா? அதாவது பெற்றோர் தமக்கான படையை, தம் வீட்டு இளைஞர்களைக் கொண்டு அமைக்கிறாரா? இப்படியும் சொல்ல முடியுமா? பெற்றோர் அனுமதி பெற்றுத்தான் இந்த இளைஞர்கள் ஆயுதப் போர்நெறியை தேர்ந்துகொண்ட இயக்கத்தில் சேர்ந்தார்களா? அல்லது இவர்களை இயக்குவது எந்த உணர்வு? தொடக்கத்தில் தமிழ் உணர்வுதான். தமிழ்க் கலாச்சாரம் பற்றிய உணர்வுதான். இதன் விரிவுதான் பிரதேச உணர்வு. பிரிட்டிஷார் வருவதற்கு முன்னர் தாம் ஆதிக்கத்தில் இருந்தோம் என்ற நினைவிலிருந்து இப்போதைய உணர்வுகளைப் பெற்றிருப்பார்களா? இப்படிப் பெற்றிருந்தால் அதைத் தவறு என்று சொல்ல முடியுமா? இப்போதைய சாதிச் செருக்கிலிருந்து இந்த உணர்வைப் பெற்றிருப்பார்களா? அதாவது சிங்களவர் அரசு அதிகாரத்திலிருந்து தம் பிரதேசத்தை வென்றெடுத்து அதில் தம் ஆதிக்கத்தை நிறுவிக் கொள்ள வேண்டும் என்ற உணர்விலா இவர்கள் தம்மை உறுதிப்படுத்திக் கொண்டனர்?

இப்படியெல்லாம் நமக்குள் கேள்விகள் எழுகின்றன. இந்த இளைஞர்கள் தமிழ்ப்பிரதேச வரலாற்றின் முன்பே வகுக்கப்பட்ட

பாதையிலிருந்து விலகிச் செல்பவர்களாகத்தான் நமக்குத் தெரிகிறார்கள். ராசரெத்தினத்தார், தம் மகன் சந்திரனை இந்த இயக்கத்திற்கு விட்டுக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார். எல்லாப் பெற்றோரும் இப்படிச் சொல்லமாட்டார்கள். விட்டுக் கொடுக்கமாட்டார்கள். விவேகானந்தன் எங்கே சென்று வருகிறான் என்பது அவன் தாய் சீதைக்குத் தெரியும். கந்தையருக்கு இன்னும் தெரியாது. இளைஞர்களுக்கு எதிர்கால வாழ்வுக்கான உறுதிப்பாடு அழிந்து வருகிறது. வாழ்வியல் அனுபவங்களின் சூடு இவர்களுக்குப் பட்டிருக்கிறது. இவர்கள் தம்மைத் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் அவசரத் தேவைகள் ஒரு தத்துவத்துக்கான தேவையை இவர்களுக்கு உணர்த்தியிருக்கிறது. தமக்கான எதிர்காலம், சோசலிசம் என்று இவர்களுக்குச் சொல்லப்படுவதை இவர்கள் ஏற்கிறார்கள். இதை சோசலிசம் என்ற இந்த பாரிய உணர்வை காட்சியை இவர்கள் விரிவான அளவுக்குப் பெறமுடியுமா? தம் சூழலில் அவர்கள் இப்பொழுதே பெறமுடியாது. சோசலிசம் வர்க்கச் சிக்கலைத் தீர்க்கும் என்பது மாதிரி, சாதிச் சிக்கலையும் தீர்க்கும் என்று இவர்களுக்குத் தலைவர்கள் சொல்கிறார்கள். தமிழ்ப் பிரதேசங்களை சிங்களப் படை வந்து, தொடர்ந்து ஆக்கிரமிக்கிறது. முதலில் அவர்களைத் துரத்தி தமிழ்ப் பிரதேசத்தைக் காப்பாற்ற வேண்டும். இந்த நெருக்கடியில் வர்க்கமா, சாதியா என்று எல்லோரும் கூடி விவாதிக்க முடியுமா? விவாதிக்க நேரமில்லை. விவாதத்தை நடத்துவதற்கு ஆழ்ந்த அனுபவங்கள், விரிவான படிப்பறிவு, நெடுங்கால ஓய்வு தேவை. இந்த இளைஞர்களுக்கு இந்த வாய்ப்புகள் இல்லை. ஊருக்குள் வரும் சிங்களப் படை இப்பொழுது இளைஞர்களைத் தேடிக் கொள்கிறது. இத்துடன் அது நிற்கவில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் இதன்பிறகு (74-க்குப்பிறகு) என்னவெல்லாம் நேர்ந்திருக்கிறது?

இந்த இடத்தில் நமக்கு இன்னும் சில கேள்விகள்: சிங்களப் படை, சைவ வேளாளர்களை மட்டும் துரத்திவிட்டு அந்தந்த ஊர்களில் தாழ்த்தப்பட்ட மக்களை மட்டும் வைத்துக் கொண்டதா? நிலங்களை இவர்கள் பொறுப்பில் விட்டதா? என்ன நடந்தது? நமக்கு விவரங்கள் வேண்டும். நாம் தேடித் தொகுக்க வேண்டும். நாவல் இந்தக் கட்டத்துக்குள் செல்லவில்லை. தொடக்கக் கட்ட சூழலைத்தான் நாவல் சொல்லுகிறது.

தமிழரும் சிங்களவரும் இனி சேர்ந்து வாழமுடியாது என்ற அடிப்படையை டேனியல் அன்றே ஒப்புக் கொண்டிருப்பார். டேனியலுக்கு இருக்கும் சிக்கல், தமிழ்நாட்டில், தாழ்த்தப்பட்ட சாதியினர்க்கு நிலம்

தருவார்களா, கல்வி தருவார்களா, அரசு வேலை தருவார்களா, உரிமைகளை அனுமதிப்பார்களா? இவை பற்றிய விழிப்புணர்வு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கத்தான் வேண்டும். இந்த விழிப்புணர்வு வேண்டும் என்பதை டேனியல் விடாப்பிடியாக வற்புறுத்துகிறார். இது மிகச் சரியான நிலைப்பாடுதான். ஆனால், இருக்கிற சூழலில் இந்த நிலைப்பாட்டில் அழுத்தம் கொண்டு சிங்களப் படைக்கெதிரான போராட்டத்தில் / போரிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் விலகி நிற்கமுடியுமா? எவ்வளவு காலத்திற்கு விலகிநிற்க முடியும்? உயர்சாதித் தமிழ் இளைஞர்கள் மட்டுமே தமக்குள் திரண்டு சிங்களப் படையை வென்று முடிப்பார்களா? தம்மோடு சேர வரும் தாழ்த்தப்பட்ட இளைஞர்களிடம் அடிமைச் சாசனம் எழுதி வாங்கிக் கொள்வார்களா? சிங்களப் படையின் கைகளில் தமிழ் இளைஞர்கள் மாட்டிக் கொள்ளும்பொழுது, பூதி என்ற அந்தத் தாய், செல்லி என்ற அந்தச் சகோதரி சும்மா இருந்து விடுவார்களா? கிருட்டிணர் இயக்கமற்று இருப்பாரா? விவேகானந்தன் தன் மருமகன் என்பதற்காகத்தான் வாத்தியார் ராணுவத்தாரிடம் தன்னைத் தானே அகப்படுத்திக் கொண்டாரா? மார்க்கண்டனைக் கொன்றதுபோல, தமிழ் இளைஞர் படை இன்னும் எத்தனை பேரைக் கொல்ல முடியும்? இதற்காகத்தான் சந்திரனை கொன்றார்களென்றால் நிலைமை என்னவாகும்?

உயர்சாதி இளைஞர்கள் தம்மைத் தமிழர்கள் என்று உணர்கிறார்கள். இப்படி நாவல் சொல்லுகிறது. தமிழ்மொழி உணர்வு இவர்களுக்கு இருப்பதை நாம் மதிக்க முடியும். இவர்களின் தமிழ்க் கலாச்சார உணர்வில் ஆறுமுக நாவலர் போன்றவர் பதித்த சைவ உணர்வும் கலந்திருக்க முடியும். இந்தச் சைவ உணர்வு விமர்சனத்தின் வழியே மனித உணர்வாக மாற்றப்பட வேண்டும். சாத்தியம்தானா என்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். நிலத்தைக் காப்பது என்ற உணர்வை சைவம், சாதி என்ற உணர்வுகளுக்குள் சுருக்கிவிடலாமா? ஆதிக்க உணர்விலிருந்து யார் தம்மை உடனடியாக விலக்கிக் கொள்வது சாத்தியம்? இளைஞர்கள் போர்க்களத்துக்கு வந்திருக்கிறார்கள். சைவம், சாதி போன்றவற்றில் அழுந்தி இருந்தால் போரில் வெற்றிபெற முடியாது. ஒரு கட்டத்தில் வெற்றி சாத்தியம் என்றாலும் அந்த வெற்றி நிலைக்க முடியாது. இவர்களின் ஆதிக்கத்திற்குள்ளாகும் மனிதர்கள், இவர்களின் நிரந்தரமான வெற்றியை அனுமதிக்க மாட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், நாங்களும் தமிழர்கள்தான், நீங்கள் அனுபவிக்கும் உரிமைகளை எங்களுக்கும் பகிர்ந்து கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இப்படி நாவல் சொல்கிறது. இவர்கள் தமிழர்கள்தான் என்பதில் நமக்கு ஐயமில்லை. இவர்களிடம் மொழி பற்றிய

பெருமித உணர்வை நாம் எதிர்பார்க்கவில்லை. இவர்களுக்கு சாதிப் பெருமை உணர்வு இல்லை. சைவத்தோடு இவர்கள் இல்லை. இவர்களுக்குள் செயல்படும் கலாச்சாரம், உழைக்கும் மக்கள், உழைப்பின் மூலம், வரலாற்றின் மூலம் தமக்குள் திரட்டிக் கொண்ட கலாச்சாரம். இவர்கள் சிலர்க்காவது நிலம் இருக்க வேண்டும். இவர்கள் உழைப்பின் மூலம்தான் தமிழ்ப்பிரதேசம் வளம் பெற்றிருக்கிறது. இன்னொரு காலத்தில் இந்தப் பிரதேசங்களை இவர்கள் உரிமையாகப் பெறுவார்கள். இப்பொழுது இவர்களுக்கு நில உரிமை இல்லை. மனித உரிமைகள் இல்லை என்பதனால் சிங்களவரோடு போராடுவதற்குத் தேவையான ஊக்கம் இவர்களுக்கு எழாது. இந்த நிலையில் போராடாமல் இருக்க முடியுமா? ஏதாவது சில அடிப்படைகளில் இளைஞர் இயக்கத்தோடு உடன்பாடு வைத்துக் கொள்ளாமல் எப்படி தம்மைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்? இளைஞர் இயக்கத்துக்கு இந்த உணர்வு எழாமல் அவர்களிடம் தாழ்த்தப்பட்ட மக்கள் சரணடையவும் முடியாது. இந்த நிலையில் இவர்களின் அவலம் இன்னும் அதிகரிக்கும். நாங்களும் தமிழர்கள்தான் என்று இவர்கள் எந்த உணர்வில் - எந்த அர்த்தத்தில் சொல்கிறார்கள்? இவர்கள் தம்மைத் தமிழர்களென உணர்வதற்கும், உயர்சாதி இளைஞர்கள் தம்மை தமிழர்களென உணர்வதற்கும் பெருத்த வேறுபாடு இருக்க முடியும். என்ன அந்த வேறுபாடு? இதுபற்றி டேனியல் குறிப்பிடவில்லை. ஆனால், எதிர்நிலை எடுத்துக்கொண்டு விவாதிக்கிறார். விவாதத்தை எவ்வளவு தொலைவுக்கு கொண்டு செல்ல முடியும்? விவாதத்தில் இறுகிப் போனால், அப்புறம் பகை உணர்வுதான் மிஞ்சும். கிருட்டிணர் என்ன செய்யப் போகிறார்? அடுத்த கட்டம் என்ன? நாவலில் இது நமக்குப் புலப்படவில்லை.

தமிழ் இளைஞர்கள் இயக்கம், நாவலில் இடம்பெறும் எதிர்நிலைகளில் மூன்றாவது கிளை என்று கூறினோம். மூன்றாவது கிளை என்ற முறையில் உயர்சாதி சைவ வேளாளர் என்ற குடும்பங்களிலிருந்து, வெளியேறிய இளைஞர் இயக்கத்தவரை நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இவர்கள் ஒரு புதிய பாதையில் பயணம் தொடங்கி யிருக்கிறார்கள். இவர்களுக்குள் புறத்திலும், அகத்திலும் சிக்கல்கள் இருக்கின்றன. சந்திரன் இதை உணராமல் இருந்திருக்க முடியுமா? மார்க்கண்டனிடம் இவன் கொண்டிருந்த நட்புணர்வு பொய்யானதா? தன் மாமா சிங்களப் படையால் அகப்படுத்திக் கொண்டு செல்லப்பட்ட பிறகு விவேகானந்தன் தனக்குள் என்ன உணர்வு கொள்வான்? இந்தக் குடும்பம் இனி பள்ளிகளிடம் அன்புணர்வு கொள்ளாதா? ராசரெத்தினத்தார் தன் மகன் சாவை என்னவென்று புரிந்து கொள்வார்? தாழ்த்தப்பட்ட சாதியினர்க்கு எதிராக அவரது மனநிலை இறுகுமா? அல்லது நெகிழுமா

மார்க்கண்டன் சாவுக்குப்பிறகு, தாழ்த்தப்பட்ட சாதி இளைஞர்கள் உயர்சாதிக்கெதிராக இன்னும் தமக்குள் ஒதுங்கி தம்மை இறுக்கிக் கொள்வார்களா? கிருட்டிணர் இப்படி வெறியராக மாறுவாரா? மாறமுடியுமா? இப்படியெல்லாம் சிந்திக்க நாவலில் இடம் இருக்கிறது. நாவலில் மௌனம் கண்டு, அதை உடைத்துப் பார்க்கிறபோது இப்படி நாவலோடு நாம் உரையாடல் நிகழ்த்த முடியும். நாவலில் மூன்றாம் கிளைக்கு அழுத்தம் தந்தால்தான் இந்த உரையாடல் சாத்தியப்படும். நாவலில், மெல்லப் பிரிகிற இந்தக் கிளை அழுத்தம் பெறவில்லை. டேனியல் இப்படி அழுத்தம் தரவில்லை. அழுத்தம் தராததற்கு எது காரணம்? தன் கால வரலாற்றில் இந்த மூன்றாவது கிளை கண்ணுக்குத் தெரிகிற அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை என்று சொல்லலாமா? அல்லது சாதி உணர்வில் டேனியல் அழுத்தம் கொண்டிருக்கிறார் என்று சொல்லலாமா? தெரியவில்லை. இந்த மூன்றாம் கிளைக்கு அழுத்தம் தந்து வாசித்தால், நாவலின் பரிமாணங்கள் கூடுகின்றன. நாவலின் அழகியல் செழுமை பெறுகிறது.

"பஞ்சகோணங்கள்" நாவலில் சாதி வர்க்கம் என்ற நிலைபாடுகளைப் பற்றி சிந்திக்கிறபொழுது, தமிழக / இந்திய வரலாற்றில் ஒரு போக்கு நம் நினைவுக்கு வருகிறது. தொடக்க கால காங்கிரஸ் இயக்கத்துக்குள் சமூக சீர்திருத்த இயக்கமும் அரசியல் விடுதலை இயக்கமும் ஒன்றியிருந்தன. பிறகு இவை பிளவுபட்டன. தமிழக வரலாற்றிலும் இந்த நிலை தீவிரப்பட்டது. இதனால் வரலாற்றியக்கம் தீவிரப்படவில்லை. சிதைந்தது. இதற்கான காரணங்கள் விரிவான ஆய்வுக்குரியவை. இங்கெல்லாம் செயல்பட்டது, வெறும் சாதிய உணர்வுதானா? ஏற்கனவே சமூகம், தனக்குள் பிளவுண்டிருந்ததன் விளைவா? இதைப்பற்றிய சரியான உணர்வு / பார்வை ஏன் வளர்த்தெடுக்கப்படவில்லை? இந்தப் பார்வையை வளரவிடாமல் தடுத்தது பொருளியல் அல்லவா? அரசு அதிகாரத்தின் பங்கு இதில் இல்லை என்று சொல்ல முடியுமா? என்பதை, ஆதிக்கத்தை விடுதலை அகப்படுத்திக் கொள்வது என்ற அளவில் இவர்கள் எப்படிப் புரிந்து கொண்டார்கள்? மதம் எப்படி இந்த ஆதிக்கத்திற்கு வளைந்து கொடுத்தது? சமூகத்தில் தோன்றி வளர்ந்து வரும் புதிய பொருளியல் சக்திகள் எப்படி சாதியையும், மதத்தையும் தமக்கு அரணாகக் கொண்டன? இந்தியாவில் நடைபெற்றது பிரிட்டிஷாரோடு கூடியவரை அமைதியான போராட்டம். இதில் முரண்பட்ட சக்திகள் தமக்குள் மோதி அழியவில்லை; தப்பித்து கொண்டன. இன்றும் இந்த முரண்பாடுகள் தொடர்கின்றன. மோதலும் தொடர்கிறது. இலங்கையில் நடைபெறுவது ஆயுதப் போராட்டம். மார்க்சு கூறியபடி முரண்பட்ட சக்திகள் தமக்குள் மோதுவதனால், ஒன்று சமூகம் அடுத்த

நிலைக்கு உயரும் அல்லது மோதிக் கொள்கிற சக்திகள் இரண்டும் அழியும். தமிழ் ஈழப் பகுதியில் இப்பொழுது என்ன நடைபெறுகிறது? நாம் உற்றுப் பார்க்க வேண்டும். டேனியல் நாவலில் இப்படி, தொலைவை நோக்கிப் பார்க்கிற பார்வை இருக்கிறதா? இல்லை. இத்தகைய பார்வையை டேனியலுக்குள் நாம் எதிர்பார்க்க முடியுமா? முடியாது.

இன்னும் நமக்குள் சிக்கல் தீர்ந்தபாடில்லை. நாம் மேலும் தொடர்ந்து விவாதிக்க வேண்டும். இறுதியாக நாவலிலிருந்து ஒரு மேற்கோளுடன் இப்போதைக்கு இக்கட்டுரையை முடிக்கிறேன்:

பொருத்தமான இடத்தில் பொருத்தமான கதையைச் சொல்லி விட்டுப்போன கிட்டிணண்ணனை அவர் மனத்துக்குள் பல தடவைகள் நினைத்துக் கொண்டார்.

"வாத்தியார்! செயல்தான் வாத்தியார் முந்தியது! செயலின்றி சிந்தனை தோன்றியிருக்க முடியாது"

"வர்க்கங்களுக்கிடையிலே இருக்கிற முரண்பாடுதான் பிரதான முரண்பாடு! சாதி, சமயம், இனம், மொழி, பழமை ஆகியவைகளுக்கு முட்டுக்குடுத்து, இந்தப் பிரதானமான முரண்பாட்டைத் திசை திருப்புற வேலை வாத்தியார். மற்றவை பாக்கினம்!

"உள்ளவனையும் இல்லாதவனையும், ஒண்ணாச் சேர்த்து ஒருவர் போரை நடத்திறதென்பது வெறும் பொய்!"

"குடிக்கக் கஞ்சிக்கும், உடுக்கத் துண்டுக்கும், குந்தக் குடிலுக்கும் வழி இல்லாத சனங்கள் சேராத எந்தப் போரும் வெற்றி பெறாது!"

"வாத்தியார், சரியான கொள்கையும் சரியான நடைமுறையும் சேராட்டா ஒண்டுஞ் சரிவராது கண்டியளோ!"

கிட்டிணண்ணனால் அப்போதைக்கப்போது கூறப்பட்ட இவைகள் இப்போது வாத்தியாரின் நினைவுக்கு வந்து போயின.

இப்போது வாத்தியாரின் சோர்வு போய்விட்டது. (பக். 350)

சங்கர நாராயணன் - ம.வே. சிவக்குமார் :
இரு நாவல்கள் - ஒரு பார்வை

சங்கர நாராயணனின் 'காலத்துளி' (1990), ம.வே. சிவக்குமாரின் 'வேடந்தாங்கல்' (1991) ஆகிய இரு நாவல்களும் எதிர் துருவங்களில் இணைந்திருப்பதைச் சொல்ல இந்தக் கட்டுரை. இந்த இணைவில் திட்டமிடல் என்று எதுவும் இருக்க இயலாது. ஒருவரை மறுத்து இன்னொருவர் எழுதியதாகவும் இருக்க முடியாது. எனினும் இவ்விரு நாவல்களும் எதிர்நிலைகளில் இணைந்திருக்கின்றன. இரு ஆசிரியர்களின் பார்வை வேறுபாடு இதற்குக் காரணம். நம் சமூகச் சூழலில் இந்த வேறுபாடு இன்று சாத்தியப்பட்டிருக்கிறது. இப்படி வேறுபடுத்தலும் தேவையாக இருக்கிறது.

காலத்துளி நாவலில் அரவிந்தன், வண்டல்மேடு என்னும் கிராமத்திலிருந்து ஒரு அலுவலக வேலைக்கான நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள இரயிலில் சென்னைக்குப் புறப்படுகிறான். கிராமத்தை நேசிக்கிற இவனுக்கு, நகரம் பிடிபடுமென்று தோன்றவில்லை. அக்கா வனஜா வீட்டில் தங்கி மறுநாள் மாதவனோடு நகர இரைச்சலுக்கிடையில் பேட்டிக்குச் செல்லுகிறான். மாதவன் சொற்படி 'ஷூ'வும் 'டை'யும் அணிந்து செல்கிறான். பேட்டியின் போதும் பிறகும் தனக்குள் நிறைய பேசிக் கொள்கிறான். நகரத் தெருக்களில் சுற்றி அலைகிறான். வேலை கிடைக்கவில்லை. புதுக்கவிதை எழுதுகிற இவன் நண்பன் தங்கவேலுவின் பரிந்துரையோடு மேலாளரைத் திருப்திப்படுத்தி தற்காலிக வேலையில் சேர்கிறான். நிரந்தரமாக அந்த வேலை அவனுக்குக் கிடைத்துவிடும்.

மாதவனும் அவன் தங்கை மைதிலியும் கச்சிதமாய்ப் பேசுகிறவர்கள். மருத்துவப் படிப்பில் தன்னை முழுசாய் மைதிலி ஈடுபடுத்திக் கொள்கிறாள். படிக்கிறபொழுதே அப்பாவை துன்புறுத்தி வைரமூக்குத்தி வாங்கிக் கொண்டவள் வனஜா. அவள் திருமணச் செலவு ஒரு இலட்ச ரூபாய். அன்பான அப்பா இப்போது கடனாளி. மகன்தான் இனி அவரைத் தாங்க வேண்டும். மாமனார் வீட்டில் எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்லிச்சொல்லி வனஜா இன்னும் வாங்கிக் கொண்டிருக்கிறாள். மாதவன் புத்திசாலி. வருவதை வேண்டாமென்று வாய்திறந்து சொல்லமாட்டான். அவன் கச்சிதமாய்ப் பேசுகிறவன். நகர வாழ்க்கையில் தன்னைப் பொருத்திக் கொண்டது இவர்கள் குடும்பம். எதிர்வீட்டுக்காரர் ஜேகப் அன்பானவர். நகர நாகரிகம் கச்சிதமாய்த் தெரிந்தவர். சாவி கேட்க ஜேகப் வீட்டிற்குப்

போனபொழுது இறைச்சி வேகிற நாற்றம் அரவிந்தனுக்குப் பிடிக்கவில்லை. கறிக்கடைகளில் ஆடு, கோழிகள் தலைகீழாய்த் தொங்குவது இவனுக்கு அருவருப்பாய் இருக்கிறது. மேலாளரின் மனம் அறிந்து இவன் இடம் பிடித்துக் கொள்வான். நகரத்தில் சிறிய வீடுகள். நாகரிகம் தெரிந்து ஒதுங்கிக் கொள்ளவேண்டும். சுப்புணி அய்யர் சாவுக்கு அரவிந்தன் போய் வருகிறான். நகரத்தில் சாவு வீட்டிலும் கச்சிதமாய் காரியங்கள் நடக்கின்றன. இப்படித்தான் வாழ்க்கையில் ஒருவன் அறிவோடு தன்னைப் பொருத்திக் கொள்ள வேண்டும். கிராமத்தில் இருக்கும் மங்களா இவனுக்குப் போதும். மனத்தளவில் வேறு அலைச்சல் கூடாது. மாதவனைப் போல இனி மாறவேண்டும். மங்களாவும், வனஜாவாய் மாறி கிராமத்திலிருந்து கொண்டு வரலாம். அப்பா என்ற பிரகிருதி வேறு எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்?

'வேடந்தாங்கல்' நாவல் தொடங்குகிறபொழுதே கடற்கரையில் பேகன் ஸ்ப்ரே குடித்து கிடக்கிற திவாகரை குப்பத்து மனிதர்கள் கண்டு எடுத்து வருகிறார்கள். திவாகருக்கு இப்பொழுதுகூட மனிதர்களும் நிகழ்ச்சிகளும் துல்லியமாய் நினைவுத் திரையில் தெரிகின்றன. (தெரியமுடியாது. சிவகுமார் இப்படி கதை சொல்கிறார்) திவாகருக்கு என்ன நேர்ந்தது? நெய்வேலியிலிருந்து கல்லூரிப் படிப்புக்காக சென்னைக்கு வந்தவன். விஸ்வநாத பெரியப்பா பிரமுகர், தொழிலதிபர். காவேரி பெரியம்மா அன்பே உருவானவள். பெரியப்பா இவனுக்கு அறிவுரை சொல்லுகிறார். பச்சையப்பன் கல்லூரியில் படிக்கிற திவாகர், போராட்டங்களில் ஈடுபடுகிறான். ஆவேசமாகச் செயல்படுகிறான். போலீஸ்காரன் தொப்பியைத் தட்டி விடுகிறான். மண்ணெண்ணையில் போலீஸ்காரரை நனைக்கிறான். இப்படி ஏன் இவன் ஆனான்?

திவாகரைச் சுற்றி இருக்கிற உறவுக்காரர்களின் குடும்பங்கள் நிறைய கிளைகள் விரித்த ஆலமரம் மாதிரி. காவேரி பெரியம்மாவின் மகள் சுபாஷினி மருத்துவப் படிப்பில் தன்னைக் கரைத்துக் கொண்டவள். வேணு பெரியப்பாவின் மகன் ராம்கி இறந்து போன பேராசிரியர் தாத்தாவின் மறுபிறவி. பெங்களூர் சங்கமேஸ்வர மாமா திவாகரை படிப்புக்காக தன் வீட்டில் வைத்துக் கொள்ளவில்லை. அவர் மகன் வேம்பு சிகரெட் பிடிப்பவன். அவனோடு திவாகர் சினிமாவுக்குப் போகிறான். சுப்புணி அறிவுக்குறை உடையவன். குறும்பைகளை இணைத்து வண்டி ஓட்டுகிறவன். விஸ்வநாத பெரியப்பாவின் பார்வையில், கருணையில் எல்லாக் குடும்பங்களும் அடங்கிக் கிடக்கின்றன. அவர் பரமஹம்சர். காவேரி பெரியம்மா சாரதாதேவி. சுபாஷினி அவர்களுக்கு வாய்த்த

குழந்தை. எப்படி வாய்த்தாள் தெரியவில்லை. இடையில் பாட்டி எல்லோரையும் அன்பாய் நேசிக்கிறவள்.

'வேடந்தாங்கல்' கதை மாந்தர் இவர்கள். அதாவது கதையில் வரும் மனிதர்கள். ஆனால் இந்த மனிதர் அனைவரும் திவாகரோடு கொள்ளும் உறவில் தான் கதை இயங்குகிறது. திவாகர் கடற்கரையில் ராம்கியை மணலில் போட்டு புரட்டி எடுக்கிறான். பிறருக்குத் தெரியாமல் சிகரெட் பிடிக்கிறான். கும்பலில் தலைவன் ஆகிறான். சங்கமேஸ்வர மாமாவிடம் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருங்கள், என்னை அதிகாரம் செய்யாதீர்கள் என்ற முறையில் எடுத்தெறிந்து பேசுகிறான். உங்கள் இலட்சியங்களை என்மீது திணிக்காதீர்கள். என் சுதந்திரத்தை என்னிடமிருந்து பறிக்காதீர்கள். எனக்கு மனிதர்கள் வேண்டும். அன்பு வேண்டும், உலகம் வேண்டும். ராம்கியோடு என்னை ஒப்பிடாதீர்கள். சுப்புணி மாதிரி நான் என்று சொல்லாதீர்கள். எனக்குள் நீங்கள் திணிக்கிற உங்கள் பிம்பங்களுக்கு எதிராகத்தான் நான் கலகம் செய்கிறேன் – இப்படி திவாகரன் நினைக்கிறான், கத்துகிறான். தன்னை எப்பொழுதும் கண்காணிக்கிற விசுவநாத பெரியப்பாவை இவனுக்குப் பிடிக்கவில்லை. தான் தவறு செய்கிறபொழுது சுட்டிக் காட்டுவதற்குப் பதிலாக தன்னோடு பேசுவதை நிறுத்திக் கொண்ட அவரை இவனுக்குப் பிடிக்கவில்லை. கேரம்போர்டில் தவறாகக் காயைச் சுண்டிய வேணு பெரியப்பா, இவன் அதைச் சுட்டிக் காட்டியபோது எழுந்து போகிறார். இவனை மதிக்கிற மனிதரைத்தான் திவாகர் நேசிக்கிறான். பெரியப்பா வீட்டிலிருந்து இவன் கழுத்தைப் பிடித்து அப்பா வெளியேற்றினார். தன்னை வெறுக்கிற இந்த உலகத்தை விட்டு வெளியேற பேகன்ஸ்பிரே குடித்தான். குப்பத்து பாட்டி இவனை மடியில் கிடத்திக் கொண்டு புலம்பினாள். அப்புறம் பெரியப்பா வந்து இவனைக் காப்பாற்றினார். பெரியப்பா பரிந்துரையில் இவனுக்கு 600 ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைக்கிறது. இவனுக்கு வேலை தேவை. திருவல்லிக்கேணியில் அறை எடுத்துக்கொண்டு சுதந்திரமாய்த் தங்க வேண்டும். பெரியப்பாவும் மற்றவர்களும் இவனைச் சூழ்ந்து கொண்டு இவனிடம் உறுதிமொழி கேட்கின்றனர். இந்நிலையில் வேடம் தரிக்கிறான். அலுவலகத்தில் வேலைக்கு சேர்ந்தவுடன், இங்கு எவ்வளவு யூனியன்கள் இருக்கின்றன என்று கேட்கிறான். இவனுக்கு ரஞ்சனி வேண்டும். அடிக்கடி இவனைப் பிடித்துக் கொள்கிற வசந்தா வேண்டும். நெய்வேலி சைக்கிள்காரர் வேண்டும். மனிதர் வேண்டும்.

அரவிந்தனும் திவாகரனும் எதிர்துருவங்களில் இயங்குவதை நாம் தெளிவாய்ப் பார்க்கலாம். இருவரையும் இடம் மாற்றி வைத்தால் இவர்கள்

எப்படி இயங்குவார்கள் என்று கற்பனை செய்து கொள்ளலாம். வனஜாவை, மாதவனை, திவாகரன் வெறுப்பான். தங்கவேலுவிடம் திவாகரன் 100 ரூபாய் வாங்கி இருக்க மாட்டான். மேனேஜரிடம் வால் குழைக்க மாட்டான். 'வைரமூக்குத்தி வாங்கித்தர உங்களுக்கு முடியவில்லை. நான் ஆசைப்படக் கூடாது என்று நீங்கள் ஏன் என்னை மிரட்ட வேண்டும்' என்று அப்பாவைக் கேட்ட வனஜாவை திவாகரன் வெறுத்திருப்பான். ஜேகப் வீட்டில் இறைச்சி வேகிற மணத்தை அரவிந்தனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. திவாகரன் இதைப் பொருட்படுத்தியிருக்க மாட்டான். இவன் படிப்பைக் கொண்டுதான் இவனை மதிக்கிற பெரியவர்களை திவாகரன் பொருட்படுத்தவில்லை. திவாகரன் சூழலில் அரவிந்தன் படிப்பில் வெகு துடியாய் முன்னேறியிருப்பான். திவாகரன் சிகரெட் பிடிக்கிறான். இருவண்ண வேட்டியணிந்த கட்சிக்காரர்களோடு போலீசும் சேர்ந்து கொண்டு மாணவர்களைத் தாக்குகிற சூழலில் அரவிந்தன் எப்பொழுதும் அகப்பட்டுக் கொள்ளமாட்டான். நிச்சயம் தொழிற்சங்கத்தில் இவன் சேரமாட்டான். மனிதர்களோடும் நகரத்தோடும் ஒத்துப் போகிற குணம் அரவிந்தனுக்குரியது. தன் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் மனிதர்களையும் சூழலையும் மறுக்கிற குணம் திவாகரனுடையது. திவாகரன் அன்புக்காகத் தவிக்கிறான். ஒழுங்குமுறைக்குத் தன்னை உட்படுத்திக் கொள்வதில் அரவிந்தன் ஆர்வமாய் இருக்கிறான். குடும்பத்தோடும் மனிதர்களோடும் தன்னைக் கச்சிதமாய்ப் பொருத்திக் கொள்கிற அரவிந்தனுக்கு எதிர்நிலையில்தான் திவாகரன் இருக்கிறான். அரவிந்தன் ஒத்துப்போகிறவன். திவாகரன் கலகக்காரன். ஒரு வியப்பு – இருவரும் பார்ப்பனர். பார்ப்பன சமூகத்தை வெளிப்படையாய் திவாகரன் வெறுக்கவில்லை. ஆனால் இவன் தரிப்பது வேடம். வேடம் தரிக்கிறதாய் உணர்வோடு வேடம் தரிக்கிறான். இவனால் வேடத்தை களைந்து கொள்ள முடியும். அரவிந்தன், அவனே விரும்பி வேடத்தை ஏற்கிறான். இது வேடம்தான் என்ற உணர்வு அவனுக்கில்லை. திவாகரன் சமூகத்தோடு தன்னை இணைத்துக் கொள்கிறவன். தேவைப்படும்போது தன்னைக் கரைத்துக் கொள்வான். அரவிந்தன் சமூகத்திலிருந்து விலகி குடும்பத்திற்குள் – தனக்குள் தன்னை உறுதிப்படுத்திக் கொள்கிறவன். திவாகரன் சமூக மனிதன். அரவிந்தன் தனி மனிதன். திவாகரன் செயல்படுபவன். அரவிந்தன் தனக்குள் உறைபவன். திவாகரன் நம்மோடு கலப்பவன். அரவிந்தன் நம்மை விட்டு விலகிச் செல்பவன்.

இப்பொழுது உறுதியாகச் சொல்லலாம். ஆசிரியர்களின் பார்வை வேறுபாடுகளுக்கேற்றவாறு கதைத்திட்டம் அமைகிறது. மனித வார்ப்பு அமைகிறது. பார்வைகள் கடுமையாய் / கூர்மையாய் வேறுபடுகிற /

எதிர்நிலைக்குச் செல்கிற நம் சமூகச் சூழலில் இத்தகைய புரிதல், நமக்குத் தேவை.

இப்பொழுது ஒரு கேள்வி எழலாம். இந்த இரு நாவல்கள் வழியே பார்ப்பனீயம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறதா? எந்த வகையில்? பார்ப்பனீயம் பற்றி உடன்பாட்டாடோ எதிர்மறையாகவோ இரு ஆசிரியர்களும் பேசவில்லை. இரு நாவல்களிலும் உறைந்திருப்பது, மௌனம். திவாகரனை, அவன் சூழலில் இருக்கும் பெரியவர்கள், நீ பார்ப்பனன், பார்ப்பனன் என்பதற்கு தகுந்த மாதிரி உன் செயல் இல்லை, குணம் இல்லை என்று கடிந்திருப்பார்கள். திவாகரனும் பதில் சொல்லியிருப்பான். ரொம்பவும் இறுக்கியிருந்தால் உங்கள் பூணூலை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று எடுத்து எறிந்திருப்பான். இப்படி வேடந்தாங்கல் நாவலின் மௌனத்தை உடைத்து நாம் பொருள்படுத்தமுடியும். காலத்துளி நாவலின் மௌனத்தை உடைத்தால் வேறு பேச்சு வெளிப்படும். 'நான் பூணூல் தரித்தால், காயத்ரி சொன்னால், உங்களுக்கென்ன? என் சுதந்திரம் எனக்கு' என்று அரவிந்தன் பேசுவான்.

இப்படி அர்த்தப்படுத்துவது பார்ப்பனீயமா? இதற்கு மேலும் நாம் பார்க்க வேண்டும். குடும்பத்திற்குள், தனக்குள் அரவிந்தன் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வது, பார்ப்பனீயமா? குடும்பச்சூழலை வெட்டிக் கொண்டு திவாகரன் வெளியே வருவது பார்ப்பனீய மறுப்பா? வனஜா தனக்கென தன் குடும்பத்திற்கென நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ள அப்பாவிடம் தொடர்ந்து பறிக்கிறாள். பாரம்பரியம் இவளுக்குள் இப்படி குடும்பம் என்ற அமைப்பைத் திணித்திருக்கிறது. இது பார்ப்பனீயமா? மைதிலியும் சரி, சுபாஷினியும் சரி, மருத்துவப் படிப்பில் தம்மை முழுசாய் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். மருத்துவக் கல்வியும் அதில் தம்மை முழுசாய் ஈடுபடுத்திக் கொள்ளலும் பார்ப்பனீயமா? விசுவநாத பெரியப்பா பிரமுகர், தொழிலதிபர். உறவுக் குடும்பங்களை தன் கருணை / கண்டிப்பு என்ற குடைக்கீழ் வைத்திருக்கிறார். இதற்குள் செயல்படுவது பார்ப்பனீயமா? எல்லாப் பெண்களும் கணவன்மாரை, பெரியவர்களை மறுப்பின்றி ஏற்றுச் செயல்படுகிறார்கள். இது பார்ப்பனீயமா? வனஜாவும் அரவிந்தனும் இறைச்சி என்றவுடன் அருவருப்பை வெளிப்படையாய்த் தெரிவிக்கின்றனர். நெய் மணக்கும் அடை இருவர்க்கும் பிடிக்கிறது. இதற்குள் செயல்படுவது பார்ப்பனீயமா? திவாகரன் கூட குடும்பம் செய்யும் அதிகாரத்திற்கெதிரான கலகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறானே ஒழிய அந்தக் கலகத்தின் தத்துவத்தை அதன் விரிவை அவன் இன்னும் அறிவுபூர்வமாய்க் கண்டுகொள்ளவில்லை. கண்டு கொள்வானென்று நாம்

நம்பமுடியும். யூனியன் அப்புறம் தனக்கென ஒரு குடும்பம் என்ற பயணத்தின் போதும் தனக்குள் சுருங்கிக் கொள்கிற ஆபத்து நம் சமூகச் சூழலில் இருக்கத்தான் செய்கிறது. பார்ப்பனீயம் என்று பேசும்பொழுது நம் சமூகச் சூழலை நினைத்துக் கொள்கிறோம். தான், தன் படிப்பு, தன்குடும்பம், தனக்கான எதிர்காலம் என பெரும்பாலானவர்களை ஒரு முனைக்குள் ஒற்றைப் பரிமாணத்திற்குள் திணிப்பதன் மூலம் நம் சமூகத்தின் ஆதிக்கச் சக்திகள் தம் வெற்றியை அறிவிக்கின்றன. ஒற்றைப் பரிமாணத்தினுள் சுகத்தையும் பாதுகாப்பையும் பலர் உணர்கின்றனர். மனித வாழ்வின் ஆற்றலும் அழகும் கொண்ட பிற பரிமாணங்களைப் பற்றிய உணர்வு இவ்வகை மனிதர்க்கு இல்லை. அவ்வப்பொழுது நீருக்குள்ளிருந்து வெளியே வந்து காற்றை உள்ளிழுத்துக் கொள்கிற வாழ்க்கையே இவர்களுக்குப் போதுமானது. ஆதிக்கத்தோடு கறாராய் ஒத்து இயங்குவது பார்ப்பனீயம் என்று சொல்லலாமா! பார்ப்பனர் பற்றி மட்டும் இப்படி சுட்டிக்காட்டிவிட்டு பிற சாதியினர் தம்மை மறைத்துக் கொள்ளும் சாத்தியம் இருக்கிறது. இறைச்சி உண்பவர்களை, சேரிவாசிகளை அருவருப்பாய், அவர்களை தீண்டத்தகாதவராய் ஒதுக்குவதில் பார்ப்பனீயம் செயல்படுகிறதா? இது மரபாக வருகிற பார்ப்பனீயம். உயிர்களின் மீது தங்களுக்கு கருணை உண்டு என்று இந்தப் பார்ப்பனீயம் சொல்லமுடியாது. அப்படியானால் இந்த வெறுப்பினுள் மறைந்திருப்பது என்ன? இறைச்சியின் இன்னொரு வடிவம், வெண்மை நிறத்தில் பால். பால் எப்படி புனிதமாயிற்று? நெய்யின் புனிதம் இன்னும் அதிகம். இப்படி வகைப்படுத்தியதில் பார்ப்பனீயத்தின் பங்கைச் சொல்ல முடியும். இவ்வளவுதான் பார்ப்பனீயமா? ராம்கி இடைவிடாமல் படிக்கிறான். பாடநூல்களையா? இன்னும் பிற அறிவு நூல்களையா? இவன் அறிவாற்றல் மிகுந்த பேராசிரியன் ஆவான். அறிவைச் சேகரிப்பதில் தவறு சொல்ல முடியுமா? அறிவாற்றலில் சமூகத்தின் பங்கை மறுத்து தன் பங்கே முதன்மையானது என்று பேசுவது தனிநபர்வாதம். இந்தத் தனிநபர்வாதத்துக்கு பார்ப்பனீயப் பெயரைச் சூட்டுவது சரிதானா? பார்ப்பனீயத்திற்குள் முடங்குவதற்கும் அதிலிருந்து விடுபடுவதற்குமான இரு வேறு வாய்ப்புகள் ராம்கியின் முன் உள்ளன. இப்படிச் சில கேள்விகளை எழுப்பி விவாதிப்பதன் மூலம் நம் சமூகச் சூழலில் பார்ப்பனீயம் என்ற சொல் போர்த்திருக்கிற மௌனத்தை உடைத்து உண்மை காணமுடியும்.

காலத்துளி– 1990
வேடந்தாங்கள் – 1991

சின்னப்ப பாரதி :
சங்கம்

1. நாவலில் வரும் ஒரு குறிப்பைக் கொண்டு 1962 வாக்கில் கொல்லிமலை வட்டாரத்தின் நிலவரங்களை வைத்து எழுதப்பட்ட நாவல் என்று கருதலாம். 78–இல் நாவலை எழுதத் தொடங்கி, 83–ல் ஆசிரியர் அதனை முடித்திருக்கிறார். 78 – 83 கால நிலவரங்கள் நாவலில் இடம்பெறுவதாகக் கொள்வதற்கில்லை. நாவலில் சொல்லப்பட்ட மலைநில மக்களின் வாழ்க்கை, அவர்களின் சமூக அமைப்பு, கீழ்நாட்டு மக்களால் அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட பாதிப்பு, பொது உடைமையாளர்களின் தொடர்போடு இளைஞர்கள் நடத்திய போராட்டங்கள் முதலியவற்றைச் சரிபார்த்துக் கொள்ளத்தக்க விவரங்கள் நம்மிடம் இல்லை. நாவல் தரும் விவரங்களில் ஆசிரியரின் கற்பனை என்ற அம்சத்தை ஒதுக்க முடியாது. எனினும், மக்களின் எதார்த்த வாழ்க்கை பற்றி ஆசிரியர் தரும் விவரங்களை நாம் முற்றாக ஒதுக்குவதற்கில்லை. ஆசிரியர் விவரித்த முறையில் சந்தையை மேலே கொண்டு வருவதற்கான போராட்டம் நடைபெற்றதா அல்லது இந்தப் போராட்டம் மக்களிடம் நம்பிக்கையை அல்லது ஒரு தத்துவத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் கற்பனை கலந்து சொல்லப்பட்டிருக்கிறதா என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். இவை பற்றித் தெளிவில்லாத நிலையில், ஒரு நாவலைப் பற்றிய படிப்பு என்ற முறையில்தான் இந்த நாவல் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு வரலாற்று நாவல் என்ற தோற்றத்தைத் தருகிற இந்த நாவலில் வரலாற்றில் நிகழாத சம்பவங்கள் சேர்க்கப்பட்டிருக்கும் என்றால், இதற்காக ஆசிரியரை நாம் குறை சொல்வதில் தவறிருக்கவும் முடியாது.

2. சின்னப்ப பாரதியின் "சங்கம்" என்ற நாவலின் சமூகத்தளம் விரிவானது. "தாகம்" என்ற நாவலின் சமூகத்தளம் இந்த அளவிற்கு விரிவானதாக இல்லை. கொல்லிமலை பல நாடுகளைக் கொண்டது. நாவலில் இடம்பெறும் பிரதேசம் ஒரு குறிப்பிட்ட வட்டாரம்தான் எனத் தெரிகிறது. சமூகத்தளம் என்பதோடு கொல்லிமலையின் இயற்கைச் சூழல், மலைமக்களின் நெடுங்கால மரபு ஆகியனவும் நாவலின் விரிவான களமாக அமைகின்றன. மலை மக்களின் சமூக அமைப்பில் சில மரபுகளை – கட்டுப்பாடுகளை நிர்வகிக்கும் சமூக அமைப்புப் பற்றிய விவரங்களும் நாவலில் இடம்பெறுகின்றன. தர்மகர்த்தா, ஊர்க்கவுண்டர் ஆகியவர் இந்த அமைப்பின் நிர்வாகிகள். ஆண், பெண் உறவு தொடர்பாகவும், சாகுபடி

பற்றிய மரபை மீறுவது தொடர்பாகவும் வழக்குகள் இங்கு விசாரணைக்கு வருகின்றன. குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை தரப்படுகிறது. தர்மகர்த்தா ஊழல் செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்கனவே அமைந்திருக்கின்றன.

மலை மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மை. பன்றி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு ஆகியவை துணைத் தொழில்கள். இவர்கள் வாழ்வில் வறுமை ஒரு நிரந்தரமான பிரச்சனை. மழை போதுமான அளவு இல்லை என்பது ஒரு காரணம். பிற காரணங்கள் முக்கியமானவை: கீழ்நாட்டில் கூடும் சந்தைக்குத்தான் இவர்கள் தம் பொருட்களை விற்பனைக்குக் கொண்டு செல்லவேண்டும். வியாபாரிகள் தந்திரமாகவும், வன்முறை அடிப்படையிலும் விலையைக் குறைத்துப் பொருட்களைப் பெறுகின்றனர். வனத்துறை அதிகாரிகளுக்கு ஒயாமல் லஞ்சம் தரவேண்டியுள்ளது. புறம்போக்கு நிலத்தை சாகுபடி செய்வதாகவும், காடுகளுக்குள் கால்நடைகளை மேய்ப்பதாகவும், மரங்களை வெட்டுவதாகவும் குற்றம் சொல்லி இவர்களிடம் பணம் பறிக்கின்றனர். ஊர்ச்சபையில் தர்மகர்த்தா தரும் தண்டனைக்காகவும் பணம் தேவைப்படுகிறது. இதன் காரணமாகக் கந்துவட்டிக்குக் கடன் வாங்குகிறார்கள். கந்துவட்டிக்காரன் அடியாட்கள் மூலம் இவர்களை அடிமைப்படுத்துகிறான். இவர்களின் பெண்களை அழைத்துச் செல்கிறான். கட்டி வைத்து அடிக்கிறான். கால்நடை வாங்க பணம் கொடுப்பதற்கு ஊர் மணியகாரர் தொடங்கி அதிகாரிகள் பெறும் லஞ்சம். இப்படி நிலவும் சூழலில் மலைமக்கள் நிரந்தரக் கடனாளிகள், அடிமைகள். புறம்போக்கு நிலங்களை இவர்கள் சாகுபடி செய்தார்களென்று பொய்யாகக் குற்றம்சாட்டி, அரசு, காவல்துறையின் ஒத்துழைப்போடு இவர்களை வெளியேற்றுகிறது.

நாவலின் சமூகப் பின்னணியென்று இவற்றைக் குறிப்பிடலாம்.

3. மலைமக்களை அடிமைப்படுத்தும் சூழலிலிருந்து, அவர்களை மனிதர்களாக்கவும், விடுதலை நோக்கி செலுத்தவும் தேவையான சில முயற்சிகளே நாவலின் மையம். சடையனும் அவன் நண்பர்களும் கீழ்நாட்டிலுள்ள பொது உடைமையர்களின் உறவோடு சங்கம் அமைத்துச் செயல்படுகின்றனர். சந்தையை மேலே கொண்டு வருவது ஒரு முக்கியமான செயல்திட்டம். கந்துவட்டிக்காரன் பத்திரத்தின் மூலம் தந்த கடனை சட்டத்தின் அடிப்படையில் வசூலித்துக் கொள்ளலாம். கடனைத் திருப்பித் தரவில்லை என்பதற்காகப் பெண்களை இழுத்துச் செல்லக்கூடாது என்பது இன்னொரு திட்டம். புறம்போக்கு நிலங்களில் மலைமக்கள்

சாகுபடி செய்வதாக அரசு சொல்வதை மலைமக்கள் ஏற்கமுடியாது. நிலம் மலைமக்களின் பாரம்பரிய உரிமை. நிலத்தைவிட்டு வெளியேற்றும் அரசின் நடவடிக்கையைத் தடுக்க வேண்டும். இதற்காகப் போராட வேண்டும். மலைநில மக்கள் அரசைக்கண்டும், கந்து வட்டிக்காரனைக் கண்டும் அஞ்சுபவர்கள். தர்மகர்த்தா அதிகாரிகளோடு ஒத்துழைக்கவும் செய்கிறான். மலைமக்களை இத்தகைய கோழைத்தனத்திலிருந்து விடுவிக்க வேண்டும். ஆணும், பெண்ணும் கொள்ளும் உறவு சுதந்திரமாக இருக்கட்டும். ஊர்ச்சபை தலையிட வேண்டியதில்லை. இப்படி சில திட்டங்களோடு சடையனும் அவன் நண்பர்களும் சங்கம் அமைத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள். இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலிருந்து திரும்பிய சீரங்கன் மூலம் சடையன் சங்கம் பற்றித் தெரிந்து கொள்கிறான். சிறையிலும், வெளியிலும் தலைவர்களைச் சந்திக்கிறான். அவர்களால் ஆட்கொள்ளப்படுகிறான். சடையனுக்கும் அவன் தந்தை திருமனுக்கும் இதனால் இடையில் மனத்தளவு பிளவு ஏற்படுகிறது. சடையனோடு ரங்கன் மட்டுமல்லாமல் வெள்ளையன், பெரியசாமி, ஆண்டி போன்றவர்களும் ஒத்துழைக்கின்றனர். சிறையில் தோழர் குமார் என்பவரைச் சந்திக்கின்றான். தொழிற்சங்கத் தலைவர் வேலுசாமி தேவைப்படும்போதெல்லாம் இவனை நெறிப்படுத்துகிறார் பொன்னம்மாள் போன்ற பெண்களும் இவன் செயலை ஆதரிக்கின்றனர். சப்-கலெக்டர் மனிதத்தன்மை மிக்கவர். சந்தையை மேலே கொண்டு வருவதற்கு அவர் ஒத்துழைப்பு கிடைக்கிறது. கந்து வட்டிக்காரன் பெண்களை இழுத்துச் செல்வதை ஊர்மக்கள் இனி ஏற்க முடியாது என்ற உறுதி மக்கள் மத்தியில் ஏற்படுகிறது. சங்கம் நிலைபெறுகிறது. தாங்களும் மனிதர்கள்தான். விடுதலை பெறும் உரிமை தங்களுக்கும் உண்டு. இந்தியாவுக்கு வந்த சுதந்திரம் தங்களுக்கும் வந்து சேரவேண்டும். இதற்காக சங்கம் செயல்படுகிறது. இதைத்தான் நாவலின் கரு என்று சொல்லலாம்.

தோழர்கள் மற்றும் தலைவர்களைப்பற்றி ஆசிரியர் தரும் விவரிப்புகள், தலைவர்களை ஒளிவட்டத்தோடு சித்தரிக்கின்றன. தலைவர்களின் எளிமை, அறிவாற்றல், நேசம் முதலியவை பிரமிப்புக்குரியவை. அவர்கள் தரும் அறிவுரைகள் நிச்சயம் செயல்திட்டத்தை நிறைவேற்றத்தக்கவை. இந்த நோக்கத்தோடு ஆசிரியர் செய்யும் விவரிப்புகள் நாவலின் எதார்த்தத்தளத்தைப் பாதிக்கக் கூடியவை. ஆசிரியரின் கட்சி சார்பு இவரை இப்படி எழுத வைத்திருக்கிறது என்று எவரும் கூற இயலும். நாவலில் மூன்றில் ஒரு பங்கு இத்தகைய சித்தரிப்புகளைக் கொண்டிருக்கிறது. சந்தை மேலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை நிலைநிறுத்துவதில் சிரமங்கள்

ஏற்படலாம். நல்ல மனிதர் என்று நாவலில் விவரிக்கப்படுகிற சப்-கலெக்டர் மாற்றப்படலாம். உடனே பிரச்சனை தொடங்கிவிடும். கூட்டுறவு சங்கம் மாதிரி அமைப்பு எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. பத்திரத்தின் அடிப்படையில் கடனை வசூலிக்க நீதிமன்ற நடவடிக்கைகள் தொடங்கலாம். அதற்காக மலைப்பகுதிக்கு காவல்துறை வந்து சேரலாம். நாவலின் இறுதிப் பகுதியில் திருமன் கைது செய்யப்பட்டு போலீஸ் லாரியில் ஏறியப்படுகிறான். சடையனும், அவன் தோழர்களும், அரசு அதிகாரிகள் நட்ட கொடிகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு நிலத்திற்குள் நுழைகிறார்கள். போதிய காவலர் இல்லை. துப்பாக்கிசூடு நடத்துவதற்கு இப்போது அதிகாரம் இல்லை என்று அதிகாரி சொல்லுகிறான். சில நாட்களில் ஆயுதப் படையோடு அவன் வந்து சேர்வான். சடையன் முதலியவர் கொல்லப்படலாம். அல்லது சிறைக்குச் செல்ல நேரலாம். இம்மாதிரி நிறையப் பிரச்சனைகள் இருக்கின்றன. வாசகர் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். 1978-ல் நாவல் எழுதப்படுகிறது. 1968-க்குப்பின் நாடு முழுவதும் நக்சல்பாரி இயக்கம் பரவியது. இந்த மலைப்பிரதேசம் எங்களுக்குச் சொந்தம். அரசு அதிகாரத்தை நாங்கள் ஏற்கமாட்டோம். எங்களிடம் இருந்து ஏமாற்றி நிலத்தைப் பறித்துக்கொண்ட வியாபாரிகள், கீழ்நாட்டு மக்கள் எங்களுக்கு எதிரிகள். அவர்களை ஒழித்துக் கட்டுவது எங்கள் வேலை என்ற முழக்கத்தோடு தோன்றியது நக்சல்பாரி இயக்கம். ஆசிரியர் சின்னப்ப பாரதி நக்சல்பாரி இயக்க அரசியலை ஏற்காதவர். ஆகவே சங்கம் நாவலில் சி.பி.எம். அரசியலைத்தான் முன்வைக்கிறார். 1962 வரையிலான கதை என்ற குறிப்பு இவர்தம் நிலைபாட்டை நியாயப்படுத்தும் நோக்கமுடையது. நாங்களும் ஆயுதம் தரிப்போம் என்ற குரல் நாவலில் இல்லை.

4. நாவலை முழுமையாக எடுத்துக் கொண்டால், தரமான மிகச்சிறந்த நாவல் என்று இதனை மதிப்பிடுவதற்கேற்றவாறு பல அம்சங்கள் நாவலில் உள்ளன. அளவில் பெரியது இந்த நாவல். 45 இயல்களைக் கொண்டது. கொல்லிமலை பற்றிச் சங்க இலக்கியத்தில் அறிகிறோம். அடுத்தபடி நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய இலக்கியம் என்று இந்த நாவலைத்தான் சொல்லமுடியும். மலைநில மக்கள் பற்றி தமிழில் ராஜம்கிருஷ்ணன் எழுதிய "குறிஞ்சித்தேன்", சு. சமுத்திரம் எழுதிய "உயரத்தின் தாழ்வுகள்" தவிர வேறு நாவல்கள் இல்லை. இவ்விரண்டு நாவல்களைவிட மிக விரிவாக எழுதப்பட்டிருக்கிறது இந்த நாவல். கொல்லிமலை மக்கள் சமூகம் பற்றி ஏராளமான விவரங்களை இந்நாவல் கொண்டுள்ளது.

ஊர்க்கூட்டம், விசாரணை முறை, தண்டனைகள், மலைமக்களின்

திருமணம், கருமாதி போன்ற சடங்குகள். வேளாண்மை முறை, இயற்கையழகு, பறவைகள், விலங்குகள் பற்றிய விவரங்கள். மலைவாசி ஒரு நகரத்தில் கார், பஸ், லாரி, சினிமாத் தியேட்டர் ஆகியவற்றை எதிர்கொள்ளும்பொழுது அவன் மனநிலை. வக்கீல் வீட்டில் அவன் மனநிலை. கீழே நடைபெறும் சந்தையில் வியாபாரிகளின் ஆணவத்துக்கும், ஆசைகாட்டலுக்கும் மலைவாசி உட்படும் நிலை. கந்துவட்டிக்காரனின் அடியாள் சுக்கிரப்பள்ளன் செய்யும் திமிர்த்தனம், பன்றி வேட்டை, மலைநிலமக்களின் குடிசை, பன்றி வளர்ப்பு, திருமணப் பேச்சு, நிலத்தின்மீது அவர்கள் வைத்திருக்கும் பற்று, அதிகாரிகள் முன் அவர்கள் மனநடுக்கம் இப்படி நூற்றுக்கணக்கான விவரங்கள் நாவலில் நுணுக்கமாகச் சொல்லப்படுகின்றன. நாவலில் நிறைய மனிதர்கள் இடம்பெறுகிறார்கள். ஒவ்வொருவரையும் அவரது தோற்றம், முகபாவனை, பேச்சுமுறை ஆகியவற்றோடு தவறாது சித்தரிக்கிறார் ஆசிரியர். வியாபாரிகளும், மலைநிலமக்களும் பேசிக்கொள்வது பற்றிய விவரிப்பில் ஆசிரியரின் உரையாடல் திறன் சிறப்பாக வெளிப்படுகிறது. பிடாரியைப் பெண் கேட்டு வரும்பொழுது பெண் வீட்டாருக்கும், மணமகன் வீட்டாருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் இன்னொரு நல்ல சான்று. இயற்கை வர்ணனை பற்றிச் சொல்லும் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் ஆசிரியரின் கவித்துவம் அற்புதமானது. நாவல் நெடுகிலும் நூற்றுக்கும் மேற்பட்ட பழமொழிகளை சந்தர்ப்பத்திற்குத் தக்கமுறையில் இணைத்திருக்கிறார். மக்களின் பேச்சுமொழியில் பழமொழிகள் உயிர்த்திறனோடு இயங்குவதை ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

கொல்லிமலை நிலமக்கள் மத்தியில் வேசித்தனம் என்ற குற்றச்சாட்டு ஆண்கள் மீதுதான் சொல்லப்படுகிறது. பெண் ஒருத்தி வேசியாகக் கருதப்படுவதில்லை. இந்த அரும்பண்பை ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் விவரித்துள்ளார். வேசித்தனம் பெண்ணுக்கு இல்லை என்பதற்காகப் பல ஆடவர்களோடு பெண்ணின் தொடர்பு நாவலில் பெருமைப்படுத்தப்படவும் இல்லை. திருமணமான பிடாரி தன் வாழ்நாள் முழுவதும் ஒரு கணவனோடுதான் வாழ வேண்டுமென்று உறுதி கொண்டிருக்கிறாள். திருமன் தன் முதிர்ந்த வயதில் மனைவியிடம் அதிக அளவில் நேசம் கொள்வதை ஆசிரியர் அழகாகச் சித்தரிக்கிறார். பொன்னம்மாள் குழந்தைப் பேற்றின்போது அனுபவிக்கும் வேதனை தீர்வதற்காக அவளிடம் முதல்முறை உறவுகொண்ட சர்க்கரைப்பட்டி மைனர் அழைத்துவரப்படுகிறான். பிரசவ வேதனையில் துடிக்கும் பொன்னம்மாள் முன் மைனர் கண்ணீரோடு நிற்கிறான். விளக்கொளியை வணங்குகிறான். இந்தக் காட்சி வாசகன் மனத்தை நெகிழ்விக்கிறது. குற்ற உணர்வு இங்கு

யாரிடத்தும் இல்லை. நாவலில் இரண்டுக்கும் மேற்பட்ட இடங்களில் ஆபாச உணர்வு வெளிப்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது. பிடாரி குளித்துக் கொண்டிருக்கிறபொழுது திருமன் வந்து சேர்கிறான். இது வேண்டாத வர்ணனை. திருமணத்திற்குப் பின் பிடாரி குளிக்கும்போது திருமன் பார்க்கிறான். திருமனும், திருமியும் ஓய்வாக அமர்ந்து உரையாடும் இன்னொரு பகுதி. இவை நாவலுக்கு இன்றியமையாத இடங்கள் அல்ல. இவற்றைத் தவிர்த்திருக்கலாம். திருமனும், அவன் மகன் சடையனும், சடையனின் சங்கச் செயல்பாடு காரணமாக மனம் வேறுபடுகின்றனர். இறுதியில் திருமன் தன் மகனைப் பார்த்து, "இந்தச் சோலையைப் பார்த்துக் கொள்வது உன் கடமை" என்று சொல்கிறபோது, மகன் மீது கொண்டிருந்த கோபம் முற்றாகத் தீர்கிறது. நாவலின் அழகை இவ்வாறு மேம்படுத்தும் இடங்கள் பல உள்ளன. நாவலில் இடம்பெறும் அனைத்து மனிதர்களும் அவரவர்க்குரிய மரியாதையோடு சொல்லப்படுகின்றனர். சங்கத்தின் கூட்டங்கள், ஆலோசனைகள், முடிவெடுக்கும் முறை ஆகியன உரிய முறையில் சொல்லப்படுகின்றன. சடையன் தன்னைத் தலைவனாக எந்த இடத்திலும் திணித்துக் கொள்ளவில்லை. மக்களுக்குத் தலைமை தாங்குவது, உள்ளூரைச் சார்ந்தவர்கள்தான் என்ற நீதி கடைப்பிடிக்கப்படுகிறது. நிகழ்ச்சிகளைச் சொல்லும்பொழுதே ஆசிரியர், தாமே நுழைந்து விளக்கங்கள் சொல்லுமிடங்கள் நாவலின் அழகியலைப் பாதிக்கக் கூடியவை.

5. இந்த நாவல் எந்த அளவில் சோசலிச எதார்த்தவாத நாவல் என்பதை நாம் பார்க்க வேண்டும். நாவலில் பொது உடைமை, கட்சி/சங்கம் இடம் பெறுகிறது. வியாபாரிகள், லேவாதேவிக்காரர்கள், அரசு அதிகாரிகள் ஆகியவர்கள் விமர்சனம் செய்யப்படுகின்றனர். கொல்லிநில மக்களின் பாரம்பரிய நிர்வாக அமைப்பு, விமர்சனத்திற்குள்ளாகிறது. இந்தியாவுக்கு வந்த சுதந்திரம் மலைமக்களுக்கு வரவில்லை என்றும் சொல்லப்படுகிறது. மலைநில மக்கள் அறியாமையிலும், மூட நம்பிக்கையிலும், கோழைத்தனத்திலும் ஊறி வாழ்கிறார்கள். இவர்கள் கடுமையான உழைப்பாளிகள். இவர்களின் உழைப்பின் பயனை, உழைப்பில் ஈடுபடாதவர்கள் சுரண்டுகின்றனர். இவர்கள் அடிமை நிலையில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு கல்வி அறிவு இல்லை. இவர்கள் தம்மை மனிதராகக்கூட உணரவில்லை. சங்கம் சில நடவடிக்கைகளைத் தொடங்கிய பிறகு இவர்களில் சிலரேனும் தம்மை மனிதராக உணர்கின்றனர். தம்மை அடிமைப்படுத்தும் சூழலுக்கு எதிராகப் போராட வேண்டுமென்று உணர்கின்றனர்.

எதார்த்தவாதம் என்று இத்தகைய சித்தரிப்புகளைச் சொல்வது சரியாகவே பொருந்தும். எதார்த்தவாதம் பழமைக்கு எதிராக - நிலப்பிரபுத்துவம் எனப்படும் சூழலுக்கு எதிராக முதலாளியத்தின் குரலை வெளிப்படுத்துகிறது. மலைப்பிரதேசம் என்பது, மலைநில மக்களுக்கான நாடு. சமவெளியில் இருக்கும் அரசு, இதைத் தன் நலன்களுக்காக ஆக்கிரமிக்கிறது - இம்மாதிரிக் குரல் நாவலில் இல்லை. இது புரட்சியாளனின் - மார்க்சியனின் புரிதல் என்பதில் ஐயமில்லை. ஆக்கிரமிப்பு என்று புரிந்து கொண்டால், இதை அகற்றியாக வேண்டும். இதற்குத்தக்கது ஆயுதப் போராட்டம். இதற்குக் குறைவான பேச்சுக்கு இடமில்லை. நாவலில் இந்தக் குரல் இல்லை, நிலம் வேண்டும் என்பதுதான் நாவலின் குரல். காடுகளின்மீது உரிமை வேண்டும் என்பதுதான் நாவலின் குரல். கடன் தொகையைத் திருப்பித்தரமாட்டோம் என்பது நாவலின் குரல் அல்ல. கந்து வட்டிக்காரனின் கொடுமை கூடாது என்கிறது நாவல். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் சுதந்திரமான உறவு தேவை என்கிறது நாவல். இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்பொழுது நாவலில் இயங்குவது, முதலாளியக் குரல். இது சோசலிசத்தின் குரல் என்று சொல்வதற்கில்லை. கட்சி, சோசலிசம் பேசலாம். ஆனால் நடைமுறையில் கட்சி வேண்டுவது முதலாளிய உரிமைகள். முன்னைய நிலைமைகளிலிருந்து இது ஒரு முன்னேற்றம் - முற்போக்கு. மனிதனாகத் தன்னை உணர்வது முதலாளியத்தின் அடிப்படைக் குரல்; ஆதாரக்குரல். உலகை நிர்ணயிப்பது, கடவுள் அல்ல, அரசன் அல்ல, மனிதன் என்பது இக்குரலின் பொருள். ஆனால் நடைமுறையில் முதலாளியம் இயன்றவரை முன்னைய சமூகத்தோடு பகை உறவை வளர்த்துக் கொள்ளவில்லை. கூடியவரை அதனோடு ஒத்துப் போகிறது. இந்நிலையில் மனித உரிமைகளைப் பற்றி முதலாளியம் பேசுவதில்லை. சோசலிசவாதி பேச நேர்ந்திருக்கிறது. இது புதிய ஜனநாயகம் என்று பெயர் பெறுகிறது. புதிய ஜனநாயகம் என்பது அடிப்படையில் மக்களை மதிக்கிற, மக்கள் உரிமைகளை நிலைநாட்டுகிற முதலாளியம். இந்த அர்த்தத்தில் "சங்கம்" நாவலை சோசலிச எதார்த்த நாவல் என்று சொல்லமுடியுமா? என்பது கேள்வி. புதிய ஜனநாயகம் என்பது ஆசிரியருக்கு உடன்பாடாக இருக்கமுடியாது. தொழிற்சங்கம் பற்றி, பொதுஉடைமை பற்றிச் சொல்வதால் இது சோசலிச எதார்த்த நாவல் என்பது முன்னுரை தந்த ஆர்.கே. கண்ணன் அவர்களின் கருத்து. நாம் இதை ஏற்க வேண்டியதில்லை. விமர்சன எதார்த்தம் என்ற பெயருக்கு இந்த நாவல் ஒத்துச் செல்லும். விமர்சன எதார்த்தம் என்ற போக்கை, முற்போக்கு வட்டாரம் சார்ந்தவர்கள் சொல்லிக் கொள்ளவும் இல்லை. மார்க்சியர் சொல்லிக் கொள்வது, சோசலிச எதார்த்தவாதம் என்ற ஒன்றைத்தான்.

இங்கு ஒரு கடுமையான கோட்பாட்டுச் சிக்கலை நாம் எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது.

புதிய ஜனநாயகம் என்ற கட்டத்தில், முன்பு முதலாளியம் செய்யத் தவறிய பலவற்றை நிறைவேற்ற வேண்டும். அதன் பிறகுதான் சோசலிசம் பற்றிய திட்டம் செயல்பட முடியும். முதலாளியத் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சிகளைச் செய்யும்பொழுதே அதற்கு சோசலிசம் என்று பெயரிடுவதன்மூலம், எதிர்காலத்திற்கு உரியதாகிய சோசலிசத்தை அழிக்கிறோம். ஒரு நாவலை சோசலிச எதார்த்தவாத நாவல் என்று பெயரிடும்பொழுது இந்த அழிப்பு வேலைதான் நடைபெறுகிறது. முதலாளிய கட்டத்திலேயே சோசலிசம் பற்றிய உணர்வு வரலாற்றில் ஏற்பட்டிருக்கிறது. இந்த உணர்வு நமக்குள் கனவாக, தீராத ஆசையாக, வெறியாக, இடம்பெற்றிருக்கிறது. உணர்வும் புரிதலும் வேறு வேறானவை. சோசலிசம் பற்றிய புரிதலுடன் உறுதியாகச் சொல்லலாம்: சோசலிச எதார்த்தவாத நாவல் என்று "சங்கம்" நாவலைச் சொல்ல முடியாது.

சின்னப்ப பாரதி :
சர்க்கரை

முதலில் வீரன் குடும்பத்தில் பாம்பு தீண்டி நால்வர் இறந்த கதை சொல்லப்படுகிறது. பையன் எம்.ஜி.ஆர். ரசிகனாக இருந்ததால் விஷம் குடித்து இறந்ததாக வீரனுக்குச் சொல்லப்படுகிறது. பாம்பு தீண்டி செத்தது உண்மையாக இருக்கலாம், நம்பகமாக இல்லை. இவர்களின் சேரிவாழ்க்கை திட்டவட்டமான விவரிப்புகளோடு இல்லை. இவர்களின் பேச்சுமொழி சேரிமொழியாக இல்லை. எம்.ஜி.ஆர். ரசிகன் என்ற விமர்சனம் ஆசிரியரின் அரசியலுக்குப் பொருந்தியது.

நாச்சியப்ப கவுண்டர் இளமை வாழ்க்கை முழுவதும் தில்லுமுல்லுகள் செய்தவர். சிங்கக் கவுண்டர் ஜமீன் மரபினர். மனைவி சமையல்காரனுடன் இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டவள். பின்னர் நாச்சியப்ப கவுண்டரிடமும் உடலை இழக்கிறாள். இந்தப் பெண்ணைப்பற்றி இப்படிப்பட்ட அவதூறுக் கதைக்கு அவசியமில்லை. உடமை வர்க்கம் கலாச்சாரத் துறையில் சீர்கெட்டது என்பதை நிறுவுவது ஆசிரியரின் நோக்கம். இதனால் கலைத்தரம் சீர்குலைகிறது.

நாச்சியப்ப கவுண்டர் தொழில்திறம் மிகுந்தவர். இதற்கான அவரது முன்னைய வரலாறு விவரிக்கப்படவில்லை. அவருக்குச் சுந்தரம் என்ற மகன் இருக்கிறான். மனைவி பற்றிச் சொல்லவில்லை. சிங்கக் கவுண்டரை வசப்படுத்தியதன் மூலம் சர்க்கரை ஆலைத் தொழிலுக்குத் தேவையான கரும்பு பயிரிடும் விவசாயிகளை அவர் சரிப்படுத்திக் கொள்கிறார். வட்டியில்லாக் கடன் தருபவர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற திட்டத்தின் மூலம் முதலீடும் சேர்கிறது. ஜமீன் மரபின் பெருமை விவசாயிகளின் ஒத்துழைப்பைத் திரட்டுகிறது. இம்மாதிரி விவரிப்புகள் சிறப்பாக இருக்கின்றன.

சுந்தரம் எம்.பி.ஏ., படித்தவன். ஆனாலும் அப்பாவின் தொழிலனுபவம் அவனுக்கில்லை. மகனுக்கும் அப்பாவுக்கும் முரண் எழவில்லை. அப்பாவின் தந்திரத்தோடு மகன் முழுமையாக ஒத்துழைக்கிறான். இவர்கள் அனைவரும் ஒற்றைப் பரிமாண மனிதர்க சிங்கக் கவுண்டர் மனைவி தன் மனத்தோடு கொஞ்சமே போராடுகிறா சிங்கக் கவுண்டருக்கும், நாச்சியப்ப கவுண்டருக்கும் முரண் எழவில்லை. (முரண் எழுவது இயல்பு. மனிதர்க்குள்ளும் முரண் உண்டு. இவற்றைச்

த.10.

சித்திரிப்பதன் மூலம் கலைத்தரம் கூடும்). நாச்சியப்பகவுண்டரைவிட சிங்ககவுண்டர் நல்ல மனிதர். விவசாயிகள் சார்பாக தொழிலாளர் போராட்டத்தை விரைவில் முடித்துக் கொள்ள விரும்புகிறார்.

சர்க்கரைத் தொழிற்சாலை காவிரி நதிக்கரையில் அமைக்கப்படுகிறது. கட்டுமான வேலைகளில் தொழிலாளர்கள் 12 மணிநேரம், 16 மணிநேரம் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். வேலைக்குச் சேரும்பொழுதே மேஸ்திரி பரிசம் கோருகிறான். கட்டுமான அதிகாரிகள் பலவற்றை இலவசமாகக் கோருகிறார்கள். தொழிற்சாலை கட்டி முடிந்த பிறகு தொழிலாளர்க்கு சம்பளம் 90 ரூபாய். (இக்கால நிலவரம் நாவலிலிருந்து புலப்படவில்லை). தொழிலாளர் பலவகைத் துயரங்களை அனுபவிக்கின்றனர். முதலுதவிக்கு வழியில்லை. மேலேயிருந்து குழாய் விழுந்து தொழிலாளி இறக்கிறான். 200 ரூபாயோடு சாவு முடிவடைந்து விடுகிறது. கொதிக்கும் சுண்ணாம்பு நீரில் விழுந்த தொழிலாளிக்கு ரூபாய் 500. கேண்டீனில் உணவுப்பொருள் மட்டம். அதிகாரிகளுக்கு தனிக்கூலி. கரும்பு வெட்ட ஆட்களைக் கையில் வைத்துக்கொண்டு, விவசாயிகளைச் சிரமப்படுத்துகிறார்கள். கரும்பு காய்ந்து பொந்து விழுந்தால் சர்க்கரையின் சதவிகிதம் அதிகரிக்கும். எடை குறைந்து விடும். எடை போடும் இயந்திரம் ஒரு டன்னுக்கு ஐம்பது கிலோ குறைத்தே காண்பிக்கும். முதலாளி அறக்கட்டளை ஏற்படுத்தி, தேர்த் திருவிழா நடத்தி வைக்கிறான். குடி தண்ணீருக்கு மோட்டார் போட்டுத் தருகிறான். விவசாயிகள் முதலாளியைத் தெய்வமெனத் துதிக்கின்றனர். அறக்கட்டளையின் மூலம் தொழிலாளர்க்கு எதிராக விவசாயிகளை முதலாளி தயார்ப்படுத்துகிறான்.

தொழிலாளர்களைத் திரட்டி முதலாளியின் தலைமையில் சங்கம் நடைபெறுகிறது. தொழிலாளர் பிரச்னைக்குத் தீர்வு இல்லை. கந்தசாமி அனுபவப்பட்ட தொழிலாளி. இவன் அனுபவத்தோடு சங்கம் தொடங்கப்படுகிறது. வேலை நிறுத்தம். தொழிலாளர்களை அடிக்க விவசாயிகளைக் கொண்டு வருகின்றனர். போலீஸ், துப்பாக்கிப் பிரயோகம், கந்தசாமிக்கு அடி. 200 தொழிலாளிகள் கைது. மருத்துவமனையில் கந்தசாமி. வீரன், கந்தசாமியின் ஆலோசனைப்படி போராட்டத்தை நடத்துகிறான். வீரன் சாகும்வரை உண்ணாவிரதம். தேர்தல். அமைச்சர் வந்து சமரசம். தொழிலாளர் விடுதலை, வழக்கு வாபஸ், போராட்ட நாட்களுக்கு சம்பளம். தேர்தல் முடிந்து புதிய அரசியல் கட்சி பதவி. தொழில் அமைச்சர் வருகை. ஆறுமுகம் எம்.எல்.ஏ., வருகை. தொழிற்சாலையில் வரவேற்பு. ரூபாய் 5,000 நன்கொடை. கந்தசாமி வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறான்.

இப்படி ஒரு போராட்டத்தை ஆசிரியர் சித்திரிக்கிறார். தொழிலாளர்கள் வர்க்க உணர்வு பெறுவதை படிப்படியே சித்திரிக்கிறார். அனுபவம் மிகுந்த கந்தசாமி, அனுபவத்தின் மூலம்தான் தொழிலாளர் அறிவுபெறமுடியும் என்பதற்காகக் காத்திருக்கிறான். மாவட்டத் தொழிற்சங்கத் தலைவர், அதிகாரி மாதிரி பேசுகிறான். பிற தொழிற்சங்கங்களின் ஆதரவு இந்தத் தொழிலாளர்க்குக் கிடைக்கவில்லை. கந்தசாமி ஏற்படுத்தியது சுயேச்சையான தொழிற்சங்கம். ஒருவகையில் இது ஆச்சரியம்தான். கந்தசாமி தொழிலாளர் அனுபவத்துக்காக நிதானமாகக் காத்திருப்பது சிறப்பாக இருக்கிறது. தலைவர் வந்தார், போராட்டம் தொடங்கியது என்றெழுதுவதன் பிரச்சார நெடி இக்கதையில் இல்லை. விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையிலான முரண்பாட்டை எப்படித் தீர்ப்பதென்று முன்னுரையில் ஆசிரியர் விரிவாகப் பேசுகிறார். கதையில் இது முக்கியத்துவம் பெறவில்லை.

சர்க்கரைத் தொழிற்சாலை என்பது இந்திய அளவிலான சந்தையோடும், சிலசமயம் உலகச் சந்தையோடும் தொடர்புடையது. நிர்வாகமும் சிக்கலானது. இந்த அம்சங்கள் கதையில் இல்லை. "அங்குத்தாய்" நாவலில் ரவீந்திரன், நில உடைமைக்காரர்களின் பிற்போக்கான மனநிலை தொழில் வளர்ச்சிக்குச் சாதகமாக இல்லை என்பதை சிறப்பாகச் சொல்லி இருக்கிறார். இந்த அம்சம் மிக முக்கியமானது. சிங்க கவுண்டரின்மூலம் மனப் போராட்டத்தை தீவிரப்படுத்தி இருக்க வேணடும். கரும்பு பணப்பயிர்; பண ஆதிக்கத்திற்கு விவசாயிகளை உட்படுத்துவது சிரமம். இதைப்பற்றியும் ஆசிரியர் மனம் கொள்ளவில்லை. ஒருவகையில் இதை, தொழில் வளர்ச்சியை விரும்பும் மார்க்சியவாதியின் குறை என்றுதான் சொல்ல வேண்டும். விவசாயிகள் நிலத்தைத் தாயென உறவு கொண்டாடுவது பற்றி மிக அழகாகச் சித்திரிக்கும் ஆசிரியர் இதில் கவனம் கொண்டிருக்க வேண்டும்.

கந்தசாமியின் குடும்ப வாழ்க்கை – மனைவிக்கும் கணவனுக்கும் இருக்கும் உறவு நெருக்கம், பிரச்னை இவற்றைச் சிறப்பாக ஆசிரியர் சித்தரிக்கிறார். வீரன் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவன் என்பதனால் கண்ணம்மாவை அவனுக்குக் கட்டிக் கொடுக்கும்பொழுதுதான் அவனுக்குப் பிரச்னை ஏற்படுவதாக ஆசிரியர் கூறுவது நம் சமூக யதார்த்தத்தின் உண்மையை மறைக்கும் முயற்சி. குடும்பத்திற்குள் அவன் வரும்பொழுதே இந்தப் பிரச்னை ஏற்பட்டிருக்கும். தொழிலாளர்களோடு பழகும்போது அவனுக்கு இது நிரந்தரமான பிரச்னை. இவன் தொழிலாளர் தலைவனாக முடியாது. இப்படியெல்லாம் பிரச்னையை எதிர்முனைப்படுத்த ஆசிரியரது

கட்சி விசுவாசம் இடம்தரவில்லை. நாவலில் இது முக்கியமான குறை. வீரன் கந்தசாமியிடமிருந்து திடீரென வர்க்க போதம் பெற்றுக் கொள்கிறான். இதுவும் யதார்த்தமாக இல்லை. தேர்தலின்போது வரும் அமைச்சர் எளிதாகச் சமரசம் செய்துவிடுகிறார். முதலாளியிடம் பேரம் எதுவும் பேசவில்லை. புதியதாக பதவிக்கு வந்த கட்சி தி.மு.க. தான். முதலாளி இந்தப் புதிய கட்சிப் போக்கை அருவெறுப்போடு பார்க்கிறான். இந்த வெறுப்பை விமர்சனம் எதுவுமில்லாமல் ஆசிரியர் தருவதன் மூலம் ஆசிரியரது மனப்போக்கு நமக்குப் புரிகிறது. இந்த இடத்தில் முதலாளி நல்லவராகி விட்டார்.

கதை நேர்கோட்டில் செல்கிறது. கொஞ்சம் அக்கம்பக்கம் பார்த்துக்கொண்டு நாவல் நடைபோடுகிறது. ராசப்பன் கதை, தேர்த் திருவிழா இடையில் வருகிறது. இயற்கையைத் தொடர்ந்து, சமயம் நேரும்போதெல்லாம் அழகாக வருணிக்கிறார். நிறைய உவமைகளையும் பழமொழிகளையும் பயன்படுத்துகிறார். நீண்ட நீண்ட வாக்கியங்கள். சிலசமயம் மோனைகள் தொடர்கின்றன. நம் விவசாயிகள் அழுத்தமானவர்கள். யாரையும் உடனடியாக நம்ப மாட்டார்கள். வெளிப்படையாக இவர்கள் பேசுவதாகத் தோன்றும்பொழுதே உள்ளே இன்னொரு மறுபக்கத்தையும் கொண்டிருப்பார்கள். இந்த அம்சத்தை ஆசிரியர் சிறப்பாகச் சொல்லுகிறார். கதையில் அடர்த்தி குறைவு. நிகழ்வு அதிகம். நாவலின் தரம் பரவாயில்லை. (தொழிலாளர்க்கு வர்க்க போதத்தை ஊட்டும் பாடப்புத்தகம் போல நூல் பயன்படலாம்) காவிரிக் கரையில் ஏற்பட்ட இந்தத் தொழிற்சாலை எது? எந்த ஆண்டில் தோன்றியது? யார் இப்படிச் செய்தவர் என்ற விவரங்கள் தெரிகிற மாதிரியும் நாவலை எழுதியிருக்கலாம். பெரிய அளவில் எழுதப்பட்ட இந்த நாவல் இந்த அளவுக்குத் தக்கவாறு அடர்த்தியான, தெளிவான கதைப்பின்னல்களை, கருவைக் கொண்டிருக்க வேண்டும். (நாவலில் விவரிக்கப்படுவது சுமாராக தொழிற்சங்கப் பார்வைதான். அரசியல்கூட அதிகமாக இல்லை. வாழ்க்கை என்பது உணவு, வீடு, வேலை, குடும்பம், கொஞ்சம் போராட்டம் என்பதற்கு மேல் சொல்லப்படவிலலை. வாழ்க்கையின் தத்துவ முகம் கண்டுகொள்ளப் படவே இல்லை. இது மார்க்சியத்திற்கு பெரும் பலவீனத்தை ஏற்படுத்தக் கூடியது.

தஞ்சை பிரகாஷ் :
கரமுண்டார் வீடு

பெறுதல் :
திரு. சந்திரகாந்தன், "தொடரும்", சிங்கம்புணரி.

அன்பு நண்பருக்கு: வணக்கம்.

"தொடரும்" ஏப்ரல் – ஜூன் இதழில் தஞ்சைப் பிரகாஷ் எழுதிய "கரமுண்டார் வூடு" பற்றிய உங்களின் விரிவான கட்டுரையை படித்து மகிழ்ந்தேன். தஞ்சை பிரகாஷுக்கு இப்பொழுது நாம் செய்ய வேண்டிய நன்றிக்கடன் என்ற முறையில் உங்கள் கட்டுரை என் மனத்தில் ஓர் நெகிழ்வை ஏற்படுத்துகிறது. இந்த நாவல் குறித்து "தமிழ்நேயம்" இதழில் நானும் ஒரு சிறுகட்டுரை எழுதி இருந்தேன். தஞ்சைப் பிரகாஷை பல்லாண்டுகளாக நானும் அறிந்திருந்தேன். தஞ்சை பிரகாஷ் ஒரு கலைக் களஞ்சியம் மட்டுமல்ல, ஒரு கதைக் களஞ்சியமாகவும் திகழ்ந்தார். தமிழ் இலக்கியவாதிகளில் மிகுந்த தனித்தன்மை உடையவர் அவர். அவரது மறைவு உண்மையிலேயே தற்காலத் தமிழ் இலக்கியத்திற்கு ஒரு பேரிழப்பு என்பதில் அய்யமில்லை. கதா – அமைப்புக்காக சில ஆண்டுகளுக்கு முன்பு "பற்றி எரியும் தென்னை மரங்கள்" என்ற அவரது சிறுகதையை நான் தெரிவு செய்ததன் மூலம் அவருக்கு என் அளவில் மரியாதை செய்ததை இப்பொழுது நினைத்துக் கொள்கிறேன். எத்தனையோ பரிசுகளுக்கும், பாராட்டுக்கும் தகுதி உடையவர் அவர். தமிழ் இலக்கியச் சூழலில் தன்னிகரற்ற அவரை கண்டுகொள்ளும் அளவுக்கு நம்மவர்களுக்கு ஆற்றல் இல்லை என்று தான் சொல்லமுடியும். அவரது மேதமையைக் கண்டறிந்து பாராட்டி இருப்பதற்காக உங்களையும் பாராட்டத்தான் வேண்டும்.

17–பக்க அளவில் "கரமுண்டார் வூடு" பற்றி வியந்தும், விரிவாகவும் எழுதி இருக்கிறீர்கள். ஓர் இலக்கிய இதழில் இத்தனை விரிவான ஒரு கட்டுரை இடம் பெறுவது சாத்தியமில்லை. எத்தனை விரிவாக எழுதி இருந்த போதிலும், "கரமுண்டார் வூடு" நாவலை இதுவரை படிக்காதவர்கள் இந்தக் கட்டுரைக்குள் மனநிறைவோடு செல்லத்தான் முடியாது. எனினும் நாவலைப் படிக்க வேண்டும் என்ற தூண்டுதலை உங்கள் கட்டுரை தரும் என்பது உறுதி.

"கரமுண்டார் வூடு" நாவலில் ஏராளமான மனிதர்கள் மற்றும்

நிகழ்ச்சிகள். பக்க அளவிலும் 500/600 க்கு மேற்பட்ட பக்கங்கள். கள்ளர் மற்றும் பள்ளர் சாதிகளுக்கு இடையிலான உறவும், பகைமையும், காமமும் தீயாய் கொழுந்து விட்டு எரிகின்றன. கற்பு என்பதையும் உதறிக் கொண்டு ஆணும், பெண்ணும் இயல்பாய் கொள்ளுகிற உறவு. பகைமையைத் தீர்த்துக் கொள்ளும் முறையில் மனிதர்களைப் பற்றிக் கொண்டு எரியும் நெருப்பு. எட்டு அடுக்கு மாளிகை, எந்நேரமும் சோறு பொங்கும் அடுப்புக்கள், காவிரியில் பெரு வெள்ளம் – இப்படி ஏராளமான காட்சிகள். நான் முன்பு எழுதியபடி கொழுத்த நாவல், கொழுத்த மனிதர்கள். இப்படி ஒரு நாவலை படைக்கும் திறன் வாய்ந்த கொழுத்த மனிதராக தஞ்சைப் பிரகாஷ் திகழ்ந்தார். நாவலின் இந்த அம்சம் குறித்து நீங்கள் அற்புதமாய் எழுதி இருக்கிறீர்கள். இவ்வளவு செறிவாக எழுதப்பட்ட இன்னொரு நாவல் தமிழில் இதுவரை இல்லை. இதையும் நீங்கள் சரியாகச் சொல்லி இருக்கிறீர்கள். நாவலைப் படித்து முடித்த ஆவேசத்தோடு, நீங்கள் எவ்வளவு உணர்ச்சித் துடிப்போடு இந்தக் கட்டுரையை எழுதி இருக்கிறீர்கள். உங்கள் தமிழ்நடை உங்கள் ஆவேசத்தை சிறப்பாகவே காண்பிக்கிறது.

நூற்றாண்டு அளவிலான தஞ்சை மாவட்டம் காவிரிக் கரையில் அமைந்த கரமுண்டார் சமூகக் கதையை இந்த நாவல் விவரிக்கிறது. கரமுண்டார் வீடு என்ற அந்த எட்டு அடுக்கு மாளிகை உண்மையில் இருந்ததா என்பது நமக்குத் தெரியவில்லை. தஞ்சை பிரகாஷ் சித்தரிப்பது போல இப்படி ஒரு சாதி மோதல் அந்தப் பகுதியில் நடைபெற்றதா என்பது பற்றியும் நமக்குத் தெரியவில்லை. காவிரி வெள்ளத்தில் கரமுண்டார் மாளிகை அடுக்கடுக்காக சிதைந்தது குறித்தும் நாவல் சொல்லுகிறது. ஏராளமான கொலைகள் முதலிய பல நிகழ்ச்சிகள். இவை நம்பகத் தன்மையோடு சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கத்தியார் வரவு குறித்தும் நாவல் சொல்வது மிகவும் குறைவுதான். கள்ளர் சமூகம் தன் பெருமிதத்தையும், வீரத்தையும் காத்துவந்த அற்புதத்தை நாவல் சொல்லுகிறது. வரலாற்றில் இதற்கான ஆதாரங்களை தஞ்சை பிரகாஷ் தன் முன்னுரையில் குறிப்பிடவில்லை. வரலாற்று நிகழ்ச்சிகளோடு கற்பனையையும் கலந்துதான் ஒரு நாவல் ஆக்கம் நடைபெறமுடியும் என்பதும் உண்மைதான். எனினும் சிறப்பாக எழுதப்பட்டிருக்கும் இந்த நாவலில் வரலாறு எந்த வடிவில் இடம் பெறுகிறது என்பது குறித்து நாம் அக்கறை கொள்ளமுடியும். இது குறித்து யாராவது ஆராய்ந்து எழுதுவது நல்லது. குறிப்பாக வரலாற்று நிகழ்ச்சியையும் மீறி இந்த நாவலில் சொல்லப்பட்டிருக்கும் இருவேறு சமூகங்களுக்கு இடையிலான உறவு பற்றிய சித்தரிப்பில் நாம் நம்பிக்கை கொள்ள முடியும். இதுவும் ஒருவகையில்

வரலாற்றுப் பதிவு என்பதில் அய்யமில்லை. ஒரு இலக்கியவாதி என்ற முறையில் இப்படி ஒரு வரலாற்றுபதிவை விட்டுச் சென்றதற்காக தஞ்சை பிரகாஷை நாம் என்றும் நன்றியோடு நினைத்துக் கொள்ள முடியும்.

1980 களில் இந்த நாவலைத் தஞ்சைப் பிரகாஷ் எழுதி இருக்கிறார். தமிழகச் சூழலில் தலித்தியம், பெண்ணியம் என்றெல்லாம் உரத்த குரலில் நண்பர்கள் விவாதங்களைக் கிளப்பிய காலகட்டம் இது. பாலியல் குறித்தும் நண்பர்கள் வெளிப்படையாக நிறையவே பேசினர். இவை தவிர தென்மாவட்டங்களில் ஏற்பட்ட சாதி மோதல்களும் நம் கவனத்தில் என்றும் இருக்கக்கூடியவை. இத்தகைய ஒரு சூழல்தான் இப்படி ஒரு நாவலை தஞ்சைப் பிரகாஷுக்குள் தூண்டி இருக்க முடியும்.

தஞ்சை பிரகாஷ் இப்ப்டி சிந்தித்திருக்கக்கூடும். "தலித்தியம் என்றும், பெண்ணியம் என்றும் நீங்கள் பேசுவதைக் காட்டிலும் நான் சிறப்பாக எழுத முடியும். உங்களைக் காட்டிலும் என்னிடம் கொழுத்த அனுபவங்கள் உண்டு. நான் தலித் இல்லை என்ற போதிலும், உங்களால் தொட முடியாத உச்சங்களை என்னால் தொடமுடியும். இதை நான் மெய்ப்பிக்க முடியும்". இத்தகைய ஒரு மனநிலையோடு தான் தஞ்சைப் பிரகாஷ் "கள்ளம்" என்ற முதல் நாவலையும்; பிறகு இந்த நாவலையும் படைத்திருக்க முடியும். கள்ளம் நாவல் கூடியவரை எல்லோரும் படிக்கக்கூடிய வகையில் ஓர் அளவான நாவல். "கரமுண்டார் வூடு" நாவலை சற்று சிரமத்தோடுதான் வாசிக்க முடியும். கரமுண்டார் வூடு நாவலில் நாம் காலம்காலமாக சொல்லிவரும் எத்தனையோ விழுமியங்கள் கடுமையான கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுகின்றன. பேச்சு அளவில் மட்டும் போற்றப்படும் விழுமியங்களைக் கடந்து மனித வாழ்வின் அடிநீரோட்டங்களில் அக்கறை கொண்டவர்கள் மட்டுமே இந்த நாவலை மனக்கலவரம் இல்லாமல் வாசிக்கமுடியும். சாதாரண வாசகர்களையும் பலமுறையும் புரட்டிப் போடுவது இந்த நாவல். கற்பு, பாலுறவு முதலியவை குறித்து உங்கள் விரிவான கருத்துரைகள் சிறப்பானவை.

வழக்கமாக ஒரு நாவலைப் படிக்கும் பொழுது என்னுடைய பார்வை என ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாவல் குறித்த சமூகம் மற்றும் வரலாற்றுச் சார்பை மிகச் சரியாகவே சொல்லியிருக்கிறீர்கள். இவை முழு அளவில் எனக்கு உடன்பாடு. இதற்கு மேலும் ஒரு வாசகன் என்ற முறையில் நாவல் என்னை எப்படி பாதிக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். எந்த ஒரு நாவலையும் வாசகன் தனக்குள் வைத்து வாசிக்க வேண்டும் என்பது என் பார்வை. அதாவது நாவலில்

வரும் பலதரப்பட்ட மனிதர்கள், நமக்கு வெளியில் மட்டுமல்லாமல் ஏதோ சிலவடிவங்களில் நமக்குள்ளும் இருக்கிறார்கள். நாவலைப் படிக்குமபொழுதே நம்மையும் நாம் வாசித்துக் கொண்டிருக்கிறோம். இதுவரையிலான நம் வாழ்வியல் அனுபவங்கள், நமக்குள்ளிருந்து வெளிப்படுவதோடு அவை தமக்குள் இணைப்புக் கொண்டு புதிய பொருளில் நாம் வாசிக்குமாறு முன்வந்து நிற்கின்றன. நாவலைப் படிக்கும்பொழுதே அங்கங்கே நிறுத்தி நம் நினைவுகள் முதலியவைகளைப் புதுப்பித்துக் கொண்டுய், பொருள்படுத்திக் கொண்டும் வாசிக்கிறோம். இப்படி வாசிக்கும்பொழுது தான் நாவல் நமக்கு வசப்படுகிறது. நாவல் வாசிப்பென்பது இப்படித்தான் ஒரு இன்றியமையாத கல்வி ஆகிறது. இலக்கியம் என்பது சுவைதரும் என்பது ஒரு மேற்போக்கான அனுபவம். இலக்கியம் என்பது அது எழுதும்போது மட்டுமல்ல, வாசிக்கும்பொழுதும் நம்மைப் படைக்கவல்லது. இந்தப் படைப்பியக்கம்தான் எழுத்தாளனையும் வாசகனையும் இணைக்கிற அற்புதமான கண்ணி. இப்படி வாசிக்கும் எவரும் நாளடைவில் தனக்குள் இருக்கும் படைப்பாளியைக் கண்டு கொள்வதோடு பிறகு படைக்கவும் முடியும்.

இப்படி இந்த அழுத்தமான நாவலையும் நமக்குள் வைத்து வாசிப்பது பற்றி இங்கு சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தெலகராஜு, நகரத்தில் இருந்து படிக்கிறபொழுது புதிய சில சமூகக் கோட்பாடுகளுக்கு வசப்படுகிறான். கிராமத்திற்கு வரும்பொழுது அவற்றை செயல்படுத்தவும் விரும்புகிறான். ஆனால் மிக விரைவில் கிராமத்து சமூகச் சூழல் தனக்குள் அவனை வசப்படுத்தி விடுகிறது. சூழலுக்கு இடம்கொடுத்த நிலையில் இவனும் காம வசப்படுகிறான். இவன் வாழ்வினுள்ளும் என்னென்னவோ நடைபெறுகின்றன. இறுதிவரை இப்படியே வாழ்கிறான். எப்படியோ இவனுக்குள் ஒரு நீதி உணர்வு மட்டும் நிழலாடிக் கொண்டு இருக்கிறது.

தெலகராஜு நம்மிலிருந்து வேறுபட்டவனல்லன்; இவன் நமக்குள்ளும் இருக்கிறான். என்னதான் கொள்கை கோட்பாடு என்று பேசிக் கொண்டாலும் காமம் முதலியவற்றுக்கு இடம் கொடுக்காமல் இல்லை. சூழல்வசப்பட்டு நாமும்தான் அழிந்து போகிறோம். இந்நிலையில் வறட்டுத்தனமான சில சிந்தனைகளிலிருந்து விலகி நின்று நாம் வாழ்வின் யதார்த்தத்தைப் பார்க்கிறோம். மனிதர்கள் சாதி, பணம், அதிகாரம், வம்புகள், வழக்குகள் முதலிய சூழல்களுக்குள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். சூழலிலிருந்து என்னதான் முயன்றாலும் பெரும்பாலான மனிதர்களால் விடுபட முடிவதில்லை. இவர்கள் நம் புரிதலுக்கு உரியவர்கள் ! "கரமுண்டார் வூடு" ! நாவலில் வரும்

கூடியவரை எல்லா மனிதர்களையும் இந்தச் சூழல்தான் நிர்ணயிக்கிறது. இதன் நெடுங்கால வரலாறுகளைக் குறித்து நமக்குச் சிந்தனைகள் தேவை. எவ்வளவு காலம் மனிதர்கள் இப்படியே வாழ்கிறார்கள். தெலகராஜுவும் அழிந்து போய் விடவில்லை. ஏதோ ஒரு வகையில் இந்தச் சமூகத்தை உருவாக்க விரும்புகிறான். மாயி முதலியவர்கள் இவனோடு ஒத்துழைக்கிறார்கள். காத்தாயம்பாள் இந்த நாவலில் ஒரு தெய்வப் பிறவி போலச் சித்தரிக்கப்படுகிறாள். மூன்று தலைமுறைகளுக்கு மேற்பட்ட கரமுண்டார்குடியில் இவள் ஒரு தெய்வம் / பெண் தெய்வம். சிறு வயது முதற்கொண்டே அம்பாள் என்ற உணர்வு ஊட்டப்பட்டு இவள் வளர்க்கப்படுகிறாள். இவளை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். இவளும் கொழுத்த உடல் வளர்ச்சி உடையவள். காமம் இவளுக்குள் தூண்டுதலை ஏற்படுத்தாமல் இருக்க முடியாது. ஆனால் இவள் பெண் தெய்வம். தெலகராஜு அனுமதிக்க முடியாது. அடக்கப்பட்ட காமம் இவளை என்ன செய்கிறது? இவளுக்கு "அருள்" வருகிறது. அப்பொழுதெல்லாம் இவளை செல்லியும், உமாவும் கட்டி அணைத்துக் கொள்ள வேண்டும். காமத்தில் இவளும் அவர்களோடு புரள்கிறாள். கலியராஜு இவளை கடத்திச் செல்லுகிறான். மூங்கில் புதர்களுக்கு இடையில் வன்முறையோடு இவளைப் புணர்கிறான். தினவு தீர்ந்த நிலையில் அவனை இவள் காதலிக்கிறாள். பெண் தெய்வம் இப்பொழுது எல்லா வரையறைகளையும் கடந்து பெண் ஆகிறாள். இப்படித்தான் மனித அனுபவம் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். காத்தாயம்பாளையும் இப்படி நமக்குள், நம் அனுபவங்களுக்குள் வைத்து வாசிக்க முடியும். நாவல் முழுமையையும் பலமுறை வாசித்து நம்மால் இப்படி அனுபவிக்க முடியும். மனிதர்கள் அவர்கள் அளவில் குற்றவாளிகள் இல்லை. சமூகச் சூழல், வரலாற்றுச் சூழல் என்றெல்லாம் இருக்கின்றன. இவற்றை எளிதாகக் கடந்து விடமுடியாது. இவற்றுக்குள் அகப்பட்டு, மோதி, தகர்ந்து, சாடி, சண்டையிட்டு, செத்து அப்புறம் புதிதாகப் பிறக்கவும் வேண்டியிருக்கிறது. தனிமனிதர் மட்டுமல்லாமல் சமூகங்களும் இப்படித்தான் வாழ்ந்து அப்புறம் அழிந்து, மீண்டும் பிறக்கமுடியும். அனுபவங்களின் வழியே தான் நாம் மேலும் மேலும் மனிதராகிறோம். நெருக்கடி மிக்க வாழ்க்கைச் சூழலில் ஒருவர் முழுமையாக அழிந்து போவதையும், கருணையோடு நம்மால் புரிந்து கொள்ள முடியும். நாவலை மட்டுமல்லாமல் வாழ்க்கையும் இப்படித்தான் வாசிக்கமுடியும்.

தொடரும்

ஏப்ரல் – ஜூன் 2000

எம்.ஜி. சுரேஷ் :
அலெக்சாண்டரும் ஒரு கோப்பைத் தேநீரும்

அன்பு நண்பருக்கு, வணக்கம்.

"அலெக்சாண்டர்" நாவலை படித்து முடித்தேன். என் வியப்புக்கு அளவில்லை. அலெக்சாண்ட ரை இவர் ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கேள்வி தொடக்கத்தில் இருந்தது. உலகில் மிகப்பெரிய படையெடுப்புக்களை நடத்தியவர்கள் பலர் உள்ளனர். ஒரு படையெடுப்பாளனுள், வீரம் மட்டுமல்லாமல் ஆணவமும், அழித்தொழிக்கும் வெறியும் இருந்தால் ஒழிய அவன் வெற்றி பெற இயலாது. அலெக்சாண்டரும் இத்தகையவன்தான் என்ற போதிலும், அவனுக்குள் இன்னொரு மனிதனும் இருக்கிறான். இவனைத் தான் Alter Ego என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். Ego என்பதை "நான்" என்று வைத்துக் கொண்டால் இந்த 'நானுக்குள்ளும்' இன்னொரு எதிர்மறை இருக்கத்தான் செய்கிறது. எந்த ஒரு மனிதனுக்குள்ளும் இப்படி ஒரு எதிர்மறை இருப்பது சாத்தியம்தான். கருணை மிக்க புத்தனுக்குள்ளும் ஒரு எதிர் நிலை இருக்கலாமோ என்னவோ? இந்த எதிர் நிலை பற்றிய புரிதலின் மூலம் தான் அலெக்சாண்டரை ஒரு மனிதன் என்று படைத்துக் காட்டியிருக்கிறீர்கள். இந்தியாவில் போரஸ் மன்னனோடு அவனது உரையாடலில் இந்த எதிர் நிலை இருப்பதை பாட நூல்களில் படித்திருக்கிறோம். துறவி டயோஜினிசோடு அவனுடைய உரையாடலின் போது அலெக்சாண்டர் தனக்குள் சிலிர்த்துக் கொள்வதும் நமக்குத் தெரிந்த செய்திதான். பாடநூல்களில் இந்த எதிர் நிலைக்கு அழுத்தம் தருவதில்லை.

ஒரு நாவல் ஆசிரியன் என்ற முறையில் இந்த எதிர் நிலைக்கு அழுத்தம் தருவதன் தேவையை – நியாயத்தை நீங்கள் உணர்ந்து செய்திருக்கிறீர்கள். ஒரு நாவல் ஆசிரியன் என்ற முறையில் நீங்கள் இலக்கியத்திற்கு நியாயம் செய்திருக்கிறீர்கள். இந்த கூறுதான் என்னை மிகவும் கவருகிறது. நாவலின் இறுதிப் பகுதியில் இந்த கூறு அழுத்தம் பெறுகிறது.

அலெக்சாண்டர் தன் பிறப்பில் ஒரு மாசிடோனியன். அவன் என்னதான் விரும்பினாலும் கலை உணர்வு மிகுந்த ஒரு கிரேக்கனாக அவனால் மாறமுடியவில்லை. இதனாலும் கூட அவனுக்குள் என்றும் ஆத்திரம் அடங்கவில்லை. நாடுகளை வெற்றி கொள்கிறான். பாரசீக மக்கள்

மீது அவன் கொண்ட வெற்றி அவனைப் பெரிதும் பாதிக்கிறது. ஒரு பாரசீகனாக தன்னை மாற்றிக் கொள்ள முயலுகிறான். பாரசீக மன்னன் டேரியசின் மகளை மணக்கவும் செய்கிறான். இதை படைத்தலைவர்கள் / வீரர்கள் விரும்பவில்லை. அவனுக்குள் குமுறுகிறான். மாசிடோனியன் கிரேக்கனாகவும் முடியாது, பாரசீகனாகவும் முடியாது. இது கூர்மையான மனச்சிக்கல். தெலுங்கன் அல்லது தெலுங்கு மொழி பேசுகிறவன் தமிழனாக மாறுவதிலும் இப்படி ஒரு சிக்கல் இருக்க முடியும். இது குறித்து உளவியல் நூல்கள் என்ன கூறுகின்றன என்று தெரியவில்லை.

அலெக்சாண்டர் ஒரு மாமன்னன் என்ற போதிலும் சில தளபதிகளோடு இதமான நட்புக் கொண்டிருக்கிறான். இந்தக் கூறும் இவனை மனிதனாக்குகிறது. மெய்யியல் பார்வை என்னைப் பொறுத்தவரையில் எந்த ஒரு படைப்பிலும் முக்கியமான கூறாக இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். உங்கள் நாவலை நான் பெரிதும் இரசிப்பதற்கு இது காரணம். என்னதான் நாடுகளை வெற்றிகொண்ட போதிலும் தன்னை அலெக்சாண்டரால் வெற்றி கொள்ள முடியவில்லை. ஒரு காய்ச்சல் அவனை வீழ்த்திவிடுகிறது. தன் தந்தையைக்கூட அவன் வெற்றி கொள்ள விரும்புவது. அவனது வீரத்தைக் காட்டவில்லை; மூர்க்கத்தைத்தான் காட்டுகிறது.

நாவலில் என்னைக் கவர்ந்த இன்னொரு முக்கியமான கூறு, இரண்டு எதிர்காலங்கள் பற்றி நீங்கள் சொல்கிற பகுதி. குளோனிங் என்பதன் விளைவு என்னவாக இருக்கமுடியும் என்பதை கற்பனையின் வழியே கூர்மையாக வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். ஆதி மனிதன் மீண்டும் உற்பத்தி ஆவான் என்பதில் ஐயமில்லை. உப மனிதர்களையும் இவர்கள் உற்பத்தி செய்வார்கள். சராசரி மனிதனும் உலகில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள சிரமப்படத்தான் செய்வான். வரலாற்றின் இந்தக் கட்டத்தில் வர்க்கப் போராட்டம் கடுமையாகத்தான் வெளிப்படும்.

மார்க்சியப் பார்வை உங்களுக்கு சிறப்பாகவே கைகொடுத்திருக்கிறது. எதிர்காலத்தில் அறிவியல் செய்யும் புதுமைகள் அற்புதமாகவும், விசித்திரமாகவும் இருக்க முடியும். இவை பற்றிய விவரிப்புக்கள் நிகழ்காலத்தில் இருக்கும் நம்மவர்க்கு தேவையானவை. இங்கும் ஒரு படைப்பாளி என்ற முறையில் நீங்கள் மிகுந்த பொறுப்புடன் செயலாற்றுகின்றீர்கள். சேர்மன் அலெக்சாண்டர் திணறுவதைப் பற்றிய சித்திரிப்பு மிகச் சிறப்பாக உள்ளது.

இன்னும் ஒரு எதிர்காலம் பற்றிச் சொல்கிறீர்கள். வர்க்கப் போராட்டம் – வரலாற்றில் முரண்பாடுகள் தீர்ந்த நிலை. இப்படி ஒரு எதிர்காலத்தில் மனிதனுக்குள் சூன்யம் அபரிமிதமாக வந்து விடும் என்ற கருத்தோடு நீங்கள் மனிதர்களின் தற்கொலைகள்பற்றி சித்திரிக்கிறீர்கள். என்னால் இதை மறுக்க முடியவில்லை. கம்யூனிச சமுதாயத்தில் மனிதர்கள் போராடுவதற்கான காரணங்கள் குறைந்து விடும் என்பதில் ஐயமில்லை. முரண்பாடுகள் கடுமையாக இருக்கும் வரைதான் வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்கள், வெற்றி தோல்விகள், இன்ப துன்பங்கள், காதல் மோதல் முதலியவை. இவற்றைக் கடந்த பிறகு வாழ்க்கை எப்படி இருக்கும்? காலையில் தோட்ட வேலை என்ற வகையில் உடலுக்கான பயிற்சி, பிற்பகல் மீன் பிடிப்பதாகிய பொழுதுபோக்கு, மாலையில் இசையும் நடனமும் – இப்படி ஒரு சித்திரிப்பை மார்க்ஸ் தந்திருக்கிறார்.

மனிதர்களுக்கிடையில் போராட்டங்கள் இல்லை என்றாலும், இயற்கையோடு போராட்டம் இருக்கத்தான் செய்யும். மற்றும் உடலியக்கத்தை மன இயக்கம் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளும் இருக்கும். இப்படியும் சிலர் சொன்ன போதிலும் சூன்யத்தை எதிர் கொள்ளும் போக்கு அதிகரிக்கத்தான் செய்யும். இப்படி ஒரு கம்யூனிச சமூகம் வரவேண்டியதில்லை என்றும் சிலர் சொல்ல முடியும். நாம் வாழுகிற நிகழ் காலத்திலும் சூன்யத்தை நாம் அவ்வப்பொழுது எதிர்கொள்ளத்தான் செய்கிறோம். மெய்யியலாளர்களுக்கு இது ஒரு கடுமையான சிக்கல். உங்களுக்கும் மெய்யியல் அக்கறை இருப்பதை இந்தப் பகுதி சரியாகவே சொல்கிறது.

இப்பொழுது Ego மற்றும் Alter Ego என்கிற கட்டமைப்பில் நீங்கள் இந்த நாவலை படைத்திருப்பது பற்றி எழுதுகிறேன். மகா அலெக்சாண்டருக்கு ஈழத்தமிழன் அலெக்ஸ் ஒரு மறுதலை. மகா அலெக்சாண்டரும் சேர்மன் அலெக்சாண்டரும் அநேகமாக ஒரே வகை மனிதர்கள். கலைஞனாகிய ஈழத்தமிழனும், இறுதியாக வரும் சூன்ய மனிதனும் ஒரே வகை எதிர்நிலை மனிதர்கள். அதாவது என்னதான் போர் வெறியோடு திரிந்தாலும் இந்த அலெக்சாண்டருக்குள் இவனுக்கு மறுதலை என்று சொல்லக் கூடிய முறையில் ஒரு கலைஞன் இருக்கிறான். இத்தகையவனையும் தனக்குள் கண்டு கொள்கிற போதுதான் மகா அலெக்சாண்டர் ஒரு முழு மனிதனாகிறான்.

இந்த முழுமனிதனை ஒரு மனிதனுக்குள் நம்மால் காணமுடியவில்லை என்பது மனித அவலம். ஈழத்தமிழனுக்குள், போர்

வெறியோடு கூடிய அலெக்சாண்டர் இருக்கிறானா? இந்தச் சூனியவாதிக்குள்ளும் ஒரு வெறியனுக்கு இடம் உண்டா? இப்படியெல்லாம் கேட்டுக் கொண்டே இன்னும் நாவலுக்குள் வரும் திசைகளில் நாம் விரிந்து செல்ல முடியும்.

இதே போல பாரசீக மன்னன் மகள் ருக்சானாவும், குர்திய இனப் பெண் போராளி ருக்சானாவும் எதிர்நிலை மனிதர்கள் என்று புரிந்து கொள்ள முடியுமெனத் தோன்றுகிறது. கடைசிவரை பாரசீகருக்கான நியாயம் எதையும் அந்தப் பாரசீக பெண் பேசுவதில்லை. மொழிச் சிக்கல் காரணமாக இருக்கலாம். இப்படி Ego, Alter Ego என்ற கட்டமைப்புக்குள் கார்லோசும், மற்றவர்களும் எப்படி இணைகிறார்கள் என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். இதைப் போலவே மகா அலெக்சாண்டரின் படைத்தளபதிகள்.

நாவலுக்குள் வரலாற்றுப் பேரியக்கத்தை நீங்கள் கொண்டு வந்திருப்பது குறித்து எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. கல்லூரியில் நீங்கள் படித்தது வாலாறாக இருந்திருக்கக்கூடும். இல்லை என்றாலும் மார்க்சியர் என்ற முறையில் வரலாறு உங்களை பெரிதும் கவர்ந்திருக்கக்கூடும்.

மகா அலெக்சாண்டரின் வாழ்வியல் விவரங்களை நான் இன்னுமொரு முறை படித்துக் கொள்ள விரும்புகிறேன். குர்தியர்களின் போராட்டத்தை மிகுந்த அக்கறையோடு வார்த்திருக்கிறீர்கள். ஈழத்தமிழருக்கு நேர்ந்துள்ள வாழ்வியல் கொடுமைகளை நிறையக் கூறுகிறீர்கள். நம் காலத்திலும் எத்தனையோ கொடுங்கோலர்கள், ஆதிக்கவாதிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். சச்சென்யா முதலிய சிக்கல்களையும் நாம் பார்க்கிறோம். இவை பற்றி எல்லாம் தமிழர் என்ற முறையில் இக்காலத்தில் அறிந்து கொள்ளத்தான் வேண்டும். இட்லரைப் போலவே, ஸ்டாலினைப் பற்றியும் மார்கோசு முதலியவர்களைப் பற்றியும் நாம் அறியத்தான் வேண்டும். குர்திஸ்தானின் வரலாறு எதிர்காலத்தில் நமக்கும் நேர முடியும். இந்தியாவினுள்ளும் அலெக்சாண்டர்கள் உற்பத்தியாகலாம். கலைஞர்களின் பாடு படுதிண்டாட்டமாக இருக்கும். ஒரு வேளை அடுத்து வரும் நாவல்களில் கீழ்த்திசை நாடுகளை நீங்கள் உள்ளடக்கி எழுதுவது நமக்குத் தேவை என்று கருதுகிறேன். சீனா X திபெத் என்று எவ்வளவோ எழுதலாம். காஷ்மீர், நாகலாந்து என்றெல்லாம் நாவலுக்குள் வரலாம். தமிழரின் நெடுங்கால வரலாறுபற்றி எழுதாமல் நீங்கள் தவிர்க்க இயலுமா?

பின் - நவீனத்துவம் என்று இன்று பெரிதாக பேசுகிறவர்களுக்கு அனேகமாக வரலாறு, மெய்யியல், விடுதலைக்கான போராட்டங்கள்

குறித்தெல்லாம் அக்கறையில்லை. உத்திகளில் செலுத்தும் அக்கறையோடு நிறுத்திக் கொள்கிறார்கள். இதனையே பெரும் வெற்றி எனச் சாதிக்கிறார்கள். மனிதனை இவர்கள் ஒதுக்கிவிட்டார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு நாவல் என்ற முறையில் வரலாறு, மெய்யியல் முதலியவற்றை உள்ளடக்கி எழுதமுடியும். மனிதனின் பன்முகப் பரிமாணங்களை எடுத்துச் சொல்லுவதற்கு உரிய வடிவம் நாவல் என்பதில் ஐயமில்லை. சமூக அக்கறை என்று சொல்லும் பொழுது மார்க்சியம் உள்ளே வந்துவிடக்கூடாது என்பதை இவர்கள் கவனமாகப் பார்த்துக் கொள்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை இலக்கியப் படைப்பிற்கு மார்க்சியம் தேவை இல்லை. பாலுறவுச் சிக்கல் தொடர்ந்து இருக்கிறது. இந்தக் கரு இவர்களுக்குப் போதும். இன்றையத் தமிழ்ச் சூழலில் உங்கள் நாவல் அனேகமாக அனைவரையும் பரவலாக பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. மார்க்சியமும், பின்–நவீனத்துவமும் இணையமுடியும். உங்கள் நாவலில் காதல் இருக்கத்தான் செய்கிறது. அதை நீங்கள் வெறித்தனமாக சித்திரிக்கவில்லை.

உங்கள் நாவல் தரும் வரலாற்றோடு எகிப்திய வரலாறு படிக்க வேண்டும். பிரமிடுகள் குறித்துப் படிக்க வேண்டும். தமிழில் இவை பற்றியெல்லாம் எழுத முடியும். அலெக்சாண்டர் ஒரு குறியீடு. இப்படிப் பலரையும் குறியீடாக்கி இந்த நாவலைப் படிக்க முடியும்.

உங்கள் நாவலை வேறு எந்த வகையில் வாசிப்பது என்பது குறித்து எழுதுங்கள். Alter Ego என்று சொல்வதற்கு வேறு அர்த்தம் உண்டா? உங்கள் நாவலின் மையம், மனிதர்கள் – வரலாறு முதலியவற்றின் வழியாக மெய்யியல். நாவலின் சிறப்புக்கு இதுதான் காரணம். மனிதன் இறந்த காலத்திற்குள்ளும் பயணம் செய்ய முடியும் என்பதை நான் நம்பவில்லை. இன்றைய நிகழ்வுகளை கூர்மையாக வாசிக்க முடியுமென்றால் மனிதன் கடந்த காலம் எதிர்காலத்தையும் ஓர் அளவுக்கேனும் உணரமுடியும். ஒளியின் வேகத்தில் நம்மால் பயணம் செய்ய முடியாது.

நாஞ்சில் நாடன் :
எட்டுத்திக்கும் மதயானை

1) பூலிங்கம் நாஞ்சில் நாட்டிலிருந்து புறப்பட்டு கர்நாடகம் ஆந்திரம் வழியாக பம்பாய்க்குப் போய்ச் சேருகிறான். இடையில் அவனுக்கு கீழ் உலகத்துடன் (Under World) தொடர்புகள். போதைப் பொருட்கள் கடத்தல், நண்பர்கள், ஏராளமான அனுபவங்கள் என பலரோடு உறவும், பகையும். அங்கங்கே தங்கல், வகைவகையான உணவுவகைகள் இப்படி சலிப்பில்லாமல் நாஞ்சில் நாடன் கதை சொல்லுகிறார்.

2) செண்பகத்தோடு அவனுக்கு காதலில்லை. எனினும் குரூரமாக தண்டிக்கப்படுகிறான். இளம் வயதுடையவனாயிருந்தும் பழி வாங்குகிறான். தெய்வநாயகம் பிள்ளை பூலிங்கத்தை தண்டித்ததில் வெற்றி பெறவில்லை. தன் மகளைத்தான் தண்டிக்கிறார். மீண்டும் பூலிங்கம் செண்பகத்திற்கு வாழ்வைத் தருகிறான். முதலும் இறுதியும் இப்படி கதைகள் இணைகின்றன.

3) பூலிங்கம் நல்லவன்தான்; சூழல் காரணமாக அவன் தீயவனைப்போல தெரிகிறான். வாழ்க்கை அவனைப் பள்ளத்தில் தள்ளிவிட்டது. அங்கேயே அவன் உழலவேண்டியிருக்கிறது. தைரியம் பெறுகிறான். கொலை செய்கிறான். விருப்பமில்லாமல் திருடுகிறான். சேட்டின் அடியாள் அவனை தண்டித்த போது தன்மானத்தோடு எதிர்த்து நிற்கிறான். அந்த அடியாளும்கூட பிறகு மன்னிப்பு கேட்கிறான். பம்பாயில் அண்ணாச்சி நடத்தும் "அரசு" அழகாகத்தான் இருக்கிறது. சிறை வாழ்க்கை அவனை சீரழிக்கவில்லை. செண்பகத்தை அவன் சிறுமைப்படுத்தியிருக்கலாம். ஆனால் செய்யவில்லை. இறுதிவரை நல்லவனாகவே இருக்கிறான். அவனுக்குள்ளும் தீவிரமான மனப் போராட்டங்கள் இருந்திருக்க வேண்டும். கதையில் வரும் சேட் நல்லவர், பெருந்தன்மையானவர். பாபி ஏனிப்படி சமையலறையில் வதைப்படுகிறாள்? (அம்மையின் பாதிப்போ) பானுமதி என்ற தமிழ்ப் பெண்ணோடு சேட்டுக்கு எப்படி உறவு ஏற்பட்டது? இந்த மூவருக்கிடையிலான உளவியல் போராட்டத்தை நாஞ்சில் நாடன் சொல்லவில்லை. ஏராளமான புள்ளி விபரங்கள் தருவதில் நாஞ்சில் நாடன் சலிப்பதில்லை. மீண்டும் மீண்டும் பயணங்கள். மீன்முதலிய உணவு வகைகள். இவற்றில் எப்படியோ நாஞ்சில் நாடனுக்கு ஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது.

4) நாஞ்சில் நாடனின் இறுதி இரண்டு நாவல்களும் மும்பை வாழ்க்கையைப் பற்றியவை. முன்னைய நாவல்களிலிருந்து இந்த நாவல் அதிகம் வேறுபடவில்லை. துல்லியமான விவரிப்புகள் ஆசிரியருக்கு கைவந்த கலை. சு.வேணுகோபாலின் நாவலில் வருவது போல இரண்டு பக்கங்களுக்கு ஒரு முறையாவது ஆசிரியருக்குள் கவிதைகள்

கொப்பளிக்கின்றன. ஏராளமான இடங்களில் வாழ்வியல் குறித்த தத்துவ சிந்தனைகள். கவிதை நயத்தோடு அரசியல் மற்றும் பொருளியல் திறனாய்வு கருத்துக்களும் கொட்டிக் கிடக்கின்றன. இவையெல்லாம் இந்த நாவலில் புதிய கோடுகள். இதனால் நாவல் என்ற கலை சிறப்படைகிறதா என்ற கேள்விக்கு இடமுண்டு.

5) தன்னிலும் வயதில் மூத்த சுசிலாவோடு பூலிங்கம் உறவு கொள்கிறான். சுசிலாவிற்கும் தேவைப்படுகிறான். பிறந்த குழந்தையை தன் மனதிற்குள் எவ்வளவு நேசிக்கிறான். இடையில கோமதியோடு உறவு. இவ்வகை உறவுகளை தவறு என்று சொல்ல முடியாத அளவிற்கு ஆசிரியர் இயல்பாக சித்தரிக்கிறார்.

செண்பகத்தின் சித்தி சுசிலா பூலிங்கம் திட்டமிடாமலேயே தெய்வநாயகம் பிள்ளையை நன்றாகத்தான் பழிவாங்கி இருக்கிறான். ஆண் பெண் உறவுக்குமுன் சாதிக்கு என்ன மரியாதை வேண்டியிருக்கிறது! பாபியின் அன்பு வாசகர் நெஞ்சை ஈரப்படுத்தும். அண்ணாச்சி ஆட்சியை வாசகர் கௌரவப்படுத்துவர். பூலிங்கம் எப்படியோ நமக்குள்ளும் வந்துவிடுகிறான். அவனை நாம் நேசிக்கிறோம். வழக்கம் போல் நாஞ்சில்நாட்டுத் தமிழும், திருக்குறள் மேற்கோள்களும் இலக்கிய சுவையில் ஊறிய சொற்களும் வாசகர் நெஞ்சைக் குளிரவைக்கின்றன. பூலிங்கத்தைக் காட்டிலும் எதிர்மறைத் தலைவன் என்று சொல்வதற்கு தகுதியுடையவர் அண்ணாச்சி.

6) சில பாத்திரங்களிலேயே ஆசிரியரின் கவனம் குவிந்திருக்கிறது. மீண்டும், மீண்டும் ஒரே கதையை நாஞ்சில் நாடன் எழுதுவதாக தோன்றுகிறது. நாஞ்சிலைப் போலவே நாவலில் வரும் பெரும்பாலானவர்கள் நல்லவர்கள். உளவியல் போராட்டங்களைச் சித்திரிப்பதில்லை. பூலிங்கத்தின் உள்ளத்தில் எழும் விமர்சனங்கள் அவன் வயதிற்கும் அனுபவங்களுக்கும் மீறியவை. இந்த விமர்சனங்கள் ஆசிரியர் உடையவை. நாவலுக்குள் சிறுகதைப் பாங்கே மேலோங்கி இருக்கிறது. நாவல் என்ற கலைவடிவத்திற்குள், வரலாறும் மெய்யியலும் காட்டாற்று வெள்ளம் போல கரைபுரண்டு செல்ல முடியும். எனினும் நாஞ்சிலின் இந்த புதிய நாவலை நானும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். நாஞ்சிலுக்குள் புதிய கதவுகள் திறக்க வேண்டும் என்பது என் பேரவா. திசைகள் அற்றவனாக பூலிங்கம் அலைகிறான். திசைகளற்ற பயணத்தில் செல்லுகிறான். இப்படியே அவன் சென்று தேய்ந்து மறைந்தும் இருக்கலாம். செண்பகத்தோடு அவனுக்கு இணைவு ஏற்படவில்லை என்றால் திசைகளில் பற்றி எரியும் தீ வாசகனுக்குள்ளும் கனலும். கீழ் உலகம் பற்றிய நுட்பமான சித்திரிப்பு என்பதற்காகவும், நாஞ்சில் நாட்டு வண்ணங்களுக்காகவும், ஆசிரியரின் அரசியல் விமர்சனங்களுக்காகவும் இந்த நாவல் பாராட்டப் படலாம்.

நாஞ்சில் நாடன் :
சதுரங்கக் குதிரை

30.9.93 மாலை நாஞ்சில் நாடனுடன் உரையாடியதைத் தொடர்ந்து சில குறிப்புக்களை இங்கு எழுதுகிறேன்.

"சதுரங்கக் குதிரை"யில் நாராயணனின் தனிமைதான் நாராயணனுக்குப் பிரச்சனை என்கிறார் நாஞ்சில் நாடன். 45 வயதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. அப்பா இருந்திருந்தால் திருமண உறவில் இவனை ஈடுபடுத்தியிருப்பார். இவனது தனிமை உணர்வுக்கு, திருமணம் இல்லை என்பது ஒரு காரணம். திருமணம் செய்து கொண்டவர்களில் பலரும் தனிமை உணர்வில்தான் இருக்கின்றனர் என்கிறார் நாஞ்சில் நாடன். தனிமையைச் சந்திக்க இவர்கள் அஞ்சுகின்றனர். ஆகவேதான் குடும்பத்தினரை அழைத்துக் கொள்ளாமல் சினிமாவுக்கு செல்கின்றனர், வேறு வகைப் பொழுது போக்குகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர் என்று சொல்கிறார் நாஞ்சில் நாடன். பெரு நகரங்களில் தனிமை என்ற சிக்கலின் பரிமாணம் மிகவும் பெரியது. பம்பாய் என்ற பெரிய நகரத்தில் திருமணம் செய்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் பல லட்சம் பேர் இருக்கிறார்கள். நாராயணனைப் பொறுத்தவரை தன் சொந்த ஊரின் வேர்களிலிருந்து பிடுங்கப்பட்டு பம்பாயில் வாழ வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறவன். இரண்டொரு சந்தர்ப்பங்களுக்கு மட்டும் நாகர்கோவிலுக்கு சென்று திரும்பினான். இனி அநேகமாக அவன் செல்லமாட்டான். இளைஞர்களுக்கிடையில் தன்புணர்ச்சி இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். பம்பாய் போன்ற பெரு நகரத்தில் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கிடையில் தன்புணர்ச்சி பரவலாக இருக்கிறது. நாவலில் நாஞ்சில் நாடன் இதைக் குறிப்பிடுகிறார். தனிமை என்பதனோடு இந்தச் சிக்கலையும் நாம் சேர்த்துப் பார்க்க முடியும். தனிமையைச் சந்திக்க அஞ்சுகிற போதுதான் குடியில் ஈடுபடுவதும் நேர்கிறது.

தனிமை என்ற இந்தச் சிக்கலை, குறிப்பிட்ட வரலாற்று – பொருளியல் சூழலில் வைத்து, மெய்யியல் நோக்கில் ஆராய்வது தேவை. நாஞ்சில் நாடன் இத்தகைய ஆய்வை செய்யவில்லை. மெய்யியல் பயிற்சி இல்லை என்பதைக் காரணமாகச் சொல்லலாம். ஆனால், ஒரு சிக்கல் தனக்குள் வந்து விழுந்தவுடன் அந்த சிக்கலின் வேர்கள் செல்லுமிடங்களிலெல்லாம் ஒரு கலைஞன் தன் பார்வையைச் செலுத்த வேண்டும். சிக்கலைச் சொல்வதோடு கலைஞன் நிறுத்திக் கொள்ள முடியுமா? தனிமை என்பது இங்கு இருத்தலியல் சிக்கல். பெரும் நகரம்,

தனக்குள் வரும் மனிதர்களை உறிஞ்சி தன்னை திடப்படுத்திக் கொள்கிறது. நகரப் பெருக்கம் என்பது குறிப்பாக, பம்பாய் போன்ற பெரிய நகரத்தின் பெருக்கம் என்பது இன்றைய சூழலில் மாபெரும் சிக்கல். தொழில், வணிகம், நிர்வாகம், பல நாட்டுத் தொடர்பு என்று பல அம்சங்களில் இந்தச் சிக்கலை ஆராய வேண்டும். நகருக்குள் செயல்படுகிற சக்திகளையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பம்பாய் நகரத்து தாதாக்கள் முக்கியமானவர்கள். பம்பாய் நகரத்துச் சேரிகள், தெரு வியாபாரம் முக்கியமானவை. சிவப்பு விளக்குப் பகுதி குறிப்பிடத்தக்கது. மத்திய கிழக்கிலிருந்து வரும் ஷேக்குகள் முதலிய சக்திகளும் முக்கியமானவை. மனிதர்கள் இங்கு உறிஞ்சப்பட்டு சக்கைகளாகக் கிடக்கின்றனர். சக்கையில் மிஞ்சியிருக்கும் சாற்றைத்தான் சற்று நக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. வெளியில் மனிதனைப் போல நடமாடியாக வேண்டும். உள்ளே இருப்பது பெரும் வெற்றிடம். நாராயணன் காசு வைத்திருப்பவன். காசு இவனுக்கு கனக்கிறது. இவன் என்ன செய்யலாம்? ஒரு பிளாட் வாங்கிக் கொள்கிறான். இப்பொழுது காசு கரைந்து விட்டது. இன்னும் அதிகம் வெறுமை இவனை ஆட்கொள்ளும். இந்தப் பிளாட்டை யாரிடம் ஒப்படைத்துச் செல்வது என்பது இன்னொரு தீர்க்க முடியாத சிக்கலாகிவிடும். குட்டினோவைப் போல இவன் ஓய்வு பெற்ற பின்னரும் திருமணம் செய்து கொள்ளலாம். அப்பொழுதும் இவனுக்கு எந்த சிக்கல் தீரும்?

கிராமத்திலிருந்து, இளம் வயதில் பழகிய உறவுகளிலிருந்து, இயற்கையின் மத்தியிலிருந்து இவன் பம்பாய்க்கு வந்து 20 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. நாஞ்சில் நாட்டின் இயற்கையை – மக்களின் வாழ்வை – சடங்குகளின் தனித் தன்மையை எவ்வளவு காலத்திற்கு இவன் அசை போடுவான்? 20 ஆண்டுகள் கழிந்து விட்டன! தன் சொந்த ஊருக்குச் சென்று இடையில் தான் இழந்து விட்ட வேர்களை திரும்ப வளர்த்துக் கொள்ளவும் இவனுக்குச் சாத்தியம் இராது. எந்தப் பெண்ணோடு உறவு கொண்டாலும் அந்தப் பெண்ணின் மூலம் அவள் வாழ்ந்த பிரதேசத்தின் வேர்களையும் தனக்குள் பதியமிட்டுக் கொள்ள முடியாது. இவன் இனி வெறுமையில்தான் மூழ்கிப் போவான். இனித்தான் இவனுக்கு பேராபத்து காத்திருக்கிறது. ஆபத்தின் அதிர்ச்சி இவனுக்குள் இன்னும் வரவில்லை.

திருமணம் ஆகாதவனுக்கு மட்டுமல்ல, எல்லா மனிதர்க்குள்ளும் இன்று வெறுமை இருக்கிறது என்பதை நோக்கி நாம் கவனம் செலுத்த வேண்டும். கண்ணுக்குப் புலப்படாத ஒரு பிரம்மாண்டமான இயந்திரத்திலிருந்து இயந்திரத்தின் இயக்கம் தெரியாத ஒரு பகுதியில்

நாம் இருத்தப்பட்டிருக்கிறோம். இயந்திரத்தோடு நாம் சேர்ந்து இயங்குகிறபோது இயந்திரத்தால் அரைக்கப்படவும் செய்கிறோம். இந்த உணர்வின் ஒரு பகுதிதான், நமக்கு வாழ்க்கை அர்த்தமற்றுப் போய்க்கொண்டிருக்கிறது என்ற உணர்வு. முன்னைய சமூகத்தின் அர்த்தங்கள் அழிந்து விட்டன. இந்த சமூகத்தின் இயக்கம் நமக்குப் புரியவில்லை. ஏதாவது ஒன்றில், அதன் புரிதல்கூட இல்லாமல் நம்மை பொருத்திக் கொண்டால், அந்தப் பொருளின் ,இயக்கத்தினுள் நமக்கு வாழ்க்கை இருப்பதாக கருதிக் கொண்டால், வாழ்வின் பொருள் என்ன என்ற கேள்வி எழுவதில்லை. இப்படி நிறைய பேர் தம்மை ஏதாவது ஒன்றில், அல்லது சிலவற்றில் பொருத்திக் கொள்கிறார்கள். இத்தகைய சாதனங்களில், குடும்பம், திருமணம், பதவி என்பன சில. குடும்பம், பதவி ஆகியவற்றின் மூலமும் வேறு சக்திகள்தான் நமக்குள் செயல்பட்டு நம்மை உறிஞ்சி தாம் கொழுத்துக் கொண்டிருக்கின்றன என்ற உணர்வு ஏற்பட்டவுடன் நம்மை நாம் தேடுகிறோம். நமக்கு அகப்படுவது கொஞ்சம். நாம் இழந்தவற்றை மீட்டுக் கொள்ள முடியுமா என்று நினைத்து ஏங்குகிறோம். இந்த ஏங்குதலின் ஒரு நீட்சியாகத்தான், இறைவனிடமிருந்து நாம் பிரிந்து வாழ வந்து விட்டோம் அல்லது தாயின் கருப்பையிலிருந்து பிரிந்து விட்டோம் என்பன போன்ற உணர்வுகள். அந்நியமாதல் எனற பேருணர்வும்கூட மனிதனுக்கு இறுதிவரை இருக்குமென்றும் கூறுகிறார்கள். இடைக் காலத்தில் நம்மை நாமே எத்தனையோ வகைகளில் அர்த்தப்படுத்திக் கொள்கிறோம். அர்த்தத்தை வைத்துத்தான் வாழ்கிறோம். நம் உடம்பை வைத்து வாழ்வதும் இப்படி அர்த்தப்படுத்துவதில் ஒருவகைதான். ஆகவே கழிந்து விட்ட ஒருமையைத் தேடி அலைய வேண்டாம் என்றும் சொல்லத் தோன்றுகிறது. ஒருமை என்பது, என்றும் இருந்ததில்லை என்றும் சொல்கிறோம்.

நாராயணனுக்கு வாழ்வின் எந்த அர்த்தம் மிஞ்சியிருக்கிறது! வர்த்தக நிறுவனத்தின் விற்பனையாளனாக செயல்படுகிறான். தனிமையோடு அலைகிற ஒருவன் தேர்ச்சி பெற்ற விற்பனையாளனாக இருக்க முடியுமா? இவன் சார்ந்த நிறுவனத்தின் இயந்திரங்கள் அங்கங்கே தேவைப்படுகின்றன. ஆகவே தனித் தேர்ச்சி இல்லாமலே கூட இவன் விற்பனையாளனாக இருந்து விட முடியும். பல இடங்களுக்குப் பயணம் செய்கின்றான். நீண்ட தொலைவுகளுக்கும் செல்கிறான். மழை, வெள்ளம் என அங்கங்கே மாட்டிக் கொள்கிறான். இப்படியெல்லாம்கூட தனிமையில் அடைபட்டுக் கொள்வதிலிருந்து சில வெளிப்பயணங்கள் கிடைக்கின்றன. வெவ்வேறு வட்டாரங்களில் மனிதர்கள் வேறுபட்டுத் தெரிகிற மாதிரி, இடத்தின் தோற்றங்களும், தொழில் முறைகளும், உணவும் உபசரிப்பு முறைகளும் மாறுபட்டனவாக இருக்கின்றன. அங்கங்கே தரகர்கள் சுற்றி

வருகிறார்கள். இப்படியெல்லாம் அலைந்து அனுபவிக்கிற போது தனிமையிலிருந்து அவன் விலகியிருக்க முடியும். நாஞ்சில் நாடன் சொல்கிறபடி தனிமை தான் நாராயணனுக்குப் பிரச்சனை என்றால் சார்த்தரின் "நாசியா" மாதிரி ஒரு நாவலை எழுதமுடியும். இவ்வளவு பெரிய – செறிவான துயரத்துக்குள் நாஞ்சில் நாடன் தன்னை அமிழ்த்திக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்பவும் இல்லை. ஆனால் இந்தத் துயரம் நம் சமூகச் சூழலுக்குள் வந்து சில பத்தாண்டுகளேனும் கழிந்திருக்கின்றன. இதை எழுத நமக்கு ஒரு சார்த்தர், காமு தேவைப்படலாம். சும்மா இருக்கமாட்டாமல் ஏதாவது ஒன்றைக் காலில் இடறிக் கொண்டிருப்பதைப் போல நம் எழுத்தாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல முடியும். நாஞ்சில் நாடனின் நாராயணன், தனிமையை அவ்வப்பொழுது உணர்கிறான். பெரு நகரத்திற்குள் தான் அகப்பட்டுக் கொண்டதை நாராயணன் உணர்கிறானா, நெடுந்தொலைவிலிருந்து தன்னை யாரோ உறிஞ்சிக் கொண்டிருப்பதை உணர்கிறானா? விற்பனை அல்லது வணிகம் என்ற தொழிலில் இவன் மனம் முழுதாக ஈடுபட்டிருக்கிறதா? ஈடுபடவில்லை என்பதை இவன் உணர்கிறானா? அங்கங்கே செல்கின்ற இடங்களில் இவன் எந்த நோக்கம் கருதி தன் ஒழுக்கத்தை – தன்னைக் காத்துக் கொண்டிருக்கிறான்? புற உலகத்தின் தாறுமாறான இயக்கத்தில் தன்னைக் கரைத்துக் கொள்வதிலிருந்து இவனை எந்த சக்தி தடுக்கிறது? இன்னும் கூட இவன் பெருநகரத்தின் ஒரு பெரிய கண்ணியாகி விடவில்லையா? நாகர்கோவிலும் நாஞ்சில் நாடும் இறந்து போன தாயும், தான் கட்டிக் கொள்ள விரும்பிய கல்யாணியும், தன்னை உதாசீனம் செய்த மாமாவும் இன்னும் இவனுக்குள் இருக்கிறார்களா? விஜயாவும், லட்சுமியும், ராதாவும் இவனுக்குள் எந்த மூலைகளில் தங்கியிருக்கிறார்கள்? இவனுக்குள் இன்னும் அந்த தாய்த் தெய்வம் ஒளிவிடுகிறதா? தன்னிலிருந்து இவன் முற்றாக வெளியேறாமல் இருப்பதை அவர்கள் தடுத்துக் கொண்டிருக்கிறார்களா? அல்லது அவர்களையும் உதறிக் கொண்டு இவன் வெளியேறவில்லையா? இப்படி வெளியேறுவது என்றால், தனக்குள்ளிருந்து ஒரு பெரும் சக்தியை இவன் திரட்டிக் கொள்ள வேண்டும். இது இவனுக்கு சாத்தியா? இவனைச் சுற்றியிருந்த நண்பர்களில் எவர்க்கேனும் இத்தகைய சக்தி இருந்ததா? இவ்வகைச் சக்தியை இவன் பூதலிங்கத்திடமிருந்து பெற முடியாது. குட்டினோவிடமிருந்து கூட பெற முடியாது. ஆனால் பேய் பிடித்தது மாதிரி இருந்தானே, ஒரு வேலைக்காரன் – அவனை நோக்கி இவன் நகரலாம். பேயாட்டம் போடுகிறவர்களைக் கண்டு அஞ்சி ஓடுகிற இவனுக்கு இது சாத்தியமா? சாத்தியம் எனத் தோன்றவில்லை. இவன் புத்தகம் படிக்கிறானா? தனக்குள் குடைந்து எதையாவது தேடுகிறானா? தேடினால் ஏதாவது கிடைக்குமென்று இவன் நம்புகிறானா? பாரம்பரியம்,

மதம், தியானம், பண்பாடு என்று எதைப்பற்றியாவது இவனுக்கு அக்கறை விழுந்திருக்கிறதா? சிறுவயதில் இவற்றின் தீண்டல் இல்லாமல், எப்படி இவன் தப்பிவந்தான்? ஆக, இவன் சாதாரண மனிதன்தானா? அங்குமிங்கும் அலைந்து, வெந்ததைத் தின்று, விதி வந்தால் செத்துப் போகிற, எதையும் தனக்குள் திரட்டிக் கொள்ளாத, இருக்கிற காசை வைத்துக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று தெரியாத, வீடு வாங்குகிற, வீட்டுக்குள் தன்னை அடைத்துக் கொள்கிற, வீட்டைவிட்டு ஒவ்வொரு முறை வெளியே செல்லும் போதும், கனமான பூட்டை இழுத்துப் பார்த்துக் கொள்கிற மிகச் சாதாரண மனிதன்தானா? நம் சமுகத்தில் இத்தகைய மனிதர்கள் இன்று கொஞ்சம் எண்ணிக்கையில் பெருகிவருவதாகத்தான் தோன்றுகிறது. சமூகத்தின் பரப்பில் எந்த அதிர்வையும் செய்ய விரும்பாமல், முதலாளிகளும் அரசு அதிகாரிகளும் ஏற்படுத்தும் அதிர்வுகளில் சேர்ந்து அதிர்ந்து, அதிர்வை உள்வாங்கிக் கொள்ளாமல், தன் தோலை மரக்கச் செய்து கொண்டு உடலுக்கு சோற்றையும் நீரையும் கொடுத்து உபசரித்துக் கொண்டு மரப்பாச்சிகளைப் போன்ற குழந்தைகளை பெற்று குழந்தையை அழகு படுத்தி இப்படியெல்லாம் வாழும் மனிதர் கூட்டத்தில் ஒருவன்தான் இந்த நாராயணன். இவனை நாம் புரிந்து கொள்ளவதன்மூலம் நம் சமூகத்தை உலகளவிலான சமுகத்தைப் புரிந்து கொள்கிறோம். இந்த நாராயணன் தன்னைத் தானே தனக்குள் புதைத்துக் கொண்டவன். சமாதியின் மீது ஒரு பூச்செடியைக்கூட இவன் வைத்து வளர்க்க மாட்டான். அப்படி இன்னொருவர் வைத்தால்கூட அந்த செடியில் பூ, பழுப்பு நிறத்தில்தான் பூக்கும். அதற்கு மணம் இருக்காது. நாஞ்சில் நாடன் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார். இவன் சதுரங்கக் குதிரை. இடப்புறத்திலும் வலப்புறத்திலும் கொஞ்சம் இயங்குவான். தான் குதிரைதான் என்று நிரூபணம் செய்வதற்காக இவன் ஓடித் தாவுவான். வெற்றியில் இவனுக்கு அக்கறை இல்லை. பிறர், தம் வெற்றியில் இவனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதைப் பற்றி இவனுக்கு கவலையும் இல்லை, அக்கறையும் இல்லை. இவன் குதிரையும் இல்லை, இயல்பான குதிரையும் இல்லை. குதிரை ஆக்கப்பட்டவன். நாஞ்சில் நாடன் தன்னுணர்வு இல்லாமலேகூட நாராயணனைப்பற்றிய சித்தரிப்பின் மூலம் ஒரு பெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளார். நாராயணன் என்ற குறியீட்டின் வழியே நிறைய மனிதர்களையும், நிறைய எழுத்தாளர்களையும், அவர்களின் பல படைப்புகளையும் நாம் காணமுடியும் எனத் தெரிகிறது. இந்த நாராயணனை இப்படிச் செய்தவர் யாரோ – எந்த சக்தியோ அவர்களைப் பற்றிய படைப்புகள், தமிழில் ஏன் வரவில்லை? நாராயணனே தன்னை இப்படி ஆக்கியவர்களைப் பற்றிய படைப்பை செய்ய முடியாது என்பதும் உண்மைதான்.

ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் :
உலகமெல்லாம் வியாபாரிகள்

1. 1991–ல் எழுதப்பட்ட நாவல். 77 கலவரங்களுக்குப் பிறகு லண்டனில் குடியேறிய ஈழத்தமிழர்கள் மத்தியில் உள்ள சிக்கல்களைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல். தமிழினத் தலைவர்கள் என்று அதுவரை முன்நின்ற பெரியவர்களின் அரசியலை, இளைஞர்கள் முற்றாக ஒதுக்கினர். பாராளுமன்ற பாதை இனிப் பயன்படாது என்ற முடிவுக்கு வந்தனர். லண்டனில் உள்ள பேரின்ப நாயகத்தார் விருப்பம், இலங்கையிலிருந்து வரும் தமிழ் இனத் தலைவருக்கு இங்கிலாந்தில் உள்ள அனைத்து உறுப்பினரும் வரவேற்பு தரவேண்டும். கூட்டத்தில் வெடிகுண்டு வைத்துவிடுகிறார்கள். பேரின்ப நாயகத்தார் எண்ணம் நிறைவேறவில்லை. இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்த கார்த்திகேயன், சிதம்பரநாதன் முதலியவர்களின் சதிச் செயல் இது என்று குற்றம் சாட்டுகிறார். இளைஞர்கள் இனி பெரியவர்களின் வழிக்கு வரமாட்டார்கள் என்பது தெளிவாகிறது.

2. பேரின்ப நாயகத்தார் போன்ற பெரியவர்கள் தமிழன் என்றும், பண்பாடு என்றும், கற்பு என்றும் பேசுவார்கள். குடும்பத்தில் மட்டுமல்லாமல் சமூக அளவிலும் தங்கள் தலைமையை தக்கவைத்துக் கொள்வதற்கான முயற்சி இது என்பதைத்தவிர வேறு இல்லை. இவர்களுக்கு சாதிப்பற்று, சமூக அந்தஸ்து என்ற பற்று ஆகியவையே முதன்மை. தன் மகள் சகுந்தலா கார்த்திகேயனை காதலித்தது இவருக்கு உடன்பாடில்லை. சமூக அந்தஸ்தில் அவன் தாழ்ந்தவன். அவசரமாக சிவநேசனுக்கு தன் மகளை கட்டிக் கொடுக்கிறார். சிவநேசனோடு சகுந்தலா நியூயார்க்கில் வாழ்கிறார். கீதாஞ்சலி என்றொரு பெண் குழந்தை. கார்த்திகேயன் நினைவாக தன் மகளுக்கு இட்டபெயர். சிவநேசனுக்கு தன் மனைவியின் மீது சந்தேகம். தனக்குத் தெரியாமல் கார்த்திகேயனுக்கு அவள் கடிதம் எழுதுகிறாள் என்ற சந்தேகம்.

அடுத்த மகள் மீனா – ஆன்ட்ரியே என்ற ஆங்கிலேயனைக் காதலிக்கிறாள். தந்தையின் தந்திரங்களை தெரிந்தவள் அவள். ஆங்கிலேயனோடு தன் மகள் உறவு கொள்வது தமிழ்ப்பண்பாட்டுக்கு எதிரானது என்பது தந்தையின் கருத்து. அன்புதான் முக்கியம், தன் வாழ்க்கைஞ்ய அமைத்துக்கொள்ள ஒரு பெண்ணுக்கு உரிமை உண்டு. பெற்றோர் தலையிட அவசியம் இல்லை. இதுதான் மனிதநேயப் பண்பாடு

என்பது மீனாவின் கருத்து. பெற்றோர் வழிக்கு மீனாவைக் கொண்டுவர அமெரிக்காவிலிருந்து சகுந்தலாவை வரவழைக்கிறார் பேரின்ப நாயகத்தார். சகுந்தலாவும் தந்தையின் தந்திரத்தை தெரிந்து கொள்கிறாள். மீனாவின் திருமணத்திற்கு ஒத்துழைக்க விரும்புகிறாள்.

3. இலண்டனுக்கு வந்த சகுந்தலா, கார்த்திகேயனை ஒரு கலை விழாவில் சந்திக்கிறாள். சிலமுறை மீண்டும் அவர்கள் சந்திக்கிறார்கள். காதலைப் புதுப்பிக்கும் உத்தேசம் இருவருக்கும் இல்லை. எனினும் நிகழ்ச்சிகள் வேறுவிதமாய் செல்கின்றன. சிவநேசனோடு சகுந்தலா தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்போது, ஒரு பெண்ணின் குரல் கேட்கிறது. கார்த்திகேயனை காதலிக்கிற ஆங்கிலேயப் பெண்; சகுந்தலாவும் சந்தேகம் கொண்டு கார்த்திகேயனைப் பிரிந்து செல்கிறாள். கார்த்திகேயன் ஒரு இளைஞர் குழுவின் தலைவன் என்ற முறையில் செயல்படுகிறான். கூட்டத்தில் குண்டு வைத்தவன் கார்த்திகேயன்தான் என்று பேரின்ப நாயகத்தார் சந்தேகப்படுகிறார். மீனாவுக்கு இன்னொரு மாப்பிள்ளையை பேரின்ப நாயத்தார் ஏற்பாடு செய்வதறிந்து மீனா வீட்டைவிட்டு வெளியேற சகுந்தலா உதவுகிறாள். சகுந்தலாவுக்கும் தெரியாமல் பதிவுத் திருமணத்திற்கு சிவநேசனை பேரின்ப நாயகத்தார் வரவழைக்கிறார். மீனா கார் விபத்தில் உயிர் துறக்கிறாள். நாயகத்தாரின் செல்வத்தில் ஒரு பகுதி தனக்குக் கிடைக்கும் என்று எண்ணி சிவநேசன் சகுந்தலா மீது அன்பைப் பொழிகிறான். பாரிசுக்கு அழைத்துச் சென்று நிறைய துணிமணி, நகை வாங்கித் தருகிறான். சிவநேசனின் அன்பு உண்மை தான் என்று சகுந்தலாவும் நம்புகிறாள். பாரிஸில் வழிதவறிய சகுந்தலாவை கார்த்திகேயன் காப்பாற்றுகிறான். சிவநேசன் பற்றிய உண்மைகளை சகுந்தலா அறிந்து அதிர்ச்சியடைகிறாள். அவனோடு தனக்கு வாழ்வு வேண்டாம் என்று முடிவு செய்கிறாள். இனி கார்த்திகேயனோடு அவள் சேர்ந்து கொள்ள முடியும் -- இப்படி நாவல் முடிவடைகிறது.

4. ஈழத்தமிழ் மக்களின் அரசியல் பின்னணி என்பதை ஒதுக்கி வைத்துப் பார்த்தால் ஆண் பெண் உறவு என்ற அளவில் இந்த நாவல் சிறுத்து விடுகிறது. கணவன் மனைவிக்குள் சந்தேகம். முன்னைய காதலனோடு உறவு, கணவனுக்கு இன்னொரு பெண்ணோடு உறவு என்ற கோண சுழற்சியைத்தவிர நாவலில் வேறில்லை என்று சொல்லிவிடலாம். ஈழத் தமிழர்களின் அரசியல் முரண்பாடுகள் இங்கிலாந்திலும் தொடர்கின்றன. இது பின்னணி மட்டுமல்லாமல் காதல் முதலிய வாழ்வுப் பரப்பினுள்ளும் நுழைகிறது. இந்த நாவலை நாம் நல்ல நாவல் என்று

சொல்வதற்கு இது காரணம். எது தமிழ்க் கலாச்சாரம் என்ற ஆய்வு நாவலினுள் விடாப்பிடியாகத் தொடர்கிறது. தன் வாழ்வை ஒரு பெண் அமைத்துக் கொள்ளும் உரிமை உண்டு என்ற ஆதாரத்தில் நாவல் செயல்படுகிறது. ஆங்கிலப் பெண்ணும் தமிழ்ப் பெண்ணைப் போலவே நடந்து கொள்கிறார். தமிழ்ப்பெண்ணின் எளிமை கண்டு ஆங்கிலேயர் காதலிக்கின்றனர். உஷாவை இவளது ஆங்கிலேயக் கணவன் மணவிலக்கு செய்துவிட்டான். உஷா கவலைப்படவில்லை. நாவலில் சினிமாத்தனமான சில நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. கார்த்திகேயனும் சகுந்தலாவும் இணைந்து கொள்ளும் முறையில் கார்த்தியேனின் காதலியாகிய ஆங்கிலப்பெண் விலகிச் செல்கிறாள். மீனாவின் சாவு இயற்கையாக இல்லை. நாவலை ஒரு முடிவு நோக்கி நகர்த்துகிற செயல் இது. அரசியலின் ஊடுருவலோடு வாழ்வியலை மையப்படுத்தி தமிழில் நாவல்கள் இலலை. இவ்வகையிலும் ஈழத் தமிழரான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் பாராட்டத்தக்கவர். நாவலின் தரம் உயர்வாக இல்லையென்றாலும் தாழ்வில்லை என்று சொல்வது பொருந்தும்.

– 9.1.97

ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் :
வசந்தம் வந்து போய்விட்டது

1. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களின் இந்த நாவல் சில தனித்தன்மைகளுக்காகக் குறிப்பிடத்தக்கது. சுற்றுலா செல்லும் குழந்தைகள் ஒரு விபத்துக்குள்ளாகி லண்டன் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். இவர்களில் மூன்று குழந்தைகள் - உஷா, ரவி ஆகியவர். இவர்களின் பெற்றோர்களின் கதையை இந்த நாவல் சொல்லுகிறது. மூளையில் அடிபட்டு மயக்க நிலையில் உள்ள உஷாவின் தாய் சாந்தி அன்றுதான் மீண்டும் தான் கருத்தரித்திருப்பதை உணர்ந்து மகிழ்ச்சியோடு இருக்கும்போது செய்தி கிடைத்து மருத்துவமனைக்கு விரைகிறாள். அன்று நாள்முழுவதும் அவள் கணவன் நடராசன் மருத்துவமனைக்கு வரவில்லை. இடையில் நடராஜன் தான் படித்துக் கொண்டிருக்கும்பொழுது தன்னை இனவெறியர்கள் தாக்கிய நிலையில் தன்னைக் காப்பாற்றிய ஸோராவை சந்திக்கிறான். ஸோரா நவீன ஓவியம் வரைபவள். நடராசனைக் காப்பாற்றிய நிலையில் அவனுடன் காதல் கொண்டாள். நடராஜன் தமக்கை பிரமிளாவுக்கு இது அறவே பிடிக்கவில்லை. சதி செய்து உறவைத் துண்டிக்கிறாள். நடராசன்மூலம் தான் கருக் கொண்ட செய்தி கூட அவளுக்குத் தெரியாது. அமெரிக்காவில் இன்னொருவரைத் திருமணம் செய்து இரு குழந்தைகளோடு வாழும் ஸோரா தன் முதல் மகன் கிருஷ்ணனுடன் 12 ஆண்டு கழித்து நடராசனை சந்திக்கிறாள். இலங்கையில் வாழ்ந்தபோது தன் இளமைக் காலத்தில் தன் பள்ளித்தோழன் ஆண்டனியை சாந்தி மணந்து கொள்ள இயலாது போனது. அவன் மீனவர் குலத்தைச் சார்ந்தவன். ஸோரா பற்றி சாந்தி அறிகிறபோது வெகுண்டாள். நடராசனோடு பேச மறுத்தாள். அவன் தந்த கடிதத்தின்மூலம் உண்மை அறிகிறாள் சாந்தி. ஸோரா கிருஷ்ணனை நடராசனிடம் ஒப்படைத்துவிட்டு அமெரிக்காவில் உள்ள தன் குடும்பத்திற்குத் திரும்புகிறாள்.

மருத்துவமனையில் இருக்கும் ரவியின் தாயார் எமிலி. இங்கிலாந்துக்கு படிக்கவந்த ஆனந்த் என்ற இந்திய பிராமணனை எமிலி காதலித்தாள். ஆனந்த் தன் சகோதரிகளை காப்பாற்றி திருமணம் செய்து கொடுக்க இந்தியா திரும்பியாக வேண்டும். தான் கருக்கொண்ட செய்தியைகூட ஆனந்துக்கு தெரிவிக்காமல் விலகி நிற்கிறாள் எமிலி. ரவி தன் தந்தை யார்? என்று கேட்கிறான். எமிலியின் தாய் தற்கொலை செய்து கொண்டாள். சிற்றன்னையின் கொடுமைக்கு உள்ளானாள்.

தாத்தா ரவியை நேசிக்கிறார். எமிலியின் சோகம் சொற்களில் அடைபடாது. இடையில் டேவிட் அவளைச் சீண்டுகிறான். நடராசன் குடும்பத்தைச் சார்ந்த குமாரை மருத்துவமனையில் எமிலி சந்திக்கிறாள். ஆனந்த் போல் நற்குணங்களை உடையவன் குமார். இருவர்க்கிடையில் உறவு தொடங்குகிறது.

2. ஸேரா, எமிலி ஆகிய இருவரும் ஆங்கிலேயப் பெண்கள். தமக்குள் விடுதலை உணர்வு உடையவர்கள். கணவனோடு தொடர்பு இல்லாத நிலையிலும் அவன் நினைவாக தன் குழந்தையை அன்போடு வளர்ப்பவர்கள். தமிழ்ப் பண்பாடு குறித்து ஓயாமல் கேள்வி எழுப்புபவர் ராஜேஸ்வரி. பிரமிளா கடைப்பிடிக்கும் பண்பாடு யாருடைய பண்பாடு? ஸேராவும், எமிலியும் கடைப்பிடிக்கும் பண்பாட்டிற்கு நிகராக இன்னொன்றைச் சொல்ல முடியுமா? பொருளாதார நிலையில் சுதந்திரம் பெற்ற இந்தப் பெண்கள் தமக்கு வேண்டிய வாழ்வை, குடும்பத்தை தாமே அமைத்துக் கொள்ள முடிகிறது. சாந்திக்கு இது முடியாது. கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு பிரமிளா தன் கணவனை வதைக்கிறாள். நடராசனும், குமாரும் புதிய பண்பாட்டை ஏற்றுக் கொள்கின்றனர். ராஜேஸ்வரி அவர்களின் இந்த நாவலின் ஒரு முக்கியமான தனித்தன்மை என்று இதைக் குறிப்பிடலாம்.

3. மூன்றாவது குடும்பத்தின் கதை சிக்கலானது. கணவன் டேவிட். அவனுக்கும் அவனது மனைவி அலிசனுக்கும் மணப்பொருத்தம் கொஞ்சம்கூட இல்லை. மாடல் என்ற முறையில் புகழ்பெற்ற பார்பரா டேவிட்டை அலைக்கழிக்கிறாள். நாவலின் இறுதியில் பார்பராவும் அல்லிசனும் உறவு கொண்டு தாமே குடும்பம் நடத்த தம் சூழலைவிட்டு வெளியேறுகிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் இப்படி பெண்ணும், பெண்ணும் உறவு கொள்கிற புதியவகை செக்சுவாலிட்டியை இந்த நாவலில் ஆசிரியர் ஏற்கிறார். இதேபோல நடராசன் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞனும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த இன்னொரு இளைஞனும் தமக்குள் கொள்ளும் உறவையும் ஆசிரியர் சொல்லுகிறார். இப்படியும் வாழ்க்கை முறைகள் மேற்கில் உருவாகின்றன. மேற்கத்திய சமூகம் இந்த நெறியை அங்கீகரித்துள்ளது.

தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த ராஜேஸ்வரி அவர்களும் இந்தப் போக்கை ஏற்கிறார். தமிழ்ப்பண்பாடு குறித்து தொடர்ந்த விமர்சனங்களை முன்வைக்கிற ஆசிரியர், எந்தக் கோணத்தில் மேற்கத்திய நவீனமான இந்த வாழ்க்கை முறையை ஏற்கிறார் என்பது தெளிவாகவில்லை. ஒருவேளை

இந்தக் கதைக்குள் ஆசிரியர் ஆழமாகச் சென்றிருக்க இயலுமானால் நமக்குச் சில தெளிவுகளை ஏற்படுத்தியிருக்க முடியும். பாலகுமாரின் பந்தயக்குதிரைகள், பிரபஞ்சனின் சந்தியா போன்ற நாவல்களில் கணவன் என்ற குடும்ப உறவுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் ஒரு பெண் குழந்தை பெறுவது பற்றிச் சொல்லப்படுகிறது. இதற்குமேல் தமிழ் நாவல்களில் இதன் வீச்சுக்கள் இல்லை. பெரியவர் நாராயணசாமி அவர்களின் நாவலும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆணோடு ஆண் கொள்ளும் உறவு நாவலில் சொல்லப்படுகிறது. ஒரு வாழ்க்கை முறையாக அல்லாமல், பாலியல் உணர்வில் வெறி என்ற முறையில் இந்த நாவலின் சித்தரிப்பு அமைகிறது. ஆனால் ராஜேஸ்வரி அவர்களின் நாவலில் இத்தகைய உறவு ஆரோக்கியமான ஒரு உறவாகச் சொல்லப்படுகிறது. இதற்கு மேல் இங்கு விவாதிப்பதற்கில்லை. தமிழ் நாவலில் சில புதிய போக்குகளுக்காக பாராட்டத்தக்கவர் ராஜேஸ்வரி அவர்கள்.

- 11.1.98

ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் :
அவனும் சில வருடங்களும்

திருமதி இராஜேஸ்வரி அவர்கள் தொடர்ந்து நாவல் என்னும் கலை உணர்வில் மேம்பட்டு வருகிறார் என்பதற்கு இந்த நாவல் ஒரு சான்றாகிறது. கலாச்சாரம் என்றால் என்ன என்பது குறித்து ஒரு நீண்ட விவாதம் இந்த நாவலில் நடைபெறுகிறது. மேற்கத்திய நாடுகளில் ஈழத்தமிழ் மக்கள் வாழவேண்டிய நிர்ப்பந்தமான சூழல், அவர்களுக்குள் கலாச்சாரம் குறித்த தீவிரமான மனக்கலவரத்தை ஏற்படுத்துகிறது. பெற்றோர்கள் – குறிப்பாக தாய்மார்கள் – தங்கள் மக்கள் வெள்ளைக்காரப் பெண் அல்லது ஆணோடு உறவு கொள்வதை சகித்துக் கொள்ள முடியாமல் கடுமையான மனக் கலவரங்களுக்கு ஆளாகிறார்கள். இளம் தலைமுறையினரைப் பொறுத்தவரை முன்னைய மரபுகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்கிறார்கள். இந்த விடுதலை என்பதும் நிதானமாகத்தான் நடைபெறுகிறது.

மேற்கத்திய சமூகங்கள் கறுப்பு இன மக்களைத் தொடர்ந்து வெறுக்கத்தான் செய்கின்றன. ஆசிய மக்களையும் கறுப்பர் இனத்தில் சேர்த்துத்தான் வெறுக்கிறார்கள். இங்கிலாந்தைக் காட்டிலும் ஜெர்மனியில் கறுப்பர் இன வெறுப்பு கூடுதலாகத்தான் இருக்கிறது. இதைமீறி இனங்களுக்கிடையில் நல்லுறவுகள் தொடர்ந்து ஏற்படுகின்றன. இனம் சார்ந்த கலாச்சாரம் என்னும் கட்டுக்களை இளம் தலைமுறையினர் உடைக்கிறார்கள். இங்கும் கலாச்சாரம் என்றால் என்ன என்ற கேள்வி கூர்மையாக எழுகிறது. இனங்கள் கடந்த அன்பு மற்றும் மரியாதை என்பது தான் உண்மையில் கலாச்சாரம் என்ற தெளிவு இந்த நாவலில் கிடைக்கிறது.

இராஜேஸ்வரி அவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக இலண்டனில் குடியேறி வாழ்கிறவர். 1983–85 வாக்கில் இலண்டனில் இருக்கிற திரைப்படப் பள்ளி ஒன்றில் மாணவியாகச் சேர்ந்து திரைக்கலையைக் கற்றிருக்கிறார். திரைப்படப் பள்ளியில் ஆங்கிலேய இளம் தலைமுறையினரோடு, மேற்கத்திய தீவையும், ஈழத்தமிழகம் முதலிய ஆசிய நாடுகளையும் சேர்ந்த இளம் தலைமுறையினரும் கற்கிறார்கள். முந்திய ஆண்டுகளில் இல்லாத ஒரு போக்கு இது. இவர்களுக்கு திரைக்கலையை கற்பிக்கும் ஆசிரியர் – இவர்தான் அதன் அதிபர் – இவர் பெயர் ஜான் பர்ஸ்ரைன் – இவர் ஒரு யூதர். 2–ஆம் உலகப்போரின்போது நாஜிகளால் பாதிப்புக்கு உள்ளானவர். இவரது நெறிப்படுத்தலில் மாணவர்கள் மத்தியில் அற்புதமான உறவுகள் மலர்கின்றன.

ஆண்களும் பெண்களும் என சுமார் 20 பேர் இந்தப் பள்ளியில் கற்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனிமுகம் மற்றும் தனிப்பார்வைகள். தீயவர் போல முதலில் தோற்றம் தரும் சிலருக்குள் மனித அன்பின் வளர்ச்சியை நாளடைவில் காண்கிறோம். மைக்கேல் மேற்கிந்தியன். போதைப் பொருட்களைப் பயன்படுத்துகிறவன். சற்று மூர்க்கத்தனமாகப் பேசுகிறவன்தான். அன்ரோனியோ குடிகாரன். இவனது மூர்க்கத்தனமும் அன்பிலிருந்து விளைவது. ஏதோ ஒரு வெறுப்பில் தன் காதலி ஜூலியட்டை மனம் வெறுக்கச் செய்கிறான். 14–ஆவது மாடியிலிருந்து ஜூலியட் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறாள். அவள் நினைவிலிருந்து அவனால் விடுபடமுடியவில்லை. ஸ்டீபன் – ஒரு ஹோமோ செக்சுவல். தொடர்ந்து இருமிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு வந்திருப்பது எய்ட்ஸ் நோய். இவனை நண்பர்கள் வெறுக்கவில்லை. நோயின் கடுமையை மீறி 3–ஆவது ஆண்டுத் தேர்வுக்கு ஒரு கலைப்படம் தயாரிக்கிறான். திரைப்படக் கலையில் இவர்கள் அனைவரும் கொண்டுள்ள ஆர்வத்திற்கு அளவில்லை.

இன்னும் சிலரைப்பற்றியும் இங்கு சொல்ல வேண்டும். நாவலின் முக்கியமான பாத்திரங்கள் என்று இருவரைச் சொல்லலாம். ஒருவன் ராகவன். இங்கிலாந்தில் வந்து குடியேறிய ஈழத்தமிழ்க் குடும்பம். இப்படி குடியேறுபவர்களின் குழந்தைகள் மருத்துவம் அல்லது பொறியியல் கற்பார்கள். தந்தை இவனுக்கு கற்பித்த கேமரா கலை இவனைப் பெரிதும் ஈர்க்கிறது. 25–வயது வரை குடும்பத்திற்காகப் பாடுபட்ட இவன், தன் ஆர்வத்தை நிறைவேற்றிக் கொள்ளும் முறையில் திரைப்படக் கல்லூரியில் சேர்கிறான். இந்தக் கறுப்பனை டெவீனா காதலிக்கிறாள். இவள் அற்புதமான வெள்ளைக்காரப் பெண். தன் மாமன் மகள் இந்திராவை இவன் நேசித்தாலும் டெவீனா இவன் உள்ளத்தில் ஆழமாக இடம்பெற்ற நிலையில் இந்திரா ஓரத்திற்குப் போய்விடுகிறாள். ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்த டெவீனா இறுதிவரை ஆழமாக இவனைக் காதலிக்கிறாள். இவனோடு எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்கிறாள். என்ன இருந்தாலும் ராகவன் ஒரு தமிழன். ஒரு பெண் ஒரு ஆணோடு பழகினால் அது காதலாகத்தான் இருக்க முடியும், நட்பாக இருக்க முடியாது என்று எண்ணுபவன். இந்த மனப்போக்கின் விளைவு டெவீனாவின் சாவில் முடிகிறது. அப்புறம் இவன் புலம்பித் தவிக்கிறான். நாவலில் இது உச்சக்கட்டம். நம்மைக் கலங்கடிக்க வைக்கிறார் நாவல் ஆசிரியர்.

நாவலில் இந்தக் கதையை மீறியும் அருமையான பல அம்சங்கள் இருக்கின்றன. கதையைக் காட்டிலும் இவை நம்மைப் பெரிதும் கவர்கின்றன. ஈழத்தமிழ்ப் பெண்ணான புவனா, ரிச்சர்டு என்னும் ஆங்கிலேயனைக் காதலித்து, திருமணம் தேவை இல்லை என்ற நிலையில்

அவனோடு இணைந்திருக்கிறாள். ராகவன் போன்றவர்களுக்கு இவள் ஒரு மூத்த சகோதரியாக இருந்து அறிவுரையும் ஆறுதலும் தருகிறாள். இந்தத் தமிழ்ப்பெண், மேற்கத்திய உலகில் ஒரு புதுவிளைச்சல். வலுவான ஆளுமை உள்ளவள் ஜேன். மேற்கத்திய சமூகத்தின் அற்புத விளைச்சல் இந்தப் பெண். இத்தாலியில் இருந்து வந்த இளைஞன் ஒருவன். இத்தாலிக்காரன் இந்தியரை ஒத்த மனப்பாங்கு உள்ளவன். மாஃபியா கும்பல் குறித்து படம் தயாரிக்கிறான். இப்படி இன்னும் சில இளைஞர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதில் ஒவ்வொருவரும் முந்துகிறார்கள். நாவல் முழுவதும் ஒரு கலகலப்பு நிறைந்திருக்கிறது. இந்த இளைஞர்களோடு நாம் உறவு கொள்கிறோம். இவர்கள் நம் நெஞ்சில் அன்பாய் நிலவுகிறார்கள். இந்த நாவல் நம்மை முதன்மையாய்க் கவர்வது இந்தப் பண்புகாரணமாகத்தான்.

இலண்டனில் உள்ள ஒரு திரைப்படப் பள்ளி என்ற மையத்தோடு நாவல் நிற்பதில்லை. நாவலில் ஒரு வகையில் முழு உலகமுமே சுழன்று வருகிறது. அமெரிக்காவின் ஆதிக்கம் விமர்சனத்திற்கு உள்ளாகிறது. உலகளவில் நடைபெறும் இனக்கலவரங்கள் ஓயாது நாவலில் இடம்பெறுகின்றன. என்னதான் ஆதிக்கங்கள் விரும்பினாலும் மனிதர் மத்தியில் சோசலிச உணர்வுகள் தொடர்ந்து துளிர்க்கின்றன. இந்தியாவின் வருண சமூக முறையும் கடுமையான கேள்விக்குள்ளாகிறது. இலண்டன் நகரம் மட்டுமல்லாமல் இங்கிலாந்தின் கடற்கரைகள், வேல்ஸ் மற்றும் ஸ்காட்லாந்து மலைக்காட்சிகள் பற்றிய சித்தரிப்புக்கள் நாவலில் நம் நெஞ்சை ஈர்க்கின்றன. நாவலின் வழியே கப்பலில் பயணம் செய்து பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் நாம் போய்வருகிறோம்.

மேற்குலகில் வாழும் தமிழ்க் குடும்பங்களைக் குறித்தும் சொல்லவேண்டும். 1983 இனக்கலவரம் எத்தனை தமிழ்க் குடும்பங்களை நாசமாக்கிவிட்டன! 1987 –இல் தமிழ் ஈழத்திற்குச் சென்ற இந்தியாவின் அமைதிப்படை தமிழ் மக்களுக்குச் செய்த நாசங்களை நம்மால் என்று மறக்கமுடியும்? ராகவனின் தமக்கை கீதாவின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் இப்படி நாசமாகிறது. ராகவனோடு வாழும் அவனது தாயார் மனச்சிதைவுக்கு ஆளாகித் தவிக்கிறார்.

விடுதலை இயக்கத்தை பேரளவில் நேசித்த ஆனந்த் யாழ்ப்பாணத்தில் கொல்லப்படுகிறான். ராகவனின் மாமா குடும்பம் பாரீசில் வாழ்கிறது. இந்திராவுக்கு இவன்தான் என்று ராகவனைக் குறித்து இளம்வயது முதலே பெற்றோர் பேசினர். பாரதி பாடலை அற்புதமாய் பாடுகிறவள் இந்திரா. ராகவனைக் கைப்பிடிக்க முடியாத நிலையில் இந்திரா ஒரு மூர்க்கனுக்கு – குடிகாரனுக்கு மனைவியாக நேர்கிறது. அவனோடு

வாழமுடியவில்லை. இங்கிலாந்துக்கு வந்து விடுகிறாள் இந்திரா. டெவீனாவை இழந்த நிலையில் ராகவனை ஒரு சகோதரியாய், தாயாய் இருந்து தேற்றுகிறாள் இந்திரா. டெவீனாவை இழந்த நிலையில் ராகவன் மனம் இவளிடம் அலைகிறது. இந்தியாவுக்குச் சென்று இசைக்கலையில் தேர்ச்சி பெறவேண்டும் என்று புறப்படுகிறாள் இந்திரா.

நாவல் முழுவதும் நடைபெறுவது கலாச்சாரம் குறித்த ஒரு விவாதம் என்று நான் குறிப்பிட்டேன். எங்கும் மனிதர்கள் வாழ்கிறார்கள். என்ன தான் கலவரங்கள் நடைபெற்றாலும் மனிதனுக்குள் இருக்கும் அன்பு என்றும் வற்றிவிடவில்லை. காதலை மீறி மனிதக் கடமைகள் இருக்கின்றன. இனம் சார்ந்த கலாச்சாரம் என்னும் குறுகிய எல்லைக்குள் முடங்கியவர்கள் படும் வேதனைக்கு அளவில்லை. உலகளவிலான மனிதனை நாம் நமக்குள் கண்டெடுக்க வேண்டும். பலரும் சொல்கிற மாதிரி மேற்கத்தியர் இல்லை. கற்பென்பது தமிழ்ப் பெண்ணுக்கு மட்டும் சொந்தமில்லை. ஹோமோசெக்சுவலும் நேசத்துக்குரிய ஒரு மனிதனே. திருமணம் என்ற நிர்ப்பந்தம் இல்லாமலும் ஆணும் பெண்ணும் இணைந்து வாழமுடியும். கலை என்பது உன்னதமான மனிதர்களைப் படைக்கிறது என்பதில் அய்யமில்லை. நெருக்கடிகளுக்கு இடையில் மனிதச் சமூகம் அழிந்துவிடாது / அழிந்துவிடக்கூடாது. மனித நேயத்தை கற்பிக்கிறது என்ற முறையில் இந்த நாவல் நம் மரியாதைக்குரியது.

இருபது ஆண்டுகளுக்கு மேல் இங்கிலாந்தின் குடி உரிமையோடும், உயர் கல்வியோடும் வாழ்ந்து கொண்டிருப்பவர் இராஜேஸ்வரி அவர்கள். இங்கிலாந்து மக்களின் மீது இவர் கொண்டுள்ள நேயம் ஒரு அற்புதம்போல் அமைகிறது. இங்கிலாந்து மக்கள் வாழ்வின் உயர்குணங்களைப் போற்றுகிற இவர், ஆழ்ந்த தமிழ் உணர்விலிருந்தும் குறைந்துவிடவில்லை. இது ஒரு முரண்பாடாக இவரிடத்தில் அமையாமல் ஒரு அரிய கலப்பாக அமைந்துள்ளது. இதற்கு இந்த நாவலும் சான்றாகிறது. நேசத்தோடு இங்கிலாந்து மக்களை நாம் அணுகுவதற்கு இந்த நாவல் நமக்கு உறுதுணையாக அமையும். ஆங்கிலேயர் உலகளவில் செய்த / செய்து வரும் ஆதிக்கத்திற்கு ஆசிரியர் தன் நெஞ்சில் இடம் தரவும் இல்லை. அன்றியும் சமதர்ம உணர்வு இவரது நெஞ்சில் கிளை விரித்துள்ளதையும் இந்த நாவல் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. தமிழ் நாவலாசிரியர்களின் முன்வரிசையில் உரிமையோடு இடம் பெறத்தக்கவர் திருமதி. இராஜேஸ்வரி அவர்கள்.

- 1.9.2000

பாவண்ணன் :
சிதறல்

1. பாண்டிச்சேரியில் 1982–84 கால அளவில் இரண்டாண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருந்த மூன்று ஆலைகளைச் சேர்ந்த ஆறாயிரம் குடும்பங்களில் ஒருசில குடும்பங்களின் சீரழிவுகளைச் சித்தரிக்கிறது இந்த நாவல் முருகேசன் என்ற தொழிலாளியின் கதையைச் சித்தரிக்கும் போக்கில் வேறு பல குடும்பங்களின் கதையும் சொல்லப்படுகிறது. வேலையில்லாத இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் ஆலைத் தொழிலாளர்களின் வறுமையும் சீரழிவும் அடுக்கடுக்காகத் தொடர்கின்றன. சில குடும்பங்கள் தற்கொலையைத் தேர்ந்து கொள்கின்றன. கட்டிட வேலையிலும் ரிக்ஷா இழுப்பதிலும் காய்கறி வியாபாரத்திலும் பலர் ஈடுபடுகிறார்கள். கிடைத்த வேலை எதுவாக இருந்தபோதிலும் மானமரியாதைகளற்று வயிறு பிழைக்க வேண்டி இருக்கிறது. வீட்டில் சேகரித்து வைத்திருந்த நகைகள், பாத்திரங்கள் விற்பனைக்குப் போகின்றன. திருமணங்கள் நின்றுபோகின்றன. அண்டை அயலார் வீடுகளில் பாத்திரம் கழுவி பிழைக்க வேண்டியிருக்கிறது. சில குடும்பத்துப் பெண்கள் உடலை விற்றுப் பிழைக்க நேர்கிறது. தொழிலாளர்கள் ஊர்வலம் செல்லுகின்றனர். அரசோ முதலாளியோ அசைந்து கொடுப்பதில்லை. குடும்பங்கள் சிதறுகின்றன. வாழ்க்கை நாசமாகிறது. இந்தச் சோகக் கதையைச் சொல்லுகிறது இந்த நாவல். தமிழ்நாட்டில் உள்ள எல்லா நகரங்களிலும் விடாப்பிடியாக பல பத்தாண்டுகளாக நடந்த, நடக்கின்ற கதை இது.

இதைப்போன்ற ஒரு சோகக்கதையைச் சித்தரிக்கும்பொழுது உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு இடம்தரவேண்டும். அரசியல் ரீதியாக ஆவேசம் கொள்ளாமலும் முதலாளியம் செய்யும் சீர்குலைவுகளை உரக்கப் பேசாமலும் இருக்கமுடியாது. தன்னை முற்போக்குவாதியென நினைத்துக் கொள்ள விரும்பும் ஒருவருக்கு இத்தகைய கதை சிறந்த மூலப்பொருளாக இருக்கும். இம்மாதிரி உணர்ச்சிக் கொந்தளிப்போடு கதை சொல்லும்பொழுது நாவலின் எதார்த்தம் சிதையும். பாவண்ணன் இத்தகைய சிதைவுக்கு அறவே இடம்தரவில்லை. பாவண்ணனைக் கைதேர்ந்த கலைஞனாக்குவது இந்த அம்சம். ஏற்கனவே பாவண்ணன் வெளியிட்டுள்ள சிறுகதைகளிலும் நாவலிலும் இந்தச் சிதைவு நேர்ந்திருக்கிறது. இத்தகைய விபத்திலிருந்து பாவண்ணன் கடந்துவந்து நல்ல கலைஞனாகியிருக்கிறார்.

முருகேசனோடு நாவலாசிரியர் தொடர்ந்து சென்று முருகேசன் மூலம் பலரது வாழ்க்கைக் கதைகளைச் சொல்லுகிறார். ஆகவே முருகேசன், நாவலின் ஊடகம்; மையம் அல்ல. இம்முறையில் இது புதுவகை நாவல். முருகேசனது வாழ்க்கைக்குள் அதாவது பல குடும்பங்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை முருகேசன் என்ற ஒரு நபரின் குடும்பத்திற்குள் திணித்து, நாவலை அசிங்கப்படுத்தவில்லை என்பது இந்நாவலின் சிறப்பு. விபத்துக்கள் நேரவில்லை. எத்தகைய தாழ்விலும் முருகேசனது பண்பு குலையவில்லை. அவரது குடும்பத்தினரும் நல்ல மனிதப் பண்புகளிலிருந்து குறைவதில்லை. முருகேசன் பழகிய பலரது குடும்பத்தினுள் விபத்துக்கள் நேர்கின்றன. தற்கொலை, உடலை விற்றுப் பிழைத்தல், கணவனை மனைவி புறக்கணித்தல், வேலை இல்லாத நிலையில் குடிவெறிக்கு ஆளாகுதல் – இம்மாதிரி விபத்துக்கு உள்ளாக நேர்ந்த குடும்பங்களிடம் ஆழ்ந்த பரிவு கொள்கிறார் முருகேசன். கதை முழுவதும் இந்தப் பரிவு நிறைந்திருக்கிறது. இந்தப் பரிவு பாவண்ணன் தன் சக மனிதர்களிடம் காட்டும் பரிவு. முருகேசன் யாரையும் இகழவில்லை, புறக்கணிக்கவில்லை. மனிதர்களிடம் இவர் கொள்ளும் அன்பு இவர் தந்தையாரிடமிருந்து இவர் கற்றுக்கொண்டது.

தன் குரலை உயர்த்தாமல், உணர்ச்சிச் சுழிப்புகளுக்குள் வாசகர்களைத் தள்ளிவிடாமல், இந்த அன்பை அல்லது பரிவை நம்மிடம் பாவண்ணன் தொற்றவிடுகிறார். அறிவுபூர்வமானது இந்தப் பரிவு. இதை வாசகர்களாகிய நமக்கு இந்த நாவல் கற்றுத் தருகிறது. நல்ல நாவல் தருவது கல்வி. தமிழ் நாவல்களில் பழகிய வாசகர் எதிர்பார்க்கும் அதிர்ச்சிகள், சஸ்பென்ஸ்கள், உச்சநிலைகள், சுகமான முடிவு என்று எதுவும் இந்த நாவலில் இல்லை. நாவலில் வரும் கதை நிகழ்ச்சிகளில் இத்தகைய சித்திரிப்புக்கான இடங்கள் இருந்தாலும் ஆசிரியர் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நாவலாசிரியரின் இந்த அடக்கத்தில் ஆசிரியரது மனப்பக்குவம், சமநிலை தெரிகிறது. இத்தகைய சமநிலையை நமக்குள் ஏற்படுத்தும்பொழுது நாவல் தரும் கல்வித்தரம் உயர்கிறது. கைதேர்ந்த கலைஞர் என்று பாவண்ணனை இதற்காகத்தான் பாராட்டுகிறோம். எதார்த்த வாழ்க்கையை மேலும் மேலும் துருவித் தோண்டிச் செல்வதில் நாவலாக்கம் சிறக்க முடியும். ஆசிரியரின் அன்பு இப்படித் தோண்டித் துருவிச் செல்வதற்கு வழிவிடாமல் அடைத்துக் கொள்ளவும் கூடும். இதனால்தான் விபத்துக்கள் நிகழாததாக முருகேசனின் வாழ்க்கையை ஆசிரியர் சித்தரிக்கிறார் என்று சொல்வதும் பொருந்தும். அன்பை விட்டுவிடுங்கள் என்றா நாம் சொல்லமுடியும்?

த.12.

முருகேசன் இந்த நாவலின் நாயகன் இல்லை. நாயகனாவதற்கான சூழல் இல்லை. அதாவது மையம் இல்லை. ஏன் இப்படி என்று நம்மை நாம் கேட்டுக் கொள்கிறோம். ஆலை மூடிய பிறகு வாழ்க்கை தொய்ந்துவிட்டது. தொழிலாளர் போராட்டங்கள் பயனளிக்கவில்லை. கிடைத்த வேலையைச் செய்து நாட்களைக் கடத்த வேண்டியிருக்கிறது. தொழிற்சங்கங்கள் தாம் தொடர்ந்து சொல்லிவரும் 'மாபெரும் போராட்டத்தில்' ஈடுபடுவதாக இல்லை. முதலாளிகளின் ஆதிக்கத்திற்கும் அரசு ஆதிக்கத்திற்கும் எதிர்நிலையில் தீவிரமாக நின்று போராடும் போக்கு வெற்றி பெற்ற காலம் மலையேறிவிட்டது. தொழிலாளர்களைப் பட்டினி போட்டு, அவர்கள் சேகரித்து வைத்திருந்த சிறிதளவான செல்வத்தையும் இழக்கச் செய்து, அவர்களின் மனஉறுதியைக் குலைத்து அவர்களை வறியவராக்குவதன் மூலம் இனி தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு இடமில்லை என்ற நிலையை ஆதிக்க சக்திகள் ஏற்படுத்திவிட்டன. தொழிலாளர் இழந்த செல்வங்கள், திரும்பவும் தேடிப்பார்த்தால் முதலாளிகளிடம் சேர்ந்திருப்பதை நாம் கண்டு பிடிக்க முடியும். வறிய நிலையில் எந்த அளவிலான கூலிக்கும் உழைப்பாளிகள் கிடைப்பர். முதலாளியம் தன்னைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்வதற்கு இது தேவையான சூழல். ஆகவே இத்தகைய சூழல் குரூரமான முதலாளியப் போக்கின் பெருக்கத்திற்குத் தேவை. மனிதர்களிடம் நேசம் கொள்வதில்லை முதலாளியமும் அரசும். மனிதர்களுக்கு இத்தகைய அவலம் நேர்கிற காலங்களில்தான் மாடி வீடுகளும் வங்கிகளும் திரைப்பட அரங்குகளும் கடைத்தெருக்களும் பிரம்மாண்டமான நிறுவனங்களும் உருவாகின்றன. இது நம் காலத்தின் அவலம். இந்த அவலத்தின் ஆழத்தில் புதைந்திருக்கிறது உண்மை.

இந்த நாவலில் மனித வாழ்க்கை குடும்ப அளவில் நடைபெறுகிறது. கணவன், மனைவி, குழந்தை வளர்ப்பு, வேலை, சோறு என்ற அளவில் மனித வாழ்க்கை நடைபெறுகிறது. இதற்கு அப்பால் வாழ்க்கை தெரியவில்லை. மனிதன் இயற்கையோடும், சமூகத்தோடும், வரலாற்றோடும் உறவு கொண்டவன். இத்தகைய பரிமாணங்களில் தன் ஆளுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியவன். இந்த வாழ்க்கைதான் மேன்மையான வாழ்க்கை. இதைத்தான் மனித வாழ்க்கையென்று நாம் நிறைவு கொள்ள முடியும். இந்த நிறைவான வாழ்க்கை, நகரத்தில் ஆலைத்தொழில்களோடு முடங்கிக் கிடக்கும் இந்த மனிதர்களுக்கு இல்லை. மனைவி குழந்தை என்ற அளவில் வாழ்க்கையின் மட்டம் தாழ்ந்திருக்கிறது. ஆலைகள் மூடியபிறகு இதற்கும் கீழே வாழ்க்கை தாழ்ந்து செல்கிறது. வெறும் வயிற்றுக்காக நடைபெறும் வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் மனிதர்களாக

இருப்பது அரிது. விபத்துக்கள் நேர்வது இதனால்தான். இந்த அடிமட்ட வாழ்க்கையிலும் முருகேசனும் அவரது குடும்பத்தினரும் இவரது நண்பர்களில் ஒருசிலரும் அன்பு, மரியாதை போன்ற பண்புகளைக் காப்பாற்றி வருகிறார்கள். இதனால்தான் அவர்கள் இன்னும் மனிதர்களாக இருக்கிறார்கள். இது நமக்கு நிம்மதியாக இருக்கும்போதே இவர்கள் வாழ்க்கைக்குள்ளும் அடுத்து நேரும் விபத்து என்னவாக இருக்கக்கூடும் என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த அச்சம் சோகத்தில் நிறைகிறது. இந்த சோகம்தான் இந்த நாவலின் மையமான பண்பு.

குடும்பம், குழந்தைகள், வேலைவாய்ப்பு என்ற அளவில் மனித வாழ்க்கையைச் சுருக்கிவிட்டது முதலாளியம். இதற்குமேல் அவர்களுக்கு வாழ்க்கை தேவையில்லை என்கிறது முதலாளியம். நாவலில் வரும் மனிதர்கள் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. "குடும்பத்திற்கு வெளியே சமூக அளவில் நீ வரக்கூடாது. வந்து என் ஆட்சியைக் குலைக்கக்கூடாது. ஆட்சி முழுவதும் என்வசம்தான் இருக்க வேண்டும். நீ வெளியில் வந்தால் எனக்காக உழைத்துவிட்டு உடனே குடும்பத்திற்குள் சென்று முடங்கிவிட வேண்டும். உனக்கு வானம், கடல், மலைகள், இயற்கை தேவையில்லை. மனித உறவுகள் தேவையில்லை. உன் கை கால்கள் உழைப்பதற்கானவை. இதோடு நீ நிறுத்திக் கொள்ளவேண்டும் என்கிறது முதலாளியம். நீ உழைத்து, போராடி அதிகச் சம்பளம் பெற்று நகைகளோடு சொந்த வீட்டோடு சுகமாக, பாதுகாப்பாக வாழ்வாயென்றால் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். இந்தச் சுகத்தையும் சொத்துக்களையும் உன்னிடம் விட்டு வைக்க மாட்டேன். இவற்றைப் பறித்துக் கொள்வேன்" என்ற முறையில் குரூரமாகச் செயல்படுகிறது. ஆலைகள் மூடப்படுவது இதனால்தான்.

முதலாளிகளுக்கிடையே போட்டி என்பது இன்னொரு காரணம். இயந்திரங்களை - தொழில்நுணுக்கங்களை மேம்படுத்திக் கொண்ட முதலாளி இப்போட்டியில் வெற்றி பெறுகிறான். மேம்படுத்திக் கொள்ள இயலாத முதலாளி போட்டியில் தோற்று விலகிக் கொள்கிறான். முதலாளியம் மேலும் வீறுடன் செயல்படுகிறது. நவீனமயமாக்குவதற்கான செலவைத் தொழிலாளிகளிடம் வற்புறுத்திப் பெறுகிறது. வறுமையில் அடிபட்டு மனஉறுதி குலைந்த தொழிலாளி தனக்கு விலை குறைந்து விட்டதை வேறு வழியில்லாமல் ஏற்றுக் கொள்கிறான். இதற்கான பேச்சுவார்த்தையைத் தொழிற்சங்கங்கள் அமைதியாகச் செய்து முடிக்கின்றன. போராட்ட உணர்வு அலை மேலும் வற்றிவிடுகிறது. இன்று இந்தியா இருக்கும் நிலையில் தொழிலாளர் வாழ்வில் இனி மீட்சி இல்லை.

இந்த உணர்வில்தான் இந்த நாவலின் கதை மீட்சிக்கு வழியின்றி 'முடிவடைகிறது'. ஆலைகள் திறந்தாலும் மேலும் ஒரு பத்தாண்டுக்கு தொழிலாளர் வாழ்க்கை உயர்ந்து மீண்டும் வீழ்ச்சியுறும். இதுதான் நம் காலத்தின் விதி. இதை நாம் ஏற்றுக்கொள்வதில்லை, புரிந்து கொள்கிறோம். புரிந்து கொண்டால் புதிய திசையில் நாம் பயணம் தொடரலாம்.

ஆலைகள் மூடப்படுவதற்கு இன்னும் ஒரு காரணம், ஏகாதிபத்தியம் இயக்குகிறது முதலாளியத்தை. இந்நிலையில் தொழிலாளர் ஏற்கனவே பெற்று அனுபவித்து வரும் உரிமைகளை அடித்து நொறுக்க வேண்டும். தொழிலாளர் இயக்கம் முதலாளிய சமூகத்தோடு ஒத்தியங்க வேண்டும். எதிர்நிற்கக் கூடாது. இதற்காக எத்தகைய அடக்குமுறையையும் கட்டவிழ்த்து விடலாம். இந்தியாவில் இப்படியும் நேர்ந்தது.

நாவலாசிரியர் தம் காலத்தின் சமூக வாழ்க்கை – வாழ்வியல் அனுபவங்களைப் பதிவு செய்து வைக்க வேண்டும். சமூக வாழ்வின் நெருக்கடிகளைச் சித்தரிக்கும்பொழுது வாழ்வுக்கான அர்த்தமும் பெருமிதமும் சிதைந்து போவதையும், அர்த்தங்களையும் பெருமிதத்தையும் மீட்டுக் கொள்வதற்காக மனிதர்கள் போராடுவதையும், மீட்டுக் கொள்ளும் முயற்சி தோற்றுவிடும் போதும் அவர்கள் மூலம் வாழ்க்கை வெற்றி பெறுவதையும் சித்திரிக்க வேண்டும். இன்பத்திற்காக–பொழுதுபோக்கிற்காக இயங்குவது வாழ்க்கையல்ல. இன்னொருவர் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டு 'தேடிச் சோறுநிதம் தின்று சின்னஞ்சிறு கதைகள் பேசிக் களிப்பதற்காக' அல்ல வாழ்க்கை. ஒற்றைப் பரிமாணத்திற்குள் முடங்கிவிடுவதல்ல வாழ்க்கை. தடைகளை உடைத்து நொறுக்கும்பொழுது அப்படி நொறுக்கும்பொழுதே ஆற்றலும் ஒளியும் பெறுவது வாழ்க்கை. 'வேடிக்கை மனிதரைப்போல வீழ்வாய் என்று நினைத்தாயோ' என்று எதிர்த்துநிற்பது வாழ்க்கை. இந்த அம்சம்தான் நாவலை நம்காலத்துக் காவியமாக்குகிறது. இந்த அம்சத்தை மனிதனுள் கண்டுபிடித்து வளர்த்து நிலைநிறுத்தும் பொழுதுதான் நாவல் கலைப்படைப்பாகிறது. பாவண்ணனின் நாவலை அழகுபடுத்துவது இந்த அம்சம்.

கோணங்கியின் கதையைப்பற்றி பாவண்ணன் எழுதிய ஒரு கட்டுரையில் (நிகழ் – 10) ஒரு கதைக்குள் இன்னொரு கதை, மேலும் சில கதைகள் தொக்கியிருப்பதை வாசகர் கண்டுபிடித்துக் கொள்ளும் அனுபவம் பற்றி எழுதினார். 'சிதறல்' நாவலில் இப்படி ஒரு குடும்பத்தின் கதைக்குள்ளும் மேலும் மேலும் பல கதைகள் தொக்கி இருப்பதை வாசகர்

உணர்ந்து, அக்கதைகளை, தம் மனப்பயிற்சிக்கேற்றவாறு விரித்துப் பார்த்து தமக்குள் பரவசம் கொள்ளமுடியும். உதாரணமாக ஊர்வலம் நடத்த வேண்டும் என்று தொழிலாளர் கூடிப்பேசும்பொழுது ஒரு தொழிலாளி - அவர் இப்பொழுது குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர் - மறுத்துப் பேசுகிறார். இவருக்குள் தொக்கியிருக்கும் கதைக்குள் நாம் நெடுந்தொலைவு செல்ல முடியும். இப்படி இந்த நாவலுள் பேசாத கதைகள் மிகப்பல.

நாவலில் அமுங்கியிருக்கும் இன்னொரு பெரிய கதை, ஆலைகளை மூடிய முதலாளிகளைப் பற்றியது. என்ன காரணங்களால் முதலாளிகள் இப்படிச் செயல்படுகிறார்கள்? அவர்களின் குணம் இப்படி வக்கரித்துப் போவதற்கு என்ன காரணம்? செல்வச் சேர்க்கையும் அதிகாரமும் இவர்களை ஏன் இப்படி மனிதத் தன்மையிலிருந்து விலகச் செய்திருக்கின்றன? இவர்கள் தம் குடும்பத்தோடு, சமூகத்தோடு கொள்ளும் உறவு என்ன? இவர்கள் வளர்ப்பு எத்தகையது? இவர்கள் அதிகாரத்தோடும் ஆணவத்தோடும் செயல்படுகிற அதேசமயத்தில் இவர்கள் சுதந்திரமானவர்கள்தானா? இவர்களை ஆளும் சக்தி எது? இவர்கள் மூலதனத்தை ஆள்கிறார்களா அல்லது மூலதனம் இவர்களை ஆளுகிறதா இப்படியெல்லாம் நினைத்துப் பார்த்து நம் மனம் பல கதைகளைத் தேடுகிறது. அப்படியானால் பெரிய ஒரு கதையில் ஒரு சிறிய பகுதியைத்தான் பாவண்ணன் நாவலாக்கித் தந்திருக்கிறார். அந்தப் பெரிய கதையை நாவலாக்குவதற்கு பல்வேறு அனுபவங்கள் தேவை. பாவண்ணன் வளர்ந்து வரும் கலைஞர். இவரிடம் 'காவிய' அளவில் பெரிய கதையை எதிர்பார்த்து நாம் காத்திருக்கலாம்.

பாவண்ணனின் அழகிய தமிழ்நடை தங்குதடையில்லாமல் செல்லுகிறது. இவரது கவித்துவம் அங்கங்கே மிளிர்கிறது. மனிதர்களின் முகங்கள், நடை, உடை, பாவனைகள் பற்றிய பொருத்தமில்லாத வர்ணனைகள் அறவே இல்லை. இயற்கை நிகழ்ச்சிகளையும் சூழல்களையும் வர்ணிக்கும்பொழுது தன் மனத்தில் ஊறிவரும் அன்பை அவற்றின் வழியே பாவண்ணன் கொட்டியமாதிரி இந்த நாவலில் செய்யவில்லை, பக்குவமாக அளவாகத் தன் அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார். ஒருமுறை இந்த நாவலில் படிந்த மனம், இன்னொரு முறையும் வாசிப்புக்காக ஏங்கும்.

பகுதி II

க.நா.சு. நாவல்கள்

க.நா.சு. தனது ஐம்பதாண்டு கால இலக்கிய வாழ்க்கை மூலம் நம்மிடம் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார். தொடக்கத்தில் க.நா.சு. நமக்குள் எரிச்சலையும், வெறுப்பையும் தூண்டியிருந்தாலும் தொடர்ந்து முப்பதாண்டுகளுக்கு மேலாக அவரோடும் அவர் படைப்புக்களோடும் பழகிய பின்னர், ஒருவகையில் சொல்லப்போனால் அவரிடம் நாம் எப்படியோ வசப்பட்டிருப்பதை இப்பொழுது உணர்கிறோம். படைப்பாளியை ஒதுக்கி வைத்து படைப்புக்களை மதிப்பிடுவதைப் பிறகு செய்யலாம். விருப்பு வெறுப்பற்ற ஒரு கர்ம யோகியைப் போல க.நா.சு. இலக்கியவாழ்வு மேற்கொண்டிருந்தார். தன் ஆழ்ந்த படிப்பினாலும் அக்கறையினாலும் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தும் முயற்சியில் அயராது ஈடுபட்டிருந்தார். க.நா.சு.வின் நாவல்களை இப்பொழுது மீண்டும் படிக்கும்பொழுது சிலவற்றை அழுத்தமாகச் சொல்லத் தோன்றுகிறது.

நாவல் இலக்கியத்தைப் பொறுத்தவரை, க.நா.சு.வின் நன்கொடை என சிலவற்றையேனும் நாம் பிரித்துச் சொல்ல முடியும். தமிழகத்தில் முப்பது, நாற்பது, ஐம்பது ஆண்டுகளின் காவிரிக்கரை நாகரிகத்தை 'பொய்த்தேவு', 'ஒருநாள்' நாவல்கள் மூலம் அற்புத ஓவியமாக படைத்துத் தந்துள்ளார். தமிழிலக்கியத்தில் இந்த ஓவியம் என்றும் பொலிவுடன் திகழும். பெருமிதமான வாழ்க்கை மேற்கொண்டிருந்த மிராசுதாரர்கள் சில சமயம் அவர்களின் திருமணக் கோலாகலங்கள், விருந்தோம்பல் ஆகிய செயல்பாடுகளாலும், சிலசமயம் அவர்களின் காமத்தினாலும் பெருமையழிந்து சீர்குலைந்ததைச் சித்தரித்துள்ளார். அதுபோலவே, வணிகமும் நகரமும் இணைந்த ஒரு புதிய நாகரிகம், கிராம நாகரிகத்தை தனக்குட்படுத்தி தான் கொழுத்து வளர்ந்ததையும், பிறப்பிலேயே இந்த நாகரிகம் சில குணக்கேடுகளைக் கொண்டிருந்ததையும் நுணுக்கமாக எழுதியுள்ளார். தான் பார்த்துப் பழகிய எத்தனையோ மனிதர்களை அவர்கள் வாழ்ந்த சூழலோடு வைத்து ரசித்து எழுதியதன் மூலம் இதனைச் சாதித்துள்ளார். சமூக வரலாறு என்ற முறையில் நாவல்களை எழுதுவது க.நா.சு.வின் நோக்கமல்ல. ஆயினும், அவரே அறியாமல் தன் நாவல்கள் மூலம் அவர் சித்தரித்தது தமிழக வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டம்.

2. க.நா.சு. தன்னை உருவாக்கிய, தன்னைப் பாதித்த மனிதர்கள், சூழல்கள் ஆகியவற்றிடம் கொண்டிருந்த அளவற்ற ஈடுபாட்டை இந்தப் படைப்புகள் மூலம் நாம் உணர்ந்து கொள்கிறோம். க.நா.சு.வின் சமகால

எழுத்தாளர்களிடமிருந்து இவரைப் பிரித்துச் சொல்லும் ஓர் அம்சம், பிறர் தம் அனுபவ உலகத்தை பெரும்பாலும் புறவயமாக்கிப் படைக்கும்பொழுது, க.நா.சு. தன்னை உளப்படுத்தி எழுதினார். தன்னைப் பாதித்த, தனக்குள் கரைந்து கலந்து, ஆகவே என்றும் தன்னை விட்டுப் பிரியாத தன் காலத்து மனிதர்களை, ஒரு தீராத வேட்கையுடன் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்து, அதன்மூலம் தன்னை மீண்டும் தழைக்க வைத்து அந்த மனிதர்களையும் சூழல்களையும் மீண்டும் ஒரு நாடகமாக பார்க்கும் முறையில் க.நா.சு. அவர்களைப் பற்றி எழுதினார். 'ஒருநாள்' முன்னுரையில் க.நா.சு. கூறியபடி 'அந்த சாத்தனூர் சர்வமானிய அக்கிரகாரத்து மனிதர்கள் என்னைப் பற்றி எழுது எழுது என்று சொல்லி நான் எழுதும் வரைக்கும் நின்று கொண்டே இருந்தார்கள்' என்பது உண்மை. இந்த மனித நேயம் க.நா.சு.வின் அற்புதமான குணங்களில் ஒன்று. க.நா.சு. நாவல்களில் பெரும்பாலும் வில்லன்களை நாம் பார்க்க முடிவதில்லை. நல்லவர், தீயவர் என்ற வேறுபாடு க.நா.சு.விடம் அற்றுப் போவதில்லை. ஆனால் மனிதர் என்ற முறையில் அவர் எல்லாரையும் நேசித்தார். இந்தப் பண்பு 'பொய்த்தேவில்' வெளிப்பட்டு 'தாமஸ் வந்தார்', 'அவதூதர்' போன்ற நாவல்களில் வெள்ளமாகப் பெருக்கெடுப்பதை நாம் காணமுடியும்.

3. க.நா.சு. நாவல்களின் கட்டுக் கோப்பில் உள்ளடங்கி இருக்கும் கலை உணர்வின் சில அழுத்தமான அம்சங்களைக் குறிப்பிடலாம். ஒன்று, சுவாரசியம். இன்னொன்று, விபரீதம். எதிர் வீட்டுக்கு குடிவந்த இளம் பெண்களின் ஈர்ப்பு விசையில் எப்படி ஒவ்வொருவராக மயங்கி கட்டுப்படுகிறார்கள் என்பதையும், இதை ஒரு பார்வையாளன் போல் பார்த்துக் கொண்டிருக்கும் ராஜா இறுதியில் காம உணர்வுக்கு தானும் எப்படி ஆட்படுகிறான் என்பதையும் சுவாரசியமாக 'ஏழுபேர்' நாவல் சித்தரிக்கிறது. சுவாரஸ்யம் என்ற இந்தப் பண்பு அவரது எல்லா நாவல்களிலும் சிறிதும் பெரிதுமாக இழையோடுவதை நாம் உணரமுடியும். 'வாழ்ந்தவர் கெட்டார்' என்ற நாவல் சில மனிதர்களின் வாழ்க்கையை விபரீதம் என்ற உணர்வின் வழி ஒழுங்கமைத்துச் செல்கிறது. மம்மேலியார் மனைவியை டாக்டர் அகப்படுத்திக் கொண்டார். டாக்டரின் மகன் ரகுநாதனின் குடும்பத்தோடு இன்னொரு மம்மேலியார் பழகுகிறார். மம்மேலியார் தம் மனைவியை வசப்படுத்திக் கொள்ள வந்திருப்பாரோ என்று ரகு சந்தேகித்து, தன் மனைவியையும் காய்ந்து அவள் மரணத்துக்குக் காரணமாகிறான். தன் மனைவி மரணம் மம்மேலியாரால்தான் ஏற்பட்டது என்று ரகு மம்மேலியாரை 'நீ மனிதனல்ல, புழு' என்று திட்ட, அடுத்த கணம் அவர் ரயிலில் விழுந்து செத்தார். இப்பொழுது ரகு பாதிக்கப்படுகிறான். காய்ச்சல் கண்டு வெறியேறி மாய்கிறான். காரணமில்லாமல், ஆனால் காரணமாகி அப்புறம்

இதே போன்ற தொடர் விளைவுகள் – விபரீதம் மையமாகி நாவலின் கட்டுக்கோப்பு எழுகிறது. 'நளினி'யில் நளினி சீதாராமனை மறுத்து விடுவது இப்படி ஒரு விபரீதம். 'ஆட்கொல்லி', 'பெரிய மனிதன்' நாவல்களிலும் இதைக் காணலாம். இப்படி ஓர் உணர்வில் பார்க்கும்போது பிற அம்சங்கள் விடுபட்டுப் போகும் ஆபத்தும் இருக்கிறது.

4. க.நா.சு. நாவல்களின் கட்டுக்கோப்பினுள் இயங்கும் இன்னொரு அடிப்படையான அம்சம், வாழ்க்கை பற்றிய அவரது விமர்சனம். கருத்து வடிவில் இல்லாமல் மனிதர்களையும், அவர்களது யதார்த்த வாழ்க்கைச் சூழலையும் இவற்றுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளையும் இலக்கியமாகச் சித்தரிக்கும்பொழுது வாழ்க்கையைப் பற்றிய விமரிசனம் அதற்குள் அடங்கி இருக்கிறது. இந்தப் பக்குவம் இலக்கியத்தை அழகிய முறையில் வடிவமைக்கிறது. பொருளோடும், காமத்தோடும் பிற சிறுமைகளோடும் கட்டுண்ட மனித வாழ்க்கையை க.நா.சு. போற்றவில்லை. இதற்கு மாறான வாழ்க்கையின்பால்தான் க.நா.சு. வின் நேசம் வெளிப்படுகிறது. விருப்பு வெறுப்பற்ற சமநிலை அல்லது சாந்தம் என்ற முறையில் நாம் புரிந்து கொள்ளும் உன்னதமான மனிதப்பண்பை அவர் போற்றியதை அவரது பல படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.

பெரிய மனிதன், ஆட்கொல்லி ஆகிய இரண்டு நாவல்களை மார்க்சியவாதிகள் இன்று படித்தால் அதிர்ச்சியும், வியப்பும் கொள்ள நேரும். ஆடம்பரப் பொருட்களை விளம்பரத்தின் மூலம் மனிதர்க்கு அவசியமான பொருளாக்கி, விற்பனையைப் பெருக்கி செல்வம் கொழிக்கும் ஒரு வணிக நிறுவனத்தில் மெல்ல மெல்ல பதவியில் உயர்ந்து இறுதியில் அதன் உரிமையாளராகி தன்னைப் பகைத்துக் கொண்ட பங்காளி ஒருவனைக் கொன்று ஒழிப்பதன்மூலம் தன்னைக் காத்துக் கொண்ட ஒரு பெரிய மனிதனின் கதையை க.நா.சு. சொல்கிறார். நாற்பத்தியாறாவது வயதில் இவனிடம் கிளர்ந்தெழுந்த மனச்சாட்சியைச் சாந்தப்படுத்த, தந்திரமாக ஒரு வழியைத் தேடிக் கொள்கிறான். ஆட்கொல்லி நாவலில் வரும் ராஜா, தன் மாமாவும், மாமியும் வட்டிக்கு விட்டு பணம் சேர்ப்பதையே வாழ்வாகக் கொண்டு பல இன்பங்களை இழந்து நோயினால் நாசமாவதைச் சொல்லுகிறான். பொய்த்தேவு நாவல் இதே பிரச்சினையையே பல பரிமாணங்களோடு சித்தரிப்பதன்மூலமே தமிழின் தலைசிறந்த நாவல்களில் ஒன்றாகிறது. சோமு முதலியார் தன் இளமைக்கால மேட்டுத்தெரு வாழ்க்கையிலிருந்து எவ்வளவு முயன்றாலும் விடுபட முடியவில்லை. இதுதான் நாவலின் உயிர். இதற்கான முயற்சியின் விளைவாக இறுதியில் சோமு, செல்வம் – காமம் ஆகியவற்றை உதறிக்கொண்டு பண்டாரமாகிறான். மேட்டுத்தெரு தன் பிடிப்பிலிருந்து சோமுவை

விடுவிக்கவில்லை. இதற்கு எதிரான போக்கும் சோமுவுக்குள் தீவிரமாக இருந்தது. இவற்றுக்கிடையில்தான் வாழ்க்கையும் போராட்டமும் விடுதலையும் அவனை என்றும் மனிதனாக வைத்திருக்கும். இந்த எதிர்நிலையோடு உறவுடையவர்கள் அவன் தாய் வள்ளி, மிராசுதாரர் ரங்காராவ் குடும்பம், சாம்பமூர்த்திராயர், இறுதியில் சாமா என்ற இளைஞன். எதிர்நிலைகளுக்கு இடையிலான போராட்டம் என்ற இயங்கியலைக் க.நா.சு. வெளிப்படையாக ஒப்புக் கொள்பவர் அல்ல. ஆனாலும், இத்தகைய இயங்கியல்தான் நாவலை உயரிய படைப்பாக்குகிறது.

5. க.நா.சு. சாந்தம் அல்லது சமநிலையை இலக்கியத்தின் பண்பாக்கியவர். காமம் அல்லது காதலை இவர் மறுப்பது இதன் வெளிப்பாடுதான். உணர்ச்சிக் கொந்தளிப்பு என்பது இவரைப் பொறுத்தவரை அசட்டுத்தனம். கல்கி முதலியவர்கள் போற்றிய காதலன் அல்லது காதலி க.நா.சு. வின் படைப்பில் இல்லை. 'பசி' நாவலில் சாமா திடீரென ராஜியிடம் காதல் வசப்படுகிறான், ராஜி உடனே இதைக் களைகிறாள். நளினி சீதாராமனிடம் மனத்திற்குள் கொஞ்சமே கொண்டிருந்த காதலே கூட அவள் வாழ்க்கையை நாசமாக்குகிறது.

காமம் என்பதை ஃபிராய்டியத்தோடு க.நா.சு. எப்படியோ சம்பந்தப்படுத்திக் கொண்டார். காமம் எனத் தான் குறுக்கிப் பொருள்படுத்தி ஃபிராய்டியத்தை எதிர்த்து க.நா.சு. கடுமையாகவும் கேலியாகவும் எழுதினார். இத்தகைய எதிர்ப்பும் கேலியும் க.நா.சு. விடம் நாம் கண்ட குணத்தோடு பொருந்துவதில்லை. திருமண வாழ்க்கை, ஆண் – பெண் உறவு இவைகளெல்லாம் குற்ற உணர்வோடு நம்மிடையே பேசப்படவில்லை. வாழ்க்கையின் இயல்பான அம்சங்களில் பாலுறவு என்பது ஒன்று, அவ்வளவுதான். இதனை வெறுத்து ஒதுக்குவது நம் மரபுக்குப் பொருந்தாது. 'ஒருநாளில்' வரும் மங்களம், மூர்த்தியோடு தனக்குத் திருமணம் என்றவுடன் அதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அடக்கம், நாணம் ஆகியவற்றைப் போர்த்துக் கொள்ளும் மணமகளாகிறாள். 'கோதை சிரித்தாளில்' ராதை சிறுவயது முதற்கொண்டு ராமானுஜம்தான் தனக்குக் கணவன் என்பதை வெளிப்படையாகச் சொல்லி அவனையே மணந்து கொள்கிறாள். இங்கு ஒரு முரணைப் பார்க்கிறோம். ராமானுஜத்திடம் கோதை கொண்டிருந்தது ஆழ்ந்த காதல். ஸ்டுவர்ட் சொன்ன பிறகுதான் ராமானுஜம் இதை அறிகிறான். அப்புறம்தான் கோதை மீண்டும் சிரிக்கிறாள்.

உளவியல் பகுப்பாய்வை க.நா.சு. மறுத்து விடுவதால் 'பித்தப்பூ நாவல் பெரிதும் பலவீனப்பட்டிருக்கிறது. தியாகு பைத்தியக்காரனாவது தலையில் அடிபட்டதனால் மட்டுமல்ல, அவனது உளச்சிதைவுக்குக்

காரணத்தை நுணுக்கமாகத் தேடிச் சென்றால் அவனது இளமைக்காலக் குடும்பச் சூழலில் காணமுடியும். அவன் நுண்ணறிவும் கலை உணர்வும் உடையவன். அவன் விரும்பிய உயர்ந்த பதவி கிட்டாததால் மட்டுமல்ல, இவனது கூர்ந்தஅறிவும் நுட்பமான கலை உணர்வும் கூட இவனிடம் உளச்சிதைவை ஏற்படுத்தியிருக்க முடியும். இவன் குடும்ப வாழ்வு மேலும் ஒரு பிரச்சினை. இவை எல்லாமே இவன் சார்ந்த சமூகத்தோடு இணைந்தவை. உளச்சிதைவு பற்றி தொடர்ந்து வந்துள்ள ஆய்வுகள் பல. இவை பற்றிய அறிவோடு தியாகுவின் மனச்சிதைவை அணுகியிருந்தால் சிறந்த நாவலாகியிருக்கும். மாறாக, பணம் சேர்ப்பது ஒரு பைத்தியம், படிப்பது ஒரு பைத்தியம் என்ற முறையில் பைத்தியங்களை க.நா.சு. கேலியாக வகைப்படுத்துவது பொருத்தமில்லை. தன் நண்பனுக்கு தான் செய்த நினைவஞ்சலியாகவே தங்கிவிட்டது இந்தக்கதை.

அசுரகணம் இங்கு மேலும் சில காரணங்களுக்காக குறிப்பிட வேண்டிய க.நா.சு.வின் சிறந்த படைப்பு. ஹேமாவைப் பார்க்கச் சென்ற இராமன் ஹேமாவின் தாயார் நிழலில் சூரப்பனகையைக் கண்டு அவளது கவர்ச்சிக்கு ஆட்படுகிறான். இறுதியில் அவளைக் (தன் மனத்திற்குள்) கொன்று ஹேமாவை மணந்த பிறகும், அவள் தாயார் நிழலில் சூர்ப்பனகையையும், அசுர கணங்களையும் பார்க்கிறான். காதல் என்பது உண்மையில்லை என்பவர் க.நா.சு. காமம் என்பது மனிதனின் ஆதாரகுணம் என்ற ஃபிராய்டியத்தை மறுக்கக் கிளம்பியது இந்நாவல். ஃபிராய்டியத்தை க.நா.சு. மறுக்கிறாரோ இல்லையோ, ஃபிராய்டியத்தை மறுக்கும் போதே யங் கின் சமூகமனம் (Collective Consciousness) என்ற ஆழ்கடலுக்குள் விழுகிறார். இது நாவலின் ஒரு அற்புதமான பரிமாணம். இராமன் படிப்பாளி, உணர்வுகள் நிறைந்தவன். தன் மனப்போராட்டத்தில் ஆழ்ந்து செல்லும்பொழுது தனக்குள் சீதை, இராமன், சூர்ப்பனகை, இந்திரன், அகலிகை, தாந்தேடியட்ரிஸ், ஹோமர், ஹெலன், ரவிவர்மா, மோகினி, புத்தர், சங்கரர், ஜராதுஷ்டிரர், ஸ்பின்க்ஸ் இப்படிப் பலரைக் காண்கிறான். இவனுக்குள் அடங்கியிருந்த ஒரு வரலாறும் பிரபஞ்சமும் பொங்கிப் பெருகி வழிகின்றன. மனிதனின் அழிவில்லாத நித்தியத்தையும் அவனது போராட்டங்களையும் இங்கு காண்கிறோம். இராமகாதையில் வரும் இராமன், சூர்ப்பனகையை என்றும் வென்றதில்லை என்ற விமர்சனத்தையும் இந்த நாவல் தருகிறது.

6. இந்திய மரபின் சில அம்சங்களில் க.நா.சு. அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தார். குடும்பம், உறவுகள், திருமண வாழ்க்கை ஆகியவற்றில் க.நா.சு. அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். இந்திய வாழ்க்கை இயற்கையோடும் பிற மனிதர்களோடும் ஒரு மனிதனை சுதந்திரமான

உறவில் வைத்திருக்கிறது, மேற்கு நாட்டு வாழ்க்கை மனிதனை அவனது பல பண்புகளிலிருந்து குறைத்து இரண்டொரு பண்புகளில் இறுக்கி விடுகிறது என்பது க.நா.சு. வின் கருத்து.

'ஒருநாள்', 'கோதை சிரித்தாள்' ஆகிய இரண்டு நாவல்களிலும் இந்தக் கருத்தின் ஆதிக்கத்தை நாம் காணலாம். மேஜர் மூர்த்தி ஜெர்மனியில் பத்தாண்டு கழித்தவன். இலட்சம் பேர்களை ஆயிரத்துக்குள்ளும், ஆயிரத்தை ஒரு நூறுக்குள்ளும், இப்படியாகப் பத்துப் பேரை ஒருவருக்குள்ளும் அடக்கும் மேற்கு நாகரிகம் மட்டுமல்ல, இதே வகையில் இந்திய தேசிய ராணுவமும் தன்னைக் குறுக்கியது என்ற உணர்வில் சாத்தனூர் கிராமத்திற்கு வருகிறான் மூர்த்தி. சாத்தனூர் அக்கிரகாரத்து மனிதர்களும் மாமாவின் குடும்பமும் அவனுக்குள் மீண்டும் ஒரு சுதந்திரமான மனிதனை உயிர்ப்பிக்கின்றன. 'ஒரு பலவீனமான நிலையில் இப்படி மூர்த்தி முடிவு செய்து கொண்டான்' என்று முன்னுரையில் க.நா.சு. கூறினாலும், குடும்பத்தைப் பற்றிய விமர்சனத்தோடு அவரது படைப்புக்கள் எதையும் நாம் காண்பதற்கில்லை. தவிர இதே போன்ற மனநிலையோடுதான் ராமானுஜம் அமெரிக்காவிலிருந்து திரும்பினான்; அவனும் எந்த விமர்சனமும் இல்லாமல், இந்திய கிராமம் ஒன்றில் இல்லற வாழ்க்கை மேற்கொள்கிறான்.

7. இந்திய மரபில் அன்னியமாதலுக்கும், இருத்தலியலுக்கும் அறவே இடமில்லை என்பது க.நா.சு. வின் முடிவு. இந்த நிலைப்பாடு க.நா.சு.வின் படைப்பைப் பெருமளவு பாதிக்கிறது. 'கோதை சிரித்தாளி'ல் வரும் இராமானுஜம் அமெரிக்காவில் பௌதிகப் பேராசிரியரின் பல புதிய கண்டுபிடிப்புகளுக்கு உரிமையாளன். அந்த வாழ்க்கையின் இறுக்கம் அவனுக்குத் தாங்க முடியவில்லை. அதனால் இந்தியாவிற்கு வந்து தனக்கு இளம் வயதில் பௌதிகம் கற்றுத்தந்த கோதண்டராமய்யர் குடும்பத்தில் சங்கமமாகிறான். அன்னியமாதல் என்ற கருத்தாக்கத்தோடு இராமானுஜம் மட்டுமல்ல கோதண்டராமய்யரும் சித்தரிக்கப்பட்டிருந்தால்தான் அவரது கோயில் வழிபாட்டை விளக்கமுடியும். 'நவீன பௌதிகம்' தன் அடிப்படைகளை இழந்து சமயத்தோடு கலந்து விட்டது என்ற கருத்துக்கூட இப்பாத்திரங்களின் படைப்பை மேம்படுத்தியிருக்கும். தவிர, இராமானுஜத்தின் மன நெருக்கடிக்கான காரணம் யதார்த்த உறவுகளில் வைத்துச் சொல்லப்படவில்லை.

இப்படிக் காணும் பொழுதுதான் இந்திய வாழ்க்கைக்குள்ளிருக்கும் நெருக்கடிகளைப் புரிந்து கொள்ள முடியும். பொருள் தேடுவதிலும் காமத்திலும் தம்மைப் புதைத்து, தம்மைச் சிறுமைப்படுத்தி அல்லது

சின்னாபின்னப்படுத்திக் கொள்ளும் மனிதர்களை அன்னியமாதல் என்ற அம்சத்திலிருந்துதான் கண்டுகொள்ள முடியும். சோமுவுக்குப் பொருள் தேடிக்குவிக்கும்போதே, தான் நாசமாகி வருவது தெரியவில்லை. 'ஏழுபேரில்' வரும் ராஜா தனக்குள் இருக்கும் எந்த வெறுமையை நிறைத்துக் கொள்ள எதிர்வீட்டுப் பெண்ணிடம் மோகம் கொண்டான் என்ற விவரம் இல்லை. 'பெரிய மனிதன்' தன் மனச்சாட்சியை வேறு எப்படி சமாதானப்படுத்திக் கொள்ளமுடியும்? எந்த வெறுமையிலிருந்து விபரீதங்கள் உற்பத்தியாகின்றன? அதேபோல காதல் கவர்ச்சி வேறு எப்படி ஏற்படுகிறது? சோமுவுக்கு நிகராக அல்லது சோமுவை விடச் சற்று உயர்வாகவே கூட படைப்பில் ஆளுமை கொண்டிருக்க வேண்டியவர் சாம்பமூர்த்திராயர். இவரது காமத்தையும் பக்தியையும் விளக்க வேறு வழி என்ன?

8. இந்திய மரபின் இன்னொரு அம்சம், சாந்தம் அல்லது சமநிலை. சோமுப் பண்டாரத்தின் மூலம் வெளியாகும் இந்தக்குணம், 'தாமஸ் வந்தார்', 'அவதூதர்' நாவல்களில் நீக்கமற நிறைகிறது. எதார்த்த உலகை மேலும் ஆழமாகத் துருவிச் செல்வதன் மூலமே சிறந்த நாவல் உருவாகிறது. ஆனால் 'தாமஸ் வந்தாரி'ல் இந்த உலகம் மிக மங்கலாக இருக்கிறது. யூதக்குடும்பச் சித்தரிப்பு இந்த நாவலில் ஒரு தனி வண்ணத்தைச் சேர்க்கிறது. மற்றபடி வாதூலனின் தந்தையைத் தவிர எல்லோரும் மிக மிக நல்லவராகவே சித்தரிக்கப்படுகின்றனர். தாமஸ் முனிவர் தமிழகத்திற்கு தன் மகாத் தியாகத்திற்காகத்தான் வந்தார். இந்த தியாகம் வாதுலன் மூலம் நிறைவேறும் என்பது ஓர் அற்புதக்கதை. இது தவிர யேசு, தாமஸ் முனிவர் ஆகியவர்களின் அற்புதங்கள் அப்படியே சொல்லப்படுகின்றன. மனிதர்கள் அற்புதங்களை நம்புகிறார்கள் என்ற சமாதானம் போதுமானதல்ல. யேசுவை ஒரு மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்தி அற்புதங்களைப் படைத்தவர்கள், ஏசுவுக்குப்பின் வந்த குருமார்கள். தவிரவும், அற்புதங்களையும் நம்பகத் தன்மை கெடாமல் சித்தரிப்பதுதான் நாவலாக்கம். இவற்றையெல்லாம் புறந்தள்ளி க.நா.சு. படைத்திருப்பது ஒரு புராணம்.

மு.வ. பாணியில் நிறைய கருத்துக்கள் இந்த நாவலில் பேசப்படுவது ஒரு பெரும் குறை. மரபுக் கதைகளில் வள்ளுவர் தாழ்ந்த சாதியாக சொல்லப்பட்டிருக்கிறார். இதற்கு ஆழ்ந்த பொருண்மை காணாமல் இதை அப்படியே க.நா.சு. சித்தரிப்பது இன்னொரு குறை.

அவதூதர்' நாவலில் எவ்வளவு குறைகள் இருந்தாலும் க.நா.சு. வின் தனிமுத்திரையைப் பெறுகிறது என்ற முறையில் நாம் பாராட்ட முடியும். எதார்த்த உலகின் இயக்க விதிகள் அவதூதரால் எளிமையாக

உடைபடுகின்றன. தன்னைக் கைது செய்த குலாம்கவுஸைப் பார்த்து 'நீயும் தானே நிர்வாணமாக இருக்கிறாய்' என்கிறார் அவதூதர். சேற்றில் குளிக்கும் அவதூதர், தாவூது ஷாவைப் பார்த்து 'உன்னைவிடச் சந்தனத்தை நான் நன்றாகத் தயாரிப்பேன்' என்கிறார். பஞ்சாபியின் கல்லாப் பெட்டிக்குள் கைவிட்டு பணத்தைத் தெருவில் வாரி இறைக்கிறார். தன்னைக் கட்டிப் போட்ட மூப்பனிடம் திரும்ப வந்து 'உனக்கு தொழில் தெரியவில்லை' என்கிறார். காதலன் மூலம் கருத்தரித்த அலமுவை அதற்காகவே திருமணம் செய்து கொள்கிறார். இந்தக் கதையிலும் நிறைய அற்புதங்கள் சொல்லப்படுகின்றன. அற்புதங்கள் நம்பகத்தன்மையோடு சொல்லப்படவில்லை. யேசுவின் கதையைத்தான் ஹென்றியின் மூலம் ஜெயகாந்தன் 'ஒரு வீடு, ஒரு மனிதன், ஒரு உலகம்' நாவலில் சொன்னார். இதில் அற்புதங்கள் நம்பகத் தன்மையோடு இடம் பெறுகின்றன. டால்ஸ்டாய் தன் இறுதிக் காலத்தில் 'பைபிள் கதைகள்' எழுதியதுபோல க.நா.சு. எழுதுகிறாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அவதூதர் மூலம் சித்தரிக்கப்படுவது தமிழ்நாட்டுச் சித்தர் வாழ்க்கை. ஜென் புத்த மதம் மேற்கு நாட்டு வழியாக நமக்கு இத்தகைய சித்தர்களை அறிமுகப்படுத்துகிறது. இதை வைத்து 'அவதூதர்' நமக்கு அன்னியர் என்று கருத வேண்டியதில்லை. 'ஓடும் செம்பொன்னும் ஒரு நிகராகக் காண்பது சித்தர் குணம்' 'இத்தகைய சித்தர்', அவதூதர்.

9. நாவல் ஆக்கத்தில் க.நா.சு. வின் சாதனையை இங்கு தொகுத்துப் பார்க்கலாம். க.நா.சு., இலக்கியத்தின் பல களங்களில் செயல்பட்டவர். நாவல் ஆக்கத்தில் மட்டுமே ஈடுபட்டு சாதனை செய்ய வேண்டுமென்பதை அவர் நோக்கமாகக் கொள்ளவில்லை. எனினும், 'பொய்த்தேவு' அவரது சாதனை. அடுத்தபடியாக, 'ஒருநாள்', அதற்கு அடுத்து, 'அசுரகணம்', 'அவதூதர்'. க.நா.சு.–வே கூறியபடி 'எழுதிப் பார்க்க வேண்டும், எனக்காகத்தான் எழுதிக் கொள்கிறேன்' என்ற முறையிலும் எழுதினார். தன் மனத்திற்குள் பதிந்துள்ள சில மனிதர்களை எழுத்தில் கொண்டு வருவது ஒரு கலை அனுபவம். எழுதிப் பார்க்க வேண்டும் என்ற உணர்வோடு, சிலசமயம் நிறைய – நீர்த்துப் போகுமளவு எழுதினார். இதற்காகவே வித்தியாசமான சில துப்பறியும் நாவல்களையும் எழுதினார். என்பது அல்லது நூறு பக்கங்களில் சொல்ல முடியாதவற்றை இருநூறு பக்கங்களில் சொல்ல வேண்டாம் என்பது அவர் விருப்பம். நூறு பக்கங்களில் அவர் செய்த நாவல்கள், வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களோடு கூடிய செறிவான படைப்பு ஆகவில்லை. ஒரு நூறு பக்கத்திற்குள் எழுதியிருந்தால் 'தாமஸ் வந்தார்', 'கோதை சிரித்தாள்' இரண்டும் கூட நல்ல படைப்பாகியிருக்கும்.

க.நா.சு. வின் கருத்தியல் அல்லது சித்தாந்தத்தை அவர் நாவல்களிலிருந்து மட்டுமே கண்டறிந்து கொண்டு அவரை விமர்சனம் செய்வது போதாது. முழுமையான அளவில் அவர் தனக்கான கருத்தியலை உருவாக்கிக் கொண்டார், என்று சொல்ல முடியாது. எனினும், அவர் கருத்தியலின் சில கூறுகள் தெளிவாகப் புலப்படுகின்றன. வெறும் பொருளுற்பத்தி, வணிகப் பெருக்கம், நுகர்வு என்பதை ஆதாரமாகக் கொண்ட முதலாளியம் என்று நாம் சொல்லக்கூடிய போக்கை அவர் போற்றவில்லை. அவர் பாராட்டும் சில பண்புகளை தொகுத்து நிலப்பிரபுத்துவப் பண்பு என்று பெயரிட்டால் இதன் பொருந்தாமை புலப்படும். ஜென் புத்தமதம், சித்தர் மரபு இன்றைய சில உளவியலாளர் போற்றும் தூய பிரக்ஞை Pure Consciousness என்பதை அவர் போற்றினார். இலக்கியத் திறனாய்வில் Impersonality என்று சொல்லப்படும் மனநிலையை அவர் கொண்டிருந்தார். சுரண்டலுக்கு எதிரானது இந்த மனநிலை.

கடவுளை அவர் ஏற்கவில்லை. ஆனாலும் கடவுள் என்ற கருத்தாக்கத்தில் அவருக்கு வெறுப்பில்லை. விதிக் கோட்பாட்டை ஏதோ ஒரு வகையில் ஏற்றுக் கொண்டிருந்தார். மனித மேன்மையில் அவர் நாட்டம் வியக்கத்தக்கது. இக்குணங்களை ஆன்மீகத்திற்குள் வகைப்படுத்தலாம். காலம் காலமாக இந்திய மரபுக்குள் இயங்கிவருவது இந்த ஆன்மீகம். சமயம் என்று இதைக் குறுக்கிவிட இயலாது. சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் இந்த ஆன்மீகம் துணைக்கு வரும். கலாச்சாரத்தின் பகுதி இந்த ஆன்மீகம். போராடத் தெரிந்தவர்களுக்கு இதுவும் ஒரு ஆயுதமாகும். அரசியலில் க.நா.சு. ஆர்வம் காட்டவில்லை. அவரைப் பொறுத்தவரை இலக்கியம், நல்ல மனித உறவுகள், பயணம் முதலியவை போதும். மனிதனை அரசியலுக்குள்ளும், பொருளியலுக்குள்ளும் குறைத்து விடும் மார்க்சியப் போக்கைத்தான் அவர் மறுத்தாரென்று நாம் சொல்ல முடியும். மூலதனம் எம்முறையில் உற்பத்தியாகிறது என்பதை அவர் காணவில்லை. உற்பத்தி இயக்க ஆதாரத்தின் மேல் கல்விமுறை, நிறுவனம், வியாபாரம், அரசு ஆகியன அமைந்திருப்பதை அவர் காணவில்லை. இந்த அடிப்படையில் அன்னியமாதல், மனநோய் ஆகியவை ஏற்படுவதையும் அவர் அறியவில்லை. இப்படி அவர் பார்த்திருந்தால் பிச்சாண்டியை வெறும் கொள்ளைக்காரனாகப் பார்த்திருக்க முடியாது. உடமை ஆதிக்கத்தைத் தனக்குள் கொண்டிருக்கும் குடும்பத்தினுள் எவ்வாறு ஆண் – பெண் உறவுகள், பிற உறவுகள் இயங்குகின்றன என்பதைப் பார்த்திருக்க முடியும். உடமைச் சமூகம்தான் மேட்டுத் தெருக்களை உற்பத்தி செய்கிறது. மேட்டுத் தெரு மனிதர்களை சீரழித்து வைத்திருப்பதன் மூலமே உடமைச் சமூகம் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்கிறது.

க.நா.சு. வின் பெண் பாத்திரங்கள் அனைவரும் மிக நல்லவர்கள். உடமைச் சமூகம் இப்படித்தான் அவர்களைத் தன் அதிகார நலனுக்கு ஏற்றவகையில் வார்த்து வைத்திருக்கிறது. பாப்பாத்தியின் அவலத்தையும், சின்னம்மாவின் குணக்கோளாறுகளையும் பாலம்மா, கோமளம் ஆகியவர்களின் சாகசங்களையும் இவற்றுக்கான காரணங்களிலிருந்து கண்டிருக்க முடியும். நச்சுவாய்க் கிழவரும் இதேபோலத்தான். 'ஏழு பேரில்' வரும் பெண்களையும் இப்படித்தான் புரிந்து கொள்ளமுடியும். இவர்களெல்லாம் இந்தச் சமூகச் சூழலில் ஒரிரு குணங்களில் ஒடுங்கிப் போனவர்கள். இவர்களுக்குள் மனித ஆளுமை மங்கி அல்லது சிதைந்து குரூரமாகிப் போயிருக்கிறது. இதன் காரணமாகவேகூட சில மனிதர்கள் இந்தப் போக்குக்கு எதிர்த் திசையில் பயணம் செய்பவராகின்றனர். இவர்களைத்தான் தியாகிகள், பக்திமான்கள் என்றெல்லாம் நாம் புகழ்கிறோம். இவர்களில்தான் சாம்பமூர்த்திரர்யர் போன்றவர் அடங்குகின்றனர்.

க.நா.சு. நாவல்களில் இடம்பெற்ற மனிதர்கள் இன்று இருந்தால் என்று சிறிதளவு கற்பனை செய்து பார்க்கலாம். இன்றைய நிலையில் சாம்பமூர்த்திராயர் மாதிரி பண்டரிபுரம் தேடிப்போகும் மிராசுதாரரையோ, சோமு மாதிரி பண்டாரமாகிற முதலாளியோ இல்லை. இவர்கள் எல்லாம் இந்த மாதிரி 'மடத்தனத்தை' இப்பொழுது தேர்ந்தெடுத்துக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் அடைக்கலம் புகுவதற்கு அல்லது ஆறுதல் பெறுவதற்கு 'நவீன மடங்கள்' உள்ளன. ஆழ்நிலை தியானங்கள் உள்ளன. இவற்றில் இவர்களுக்குத் தேவையான சொகுசும், அலங்காரங்களும் சேர்ந்துள்ளன. இவர்கள் அக்கறை கொள்வதற்கு அரசியலும், நவீன அறிவியலும் இருக்கின்றன. என்ன இருந்தாலும் க.நா.சு.வின் காலத்தை நாம் தாண்டி விட்டோம்.

உடமைச் சமூகம்தான் விபரீதங்களையும் பெரிய மனிதர்களையும், கொள்ளைக்காரர்களையும், வேசிகளையும், அகங்காரம் ஆர்ப்பாட்டங்களையும் அப்புறம் பண்டாரம், மகான்களையும் தோற்றுவிக்கிறது. ஆழ்ந்து பார்த்தால் உடமைச் சமூகத்தைக் கேள்விக்குட்படுத்தாது, ஏற்றுக் கொண்டதன் மூலம் அதன் ஆதிக்கத்திற்கு க.நா.சு. தன்னை உட்படுத்திக் கொண்டார். இதன் பாதிப்பை க.நா.சு. வின் படைப்புகள் காட்டுகின்றன.

10. இறுதியாக க.நா.சு. நாவல் விமரிசனம் பற்றிய என் அணுகல் முறையின் சில அம்சங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக இப்பகுதி. இக்கட்டுரைக்குள் இடம்பெறாத க.நா.சு.வின் சில நாவல்கள் பற்றியும் இங்கு நான் குறிப்பிட வேண்டும். 'மூன்று பெண்கள்' என்பது துப்பறியும் நாவல். இது தழுவல் நாவல் என்று விமரிசனம் இருப்பதால் இதை நான் எடுத்துக்

கொள்ளவில்லை. பொதுவாக க.நா.சு. வேறுபட்ட முறையில் துப்பறியும் நாவல்களை எழுதினார். இவ்வகை நாவலிலும் தமிழகம் பற்றிய சூழலை அவர் மறந்து விடவில்லை. 'அவரவர் பாடு' நாவல், தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையில் நடந்த அரிசி கடத்தலை, தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் நிலவிய காலச் சூழ்நிலையில் வைத்துச் சொல்கிறது. தவிர, துப்பறியும் நாவல்களில் மேலோங்கியிருக்கும் சஸ்பென்ஸ்களுக்கிடையில் மனிதப் பண்புகள் க.நா.சு. நாவல்களில் அடிபட்டுப் போவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'அவரவர் பாடு' தொடக்கம் முதலே சுவாரஸ்யத்துடன் எழுதப்பட்டுள்ளது. ஒரு கொலைகாரனோடு காபி சாப்பிட்டுக் கொண்டே நயமாகப் பேசும் முறையில் கதை சொல்கிறார், ஆசிரியர். 'மாதவி' நாவலில் தென் அமெரிக்காவில் பெரும்புகழோடு விளங்கிய 'கிரீட்' நாகரிகச் சூழலில் ஒரு தமிழக வீரன் செய்யும் சாகசங்கள் சித்தரிக்கப்படுகின்றன. இவ்வகையில் இது மிக வித்தியாசமான துப்பறியும் நாவல்தான்.

இனி என் அணுகல் முறை பற்றி :

நான் செரித்துக் கொண்ட மார்க்சிய நோக்கிலான அணுகல் முறையை க.நா.சு. நாவல்களைப் புரிந்து கொள்வதற்கும் விமரிசனம் செய்வதற்கும் பயன்படுத்துகிறேன். குறிப்பாக க.நா.சு. வின் கலை உணர்வு அவர் நாவல்களின் கட்டுக்கோப்பை எவ்வாறு உருவாக்குகிறது என்பதில் தொடங்குகிறேன். இந்தக் கலை உணர்வின் பகுதியாகத்தான் வாழ்க்கை பற்றிய க.நா.சு. வின் விமர்சனத்தை நான் காண்கிறேன். எவ்வளவு தூரம் இது சரி என்பது பற்றியும் க.நா.சு. வின் கலை உணர்வின் பிற அம்சங்கள் பற்றியும் நான் தொடர்ந்து சிந்திக்க வேண்டும். க.நா.சு. ஒரு விமர்சகர் அல்லர் என்று சிலர் உண்மையில் நம்பிய போதும் நான் அவ்வாறு எடுத்துக் கொள்ளவில்லை. க.நா.சு. விடம் கறாரான – நிலையான அளவுகோல்கள் இல்லை என்பதனால் அவரிடம் அளவுகோல்களே இல்லை என்று பொருள்படாது. க.நா.சு. முக்கியமாகக் கருதிய இலக்கிய அனுபவம் என்பதற்குள்ளிருந்து அவரது அளவுகோல்களை நாம் கண்டுபிடிக்க முடியும். வழக்கமாக அவர் இலக்கியம் தத்துவத்தைச் சொல்வதில்லை என்று சொல்லிக் கொண்டாலும் அவரது 'பொய்த் தேவை' இலக்கியத் தரத்துக்கு உயர்த்துவது தத்துவ நோக்குத்தான் என்பதில் ஐயமில்லை. ஒருமுறை இப்படி அவரோடு விவாதித்தபொழுது அவர் இதைப் புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டார். மேலும் ஒன்று : மார்க்சியத்தைப் புரிந்து கொள்வதிலும் இலக்கிய விமரிசனத்திற்கு அதை பயன்படுத்துவதிலும் நான் தொடர்ந்த பயிற்சியில் இருக்கிறேன். மனித உறவுகளுக்கு – உற்பத்தி உறவுகளுக்கு

மார்க்சியம் தரும் முக்கியத்துவத்திலிருந்து மார்க்சியம் பற்றிய புரிதல் எனக்குள் தொடங்குகிறது. ஆகவே கலாச்சாரம் முக்கியமாகிறது. காலம் காலமாகத் தொடர்ந்துவரும் சில கலாச்சாரப் பண்புகளை இலக்கியத்தினுள்ளும் மனிதர்களுக்குள்ளும் கண்டறிந்து பிறகு வரலாற்றோடு பொருத்தி அவற்றை விளக்க வேண்டியிருக்கிறது. இம்முறையில் தான் மார்க்சியத்தை க.நா.சு. வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவருக்குள் நாம் காணும் கலாச்சாரப் பதிவிலிருந்து அவரை விளக்க வேண்டியிருக்கிறது. இந்த விளக்கம், க.நா.சு. வை மார்க்சியத்துக்கு எதிரி என்பதை மறுக்கிறது.

அமைப்பியல் அணுகுமுறையோடு நான் தொடர்ந்த விவாதத்தில் இருக்கிறேன். மார்க்சியம், இலக்கிய விமரிசனம் ஆகியவற்றிற்கு அமைப்பியலானது விஞ்ஞான ரீதியாக கறாரான சில வாய்ப்பாடுகளை வகுத்துள்ளது என்பதில் ஐயமில்லை. சமூகத்தில் மேலோங்கிய அதிகாரம் அல்லது ஆதிக்கம் மனிதர்களுக்குள் எவ்வாறு முனைப்புடன் செயல்படுகிறது என்பதை அமைப்பியல் சிறப்பாக விவரிக்கிறது. கறாராக மதிப்பிடவேண்டுமென்று தொடங்கி மனிதன், படைப்பு, ரசனை முதலியவற்றை அமைப்பியல் மறுத்துவிடுகிறது. கறார்த்தன்மையானது இயந்திரவியல் நுட்பமாகிவிடுகிறது. இயக்கத்தை அமைப்பியல் விளக்குவதில்லை. இங்கெல்லாம் மார்க்சியத்தோடு நான் ஒத்துச் செல்கிறேன். என் அணுகல் முறை விமர்சனத்திற்குள்ளாவதை நானும் வரவேற்கிறேன்.

மார்க்சிய நோக்கிலிருந்து கூடியவரை முழுமையாக க.நா.சு. நாவல்களை மதிப்பிடுகிறேன். எந்த ஒரு நாவலும் வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங்களையும் உள்ளடக்குவது சிரமம். உள்ளடங்காத பகுதிகள், உள்ளிருந்து அல்லது வெளியிலிருந்து இந்த இலக்கியத்தைத் தொடர்ந்து விமர்சனத்திற்குட்படுத்தும். இதுவும்கூட அமைப்பியல் முறைதான். மார்க்சியத்திற்குள் இந்த அம்சம் ஏற்கனவே இருக்கிறது. க.நா.சு. வின் அனைத்து நாவல்களையும் ஒருசேர வைத்து ஓரிலக்கியம் என்று பார்ப்பது, சிரமம் தருவதாக இருந்தபோதிலும் பயனுள்ள முயற்சி. இப்படி ஒரு மதிப்பீட்டிற்கு முயற்சி செய்யும்பொழுது அவரது விமர்சன நூல்களும் கவிதைகளும் இதற்குள் அடங்கும். நம் கால தமிழிலக்கியத்தில் க.நா.சு. ஒரு பெரும் சக்தி என்ற உண்மையை நாம் உள்வாங்கிக் கொள்ளும்பொழுது நம் சக்தியும் பெருகும்.

க.நா.சு. இலக்கியத்தடம்
– காவ்யா
தீ.13.

நகுலன் :
நினைவுப்பாதை

1. கண்ணையும் காதையும் திறந்து வைத்துக் கொண்டால் ஒவ்வொரு காட்சியும் பேச்சும் அழகோடும், நயத்தோடும் நம்மை எதிர்கொள்ளும். மனித அனுபவத்தில் இது ஒரு கட்டம், திரும்பத் திரும்ப நேரும் ஒரு கட்டம். கண் காது ஆகிய புலன்களின் வாயிலிலேயே மனம் காத்திருப்பதில்லை. சில புலப்பதிவுகளின் போக்கில் மனம் பின்வாங்கித் தனியாத தியானத்தில் மனம் மூழ்கிவிடும். அந்த அனுபவம் தனக்குள் நிறைவடைந்தபோது, செரிவடைந்தபோது, மனம் மீண்டும் வீட்டு வாசலுக்கு வரும். பின் அறைத் தியானத்தில் நனைவு ஒரு வகை.

மனம் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குச் சம்பந்தமுடையதற்கும், அறவே இல்லாததற்கும் தாவும் இது "நினைவுப் பாதை". இந்தப் பாதையில் செல்பவர்க்கு மட்டுமே, இந்தப் பாதையின் ஆக்கம் – மூலம் புரியும். மற்றவர்க்கு இது யாரோ ஒரு ஒருவன் தன் மன எல்லையில் மனம் போன போக்கில் போட்ட, போட்டவுடனேயே அழிந்து விடும் பாதையாகவே தோன்றும். பாதையின் தன்மையும் இதுதான் இடையில் ஒரு பொதுத்தன்மை இருக்கலாம். இருவரும் – பாதை போட்டவரும், இதில் நடக்க வந்தவரும் சேர்ந்து சிலசமயம் இதில் நடக்கலாம். உடன் வருபவர்க்கு இது உறுதியான பாதை அல்ல. அடிக்கடி இதன் தடம் அழிந்துவிடும்.

2. நகுலனின் நினைவுப் பாதையில் சிற்சில போக்குகள், சில வகையினர் நமக்குப் பழக்கப்படுகின்றனர். இவரது பயணம் சில அம்சங்களில் நமக்குப் புரிகிறது. இந்தப் புரிதலில் தான் நகுலனை நாம் ஒரு ஆளுமையாகப் பார்க்கிறோம். இவர் நண்பர்கள், படைப்புகள் பற்றிய பேச்சுகள், கருத்துக்கள், சுசீலா முதலிய சில பெயர்கள், சில குறியிடங்கள், இந்த இடங்களில் நகுலனை நாம் சந்திக்கமுடியும்.

சிலசமயங்களில் பார்வைகளைவிட, காட்சிகளைவிட நினைவுகள் மிகுந்து விடுகின்றன. நினைவுகள், தொல்லைகள். அவற்றை நிதானமாக மடியில் வைத்துத் தாலாட்ட வேண்டும். அப்போது தான் அவை தூங்கும். இடையில் பாட்டோடு – இந்த நினைவலைகளின் தாலாட்டலில் கவிதைகள் தெறிக்கும். கவிதைத் துணுக்குகள் தெறிக்கும். நினைவுகளின் சாயலில் – ஒரு கோலத்தில் கவிதைகள். ஒரு பொருளாக அர்த்தமாதல் உடனே இவை கலைகின்றன.

இந்த மூன்று கட்டங்களில், வகைகளில் தான் – அம்சங்களில்தான் நகுலனை நாம் புரிந்து கொள்ள முடியும். நினைவலைகளின்

மோதலின்போது, இடையில் சப்தங்கள், கோபங்கள், சிதறல்கள், கணங்களில் இந்த நிகழ்வுகள். இந்தக் கணங்களில் எதுவும் சாத்தியம். சிகரத்தில், ஆழத்தில், உன்னதத்தில், அழிவில், ஆபாசத்தில், ஒளியில், இருளில், நாயாக, தேவனாக, ரோகியாக, போகியாக இருப்பதற்கான நேரங்கள் இவை.

கலைப் படைப்பில் இது ஒரு கட்டம், அநேகமாக முதற்கட்டம். இதிலே நிரந்தரத்தைச் சாதிக்க முயல்வது நகுலனின் முறை. இதற்குள் கதை வரலாம். ஆனால் கதைப்படுத்துவது நகுலனின் நோக்கமல்ல. கதைகள் தெறிக்கின்றன. உருவாக்கப்படுவதில்லை. கணத்தில் வாழ்தலின் சாரம் இது. எழுதி எழுதித்தான் தன்னைத் தெரிந்து கொள்ள வேண்டும். எழுத எழுதத்தான் எழுத்தின் நயம் மிகும். இது நாவலா, டயரியா. நாவலில் கதை, பாத்திரம் முக்கியமில்லை. மனத்தில் அழியாமல் நிற்கும், அணுக அணுக அகன்று செல்லும் அனுபவத்தின் அதீத இயல்புகள். அனுபவத்தை அப்பட்டமாகச் சொல்ல முடியும் – அதாவது வாழ்க்கையைப் பற்றி ஒரு பரஸ்பரமான சர்ச்சை. எழுதுபவர்க்கு எழுத்துத்தான் கதி. ஒவ்வொருவருக்கும் ஒரு வழி. என் அனுபவத்தின், அளவுகோலில் பாருங்கள். எனக்குக் கற்பனையில் நம்பிக்கை இல்லை. எனக்கு உத்திகளிலோ, இசங்களிலோ, இயக்கங்களிலோ நம்பிக்கை இல்லை. புதிய உருவங்களைச் செய்பவர்கள் செய்யட்டும். எனக்குத் தெரிந்ததுபோதும், வார்த்தைகள் போதும். பேசுவது மாதிரியே எழுத வேண்டும் என்பது ஆசை. மனத்தின் மீது தரும் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. அவன் சித்தாந்தத்தில் அசட்டு வளர்ச்சி இல்லையா? தன்னைவிடத் தன் படைப்பே முக்கியம் என்கிறான். அடிப்படையை வைத்துக் கொண்டே நான்தான் முக்கியம் என்கிறான். வாழ்க்கையிலிருந்து ஒரு அடி கூட நகரமுடியவில்லை.

எழுத்தாளனும் தனது வெற்றிகரமான சிருஷ்டியைப் பெறுகிறான். முடிச்சுகளை ஏற்கமாட்டான். உனக்கு நீயே ஒரு முடிச்சு. தவிர இதிலிருந்து என்றுதான் விடுபடப் போகிறாய். கவிதை எழுதுவது ஒரு தினசரி நிகழ்ச்சியில் ஐக்கியமாக வேண்டும். வார்த்தையே என்னை எங்கு அழைத்துச் செல்கிறீர். தடம்புரண்டு செல்லும் பிரச்சனை ஓட்டம்.

3. படைப்பு முறை நிச்சயமாக இதை, இந்தக் கட்டத்தைக் கடந்து தான் நடைபெறுகிறது. பொய்கள், கற்பனைகள், சித்தாந்தங்கள், தத்துவங்கள் முதலியவை இங்கு தான் இடம் பெறுகின்றன. ஒன்றைப் பலவாகப் பெருக்குதல், குறைத்தல், அழகுபடுத்தல், ஆற்றல் சேர்த்தல், காரண காரியமாக்குதல், தேர்வு, ஒழுங்குபடுத்தல் முதலியவை இங்குதான் நடைபெறுகின்றன. இதைச் செய்வதில் நகுலனுக்கு நம்பிக்கை இல்லை. அனுபவங்களின் போக்கில், நிகழ்வுகளின் நினைவுகளின் போக்கில் இருப்பதே உண்மை நிலை என்பதே நகுலனின் கருத்தாக இருக்கலாம்.

நினைவுகளைக் கடந்து செல்லும்போதுதான் ஒரு புறத்தில் பொய்யான கதையாக்கம் நிகழ்கிறது. இது கலைக்குச் செய்யும் துரோகம். இதை நா.பா. முதலியவர்கள் நிறையச் செய்திருக்கிறார்கள். கடைசியில் இந்த சாதனைகளில் மிஞ்சுவது சில மனிதர்கள், நிகழ்ச்சிகள், இவர்கள் கட்டி உருவாக்கிய கோபுரங்கள். படித்து முடித்த உடனே நிழற்கோபுரங்களாகி விடுகின்றன. மீண்டும் தரைக்கே உண்மைகளுக்கே வந்து சேர்கிறோம். மரியாதையாக இந்த அனுபவங்களையே படைத்திருக்கலாம். நிச்சயம் இத்தகைய நா.பா. க்களை விட நேர்மையானவர் நகுலன். கலையை அதன் மெய் மனச்சட்டத்தில் வைத்திருப்பவர் நகுலன் என்ற வகையில் சிறந்தவர். ஒரு நல்ல படைப்பு நினைவுகளைக் கடந்து ஒரு புதுப்பிரதேசத்தில் நுழைகிறது. நினைவின் ஆழத்தில் அது புதிய உண்மைகளைத் தொகுக்கிறது. நினைவின் வகைகளைப் பொதுமைப்படுத்துகிறது. அங்கு ஒரு புதிய இரசாயன வேலை நடக்கிறது. மனிதனை ஒரு புதிய தரிசனத்தில் பார்க்கிறோம். புதியது இங்கு படைப்பாகிறது.

நகுலனின் மெய்மை உலகை விட இது சாரமான, உன்னதமான உலகம். வாழ்க்கைக்கான பார்வையை, தரிசனத்தை, கட்டுக்கோப்பை, அர்த்தத்தை இந்த உலகில் காண்கிறோம். மனிதனைப் புதியவன் ஆக்குவது இந்த உலகம். நகுலன் தன் உலகில் சிறுகதைகள் – கவிதைகளையே படைக்க முடியும் – நாவலைப் படைக்க முடியாது நகுலன். நகுலனுடைய நாவல், நாவல் வடிவமே பொய் என்று கருதும் அளவுக்கு இயங்குகிறது.

நினைவுப் பாதையை படிக்கப் படிக்க ஒரு நாவல் என்று எதிர்பார்த்துப் படிக்கிற மனநிலை கழன்று விடுகிறது. கழன்றவுடன் சில மனிதர்கள் அவர்களின் அனுபவங்கள், உரையாடல்கள், இடையிடையில் சில உன்னதமான மனநிலைகள் என்ற முறையில் படிக்க சுவாரஸ்யமாக சுவையாக இருக்கிறது. இடையிடையில் நமக்குத் தெரிந்த எழுத்தாளர்கள் முகங்கள் தட்டுப்படுகின்றன. இவர்களிடம் எரிச்சல் கொள்ளாத முறையில் நகுலன் எழுதியிருக்கிறார். நவீன நகுலனை விமர்சனம் செய்கிறார். சுவை லயம் தவறவில்லை. இடையில் வரும் சச்சிதானந்தம் பிள்ளை உன்னதத்தில் பழகுபவர். தன்னைச் சார்ந்தவர்களை உயர்த்துகிறார். ஒரு தத்துவவாதி நகுலனின் முறையில் குரு. இதில் வரும் எழுத்தாளர்கள் அப்பட்டமாக இதில் தென்படுகிறார்கள். அதனால் அழகாகக் கூட வாழ்க்கை தெரிகிறது. தன்னையே மையமாக்கி எழுதி இப்படிப் பல முறையும் எழுதி, எழுதி வாசகனை இதில் பழக்கி இப்படியும் எழுத்தை எதிர்கொள்ளலாம் என்றாக்கிய நகுலன் பாராட்டுக்குரியவர்தான். எழுத்து பற்றிய இரசனையை அதன் அடிமட்டத்திற்கு (கீழ் மட்டத்திற்கு அல்ல) கொண்டு வந்ததில் இவர் சிறப்புக்குரியவர்.

நகுலன் :
வாக்குமூலம்

நகுலன் தமிழின் மிக வித்தியாசமான எழுத்தாளர். தனிநபர் என்ற முறையில் தன் அனுபவங்களை வைத்தே நாவல் எழுதுகிறவர். இவர் நாவல்களில் கதை அம்சம் குறைவு. நாவல்களில் இடம்பெறும் இவரது சிந்தனைகளின் வழியே தத்துவ வெளிச்சம் அங்கங்கே புலப்படும். சாதாரண வாசகர்கள் இவரது நாவல்களுக்குள் புகுந்து வெளிவருவது கடினம். தன்னைத் தனிவழியில் உருவாக்கிக் கொண்ட ஒரு வாசகர்தான் இவரது நாவல்களை விரும்பிப் படிக்க முடியும். மீண்டும் சொல்லலாம்: நகுலன் தமிழின் மிக வித்தியாசமான எழுத்தாளர்.

நகுலனைப் பற்றி வாசகர்கள் மத்தியில் பொதுவாக நிலவும் கருத்து இதுதான். "வாக்குமூலம்" நாவல், சற்று அதிகமாகவே விரும்பிப் படிக்கப்படுகிறது. தமிழ் வாசகர்கள் நகுலனோடு பழக்கப்பட்டதன் விளைவு இது எனச் சொல்லலாம். நகுலனைப் படித்து உள்வாங்கிக் கொள்வதற்கு இவ்வளவு காலம் தேவைப்பட்டிருக்கிறது என்றும் கருதலாம்.

இந்த நாவலின் தனித்தன்மை பற்றிப் பேசுவதற்கு முன் பெரும்பாலான வாசகர்கள் எதிர்பார்க்கும் கதை அம்சமென இந்த நாவலில் தெரியவருகிற சிலவற்றை முதலில் குறித்துக் கொள்ளலாம்.

இராஜசேகரன் வங்கிப் பணியில் காலம் கழித்தவர். கணக்கில் இவர் வல்லவர் என்று கூறுவதற்கில்லை. எனினும் காலம் தவறாமல் வங்கிக்குச் சென்று வேலைபார்த்து ஓய்வு பெற்றவர். குடும்பம் என எதையும் இவர் சேகரித்துக் கொள்ளவில்லை. இவருக்குச் சமைத்துப்போட, வீட்டில் சில பொறுப்புகளைக் கவனித்துக் கொள்ள ஒரு அம்மா இருக்கிறார். கிராமத்திலிருந்து வந்து இவரைக் கவனித்துக் கொள்கிறவர் பொறுப்பானவர். இராஜசேகரன் ஒரு எழுத்தாளர். தொடர்ந்து விடாப்பிடியாகப் படிப்பவர். சிந்தித்தும் எழுதியும் தன மூளையைக் காலி செய்து கொண்டிருப்பவர். தன் மூளையைக் காலி செய்ய பிராந்தி அருந்துகிறார். எனினும் மூளைச் சிறையிலிருந்து இவருக்கு விடுதலை இல்லை. 65 வயதுக்குப் பிறகு வாழ்க்கையில் பிடித்தம் இல்லாமல் போய்விட்ட நிலையில் மனிதர் தற்கொலை செய்து கொள்வதற்கு அரசு அனுமதிக்க வேண்டும். அரசு இதற்கு சட்டம் செய்ய வேண்டும். இப்படி எதிர்பார்த்திருக்கிறவர்க்கு ஒரு வியப்பு. இப்படி ஒரு அரசு. சட்டம் அரசு கெஜட்டில் வெளியாகியிருக்கிறது. நாவல் இந்த இடத்தில் தொடங்குகிறது. பொது நூலகத்திற்குச் சென்று சட்ட நகலைப் பார்வையிடுகிறார். அரசு

செயலகத்தில் சட்டம் பற்றி மேலும் தெரிந்து கொள்ள நண்பர் அங்கமுத்துவை அழைத்துக் கொண்டு செல்கிறார். இராஜசேகரனுக்குப் பேச்சுத்திறன் குறைவு. அங்கமுத்துவின் உதவி இவர்க்குத் தேவை. சட்டத்தைத் தயாரிப்பதில் முன் நின்றவரும், தற்கொலைக்கு முயற்சி செய்து கொள்பவர்களின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் குழுவின் தலைவராகவும் இருக்கிற ஏபிள் தாம்சனைச் சந்திக்கிறார். விரிவான வினாப் பட்டியல், எழுதித் தர வேண்டிய சுய சரிதை என்ற வாக்குமூலம்; இராஜசேகரன் வாக்குமூலம் எழுதித் தருகிறார். இவரோடு இன்னும் ஒன்பது பேர் எழுதித்தந்த வாக்குமூலம் குழுவால் பரிசீலிக்கப்படுகிறது. குழு ஒரு முடிவுக்கு வருகிறது. இந்தச் சட்டம் தேவையில்லை. இராஜசேகரனும் முடிவு செய்து கொள்கிறார் : இயல்பாக இருக்க வேண்டும். இப்படி நாவல் முடிவடைகிறது.

அங்கமுத்துவும் ஓய்வு பெற்றவர். தற்கொலையை ஏற்றுக் கொள்ளாதவர். அடிக்கடி பீடி குடிக்கிறார். இராஜசேகரனுக்கு இவர் பேச்சுத் துணை. நாவலில் இவருக்குத் தனிபங்கில்லை. இராஜசேகரன் வீட்டில் உதவிக்கு இருக்கிற அம்மா தனி ஆளுமை உடையவராகத் தெரிகிறார். இராஜசேகரன் தான் மாட்டிக் கொண்ட சிக்கலிலிருந்து விடுதலை பெறுவதற்கு இவர்தான் உதவியாக இருக்கிறார். நாவலில் இந்த அம்சம் வியப்புக்குரிய ஒன்று.

நாவலில் இடம்பெறும் சாமிராவ் சாமி – ராஜசேகரனைவிட நம்மை அதிகம் கவர்கிறவர். ஒரு நாவலில் இப்படி இருக்கக் கூடும். இருக்கத்தான் செய்கிறது. பெரிய குடும்பத்தில் 11 பிள்ளைகள். இறுதியாகப் பிறந்தவர் இவர். மற்றவர்கள் பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். இவர் படித்தது தத்துவம் பி.ஏ., கல்லூரியில் தத்துவ ஆசிரியர். அம்மா இறக்கும்போது உடன் இருந்து பணிவிடை செய்தவர். இரண்டாவது அண்ணன், அம்மாவின் பிணத்தைப் பார்ப்பதற்கு அஞ்சி, சாமியைக் கவனிக்க சொல்லிப் போய்விட்டான். குழந்தைக்குக் கேக் வாங்கிக் கொண்டு அவர் வீட்டுக்குப் போகிறான். பிறகு அவனே கூறுகிறபடி சாவு என்ற அச்சத்திலிருந்து இவன் தப்பித்துக் கொள்ளும் முயற்சி இது. நாவலில் இன்னொருவர் ஜியார்ஜ். அலுவலகத்தில் வேலை. தொழிற்சங்கத்தில் சேராததால் இவர்க்குப் பதவி உயர்வு இல்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாது தன் மனைவியோடு சர்ச்சுக்குச் செல்கிறவர். வாழ்க்கையில் இவர்க்கு ஏமாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. நாவலில் மிக முக்கியமான மனிதர் ஏபிள் தாம்சன். மத்திய அரசில் பெரிய பதவி. சட்டம் தயாரிக்கிறவர். அதைப்பற்றி விளக்கம் சொல்கிறவர். நல்ல படிப்பாளி. இவருக்குப் பதவி ஒரு பொருட்டல்ல. விரும்புகிறபோது இவர் பதவியிலிருந்து விலகிக் கொள்வார். தற்கொலை

என்று சிந்திப்பதை அதிர்ச்சியோடு பார்க்கிறவர். தேசத்தின் பெருமை பற்றி தான் சிந்திப்பதாக நினைக்கிறார்.

நாவலில் இப்படி சில மனிதர்கள். இவர்களின் வாழ்க்கைபற்றி சுருக்கமான கதைகள். இவர்களின் வாழ்க்கையில் இரண்டொரு அம்சங்கள் மட்டுமே சொல்லப்பட்டாலும் இந்தக் குறிப்புக்கள் மூலம் இவர்கள் குணங்கள் தெரிகின்றன. நிகழ்ச்சிகள் முக்கியம்தான் எனினும், நிகழ்ச்சிகள் வழியே இயங்குகிற மனிதர்கள், நிகழ்ச்சிகளைக் காட்டிலும் முக்கியமானவர்கள். மனிதர்கள் என்பவர்களை அவர்களின் குண வேறுபாடுகளை வைத்துப் பார்த்து ரசிக்கிறோம். இந்த ரசனை நமக்குத் தேவை. நாவலில் இந்த மனிதர்களை நிதானமாக நிறுத்திப் பார்த்துப் படிக்கிறோம். நாவல் படிப்பு இதற்கான நிதானத்தை நமக்குத் தருகிறது. இராஜசேகரனும் சாமிராவ் சாமியும் வாழ்க்கையைப் பற்றிப் படிக்கிறவர்கள் – சிந்திக்கிறவர்கள். சிந்தனைகள் மூலம் சிரமப்படுகிறவர்கள். இராஜசேகரன் அதிக சிரமப்படுகிறார். சாமி கூடியவரை இயல்பாக இருக்கிறார். இவர்களோடு ஒப்பிடும்போது இராஜசேகரன் வீட்டைக் கவனிக்கும் அம்மாவின் ஆளுமை மிகத் துல்லியமாக வேறுபட்டிருப்பது தெரிகிறது. இவர் மிக இயல்பானவர். ஆண் அதிகாரம் செய்கிறவன். எந்த நிலையிலும் ஏதாவது ஒரு அதிகாரத்தைத் தனக்குள் மிச்சம் வைத்திருப்பவன். இராஜசேகரனுக்குள்ளும் இந்த அதிகாரத்தின் மிச்சம் இருக்கிறது. அந்த அம்மா வயதானவர். இராஜசேகரனைப் பொறுப்போடு கவனித்துக் கொள்கிறவர். இப்படி கவனித்துக் கொள்வதாகக் காட்டிக் கொள்ளாமல் இருக்கிறார். கவனிப்பது இவர்க்கு இயல்பாக இருக்கிறது. பூனையைப் பற்றி இராஜசேகருக்கு இவர்தான் சொல்லிக் கொடுக்கிறார். ஏபிள் தாம்சன் அறிவாளி. அதேசமயம் அதிகாரி. தற்கொலை என்ற செய்தி இவர்க்கு அதிர்ச்சி தந்தாலும் அதைப் பற்றிய சட்டம் இயற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த முரணை அவர் இறுதிவரை புரிந்து கொள்ளவில்லை. இந்த சட்டம் வேண்டாம் என்று அவர் முடிவு செய்கிறபோது அவர்க்கு நிம்மதி ஏற்பட்டிருக்கலாம். இனி வேறு துறையில், தன் அறிவு என்ற பிரகாசத்தை அவர் வீசிக் கொண்டிருக்கலாம்.

இனி இந்த நாவலின் தனித்தன்மை பற்றிப் பார்க்கலாம். தற்கொலை செய்து கொள்வதற்கு மனிதனுக்கு உரிமை வேண்டும். அரசு குறுக்கே வரக்கூடாது. இளையவர்களுக்கு இந்த உரிமை தேவையில்லை. பெண்களுக்கு இந்த உரிமை பற்றிப் பேச்சில்லை. குற்றவாளிகள், அரசுப் பதவியில் உள்ளவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் உரிமை அற்றவர்கள். இப்படித்தான் தேச முன்னேற்றச் சட்டம் சொல்லுகிறது. 2084–ல் இப்படிச் சட்டம் வருவதாக நாவலில் ஒரு கற்பனை. இந்தச் சட்டம் தேச முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்றும் இந்தச் சட்டம் தன்னைப்பற்றிச்

சொல்கிறது. சட்டத்தின் விதிகளில் ஒரு கோளாறு. தற்கொலைக்கு விண்ணப்பிக்கிறவர் 5000 ரூபாய் கட்டவேண்டும். தற்கொலை மறுக்கப்பட்டாலும் இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது. தற்கொலைக்கு விண்ணப்பித்தவரின் உறவினர், இவரது தற்கொலைக்கு எதிராக நீதிமன்றத்திற்குச் செல்லலாம். (இப்படி நீதிமன்றத்திற்கு செல்வதாக நாவலை நகர்த்தியிருந்தால் நாவலின் ரசனை அம்சம் மிகுந்திருக்கும்). தற்கொலை என்பதைச் செய்துகொள்ள அரசு உதவி செய்யும். ஊசி மூலம் இவரது போதம் இழந்த நிலையில் பிரக்ஞை வருவதற்குமுன் இவர் இறந்து விடலாம். ஊசி செலுத்தியவுடன் தொடர்ந்து சில கணங்கள் இவர் மகிழ்வு உணர்வை அனுபவிக்கலாம். இப்படி இவர் மகிழ்ச்சியோடு செத்துப் போகலாம். தற்கொலைக்கு விண்ணப்பிக்கிறவர் 110 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். 4-ஆவது இயலில் கொடுக்கப்பட்டிருக்கிற கேள்விகளைப் படிக்கிறபோது நகுலனின் பரிமாணங்கள் தெரிகின்றன. குடியில் பழகியவர். நோய்நொடிகளால் துன்புற்றவர். குடும்பத்தில் மனைவி மக்களால் பாதிப்புக்குள்ளாகியவர். வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்தவர். கசப்பான அனுபவங்கள் பெற்றவர். அநேகமாக இப்படிப்பட்டவர்களுக்கு தற்கொலைச் சிந்தனை வரத்தான் செய்யும். இவர்கள் செய்து கொள்ள விரும்பும் தற்கொலையை அரசு அனுமதிக்கும் என்று தோன்றவில்லை. கேள்விகள் விரிவானவை. தற்கொலைக்கு விண்ணப்பிக்கிறவர்களின் இலக்கியப் பார்வை, நவீன ஓவியம் பற்றிய பார்வை, அபத்த நாடகங்கள் பற்றிய கருத்து, மெய்யியல் பார்வை, சங்கரர், தாயுமானவர் பற்றிய கருத்து – இப்படியெல்லாம் அவர்கள் பதில் எழுத வேண்டும். இக்கேள்விகள் மூலம், அவர் சிந்திக்க வேண்டும் அல்லது அவர் தன் சிந்தனையைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பிறரை அல்லது தன்னைத் தண்டிப்பதற்காகத் தற்கொலை கூடாது. உயரிய நோக்கமென ஏதாவது ஒன்றுக்காக தற்கொலை செய்துகொள்ளலாமா? கூடாது. பின் எதற்காகத் தற்கொலை? ஏபிள் தாம்சன் தந்த இந்த கேள்வித் தொகுப்பு வழியே, வாசகர்களின் சிந்தனைகள் நுட்பமாகத் தூண்டப்படுகின்றன. நாவலின் சிறப்பான அம்சம் இது என்று சொல்லலாம். நாவலின் இறுதிப் பகுதியில் தற்கொலைக்காக விண்ணப்பம் செய்த 10 பேர்களின் வாக்குமூலங்கள் ஆராயப்படுகின்றன. நாவலில் இந்தப் பகுதியும் சிறப்பான பகுதி. இதைத் திரும்பவும் படிக்க வேண்டும். 10 பேர்களில் இருவர், அனுமதி கிடைக்கும் முன்பே தற்கொலை செய்துகொள்கின்றனர். இதற்கு அர்த்தமென்ன? (நகுலன் சொல்லவில்லை). இவர்களுக்குத் தான் தற்கொலை தேவை. விண்ணப்பிக்கிற மற்றவர்களுக்கு தற்கொலை தேவையில்லை. அவர்கள் வாழ்ந்து கொண்டே துன்புறலாம் அல்லது தம் செயலுக்கான தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். தற்கொலைக்கு விண்ணப்பிப்பதன் மூலம்கூட இவர்கள் தம்மை ஏதாவது ஒரு முறையில் முன்னிலைப்படுத்திக்

கொள்கிறார்கள். இவர்களுக்குள் இன்னும் அகங்காரம் (நான்) செயல்படுகிறது. இந்நிலையில் இவர்கள் தற்கொலையை மனமார ஏற்பவர்கள் இல்லை. ஆகவே இவர்கள் தொடர்ந்து உயிர் வாழத்தான் விரும்புகிறார்கள். தாமே துன்புற்றும் பிறரைத் துன்புறுத்தியும் உயிர் வாழத்தான் விரும்புகிறார்கள். பரிசீலனை செய்யும் குழு இவர்களின் விண்ணப்பங்களை ஏற்கவில்லை. ஏற்காதது (நகுலன் பார்வையில்) சரி என்றே தோன்றுகிறது. ராஜசேகரின் வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு (அதற்கு முன் இந்தச் சட்டத்தை ரத்துசெய்துவிட்டு) அதை அரசே வெளியிடுவதென முடிவு செய்கிறார்கள். இதற்குள் ராஜசேகரன் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். என்ன அந்த முடிவு?

வீட்டிற்குள் மஞ்சளும் வெள்ளையும் கலந்த பூனை வருகிறது. அதை நோக்கி இராஜசேகரன் சென்றால், பூனைக்கு ஏதாவது உண்ணக் கொடுத்துவிட்டு, அதன் இருப்பிடத்திலிருந்து ராஜசேகரன் விலகிச் சென்றுவிட வேண்டும். அப்பொழுதுதான் பூனைக்கு நம்பிக்கை பிறக்கும். இப்படி அந்த அம்மாள் சொல்கிறார். சமையலறையிலிருந்து சுட்ட அப்பளத்தை எடுத்து வந்து பூனைக்கு முன் வைத்துவிட்டு ராஜசேகரன் அடுத்த அறைக்குப் போய் விடுகிறார். நாளடைவில் பூனை அவரிடம் பழகிவிடுகிறது. தொடர்பின்மை மூலம்தான் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். சிலைக்கு முன்பு சிலையாகிவிட வேண்டும். இப்படி ராஜசேகரன் உண்மை தெரிந்து கொள்கிறார். பூனையிடமிருந்து எதையாவது நாம் எதிர்பார்க்கலாமா? கூடாது. எதிர்பார்த்தால் இடையில் உணர்வுகள் முறுக்கேறும். இங்கு உறவு விரிவடையாது. பூனையை முன்வைத்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அழகை, அதிகாரத்தை ஏதாவது ஒரு வகையில் பற்றிக் கொள்ள விரும்புபவர், உறவில் விரிவடைய முடியாது. இந்தக் குணங்களை இழந்து இயல்பாக இருக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். தற்கொலை தேவையென்று சிந்திக்கிறவர்கள் ஏதாவது ஒன்றிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள விரும்புகிறவர். இந்த விடுவித்துக் கொள்ளல் இயல்பாக நிகழ வேண்டும். மாட்டிக் கொண்டவர்தான் விடுதலையை விரும்புகிறார். தன்னை விடுவித்துக் கொள்ள இன்னொருவர் (அரசின்) உதவியை நாடுகிறார். அரசு இதைச் செய்யலாமா? கூடாது. இறுதியாக ராஜசேகரன் தற்கொலை எண்ணத்தைவிட்டு, இயல்பாக இருக்க வேண்டும் என்று உணர்ந்து கொள்கிறார். நாவல் இத்துடன் சரியான இடத்தில் முடிவடைகிறது.

நாவலின் கட்டமைப்பில் புதிய அம்சங்கள் இணைந்திருக்கின்றன. தற்கொலை / மரணம் என்ற பிரச்சனையை ஆராய்கிறது இந்த நாவல். சம்பத்தின் "இடைவெளி" நாவல் எடுக்கிற கோணம் வேறு; இந்த நாவலில் ஆசிரியர் எடுத்துக் கொள்ளும் கோணம் வேறு. நாவலின் இடையில்

குறிப்பிட்ட சட்டத்தின் விதிமுறைகள்; தற்கொலையை விரும்புகிறவர் பதில் தர வேண்டிய வினாத்தொகுப்பு – வேறு எந்த நாவலிலும் இத்தகைய அம்சங்கள் நாவலின் கூறுகளானதில்லை. நாவலில் தரப்பட்டிருக்கும் வினாத் தொகுப்பிற்கு வாசகர் ஒவ்வொருவரும் தனக்கான விடைகளை எழுதிக் கொள்வதன்மூலம் மரணம் பற்றி தங்கள் பார்வை என்ன? என்பதைப் புரிந்து கொள்ளக் கூடும். இந்த நாவல் வாசிப்பு இத்தகைய முயற்சியையும் மரணம் பற்றிய வாசகர்க்கான புரிதலையும் ஏற்படுத்தக்கூடிய முறையில் வாசகனைத் தனக்குள் உள்வாங்கிக் கொள்கிறது. மிகப்பெரிய சிக்கல்; ஆனால் இதை அணுகுவதற்கான நெறி, இயல்பான மனநிலை.

இந்த இயல்பான மனநிலையில் தான் இந்தப் பெரிய சிக்கல் தீர்கிறது. நகுலனின் கோணம் அருமையானது என்பதில் ஐயமில்லை. நாவலில் இடம்பெறும் அந்த அம்மாவிற்கு அமைந்திருக்கும் இயல்பான கோணம், சிக்கல்களை தன் மூளைக்குள் உற்பத்தி செய்கிற அறிவாளிக்கு வாய்க்காத கோணம். மனத்தை வெளியில் வைத்துப் பார்க்கிற முயற்சி தேவைதான் என்பதில் ஐயமில்லை. மனத்தை அதன் போக்கில் இயல்பாக விடவேண்டும் என்பதும் உண்மைதான். மனத்தின் லகானை எப்பொழுதும் தன் கையில் வைத்திருக்கிறவன் பிரச்சனைகளோடு வாழ்பவன். மனத்தை தன்போக்கில் தானே விட்டால் தன்னை அது நெகிழ்த்திக் கொண்டு இயல்பாகி அப்புறம் தன்னை இழந்துவிடும். இந்நிலையில் பிரச்சனை இல்லை. இதுதான் பிரச்சனைக்கும் தீர்வு. ஜே.கே., ஜென், தாவோ என்று ஏதாவது ஒன்றை இங்கு சொல்லலாம். சித்தர் நெறிக்கு இது இயல்பானதுதான். தமிழ் நாவலில் இந்த வகையில் தத்துவ தளத்தில் இந்த நாவல் இயங்குகிறது. இது இந்த நாவலின் குறிப்பிடத்தக்க தன்மை. பயமில்லாமல் மரணத்தை எதிர்கொள்வது எப்படி? என்பது, பயமில்லாமல் வாழ்க்கையை எதிர்கொள்வது எப்படி என்பதன் ஒரு பகுதி. நாவல் இந்த தளத்தில் விரிவு பெறவில்லை. ஏபிள் தாம்சன் அறிவாளி அவனுக்குள் இந்தத் தத்துவ விரிவு இல்லை. அங்கமுத்துவுக்கு இது தேவையில்லை. ஏன்? இப்படியெல்லாம் கேள்விகளோடு இந்த நாவலை நமக்குள் இன்னும் தொடரலாம். தமிழ்வாசகர்களை இப்படி மெய்யியலுக்குள் தள்ளுபவராக நகுலன் ஒருவர்தான் இருக்கிறார். பொருள், அதிகாரம் ஆகியவற்றில் தன்னை மாட்டிக் கொள்ளாத ஒருவர்தான் மெய்யியல் பார்வையை முன்னெடுத்துச் செல்ல முடியும். வாழ்வின் அர்த்தங்கள் தேடுதலாக நகுலனின் மெய்யியல் இல்லை. அவரவர்க்கான இயல்பு என்பதன்மூலம், வாழ்க்கை பார்க்கப்படுகிறது. தன்னைக் கடந்து செல்வது பற்றி நாவல் பேசுகிறது. தன்னைக் கடந்து தான் அற்றுப் போய்விட வேண்டும். அச்சம் மற்றும் இயல்பாக இருக்க வேண்டும். உறவுகள் ஊறும் இடம் இது. இப்படியெல்லாம் சிந்திக்க இந்த நாவல் இடம் தருகிறது. இந்த நாவலைப் படிப்பதற்கான அவசியம் இதுதான்.

சி.சு. செல்லப்பா :
ஜீவனாம்சம்

1. சாவித்திரி தனது ஆளுமையைக் கண்டறிதல் - வளர்த்துக் கொள்ளல்தான் நாவலின் மையம்.

மனித உறவில்தான் தன்னை அவள் காண்கிறாள். பணத்தில் - சடங்குகளில் - அடிமைத்தனத்தில் அவள் தன்னைக் காணவில்லை. வழக்காடுவதில் - வம்புகளில் அவள் தன்னைக் காணவில்லை. அன்பில்தான் தன்னைக் காண்கிறாள். மரபின் சடங்குத்தனமான இறுகிய பிடியில் தன்னைக் காணவில்லை. மரபின் உன்னதமான நெகிழ்வில் தன்னைக் காண்கிறாள்.

2. கூடப் பிறந்ததனால் ஒருவன் தனக்கு அண்ணனாகி விடமாட்டான் என்பதை சாவித்திரி புரிந்து கொள்கிறாள்.

கணவனுடைய அப்பா, அம்மா, கொழுந்தன் ஆகியவர்களை அறிந்து கொள்கிறாள். அவர்கள் தன்னிடமும், தான் அவர்களிடமும் கொண்ட அன்பின் ஆழ்ந்த தன்மையை அவள் அறிகிறாள். அண்ணனும், அண்ணியும் தன்னிடம் கொண்ட அன்பிற்கடியில் பணத்தாசை இருப்பதாக அறிகிறாள்.

இத்தகைய அறிதல்கள் மூலம் தன் பார்வையை பெறுகிறாள்; ஆளுமை பெறுகிறாள்.

3. ஓர் இந்தியப் பெண்ணின் மரபுவழியான உயர்குணங்கள் சாவித்திரியினுடையவை.

அண்ணன் தனக்கு நல்லதே செய்வான் என்ற நம்பிக்கை. அவனைச் சந்தேறேனும் ஐயுறாத பண்பு. அவன் எதிர் நின்றேகூடப் பேசாத அடக்கம் - இது ஒரு பக்கம்.

செல்லப்பா கூறும் காலத்தைய நிலைமையில், ஒரு பெண் கணவன் இறந்தபின் தன் வாழ்க்கை தன்னைச் சார்ந்தவர்களால் தீர்மானிக்கப்பட்டு, தான் அதன் முடிவோடு ஒத்துப்போகும் நிலைமை. அவர் காலத்து நிலைமைகளில் வேறு முடிவுக்கு வழியில்லை. தனது இடத்தை - தானாக உரிமையாகப் பெற்று அதில் நிறைவடையும் மனநிலை.

4. நாவல் முழுவதும் சாவித்திரியின் மனக்குரலாக – மன ஓட்டமாகவே செல்கிறது. விதவையாகிவிட்டவளுக்கு இக்குரல் தகும்; மிகவும் தகும். இந்தியக் குடும்பத்தின் மரபுமுறையிலான விதவைப் பெண்ணுக்கு -- தனக்கான மனக்குரல் இருக்கக்கூடாது – இங்குச் செல்லப்பாவின் மூலம் மனக்குரல் வெளிப்படுகிறது.

தனது சூழலே புரியாத பெண் – நாளடைவில் புரிந்து கொள்கிறாள். 12 வயதில் திருமணம். 5 ஆண்டு கழித்துப் புக்ககம் செல்லுகிறாள். ஒரு ஆறு மாதம் கணவனோடு வாழ்க்கை. அப்புறம் அண்ணன் வீடு திரும்ப நேர்கிறது. 2 ½ ஆண்டுகளுக்கு மேலாகக் கோர்ட்டில் வழக்கு. ஜீவனாம்சம் கோரி வழக்குத் தீர்வதற்குள் மாமனார் இறக்கிறார் மாமியாருக்கு கண் தெரியாத நிலைமை. கொழுந்தன் கணபதியின் தனியான நிலைமை. அந்தக் குடும்பம் தனக்கான இடம் என்பதைக் கண்டு கொள்கிறாள். பணம் கிடைத்தாலும், தனது தாய்வீடு தன் வீடு அல்ல என்று அறிகிறாள். தனது தாய் தந்தையரும் இறந்த நிலையில் – மன்னியின் ஆத்திரப்படும் நிலையில் – மன்னியும் அண்ணனும் பணமே குறியாக இருப்பதாகத் தான் கருதும் நிலையில் – தனது புக்ககத்து மனிதர்களின் மேன்மையான குணங்களுடன் இருக்கும்போது சிறுவனிடம் தான் பணம் கோரக்கூடாது என்ற நிலையில் – இத்தகைய பல நிலைகளின் – சூழலின் சேர்க்கையில் – சாவித்திரி முடிவெடுக்கிறாள்: அன்புதான் முக்கியம். புக்ககம்தான் தனக்கான இடம்.

5. நாவலில் நடைபெறும் இன்னொரு பரிமாணம் கவர்ச்சியானது. தனது தந்தையார் தாசில்தார். தங்கள் ஊர் நகரம். தான் படித்தது கொஞ்சம் ஆங்கிலம்.

மாமனார் வீடு கிராமம் – தொழில் விவசாயம் – பண்ணையார்.

இந்தச் சூழலில் ஒரு முரண்பாடு : சாவித்திரியின் அண்ணன் புதிய காலத்தவன். பணம் கேட்கிறான்; கோர்ட்டுக்குப் போகிறான். ஆத்திரப்படுகிறான். மனைவியின் சார்பில் – மனைவி தரும் வேகத்தில் இயங்குகிறான்.

சாவித்திரியின் மனப்போராட்டம் உடலாசைக்கு – காமத்திற்கு இடம் இல்லை.

இந்தச் சூழலில்தான் சாவித்திரி தனக்கான முடிவைப் பல வருடங்கள் எண்ணி எண்ணிச் எடுக்கிறாள்.

ஒரு நாவல் நிச்சயம் ஒரு வரலாற்றுச் சூழலில் நடைபெறவேண்டும். பழமை, புதுமைக்கான போராட்டச் சூழலில் நடைபெற வேண்டும்.

இதில் சாவித்திரி காப்பது, மாறிய நிலைமைகளிலும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல குணங்களை – என்ற நிலைமை.

6. மனக்குரல் பிசிறு தட்டாமல் இறுதிவரை அடக்கமாகவே ஒலிக்கிறது. உணர்ச்சிக் கொந்தளிப்பாக இது ஆரவாரம் செய்யவே இல்லை.

சாவித்திரி தனக்கான சூழலில் இந்த முடிவைத்தான் எடுக்கவேண்டும் – எடுக்க முடியும். இந்தச் சூழலில் எந்த அம்சம் வேறுபட்டிருந்தாலும் வேறு வகையான முடிவுக்கு இடம் உண்டு என்பது போல. இம்முயற்சியில் ஆசிரியர் பழமைக்கு வக்காலத்து வாங்கும் முறையில் கதையை நடத்தவே இல்லை. கதை ஓட்டத்தில் ஆசிரியரின் தலையீடு இல்லை. ஒரு நாவலின் உள்ளார்ந்த மேன்மைக்கு இது இலக்கணம்.

செல்லப்பா காத்திருந்தது இந்த மேன்மைக்காகவும்தான். இதற்காகக் காத்திருக்கலாம்.

7. சில விவரங்கள் :–

அண்ணன்	–	வெங்கடேஸ்வரன்
மாமனார் ஊர்	–	சிறுகுளம்
இடையில் வந்தவர்	–	சுந்தரம் மாமா
வெங்கடேசன் தந்தை	–	விஸ்வநாதன்
மாமனார்	–	மிராசுதாரர் ராமசாமி அய்யர்
கணவன்	–	கிருஷ்ணமூர்த்தி
கொழுந்தன்	–	கணபதி
மன்னி	–	அலமேலு
காமாட்சி சித்தி	–	குப்புசாமி மாமா

8. மனித உறவுச் சிக்கலிலிருந்து தான் சிறந்த இலக்கியம் – குறிப்பாக நாவல் – உருவாகிறது.

மனித உறவுச் சிக்கல்களைத்தான் – கூடியவரை சரியான பார்வையில் இன்று பார்க்க முடிகிறது.

முன் எப்போதையும்விட இப்போது இது கடுமையான பிரச்சனை. மனித உறவுகளை – மனிதன் தன் ஆக்கத்திற்கேற்றவாறு மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கான நிலைமைகள் இந்த 20–ல் அதிகம்.

நாவலின் பாரிய பரிமாணம் இதில்தான் இருக்கிறது. இந்த அம்சத்தை இந்த நாவலில் பார்ப்பதை விட்டு, செல்லப்பா நிலவுடைமையைச் சித்திரிக்கவில்லையே, புதிய காலத்தை எதிர் நிலையில் பார்க்கிறாரே, விதவைக்கு மறுமணம் பற்றிப் பேசவில்லையே, அவளது காமம் பற்றிச் சொல்லவில்லையே என்பது திருமண வீட்டில் ஒப்பாரி வைப்பதாகவே இருக்கும்.

ஒருசமயம் செல்லப்பா பழம்பண்பாட்டுக் காப்புக்காக தனக்கேற்ப ஒரு கதையைப் படைத்தார் என்பதில் ஒரு நியாயம் – கட்டுக் கோப்பானக் கதை அமைப்பிலிருந்து கூறலாம்.

9. செல்லப்பாவின் முன்னுரை, படைப்பியலுக்கு ஒரு சாசனம் – உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை.

எம்.வி. வெங்கட்ராம் நாவல்கள்

1930 முதல் எழுதி வரும் திரு. எம்.வி. வெங்கட்ராம் அவர்களின் ஏழு நாவல்களில் 5 நாவல்கள் பற்றியது இந்தக் கட்டுரை. அவர் தன் எந்தப் படைப்பையும் இன்னொரு படைப்பின் பிரதி என்று சொல்ல இயலாத அளவுக்கு ஒவ்வொன்றையும் தனித்தன்மையோடு எழுதியிருக்கிறார் என்ற உண்மை இன்று பலருக்கும் தெரியும். புதுமைப்பித்தன் அளவுக்கு வாழ்வின் பல களங்கள் பற்றியும் அவர் விரிவான பார்வை உடையவர். கலைத்துவ தேர்ச்சியில் அவரது தனித்தன்மை வியக்கத்தக்கது. தன் கால சமூகவாழ்வின் பலவகை பாதிப்புகளுக்கும் தன் படைப்புகளில் தன் எதிர்வினையை அவர் தந்துள்ளார். தன் காலத்தில் பெருகிவந்த பகுத்தறிவுவாதத்தை இவரும் ஏற்றிருக்கிறார். புராண இதிகாசங்கள் பற்றி இவரது ஆழ்ந்த படிப்பும் தன் கால நோக்கிலிருந்து இவற்றைத் தனக்குள் செரித்துக் கொண்ட திறமும் இவரை ஒரு தீவிர விமரிசகராக நமக்குத் தெரிவிக்கிறது. இவரது இலக்கியப் படைப்பு இதனால் வளம் பெற்றிருக்கிறது. தன் காலத்துப் பொருளாதாரம், வணிகம், தொழிற்சங்கம் பற்றியும் இவர் ஆழ்ந்த விமரிசனங்கள் கொண்டிருந்தார். பலமுனைகளையும் இழுத்துக் கட்டுவதென்ற முறையில் கூடியவரை திரட்சியான கதையை தன் நாவல்களில் உருவாக்கினார். தமிழ் நாவல் களத்தில் இவரும் ஒரு சாதனையாளர். ஒவ்வொரு நாவலும் வெவ்வேறு சமூகப் பிரச்னைகளைக் கருவாகக் கொண்டுள்ளது. எதார்த்தம் சொல்லும் நாவல்களுக்கிடையில் தன் ஆன்மீக அனுபவத்தை அடிப்படையாக வைத்து நாவல் எழுதிய வகையில் பிறரிடமிருந்து பெரிதும் வேறுபடுகிறார்.

"வேள்வித்தீ" நாவலை ஒரு சமூக நாவல் என்று சொல்வதற்கான சில குணங்கள் உள்ளன. கும்பகோணத்தில் பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள சௌராஷ்டிர பிராம்மணர்களின் வாழ்க்கையை கண்ணன் என்ற ஒப்பந்தக் கூலி மூலம் "வேள்வித்தீ" சித்திரிக்கிறது. பட்டு நெசவுத் தொழிலை ஏகபோகங்கள் எதுவும் கையிலெடுத்துக் கொண்டு நடத்தவில்லை. பல சிறிய முதலாளிகள். அப்புறம் அவர்களை விட கொஞ்சம் பெரிய முதலாளிகள். இவர்கள் கூலிகளையும் ஒப்பந்தக் கூலிகளையும் வைத்துக் கொண்டு தொழில் செய்கிறார்கள். இவர்களுக்கிடையில் இடைவிடாத போராட்டங்கள் நடக்கத்தான் செய்கின்றன. போராட்டம், ஊர்வலம், வேலைநிறுத்தம், இறுதியாக ஒப்பந்தம் என்ற வடிவில்தான் தொடர்ந்து நடைபெறும். வெற்றி தோல்விகள் மாறி மாறி வரும். இந்தச் சூழலிலிருந்து விடுபட வழியில்லை. இடையில்

தீவிரவாதம் மிதவாதம் என்ற போக்குகள். இந்த அம்சம் நாவலில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தீவிரவாதத்தின் பக்கம் சாயாமல் நடுநிலைப் போக்குக்கு வெங்கட்ராம் இடம் கொடுத்திருக்கிறார் என்று விமர்சனம் செய்து பலனில்லை.

இந்த நாவலை சமூக நாவல் என்று பெயர் சொல்வதற்கான அம்சங்கள் பல இதில் இருந்தாலும், வேறுசில அம்சங்கள்தான் இதனை ஒரு நாவல் என நமக்குச் சொல்கின்றன. நாவலில் கதைத் தலைவன் கண்ணன் அழகன்; தற்பெருமைக்காரன். சுயமோகம் கொள்பவன். இவன் எவ்வளவுதான் முயன்றாலும், இவன் சமூகத்தில் தன் அதிகாரத்தை ஏற்படுத்த முடிவதில்லை. காரணம் இவன் பிறர் உதவிபெற்றுத்தான் தொழில் செய்ய முடியும். திருமணம் செய்து கொள்ள முடியும். அப்புறம் பிறர் ஆக்கிரமிப்பிற்கு உட்படாமல் இவன் தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. அதாவது நம் காலத்தில் கதாநாயகர் இறந்து விட்டனர் என ரால்ஃப் ஃபாக்ஸ் கூறியதன் உண்மை இங்கு தெளிவாகிறது. தன் சூழலை தன் அதிகாரத்தில் நிர்வகிக்கத் தக்க வீரர் இன்று இல்லை. முதலாளிகள் மத்தியிலும் இல்லை. காரணம் சமூகச் சூழல். இவற்றின் நெருக்கடிகள். இவற்றினால் பாதிக்கப்பட்டு மனிதர் சிதைவுறுகின்றனர். சூழலின் பாதிப்பிலிருந்து தம்மைக் காத்து நிலைநிறுத்திக் கொள்ளும் சக்தி இவர்களுக்கு இல்லை. தொழிற்சங்கப் போராட்டத்தில் கண்ணனின் வேலை, சொற்பொழிவாற்றுவது அவ்வளவே. கொஞ்சம் சொத்து சேரும்பொழுது இவன் தாயாரின் மதப்பற்று இவன் செல்வத்தைக் கரைக்கிறது. மேலும் இங்கு ஒரு கூரிய விமர்சனத்தை நாம் பார்க்கிறோம். மகனிடம் காசு சேரும்பொழுது தாயார், உறவினர் அனைவரையும் அழைத்து விருந்து வைக்கச் சொல்கிறாள். உறவினர் அனைவரோடும் கோயில் யாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்று மகனை மொட்டையடிக்கிறாள். அவளிடம் மறைந்திருந்த மதப்பற்று வெளிப்பட்டு மகனை நாசமாக்குகிறது. இவன் தன் மனைவியோடு வாழும்பொழுதே ஹேமா என்ற இளம் விதவையின் உதவியும், உறவும் இவனை வந்தடைகின்றன. கண்ணன் ஹேமா உறவு இறுகியதைக் கண்ட கௌசல்யாவுக்குள் இருந்த துர்க்கை வெளிப்பட்டு கௌசல்யாவைக் குளத்தில் ஆழ்த்துகிறாள். அப்புறம் ஹேமாவின் ஆக்கிரமிப்புக்கு இவன் இடம் தருகிறான். ஹேமாவின் குடும்பத்தினர் ஹேமாவை பணத்துக்குக் கட்டி வைத்தனர். ஹேமா விதவையானாள். இளம் விதவைக்கு ஆண் துணை தேவை. அவள்தான் என்ன செய்வாள் என்ற பரிதாபம் நாவலில் இழையோடுகிறது. இங்கும் பார்க்கிறோம்: கண்ணன் நாயகன் இல்லை. இழுத்தோடும் சந்தர்ப்பங்களுக்கேற்ப இயங்குகிறான். கௌசல்யா சாகாதிருந்தால்

நாவலில் பிரச்னை முற்றியிருக்கும். கௌசல்யாவுக்குள் இருப்பது சீதை அல்ல. அவளுக்குள் இருப்பது துர்க்கைதான். கண்ணனுக்குள் இருப்பவன் இராமனல்ல. பெண் தனக்கு ஆதரவையும், பாதுகாப்பையும் வேண்டி ஆணை நாடுவதும் இனக்கவர்ச்சியின் அடிப்படையில் எழும் பாலுறவுப் பிரச்னையும் நம் சமூகத்தில் வைக்கும் ஆதிக்கத்தை நாம் மறுக்க இயலாது. நாவலில் விவரிக்கப்படும் நெசவுத் தொழில் சம்பந்தமான பொருளியல் பிரச்னையும் நாவலின் பின்பகுதியில் முன்னணிக்கு வரும் ஆண் பெண் பிரச்னையும் எந்த அடிப்படையில் இணைகின்றன என்பதை நாம் ஆழ்ந்து பார்க்க வேண்டும்.

முற்போக்குவாதிகள் இந்த நாவலை சமூக நாவல் என்று கொண்டாடி இருக்கின்றனர். முற்போக்குவாதிகள் பார்வையில் இந்த நாவல் ஒரு வெற்றிகரமான நாவல் தான். அதேசமயம் வாழ்வியல் பிரச்னைகளைச் சொல்வதன் மூலம் இந்த நாவல் தமிழ் வாசகர்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது. தமிழ் வாசகர்களுக்கு பழக்கப்பட்ட கதாநாயகனாய் கண்ணன் இல்லை. இவனுக்குள் ஒரு வில்லனும் செயல்படுகிறான். கல்கி, நா.பா. முதலியவர்கள் மூலம் நாம் சந்திக்கும் மோகினியாய் ஹேமா இல்லை. ஹேமா சூர்ப்பனகைதான். கண்ணனை ஆட்கொண்டு அழிக்கிற சூர்ப்பனகை. பணம் வந்த உடனே பக்தியும் வந்து சேர்கிற கதை இந்த நாவலின் ஒரு தனித்தன்மை.

"நித்தியகன்னி" வெங்கட்ராமின் உன்னதமான படைப்பு. ஒரு காவியம் போல இந்த நாவல் விரிந்து செல்கிறது. வியாசர் படைத்த பெண்மணிகளில் மாதவியும் ஒருத்தி. அவள் யயாதியின் மகள். ஒருவனைத் திருமணம் புரிந்து குழந்தை பெற்ற பிறகு மீண்டும் இவள் கன்னியாகி விடுவாள் என்பது முனிவர் தந்த வரம். விசுவாமித்திரரிடம் காணிக்கை செலுத்தியே தீருவேன் என்று சபதம் ஏற்றான் காலவன். யயாதியிடம் மாதவியைப் பெற்று மூன்று அரசர்களிடம் ஒருவருக்குப்பின் ஒருவரென மாதவியை ஒப்படைத்து தனக்கு வேண்டிய குதிரைகளைப் பெறுகிறான். விசுவாமித்திரருக்கும் இவள் ஒரு குழந்தையைப் பெறுகிறாள். பின் உடலும் மனமும் சலித்துப் போன மாதவி பைத்தியம் பிடித்த நிலையில்; காலவன் காதலையும் வெறுத்து காட்டுக்கு ஓடுகிறாள்.

ஒரு பெண்ணுக்கு, தர்மத்தின் பெயரால் இழைக்கப்பட்ட மாபெரும் கொடுமை இது. காதலன், தந்தை, கணவர் என ஒவ்வொருவரும் பெண்ணைப் புரிந்து கொள்ளாது வதைக்கின்றனர். ஒரு கணவன் காமுகன். இன்னொருவன் வாய்வேதாந்தி. மூன்றாமவன் கலைஞன்.

இவனே பெண்ணைப் புரிந்து கொள்கிறான். ஆனால் இவனும் தீங்கு தடுக்கும் திறன் இல்லாதவன். பெண்ணுரிமை எனப் பேசும் நவீன காலத்தவர் இந்த நாவலைத் தலையில் வைத்துக் கொண்டாடலாம். கதைப் போக்கோடு செல்லும்பொழுது மூன்றாம் கணவனாகிய கலைஞன் பார்வையைத் தான் வெங்கட்ராம் கொண்டிருக்கிறார் என்று சொல்லலாம்.

நாவலில் வலுவாக எழும் குரல் நம் நெஞ்சில் நிலைபெறுகிறது. விசுவாமித்திரரும் யயாதியும் தர்மம் தர்மம் என முழங்குகிறார்கள். பெண் / மனைவி தர்மம், கணவன் தர்மம் என்று பலரும் பலபடப் பேசுகிறார்கள். ஆனால் தர்மம் ஒரு பெண்ணை - ஒரு காதலனை எவ்வளவு கொடுமைக்காரர்களாக ஆக்கியிருக்கின்றன. லட்சியங்கள் என்று தொடங்கி அதையே உருப்போட்டு, உருவம் கனத்துப் பாரமாகி, அந்தப் பாரத்தால் மற்றவரை அமுக்குகிறபோது இலட்சியங்கள் பெற்ற வெறித் தன்மையை கண்டு நாம் கலங்குகிறோம். பழங்காலத்து முனிவர்கள், மன்னர்கள் இவர்களை நிகழ்காலத்துக்கு இழுத்து வந்து அவர்களை வெட்டிப் பிளக்கும் முறையில் தண்டனை தருகிறார் வெங்கட்ராம். வெங்கட்ராமின் இத்தகைய விமர்சன அணுகல், வாசகர்களிடம் அழுக்கெனத் திரண்டு நிற்கும் பழம் மரபுப் போற்றலைக் களையும் என்பதில் ஐயமில்லை.

தமிழில் பெண்ணியம் என்று பேசுபவர்களுக்கு ஒரு ஆற்றல் மிக்க முன்னோடி வெங்கட்ராம். வியாசர் காலத்து உலகத்தையும் தர்மங்களையும், பெண்கள் பற்றிய முனிவர்கள் - அரசர்கள் பார்வையையும் இருபதாம் நூற்றாண்டுக்கு இழுத்து வந்து கூர்மையாக ஆசிரியர் கிழித்துப் போடுகிறார். பெரியாரியம் வெங்கட்ராமுக்குள் விரிவான நுட்பங்களோடு செயல்பட்டிருக்கிறது. பெண்ணியப் பார்வையைக் காட்டிலும் தர்மம் பற்றிய - பழங்காலத்தவரின் தர்மம்பற்றிய ஆசிரியரின் விமரிசனம் நாவலில் மேலோங்கியிருக்கிறது. இந்த அம்சம் இவரை முற்போக்குவாதிகளுக்கு நெருக்கமாக கொண்டு வந்திருக்கிறது. தமிழ் நாவல் சிகரங்களில் இந்த நாவலும் ஒன்று.

"அரும்பு" நாவல் நம் கால சமூகத்தின் இரண்டு கடுமையான பிரச்னைகளை ஆதாரமாகக் கொண்டு அமைந்துள்ளது. ஒன்று, சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வு; இரண்டு, பாலுறவு, குடும்பம் சார்ந்த பிரச்னை.

ஜெகநாதன் வாழ்வின் தொடக்கத்தில் பொருள் திரட்டுவதின் இன்றியமையாமையை உணர்ந்து பொருள் திரட்டும் முயற்சியில் தன்னை

முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார். இந்த ஈடுபாடு நாளுக்கு நாள் அவருக்குள் முறுக்கேறிக் கொண்டே செல்கிறது. பசுபதி என்ற முகவர் தன் அறிவுத்திறமை முழுவதையும் ஜகன்னாதன் பொருள் திரட்டும் முயற்சிக்கு அர்ப்பணிக்கிறார். வாலைக் குழைத்து வரும் நாய் போல் அறிவாற்றல் மிகுந்து அந்த மனிதர் அமைகிறார். ஜகன்னாதனுடைய முழுக்கட்டுப்பாட்டில் அவர் குழந்தைகள் இல்லை. 'டாக்டர் நீலகண்டனைத்தான் திருமணம் செய்வேன்' என்ற மஞ்சுளாவின் பிடிவாதத்துக்கு அனுசரணையாக அவள் அண்ணன் மாதவன் இருக்கிறான். மாதவன் தன் திருமணத்திற்கு ஒப்புக் கொள்வதில்லை. இப்பிரச்னைகள் முற்றி ஒரு கட்டத்தில் மாதவன் மனநிலை சீர்குலைந்து அந்தச் சூழ்நிலையில் பசுபதிக்கு ஒரு இலட்ச ரூபாய்க்குப் பத்திரம் பதிவு செய்து கொடுத்து விடுகிறான். ஒட்டகத்தின் முதுகில் வைக்கப்பட்ட இறுதி வைக்கோல் கட்டுப்போல தனக்குள் முறுக்கேறிய கயிறு அறுபட்டு ஜகன்னாதன் சாகிறார். பொருள், மனிதனை, பிசாசு ஆகிப் பழிவாங்குகிறது. பணமே தன் இலட்சியம் என பணத்திற்குள் அன்னியமாகி வாழ்வின் பிற அம்சங்கள் அனைத்தையும் ஒதுக்கி, இறுதியில் வாழ்வையே இழந்து விடும் சூழலை ஜகன்னாதன் மூலம் அறிகிறோம். இதே பணம்தான் அறிவாற்றல் மிகுந்த பசுபதியை நாய்போல் அலைய வைக்கிறது.

சரசாவின் குடும்பச் சூழல் நம்மைக் கழிவிரக்கம் கொள்ள வைக்கிறது. தந்தை ஆசிரியர் தொழில். சரசாவுக்கு அடுத்து ஒரு பெண்ணும் இரண்டு பையன்களும். மஞ்சுளாவின் வீட்டில் கடன் வாங்கி சரசாவுக்கு திருமண்ம் செய்து வைக்கிறார். பொறியாளர் கிட்டு ஒரு காசநோயாளி. அவர் பிறந்த குடும்பமும், வறுமையின் எல்லாக் கொடுமைகளையும் அனுபவித்த குடும்பம். கிட்டுவின் தாய் மகனிடமிருந்து சம்பளம் முழுவதையும் பறித்துக் கொண்டு பிறந்த பிற குழந்தைகளுக்குக் கூட உணவு தராமல் தானே தின்று பருத்தவள். நோய் கடுமையாகி வேலையிலிருந்து அவன் விலக வேண்டிய சூழலில் மகனை விரட்டி விடுகிறாள். வறுமை இப்படி ஒரு தாயை குரூரமாக்கி மகனையும் நாசமாக்குகிறது. இத்துடன், வேலையில்லாது சுற்றும் தன் மகனிடம் அடிவாங்கும் தந்தை பசுபதியையும் சேர்த்துக் கொண்டால், வறுமை செய்யும் கொடுமைகளைப் புரிந்து கொள்ளலாம்.

சரசாவுக்குள் ஆற்றல் மிகுந்த ஒரு மகாராணி இயங்குகிறாள். மாதவனை இவள் காதலிக்கிறாள். ஜகன்னாதனின் தலையீட்டால் இவர்கள் காதல் தடைபடுகிறது. மாதவன் தன்னை மறுத்து விட்டான் என்ற

வெறுப்பில் இந்த மகாராணி வலுப்பெறுகிறாள். மஞ்சுளாவின் மீதும் இவள் வெறுப்பு வளர்கிறது. சரசா கவர்ச்சிமிக்க அழகி. டாக்டர் நீலகண்டனுக்கும் மஞ்சுளாவுக்கும் திருமணம் என்பது உறுதிப்பட்ட நிலையில் நீலகண்டன் இவள் கவர்ச்சியில் ஈடுபட்டு இவள் உடலையே சுற்றிச் சுற்றி வருகிறான். இப்பொழுது மகாராணிக்கு பேரதிகாரம் கிட்டுகிறது. ஒவ்வொருவரையும் தன் அதிகாரச் சக்கரத்தில் இழுத்தடிக்கிறாள். நாவலின் இறுதிப்பகுதியில் மகாராணியின் முழு அதிகாரமும் உறுதியாகச் செயல்படுவதைப் பார்க்கிறோம். இறுதிவரை நீலகண்டனுக்கு தன் உடலைத் தரவில்லை. உடல் கட்டழகுதான் தன் பலம் என்பதை இளம் வயதிலிருந்தே புரிந்து கொண்ட சரசா, அதனை யாரிடமாவது இழந்து விட்டால், தன் அதிகாரம் பறிபோய்விடும் என்ற உணர்வோடு செயல்படுகிறாள். ஜகன்னாதன் இறந்து விட்டார். மாதவன் மனம் கலங்கி வீட்டை விட்டு எங்கோ சென்றுவிட்டான். சரசாவின் தம்பி, குடும்ப மானம் பறிபோன நிலையில் கிணற்றில் விழுந்து மற்றவரால் காப்பாற்றப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறான். அப்பா வேலையிலிருந்து விலகினார். நீலகண்டனை ஒரு புலி மாதிரி தாக்கி நொறுக்கிய பின்னர் சரசா தன் கைப்பெட்டியுடன் எங்கோ மறைந்தாள்.

காதல் தோல்வி மட்டுமல்லாது மஞ்சுளா மீது கொண்ட ஆத்திரமும் ஒன்று சேர்ந்து சரசாவை இப்படி இயக்குகின்றன. ஒரு ஏழைக் குடும்பத்தில் பேரழகியாய் பிறந்த பெண் என்ன செய்ய முடியும்? அழகியாகிய தன்னை பலர் ஆராதிக்க, தனக்கென செல்வம் இருந்தால் மட்டுமே சமூகத் தகுதியில் உயர்ந்து காதலனைக் கைப்பிடித்து மனநிறைவோடு வாழமுடியும். இதற்கான சந்தர்ப்பம் இவளுக்கு இல்லை. குடும்பச் சூழலில் எத்தனையோ குறைபாடுகளுடன் ஆரோக்கியமான மனநிலையுடன் இவள் வளர முடியாது. ஏக்கமும், வெறுப்பும், கிடைத்ததை விடாப்பிடியாகப் பற்றிக் கொள்ளும் பிடிவாதமும் இவளை வழிநடத்துகின்றன.

செக்ஸ் இவளுடைய பலம். பிறருக்குத் தராத வரையில் மட்டுமே தன் அதிகாரம் செல்லும் மகாராணியின் உருவாக்கத்தை இளமை முதற்கொண்டே குடும்பச் சூழல், சமூகச் சூழல் இவைகளிலிருந்து போதிய அளவு ஆசிரியர் விளக்கியிருக்க வேண்டும் என்றாலும் இப்படியொரு மகாராணி உருவாவதை நாம் புரிந்து கொள்ள முடியும். இறுதிவரை தன் உடம்பை யாருக்கும் இவள் தரவில்லை என்பது ஒரு யதார்த்தமாகக் கூட நமக்குத் தோன்றவில்லை. இப்படி சரசாவை இறுக்கமாக உருவாக்கியிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆயினும் சரசாவுக்குள் உருவாகியிருக்கும் குரூரத்தை நாம் வேறு எப்படி வெளிப்படுத்த முடியும்? வறுமையும் சமூகச் சிதைவும் இப்படி மனிதரை

குரூரமாக்கி, அதன் மூலம் தன்னையும் தன்னோடு சார்ந்த பிறரையும் நாசமாக்குகிறது. குரூரமும், சின்னத் தனங்களும் ஆரோக்கியமற்ற குடும்பச் சூழலில் உருவாகின்றன. தனக்குள் பற்றி வளரும் இந்த நெருப்பு அவளுக்குள்ளும் வெளியிலும் ஆரோக்கியத்தை வளர்ப்பதில்லை. நம் சமூகத்தில் இப்படி நிறைய மனிதர்கள் நாசமாவதை நாளும் பார்க்கிறோம்.

டாக்டர் நீலகண்டனை செக்ஸ் உணர்வு பிடித்தாட்டுகிறது. மஞ்சுளா ஆரவாரமில்லாத அழகும், நற்பண்புகளும் நிறைந்தவள். அவளைக் காட்டிலும் ஆரவாரமான அழகுடைய சரசாவிடம்தான் இவன் மனம் ஈடுபடுகிறது. இருவரையுமே அவன் அவரவர்க்குரிய இடத்தில் வைத்து முடியுமானால் ஏற்பான். இதற்கு மேலும் அவன் தன் கரங்களை விரிவுபடுத்தவே விரும்புகிறான். இவனுக்கு காமம் ஒரு நோய். தந்தையில்லாத குடும்பத்தில் தாயால் வளர்க்கப்பட்டு, எத்தனையோ சிதைவுகளுக்குட்பட்டு இப்போது டாக்டராக இருப்பது ஒரு வாய்ப்பு. ஆரோக்கியமில்லாத குடும்பச் சூழலில் வளர்ந்தவன் அவன். மனதிற்குள் எத்தனையோ நொறுங்கல்கள்; வெறுமைகள். அவனோடு இவை சேர்ந்து காமம் இரைகொள்ள வைக்கிறது. இவனும் நாயகன் போல் தென்பட்டு, ஆனால் பரிதாபத்துக்குரியவனாகும் வில்லன். இந்த நாவலிலும் நாயகன் அல்லது நாயகர்கள் இல்லை. நம் சமூகச் சூழல், ஒவ்வொருவரையும் ஏதாவது சில வகைகளிலாவது கையையும் காலையும் முடமாக்கிப் போட்டிருக்கிறது. நானே என்று ஒவ்வொருவனும் தலை உயர்த்தி நடக்கிறான். இடையில் அவன் தலை அறுபட்டாலும் பெருமை குறையாமல் நடந்து செல்லவே விரும்புகிறான். இந்த சமூகம் அவனுக்குள் ஏற்படுத்தியிருக்கும் ஊனங்களை இப்படித்தான் அவன் எதிர்கொள்ள முடியும். தற்பெருமை என்ற ஊன்றுகோலை வைத்துத்தான் தன்னை நிமிர்த்திக் கொள்கிறான். சற்று விலகி நின்று பார்த்தால் சோளக் கொல்லை பொம்மை மாதிரி நமக்கு நகைப்பு ஏற்படுத்துகிறான். பாவம் மனிதர்கள்! பசுபதி இப்படித்தான் தலையையும் தலையைவிட பெரிதான வாயையும் வைத்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வருகிறான். இந்தச் சூழலில் இயல்பாக இருக்கத் தெரிந்தவர்கள் போட்டிக்கு வராமல் இருக்க வேண்டும் அல்லது இந்தக் கதையில் காணும் லட்சுமி, பார்வதி போன்ற தாய்மார்கள் மாதிரி தமக்கென எப்போதோ இருந்த சாயம் அழிந்து கந்தலாகிவிட வேண்டும்.

"வேள்வித் தீ" நாவலிலும் காமத்தின் ஆட்சியைக் கண்ணனிடமும் ஹேமாவிடமும் பார்க்கிறோம். ஹேமா இளம் விதவை என்பதை ஒரு காரணமாகக் கூறலாம். கண்ணன் ஹேமாவின் கவர்ச்சிக்கு ஆட்பட்டு

அவளிடம் காம வசப்படுகிறான். பட்டு நெசவுத் தொழிலில் மேலும் மேலும் பொருள் திரட்டும் வாய்ப்புகள் இருந்து பொருளாசையும் தீவிரம் கொண்டிருக்குமானால் அந்த அளவுக்கு இவனிடம் காமம் தன் அதிகாரத்தை நிலைநிறுத்தியிருக்கமுடியாது என்று நாம் எண்ணிக் கொள்ளலாம். சீரழிந்த சமூகச் சூழலில் தனக்குள்ளும் சீர்குலைந்திருக்கும் ஒருவன் காமத்திற்குள் தன்னை உட்படுத்திக் கொண்டாவது நிறைவு காண விரும்புகிறான். இந்த நிறைவு அவனுக்கு நிரந்தரமல்ல என்ற போதிலும் காம உணர்வு ஒரு கனவுலகை – ஒரு சிறிய சொர்க்கத்தை தன் முன்னால் வைப்பதால் அதன் கவர்ச்சியிலிருந்து அவன் விடுபட முடிவதில்லை. அரும்பு நாவலில் வரும் மாதவனுக்கு எந்த அம்சத்தில் குறை இருக்கிறது? அவனும் இதேபோல காதல் வயப்பட்டு கைகூடாதபொழுது சந்தேகங்களுக்கும் சஞ்சலங்களுக்கும் உட்பட்டு நோய்க்கூறான மனநிலையைப் பெறுகிறான். மஞ்சுளா, சரசா ஆகியவர்களும் காதலில் மட்டுமே மோட்சத்தை அல்லது விடுதலையைக் காண்கின்றனர். 'நித்யகன்னி' நாவலில் காமத்தின் ஆட்சியை முன்பே பார்த்திருக்கிறோம். நம் சமூகத்தில் பணமும் காமமும் பெற்றுள்ள குரூரமான அதிகாரத்தை சித்திரிப்பதில் "அரும்பு" போல இன்னொரு நாவலை நாம் சொல்லமுடியாது. வாழ்வியல் பற்றிய வெங்கட்ராம் அவர்களின் விரிவான கண்ணோட்டத்தை இந்த நாவல்தான் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறது. வெங்கட்ராம் இந்த நாவலில் உருவாக்கித் தந்திருக்கிற மகாராணி என்ற படிமம், நம் சமூக மனிதரின் – குறிப்பாக பெண்களின் உளவியலை கச்சிதமாக வெளிப்படுத்துகிறது. இத்தகைய படிம உருவாக்கம், மனிதர் பற்றிய விமரிசனத்துக்கு ஒரு அரிய நன்கொடை என்று கூறலாம். பணத்தின் குரூரமான ஆட்சிக்குப் பலியான மனித அவலத்தை இந்த நாவல் உருக்கமாகச் சித்திரிக்கிறது. இவ்வகையில் தமிழ்ச் சமூகம் பற்றிய துல்லியமான சித்திரிப்பாகவும் இந்த நாவலைக் கருதலாம். யார் யாரையெல்லாம் முன்மாதிரியாக வைத்துக் கொண்டு அல்லது யார்யாருடைய வாழ்க்கை அவலங்களை எல்லாம் எழுத்தில் வடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆசிரியர் இந்த நாவலை எழுதினார் என்ற கதையை வெங்கட்ராம் அவர்கள் சொல்ல வேண்டும்.

"ஒரு பெண் போராடுகிறாள்" என்ற நாவல் ஒரு நல்ல வரலாற்று நாவல் எனச் சொல்லலாம். முன்னுரையில் வெங்கட்ராம் குறிப்பிட்டபடி இந்த நாவலில் வரும் இரண்டொரு பாத்திரங்களே வரலாற்றுப் பாத்திரங்கள். பெரும்பாலான பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் ஆசிரியரின் கற்பனையில் உருவானவை. ஆனாலும் இதனை வரலாற்று நாவல் என ஏன் சொல்ல வேண்டும்?

கல்கி, சாண்டில்யன் பாணியில் காதல் களியாட்டங்கள், அந்தப்புர லீலைகள், அரண்மனைச் சதி ஆலோசனைகள் முதலிய வெகுஜன ரசனைத் தன்மையுடன் இந்த நாவல் படைக்கப்பட்டிருந்தாலும் இவற்றையும் மீறி நாவலில் பல முக்கிய அம்சங்கள் வெளிப்படுகின்றன. ஓடர் குலம் தாழ்ந்த சாதி. இதன் தலைவன் எவ்வளவுதான் வீரமும் அறிவாற்றலும் உடையவனாக இருந்தபோதிலும் தற்காலிகமாக அரசின் அங்கமாக இவன் தகுதி பெற்றாலும் இந்தக் குலம் அரசை அமைக்க முடியாது. அரசன் எவ்வளவுதான் காமவசப்பட்டவனாக இருந்தாலும், அவனது படைத்தலைவர்கள் தமக்குள் பதவிக்காக எவ்வளவுதான் சண்டையிட்டுக் கொண்டாலும் இறுதியில் அரசு மமதையோடு நிலைபெறத்தான் செய்யும்; உள்புகுந்து அதனை அழித்துவிடமுடியாது. இந்த இரு அம்சங்களிலும் இந்த நாவல் நம் காலத்து மார்க்சியத்திற்கு நெருக்கமான கருத்தியலைக் கொண்டு இயங்குகிறது. இவ்வ தவிரவும், நாவல் நெடுகவும் அரசு பற்றிய கூர்மையான விமர்சனங்கள் தொடர்கின்றன.

நாவலில் வேறு சில அம்சங்கள் நம்மைக் கவர்கின்றன. அரசின் அந்தப்புர வாழ்க்கை கேவலமானது, படுகேவலமானது என்பதை நாவல் நன்றாகச் சித்திரிக்கிறது. அரசனோடு உடல் உறவை சில நாட்கள் மட்டுமே பெறும் மகளிர், உடல் தினவு தணிக்க எவ்வளவு அற்பத்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்பதை இந்த நாவலில் காண்கிறோம். ஜஸ்மா – டீகம் இருவரும் ஓடர் குலத்தினர். காதல் மிக்க கணவன், மனைவியர். ராமனுக்கு சீதை மாதிரி இருவரும் மனம் ஒன்றி இருக்கின்றனர். வீரத்தால் டீகமை பணிய வைக்க முடியாது. ஆனால் அரசு பதவி தரும் சுகம் இவர்களை மெல்ல மெல்ல அரிக்கிறது. சுகத்தின் மீது வேட்கை மிகுந்து அரச பதவியைக் கைப்பற்றிக் கொள்ள முடியும் எனத் திட்டமிடும்போது அழிவு நேர்கிறது. இந்த நாவலில் வரும் ராஜநர்த்தகி சௌதாமினி தன் அறிவாலும் அழகாலும் ஆற்றலாலும் வாசகரைக் கவர்ந்து விடுகிறாள். "ஒரு பெண் போராடுகிறாள்" என்ற இந்த நாவலில் போராடும் பெண் இவள்தான். அரசனது காமவெறியிலிருந்து ஜஸ்மாவையும், அரசின் அழிப்பிலிருந்து டீகமையும் காப்பாற்ற இவள் போராடுகிறாள். டீகமிடம் இவளுக்கும் அலாதி காதல். ஆனால் ஜஸ்மாவை அளவு கடந்து நேசிப்பதன் மூலம் அவள் உருவில் தன்னைக் கண்டு தன் மனவிருப்பம் நிறைவுறுகிறாள். திரிபுவனர் முதலமைச்சர், பிராம்மணர். இவரது ஆட்சித் திறம் எல்லையில்லாதது. இவர் ஆறாவது முறையாக ஓர் இளம்பெண்ணை மணம் முடிக்க, அந்தப்பெண் இந்தக் கிழவனிடம் உடல் இன்பம் பெற இயலாமல் அரண்மனையை விட்டு ஓடி ஓர் ஓடர் குலத்து வீரனை சரண் அடைகிறாள். அவளைக் கொல்ல திரிபுவனர் ஏற்பாடு செய்தார். இந்தக் கொலையை

சௌதாமினி அறிந்து அம்பலப்படுத்தியபொழுது அந்த ஆலமரம் உணர்வற்றுச் சாய்கிறது. ராக்காவும், சம்பாவும் சின்னத்தனங்களே உருவானவர்கள். அதிகாரத்திற்கும் இன்பத்திற்கும் தங்களை இழந்து, அதற்காக நாயாய் அலையும் இவர்கள் செய்யும் சதிகளும் சின்னத்தனங்களும் தான் எவ்வளவு? வழக்கம்போல படைத்தலைவர்களுக்கிடையில் பதவிச் சண்டைகளும் தொடர்கின்றன. நாம் உறுதியாகச் சொல்ல முடியும்: சில கூர்மையான விமரிசனங்கள் மூலமாகவும் அரச பற்றிய கடுமையான விமரிசனங்கள் மூலமாகவும் இது ஒரு வரலாற்று நாவலாகிறது. வெங்கட்ராம் ஒவ்வொரு நாவலையும், அதற்கெனத் தனிக்கரு என்ற முறையிலும் சோதனை ரீதியிலும் சிறப்பாகச் செய்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

கல்கி, சாண்டில்யன் போன்றவரின் வரலாற்று நாவல்களை வெங்கட்ராம் அவர்கள் வெளிப்படையாக விமரிசனம் செய்தாரா என்று தெரியவில்லை. ஆனால் இந்த நாவல் மூலம் இத்தகைய விமரிசனத்தைச் சரியாக வெளிப்படுத்தியிருக்கிறார். கல்கியின் அந்தப்புரம் அழகானது. வெங்கட்ராம் சித்தரிக்கும் அந்தப்புரம் அசிங்கமானது. கல்கியின் அரசன் மாபெரும் வீரன். இவரது அரசன் கோழை, வஞ்சகன். படைத் தலைவர்களால்தான், பார்ப்பன முதலமைச்சரால்தான், அரசன் தன் வெற்றி முகத்தை நிலைநாட்டிக் கொள்கிறானென்பது வெங்கட்ராமின் சித்திரிப்பு. எவ்வளவு முயன்றாலும் தாழ்த்தப்பட்ட சாதிக்கு அதிகாரம் இல்லை என்பதை வெங்கட்ராம் சித்திரிக்கும்போது, நமக்கு நெருக்கமாக வந்துவிடுகிறது. பெண்ணின் அறிவாற்றலையும் தியாக உணர்வையும் சித்திரிக்கும் வகையில் வெங்கட்ராம் தனித்துத் தென்படுகிறார். கல்கியின் ஒரு வரலாற்று நாவலையும் வெங்கட்ராமின் இந்த நாவலையும் ஒப்பிட்டு யாராவது ஆராய்ந்தால், அத்தகைய ஆய்வு வரலாற்று நாவல் விமர்சனத்திற்குப் பெரிதும் பயன்படும்.

1930 முதல் வெங்கட்ராம் எழுதி வந்தாலும் தன் மன உலக அனுபவங்களை 1977-ல் வெளிவந்த 'பாலம்' இதழில் "காதுகள்" என்ற குறுநாவலில் ஓரளவு வெளிப்படுத்தியுள்ளார். வெங்கட்ராமை நாம் அறிந்த வரையில் துவக்கத்தில் கடவுள் மறுப்பை உறுதியாகக் கொண்டிருந்தார். ஆனால் கடவுளை மறுத்தவுடன் பிரச்னை தீர்ந்து விடுவதில்லை. அதற்குப்பிறகும் கூர்மையான பல பிரச்னைகள் தொடர்கின்றன. நம் புலன்களுக்கும் அறிவுக்கும் வசப்படாத சில உணர்வுகள் - சில காட்சிகள் நமக்குப் பிரச்னையாகின்றன. மந்திரம், சோதிடம், எண்கணிதம், கைரேகை, தொலைவிலுணர்தல், தொலைவிலுணர்த்தல், சித்தர் என்ற சிலர்

நிகழ்த்தும் அற்புதங்கள் இவைகளெல்லாம் நமக்கு அடிக்கடி பிரச்னைகளை எழுப்புகிறது. உளவியல் ஆய்வுகளும், மூளை – மனம் பற்றிய ஆய்வுகளும் இதுபோல பிரச்னைகளை எழுப்புகின்றன. இவற்றையெல்லாம் அடியோடு மறுத்து விடுவதற்கில்லை.

'காதுகள்' நாவலில் ஆசிரியர் தன் அனுபவங்களைத்தான் சொல்கிறார். தொழில் மந்தமாகி குடும்பத்தில் துன்பங்கள் அதிகரித்த நிலையில் இவர் காதுகளுக்குள் முதலில் 'கரமுர' எனத் தோன்றிய ஒலிகள் பிறகு தெளிவாக ஒலிக்கத் தொடங்கின. வீட்டின் தரையில் அமர்ந்திருந்தால் மேலே முகட்டில் இரண்டு அல்லது மூன்று ஆவிகள் கூடி உரத்துப் பேசிக் கொள்வது போலவும் சண்டையிட்டுக் கொள்வது போலவும் கேட்டன. ஒன்று பெண்; காளியின் குரல். மற்றது ஆண்குரல். சிவன் அல்லாத இன்னொரு ஆண். வெங்கட்ராம் காளிக்கு வழிபாடு செய்வதைக் கைவிட்டு முருகனை ஏன் வழிபட வேண்டும் என்ற ஆத்திரம். அவர் தொழிலையும் குடும்பத்தையும் நாசம் செய்வதாக மிரட்டல். இப்படியே பல நாட்கள், பல மாதங்கள். இடையறாத ஒலிகள். உளவியலாளர் கூறுகிற மாதிரி, 'hallucinations' என்று கூறுவதும் இதை முழுமையாக விளக்காது. ஆவிகள், அசிங்கமாகத் தெருவில் சண்டையிடுவது மாதிரி கத்துகின்றன. காமம் வெளிப்படுகிற அசிங்கமான பேச்சுகள். இன்னொரு பெண் ஆவி இவரைக் கீழே தள்ளி புணர்தல். இப்படி நடைபெறுகின்றன. ஆசிரியர்க்குள்ளும் அவரே கூறுகிறபடி, காம உணர்வுகள் மறைந்திருந்து இப்படி வெளிப்படுவதைப் புரிந்து கொள்ளலாம். ஆவிகளும் குரூரமாகச் சண்டையிடுவதையும் புரிந்து கொள்ளலாம். அதற்கு மேல் எதுவும் புரிவதில்லை. இப்படி ஒரு குரூரமான அனுபவத்திற்குள் மாட்டிக் கொண்ட எவரும் ஆவிகள் பற்றி நம்பிக்கை கொள்ளத்தான் செய்வார். மறுத்துவிட்ட உடனே பிரச்சனை தீர்ந்து விடுவதில்லை.

தமிழில் ஆன்மீக அனுபவங்கள் பற்றி ஒரு முழுமையான குறுநாவல் என்று இதைச் சொல்லலாம். தன் வாழ்க்கை தன் வசத்திற்குள் இல்லாதபொழுது புறத்திலிருந்து தன்னைத் தாக்கும் சக்திகளின் அதிகாரத்தைத் தான் கட்டுப்படுத்த முடியாதபொழுது ஒரு மனிதனுக்கு மனச்சிதைவு ஏற்படத்தான் செய்யும். இந்நிலையில் ஏற்படும் இவ்வனுபவங்கள் பெரும் இருட்குகைக்குள் – நரகத்திற்குள் மனிதனை வதைப்படுத்துவதைப் போல தாக்குகின்றன. இந்தச் சக்திகளுக்கு மனத்தை இடமாகத் தந்துவிட்டு அவற்றின் அருட்டலை ஒரு நாடகம்போல இரவு பகல் எந்நேரமும் கேட்டுக் கொண்டிருக்கிற அனுபவம் குரூரமானது. நாவல் படிக்கிற நாமும் இந்த குரூரத்தை அனுபவிக்கிறோம். பிசாசுகள்,

தெய்வங்கள் உண்மைதானா என்று ஐயுறுகிறோம். நமக்கும் இன்னொரு உலகத்துக்கும் தொடர்பிருப்பதைப் போலவும் உணர்கிறோம். நாம் நம்ப மறுத்தாலும் இத்தகைய உணர்வுகளின் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையில் அமைகிறது இந்த நாவல். நேரில் தன் அனுபவங்களை இன்னும் பல மடங்கு விரித்துச் சொல்கிறார் வெங்கட்ராம். அவர் இவற்றை எழுதி வைக்கட்டும். உளவியல் ஆய்வுச் சிக்கலில் தேர்ந்த ஒரு விமரிசகர் என்றைக்காவது இவற்றுக்கு அர்த்தம் சொல்லட்டும்.

வெங்கட்ராமின் எல்லாப் படைப்புகளிலும் ஊடுருவியிருக்கும் ஒரு பொதுத்தன்மை ரொமான்டிசிசம் எனலாம். அதாவது ஒரு கனவியல். பாத்திரங்களை வார்க்கும் முறையிலும் சரி, அவர்களின் செயல்களிலும் சரி அல்லது கதைகளைச் சொல்லிச் செல்லும் மொழிநடையிலும் இந்த கனவியல் நிறைந்திருக்கிறது. வெங்கட்ராமின் பெண் பாத்திரங்களில் சௌதாமினியைத்தான் இந்த அம்சத்தில் மகாராணி என்று சொல்ல முடியும். அடுத்தபடி ஹேமா, சரசா முதலியவர்களைச் சொல்லலாம். ஏன் இத்தகைய போக்கு என்று ஆராயும்பொழுது நமக்குள் நெடுங்காலமாகத் தொடர்ந்து வருவது இக்குணம் என்பதைக் கண்டறியலாம். எல்லா மனிதர்க்குள்ளும் அவரது வாழ்நிலை தேவைகள், ஆர்வங்கள் அவற்றை ஒட்டி எழும் கனவுகள், கற்பனைகள் ஆகியவற்றில் இந்த கனவியல் ஊடுருவி இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு அல்லது கோயில் அல்லது பொன்னுலகம் தேவையாக இருக்கிறது. இந்தப் பொன்னுலகம் என்ற அலங்காரத்தைச் சுமந்து கொண்டுதான் ஒவ்வொருவரும் நடமாடுகின்றனர். இந்த அலங்காரம், சற்று ஆழ்ந்து பார்க்கும்பொழுது, உள்ளிருக்கும் கைவிலங்குகளை மறைத்துக் கொண்டிருக்கிறது. அலங்காரத்தைக் களைந்தால்தான் விலங்குகள் வெளிப்படும் என்பது உண்மை. ஆனால் இந்த அலங்காரத்தைக் கலைத்து விலங்குகளைப் பார்ப்பதென்பது உடம்பிலிருக்கும் எலும்புகளை உருவி எடுத்துப் பார்ப்பது போலான செயல். இப்படித்தான் நமது மரபு நம்மை வைத்திருக்கிறது. கனவுகள் இல்லாமல் நாம் வாழமுடியவில்லை. எதார்த்தம் இப்படி கனவுலகத்தை தனக்கு நெருக்கமாகக் கொண்டிருக்கிறது. வெங்கட்ராமின் படைப்புகளில் நாம் பார்த்த பலவகைப் பிரச்னைகளையும் முரண்களையும் இப்பொழுது ஒரு சேர குவித்துப் பார்க்கலாம்.

"வியாசர் படைத்த பெண்மணிகள்" தொகுப்பில் வரும் இந்திரன் எப்பொழுதும் ஒரு காமுகன். இவன் அனைத்து ஆசிரமங்களிலும் நுழைந்து வர விரும்புவதைப் பார்க்கும்பொழுது அந்தப் பழங்காலக் கதைகளில் காமுகர் என வரும் எவருக்கும் இந்திரன் என்ற

பொதுப்பெயர் வழங்கப்பட்டிருக்குமா என்றே தோன்றுகிறது. திலோத்தமை கதையில், திலோத்தமையைப் படைத்த பிரமனும், சிவபெருமானும் கூட அவளிடம் அறிவைப் பறிகொடுக்கின்றனர். அகத்தியன் தன் மனைவி லோபமுத்திரையிடம் தன் அதிகாரத் தோரணையை இழக்கிறான். இப்படியே மற்றும் பலரும். தேவர்களும் முனிவர்களுமே கூட இதற்கு விதிவிலக்கு இல்லை. இந்த இடத்தில் நாம் காமத்தையும் காதலையும் வேறுபடுத்திப் பார்க்கவும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் இவை இரண்டிற்கிடையில் பொதுவான அம்சம் என, இங்கு நாம் எடுத்துக் கொள்ளும் பிரச்னை, இந்த அளவுக்கு காதலிலோ காமத்திலோ மனிதருள் பலர் தம்மை இழக்கவேண்டியது ஏன் என்பதுதான். காதல் அல்லது காமமும் இங்கு மனிதர் தம்மை இழந்து அன்னியமாகிவிடும் நிலவரம். காதலுக்குள் அல்லது காமத்திற்குள் தம்மை இழந்து அதன் நிறைவிலேயே தனக்கு வாழ்க்கை அல்லது இன்பம் இருக்கின்றது என்று மேற்கொள்ளும் நிலை. சமூகத்தில் பற்றி எரியும் நெருப்பிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு ஒரு குளிர்ந்த தாமரைத் தடாகத்தில் குளிப்பதன்மூலம் தன்னை நிரந்தரமாகப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற நிலை. காதலில் பெறும் வெற்றியோ அல்லது காமத்தினால்வரும் வெற்றியோ மனிதரின் பிரச்னைகளை முழுமையாகத் தீர்ப்பதில்லை. "ஒரு பெண் போராடுகிறாள்" நாவலில் ஜஸ்மா என்ற அழகியை அடைவதற்காகவே அரசன், அனைத்துச் சக்திகளையும் ஈடுபடுத்தி முயற்சி செய்கிறான். இவனைப் போல திரிபுவனர் முதலிய பெரியவர்களும் ஜஸ்மாவின் மீது காமவயப்பட்டு சீரழிகின்றனர். இப்படி ஒரு நாவலில் ஒரு பெண்ணை அடைவதற்காக நடைபெறும் போராட்டங்களைச் சித்தரிப்பது கல்கி பாணிதான் என்பதில் ஐயமில்லை. வரலாறு என்பது ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு ஒரு பெண்ணைச் சுற்றித்தான் நடைபெறுகிறது என்பதுகூட உண்மையில்லை. ஆனால் காதல் அல்லது காமத்தை மையமாக வைத்துக் கொண்டுதான் நம் சமூகத்தில் பலர் வாழ்கின்றனர் என்பதும் உண்மை. நாவலாசிரியர்களுக்கும் தம் கதையை விற்க இப்பிரச்னை பயன்படுகிறது. தவிர்க்க இயலாதபடி வெங்கட்ராமும் இவ்வலைப் பின்னலில்தான் மாட்டிக் கொண்டிருக்கிறார். இதற்கு ஜனரஞ்சகம் என்று பெயர் குறிப்பிட்டிருக்கிறார். ஆயினும் நம் சமூகத்திலுள்ள ஒரு கடுமையான பிரச்னை இது என்பதை ஏற்கத்தான் வேண்டும்.

எல்லாவற்றுக்கும் அடியில் உயிரோட்டமாகச் செல்வது, மார்க்சிய முறையில் விளக்கப்படும் அன்னியமாதல் பிரச்னைதான், வர்க்க வேறுபாடுகள் தொடர்ந்து பெருகிவரும் சமூகச் சூழலில் மனிதன்

இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் இறுதியாகத் தன்னிலிருந்தும் அன்னியமாகிறான். உற்பத்தியையோ பகிர்வையோ பிறவகைச் சமூக உறவுகளையோ இந்த மனிதன் தன் கட்டுப்பாட்டிற்குள் - ஆளுகைக்குள் வைத்திருக்க முடியவில்லை. மக்களின் உழைப்புத்திறன் பெருவாரியாகச் சுரண்டப்பட்டு செல்வமாகச் சில இடங்களில் குவிந்து அந்தச் செல்வம் இப்படியே தொடர்ந்து வலுப்பெற்று மக்கள் மேல் பெரும் சுமையாக அமர்ந்து, இதனால் மக்களை மேலும் நாசமாக்கும் அசுர சக்தியாகிறது. அசுர சக்தியின் ஆதிக்கத்தில் தாங்கள் அனைவரும் இயக்கப்படுவதை அறியாதவர்களாகி, மக்கள், தமக்குள் முரண்பட்டு ஒருவரை ஒருவர் குரூரமாகக் காயப்படுத்திக் கொள்கின்றனர். தம் உழைப்புத் திறனை ஆரோக்கியமான முறையில் செலுத்தி தம் பொது நலத்திற்கென பொருள்களையும் அறிவையும் கலையையும் அன்பான உறவையும் படைத்துக் கொள்ள இயலாத நிலையில் தம்மை இழந்து, மக்கள் தவிக்கின்றனர். இப்படி மக்கள் தவிக்கும்போது, அவர்களைத் தன்னுணர்வு பெறாமல் தடுக்கவும், தம்மால் நாசமாக்கப்பட்ட மக்களுக்கு கவர்ச்சியான பண்டங்களையும் காட்சிகளையும் ஜோடனை செய்து, அதன்மூலம் மக்களைத் தொடர்ந்து வணிகத்திலும் அதிகாரத்திலும் பிணிக்கும் முறையில் நாம் மேற்சொன்ன அசுர சக்திகள் செயல்படுகின்றன. இப்படி குரூரமாக நடைபெறும் போட்டிகளுக்கிடையில் இதற்கென குழந்தைகளைத் தயார் செய்யும் பணியில் ஆசிரியர் தொழிலும் நடைபெறுகிறது. யாருக்கு எவ்வளவு ஒதுக்குவது என்பதைத் தீர்மானிக்கும் சக்தி படைத்த அரசு அதிகாரம் ஆசிரியர்களை, தன் அதிகாரப் பிரதேசத்தில் தான் தேர்ந்து கொண்ட இடத்தில் அமர்த்துகிறது. ஒரு சூத்திரதாரி போல மேல் இருந்து கொண்டு மக்களுக்கு இடையில் வம்பு வழக்குகளை - போட்டி பொறாமைகளை - தீயகுணங்களை - போதையை - சாதி சமய சடங்குகளை - கல்வி முறையை - கடவுளர்களை இயங்கவைக்கிறது. இப்பொழுது விதியின் கையில் ஆட்டப்படும் பம்பரம் போல மக்கள் சுழல்கின்றனர். எங்கிருந்து இந்த விதி இப்படி ஆட்டுகிறது என்பதை அறிந்து கொள்ள இயலாமல் தமக்குள் அடித்துக் கொண்டு சாகின்றனர்.

வெங்கட்ராமின் படைப்புகளில் இத்தகைய குரூரங்களையும் கொடுமைகளையும் நாம் பார்க்கிறோம். ஒரு மூலத்திலிருந்து கிளம்பியவை இந்தக் குரூரங்களும் அலங்காரங்களும். வெங்கட்ராமின் படைப்புகளில் நாம் காணும் மனிதர்கள் அவ்வளவு பேரும், கண்களுக்கெட்டாத தொலைவில் இருந்து கொண்டு தம்மை ஆட்டி வைக்கும் அசுர சக்திகளைக் காணவில்லை.

ஓர் உதாரணமாகச் சொன்னால், பட்டு – ஜரிகை உற்பத்தியில் கும்பகோணத்து நெசவாளர்களையும் சிறு முதலாளிகளையும் பெரு முதலாளிகளெனத் தோன்றுபவர்களையும் இப்படி எல்லாரையும் ஆட்டி வைக்கும் சக்தி குஜராத்தில் இருக்கலாம். பம்பாயில் இருக்கலாம். டெல்லியில், லண்டனில் இருக்கலாம். கீழை உலகம் முழுவதையும் தமக்கென சுரண்டல் பிரதேசமாக்கியுள்ள மேற்குலகச் சக்திகளை இலக்கியப் படைப்புகளுக்குள் காணமுடிவதில்லை. ஜகன்னாதன், அந்தப் பெருத்த அசுர சக்திகளுக்கு வழிபாடு நடத்தும் ஒரு குட்டிப் பூசாரி மட்டுமே. டாக்டர் நீலகண்டனும் அந்த அசுர சக்தியோடு ஏதோ ஒருவகையில் தொடர்பு கொண்டவன். வேள்வித் தீயில் முதலாளியென வரும் மைசூர் ராமசாமி அய்யரும் இப்படித்தான். இனி மற்றவர்களை எப்படிச் சொல்ல? ஜகன்னாதனையே பிரதானமான எதிரி என நாம் கட்சி கட்டி போராட்டம் நடத்தினால் ஜகன்னாதனை ஒரு வேளை அழிக்கலாம். ஆனால் பிரதான எதிரி பத்திரமாக இருப்பான் – முதன்மையான எதிரிக்குச் சேவை செய்ய எனவும், முதன்மையான எதிரியை வலுப்படுத்த எனவும். கண்ணன் சேர்ந்த தொழிற்சங்கத்தவரும், கண்ணனைத் தொடர்ந்து தூண்டும் சாரநாதன் போன்ற தீவிரவாதிகளும், பசுபதிகளும், அலங்காரத்தையும் அதிகாரத்தையும் அடைய விரும்பி தமக்குள் மகாராணிகளை உற்பத்தி செய்து கொண்ட சரசாக்களும், அளவான அதிகாரமும் சுகமும் கிடைத்தால் போதுமெனக் காத்திருக்கும் மஞ்சுளாக்களும், அதிகாரத்தின் அடக்குமுறைக்கு இடம்கொடுத்து, தம் வலிமை இழந்து, அடக்கமாக இருந்து சேவை செய்யும் தாய்மார்களும், அதிகாரப் போக்கிற்கு இடம் தந்து, அது தன்னைப் பிணிக்கும் போது தம்மைத் துண்டித்துக் கொள்ளும் கௌசல்யாக்களும், 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என பொய்பேசும் பசுபதிகளும், உண்மை பேசும் மாதவன்களும் இப்படி அனைவருமே அதிகாரத்திற்கு தங்களால் இயன்றவகையில் சேவை செய்கின்றனர்.

பழங்கதைகள் எனவும் வரலாற்று நாவல்கள் எனவும் சொல்லப்படும் படைப்புகளுக்குள்ளும் இதே காட்சியைத்தான் காண்கிறோம். டீகமும், சௌதாமினியும் கூட இந்த அசுர சக்திகளுக்கு பக்குவமாக சேவை செய்பவர்கள் மட்டுமல்ல; அவற்றைத் தொடர்ந்து உற்பத்தி செய்பவர்களும்தான். ராக்காவும் சம்பாவும் சீர்கெட்டுப் போனது வெளிப்படையாகத் தெரிகிறது. டீகமுக்குள்ளும் சௌதாமினிக்குள்ளும் உள்ள சீர்கேடுகள் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆஹா, இது ஒரு அழகான நாடகம் என்று வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கடைசியில் முட்டாள்தனமானது என்று கருதத்தக்க அசுர சக்தி மமதையோடு ஓங்கி நிற்கிறது. வியாசர் படைத்த முனிவர்கள், தேவர்கள்,

பத்தினிகள், மற்றவர்கள் – இவர்கள் எப்படி இந்த அசுர சக்தியோடு உறவு கொண்டுள்ளனர் என்பது நமக்கு வெளிப்படையாகத் தெரிவதில்லை. இந்திய வரலாற்றில் பழங்கால நிலைகளுக்குள் நாம் தேடிச் சென்றால் ஒருவேளை இந்தக் காட்சியைக் காணமுடியும். சத்திரியர்களும், பிராமணர்களும் சமூகத்தில் ஆதிக்கம் பெற தமக்குள் நடத்திய போட்டியை இவர்களுக்குள் காணலாம் போலத் தெரிகிறது. புராதனப் பொதுமைச் சமூக நிலையிலிருந்து, அடுத்த கட்டத்திற்கு சமூகம் மாறிவரும் நிலையைக் காணலாம் போலத் தெரிகிறது. பெண்ணுக்கு முதன்மை தரும் தாயாதிக்க சமூக நிலையை அழித்து, ஆணாதிக்க சமூகம் ஏற்படுவதையும் நாம் காணமுடியும். அரசன் தனக்கென வகுத்துக் கொள்ளும் தர்மத்திற்கு மக்களை உட்படுத்த முயற்சி செய்கிறான். முனிவர்கள் தாம் வகுத்த தர்மத்தை நிலைநிறுத்த பாடுபடுகின்றனர். இவர்களுக்கிடையில் சிலசமயம் போட்டியும் சிலசமயம் சமாதானமும் ஏற்படுகிறது. புத்தமதமும் சமணமதமும் தோற்றம் பெற்ற வரலாற்றுச் சூழல் பற்றிய படிப்பு நமக்கு பலவற்றை விளக்கும்.

கரிச்சான்குஞ்சு :
பசித்த மானுடம்

1. நாவல் வடிவில் ஒரு ஆன்மீக நூல் எந்த அவஸ்தைப்பட்டாலும் 'முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்ற இந்தியப் பாரம்பரிய உண்மையை ஒரு காமுகனாகவும் தொழுநோயாளியாகவும் இருந்த கணேசன் மூலம் - கணேசனின் வாழ்வியல் அனுபவங்கள் மூலம் தெளிவுபடுத்தும் நூல். நூலில் விரவியிருப்பது எதிர் அழகியல் அல்லது அருவருப்பு என்பதன் மூலம் வெளிப்படும் அழகியல். நம் சமூகத்தில் காமம் என்பது சாக்கடைகள் போல பெரும்பாலானவர் உள்ளங்களில் ஓடிக்கொண்டிருக்கிறது. பணவெறியும்கூட இம்மாதிரி. இவற்றோடு ஆன்மீகமும் மனத்தடத்தில் பதிந்திருக்கிறது. ஊருக்குள், குடும்பத்திற்குள் பலவகைக் கலவரங்கள், சிக்கல்கள். பல்வேறு மனிதர்களுக்கிடையில் உறவு நெருக்கடிகள். நல்லவர்கள், கெட்டவர்கள், கூலிகள், போக்கிரிகள், கிராமம், நகரம், பலவகைத் தொழில்கள்; பிராமண சமூகம், இந்தச் சமூகம் சீர்கெட்ட நிலை, இவர்களுக்குள்ளும் சில மேன்மைகள். இப்படி பலநூறு மெய்ம்மைகளோடு இயங்குகிறது இந்த நாவல். நாவலில் நிறைய மனிதர்கள். சிலர் பற்றியாவது நாம் சொல்லவேண்டும். பிராமணசாதி வைதிகத் தொழிலிலிருந்து விலகி, வேறு பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிறது. வேதம் தனக்குள் அழிந்த காலம். மோட்டார் கார்த் தொழில், மதுபான விற்பனை, மருந்துக்கடை எனப்பல தொழில்கள். முதலாளிகளை அண்டிப் பிழைக்கும் நிலை. குருவை ஏமாற்றி சிஷ்யன் அவர் மனைவியோடு உறவு கொள்கிறான். பெண் சமூகம் பற்றி கரிச்சான் குஞ்சு நிறைய எழுதுகிறார். மேன்மையழிந்த பிராமண சமூகத்தின் தாழ்நிலையை நாவலில் சித்தரிக்கிறார். அசிங்கங்களை மறைத்துச் சொல்லும் இலக்கிய நீதியை உடைத்து வெளிப்படையாகப் பேசுகிறார். மனிதன் பலவகைகளில் பசித்திருக்கிறான். நாவலிலும் பலவகை மனிதர்கள்; பலவகைப் பசிகள். உன்னதம் தேடும் பசி ஒரு புறம். பாதுகாப்புக்கான பசி இன்னொரு புறம். நிகழ்கால சமூகத்திற்குள் பல்வேறு சூழல்களிலுள்ள மனிதர்களுக்குள் கரிச்சான் குஞ்சு துருவித் துருவிப் பார்க்கிறார். பிராமணீயம் செத்து, பசியோடு அலைகிற மனிதர்களைப் பார்க்கிறோம்.

2. முதலில் கணேசன். தோப்பூர் நாகரிகத்திற்குள் இவன் ஒரு விளைச்சல். இவன் அழகில் கண்ணன். பெற்றோர் ஆதரவில்லாத நிலையில் கும்பகோணம் தென்கரைச் சத்திரத்தில் சங்கர மாமா ஆதரவில்

இருந்து பிறகு குடவாசல் வாத்தியார் வீட்டில் வளர்கிறான், படிக்கிறான். வெகு விமரிசையாக இவனுக்கு உபநயனம் நடக்கிறது. இவன் அழகில் சொக்கிப்போய் ஆண்களும், பெண்களும், இளையவர்களும், முதியவர்களும் இவனைத் தொட்டுத் தடவி இவனுக்குள் காமவெறியைக் கிளப்புகிறார்கள். பள்ளிப்படிப்புக்குள் இவன் மனம் செல்லவில்லை. சிங்க ரவுத்து இவனை அபகரித்துக் கொண்டார். அப்புறம் ஜவுளிக்கடைச் செட்டியார். தப்பிச் சென்றபோது சுந்தரிக்கு இவன் கணவனானான். பெண்ணிடத்து காமம் இவன் அனுபவித்தான். பெண் டாக்டருக்குள்ளிருந்த காமப்பிசாசு இவனை இழுத்துக் கொண்டது. தொழுநோய் அறிகுறிகள் கண்டு இவனுக்குப் பணம் கொடுத்து விரட்டினாள். ஸ்வீடன் கிறித்தவ மருத்துவமனையிலும் காம உணர்வு எழ வெளியேறினான். தஞ்சாவூரில் வாடகை வீடுகளில் தங்கினான். வெளியேறி காவிரிக் கரைக்கு வந்தான். பசுபதி இவனை குருவாக்கினான். தனக்குள் ஆன்மீகம் விழித்துக் கொண்டது. கோதைக்கு வாழ்வளித்தான். பெரியசாமிக்கு உதவினான். தன்னை மறந்த நிலைக்கு ஆட்பட்டான். இவன் பிராம்மணன் இல்லை. சுந்தரி ஒருசமயம் இவனுக்கு பூணூல் போட்டு அழகு பார்த்தாள். இவனிடம் பூணூல் ஒட்டிக்கொள்ளவில்லை. இவனை வளர்த்த வாத்தியார் பூணூலை கேலி செய்தவர்; மந்திரத்துக்கு அர்த்தம் சொல்லும்படி பிராமணர்களை விரட்டியவர். இவனுக்கு கோவிலோ கடவுளோ தேவையில்லை. இவன் மனம் மோனத்தில் நிறைவு கண்டது. கணேசன் காமம் கடந்து மோனம் கண்டவன். இவன் வாழ்ந்த சமூகம் இவனுக்குள் காமவெறி ஏற்றியது. ஆரத்துய்க்கும்பொழுதே அருவருப்புடன் வெளியேறினான்.

3. அடுத்து, கிட்டா. இவனும் தோப்பூரின் விளைச்சல்தான். தோப்பூர் பழமை படிந்த இந்திய கிராமம். பார்ப்பனர்களும் மற்றவர்களும் வாழும் கிராமம். பார்ப்பனர் தொடர்ந்து நகரங்களை நோக்கி வெளியேறுகின்றனர். மணியகாரர், கணக்குப்பிள்ளை, வஞ்சகம், சூது இவற்றோடு வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். பாலாம்பிகா ஏழைப்பெண். மகன் கிட்டா முரடன். இவனுக்கு படிப்பு ஏறவில்லை. பெண்கள் இவனை வெறுக்கின்றனர். பார்ப்பனனாக இருந்தபோதிலும் மோட்டார் கார் கற்றுக்கொள்ள விரும்புகிறான். தாயார் துன்புற்று கடன்வாங்கி இவனுக்கு அனுப்புகிறாள். கும்பகோணம் நீடாமங்கலம் என அலைகிறான். ராஜு அய்யரிடம் கார்த் தொழில் கற்கிறான். காரைக்குடி செட்டியாரிடம் டிரைவர். வெண்குஷ்டம் கண்ட செட்டியாரை ஆச்சி விரட்டுகிறாள். அவர் காசிக்குப் போய்ச் சேர்கிறார். திருச்சியில் இவன் மருந்துக் கடையில் வேலை செய்து அப்புறம் சீமாவின் உதவியோடு மருந்துக்கடை தொடங்குகிறான். டாக்சி வாங்கி வாடகைக்கு விடுகிறான். ரகசியமாய் மதுபானக் கடத்தலும்,

விற்பனையும். உடல் உறவுக்கு ஒருசமயம் பூமா. மனைவி அம்முவிடம் திருப்தியில்லை. மன்னியைப் புரட்டுகிறான். மாச்சியிடமும் காமம் தீர்க்கிறான். சின்னவன் மூலம் கடும் எதிர்ப்பு. அவன் இவனைத் தண்டிக்கிறான். இறுதிவரை ஆணவம் இவனைவிட்டு விலகவில்லை. இவன் தீர்ப்புக்கு மற்றவர் உடன்படுகின்றனர். இறுதியில் கணேசனைச் சந்திக்கிறான். கிட்டா முரடன். பார்ப்பன குணம் எதுவும் இவனிடமில்லை. உடல் தினவும் பணத்திமிரும் நிறைந்தவன். அண்ணன் சாமா, கல்யாண வீட்டிலும் எழவு வீடுகளிலும் சேர்த்த காசைத் தங்கக் காசுகளாக மாற்றி வைத்தான். அதற்கு இவன் வாரிசானான். இப்படியும் ஒரு பிராமணன். தஞ்சாவூர் பிராமணன் என்று நாம் நினைத்துக் கொள்கிறோம். பார்ப்பன சமூகத்தின் உயர்வைக் குறித்து மற்றவர் பேசும்பொழுது, பார்ப்பன சமூகத்தின் சீரழிவை கரிச்சான்குஞ்சு, கிட்டாமூலம் பேசுகிறார்.

4. இந்த நாவலின் துணைப் பாத்திரங்களென நிறையப் பேரைச் சொல்ல வேண்டும். ஆண்கள் :

(1) சிங்கரவுத்து – தமக்கை செங்கமல தாயார் – ராமு. இறுதிவரை இவருக்கு காமம் தீருவதில்லை. தாயாருக்கும் இது தெரிந்திருக்கலாம். கணேசனுக்குள் தன் பேரனை இவள் காண்கிறாள். இப்படி ஒரு தாய்மைப் பைத்தியம்.

(2) ஜவுளிக்கடை செட்டியார் – இவருக்கு மனைவி குழந்தை உண்டு. குழந்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவம் (பலர்க்குப் பிறந்த குழந்தைகள்)

(3) குடவாசல் வாத்தியார் – வருவாயில் பெரும்பகுதி புத்தகம் வாங்குகிறவர் – வேதம் பற்றி ஆய்ந்த அறிவுடையவர்.

(4) பசுபதி – போலீஸ்காரர். கணேசனை ஒரு குரு ஆக்கியவர். கடவுள், கோயில், வழிபாடு, நம்பிக்கை உடையவர். சீமா அய்யங்கார். இவர் மனைவி பூமா இறுதியில் சாமியார் கோலம் பூண்டவர்.

(5) மாத்தூர் அசடு சாவித்திரியின் கணவன்.

(6) சுமா – கிட்டாவின் அண்ணன். கல்யாண, கருமாதி வீடுகளில் காசு சேர்த்தவர்.

(7) சீனி அய்யங்கார் – மணியகாரர் – தந்திரம் தெரிந்தவர்.

(8) பெரியவன் – கிட்டாவின் மூத்தமகன் – முதலில் அசடாக இருந்து பிறகு அறிவு பெற்றவன்.

த.15.

(9) சின்னவன் – கிட்டாவின் இரண்டாவது மகன். புத்திசாலி தொழிலில் அக்கறை உடையவன்.

பெண்கள் :

(1) பாலம்மாள் – இறுதிவரை தன் மகன் கிட்டாவுக்காக கஷ்டப்படுகிறவள்.

(2) மாச்சி – சாவித்திரியின் முதல் மகள். கிட்டாவின் காமத்திற்கு இடம் தந்து பிறகு தெளிந்தவள்.

(3) ரங்கம் மாமி – சத்திரத்தில் உணவிடுபவர் – சிறந்த ஆளுமை உடையவர்.

(4) பத்மா – கணேசனை சிறுவயதில் நேசித்தவள். கணவன் காந்தியவாதி. பிரம்மச்சரியம் மேற்கொண்டபோது மனம் சிதைந்து இறந்தவள்.

(5) பூமா – கிட்டாவின் மூலம் உடல் தினவு தீர்ந்தவள். சமயம் நேர்ந்தபோது கிட்டாவிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவள்.

(6) அம்மு – கிட்டா முரடன் எனத் தெரிந்தும் மணம் புரிந்தவள். கணவனை விட்டு விலக நினைத்தும் விலகாதவள்.

(7) கோதை – மகன் வனமாலி – கணேசனை நேசித்தவள்; அவன் உறவில் மனநிறைவு கொண்டவள்.

(8) சுந்தரி

(9) பெண் டாக்டர்

இந்த நாவலிலுள்ள பெண்கள், காம உணர்வை இயல்பாக அனுபவிக்க விரும்புகிறவர்கள். கணவனிடம் கிடைக்கவில்லை என்றால் இன்னொருவனிடம் குற்ற உணர்வு இல்லாமல் அனுபவிப்பவர்கள். தேவைப்படும்பொழுது குடும்பத்திற்காக – குழந்தைக்காக காமம் தவிர்ப்பவர்கள். ரங்கம் மாமி ஆளுமை மிக்கவர். குறை சொல்ல முடியாதவர்.

1. நிலப்பிரபுத்துவம் சிதைந்து நாசமாகி அழுகி நாறிக் கொண்டிருக்கிறது. புதிய தொழில்கள் சமுதாயத்தைப் புதுப்பிப்பதா இல்லை. வாழ்க்கைச் சுகத்திற்காக களர் வருகிறது. கார் ரிப்பேர் செய்யச் சில கூலிகள் தேவை. திருவிழாக் காலங்களில் கார்வசதி தேவை. அலங்கார வாழ்வுக்கு ஜவுளிக்கடைகள் பிராமணக் குடும்பங்கள் சிதைகின்றன.

கதாகாலட்சேபம் செய்யும் சாஸ்திரி குடும்பச் சீரழிவு. பொருளறியாமல் மந்திரம் ஓதுவது, நாத்திகம் பேசும் பிராமண வாத்தியார். பழைமையைக் காப்பாற்றப் பெண்கள் முயற்சி. உடல் தினவை – தேவையை நிறைவுபடுத்த பிற ஆடவர் உறவு. வாழ்க்கையில் இலட்சியம், பணம், சுகம், வயிற்றுத் தேவை. மனிதர்கள் பசித்து – வெறிபிடித்து – பைத்தியமாகி, நோயால் அழுகி, ஞானம் தேடி நாயாய் அலைந்து, தமக்கு வாழ்க்கையை மற்றவர்களிடமிருந்து பறித்துத் திரிகிறார்கள். பசித்த மானிடம் கதைப் புலப்படுத்துகிறது. வெறிபிடித்த இந்த வாழ்க்கை நாசத்தை எழுத மனவலிமை வேண்டும். இந்த மனவலிமை கரிச்சான் குஞ்சு அவர்களுக்கு நிறைய இருக்கிறது. நாத்திகர் – முற்போக்காளர் என்று மதிப்பிடும் செய்யத்தக்க முறையில் வேதத்தின் உண்மை கண்டு திணைப்பலா கரிச்சான் குஞ்சு.

2. கணேசன் – கிட்டா வாழ்க்கை – இருதிசைகளில் செல்லும் இருவர் வாழ்க்கை நாவலில் இடம்பெறுகிறது. நாவல் என்ற முறையில் ஒருங்கிணைப்பு இருக்கிறதா? இருவர் வாழ்க்கைக்கிடையில் பொதுவான சில அம்சங்கள் இருந்தாலும் ஒருங்கிணைப்புக்கு இது போதாது. இருவரும் ஓரிடத்தில் பிரித்து இன்னோரிடத்தில் சேர்கிறார்கள். போதுமா? கூர்ந்து பார்த்தால், யார் வேண்டுமானாலும் – கணேசனாக அல்லது கிட்டாக மாறியிருக்கலாம். பழைமைப் பிடிப்பு அற்ற, திசை தெரியாத வாழ்க்கைச் சூழலில் இவர்கள் பயணம் எப்படியும் அமைத்திருக்க முடியும். இந்நாவலில் முரண் என்பது, சமூக வாழ்வுக்கும் தனிமனிதர்க்கும், பழைமைக்கும் புதுமைக்கும் இடையில் காணவேண்டும். அறிவும் அறியாமையும், செல்வமும் வறுமையும், போக்கிரித்தனமும் கோழைத்தனமும், ஆர்ப்பாட்டமும் அவலமும், சமுதாயத்தின் – சமுதாய நெருக்கடியின் இருவேறு விளைவுகள், போக்குகள், இவற்றைச் சித்தரிப்பதில், பசித்த மானிடம், ஒரு சமூக ஆவணம் ஆகிறது. இதற்குமேல் கரிச்சான் குஞ்சு பின்பார்வை. தலைத் தேர்ச்சி ஆகியவை. தமிழில் தலைசிறந்த நாவல்களில் நன்றாக இதனை ஆக்கியிருக்கிறது. இன்றும் மனித உணர்வுகளை நுணுகி நுணுகி எழுதியிருந்தால், நமக்கு ஒரு தாஸ்தாவெஸ்கி கிடைத்திருக்கலாம்.

லா.ச.ரா. :
அபிதா

1. அபிதாவின் கதை. கதையின் புகைமூட்டத்திலிருந்து பிரித்தறிய வேண்டிய கதை.

அம்பிக்கு வயது நாலு மாதம் – தாயின் கை வளையலைக் கழற்றிக்கொண்டு தந்தை ஓடிவிட்டான். தாயார் தோய்க்கத் துணி எடுத்துச் சென்றவள் திரும்பவில்லை. கழனிமேட்டில் துரவுக் கிணற்றில் விழுந்து செத்தாள். உடன்பிறந்தவர்களுக்குப் பாரமான நிலையில் தாயின் வாழ்க்கை இப்படி முடிந்தது. மாமா வீட்டில் அம்பி வளர்ந்தான். மாமா பெத்தப் பெரிய மனிதர். அவர் பேச்சே தனிவகை.

இடையில் கரடிமலைக் குருக்கள் வீட்டில் இவனுக்கு அவர் மகள் சகுந்தலையோடு சிநேகம் . சகுந்தலையோடு இவன் உறவு நீண்ட கதை. மாமா ஒருநாள் கேலி பேசினார். அம்பிக்குக் கொள்ளவில்லை. பாய்ந்து தாக்குகிறான். அவனே பயந்து ஊரைவிட்டு ஓடினான். தூரதேசத்தில் இவனை ஆதரித்தவர் ஒரு நல்ல மனிதர். மகள் சாவித்ரியைக் கட்டிக் கொடுத்து சொத்துக்கே வாரிசு ஆக்குகிறார். சாவித்ரிக்கும் – அம்பிக்கும் குழந்தை இல்லை. இருவர்க்கிடையில் தீராத வழக்குகள்.

ஆண்டுகள் பல கழிய மனைவியை விட்டுவிலகி கரடிமலைக்குத் திரும்பி 'ரயிலில்' வருகிறான். குருக்கள் வீட்டில் நுழைகிறான் – மாமி வரவேற்கிறாள். அபிதா (சகுந்தலையின் மகள்) முன் நிற்கிறாள். நொண்டிக் குருக்கள் இறந்துவிட்டார். அவர் மருமகன்தான் அபிதாவின் தந்தை. இவர் மௌன விரதம் பூண்டே இருப்பார். நொண்டிக்குருக்கள் சகுந்தலையைக் கட்டிக் கொடுத்தார். சகுந்தலையின் மகள்தான் அபிதா. சகுந்தலை இறந்துவிட மருமகன் இன்னொருத்தியை மணந்து கொண்டார். சகுந்தலை திருவேட நாதரைக் கட்டிக்கொண்டே உயிர்விட்டாள். அவள் உயிர்விட்ட காரணம் நொண்டிக் குருக்களுக்குத் தெரியும். இனிச் செய்வதற்கு ஏதும் இல்லை.

அம்பி அபிதாவோடு பழகுகிறான். இடையில் மாமா வீட்டிற்கும் சென்று வருகிறான். கரடி மலை அபூர்வமான காட்சி வழங்குகிறது. நாட்கள் கழிகின்றன. அபிதா அம்பிக்குள் உறைகிறாள். சித்தியின் தம்பி – சினிமாக் கொட்டகைக்காரனோடு அபிதா, ஸ்கூட்டரில் போகிறாள். விபத்தில் அபிதா உயிர் துறக்கிறாள். சகுந்தலையாகவே அபிதாவை அம்பி

நினைத்து நினைத்து ஏங்குகிறான். இது சுமாரான கதை. இந்தக் கதையை வைத்துக் கொண்டு லா.ச.ரா. செய்யும் சித்துவேலை – ரஸவாதம் – அளவற்றவை. அவர் பயணம் விரிவானது.

2. அம்பிக்கும் மனைவி சாவித்ரிக்கும் உறவு சரியில்லை. குழந்தை இல்லாதது ஒரு முக்கியக் காரணம். அனாதையாக வந்தவனுக்கு அதிர்ஷ்டம் வந்ததென்று பலருடைய கேலிப் பேச்சு. மனைவியும் இதேபோல பேசுகிறார். சகுந்தலையைப் பற்றி அம்பியின் நினைவுகளுக்கு இது முக்கியமான சூழல். சகுந்தலையும் இவனும் இளம் வயதில் சமத்துவ நிலையில் பழகியவர்கள். இது நடைபெற்றது கரடிமலையில். இந்தக் கரடிமலையில்தான் பல்லாண்டுகளுக்குப் பிறகு அம்பியின் நினைவுகள் மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன.

கரடிமலை முன்னைப்போன்று இல்லை. கரடிமலை இவனுக்குள் ஒரு புதிய தரிசனமாகிறது (பக். 56 – 68). பிரமாண்டமான உடல்திரட்சியில் ஒரு மாது பூமியே படுக்கையாகப் படுத்திருப்பதுபோலக் கரடிமலை. இவ்வளவு மகத்தான பெண்ணிடம் கலவி கொண்ட வீரப்புருஷன் யார்?

கரடிமலை – மந்தை மேயும் குன்று
கரடிமலை – கறந்த பால் வழியும் குவளை
கரடிமலை – மலர்க்குடலை

தயிரைக் கடையும் மத்து. அம்பிக்கு நிஜம் மறைகிறது! கரடிமலை – தாய், நாங்கள் புதல்வர்கள். உன் மனம் கல். எங்கள் அனுபவம் எங்கள் பேறு. இன்றுதான் கரடிமலையை ஏறிய புண்ணியம் கிடைக்கிறது. சிக்குப் பிரிகிறது. மேல் புரியவில்லை – இது ஓர் அசாதாரணமான தரிசனம். இவனது காம வயப்பட்ட மனதினுள்ளே ஒரு தாய்த் தெய்வம் இருப்பது உண்மை.

3. சகுந்தலையின் சாயலில் அபிதாவைக் கண்டு தனக்குள் திகைப்பும், மயக்கமும் அடைகிறான் அம்பி. அபிதா ஒரு விபத்தில் இறக்கிறாள். அம்பி தவியாய்த் தவிக்கிறான். இவன் மனம் இவனுக்குள் புரள்கிறது. இவனுக்குள் எத்தனையோ பிரம்மைகள், கற்பனைகள், தடுமாற்றங்கள். கன்னிக் குளத்தில கல் இவனோடு பேசுகிறது. அபிதாம்பிகை கோயிலில் அபிதாவின் முன்னிலையில் நிற்கிறாள். எல்லாமே இவன் தனக்குள் தானே தோற்றுவித்த மாயைகள், உணர்வுகள், உறவுகள். வாழ்க்கையொரு பேறு. பரவசம் ஒரு பேறு. தன் பிரம்மைகளிலிருந்து தான் தெளிவு பெறவேண்டும். தெளிவு என்பதுகூட ஒரு நிழலாக இருக்கலாம். நிழல் என்ற நிஜமும் தேவைப்படுகிறது. இறுதியில் எல்லாவற்றையும் களைந்து கொள்ள

வேண்டும். இப்படி ஒரு பேரனுபவம் – பேருணர்வு அம்பிக்கு வாய்க்கிறது. அம்பி தன்னைப் பெறுகிறான். இனி எவரோடும் சமதளத்தில்தான் உறவாட முடியும். இனித் தன் மனைவியை, அவள் நேர்முகத்தில் இவன் சந்திக்க முடியும்.

4. அபிதா தரும் தரிசனம் அற்புதமானது. தரிசனத்திற்கு இரக்கமில்லை. எந்தத் தரிசனமும் அஞ்சத்தக்கதே. என்னை எனக்கில்லாமல் தனக்காக்கிக் கொண்ட தரிசனி 'அபிதா'. அபிதா என்ற கிணற்றில் விழும் குடம் யார்? நானா? சக்கு (சகுந்தலை) – இருண்ட கேள்வி. அபிதா – வெளிச்சம் பதில்.

அபிதாவாய்த் திரும்பிவந்து சகுந்தலை நீ என்னை என்ன செய்யப் போகிறாய்? மலை மேல் ஏறி ஏன் சென்றாய். ஆண்டவனே என்னை ஏன் கைவிட்டாய் என்று கேட்கிறான் அம்பி. அபிதா – கடிவாளம் விழாத சண்டி குதிரை. சகுந்தலை நீ என்னைச் சிலுவையில் ஏற்றிவிட்டாய். அபிதாம்பிகை கோயிலில் அம்பி நிற்கிறான். (பக். 85)

அபிதா தரும் தரிசனம் (தெய்வம்)

அம்பா (தெய்வம்) உன் முகம் அபிதாவா!

என் பார்வையில் – நீ உலகின் ஆதிமகள். நீ நீராட்டுவித்த இனங்களில் நான் ஆதி மகன் –

இதயம் மடிப்புவிரித்த தரிசனம் – சகுந்தலை!

அபிதா!

திரைவிலக்கிக் காட்டிய இமவான் புத்ரி.

அம்பி தன் பிரமையிலிருந்து தன்னை இவ்வாறு மீட்டுக் கொள்கிறான். இந்தச் சமயம், நீ கூட எனக்கு அவசியம்தானா? நீ எனக்குள் ஐக்யம் – என்னிலிருந்து உன்னை தனியாய் பிரித்துப் பார்க்க வழியில்லை. ஆத்மாவின் பரவசம், சுகந்தம். சுயத்தைத் தாண்டிக் கேள்வியும் இல்லை, பதிலும் இல்லை. உயிர்கள்தான் என் சாபம்! விமோசனம் – கரடிமலைபோல. நீ தான் எப்போதும் என் மீது விழும் நிழல்.

5. கன்னிக் குளத்தில் கூழாங்கல் (கனவில்) பேசுகிறது : உங்களுக்குச் சாகவும் தைரியமில்லை, பிறக்கவும் வெட்கமில்லை. கை நிறையக் கொண்டுவந்ததை, விரலிடுக்கில் வழிந்து ஒடவிட்டான். உள்ளங்கையை கவ்விக் கொண்டு, கொண்டு வந்ததையெல்லாம் உண்டு கொண்டேன் என்று நீங்கள் அடிக்கும் தம்பட்டத்தில் யாரை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் – எங்களுக்கு அறியத் தெரியாது. அறிஞ்சு என்ன ஆவனும் அறிய அறிய துன்பம் எது குறையுது. அதிகம்தான் ஆகுது.

காத்திருப்பதும், காலில் கிடப்பதும்தான் எங்கள் செயல். எங்கள் செயலைப் புரிந்துகொள்ளும் முன்னால் உன் சிக்கலிலிருந்து விடுபடு. இடம், பொருள், ஏவல், காலம் என்பனவற்றில் நீ மாட்டிக் கொண்டிருக்கிறாய். "என் பிறவியே என் பாக்கியம். பிறவிக்குப் பிறவி பாக்யத்தின் பெருக்கமான என் மறுமலர்ச்சி". பிறவியின் ஒவ்வொரு தருணத்தையும் அம்பி தனக்குள் இவ்வாறு உணர்கிறான். உயிரின் கவிதா இரசனையாய் கண்டு கோத்த மாலையை ஆதி மகளின் பாதத்தில் காணிக்கையாய்ச் சேர்ப்பேனா? அல்லது அவள் கழுத்தில் மாலையாகப் பூட்டுவேனா? (பக். 129) இந்தக் குங்கிலியம் எனக்குள் எப்படி வந்தது? இதுதான் ஆத்மாவின் சுகந்தமா? (பக். 104) வாழ்க்கையின் ஏடுகளைத் திரும்பப் படிக்கையில், அத்தனையும் குற்றப் பத்திரிகையாகவே படுகின்றன. (பக். 95)

உண்மை, தெய்வம், விடுத்லை என்கிற பெயரில் ஏதோ மாயா சத்தியத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம்புவதும் வாழ்வதும் என்னவோ வாசனைகள், பிம்பங்கள், நினைவுகள், உறவுகள். நிழல்களில் பரிதவித்து நிழல்களில் களித்து நிழல்களில் தெளிந்த நிழல்தான் மனம், உணர்வு, புத்தி. தரிசனம், உண்மை, தெய்வம், முக்தி ... அந்தந்த தெளிந்த நிலையும் ஒரு தெளிந்த நிழலன்றி வேறில்லை. (பக் 57) நாம் எல்லோரும் உள்ளங்களின் நிழல்கள் – (55)

6. கலை தன் இயல்பான பயணத்தில் தத்துவத் தேடலாகிறது. அத்தேடலின்போது, அதுவா? இதுவா என்று மனம் தடுமாறுகிறது. அதிலும் உண்மையிருக்கிறது. உண்மையிருக்கிறது என்பதால் அதிலும் தடுமாற்றம். ஒரு நீண்ட பார்வையில் பார்க்கும்போது, வாழ்க்கையின் பெரும்பகுதி பிரமையாகிறது. பிரம்மையே வாழ்க்கை என்ற தோற்றம் தருகிறது. காமம் நம்மைச் சுடுகிறது. உள்ளே போகும் தேவி தன்னைத் தடுத்தாட் கொள்கிறாள். காமமும் தேவி தந்தது – தேவியினுடையது என்ற முறையில். தேவி என்பது – ஒரு வகையில் தன்னின் விகசிப்பு, விசுவரூபம், பிரபஞ்சப் பரிசம். பகைப்புலத்தில் வைத்துத் தன்னைப் பற்றிப் பார்க்கும் பார்வை.

இந்த ஆத்ம சுகந்தம் – தனக்குள்ளே இயல்பானது. 'கரடிமலை' இதைக் கிளப்பி விடுகிறது. கலை இவனுக்குள் கிளப்பி விடுகிறது. சங்காரமூர்த்தியை – வேடனை – இவன் எப்படி கேள்வி கேட்கலாம். கன்னிக்குளத்தில் இவன் எப்படிக் கலக்கலாம்? காத்திருப்பது இவன் முறை. கலக்கி விடக்கூடாது. கலக்கினால் பார்வை கிட்டாது. தத்துவத் தேடலில்

விகசிப்பைச் சாதித்த நிலையில் கடவுள் இவனுக்குத் தேவையில்லை – சகுந்தலாவும் தேவையில்லை. எல்லாம் இவனுக்குள் அடக்கம். பிரமைகள் உதிர்கின்றன. இறுதியில் இன்னும் பிரமைகள். எல்லாமே நிழல் தெளிவுகள். விசுவரூபத் தெளிவு எத்தகையது! இதுவும் நிழல் தெளிவாகவே கூட இருந்துவிடக் கூடும்! அப்புறம்? கலை இவ்வளவு தூரம் மனிதர்களைத் தள்ளிவிட்டால் . . . போதும். மேலும் நம்மை நாமே தள்ளிக் கொள்ள முடியுமானால் . . .

7. உண்மைத் தேட்டத்திற்குக் கலை வகையிலான இத்தகைய நெகிழ்ச்சி தேவை. இந்த நெகிழ்வின் போதுதான் தன் மனம் தன்னோடு பேசுகிறது. தன்னோடு சகுந்தலை பேசுவாள். கூழாங்கல் போல் கன்னிக்குளம் உற்சாகமாய் உறவாடும், கரடிமலை புதிய தோற்றம் கொள்ளும். வேடன் வருவான். யதார்த்தம் இப்படி இல்லையே என்ற அழுகுணிப் பார்வை – நக்கீரப் பார்வை – இங்கு பயன்படாது. சுதந்திரமான வெளியில் உலகியல் கட்டுக்களிலிருந்து விடுதலை பெற்றுப் புதிய உருவங்களை நிறுவிப் பார்த்துக் கொள்ள வேண்டும். புதியது, அழகியது, உன்னதமானது – இப்படித்தான் மனவெளியில் உற்பத்தியாகி உலகியலுக்குள் இறங்கி வருகிறது.

யதார்த்தமும் கற்பனையும் மயங்கும் மாலை மயக்கத்தில் தான் இந்தப் புதிய உறவுகள் முதன்முறையாக உற்பத்தியாகின்றன. இந்த மாலை மயக்கத்திலிருந்து உலகியலுக்கான உன்னத உறவுகளைக் கொண்டு வருவது. படைப்பாளியின் கலை. இந்த மாலை மயக்கத்தில் கரைந்து விடுவதற்கான – சிதைந்து விடுவதற்கான – விரலிடுக்கில் நழுவவிட்டு விடுவதற்கான – வெறும் கவிதையளவிலேயே, மனமயக்க அளவிலேயே உலவித் திரிவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

இதிலிருந்து இறங்கி உலகியலுக்குள் மீண்டு வருபவனே, இதிலிருந்து கொண்டு வருபவனே சிறந்த படைப்பாளி. இந்த ஆற்றல், லா.ச.ரா.வுக்குக் குறைவுதான். ஆனால் இந்த ஆற்றலைத் தூண்டி விடுவதில் அவர் அற்புதமான கலைஞர். அதாவது மனமயக்கத்தில் கரைந்து விடுவது லா.ச.ரா.விடம் அதிகம். $E=MC^2$ என்பது மீண்டும் மீண்டும் உண்மைதான். லா.ச.ரா. மாதிரிப் பைத்தியங்கள்தான் உலகிற்கு முதற்பார்வையை வழங்குபவர்கள்.

சுந்தர ராமசாமி :
ஒரு புளியமரத்தின் கதை

1. ஒரு நாவல் என்ற முறையில் இதன் கட்டமைப்பும் பன்முகப் பரிமாணங்களும் வியக்கத்தக்க முறையில் அமைந்துள்ளன. '59–ல் தொடங்கி எழுதி முடிக்கப்பெறாத இந்த நாவல் '66–ல் முடிக்கப் பெற்றிருக்கிறது. ஆசிரியரின் இடைக்காலத்து அனுபவங்களும் இதில் நிறைய சேர்ந்திருக்க வேண்டும். 'நான் லீனியர்' – எழுத்து குறித்து இன்று விரிவாகப் பேசப்படும் சூழலில், இந்த நாவலின் இத்தகுதன்மை சிறப்பாகக் கவனிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. இந்த நாவல் பல கதைகளை – பலரின் கதைகளை குறுக்கும் நெடுக்குமாக வெட்டி, அங்கங்கே சிதைத்துப் போட்டிருக்கிறது. எனினும் நாவலின் அடியாழத்தில் நீரோட்டமாய் ஓடும் ஒரு அலாதியான தனித்தன்மை, இந்த நாவலை ஆழ்ந்து படிப்பவரைப் பாதிக்காமல் இராது. இந்த அம்சம்தான் நாவலை ஒருங்கிணைக்கிறது என்றும் சொல்லலாம். இந்த நாவலின் மேல்மட்டத்தில் பரவலாக கிளைபரப்பியிருக்கும் நகையாடல் என்ற போக்குக்கு நேரே அடிவேராக மேற்குறிப்பிட்ட அம்சம் பதிந்திருக்கிறது. இதைத்தான் இந்தக் குறிப்புக்களில் நான் விளக்க முற்படுகிறேன்.

3. புளியமரத்தின் தொடக்க காலக் கதையை தனக்கே உரிய வேடிக்கையோடும் விளையாட்டோடும் சொல்பவர் தாமோதரன் ஆசான். புளியமரம் வெட்டப்படாமல் ஒருசமயம் வினயமாகப் பேசி புளியமரத்தைக் காப்பாற்றினார். புளியமரத்தை ஏன் வெட்டக்கூடாது? என்று யாராவது கேட்டால் இவர் பாணியில் சொல்லக்கூடிய பதில்: எதற்கடா புளியமரத்தை வெட்ட வேண்டும்? புளிய மரத்தை வெட்டலாமென்றால் உன்னை ஏன் வெட்டக்கூடாது? இப்படிக் கேட்கக் கூடியவர் ஆசான். தூங்குமூஞ்சி மரத்தோப்பை அழித்து தஞ்சாவூர் எஞ்சினியரை வைத்து முனிசிபாலிட்டி அந்த இடத்தில் ஒரு பூங்காவை உருவாக்குகிறது. இப்பொழுது தாமோதரன் ஆசான் உயிரோடு இல்லை. ஆனால் வரலாற்றில் பதிந்திருக்கும் ஆசானின் பார்வையை தனக்குள் தாங்கிய வயோதிக நாடார், ஒரு இளைஞனை நோக்கி சில கேள்விகள் கேட்கிறார். மரத்தை வெட்டி செடி வளர்க்க வேண்டுமா? செடி மரமாக வளராதா? நிழல் தருவதற்கு மரம் வேண்டும் என்றால் இருக்கும் மரத்தை ஏன் வெட்டவேண்டும்? செடி மட்டும்தான் அழகாக இருக்குமா? மரத்திற்கு அழகு இல்லையா? இந்தக் கேள்விகள் வழியே நாம் என்ன காண்கிறோம்? கதையில் வரும் புளியமரம் இந்த உண்மைக்குத்தான் சாட்சியாக நிற்கிறது. மனிதன் யாரையும் எதிர்பார்த்து இது நிற்கவில்லை.

வானில் தன் கைகளை நீட்டி இது துழாவுகிறது. இயற்கையின் அங்கமாக இது வாழ்கிறது. தன்னை மனிதர்களுக்கும் பறவைகளுக்கும் கொடுக்கிறது. இதற்கென இந்த மரம் எதையும் எதிர்பார்க்கவில்லை. மனிதனைப் பொறுத்தவரை தன் ஆதிக்கத்தில் எல்லாவற்றையும் அகப்படுத்திக் கொள்ள முனைகிறான். மனிதனின் ஆதிக்கத்தைக்கூட இந்த மரம் எதிர்க்கவில்லை.

புளியமரத்தைப் பற்றி நாவலில் இரண்டு மூன்று இடங்களில் வரும் வர்ணனைகளை ஆழ்ந்து பார்த்தால், நமக்குப் புலப்படுவதென்ன? புளியமரம் – அதனை ஒரு பகுதியாகக் கொண்ட இயற்கை – இயற்கையின் விசாலமான தன்மை எல்லாவற்றையும் அணைத்துக் கொண்டு எல்லோரோடும் உறவாடும் இதன் குணம் – தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாத இதன் குணம். இதற்கென்ன பொருள்? இங்கு விவரிக்கப்படும் இயற்கை என்பது மனிதனின் தூய உணர்வு. இயற்கைக்குள் மனிதனின் உணர்வு ஊடுருவிச் செல்லும்பொழுது இந்தத் தூய நிலையே, மனிதத் தன்னுணர்வு பெறுகிறது. வக்கிரங்களுக்கு இடம் கொடாத இந்தத் தூய தன்னுணர்வு என்ற தளத்திலிருந்து மனிதன் இப்பொழுது தன்னையும் தன்னைச் சூழ உள்ளவற்றையும் பார்க்கிறான், மதிக்கிறான்.

தாமோதரன் ஆசான் எத்தகையவர்? இயற்கையின் வழி மனிதன் பெறும் தூய தன்னுணர்வுக்கும் தாமோதரன் ஆசானுக்கும் ஏதாவது வேறுபாடு தெரிகிறதா? காற்று மாதிரி, வானம் மாதிரி, நீர் மாதிரி தாமோதரன் ஆசான். பறவை மாதிரி, ஆடுமாடுகள் மாதிரி இவர் இயங்குபவர். இவருக்குள் வரலாறு கதைகளாய் கொப்புளிக்கிறது. இவர் எல்லாவற்றையும் பார்த்து அறிந்தவர். தெய்வம் இல்லை என்றவர். மனைவி என தன் உரிமையை எவர் மீதும் நிலைநாட்டாதவர். ஒரு வைப்பாட்டியோடு வாழ்வதன் மூலம் இவர் கறைப்பட்டாரா? கடைசி காலத்தில் கதிர்காமத்தில் இவர் ரசவாதம் செய்தார் என்பது உண்மையா? என்ன தேவைக்காக இதைச் செய்தார்? தான் உண்ண வேண்டாமா? வாழவேண்டாமா? இதற்காக ஏதாவது ஒன்றை அவர் செய்திருப்பாரானால் இந்தக் குற்றத்தை யார்மீது காண்பது? மனிதன் உண்ண வேண்டும், உயிர்வாழ வேண்டும். இவை எல்லாமே இந்த சமூகத்தில் நேர்மையாய், நேரிடையாய் கிடைப்பதில்லை. சுற்றுவழிகளும் வளைவு நெளிவுகளும் ஏற்பட்டு விட்டன. மனிதன் வளைந்தும் நெளிந்தும் தான் உயிர்வாழ முடியும். இது ஒரு வேடிக்கை நாடகம் அல்லது விளையாட்டு. விளையாட்டாய்த்தான் இந்த உலகத்தைக் காணவேண்டும். மனிதனின் இத்தகைய விளையாட்டுக்கு புளியமரம் உட்பட எல்லாமே ஆட்படவேண்டும்.

4. இத்தகைய ஒரு பார்வையை இந்த நாவலுக்குள்ளிருந்து நாம்

உருவாக்கிக் கொண்டு இந்த நாவலின் மனிதர்களை மீண்டும் நாம் விரிவாகப் பார்த்துக் கொள்ளலாம். புளியமரத்தில் பழங்கள் நிறைய பழுத்திருக்கின்றன. கருக்கொண்ட ஒருத்திக்கு புளியம்பழம் இனிக்கிறது. கணவன் கல்லெறிந்து இன்னும் பழங்களை அடித்துத் தருகிறார். இப்படி ஒரு தோட்டி கல்லெறிய இதைப்பார்த்து மற்றவர்கள் எறிய, மரத்தில் பழங்கள் இல்லை என்றாகிறது. இதில் தவறு எனக் காணமுடியுமா? எறிந்த கல், காதரின் ஜவுளிக் கடையின் விளம்பர மின் குழாய்களை உடைக்கிறது. அப்புறம் காதர் தாமுவைச் சந்தேகிக்கிறான். ஏற்கனவே அவர்களுக்குள் சில மனக்கசப்புகள். இப்படி ஒன்றையடுத்து இன்னொன்று என நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. திருவிதாங்கூர் நேசன் பத்திரிகையின் நிருபர் தன் தொழிலைச் செய்கிறான். தேர்தலில் தாமுவை எதிர்த்து காதர் போட்டியிடுகிறான். புளிய மரத்தை அழிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் சேர்ந்து வலுப்பெறுகிறது. புளியமரத்தை வெட்டலாம் என்று நகரசபை தீர்மானிக்கிறது. புளியமரம் திடீரென தெய்வமாகிறது. இனி புளிய மரத்தை வெட்டமுடியாது. வெட்டுவதற்கு காதர் அலி அய்யப்பனை ஏவுகிறான். அவன் பிணமாகிறான். இடையில் வந்த சுடலைத் தாத்தா தேர்தலில் வெற்றி பெறுகிறார். தாமுவும் காதரும் சிறைக்குச் செல்கிறார்கள். நகரசபைத் தொழில் தாத்தாவுக்கு கட்டுப்படியாகாது. மீண்டும் சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு பள்ளிக்குமுன் கடலை வியாபாரத்தில் தாத்தா ஈடுபடுகிறார். குழந்தைகளுக்கு இது கொண்டாட்டம். புளியமரம் பட்டுப்போகிறது. ஆனாலும் இன்னும் விழாமல் கைகளை நீட்டிக் காத்திருக்கிறது.

இப்படி ஒன்றைக் காரணமென அடுத்து வருவதைக் காரியமென உறுதிப்படுத்த இயலர்தபடி செயல்கள் நடைபெறுகின்றன. உயிரை வைத்து மனிதன் விளையாடுகிறான். களிப்புமிக்க தொடர்ச்சியான விளையாட்டு. வாழ்க்கை என்னும் இந்த விரிந்த விளையாட்டிற்கடியில் இயங்கும் ஒரு ஒற்றைத் தத்துவம் தேடி மனிதன் சலிப்படையத்தான் வேண்டுமா? அந்த ஒற்றைத் தத்துவம் கூட மனிதன் தானாக, தனக்கு முக்கியத்துவம் தர, உருப்படுத்திக் கொண்ட ஒரு தத்துவமாக ஏன் இருக்கக்கூடாது? இந்த நாவலின் குரல் இப்படித்தான் சொல்கிறது.

5. தாமு விடுதலைப் போராட்ட வீரன். முண்டாசை அவிழ்க்க முடியாது என்று சொல்லி போலிசிடம் அடிபட்டான். விடுதலைதான் இவனது முழுமையான நோக்கமா? பலர்முன் தன்னை ஒரு வீரன் என முன்னிலைப்படுத்திக் கொள்வது இவன் நோக்கமாக இல்லையா? இவன் எதிர்பார்த்ததற்கு மாறாக திடீரென விடுதலை வந்துவிட்டது. இப்பொழுது மேடையில் உரத்த குரலில் இவன் கத்தமுடியாது. ஆனால் இதற்கும் ஒரு சந்தர்ப்பத்தை இவன் ஏற்படுத்திக் கொண்டான். திடீரென சோஷலிஸ்டு

ஆனான். நேருவைக் குற்றம் சாட்டினான். அப்புறம் வெற்றிலை பாக்கு கடை வியாபாரிகளுக்கு தலைவன் ஆனான். காதரின் கள்ள வியாபாரத்தை அம்பலப்படுத்தினான். இப்படி தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்காகவே இவன் பலவற்றையும் செய்தான். தேர்தலில் தோற்று சிறைக்கும் சென்று திரும்பிய பிறகு இவன் சொந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தான். இப்பொழுது இவன் நமக்கு முன்னிலையில் இல்லை.

காதரின் வாழ்க்கை எப்படிப்பட்டது? கோபாலய்யரை ஒரு சமயம் கவிழ்த்தான். ஜனாப் அப்துல் அசீஸ் அவர்களிடம் மாமா முறை கொண்டாடி முதலாளியானான். பதுக்கல் வியாபாரம் செய்தபோது, காட்டிக் கொடுக்கப்பட்டான். தாமுவோடு தீராத பகையில் இறங்கினான். இறுதிவரை இவனுக்குள் இருந்த பொறாமையும் பகையும் இவனை விட்டுவிடவில்லை. தனக்குள் புகுந்த பிசாசு இவனைத் துரத்தி அலைக்கழித்து அழிக்கிறது. முதற்கோணல், இவனுக்குள் முழுமையான கோணலாக மாறியது.

இன்னும் நாவலில் எத்தனையோ மனிதர்கள்: முனிசிபல் சிப்பந்தி வள்ளிநாயகம்பிள்ளை. வழக்கறிஞர் ஜனார்த்தனன் நகரசபைத் தலைவர் எம்.சி. ஜோசப். கம்பராமாயணம் அனந்தன்பிள்ளை. ஆசிரமம் கணபதி அய்யர். காதரின் கணக்குப்பிள்ளை சோணாசலம். மகாதானபுரம் கோபாலய்யர் இவர்கள், எல்லோருக்குள்ளும் இயங்குபவர்கள். வேடிக்கை மனிதர்கள், இவர்கள். தம்மை வேடிக்கை மனிதர் ஆக்கிக் கொண்டவர்கள். இவர்களுக்குள் இருப்பது வெற்றிடம். உள்ளீடு அற்ற மனிதர்கள் இவர்கள். ஏதோ ஒன்றுக்காக உக்கிரமாகச் செயல்படுவதைப்போல இவர்கள் காட்டிக்கொள்கிறார்கள். வேறு எதை வைத்து இவர்கள் தம்மை இயக்கிக் கொள்ள முடியும்? தூய தன்னுணர்வு என்ற தளத்திலிருந்து பார்க்கும் பொழுது இவர்களிடம் குற்றம் இல்லை. தம்மை வைத்து விளையாடுவது தான் இவர்களுக்குத் தெரிந்த வாழ்க்கை முறை. இவர்களுக்கு முன்பு தாமோதரன் ஆசானைக் கொண்டு வந்து நிறுத்தினால், இவர்களைப் பார்த்து, வெடிப்புச் சிரிப்பைச் சிரித்துவிட்டு அப்புறம் இவர்களைத் தனக்கு முன் அமர்த்தி இவர்களின் கதைகளையே இவர்களுக்குச் சொல்லி அவர்களையும் சிரிக்கச் செய்வார்.

II

தாமோதர ஆசான் வழியாக இயற்கைக்குள் ஆழ்ந்து சென்று மனிதனின் தூய உணர்வு ஆதாரத்திலிருந்து இந்த நாவலை முழுமையாகப் பார்ப்பதென்பது ஒரு பார்வை. இந்தப் பார்வையின் வழியே தாமு, அப்துல் காதர், இவர்களுக்கிடையில் பகைமை, இதனோடு சம்பந்தப்பட்ட மற்றவர்கள், இறுதியாக கூலி அய்யப்பன் ஆகியவர்கள் உள்ளீடற்றவர்களாக – வாழ்வின்

அர்த்தங்கள் அற்றவர்களாக நமக்குத் தெரிகிறார்கள். நாவலின் நகையாடல் என்ற பலம் இதன்மூலம் நமக்கு நெருக்கமாகிறது. தூய மன உணர்வு சொல்லும் கதை இது.

உலகியல் உண்மை என்பதாக இதைக் கொள்ள முடியுமா? தூய மன உணர்வின் வழியே நம் உணர்வில் தட்டுப்படும் மனிதர்கள் உருவமற்ற ஆவிகள். இவர்கள் தமக்கான வாழ்க்கையை வாழவில்லை. தூய மன உணர்வு என்ற தளத்திலிருந்து இவர்களை உலகியல் தளத்திற்கு நாம் மாற்றிப் பார்க்க வேண்டும். தூய மன உணர்வின் தளமும் உலகியல் தளமும் எவ்வகையில் ஒன்றை மற்றது நெருங்கியுள்ளன அல்லது விலகியுள்ளன என்பதை பிறகுதான் மதிப்பிட முடியும்.

புளியமரத்தின் காய்களை தோட்டிகள் அடிக்க, காதரின் விளம்பரப் பலகை மின்குழாய்கள் நொறுங்கின. தாமுவுக்கும், காதருக்கும் பகைமை முற்றியது. காதரின் விளம்பரப் பலகையை தாமு நொறுக்கவில்லை. எனினும், வணிகர்கள் என்ற முறையில் இவர்களுக்கிடையில் ஏற்கனவே இருந்த பகைமை இந்தச் சூழலில் செயல்படுகிறது. பகைமை இல்லை என்றால் காதர் தாமுவைச் சந்தேகித்திருக்க மாட்டார். வணிகர்களுக்கிடையில் போட்டியும், ஒருவரை மற்றவர் அழிக்கும் முயற்சியும் உலகியலின் பருண்மையான உண்மைகள். இந்த பகைமை இறுதி வரை செயல்படுகிறது. இருவரும் ஒருவரை மற்றவர் அடித்து இறுதியாக களத்தை விட்டு விலகி ஓய்ந்துவிடுகின்றனர். செல்வத் தேட்டமும் பகைமையும் இவர்களை மனிதர்களாக வாழ விடவில்லை.

இசக்கி ஒரு பத்திரிகை நிருபர். இவன் எழுத்துக்கள் சுற்றுச்சூழலில் தீ மூட்ட வேண்டும். இவன் காதருக்குள் நுழைந்து அவனது பகை உணர்விற்கு மேலும் தீ மூட்டுகிறான். கடைசியில் கூலி அய்யப்பன் தேவையில்லாமல் அகப்பட்டுச் சாகிறான். கூலி அய்யப்பனின் சாவு யாரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை. யார் மனத்திலும் இரக்கத்தைத் தோற்றுவிக்கவில்லை. வீணாய் அவன் செத்துப் போனான்.

இந்த நாவலில் வரும் வகைவகையான மனிதர்கள் உலகியலின் ஏதாவது ஒரு அம்சம் அல்லது சில அம்சங்களின் செறிவான உருவங்கள். கோபாலய்யர் கடையில் அப்துல் காதர் வேலை செய்கிறான். கோபாலய்யருக்கு நிர்வாகம் தெரியாது. இந்நிலையில் காதரை ஒருவன் முதலாளி என்று சொல்லிவிட்டான். கோபாலய்யரின் தன்மானம் கிளர்ந்தெழுகிறது. கொள்முதலையும் வியாபாரத்தையும் தானே முன்னின்று செய்து, தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறார். அப்துல் காதர் தந்திரம் தெரிந்தவன். ஜனாப் அப்துல் அஸீஸின் மனதை

இளக்கி இறுதியாக அவர் உடைமைக்கு இவன் வாரிசாகிறான். இவையெல்லாமே கடைத்தெருக் கதைகள். தந்திரம் தெரிந்தவன் மற்றவனைச் சாய்த்து முன்னேறுகிறான்.

நகரசபைச் சிப்பந்தி வள்ளிநாயகம் பிள்ளை தான் யார் என்பதை செயல்படுத்திக்காட்ட முனைகிறார். நகர சபைக்குள்ளும் ஊருக்குள்ளும் தன் செல்வாக்கைக் காட்ட விரும்புகிறார். புளியமரத்தில் காய்கள் இல்லை என்று எழுதி பிரச்சினையைக் கைகழுவி இருக்கலாம். அப்புறம் வரிசையாக நிகழ்ச்சிகள். தேர்தலில் எம்.சி.ஜோசப் வெற்றிபெற வேண்டும். தாமுவைச் சாய்க்க காதர் கிளப்பிவிடப்படுகிறார். இடையில் தாமு கடலைத் தாத்தாவைக் கிளப்பிவிடுகிறான். எல்லாமே தேர்தல் தந்திரங்கள். அதிகாரத்தை யார் கைப்பற்றுவது என்பதில் வெறியாட்டம். இவை மீண்டும் உலகியல் உண்மைகள் / எதார்த்த வாழ்வின் உண்மைகள். இன்னும் பலவற்றை நாவலில் சொல்லலாம் எனினும், நம் விவாதத்திற்கு இவைபோதும்.

அமைதியாக இருந்த புளியங்குளப்பகுதி ஜங்சனாக மாறி அமளிதுமளிப்படுகிறது. விடுதலைக்கு முன் இருந்த அமைதி இப்பொழுது இல்லை. கடைத்தெரு விரிந்த அளவில் எழுகிறது. வணிகம் இப்பொழுது அனைத்தையும் உருவாக்குகிறது. வாழ்வின் சாரமென பணம் மாறுகிறது. இயற்கைச் சூழல் அழிக்கப்படுகிறது. மனிதன் பணத்திற்கு அடிமைப்பட்டு, வணிகப் போட்டிக்கு இடம் தந்து தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான். போட்டியில் வெல்வதைத் தவிர வாழ்வுக்கு வேறு நெறி இருப்பதாக இவனுக்குத் தெரியவில்லை. வஞ்சகம் – ஏமாற்று என்பதை மனிதன் தனக்குத் திறனாக மாற்றிக் கொள்கிறான். வெறிபிடித்த இந்த ஆண்கள் தம் வீட்டுப் பெண்களை சற்றும் மதிக்கவில்லை. காதர் அழகில்லாத தன் மனைவி பீபியை அடித்து நொறுக்குகிறான். அவனது மாமனார்க்கு இரண்டாம் மனைவியாக வந்தவள் பீபியைக் காட்டிலும் அழகி. பொருளியலுக்கு / அரசியலுக்கு அழுத்தம் தருகிற முற்போக்குவாதிகளின் நடுவில் சு.ரா. வாழ்வின் ஆன்மீக தளம் பற்றிச் சொல்கிறார் என்பதற்காகவும் நாவலைப் பாராட்டலாம். முற்போக்குவாதிகளுக்கு நடுவில் இவர் தொடக்க காலத்திலேயே வேறுபட்டிருப்பார் என்பதற்காகப் பாராட்டலாம். ஆனால் வாழ்வின் உலகியல் தளத்தையும் அறவியல் / ஆன்மீகத் தளத்தையும் எந்த இடத்தில் எந்த அம்சத்தில், முரண்தெரிந்து இணைப்பது என்ற முறையில் முற்போக்கு வட்டாரத்தில் தேவையான பார்வை இல்லை. இந்தக் குறைபாடு நாவலில் பெரிதாகத் தெரிகிறது. நகையாடல் என்ற உத்தியின்மூலம், ஆன்மீகத்தளம் விரிந்து இறுதியில் ஆவிகளின் தளமாய் மாறியிருக்கிறது. இந்த உண்மையைக் கண்டுகொள்ளாமல் நாவலை ரசிக்கமுடியும் என்பது நாவலுக்கு வெற்றி என்று சொல்லமுடியாது.

க. ரத்தினம் :
கல்லும் மண்ணும்

1. செங்கோடன் – கோவை சத்திச் சாலை கர்மகிரி கிராமம் பக்கத்தில் உள்ள முருகன் குன்று – வயது 40 + 35 = 75 இருக்கலாம். மனைவி இல்லை. பாறை நிலத்தில் நல்ல ஊற்றுள்ள கிணறு. 40 வருடம் வண்டியோட்டிப் பிழைத்த வாழ்க்கை. நிலம் வாங்கித் தானே கிணறு வெட்டி வாழ்ந்த கதை. மனைவி பேயாடினாள், குழந்தைக்காக ஏங்கினாள், ஏங்கி இறந்தாள். உறவினர் யாரும் இல்லை. ஆதரவுக்கு யார்? கோவை மில் சங்கொலி. பக்கத்தில் சாலைப் போக்குவரத்து. எந்நேரமும் லாரி ஓசை. சைக்கிள்காரர், பால்காரர். மலையிலிருந்து கல்லை வெட்டி எடுக்கிறார்கள். கடைசியில் பக்கத்திலேயே வந்து விடுகின்றனர்.

டிராக்டர் கந்தையாபிள்ளை நிலத்தை விலைக்குக் கேட்கிறார். செங்கோடன் கொடுக்கவில்லை. கடைசியாக ஊற்று சிதைகிறது. காய்ச்சலோடு கிடக்கிறார். மீண்டும் புஞ்சை. கல்லுடைப்பொழிக்கு நீர் எடுக்கப் போகிறார். கதையில் பாத்திரங்கள் இருவர்.

2. கிழவரின் காலை முதல் இரவு வரையிலான நனவுலக, கனவுலக வாழ்க்கையில் பல நாள், மந்தமான நிகழ்வுகளாகவே சித்திரித்தல். இடையில் இடையறாத கனவுகள், பகல் நேரத்து மயக்கங்கள். கனவுக்கும், நனவுக்கும் இடைப்பட்ட நிலையிலேயே நாட்கள் கழிகின்றன. கல்லுடைப்பொழி நெருக்கமாக, மிக நெருக்கமாக வந்து கிழவரைத் தொல்லை செய்கிறது.

சங்கொலி, லாரி ஓசைகள், வாழ்க்கையில் நிம்மதிக்கு இடம் இல்லை என்பதை விளக்குகின்றன. சைக்கிள்காரர் அவசரம் கிழவரை விமர்சனம் செய்கின்றன. அரசமரத்துக் கிளைகளின் இலையொலியில் மனைவியின் பேயாட்டம் தொடர்ந்து கேட்கிறது. மனைவியின் ஒப்பாரிகள் தொடர்கின்றன. நிலத்தின் மீது பெரியவர் கொண்ட ஆசையும் பற்றும். கல்லுடைப்பவர்களுக்கும், தனக்குமான வேற்றுமைகள். கல்லும் மண்ணும். அவர்களுக்கு மழை வேண்டாம். தனக்கு வேண்டும். வானம், மேகம் பார்த்த பெரியவரின் கற்பனைகள் மிகையானவை – ஆசிரியருடையவை. கர்ம கிரியிலுள்ள விளக்கு தனக்கு ஆதரவு. பாறை தன் மீது விழுவது போலக் கற்பனை. மனைவியின் பேயாட்ட வர்ணனை அருமையானது. ஆட்டங்களும், பாட்டுக்களும் – நகரம் மெல்ல மெல்ல வந்து கிழவரின் வாழ்க்கையில் முற்றுகையிட்டு, அவரது ஊற்றை வற்றவைக்கும் கதை.

3-A கல்லுடைப்பவர் இரவில் தீமூட்டி, உளிகளையும், கடப்பாரைகளையும் முனைபிடிக்கின்றனர்.

பக். 31 : இறுதியாக, தீ தாழ்ந்துவிட்டது. கிழவர் தன்மானம் எரிவதுபோல உணர்ந்தார். உள்ளே மனத்திலே உலைத்தீ மூண்டு எரிகிறது. அதனோடு தானும் எரிகிறார். மனத்தின் நம்பிக்கையைக் கூராக்க வேண்டும். ஆமாம் எல்லோரும் இரவிலே மனத்தைத் தீமூட்டி மனத்தின் நம்பிக்கையைக் கூராக்குகின்றனர். பகலெல்லாம் போராடித் தேய்ந்துவிட்ட நம்பிக்கையை கூராக்குகின்றது அந்தத்தீ.

பகலிலே ஒரு போராட்டம் – இரவிலே ஒரு போராட்டம். இருளில் உள்ளத்தில் எரியும் தீ. நம்பிக்கையூட்டும் தீ. சிதைந்த மனதை அது நாளும் சரியாக்குகிறது. இப்படியே பல வர்ணனைகள்.

B - பக் 54 : பெரியவர் உறங்குகிறார். அவரளவில் உலகம் இல்லாது போய்விட்டது. எல்லாம் தூக்கத்திலேயே அடங்கிவிடுகிறது. வானமும் பூமியும் கண நேரத்தில் பொய்யாகிவிட்டன. உடலும் இல்லாது போய்விட்டது. கூண்டில் தூங்கும் பறவை. கூண்டு ஒரு சிறை என்பதை உணர்வதெது? உயிர். அதைக்கூட மறந்து அவர் தூங்கினார். தூக்கத்தில் எல்லாம் ஒடுங்கிவிட்டன. "விழிப்பு" எதுவும் விந்தையானது தான். போனவற்றையெல்லாம் மீண்டும் கொண்டு வருவது விழிப்பு. பொய்யானவற்றையெல்லாம் மெய்யாக்குவது விழிப்பு. உயிரைக் கொண்டு வருகிறது, பின் உடலைக் கொண்டுவருகிறது. கனவையும், நினைவையும் கொண்டுவருகிறது.

பக். 58–59 : வர்ணனைகள் மிகப்பல : "வானத்தையும், நிலத்தையும் அணைத்துக் கொண்டு ஒளி வெள்ளம் வருகின்றது. இருளரக்கனோடு போராடியே அது உலகின் ஆட்சியை கைப்பற்றுகிறது. இல்லையானால் அதன் முகத்தில் இந்தச் செம்மை ஏன்?" கீழ்வானச் செம்மை வானமெங்கும் பரவுகிறது. "இருளோ தன் செல்லமான வான முத்துக்களைச் சுற்றிக்கொண்டு ஒடுகிறது. உலகின் பசுமையைக் கவ்வி விழுங்க நினைத்த பேராசையை விட்டு ஒடுகின்றது. உடம்பில் புண்பட்டாலும் அச்சமின்றிப் போராடி உலகை ஒளியரசன் கைப்பற்றிக் கொள்கிறான். கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் வடக்கிலும் குருதியின் கதை. செங்கோடன் அந்தக் காட்சியைப் பார்த்தபடி இருந்தார் – இந்த வர்ணனைக்கு ஏதாவது பொருள் இருக்கிறதா, இது ஆசிரியரின் கற்பனை என்பதைத்தவிர?

D. கிணறுவெட்டிய காலத்தில் (தானே – தன் மனைவியோடு) எல்லோரும் வந்து அவர் கிணற்றைப் பார்த்துச் செல்வார்களாம்.

பக். 96 : "என் அதிர்ஷ்டம் எனக்குத் தெரியும். அது என்றும் நீரில் வராது. நீர் முதலில் வரும். இது பாறை நிலம். இது என் உழைப்பைத் தின்று விடுகிறது. பதிலுக்கு இது தருவது கொஞ்சம்தான்". வேட்டி துவைப்பது சங்கீத ஓசை. வண்டி ஓசை – கேட்டுப் பழகிய பாடல். மின்சார

விளக்கைவிட காட்டுத்தீயில் அழகு அதிகம். வாழைமரம் செய்தி கூறுவதுபோல.

E ஒரே வரியை மீளமீளப் பாடும் இசை வாணர்களைப் போல அதே நீரில் மூழ்கி, மூழ்கி எழுந்தான். முகில்கள் கோபங்கொண்ட குழந்தையின்முகம் போல – அவை பூஞ்சிரிப்பில் ஊறிப்போயிருந்தன. இப்படி பல வர்ணனைகள், உவமைகள். குழந்தையைப் பற்றிய உவமைகள் பற்பல. சமயச் சார்பான உவமை.

பக். 10–11 களைகளைப் பிடுங்குதல் :

"ஒரு ஞானி இறுதிக்காலத்தில், தன் மனத்தில் தான் வளர்த்த தெய்வீக உணர்வுகளுக்கிடையே இருந்து அற்ப ஆசைகளைக் களைவதுபோல. களைகள் வேரோடு வரவில்லை. தண்டோடு அறுந்து போய்விடுகின்றன. பற்று இருக்கும் வரை ஆசைப்பயிர் நெஞ்சில் வேர்விட்டு இருக்கத்தானே செய்யும்" இவ்வாறு குறிப்பிடுகிறார்.

4. முன்னுரையில் :–

"புதிய நாகரிகத்தை அந்தக் கிழவர் ஏன் எதிர்த்து நிற்க வேண்டும்? அவர் அதனோடு கலக்க விரும்பாவிட்டாலும் விலகியாவது சென்றிருக்கலாம் அல்லவா? ஒரு சிறு துரும்பு, பேரலையை எதிர்த்து எழுவதுபோல, அவர் உறுதியோடு தன்னைத் தாக்கிய புதுமை அலையை எதிர்க்கத் துணிந்த விந்தைக்கு என்ன பெயர் சொல்வது?" இதுபோன்ற புதினத்திற்குத் தமிழ்நாட்டில் வரவேற்பு இருக்குமா? எனப் பல நண்பர்கள் வினாக்குறி போட்டுள்ளனர்.

ஒரே மாதிரியாகக் காலையும், பகலும், மாலையும், இரவும் கிழவரின் வாழ்க்கையில் வந்துபோவது பொருத்தமானதுதான். பகலும், இரவும், நனவும், கனவும் வேறுபாடு அற்ற நிலையில் கிழவர்க்கு அனுபவமாகின்றன. இவரது வயதான நிலைக்கும், சிதைந்த நம்பிக்கைக்குப் பாத்திரமான சிறு நிலமும் தன்னைவிட்டுப் போவதும் பொருத்தமானதுதான்.

பஸ் – லாரி – சைக்கிள் – வியாபாரம் – கல் உடைப்பு முதலியவை இவர்க்கு உறுத்தலாவதன் உண்மை. இவரது வாழ்க்கையில் இவை முற்றுகையிட்டு சூறையாடுகின்றன என்பதன் உண்மைதான். ஊற்று வற்றிவிடுவதுகூட இவரது நம்பிக்கையின் சிதைவையே குறிக்கும். இந்த உழவனின் மனைவிக்கும் பேய்பிடிக்கத்தான் செய்யும். கிராம வாழ்வின் வறண்ட நிலைகள், குறிப்பாகப் பெண்களைப் பைத்தியகாரிகளாக்குவதில் வியப்பில்லை.

த.16.

ஓர் ஏர் உழவனுக்கும், வேலைக்காரப் பையனுக்குமான உறவு எத்தனை அழகியது – இயற்கையை அவர் நேசிப்பது மாதிரியே. தன்னைத்தவிர வேறு யார் மீதும் நம்பிக்கையில்லாத சூழலில் கிழவர் அப்படித்தான் இருப்பார். கிழவரின் அறியாமை – வியாபார மனப்பான்மைக்கு அடிமையாகாத தன்மை இகழத்தக்கதல்ல. இவரது உழைப்பு, உறுதி முதலியவை வியக்கத்தக்கவை.

சில சூழலில் – அந்த சூழலுக்குத் தம்மை இழந்துவிடாமல் – விடாப்பிடியாக மனிதர்கள் இருக்கிறார்கள். அதை எடுத்துச் சொல்வது இலக்கியவாதியின் மரியாதைக்குரிய கடமைதான். நிச்சயமாக கொங்கு நாட்டின் வறட்சி நிலைமையை அனுபவித்த இலக்கியவாதி இந்த வீரனைப் போற்றாமல் இருக்கமாட்டான். இறுதியில் விவசாயி எப்படி நாசமாகிறான் என்பது இங்குச் சிறிய காவியம்போல நயம்பட உணர்த்தப்படுகின்றது. சண்முக சுந்தரத்தின் வழியில் க. ரத்தினத்தின் முயற்சி பாராட்டுக்குரியது.

செங்கோடனின் பார்வையிலிருந்தே (அவனது மன ஒட்டமாகவே) நடைபெறவேண்டிய கதை, பல சமயங்களில் ஆசிரியரின் பார்வையிலேயே அவரது மன ஒட்டமாகவே நடைபெறுகிறது. படைப்பாளி தன்னை கலைத்துக் கொள்ளுகிற ஒரு பக்குவம் கைவரவில்லை என்பதுதான் இதற்குப் பொருள்.

வயதான நிலை – தளர்ந்த நிலை – இத்தகைய மனச் சட்டத்திற்குச் சாதகமானது. மனைவியோடு வாழ்ந்த வாழ்க்கை பெரிதாகச் சொல்லப் படவில்லை, அப்படி ஒரு வாழ்க்கை இல்லை என்பதால். நிலத்தோடு – முன்பு வண்டியோடுதான் இவர் வாழ்க்கை நடைபெற்றது என்பதாலும், கிழவரின் குழந்தைத்தனம் – ஆர்வங்கள் – இயற்கை இரசனை – மனிதாபிமானம் முதலியவைகளை எல்லாம் வெளிப்படுத்துவதற்கான ஒரு பாத்திரமாகத்தான் கரையான் (வேலைக்காரச் சிறுவன்) நாவலில் இடம்பெறுகிறான்.

ஒரு காலத்தில் இவரது எருது களவாடப்பட்டபோது, இவர் போலிஸ் ஸ்டேஷனில் இரண்டு நாள் காத்திருக்கிறார். ஆயினும் பயனில்லை. இவர் தனக்குத்தானே ஆதாரம் என்பதற்கு இந்நிகழ்ச்சி சான்றாகிறது. ("கடலும் கிழவனும்" பாதிப்பு இருக்கலாமோ!

கிராமத்தை – பழங்கால வாழ்க்கையை ஆசிரியர் மேன்மைப் படுத்தியிருக்கிறார். இலட்சியமாக்கினாரா என்றால் அப்படி இல்லை. மாறாக மனித மேன்மையைத்தான் இவர் பாராட்டுகிறார்.

நூல் : 1962

ஆர். சூடாமணி :
இரவுச்சுடர்

1. தன் மகள் யாமினியே தன் பேத்தி ஆகிவிட்டாளோ என்று அவள் பாட்டி பெருந்தேவி அஞ்சுகிறாள். அப்பா ஆகிவருவதில்தான் கதை நிறைவடையும். ஆனால் எதிர்மாறாக கீதா காதலிக்கிறாள். ஒரு குஜராத்தியின் கோவிலுக்குப் போகிறாள். பக்திப் பரவசத்தில் ஈடுபடுகிறாள் என்று ஒரு Anti - Climax –ல் கதை முடிவடைகிறது.

இதை முற்றாக ஒதுக்கி விட்டால் – இது ஒரு மலிவான சுவைப்படுத்தல் என்ற முறையில் ஒதுக்கிவிட்டால், கதையின் மீதிப்பகுதி உருக்கம் தருவதாக இருக்கிறது.

2. யாமினி பல குழந்தைகள் பிறந்து இறந்து பிறகு நின்றவள். சுடர் போன்ற அழகி. இவள் மனோநிலை விந்தையானது. தனியிடத்தையே விரும்புவாள். தோழியர் உறவை விரும்பவில்லை. காதலை விரும்பவில்லை. கல்யாணத்தை வெறுக்கிறாள். தாய் தந்தையர் கட்டாயப்படுத்தலில் கல்யாணம் நடக்கிறது. உடலுறவை விரும்பவில்லை. மீறிக் குழந்தை கீதா பிறக்கிறாள். அவளுக்குப் பைத்தியம் பிடிக்கிறது. "நான் கன்னி" என்று கத்துகிறாள். கிணற்றில் விழ முயல்கிறாள். தனி அறையில் அடைக்கப்படுகிறாள். தந்தை சாரநாதன் கவலை. கிணற்றருகிலேயே கிடக்கிறாள். கடைசியில் தந்தையின் அனுமதியோடு விடுதலை பெற்று கிணற்றில் விழுகின்றாள். தந்தையும் அதே மனநிலையில் நெடுநாட்கள். கீதா திருமணம் உறுதியான நிலையில் அவர் கிணற்றில் விழுந்து உயிர் துறக்கிறார்.

3-A. யாமினி தந்தையிடம் கூறினாள்: "உலகம் முழுக்கப் போய் சுற்றிப் பார்த்துடணும் போல் இருக்குப்பா! உலகத்தில் இருக்கிறதை எல்லாம் தெரிஞ்சுடணும் போல இருக்கு. சந்திர மண்டலமென்ன, மற்ற கிரகங்களும் மட்டுமென்ன, சிருஷ்டி வெளி எங்கும் மூலை முடுக்கெல்லாம் விடாமல் பிரயாணம் செய்துட்டு வரணும்". தந்தை கவலை : என்ன ஆசை இது? இனம் புரியாத என்ன உணர்வுத் துடிப்பு. வலம் வந்தால் இது பக்குவமாகி வாழ்வில் ஒரு மகத்தான நோக்கமாக வடிவம் கொள்ளுமோ!

அந்த விரிவு மானுடத்தின் உச்ச நிலையில் ஏற்படும் வளர்ச்சியாக இருக்குமோ? முழு உலகத்திற்கென்று தம்மை ஈந்து கொண்டவர்களின்

அமைப்பில் தேடினால் முடிவில் இத்தகைய ஒரு தன்மை காணப்படுமோ? அதனால் திருமணம் என்பது ஒரு குறுக்கி விடுகிற தடையென்று கருதி அவள் மண வாழ்வை வெறுக்கிறாளோ! அல்லது தன்னைத்தானே விரும்பாமல், எதனோடும் கலந்திருக்கவே இசையாமல், மானிடப் பாசங்களை பகிர்ந்து கொள்ளாமல் ஒதுங்கும் கருமித்தனமாகத்தான் இது இருக்குமோ? அல்லது இல்லறம் என்பது சிறைவாழ்வு என்று உணர்ந்ததால் அவளுடைய அடிப்படையான தனிமையியல்பு அதை விரும்பாமல் முரண்படுகிறதோ! அல்லது இது பாலுணர்ச்சியிடமே – உள்ள வெறுப்பா? அண்டர் – செக்ஸ் என்கிறார்களே அப்படியா?

அந்த வேறுபாடு அவளிடமிருந்த ஒரு கோளாறா? அவள் இயல்பில் அமைந்த ஏதோ ஒரு வளர்ச்சிக் குறைவா? அல்லது பகையா? பெண்ணாகப் பிறந்ததையே அவள் வெறுத்துக் கொண்டாளா? அல்லது இயற்கையின் எவ்வித பாதிப்பையுமே பொறுக்கமுடியாது திமிறினாளா – இரவு நேரம் வந்தால்மட்டும்? (பக். 53– 54)

3-B. யாமினியின் பாத்திரப் படைப்பு சற்று மிகையாக இருந்தாலும் கூட இதில் உண்மை இருக்கிறது. திருமணம், பெண்ணைப் பொருத்தவரை ஒரு பயங்கரமான கட்டு, தளை. இதை ஒருத்தி வெறுப்பதில் நியாயமுண்டு. தவிர்க்க இயலாமல்தான் தளைத்துக் கொள்ள முடியுமே தவிர, விரும்பித் தளைத்துக் கொள்ளமுடியாது. தவிர்க்க இயலாத நிலையில், இதைச் சுகமாக்கிக் கொள்ளவும் முடியும். இது ஆண்கள் உறவிலிருந்து கிளைக்கும் ஒரு விடுதலை உணர்வு. பொதுவாக மனிதச் சூழலிலிருந்தும் இந்த உணர்வு தோன்றலாம். தன்னைக் கட்டுப்படுத்தும் வாழ்க்கை எல்லைகளை அறவே விரும்பாத தன்மையிலிருந்தும் இந்த உணர்வு எழலாம். பெண் விடுதலை இயக்கமும் இதிலிருந்து கிளைக்கலாம்.

3-C. இந்தியச் சூழலில் திருமணத்தைப் பெண் விரும்பாமை. உடலுறவைப் பெண் அஞ்சி ஓடுதல். குழந்தைப் பேற்றில் பைத்தியமாதல் – இயல்பாகவே கட்டுக்கு உட்படாத ஒரு குணம். இதிலிருந்தே யாமினி பாத்திரப் படைப்பு எழலாம்.

3-D. யாமினியின் குணங்கூட அவள் தந்தையின் குணம் தான் என்பது ஒரு முக்கியமான உண்மை. பெண்மைப் பிரச்சனை என்ற இதை துல்லிய உளவியற் பிரச்சனையாக பார்க்க வைக்கிறது.

4. இந்தியாவில் – பெருந்தேவி போல் ஒரு குடும்ப நேசத்தில் தவித்தல் அருமையான பிரச்சனை. (பாட்டி சிந்திக்கிறாள் – பக். 29) இவர்களெல்லாம்

உயர்ந்தவர்கள். அப்படியானால் நான் ஒருத்தி மட்டும் ஜடமா? சரி அவள் ஜடம்தான். அதனால் என்ன? அவள் இந்த உலகத்தைச் சேர்ந்தவள். அவளைப் போன்றோர் நடைமுறைத் தேவைகளை கவனித்துச் சௌகரியம் செய்து வைத்தவாறு இருப்பதனால் தானே இதுபோன்ற உயர்ந்தவர்கள் நிம்மதியாக வானத்தில் பறந்து கொண்டிருக்க முடிகிறது! அவள் பாதங்கள் பூமியில் தானே நிற்கின்றன. அந்தப் புழுதிதான் அவளுக்குப் பொன். அவள் கனவு வானத்தில் இல்லை. உள்ளங்கையில் இருக்கிறது. அவளும் ஒரு மனிதப் பிறவிதானே? அவளுக்கு ஆதரவு தேவை இல்லையா? அவள் தன்னுடைய அளவில் கண்டு நேசிக்க ஒரு துணை வேண்டாமா? (பக். 29)

5-A. பாட்டி பேத்தி பற்றி -

அழகைச் சுவைப்பது வெறும் இரசனை எல்லையோடு நிற்கக் கூடாதா? இரசனையின் இந்த வளர்ச்சிதான் அவளை அச்சுறுத்தியது. இங்கு ஒரு பாதை எல்லை கடந்து போய்விடவில்லையா? மனிதப் பரிமாணத்தின் கைக்கு அடங்கும் அளவைகளைக் கடந்து வேறொரு பெருக்கத்தின் தலையறுத்த விரிவினுள் புகுந்துவிட விழைகிற அடையாளமல்லவா இது?

5-B. இரவு நேரம் வந்தால் மட்டும் அவளிடம் சிறிது அமைதி தோன்றும். விண் மீன்களோடும், அல்லி மலர்களோடும் அவளும் வெளிவருவாள். கொல்லைப்புறத் தோட்டத்தில் நின்று வானத்தை அண்ணாந்து பார்ப்பாள். மகிழ மரத்தடியில் பூக்கள் பூமியில் கொட்டிய நட்சத்திரங்கள் போல் பொலியும். வேலியோரம் செடி, கொடிகளின் வாசனையில் சூழ்ந்திருக்கும் பூச்சிகளின் இரைச்சல் இப்போது அடங்கி ஒவ்வொரு நறுமணமும் இரவின் மூச்சினின்று புறப்படுகிறது போல் களிப்பூட்டும். பல்வேறு மலர்களினால் இரவு கதம்பக் காடாகிவிடும். மரங்களும், வீடுகளும் வானத்துக்கு இடர் செய்வதால் சிறிது நேரத்தில் அவள் மேல் மாடித் தளத்துக்கு ஏறிச் செல்வாள். அங்கு நாற்புறமும் வானம் கரையுடைந்து பெருகியிருக்கும். அந்தக் கருமைக்கு முடிவில்லை. மற்ற வர்ணங்களுக்கு எல்லை உண்டு. கறுப்புக்கு ஏது எல்லை? மர உச்சிகள், வீட்டு முகடுகள் யாவையும் தாண்டிய உயரத்தில் நெடிய நீள் விசும்பு இரவின் இன்சுவையில் தொடர்ந்து அவளுக்காக விரிந்திருக்கும். அதன் கரிய சுடர் முகத்தை அவளுடைய கூரிய சுடர்முகம் அண்ணாந்து பார்க்கும், அவள் கன்னம் குழிய முறுவலிப்பாள். அரிதாகிவிட்ட இந்தப் புன்னகை இப்போதெல்லாம் நிலாப்பூவாக இரவில் தான் மலர்ந்தது.

நூல் 1974

ஜெயகாந்தன் :
ஒரு மனிதன் - ஒரு வீடு - ஒரு உலகம்

1. ஜெயகாந்தனின் "ஒரு மனிதன் – ஒரு வீடு – ஒரு உலகம்" என்ற நாவல், அவரது பிற படைப்புக்களிலிருந்து வேறுபட்டிருக்கிறது. இந்தக் கதை வாழ்க்கையின் ஒளிமிகுந்த பகுதிகளை மட்டுமே காட்டுகிறது என்று முன்னுரையில் அவர் குறிப்பிட்டபோதிலும், ஒரு கதை அப்படியே இருந்துவிடமுடியாது என்ற உண்மை ஒருபுறமிருக்க, ஒளிமிகுந்த பகுதிகளுக்குள் வேறொன்றின் இயக்கம் இருந்து, இந்த நாவலைத் தமிழ்நாவல்களிலேயே தனித்தன்மை உடையதாக்கியிருக்கிறது. ஒருவேளை இந்த நாவல் சரிவரப் பார்க்கப் படாமைக்கும் தவறான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுவதற்கும்கூட இந்தத் தனித்தன்மையே காரணமாகிவிடலாம். இந்த நாவல் இந்தத் தனித்தன்மை பற்றிய நோக்கிலிருந்து பார்க்கப்படாமல் வேறு பல நோக்குகளிலிருந்து பார்க்கப்படுவதற்கான சாத்தியங்களைக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் அவ்வாறு பார்க்கக்கூடிய பலவகைப் பார்வைகளையும் மீறி இந்தத் தனிப்பார்வையே உயர்ந்து நிற்கிறது. இது பற்றியே இக்கட்டுரை விவாதிக்கிறது.

2. நாவலின் மையப் பாத்திரமாக வரும் ஹென்றி, தோற்றத்தில் மட்டுமல்லாமல் தான் பிறர்மீது செலுத்தும் பாதிப்பிலும் இயேசுநாதர் போன்றவன். கிருஷ்ணராஜபுரத்தில் வாழும் அரையாடை மனிதர்களையும், அவர்கள் ஆதரவில் வாழும் விலங்குகளையும் ஒரு குழந்தைத்தனமான பார்வையில் ரசிக்கிறான். மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணிகளின் சத்தத்தை கண்களை மூடிக்கொண்டு ஒரு மேன்மையான பிரபுக்களின் அரண்மனையில் பியானோ வாத்தியத்தில் எழுப்பும் இன்னிசையைப் போல ரசிக்கிறான். துரைக்கண்ணு வீட்டுக் குழந்தைகளோடு 'சோப்பெங்கப்பா' நடனம் ஆடுகிறான். கிராமத்துச் சிறுவர்களோடு பம்பரம் விளையாடுகிறான். கிராமத்து மக்கள் உண்ணும் கூழை ரசித்துச் சாப்பிடுகிறான். சிறுவர்களைக்கூட வணங்குகிறான். தேவராஜன் வீட்டுக் கிழவரை மானசீகமாக வணங்குகிறான். ரசனையில் குழந்தைபோல இவன் தோன்றினாலும் இவனுக்குள் முதிர்ந்தவன் இருக்கிறான். பிற மனிதர்களிடத்தும் உயிர்களிடத்தும் இவன் கொள்ளும் அன்பும் மரியாதையும் இவனைத் தேவராஜன் கூறுகிறபடி ஒரு அதிசய மனிதனாக்குகிறது. அதாவது இத்தகைய மனிதன் அவனது சூழ்நிலையில் ஆச்சர்யத்திற்குரியவனாகிறான். அதாவது இவற்றை மனிதப் பண்புகள்

என்று கொண்டால் இப்படி ஒரு மனிதனாக இருப்பதே இந்தச் சூழலில் ஆச்சர்யமானதாகிறது.

ஹென்றியின் இந்த மேன்மைக்குணம், இவனுக்கு இவனது வளர்ப்புத்தந்தை சபாபதிப் பிள்ளை – இவன் அன்போடு கூறுகிற 'பப்பா' வழங்கிய நன்கொடை. கிருஷ்ணராஜபுரத்தில் மேன்மையான குடும்பத்தில் பெருமையோடு வாழ்ந்துவந்த காலத்தில் அவர் மனைவி பரியாறி ஒருவனுடன் ஓடிப் போகிறாள். சபாபதிப் பிள்ளை தன் மானத்தைக் காப்பதற்காக அன்றிரவே ஊரைவிட்டுச் சென்று இராணுவத்தில் சேர்ந்து, போர்க் கொடுமைகளைக் கண்டு சலித்துப் போகிறார். தன் உயிர் நண்பர் மைக்கேலைக் காப்பாற்ற இருபது மைல்கள் தூக்கி வருகிறார். இறுதியில் அவர் தன் மனைவியை சபாபதிப்பிள்ளையிடம் ஒப்படைத்துவிட்டு இறக்கிறார். மனைவி ஆங்கிலோ இந்தியப் பெண்மணி, ஒரு தாய் போலத் தழுவிக்கொள்ள அவளோடு குடும்பம் நடத்துகிறார். இவ்வாறு தன் வாழ்க்கையில் எத்தனையோ ஏற்ற இறக்கங்களைக் கண்டு அனுபவித்து இவற்றாலெல்லாம் சிதைந்து போகாமல் இறுதியில் சாதிமத பேதங்களைத் துறந்து பயனற்ற கல்வியைத் துறந்து உலகில் அன்பையும், மரியாதையையும் தவிர வேறெல்லாவற்றையும் உதிர்த்துக் கொண்டார் சபாபதிப்பிள்ளை. அவர் தன் வளர்ப்பு மகனுக்குக் கற்றுக் கொடுத்தது இதனைத்தான்.

மரியாதையோடு கூடிய இந்த அன்பைப் போற்றுவதில் தான் ஹென்றி இயேசுவாகிறான்; விநோதமான மனிதனாகிறான். இதனால்தான் பெங்களூரிலிருந்து கிருஷ்ணராஜபுரத்திற்கு வந்து, தேவராஜனுடைய நட்பைப் பெற்று ஊர்ப் பஞ்சாயத்தில் சபாபதிப்பிள்ளையின் சொத்துக்களுக்குத் தான் வாரிசு என்றில்லாமல் சபாபதிப் பிள்ளைக்குத் தான் மகன் என்பதை நிலைநாட்டிக்கொள்கிறான். தன் வளர்ப்புத் தந்தை வளர்ந்த சூழலில் தான் ஒன்றிவிடுவதற்காகவும் அவரைப் பற்றிய நினைவுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்காகவுமே அவன் கிருஷ்ணராஜபுரத்தில் தங்குகிறான். உடைமையின் கோரத்திற்குப் பலியாகாமல் யார்மீதும் தான் ஆக்கிரமிப்புச் செலுத்துவதை அறவே துறந்தவனாய், இயற்கைக்கிடையில், மனிதர்க்கிடையில், அன்பின் சின்னமாய் உலவுகிறான் ஹென்றி.

ஹென்றிதான் இந்த நாவலில் அன்புச் சின்னம் என்றில்லாமல் அவனோடு நம் மரியாதைக்குப் போட்டி போடக் கூடியவராக லாரி டிரைவர் துரைக்கண்ணு வருகிறார். இவர் சபாபதிப் பிள்ளையின் தம்பி. முரட்டுத்தனமான பேச்சுக்கள் இருந்தபோதிலும் நடைமுறையில்

அன்புமயமானவர் துரைக்கண்ணு. தன் பெற்றோர் சொத்தில் தன் பங்கைப் பெற்றுச் சிறுவயதிலேயே அதனை உதறிவிட்டு உலக அனுபவங்களைச் சேர்த்துக் கொண்டவர் துரைக்கண்ணு. தன் அண்ணனின் சொத்தைப் புனிதமாகப் போற்றி, தர்மகர்த்தா கூறிய தீய யோசனைகளை எல்லாம் மறுத்துவிட்டு சொத்துக்களை முழுமையாக நிம்மதியாகத் தன் அண்ணனின் வாரிசாகிய ஹென்றியிடம் ஒப்படைக்கிறார் துரைக்கண்ணு.

ஹென்றி, துரைக்கண்ணு ஆகியவர்களைத் தவிர இந்த நாவலில் வரும் அக்கம்மாவின் வாழ்க்கையும் அன்பு மயமானது. இளமையிலேயே விதவையாகி, தந்தை தாய் இறந்துவிட, அதனால் மதிமருண்ட தாத்தாவோடு குடும்பச் சுமை முழுவதையும் தான் தாங்கியவள் அக்கம்மா. மண்ணாங்கட்டியை தேவராஜனும் அக்கம்மாவும் மகன்போல் ஏற்று வளர்த்த தன்மை; இறந்தபின், அவர் இறப்புக்கு தான் காரணமாகிவிட்டேனே என்று மணியகாரா வருந்தும் நாகம்மா – எல்லாமே அன்பையே விளக்குகின்றன.

நாம் இங்கு நின்று கவனிக்க வேண்டிய ஓர் உண்மை, மனிதர்கள் இப்படிப்பட்டவர்களாக இல்லை என்பதுதான். இருந்தபோதிலும் உடைமையின் கோரப்பிடிக்குள் சிக்கிச் சிதைந்து, நாகரிகத்தின் அலங்கோலங்களைச் சுமந்து நாறிப்போன மனிதர்க்கிடையில் இப்படி நாசமடைவதற்கான வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் அவற்றால் பாதிக்கப்படாமல் ஹென்றியும் துரைக்கண்ணுவும் போன்ற ஒருசிலர் மனிதர்களாக இயேசுவாக வாழ்கிறார்கள். ஹென்றி தன் மேன்மையான குணத்தோடு கிருஷ்ணராஜபுரத்திற்குள் நுழையும்போதே, தேவராஜன் அவனால் பாதிக்கப்படுகிறான். சுவாரஸ்யம் இல்லாத மனிதர்களும் சூழல்களும் உடையது தனது கிராமம் என்று கருதிய தேவராஜன், ஹென்றியின் கண்கள் வழியே பார்த்தபோது தன் கிராமத்தின் மேன்மையைப் புரிந்து கொள்கிறான். துரைக்கண்ணு, ஹென்றி ஆகிய இருவரின் பெருந்தன்மையால் பாதிக்கப்பட்டுக் கிராமப் பஞ்சாயத்தாரின் குணங்கள் மேன்மையுறுகின்றன. தாங்கள் வாழும் சூழலை, இவர்கள் அன்பைத் தெளித்துப் புனிதப்படுத்துகிறார்கள். இவர்கள் வழியே பார்க்கும்போது இந்நாவலே அன்புக் காவியமாக – அன்பை உபதேசிக்கும் வேதமாகத் தோன்றுகிறது. உடைமைப் பற்றை உதறிவிட்டு, இயற்கைப் பொருள்கள், உயிர்கள், மனிதர்களை வியப்புணர்வு மேலோங்க ரசிக்கும் ஹென்றி, தற்காலத் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய மனிதன். பழக்கதோஷத்தால் மந்தமாகிவிட்ட பொருட்கள், நிகழ்வுகள், மனிதர்கள்மீது படிந்திருக்கின்ற தூசியைத் தட்டி நீக்குகிற முயற்சிகூட இல்லாமல் – அவற்றின் மேன்மையை அழகுகளை ஒரு இயல்பான பார்வையில்

பார்க்கிறான் ஹென்றி. பொருட்கள், நிகழ்வுகள், மனிதர்களைப் பார்ப்பதில் ஒரு புதிய மனிதவியலைக் கொண்டிருக்கிறான் ஹென்றி.

அதாவது, பொருட்கள் – மனிதர்களை அவற்றின் நிர்வாண நிலையில் இயல்பாக ரசிக்கும் தன்மையுடையவனாக ஹென்றி இருப்பதனால்தான் கிருஷ்ணராஜபுரத்திற்கு வந்து சேர்ந்த இரவில், நிலவொளியில் நிர்வாணமாய்க் குளிக்கிறான். லாரியில் வரும்போது மலைகளுக்கிடையில் ஒரு விவசாயப் பெண் நிர்வாணமாய்க் குளித்த காட்சியை ஹென்றி ரசித்துப் பார்த்தபோது லாரி டிரைவர் கண்டித்தார். அப்போது ஹென்றி வழியில், வளைவில் கன்றுக்குட்டி குதித்து அட்டகாசமாய் ஓடியதையும் குரங்குகள் லாரிக்கு முன் குதித்தோடியதையும் பார்க்கவில்லையா என்று கேட்கிறான். ஹென்றியில் மனத்தில் வெட்கப்படுவதற்கு குற்றவுணர்வு ஏதும் இல்லை. நாவலின் இறுதியில் நிர்வாணமாய் வந்த பைத்தியக்காரப்பெண் ஹென்றி உணர்த்தியபடி நடந்துகொண்டபோது, இவனால்கூட இப்படி இருக்க முடியும் என்று தேவராஜன் நினைக்கிறார்.(அதாவது நிர்வாணமாய்) பைத்தியக்காரப்பெண் நாவலுக்குள் வரும் நிகழ்ச்சி, நாவலின் கட்டுக்கோப்பிலிருந்து ஒரு வித்தியாசப்பட்ட நிகழ்ச்சி என்றில்லாமல் நாவலின் தொடக்கத்திலிருந்து வரும் மூல இழையின் தொடர்ச்சிதான் என்று நாம் புரிந்து கொள்வது ஹென்றியிடமிருந்து புலப்படும் நிர்வாணப் பார்வையின் மூலம்தான். அதாவது பொருட்கள் – நிகழ்வுகள் – மனிதர்கள்மீது படிந்திருக்கும் மாசின் பாதிப்பே இல்லாமல், அவற்றின் தூய தரிசனத்தைப் பெறுவதன் மூலம்தான். இந்த வகையில் ஹென்றி ஒரு Mystic – சித்தன்.

இந்தச் சித்தன்தான், "மிருகங்களுக்கு வாழ்க்கைப் பிரச்னைகள் தார்மீகப் பொறுப்புக்கள் கிடையாது. மனிதன் அப்படி ஆகக்கூடுமா?" என்று தேவராஜன் கேட்டபொழுது, மலைமீது பாறை முகட்டில் தன் முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கி மற்றொரு செங்குத்தான சரிவினருகே வளர்ந்த செடியை எக்கி எக்கிக் கடித்துக் கொண்டிருக்கும் ஆட்டைக் காட்டுகிறான். கிருஷ்ணராஜபுரத்து வாழ்க்கையை மின்மயமாக்க ஹென்றி போன்றவர் முன்கையெடுக்க வேண்டும் என்று கூறியபோது எனக்கு இந்த அகல்விளக்கின் வெளிச்சமே போதும் என்று கூறுகிறான். (நம் ஜனங்களின் மூடத்தனத்திற்கு எல்லை உண்டா – அர்த்தம் உண்டா என்று தேவராஜன் சங்கடப்பட்டபோது, அதற்கு ஏதாவது அர்த்தம் இருக்கும் என்று ஹென்றி பதில் தருகிறான் அரைகுறையாக). இதே ஹென்றிதான், தனியாக வேலை செய்வதைவிட கும்பல் கும்பலாக எல்லோரும் சேர்ந்து வேலை செய்வது ஒரு நாட்டியம்போல – ஒரு நாடகம் போல – ஒரு

சேர்ந்திசைபோல — ஒரு பஜன் போல மாதிரி ஆனந்தமாக இருக்கிறது. என்று கூறுகிறான். நிர்வாணப் பெண் கொஞ்சம் பைத்தியம் என்று பிறர் கூறியபோது ஹென்றி கேட்கிறான், "யார்தான் கொஞ்சம் பைத்தியம் இல்லை?

தேவராஜனே ஹென்றியை விமர்சனம் செய்வதுபோல நகர வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி வந்த ஹென்றி ஒரு ஆதிவாசியாகிறானோ அல்லது கிராம வாழ்க்கைச் சூழலில் பழமையைப் புதுப்பிக்கிறானோ என்ற சந்தேகங்கள் எழுவதற்கான நியாயங்கள் இருக்கின்றன. ஹென்றியை நோக்கிக் கேட்கப்படும் இக்கேள்விகள் அவன் காதுகளில் ஏறுவதில்லை. பெங்களூர் போன்ற பெரிய நகர வாழ்க்கைச் சிக்கல்களால் அவன் பாதிக்கப்பட்டதாகக் கதையில் நிகழ்வுகள் இல்லை. ஹென்றி வயதில் இளையவனாக இருந்தபோதிலும், கதைப்போக்கின்படி அவன் சபாபதி கண்டறிந்த அனுபவங்களின் வெளியீடாகவும் தொடர்ச்சியாகவும் இருக்கிறான். பர்மாவில் நடைபெற்ற போர்க் கொடுமைகளை சமுதாய அளவில் கண்டவர்தான் சபாபதிப் பிள்ளை. கொடுமைகளுக்கிடையில் அவர் கண்டறிந்த — கடைப்பிடித்த இலட்சியங்கள் ஹென்றியின் மூலம் தொடர்ந்து வாழ்கின்றன. இவைபற்றிய விவரிப்புகள் கதையினூடாக விரிவாக இல்லாவிட்டாலும், சமகால நிலைமைகளின் பாதிப்பை ஜெயகாந்தன் பெறாமல் இக்கதையை — ஹென்றியை உருவாக்கியிருக்க முடியாது. தேவராஜன் விரும்புகிற மாதிரி கிராமத்திற்கு மின்சாரம் வருவதையோ கிராமம் தொழில் வளர்ச்சி முதலிய வகையில் மாற்றம் பெறுவதையோ ஹென்றி மறுக்கவில்லை. தன்னளவில் அவற்றின் பாதிப்புக்கு உட்படவே ஹென்றி மறுக்கிறான். தன்னளவில் அன்பின் ஒளியை எவ்விடத்தும் விரும்பும் ஹென்றி தனக்கான நியாயத்தை விளக்குவானென்றால் அவன் வெளிப்படுத்தும் உண்மைகள் ஆச்சர்யப்படத்தக்கவையாகவே இருக்கக்கூடும். வர்க்க வேறுபாடு, தொழில் வளர்ச்சி, சமுதாயத்தில் ஏற்கனவே உள்ள சாதி மதப் பிரச்னைகள், இவற்றின் ஊடேவரும் மாற்றங்கள் இன்றைய நிலையில் மக்களின் துன்பம் தீர்ப்பனவாக இல்லை. சமுதாய மாற்றத்திற்கான இயக்கங்கள் சரியான திசைவழியில் திட்டமிட்ட நன்னோக்கங்களுடன் நடைபெறாத நிலைமைகளில், அவ்வியக்கங்கள் கூறும் சமுதாய மாற்றங்கள் மக்களின் எதிர்பார்ப்புக்களை ஒட்டியவையாகவும் இல்லை. தவிர, நடைபெறவேண்டிய சமுதாய மாற்றங்கள் என்பன ஹென்றி மேன்மையாகக் கருதும் மனித உறவுகளுக்கிடையிலான அன்பை இன்னோர் உயர்நிலையில் சாதிக்கக் கூடியனவாகத்தான் இருக்க வேண்டுமேயொழிய, இடையில் இவ்வன்பைப் புறக்கணித்து விட வேண்டியதும் இல்லை. தீவிரமாகவும் கோரமாகவும்

நடைபெறக்கூடிய சமுதாய மாற்றங்களின்போது, சமுதாய மாற்றங்களின் இறுதி இலட்சியமாகிய அன்பை தன்னளவிலேனும் இடைக்காலம் முழுவதிலும் எந்த நிலையிலும் காப்பாற்றி வைப்பதற்கான சித்தர்கள் - ஹென்றிகள் - சமுதாயத்தில் இன்றியமையாதவர்களாகவே உள்ளனர். தன்னளவில் அன்பின் ஒலியை ஹென்றி ஏந்தியிருப்பதின் மகத்துவம் இதுதான்.

ஹென்றியின் பார்வையில் பைத்தியக்காரியின் பைத்தியம் தெளிவதுகூட இவ்வகையில்தான் விளங்கிக் கொள்ளத்தக்கது. அன்பற்ற சமுதாயத்தில் பைத்தியங்களைத் தெளிவிக்கவல்ல சக்தி அன்புக்குத்தான் உண்டு. ஹென்றியிடம் தனித்து அபரிமிதமாகப் பொங்கும் அன்புக்கான தேவையை, பைத்தியம் தெளிவிக்கும் அவனது பண்பின் மூலமே நாம் விளங்கிக் கொள்கிறோம். நல்லுறவுகளுக்கே இடந்தந்து, அதனால் வாழ்க்கையை எளிமையாக்கிக் கொண்ட சூழலில் பைத்தியம் தோன்றாது. வீடு கட்டி சாத்திரங்கள் சடங்குகள் கூட்டங்கள் என்று நெருக்கடிகள் மீண்டும் நிலவும் சூழலில் மீண்டும் அவள் பைத்தியமானதில் வியப்பில்லை.

மீண்டும் மீண்டும் ஒர் உண்மைதான் நமக்கு முன் நிற்கிறது: ஹென்றி ஒரு சித்தன்.

ஜெயகாந்தனுடைய படைப்புக்களில் நாம் பார்க்கும் ஒங்கூர்ச்சாமியார், அம்மாசிக்கிழவன், ராஜராமன் ஆகியோரின் உடன்பிறப்பாகவும் தொடர்ச்சியாகவும் இருப்பவன்தான் ஹென்றி. இந்திய வாழ்க்கைக்குள் ஹென்றி ஒரு வகையில் விநோதமான மனிதனே அல்ல. துரைக்கண்ணு, அக்கம்மா முதலியவர் தவிர மேற்போக்காகப் பார்க்கும்போது நம்ப முடியாததாகவும், அதேசமயம் மனித அனுபவத்தின் சாரத்திலிருந்து எழுவதும், மனிதனின் அகமனத்துடன் நெருங்கியதுமான இவ்வகைப் பாத்திரப் படைப்பின் மூலமும், இப்பாத்திரத்தின் வீச்சில் ஒரு நாவல் உருவாகியதின் மூலமும் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் ஒரு படைப்பு ஒரு உன்னதமான தொன்மம் ஆகியுள்ளது.

ஜெயகாந்தன் :
ஜயஜய சங்கர

1. பல வகைகளில் கவனிக்கத்தக்க நாவல் :

சமயத்தையும் அரசியலையும் இணைப்பதில் – சமயத்தையும் அரசியலில் புரட்சியையும் இணைப்பதில் – காந்தியவாதியையும் புரட்சிவாதியையும் ஒரு மரபின் தேவையின் தொடர்ச்சியாகப் பார்ப்பதில் – சந்நியாசியையும் புரட்சிக்காரனையும் இணைப்பதில் – ஹரிஜனங்களையும் பிராமணர்களையும் இணைப்பதில் – ஆசிரமத்தையும் 'கட்சியையும் ஒருங்கிணைப்பதில் – தற்காலக் கல்வியை விமர்சனம் செய்வதில் – விஞ்ஞானப் பார்வையும் சமயப் பார்வையும் வேறு வேறல்ல என்பதில் – பெண்மை விமர்சனத்தில் – இப்படியாகப் பல வகைகளில் கவனிக்கத்தக்க நாவல்.

2. இதில் வரும் பலவகை மனிதர்களும் நிகழ்ச்சிகளும் நாவல் என்ற முறையில் கவனிக்கத்தக்கவர் :

கவனிக்கத்தக்கவர் இதில் வரும் சங்கரர் – ஆதிசங்கரர் சாயலில் வருபவர் இந்தச் சங்கரர். தற்கால காஞ்சி சங்கரரைக்கூட ஜெயகாந்தன் ஆதி சங்கரரின் சாயலில் பார்க்கிறார் என்று தெரிகிறது. தற்காலச் சங்கரரையும் விமர்சனம் செய்யக்கூடியதொரு பார்வையில் இந்த நாவலில் சங்கரர் படைக்கப்பட்டிருக்கிறார். அல்லது காஞ்சி சங்கரரின் சில கருத்துக்களுக்குள், தனக்குப் பிடித்தமான தேவையான ஒரு சங்கரரை ஜெயகாந்தன் பார்ப்பதாகவும் சொல்லலாம். நிச்சயம் இந்தச் சங்கரர், யதார்த்தமான சங்கரரை சரியாக விமர்சனம் செய்யக் கூடியவர்தான்.

நாவலில் வரும் சங்கரர் தொடக்கத்திலிருந்தே பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டவர். மகாலிங்க அய்யருக்கும் சதாசிவ அய்யருக்கும் இடையில் வரும் போராட்டத்தில் இவர் இடைநிலையில் சிக்கித் தவிக்கிறார்.

ஆதியுடன் இவர் கொண்ட உறவு உலகியலுடன் – உலகியலின் உன்னதமான அம்சங்களுடன் – சமயத்தின் சாரத்துடன் – அத்வைதத்தின் மேன்மையுடன் சங்கமிக்கக் கூடியதாகவே இருக்கிறது. மகாலிங்க அய்யரும் ஆதியும் புலம்பும்போது சங்கரர் புலம்பவில்லை. ஆதி தன் மூத்த மகன் மகாலிங்கம் பற்றிய பிரச்சனைகளில் சிக்கித் தடுமாறும்போது, சங்கரர்

தடுமாறவில்லை. இவர் தன் பார்வையில் இயக்கத்தையும் ஏற்கிறார். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்றபோதிலும் உத்தமமான பிராமணராகவே விளங்குபவர் ஆதி. தன் மகன் மகாலிங்கத்துடன் ஆதி கொண்ட மனவேறுபாடு, சங்கரர் சந்திப்பின்போது – பிறகு அவரைப் பற்றிய அறிதலில் தீர்கிறது.

தன் மனைவியோடு கருத்து வேறுபாடு இருந்தாலும் அவளை மதிக்கும் உயர் குணம். ஆரம்ப நாட்களில் சங்கரருடன் நட்புறவு, கோயிலுக்குள் நுழையாமை, ஆசிரம முயற்சிகள் முதலியவை.

சிங்கராயருடன் சேர்ந்து ஆதி, ஆசிரமம் அமைக்கிறார். ஆசிரமவாசிகளைத்தான் அரசாங்கம் அதிகம் சந்தேகிக்கிறது.

சிங்கராயர் : தான் பழுத்த காந்தியவாதிதான். ஆனாலும் பலாத்காரவாதிளையும் அவர்களின் தேவை கருதி ஏற்கிறார். இது ஜெயகாந்தனுடைய பார்வைதான் என்று திட்டமாகக் கூறலாம்.

அப்பைய குருக்கள் : உலகத்தையே சிவலிங்கமாகப் பார்ப்பவர்; நாத்திகவாதிகளையும் நேசிப்பவர்.

போலிஸ் அதிகாரி மூர்த்தி : மனிதாபிமானம் உடையவர். ஜெயகாந்தன் இவருக்குள்ளும் ஒரு உத்தமமான மனிதனைப் பார்க்கிறார். ஒரு இலக்கியவாதியின் உன்னதமான பார்வைக்கான தேவையை இப்பாத்திரம் புலப்படுத்துகிறது.

சிங்கராயர் : தோழர் ஜீவாவின் வார்ப்பு.

அவசர நிலை பற்றிய ஜெயகாந்தனின் கருத்துக்கள் மோசமானவையல்ல. ஒரு நாவலில் இவ்வளவு உத்தமர்கள் இவ்வளவு பிரச்னைகள் இருப்பது நாவலின் தரத்தை உயர்த்துகிறது.

யாரும் கவனிக்கமுடியாத – சமாளிக்க முடியாத பிரச்னைகளோடு நாவல் நடைபெறுகிறது. உத்தமமான ஒருவன்தான் இத்தகைய உயர்வகைப் படைப்பை ஆக்கமுடியும் என்பதற்குச் சான்றாகிறது.

ஓங்கூர்ச் சாமியாரையும் ஹென்றியையும் படைத்த கைகள்தான் சத்தியமூர்த்தியையும் உமாவையும் படைக்க முடியும்.

இந்திய கலாச்சார மரபின் பலத்தை இந்த நாவல் போல எடுத்து நிறுத்தியது வேறு எதுவும் இல்லை.

அப்பைய குருக்கள் மாதிரி ஒரு புரோகிதர் இருப்பதில் தவறில்லை. இருக்கும் மனிதர்களையும் அவர்களின் நல்ல குணங்களையும் அங்கீகரிப்பது தேவை.

தீயவர்களுக்குள்ளும் நல்ல அம்சம் உண்டு என்ற கருத்து –

போராட்டமில்லாமல் வாழ்க்கை இல்லை என்ற கருத்து –

விஞ்ஞானமும் சமயமும் வேறுவேறு மொழிகளில் உண்மையையே பேசுகின்றன என்ற கருத்து –
பாராட்டுக்குரியவை.

ஜெயகாந்தன் தன் படைப்பின் தரத்தில் மேலும் உயர்ந்திருக்கிறார். ஆன்மீக தரத்தில் இந்நாவல் உயர்ந்திருக்கிறது.

சா. கந்தசாமி :
சாயாவனம்

1. சிதம்பரம் சிங்கப்பூரிலிருந்து பணத்தோடு திரும்பித், தன் சொந்த கிராமத்திற்கு வருகிறான். சாயாவனம் கிராமம், மாயவரத்துக்கு அருகில் சுப்பிரமணிய அய்யரிடம் வனத்தை 500 ரூபாய்க்கு வாங்குகிறான். தன் மாமா சின்னாண்டித் தேவரின் உறவைப் பெறுகிறான். கலியபெருமாள், பழனி ஆகியவர்கள் துணையுடன் காட்டை அழிக்கிறான். சிதம்பரத்தின் சாகசத்தைக் கண்டு சின்னாண்டித் தேவரும் காட்டை அழிப்பதில் பங்கு பெறுகிறார்.

காட்டிற்குத் தீ வைக்கிறார்கள். தீ காட்டில் இவர்களுக்கு தேவைப்படாத மரங்களோடு, தேவைப்பட்ட மரங்கள், வீட்டையும் அழித்தது. ஊரே வியந்து சிதம்பரத்தை பாராட்டியது. ஆலைகட்டும் வேலை நடைபெறுகிறது. ஆசாரிகள் பலர் வேலை செய்கிறார்கள். சின்னாண்டித் தேவர் வீட்டுக் கல்யாணத்தில் சிதம்பரம் கலந்து கொள்கிறான். பவுன் பரிசாக வழங்குகிறான். கரும்புச் சாகுபடிக்கு ஏற்பாடு செய்கிறான் - இது கதை.

சிதம்பரம் 21/2 வயதாக இருந்தபோது தந்தை சாமியாரானார். தாய் கொழும்புக்குச் சென்றார். தேயிலைத் தோட்டத்தில் கடுமையான வேலை. தாய் அம்மை வந்து குளிர்ந்து போனாள். பிறகு உபதேசியார் வந்து பள்ளியில் சேர்த்தார்; படித்தான். கடைசியில் வேலை. பிறகு சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தான். இது சிதம்பரத்தின் பூர்வீகம்.

2. காட்டை அழிப்பதிலான ரசனை கதையில் பல இடங்களில் வருகிறது. காட்டைப் பகை எனக் கருதி அழிக்கிறான். நண்பன் எனக் கருதியும் துணை வேண்டுகிறான். இவன் காட்டை வாங்கியதில் சின்னாண்டித் தேவருக்கு முதலில் உடன்பாடில்லை. பிறகு இவனது பிற சாகசம் கண்டு அந்த வீரர் இவனை ஏற்கிறார். ஆனால் இருவர்க்கு இடையில் ஒரு மென்மையான - வெளிப்படாத பகைமை நிலவுகிறது. தேவருக்கு இவன் திறமை கண்டு பகைமை நாளடைவில் உறவாகிறது. ஊர் மக்கள் மத்தியில் இவன் முதலில் அந்நியன். நாளடைவில் உறவாகிறான்; மரியாதைக்குரியவனாகிறான். இடையிடையே ஊர் மக்களுக்கிடையில் நிலவும் உறவுகள். இரசிக்கத்தக்க சில மனிதர்கள். சாயாவனக் கதை இத்தகைய இரசனைகளில் நிலை கொண்டிருக்கிறது.

இடையில் பஞ்சவர்ணத்தோடு சிதம்பரத்தின் உறவு, தேவர் வீட்டுக் கல்யாணம் இவைகளும்.

3. கதையின் ஆழத்தில் வேறு சில உண்மைகள் உள்ளன. காடு அழிகிறது; கரும்பாலை தோன்றுகிறது. பழைய பண்டமாற்று உறவுமுறை மாறுகிறது. பண உறவு முறை பிறக்கிறது. சிற்சில வேதனைகளோடு – பிரச்சனைகளோடு நிலவுடைமை முறை முதலாளிய முறைக்கு இடம் கொடுக்கிறது. தேவர், பழமையின் சின்னம். பழமையின் நல்ல குணங்களோடு கூடிய மனிதர். சிதம்பரம் புதுமையின் சின்னம். இருவர்க்கிடையில் சில மன அவசங்களோடு மாற்றம் நடைபெறுகிறது. சிதம்பரத்தின் பார்வைகள், கடவுள், சடங்குகள் விமர்சனமாகின்றன. பழைய பண்ணை அடிமை முறை விமர்சனமாகிறது. இந்த விமர்சனம் மென்மையாக, அளவாக இருக்கிறது. கடுமையாக இல்லை. குடும்ப உறவுகளில் கணவன் மனைவி மேன்மை பற்றி சிதம்பரத்துக்கு அக்கறை இல்லை. நெல், பிற தானியங்கள், காய்கறிப் பயிர்களை மீறிக் கரும்பு வருகிறது. கரும்பு நிலைபெறுகிறது.

4 - 1. கதை நடைபெறுதலில் சில கடுமையான குறைபாடுகள் தெரிகின்றன. கதை நிகழ்வுகள் ஒன்றையடுத்து மற்றது என்ற முறையில் நிகழ்கின்றன; ஒன்றோடு மற்றது என்பதாகவும்கூட நடைபெறுகின்றன. ஒன்றினுள் மற்றது என்பதாகக் கதை வடிவங் கொள்ளவில்லை. காட்டோடு நடத்தும் போராட்டம், மனித உறவுகளோடு நடத்தும் போராட்டமாக பார்வை பெறவில்லை. மனித உறவுகளோடு நடைபெறும் போராட்டம், தத்துவப் பார்வையிலான போராட்டமாக நடைபெறவில்லை.

4 - 2. ஒரு சந்தர்ப்பத்தில் தேவர் சொல்லுகிறார், "ரொம்பக் கிட்டப்போய் பார்த்தா, அத்திக்காயை விண்டு பார்க்கிற கதைதான்." அப்பொழுது சிதம்பரத்திற்கு தவறுகளைச் சுமக்கிற மாதிரி ஒரு பிரமை. அவனுக்கு ஏன் இந்த ஏக்கம்? மனம் எதற்காக அடித்துக் கொள்கிறது? அவன் இதுவரையில் வாழ்ந்துவந்த வாழ்க்கையே தவறு நிறைந்ததுதானா? அத்திப்பழத்தை விண்டு பார்க்கக்கூடாது. வாழ்க்கையில் இது ஒரு நடைமுறை. இது போதாது; ஒரு கட்டத்தில் விண்டு பார்த்தாக வேண்டும். தன் வாழ்க்கையிலிருந்த தவறுகள், மேன்மைகள் இவற்றை ஆழமாகப் பார்த்தாக வேண்டும். கலை இதைச் செய்ய வேண்டும். வாழ்க்கைச் சித்திரம் போதாது. வரலாற்றை ஒட்டிய விவரிப்பும் போதாது. வாழ்க்கைக்கான அர்த்தத்தைத் தேடவேண்டும்.

4 - 3 1920 வாக்கில் நடைபெற்றிருக்கக்கூடிய தமிழ்நாட்டின், ஒரு வட்டாரத்தின் கதை இங்கு சித்திரிக்கப்படுகிறது. இந்தக் கதையில் ஒரு கட்டம்: கூலிக்கு ஆள் கூப்பிடுகிறான் சிதம்பரம். செட்டியார் தோட்டத்து ஆள் வர மறுக்கிறான். செட்டியார் தோட்டத்தில் உரிமையோடு வாழ்ந்த வாழ்க்கை என்ன? கூலிக்கு எப்படிப் போகமுடியும் என்பதாக அண்ணாமலை கூறுகிறான்.

சிதம்பரம் சிந்திக்கிறான். சமூக அமைப்பு முழுவதும் சிக்கல் நிறைந்ததுபோலவும், புரிந்து கொள்ளமுடியாதது போலவும்பட்டது. இந்தப் பிரச்சனை பற்றிய சா. கந்தசாமியின் கருத்தாகவும் இது இருக்கலாம். சிதம்பரத்தின் பார்வையில் இது புரிந்து கொள்ள இயலாததுதான். காட்டில் வைத்த தீ, பலவற்றை எரிக்கிறது. அப்போது சிதம்பரம் நினைக்கிறான்: தன் செயலை குற்றமுடையதாகவும் இவனால் நினைக்கமுடியவில்லை. தேவர் வருந்தியபோது சிதம்பரம் கூறுகிறான்: "போனதை நினைச்சுட்டு இருக்கமுடியாதுங்க. லாபமோ நஷ்டமோ" இப்ப வேலை கொஞ்சம் கலபமாச்சுங்க. தான் திட்டமிட்ட முறையில் செயல் நடைபெறவில்லை. தேவர் "மனிதன் புத்திக்கு எட்டாத அம்சம் - ஒரு சக்தி கீழே தள்ளி உருட்டிவிடுகிறது என்கிறார். "மாமா நான் சோர்ந்து போயிடமாட்டேங்க. நாம அந்தப் பாம்பரை இல்லே. அதுதான் மாமா விசேசம்" என்கிறான் சிதம்பரம்.

தேவையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருக்கும் சமூகம் தன்னளவில் வெகுதூரத்தில் இருப்பதாகவும், அதனோடு இணக்கமான முறையில் உறவுகொள்ள தன்னால் முடியாதது போலவும் சிதம்பரத்திற்குத் தோன்றியது.

சிதம்பரத்திற்குச் சில சந்தேகங்கள், சில உளைச்சல்கள், சில அறியாமைகள் உள்ளன. இவ்வாறு இருப்பதை அவனே அறிந்தும் இருக்கிறான். பிரச்சனை இவற்றின் வெளியீடலாகவே போய்விடுகிறது. நாவலில் இவை பரிமாணம் கொள்ளவில்லை. சிதம்பரத்தின் தந்திரமான நடைமுறை - கிராம மக்களை எப்படி வசப்படுத்துவது என்பது பற்றிய அவனது கண்ணோட்டம். இவற்றினூடே சிதம்பரத்தின் இரண்டாட்டம் நன்கு தெரிகிறது. சிதம்பரம் நிச்சயமாக ஒரு ஆளுமை உடையவனாக இல்லை. அவனுக்குள் சரிவர உருவாகாத வேறு சில வித்துக்களும் இருக்கின்றன. இவற்றில் இருந்து தொகுக்கப்பட்ட ஒரு மனிதன், படைப்பில் தேவை.

த.17.

மனித உறவுகள்தான் இலக்கியத்தின் மையம். சமுதாய மாற்றத்தின்போது, மனித உறவில் நிகழும் மாற்றங்கள் அற்புதமானவை. இந்த நாவலில் இந்தப் பிரச்சனை இடம்பெறும் கட்டங்கள் – பகுதிகளே சிறப்புடையவை. இதிலேயே நாவல் மையங் கொண்டிருக்க வேண்டும். காடழிப்பே நாவலில மையமாகியிருக்கிறது. மற்றவை ஒர்த்திற்குப் போய்விட்டன. சமூக மாறுதலைச் சித்திரிக்கும் முறையில் "சாயாவனம்" சிறந்த நாவல் என்பதில் ஐயமில்லை.

ஒரு தத்துவ கன பரிமாணம் கொள்ளவில்லை. இதுதான் நாவலின் பெருங்குறை. இலக்கியம் வாழ்க்கைச் சித்திரிப்பு என்பதுதான் சா. கந்தசாமியின் கொள்கை. சிறுகதைதான் கந்தசாமியின் களம். நாவல் இவர் கையில் சிறுகதைகள் சிலவற்றின் சேர்க்கையாகிவிடுகிறதோ! சிதம்பரம் ஆலைத் தொழிலதிபராகக் கதை தொடரலாம். பிரச்சனைகள் மேலும் கடுமையாகிவிடும். ஒரு மார்க்சியவாதியைவிடச் சில அம்சங்களில் நன்றாகவே செய்திருக்கிறார்.

– 1965

நீல பத்மநாபன் :
மின் உலகம்

1. ராஜசேகரன் என்ற ஜூனியர் என்ஜினியரின் சாதாரண வாழ்க்கையில் ஒரு நாள் கதையை 'மின் உலகம்' கூறுகிறது. சலிப்பான வாழ்க்கையில் இடைவிடாத உழைப்பில் அவர் ஈடுபட வேண்டியிருக்கிறது. அலுவலகமும் வேலையுமே தன்னை ஆக்கிரமித்து விடுகிறது. வீடு அவருக்கு வெளியில் தான் இருக்கிறது. இவர் வாழ்க்கைத் தடத்தில் அசாதாரணமான நிகழ்ச்சிகள் சில நடைபெற்றிருந்தாலும் அவற்றிற்கு இடையில் ராஜசேகரனை நாம் காணமுடியாது.

அசாதாரணத்தைச் சாதாரணமாக்கித்தான் சிலரால் வாழமுடிகிறது. இவருக்குக் கிடைத்த வாழ்க்கை, வீரத்தையோ சாகசத்தையோ இவரிடம் எதிர்பார்க்கவில்லை. மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயத்தை இவர் கடமையாக்கிக் கொள்கிறார். தனது வேலையில் இது கடமை. தான் வேலை செய்வது என்பது இதுதான் என்று இயல்பாக ஏற்றுக்கொண்ட நிலைமை.

தனக்குக் கீழ் பணிபுரிபவர்களிடம், பொது மக்களிடம் கூடியவரை நேர்மையாக – உதவிபுரியும் எண்ணத்துடன் – அதுவும் தன் வேலைதான் என்ற முறையில் செய்யும் ஒரு மனோபாவம், சராசரி மனிதனாகவே ஆகிவிட்ட ஒரு இயல்பான நிலைமை. அதிகம் எதிலும் ஒட்டமுடியாத – கிளுகிளுப்புக்கு இடம் இல்லாத வாழ்க்கை. அசாதாரணத்துக்கு மத்தியில் தன்னால் வாழ இயலாத நிலைமை. இத்தகைய ஒரு படப்பிடிப்பைத்தான் நீல பத்மநாபன் தந்திருக்கிறார்.

2. இத்தகைய படப்பிடிப்புக்கான தேவை என்ன? ஆமாம், இது படப்பிடிப்புத்தான். இது படைப்பு அல்ல. படத்தைச் சரியாகப் பிடித்த அளவில்தான் இது படைப்பு. A.J. Cronin டாக்டர் தொழிலை விளக்கிய மாதிரி, ஒரு என்ஜினியருடைய வாழ்க்கையை "மின் உலகம்" விளக்கவில்லை. அத்தகைய ஒரு பேராசை நீல பத்மநாபனுக்கு இல்லை.

சொல்வதை ஆர்ப்பாட்டம் இல்லாமல், அடக்கமாகச் சொல்லுதல் என்பது இவர் தனக்கு வகுத்துக் கொண்ட பாணி. வாழ்க்கையைப் பெரிய இலட்சியங்களின் வழியே பார்க்க வேண்டாம் என்ற ஒரு எண்ணம். முழு வாழ்க்கையையும் ஏதாவது ஒரு சிந்தனை முறைக்குள் அடைத்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு.

வாழ்க்கை, நாம் சந்திக்கிற அதே இயல்புடன், யதார்த்தமாக இருக்கிறது; இதற்கு முன்னும் இல்லை பின்னும் இல்லை. அதற்கு ஆழமும் இல்லை. அகலமும் இல்லை என்பதான ஒரு தோற்றம். வாழ்க்கையை ஒரு ஆழத்துடன் ஒரு செறிவுடன் வாழ்வது இங்கு இல்லை; இங்கு சாத்தியம் இல்லை. சாதாரணமாகிவிடுவது தான் இங்கு தேவை. இதுவே இங்கு லட்சியம்.

வாழ்க்கையை அது கண்ணில் படுகிற மாதிரியே சொல்லிவிடு; அர்த்தத்தையும், ஆழத்தையும் ஒரு தத்துவவாதி பார்த்துக் கொள்ளட்டும் – அது உங்களின் வேலை அல்ல. இத்தகைய மனிதனுக்கு தீவிரமான பழைய நினைவுகள் – கனவுகள் கூட இல்லை. பலவகையான சூழல்களுக்கிடையில் நெருங்கி, நொறுங்கி, தன்னை வைத்துக் கொண்டிருக்கிற தனது இருப்பைமட்டுமே வைத்துப் பார்த்துக்கொள்கிற ஒரு மனிதன் ராஜசேகரன்.

எல்லோராலும் வெறுக்கப்படுகிற, யாருக்கும் பயன்படாத ஒரு மனிதன் தான் என்ற உணர்வை மட்டுமே உடைய மனிதன் இவன். கதையில் சிக்கல் எதுவும் இல்லை என்பதற்குக் கூட இதுதான் காரணம்.

3. ஒரு சாதாரணமான மனிதனையே சித்திரிக்கும் போக்கில், ஒரு சமுதாய விமர்சனமும் கூடவே வருகிறது. மேலதிகாரிகளின் சுயநலம். பிற துறை மேலாளர்கள் கூட்டுறவு. இவர்கள் தம்மையே எதிலும் முதன்மைப்படுத்திக் கொள்ளல். பொதுமக்களின் அவசர மனோபாவம், சுயநலப்பண்பு முதலியவை. இதற்கிடையில் ராஜசேகரன் நல்லவன். வேறை நோக்கிச் சென்றுவிடாத தன்மை – தன்னைச் சூழ உள்ள ஒரு தீய சூழலில், தான் நல்லவனாக இருக்கும் ராஜசேகரன்.

4. ஒரு வகையில் நீல பத்மநாபனுடைய குணங்களை ராஜசேகரன் பிரதிபலிக்கிறான் என்று கொள்வது பொருத்தமாக இருக்கக்கூடும். ஒரு ஜூனியர் என்ஜினியரைப் பெருமைப்படுத்தும் நோக்கில் புனையப்பட்டது இந்நாவல். தீவிரமான உண்மை எதுவும் குறுக்கே வந்துவிடக் கூடாது என்பதால், கணவன் மனைவி உறவிலுள்ள சோர்வே இதில் அதிகம் இடம் பெறுகிறது. குழந்தையைக் கொஞ்சுவதில் கூட தன்னை மறந்த மகிழ்ச்சி இல்லை. நீல பத்மநாபனுடைய இந்தக் குணம் அவருடைய எல்லா நாவல்களிலும் இருப்பதாகக் கருதலாம். உறவுகளில் ராஜகோபாலன் மெத்தனம். வாழ்க்கைப் பாதிப்பே சிலரிடம் இருக்கிறது. வாழ்க்கையைப் பாதிப்பது இவரிடம் இல்லை. இவர் கொள்கையும் இல்லை.

நல்லதுபற்றி இவருடைய பாத்திரங்களுக்கு ஒரு நாட்டம் உண்டு. அதைப் போராட்டமாக்கிக் கொள்வது இவர்களுக்கு ஆகாது. வாழ்ந்தாக வேண்டும் என்பதுதான் இவரது தாரக மந்திரம். வாழ்வதற்காகச் சாவை ஏற்றுக் கொள்ளலாம், தப்பில்லை. வாழ்க்கையின் வேர்களை தெரிந்து கொள்ளாமல் -- அப்படியே மெல்ல மிதந்து செல்பவர்களில் ஒருவன்தான் ராஜசேகரன். இவன் தீவிரமாகச் சிந்தித்து தன் கூட்டை கலைத்துக் கொள்ளமாட்டான். தன் வரலாற்றுக் கூறுகளைக் கலந்து தன்னை நியாயப்படுத்திக் கொள்வது போன்ற ஒரு நாவல் இது. இருக்கிற நிலைமையைக் காப்பாற்றும் ஒரு மனிதர் இவர்.

5. ஆரவாரப்படுத்திக் கொள்ளாமல் வாழ்க்கையை முழுதாக்கிப் பார்க்காமல், வாழ்க்கையிலிருந்து ஒரு நாளை எடுத்துக்கொண்டு அடக்கமாக எழுதுவதும் ஒரு பாராட்டத்தக்க விஷயம்தான். எடுத்ததை எல்லாம் உணர்ச்சிகரமாக – கனவியலாக – துன்பியலாக மாற்றிவிடுகிற தமிழகச் சூழலில் அடக்கமாக எழுதுவதும் ஒரு திறமை தான். படப்பிடிப்புக்கு இந்த அடக்கம் நல்ல, தேவையான, ரசிக்கத்தக்க உத்திதான். வாழ்க்கையை அழகுபடுத்தியோ, அசிங்கப்படுத்தியோ, பெருமைப் படுத்தியோ, சாகசப்படுத்தியோ பார்க்காமல் இயல்பாகப் பார்க்கும் திறம்.

6. இந்த நாவலின் நடை, தமிழோடு கலந்து விட்ட ஆங்கிலக் கலப்போடு கூடிய நடை. இது வித்தியாசமானது, கவனிக்கத்தக்கது. மனைவியோடோ, குழந்தைகளோடோ, மேலதிகாரிகளோடோ, பொது மக்களோடோ மோதி இவன் என்ன செய்யப் போகிறான்? மோதிய மூன்றாவது நாள் மறுபடியும் சாதாரண மனிதன் ஆகிவிட வேண்டியவன் தானே? இவன், இவர்கள் எல்லோரோடும் தான் இருக்க வேண்டியவன். முனைகள் உறுத்துகின்றன – இவை மழுங்கிவிட வேண்டும். நல்லது – கெட்டதுக்கு அப்பாற்பட்ட ஒரு மன நிலை வாய்க்க வேண்டும்; வாய்த்திருக்கிறது. படப்பிடிப்பில் புனைவியலானதும் இருக்கிறது. இவருடையது சாதாரணமான இயல்பான படப்பிடிப்பு; எதிரொளிப்பு. நீல பத்மநாபனுடைய வானத்தில் நட்சத்திரங்கள் இல்லை. தீக்கங்குகளே இருக்கின்றன. இவற்றை வைத்து நீல பத்மநாபன் அடுப்பு எரிக்கிறார்.

நீல பத்மநாபன் :
தேரோடும் வீதி

சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்கங்களில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்திருக்கும் நீலபத்மநாபனின் 'தேரோடும் வீதி'யை படிக்கும்போதும், படித்தபின்பு தொடர்ந்து சிந்திக்கும்போதும் ஏற்படும் குழப்பமான உணர்விலிருந்து (Mixed Feeling) என்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. நாவல் என்றும் இலக்கியம் என்றும் இதை எந்த இலக்கண வரையறைகளோடு குறிப்பிடுவது? ஒரு இருபத்தைந்து ஆண்டுக்குள் தமிழிலக்கியத்தோடு உறவுடைய பழைய எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், வெளியீட்டு நிறுவனர்கள், இலக்கிய நண்பர்கள், திறனாய்வாளர்கள் என்று மிகப் பலரைப் பற்றிய ஆசிரியரின் அல்லது சிவ.கதிரேசனின் விருப்பு வெறுப்புகள் – பெரும்பாலும் வெறுப்புகள் விரிவாக இந்த நூல்களில் கொட்டப்பட்டுள்ளன. இலக்கியம் என்று இத்தகைய அனுபவங்களை எப்படி மதிப்பிடுவது? இம்மாதிரி மேலும் சில குழப்பங்கள். ஒரு வாசகன் என்ற முறையில் எனக்குள் பெருத்த கலவரத்தை இந்நூல்கள் ஏற்படுத்துகின்றன. என்னைப் பற்றி வேறு ஒரு பெயரில் இந்நூலில் இடம்பெற்றுள்ள சில தாக்குதல்களை என்னிலிருந்து ஒதுக்கிக் கொண்டுதான் நான் இப்பிரச்னைகளை அணுகுகிறேன்.

நீல பத்மனாபன் அல்லது இந்த நாவலில் தன் அனுபவங்களைத் தருபவராக வரும் சிவ. கதிரேசன், 'என்னைச் சூழ இருக்கும் வாழ்க்கையைச் சித்தரிக்கிறேன். இதில் வரும் சிலருடைய முகங்கள் நம் சமகாலத்து மனிதர்களின் முகங்களைப் போல இருக்கின்றது என்பதற்கு நான் எப்படி பொறுப்பாளியாவேன்? நான் எழுதுவது இலக்கியம்' என்று கூறிக்கொள்ள முடியும். நாவலினுள்ளும் இப்படி ஒரு பிரச்னை வருகிறது. சிவ.கதிரேசனின் மனைவி, தன் உறவினர்கள்பற்றி அவர்களின் செயல்கள் பற்றி, இந்த நாவலில் எழுதப்பட்டிருப்பதனால் தன் உறவினர்களும் தானும் கோபப்படுவதாகக் கூறுகிறார். இலக்கியம் என்று புரிந்து கொள்ளாமல் அவர்கள் கோபம் கொள்வது பற்றி சிவ கதிரேசன் குறை சொல்லுகிறார், வருந்துகிறார். சுய விமர்சனம் செய்து கொள்ளும்பாணியில் தன்னைத் தானே நொந்துகொள்கிறார். இதே எழுத்து முறையை தொடர்ந்து கடைப்பிடிக்கிறார். ஒருமுறை பெரியப்பா, தன்னைப் பற்றி இவர் எழுதியதற்காக பலர் மத்தியில் வைத்து இவரைக் கடுமையாகத் திட்டுகிறார். இந்த நூலில் சொல்லப்பட்டிருக்கும் எழுத்தாளர் முதலியவரை நாம் எளிதாக இனம் கண்டு கொள்ளமுடியும். எழுத்தாளர்கள், நண்பர்கள்,

பத்திரிகையாளர்கள் முதலிய பலரின்மீதும் பழிதீர்த்துக் கொள்வதென்ற பாணியில் சிவ. கதிரேசன் எழுதுகிறார். இலக்கியம் வாழ்க்கையை அப்படியே பிரதிபலிக்க வேண்டுமா? தன்னைவந்து பாதிக்கும் வாழ்க்கையை அல்லது வாழ்க்கை அனுபவங்களைப் பலமுறை அசைபோட்டு, வாழ்க்கை தந்த உடனடி அதிர்விலிருந்தும், கசப்பிலிருந்தும் விலகிநின்று, நிதானமடைந்து, இதற்கும் மேலாக வாழ்க்கை, மனிதர்கள், அனுபவங்கள் ஆகியவற்றின் ஊடாக தெரியவரும் வாழ்வியல் சிக்கல்கள், நெருக்கடிகள், வரலாற்றோடும் சமூகத்தோடும் இவை பெற்றிருக்கும் உறவுகள், இவற்றுக்கிடையில் வாழ்வுக்கான அர்த்தங்கள் – இப்படி ஆழ்ந்து சென்று படைப்பது இலக்கியமா? இப்படி ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டு பார்க்கும்போது உறுதியாகச் சொல்லலாம்: உடனடி விருப்பு வெறுப்புகள், கோபங்கள் இவற்றைத்தான் சிவ. கதிரேசன் இங்கு தொகுத்து வைத்திருக்கிறார். இன்னொன்றையும் இங்கு சேர்த்துச் சொல்லலாம். சிவ.கதிரேசனுக்கும் நீல பத்மநாபனுக்கும் இடைவெளி மிகவும் குறைவு. இந்த இடைவெளி எத்தகையது என்பது இப்பொழுது ஆய்வுக்குத் தேவையில்லை.

நீல பத்மநாபன் இந்த இரண்டு நூல்களில் பனிரண்டு வயது முதற்கொண்டு சிறுகதை நாவல்கள் என தொடர்ந்து எழுதியதையும், எழுதியவுடன் தனக்கு அண்மையில் உள்ள நண்பர்களின் பார்வைக்குக் கொண்டு சென்றபோது தனக்குக் கிடைத்த ஆதரவைக் காட்டிலும் தன்மீது பொறாமை கொண்ட நண்பர்களின் எரிச்சல்கள், பொய்கள், பாராமுகம் கொண்டதையும், வெளியீட்டு முயற்சிக்கு நண்பர்களும் பத்திரிகைகளும் உதவாதது பற்றியும் பின் அவற்றைத் தன் பணத்தைச் செலவழித்து தானே வெளியிட்டது பற்றியும், வெளியிட்ட புத்தகத்தை இலவசமாக அனுப்பியபோதும், நண்பர்களிடமிருந்து உற்சாகம் கிடைக்காதது பற்றியும் விற்பனைக்குப் புத்தகம் தந்தால் விற்று முடித்த பிறகும் புத்தக வியாபாரிகள் பணம் அனுப்பாதது பற்றியும் பரிசு தனக்கு நெருங்கி வரும்போது பிறர் தட்டிச் சென்றது பற்றியும் கருத்தரங்குகள், இலக்கிய விழாக்கள் முதலியவற்றில் தான் அவமதிக்கப்பட்டது பற்றியும், ஒவ்வொரு முறையும் தனக்கு நேர்ந்த இத்தகைய அனுபவத்திற்காகத் தான் மனம் வருந்தி நொந்தது பற்றியும் மிக விரிவாக எழுதுகிறார். மனைவி, உறவினர்கள், தன் சொந்த வாழ்க்கை, தன் தொழில், அதனால் எழுத்து வாழ்க்கைக்கேற்படும் இடையூறுகள் பற்றியும் எழுதுகிறார். இவற்றிலிருந்து நீல பத்மநாபனின் வாழ்க்கையின் பெரும்பகுதியை நாம் அறிந்து கொள்கிறோம். நீல பத்மனாபன் என்ற ஒரு எழுத்தாளரின் தனி வாழ்க்கை, சமூக வாழ்க்கை ஆகியவற்றின் சில பரிமாணங்களை நாம் அறிகிறோம்.

குறிப்பாகச் சமூகச் சூழலில் ஒரு எழுத்தாளரின் வாழ்க்கையை நாம் கூடியவரை அறிகிறோம். திருவனந்தபுரத்தில் அல்லது கேரளப் பகுதியில் இருந்து கொண்டு தமிழில் தன் படைப்புக்களை எழுதி வெளியிட முன்வரும்போது ஒரு எழுத்தாளர் சந்திக்கும் சில பிரச்னைகள் என்ற முறையிலும் சிலவற்றை அறிகிறோம். வேறு சிலர் மாதிரி நீலபத்மநாபன் திராவிடர் இயக்கப் பற்றாளர் அல்லர். அவரது தமிழ்நடையும் அவர் தேர்ந்துகொள்ளும் கதை மாந்தர்களும் பெரும்பாலும் கேரள வண்ணமுடையவை. இவை திராவிட இயக்க, தமிழ்ப்பெருமை பேசும் தமிழகச் சூழலில் விரைவில் எடுபடா. இந்நிலையிலும் எழுத்தாளர்க்குச் சில தனிச் சிரமங்கள் ஏற்படுகின்றன. கேரளாவின் சமூகச் சூழலுக்கும் தமிழகத்தின் சமூகச் சூழலுக்கும் இடையில் தென்படும் சில முக்கியமான வேறுபாடுகள் எழுத்தாளரைக் கடுமையாகப் பாதிக்கின்றன. கேரளச் சூழலில் எதார்த்த இலக்கியம் இரசிக்கப்படும். தமிழகச் சூழலில் கற்பனை இலக்கியத்துக்கு மவுசு அதிகம். கேரளச் சூழலில் வாழ்க்கை சொல்லப்படுகிறது. தமிழகச் சூழலில் வாழ்க்கை அழகாக முழுமையாக பிசிறு தென்படாமல், புனையப்பட்டிருக்க வேண்டும். நீல பத்மனாபனின் படைப்புக்கள், கேரளச் சாயலிலானவை. தமிழகத்தில் உடனடிச் செல்வாக்குப் பெற இயலாதவை. மேலும் ஒன்று, கேரளாவில் கடந்த நாற்பதாண்டுகளில் ஏற்பட்ட சமூக வளர்ச்சி தமிழகத்தில் இல்லை. தமிழகத்தில் ஏற்பட்டிருப்பது வணிக வளர்ச்சி. வியாபாரிகளின் வளர்ச்சி இலாபத்தை குறியாகக் கொண்டே, இங்கு பலவும் நடைபெறுகின்றன. உண்மையான படைப்பாளிகளைக் காட்டிலும் போலிகள் இங்கு விரைவில் செல்வாக்குப் பெறமுடியும். இதனாலும் நீல பத்மநாபனின் மனக் கவலைள் அதிகரிக்கின்றன. நீல பத்மனாபன் தன் அனுபவங்களை சமூக வரலாற்றுடன் பொருத்திப் புரிந்து கொள்ளவில்லை. இவரது மனக்கவலைகள் இவரைக் கூர்மையாகப் பாதிப்பதற்கு இதுவும் ஒரு காரணம். நீல பத்மனாபன் தன் கதை மாந்தர்களையும் சமூக வரலாற்றுச் சூழலில் வைத்துப் பொருத்திப் படைப்பதில்லை. உணர்வுகள் மேலோங்கியவர்கள், இவரின் கதை மாந்தர். உணர்வுக் கொந்தளிப்போடு கூடிய இவர்கள் இறுதியில் அடைவது தோல்வி.

நீல பத்மநாபன் தனது முயற்சிகளின்போது அடையும் சிரமங்கள் – தோல்விகள் பற்றி நிறையச் சொல்லி இருக்கிறார். எழுதிப் புகழ்பெற வேண்டும் என்ற ஆசையைக் குறை சொல்லுகிறார். ஆனாலும் புகழாசையை அவரால் விடமுடியவில்லை என்பதைப் பலமுறையும் சொல்லுகிறார். தன்னைத்தானே 'ஆத்ம பரிசோதனை' செய்து கொள்கிறார். பிறரைப் பற்றிய எரிச்சல்கள் ஏற்படும்பொழுது தன் ஆத்ம

சுத்திக்காகக் கடவுளைத் தொழுகிறார். இவரது பக்தி இவரைப் பொறுத்தவரையில் ஆழமானது, அசைக்க முடியாதது. 'புகழ்' ஆசை குற்றமற்றது என்பதும் இவரது அழுத்தமான நம்பிக்கை. அடிக்கடி இவர் ஆத்ம பரிசோதனை என்ற பெயரில் தன்னைத்தானே 'திறந்து' பார்த்துக் கொள்ளும்பொழுது இவரது ஆத்மாவுக்குள் நெளிவது புழுக்கள் என்றுதான் நமக்குச் சொல்லத் தோன்றுகிறது. காரணம் இவரது ஆத்ம பரிசோதனை, இவரைத் தூய்மைப்படுத்துவதில்லை. மனிதர்களின் குறைகளைக் கடந்து பார்ப்பதான பார்வை இவருக்கு ஏற்படுவதில்லை. பக்தி இவருக்கு வாய்க்கிறதே தவிர ஞானம் வாய்ப்பதில்லை. தான் பழகிய உறவினர்கள், மனிதர்கள் பற்றிய விவரங்கள் இவரை அடைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த மனிதர்கள் இவருக்குள் உறுத்தல் ஏற்படுத்துகிறார்கள். எழுத வேண்டுமென்ற உக்கிரத்தை இந்த மனிதர்கள் ஏற்படுத்துகிறார்கள். உட்கார்ந்தவுடன் இவர் எழுதித் தீர்க்கிறார். பலமாதங்கள் விடாப்பிடியாக, உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் எழுதி முடித்தால்தான் இவருக்கு நிம்மதி. எழுதும்போது உள்ளிருந்து மனிதர்களும் விவரங்களும் வெளிப்படும் அதே தோரணையில் எழுதி வைக்கிறார். பக்குவப்படுத்துவதற்கான நிதானம் இவரிடத்தில் குறைவு. எழுதும் ஆவேசம் இவரைப் படைப்பாளியாக்கியிருக்கிறது. பத்திரிகைகள் இவற்றை வெளியிடாதபோதும் எவ்வளவு பணம் செலவிட்டும் வெளியிட்டு தன் புகழ் ஆசையை நிறைவு செய்து கொள்கிறார். மனைவியின் நகையை அடமானம் வைத்தும் செலவழிக்கிறார். முப்பதாயிரம் இதற்காகச் செலவிட்டது பற்றியும் சொல்லுகிறார். இதனால் வீட்டில் குழப்பங்கள் பெருகும் என்பதில் ஐயமில்லை. இலக்கியத்திற்காகச் செலவழித்தேன் என்று இவர் பெருமைப்பட்டுக் கொள்ளும்பொழுதும் அல்லது கவலைப்பட்டுக் கொள்ளும்பொழுதும் இதனால், மனைவியிடமிருந்து, குடும்பத்திடமிருந்து இன்பத்தையும், பாதுகாப்பையும் தான் பறித்திருப்பது பற்றி எழுத்தாளர் நினைப்பதில்லை. மனைவியின் தாக்குதல் அதிகரிக்கும்பொழுது எழுத்தாளர் பெரிதும் நொந்து கொள்கிறார். இவரிடம் நாம் அனுதாபம் கொள்கிறோம். இவரது சமூக அறிவு பற்றி வருந்துகிறோம். இலக்கியத்தை வாழ்விப்பதைக் காட்டிலும், தன் புகழ் ஆசைக்கு இவர் தீனியிடுவது நன்கு தெரிகிறது. அதனால்தான் தனக்குரிய பாராட்டு கிடைக்கவில்லை என்று நொந்து கொள்கிறார்.

நம் எழுத்தாளர்கள் பணத்துக்காக எழுதுகிறார்கள். பணம் சம்பாதிக்க இயலாவிட்டாலும் புகழ் சம்பாதிக்க எழுதுகிறார்கள். இந்த இரண்டும் உடைமைச் சமூகத்தின் குணங்கள். பணம் சம்பாதிப்பது குற்றம்,

புகழ் சம்பாதிப்பது நல்லது என்று சிலர் நினைக்கக்கூடும். பணம் சம்பாதிக்க இயலாவிட்டாலும் புகழாவது கிடைக்குமென்றால், பட்ட துன்பங்களுக்கு புகழ் ஒரு ஆறுதல் என்றும் சிலர் நினைக்கக்கூடும். இத்தகைய நினைப்பும் உடைமை சமூகம் சார்ந்த நினைப்பே தவிர வேறில்லை. பணம் சம்பாதிப்பதற்காகப் படைப்பு என்று ஆகும்போது நிறைய கோளாறுகள் ஏற்படுகின்றன. தமிழ்நாட்டு எழுத்தாளர்களிடம் இந்தக் கோளாறுகளை நாம் பெருமளவில் பார்க்கிறோம். புகழ் சம்பாதிப்பது எனத் தொடங்கும்போதும் இதற்குச் சற்றுக் குறைந்த அளவில் கோளாறுகள் நடைபெறுகின்றன. ஒருவர் படைப்பை சில பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. இதில் ஒருவர்க்கு வரும் புகழை அல்லது பணத்தை கெடுக்க சாகசங்களும் சதிகளும் நடைபெறுகின்றன. நல்ல இலக்கியம் வெளிவருவதில்லை. இரண்டாம்தர அல்லது மூன்றாம்தர இலக்கியத்திற்கு பரிவும் பாராட்டும் கிடைக்கிறது. இந்த உடைமைச் சமூகப் போட்டியில் தரமான இலக்கியவாதி வெற்றி பெறுவது சிரமம். தரமான இலக்கியம் வெளிவருவதற்கும் சாகசங்கள் தேவைப்படுகின்றன. இந்த நிலையில் ஒரு எழுத்தாளர் தன் படைப்பைத் தானே வெளியிடத் துணிவதும் தவிர்க்க இயலாததுதான். பரிசு அல்லது பாராட்டை நோக்கமாகக் கொண்டு இலக்கியம் படைப்பது சாத்தியமில்லை. படைக்கப்பட்ட தரமான இலக்கியம் சில சமயம் பரிசு பெறலாம். பாராட்டுப் பெறலாம். பரிசுகளை நோக்கி ஒரு நல்ல படைப்பாளி காத்திருப்பதில்லை. நல்ல படைப்பு என்பது சமூக நெருக்கடிக்கிடையில் மனித வாழ்வுக்கான அர்த்தங்களைத் தேடிச் செல்வது. இந்த பயணம் ஒரு எழுத்தாளன் அல்லது ஒரு மனிதனிடம் பல பரிமாணங்களையும் தீவிர சிரத்தையையும் பெரும் துன்பங்களையும் கோரி நிற்கிறது. இத்தகைய பயணத்தின்போது பரிசையோ பாராட்டையோ அவரால் நினைத்துப் பார்க்கக்கூட இயலாது. இத்தகைய மனிதன் குடும்பத்தோடுகூட சமாதான சகவாழ்வு நடத்துவது கடினம். என்னிடம் நிறைய விவரங்கள் உள்ளன. கதைகள் உள்ளன. இவற்றை நான் வெளியில் கொட்ட வேண்டும். இதற்காக நான் இலக்கியம் எழுத வேண்டும் என்று கூறிக்கொள்ளும் பொழுது இலக்கியத்திற்கான இந்த நோக்கம்கூட பழுதுடையதுதான். இலக்கியம் தன் தீவிர இயக்கத்தின் போது சமூகத்திற்குள்ளும் வாழ்க்கைக்குள்ளும் வரலாற்றுக்குள்ளும் துருவிச் சென்று தத்துவத்தில் நிலைகொள்ளும். இப்பொழுது இலக்கியத்தையும், வாழ்க்கை, வரலாறு, தத்துவம் ஆகியவற்றையும் பிரித்துக் காண இயலாது. தனி மனிதர்கள் பற்றியும், சில நிகழ்ச்சிகள் பற்றியும் ஒருவர் கொண்ட எரிச்சல்கள் கோபங்கள் எல்லாம் இடம் தெரியாமல் கரைந்துபோய்விடும். இத்தகையது இலக்கியம். எது வியாபாரம் என்று தொடங்கி மளிகைக்கடை

வைப்பது, துணிக்கடை வைப்பது வியாபாரம், சந்தனக் கடை வைப்பது கலை என்று பேசமுடியாது. நீல பத்மனாபன் இன்று விவரிக்கப்படும் படைப்பு பற்றிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறார். தன் படைப்பு, தன் பெருமை, தன் புகழ் என பரிதவிக்கிறார். வாழ்க்கை தரும் அடிகள், காயங்கள் இவற்றிலிருந்து மனிதன் தன்னை உயிர்ப்பித்துக் கொள்ளவேண்டும். ஏசுநாதர் மாதிரி ஒரு படைப்பாளி தன்னை உயிர்ப்பித்துக் கொள்ளமுடியும். இப்படித் தன்னை உயிர்ப்பித்துக் கொள்வதற்கான வளம் ஒருவனுக்குள் இருக்க வேண்டும். இந்த வளம் என்பது வரலாற்று நீரோட்டத்தில் தன்னைக் கண்டு தெளிவு பெறுவதோடு தொடர்பு உடையது. தன்னை இழந்து சமூக வெள்ளத்தில் கரைவதோடு தொடர்பு உடையது. நீல பத்மநாபனுக்குள் இந்த வளம் இல்லை. இந்த வளம் எப்படிக் கிட்டும் என்பதற்கான பார்வையும் இல்லை.

இப்படி ஒரு ஆழ்ந்த இலக்கியப் பார்வை நீலபத்மநாபனிடம் இல்லை. இதனால்தான் சில முக்கியமான உண்மைகளை இவர் காணத் தவறுகிறார். மந்திரமூர்த்தி இவரை மதிக்கவில்லை. தன்னைப் பற்றிய பெருமிதத்தில் அவர் கரைந்து அமர்ந்திருக்கிறார். இதைத்தான் நீலபத்மனாபன் விமர்சனமாகச் சொல்லுகிறாரே ஒழிய இந்தக் குணங்களோடு அல்லது இவற்றை மீறி மந்திரமூர்த்தி என்னும் படைப்பாளியை இவர் காண்பதில்லை. பரிபூரணம் அல்லது சந்திரகுப்தன் இவர்களது சாகசங்களும் நரித்தனங்களும் இவரைப் பாதிக்கின்றன. இந்தப் பாதிப்பின் விளைவாக பரிபூரணம் அல்லது சந்திரகுப்தனின் படைப்புக்களில் குறைகளைத்தான் காண்கிறார். இவர் படைப்பில் செக்ஸ் உணர்வைக் கண்டு கோபி கிருஷ்ணன் விமரிசனம் சொன்னபோது 'நீ என்ன வாழ்ந்தாய்' என்று பொருமுகிறார். தன் படைப்புக்கள் பற்றி யார் விமரிசனம் முன்வைத்தாலும் இவர் ஏதாவது ஒரு பதிலோடு திருப்தி அடைகிறார். என்னைக் குறை சொன்னால் உன்னை நான் சொல்வேன், உன்னிடம் குறை கண்டுபிடித்துச் சொல்லுவேன் என்று வீம்பு பேசும் ஒரு சிறுவனைப் போலத்தான் நீலபத்மனாபனின் எதிர்வினைகள் உள்ளன. இவர் படைப்பு முயற்சி கண்டு எல்லோரும் இவரைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டாட வேண்டும் என்று இவர் எதிர்பார்க்கும்போது, அடிபட்ட ஒரு குழந்தை தாய் தன்னை வாரியணைத்துக் கொஞ்சவேண்டும் என்று எதிர்பார்ப்பது போல்தான் உள்ளது. சில குணக்கேடுகள் இருந்தாலும் ஒரு எழுத்தாளனிடம் நல்ல படைப்புகள் எவ்வாறு உருவாகின்றன என்ற சிந்தனை இவரிடம் இல்லை. சில குணக்கேடுகள் இருந்தாலும் ஒரு எழுத்தாளன் இயங்குவது பற்றி இவரிடம் சிந்தனை இல்லை. நான்

இலட்சியவாதிகளைப் பற்றி எழுதுவதில்லை. என்னைப் போன்ற சாதாரணமானவர்களைப் பற்றிச் சொல்கிறேன் என்றவர் சொல்லும்போது இவரின் எளிமையை நாம் மதிக்கிறோம். ஆனால் இவரது இயலாமை, அறிவெளிமையை நாம் விமரிசனம் செய்கிறோம். இவரது புகழாசை, இவர் தன்மானம் பாதிக்கப்பட்ட சமயங்களில் இவரிடம் வீர உணர்வைத் தோற்றுவிக்கவில்லை. மாறாக இவர் வெந்து புலம்புவதைத் தான் செய்கிறார். தன்னைப் பாராட்டுபவரிடம் இவர் ஏமாந்து போகிறார் என்பதற்கும் இந்த நூலில் சில ஆதாரங்கள் உள்ளன. பேராசிரியர் ரத்தினவேலிடம் இவர் ஏமாந்தது ஒரு உதாரணம்.

இப்படியெல்லாம் சில விமரிசனங்களை நீல. பத்மநாபன் மீது நாம் சொல்லும்போது இந்த நூலை இலக்கிய ரீதியில் மதிப்பிடுவது எப்படி என்ற பிரச்னையில் கவனம் வைத்துத்தான் இவற்றைச் சொல்கிறோம். தரமான படைப்பிலக்கியம் என்ற தகுதியை இந்த நூல் பெறுவதில்லை. ஒரு எழுத்தாளன் தன் எழுத்துக்களோடும் நண்பர்கள் வெளியீட்டாளர்களிடமும் கொண்ட எதார்த்த ரீதியிலான உறவுகளை முழுமைப்படுத்தி இந்த நூல் அமைகிறது. இலக்கியத்தின் சில தன்மைகள் இந்த நூலில் கலந்துள்ளன. நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகச் சொல்லும்போது படிப்பவர்க்குச் சோர்வு தட்டும். அப்படியில்லாமல், ஒரு நிகழ்ச்சியைப் பற்றி எழுதும்போதே இடைவெட்டி, அந்த இடைவெளியில் அதனோடு தொடர்புடைய முன்பின் விவரங்களைச் சேர்த்துச் சொல்வதன் மூலம் இலக்கியத்தின் ஒரு பண்பு செயல்படுகிறது. தமிழ்நாட்டில் ஒரு இருபத்தைந்து ஆண்டுக் கால அளவில் பல எழுத்தாளர்கள், பதிப்பகத்தார் முதலியவர்களைப் பற்றிப் பல தகவல்களை இந்த நூல் கொண்டுள்ளது. இப்படி ஒரு குறிப்பிட்ட காலத்தின், குறிப்பிட்ட துறையின் சில விவரங்களைத் திரட்டி வைப்பதன் மூலம் ஒரு எழுத்தாளர் இலக்கிய உலகத்திற்கு சேவை செய்வதாகத்தான் நாம் மதிப்பிட வேண்டும். நம்மவர்கள் எவ்வளவு பொய்யர்களாக வீம்பர்களாக அழிப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் எழுதி வைக்கத்தான் வேண்டும். வரலாறு எவ்வளவு குறைகளோடு எழுதப்பட்டாலும் நாம் வரவேற்க வேண்டும். எழுத்தாளர் தன் தேவைகளுக்கும், இயல்புகளுக்கும் ஏற்ப திரித்துத்தான் சொல்வார். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது நீலபத்மனாபனின் 'தேரோடும் வீதி' என்ற இந்த நூலை அதன் இலக்கிய மதிப்பிற்காகவும் சில வரலாற்றுக் குறிப்புக்கள் கொண்டு உயரிய இலக்கியம் அல்லது தன் வரலாற்று இலக்கியம் என்று சொல்லலாம். நீல பத்மநாபன் தன் படைப்புக்கள் தான் பார்த்த எந்த வாழ்க்கையிலிருந்து துவக்கப் பெற்றவை

அல்லது தான் பார்த்த வாழ்க்கைக்கும் இலக்கிய வடிவத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வாழ்விற்கும் இடையில் எது விடப்பட்டிருக்கிறது அல்லது எது சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை தன் நூலில் சொல்லவில்லை. தன் இலக்கியப் படைப்பு முறை பற்றி இந்த நூலில் அவர் எழுதவில்லை. ஒருவேளை இன்னொரு நூல் எழுதுவதற்கு இந்த விவரங்களை அவர் விட்டு வைத்திருக்கலாம். அப்படி ஒரு நூலை அவர் எழுதுவதை வரவேற்கிறோம். இந்த நூல்மூலம் அவருக்குப் பலரின் பகை ஏற்படும். அவரது உள்ளம் மேலும் துன்புறும். சமூக உறவுகள் கெடும். இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுவது நமக்கு வருத்தம் தருகிறது. ஏற்கனவே ஒருமுறை இதயத்தாக்குதல் நோய்க்கு அவர் ஆளாகியிருக்கிறார். இந்தப் பாதிப்புக்கள் அவரை மேலும் துன்புறுத்தக் கூடாது என்று மனமாற விரும்புகிறோம்.

நீல. பத்மநாபன் உடைமை வர்க்கக் கண்ணோட்டம் உடையவர். சீர்திருத்தப் போக்கு உடையவர். மார்க்சியத்தை எந்த வடிவிலும் ஏற்காதவர். ஆயினும் நீல பத்மநாபனின் படைப்புக்கள் – குறிப்பாகத் 'தலைமுறைகள்' – தமிழ்நாட்டில் பொதுவாக இலக்கியவாதிகளாலும், குறிப்பாக மார்க்சியவாதிகளாலும் விரைவில் ஏற்கப்பட்டது. ஏற்கனவே இலக்கியத்தில் யதார்த்தவாதப் போக்கு மார்க்சியர்களால் பெருமைக்குரியதெனப் போற்றப்பட்டிருந்தது. அத்துடன் புதுமைப்பித்தன், சண்முகசுந்தரம் ஆகியவர்கள் தொடங்கிவைத்த வட்டார இலக்கியமும் செல்வாக்குப் பெற்றிருந்தது. 'தலைமுறைகள்' செல்வாக்குப் பெறுவதற்கு அந்நாவலில் உள்ள இவ்விரு போக்குகளும் காரணமாயின. நாகம்மையின் தம்பி தன் அக்காளுக்கு மீண்டும் ஒரு திருமணம் நடத்தி வைப்பதில் ஆர்வம் கொள்கிறார். இந்த அம்சம் மார்க்சியர்களால் வரவேற்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தப் போக்கு அடுத்துவந்த நீல பத்மநாபனின் படைப்புக்களில் முக்கியத்துவம் பெறவில்லை. பள்ளிகொண்டபுரத்தில் பத்மநாப சுவாமி கோயிலைப் பல தெருக்கள் வழியாக நாயர் சுற்றிச் சுற்றிவருகிறார். கோயில், தெருக்கள் பற்றிய நுணுக்கமான விவரங்கள் "யதார்த்தவாதப் போக்கு" எனப் பெயர்பெற்றது. "உறவுகள்" நாவல்களிலும் பல அம்சங்களில் இந்தப்போக்கு இடம் பெற்றிருந்தது. ஆக, ஒன்றை உறுதியாகச் சொல்லலாம். நீல பத்மனாபனின் படைப்புக்கள் தமிழ் வாசகர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதற்கு மார்க்சியர்களைத்தான் முதன்மையான காரணமாகச் சொல்லமுடியும். அத்துடன் தமிழர்கள், மலையாளிகள் என்ற இன வேறுபாட்டை வைத்துப் பிழைக்காதவர் மார்க்சியர். மார்க்சியர் அல்லாத மற்றவர்கள் நீல பத்மநாபனைக் கோஷப்

பகுதியைச் சார்ந்தவர் என்று ஒதுக்கும் நிலை இருந்தது. இந்தக் காரணத்துக்காகவும் மார்க்சியர் நீல பத்மநாபனின் படைப்புக்களை ஏற்றனர். மேலும் ஒன்று, கேரளப் பகுதியில் வாழ்ந்துகொண்டு, தமிழ்நாட்டிடம் விசுவாசத்தை வளர்த்துக் கொண்டிருந்த திருவனந்தபுரம் எழுத்தாளரைப் போல இல்லை நீல பத்மநாபன். அவர் பள்ளியில் முதன்மை மொழியாகப் படித்தது மலையாளம். அவர் எழுதிய தமிழில் ஒற்றுப்பிழைகள் இருந்தன. மலையாள மொழியில் கலந்திருக்கும் வட சொற்கள் அவர் தமிழ்நடையிலும் வெகுவாகக் கலந்திருந்தன. தமிழ்ப் பற்றாளர்கள், தி.மு.க. மனோபாவம் கொண்டவர்கள் நீல பத்மநாபனை ஒதுக்கத்தான் செய்வர். மார்க்சியர் இப்படி வேறுபாடு காண்பதில்லை. மார்க்சியருக்குத் தமிழ்நாட்டுப்பற்று, தமிழ்மொழிப்பற்று குறைவு என்ற உண்மையைக்கூட ஒரு பெருமையாகவே தரித்துக் கொள்வர். தன் குழந்தையை நேசிப்பதைவிட இவர் அடுத்த வீட்டுக் குழந்தையை நேசிக்கிறார் என்று சொன்னால் அதைப் பெருமையாக ஏற்று இவர்கள் பூரிப்பர். இந்த விவரங்களை விரிவாகச் சொல்வதன் காரணம் நீல பத்மநாபன் மார்க்சியத்தைத் தழுவியிருந்தால் மேலும் சிறப்பாக எழுதியிருக்க முடியும் என்பதற்காகத்தான். அவர் படைப்பில் இடம்பெறும் மனிதர்க்கான களத்தைச் சரிவரச் சித்திரிப்பதற்கும், தானும் தன் பாத்திரங்களும் அகப்பட்டுள்ள சமூக நெருக்கடிகளைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் இவற்றைக் கடந்து வளர்ச்சி பெறுவதற்கும் மார்க்சியம் அவருக்கு உதவியிருக்க முடியும். ஒரு மன நோயாளியின் புலம்பலில் இருந்து நீல பத்மநாபன் மீண்டிருக்க முடியும். மார்க்சியப் பார்வை 'தேரோடும் வீதி'யை ஒரு தரமான படைப்பாக்கியிருக்க முடியும்.

தி. ஜானகிராமன் :
அன்பே ஆரமுதே

1) கல்கித்தனமான – ரொமாண்டிக் தனமான நாவல் இது. ஒரு முக்கோணக் காதலும், ஒரு வயதானவரின் காதலும் சுற்றி சுற்றி வரும் காதல் கதை இது. இதில் சில தனித்தன்மைகள்.

2) அனந்தசாமி – ருக்மணியின் அடக்கமான அமைதியான காதல். விந்தையான இந்தியச் சமுதாயத்தில் நடைபெறக்கூடியதுதான் என்று நாவலிலேயே வருகிற மாதிரியில் நடைபெறும் காதல் இது.

தாலி கட்டினால் கணவன் மனைவி என்றில்லை. தாலி கட்டாமலேயேகூட, நிச்சயதார்த்தம் முடிந்த அளவிலே கூட, தொடர்ந்து இறுதிவரை – உடலுறவில் அது சங்கமிக்காத நிலையிலும் நிலைபெறும் காதல் இது. உதாரணத்திற்கு கலிப்பகையார் – திலகவதியார் காதல். இது காவிய நோக்கில், பக்தி நோக்கில், கற்பு நோக்கில் கவர்ச்சிகரமானது.

நாவலில் இது கரு ஆனது ஒரு விந்தை நிகழ்வுதான். இந்திய சமுதாயம் காதலுக்கு அல்ல, கற்புக்கு மரியாதை வழங்கிய நிலையில் – இது ஒரு லட்சியம்தான். ஆயிரம்முறை இந்த லட்சியம் சிதறினாலும், மேலும் மேலும் இலக்கிய அளவிலேனும் காப்பாற்றப்படும் இலட்சியக் காதல் இது.

கல்கி, நா.பா., அகிலன் ஆகியவர்கள் குதித்து கும்மாளமிடக்கூடிய கரு இது. காவிய முறையிலிருந்து, பக்தியிலிருந்து தமிழ் நாவல் விடுதலை பெறவில்லை என்பதற்கு இந்த நாவல் நல்ல சான்று.

3) இந்தக் கருவை தி.ஜானகிராமன் கையாண்ட முறையைக் கவனிக்க வேண்டும். பல ஆண்டுகள் புத்த மதத் துறவியாகத் திரிந்தவர் மனத்தில் ருக்மணி அசையாமல் நின்றிருக்கிறாள். திருமணத்திற்கு முன்னைய நாளில் அனந்தசாமி காணாமல் போனதற்கு, அனந்தசாமி சார்பிலான காரணம் கனமானதல்ல. இது கனமானதாக இருந்திருக்குமானால் ருக்மணி பல ஆண்டுகள் இவர் உள்ளத்தில் நிலைத்திருக்க வேண்டியதில்லை.

இவர் புத்த துறவியானாலும், இவரிடம் கடவுள் நம்பிக்கையும் சேர்ந்தே இருக்கிறது. இவர் அடிக்கடி சூன்யத்தில் – தியானத்தில் ஆழ்ந்து விடுகிறார். இதிலிருந்து இவர் திரும்பி வரும்போது பெரிதாக எதையும் கொண்டுவருவது இல்லை.

ஓர் அமைதியான குணம் – சாந்த நிலை இவருக்கு இயல்பானது. இதைத் தவிர இவரது புத்தசமயத்திற்கும், தியானத்திற்கும் வேறு இன்றியமையாத உறவு இல்லை. செம்பருத்திப் பூவைக் கண்டு இவர் மயங்கி தம்மை மறந்து நிற்பது இவரது தியான நிலையைத் தூண்டிவிட்டதால் ஆகும்.

இவரைப் போலவே – ருக்மணியும் பல ஆண்டுகள் காத்திருக்கிறாள். இவரைப் பார்த்தவுடன் டெல்லியிலிருந்து சென்னை வரும் முடிவை எடுக்கிறாள். இதை அனந்தசாமி ஆவலோடு ஏற்கிறார். இதில் இருவரின் காதல் உச்ச நிலையில் வெளிப்படுகிறது. பெண்ணின் கற்பு மேன்மை பெறுகிறது. துறவியின் துறவு தாழ்கிறது. இதைத் தாழாமல் கொண்டு செல்வது தி.ஜா.வின் நோக்கம். இறுதியில் ரங்கன் இகழ்வதில் தவறில்லை. உடனே தன் தவற்றுக்கு அவன் மன்னிப்பு கோருகிறான். கதையில் இது தி.ஜா.வின் நோக்கத்தைப் பாழ்படுத்துகிறது.

4) ஒரு நவீன காலத்து நாவலில் இப்படி வருவதில் நியாயமே இல்லை. கதையில் வரும் ரங்கனின் சிறு விமர்சனத்தைத் தவிர எல்லோருமே இவர்களின் இலட்சியக் காதலை ஏற்கின்றனர். ருக்மணியின் சித்திக்கு இது ஒரு பெரும் விடுதலை போன்று தோன்றுகிறது. சுப்பு சாமிக்கு மறுப்பே இல்லை. டொக்கி, கிறங்கிப் போய்விடுகிறாள்.

இந்தக் காதலுக்கு வரும் ஒரே ஒரு எதிர்ப்பும், வெறும் பழி தூற்றல் போலப் போய்விடுகிறது; பழிதூற்றியவன் உடனே பாராட்டி விடுவதில் முடிவடைகிறது.

இருவரும் உடலுறவு கொள்ள இயலாத வயதையும் அடைந்து விடவில்லை. இலட்சிய நோக்கிலே – ஒருவரை மற்றவர் இரவு ஒருமணி வரை பார்த்துப் பிரிகின்றனர். ருக்மணி மட்டுமென்ன, அவளும் டொக்கியின் பார்வையில் பார்க்கும் போதே துறவியாகத் தோற்றம் தருகிறாள். இறுதிவரை அவளுக்கு உடலுறவு வேண்டும் என்பது மாதிரிச் சலனம்கூட இல்லை. காதலனின் எச்சில் உணவை உண்பதே அவளுக்குப் போதுமானது. எல்லோரும் இவர்கள் உறவை ஏற்பது என்பது பக்திச் சுவையூடே எளிதாகக் கொண்டு செல்லப்படுகிறது. இளமையில் கொண்ட காதல் இறுதிவரை அழிவதில்லை என்ற ஒரே இழையில் நாவல் முழுமையாகப் பின்னப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு வாசகர்களின் இரசனையில் இது நீள்கிறது – அழகு பெறுகிறது – நிலை பெறுகிறது.

துறவில் இருவரும் சங்கமித்த மாதிரியும் கதை இல்லை. டொக்கியை மகள் போல இருவரும் பாவிக்கின்ற முறையில் இருவரும் கணவன் மனைவியாகின்றனர்.

கதையில் அனந்தசாமி துறவி என்ற நிலையில் விரியவே இல்லை. இதுதான் அனந்தசாமி பற்றிய பெருங்குறையாகத் தோன்றுகிறது. இவர் வைத்தியராக இருப்பதில் துறவிக்கான ஒரு தன்மை புலப்படுகிறது. பலரும் வெறுக்கக் கூடிய காசிலிங்கம், ரங்கன் ஆகியவர்களை இவரால் வெறுக்க முடியவில்லை என்பது இன்னொன்று. இவை, இவரைப் பெரிய துறவியாக்கிவிடவில்லை. வாழ்க்கையில் அனுபவம் இல்லாத பல மனிதர்களின் – செயல்களின் குறுக்கே சென்று விழுகிற மனிதராகவே இவர் இருக்கிறார்.

வாழ்க்கைக்குள்ளே ஒரு துறவியின் மனப்பான்மையோடு வாழ்வதிலான மேன்மையை அனந்தசாமி பிரதிபலிக்கவில்லை. ஒரு துறவிக்கான வாழ்க்கைக்குள்ளே வரும்பொழுது சந்திக்கும் தோல்வியோடு தான் அனந்தசாமி இருக்கிறார். வாழ்க்கையைத் திருமண வட்டத்திற்குமேல் – நோய் குணமாக்கும் வட்டத்திற்கு மேல் இவர் பார்க்கவில்லை. இவர் தாய்க்குச் சேவை செய்வதும் மனைவிக்குச் சேவை செய்வதும் பெரிதும் வேறுபட்ட செயல்கள் அல்ல.

5) நாவலில் இவரது துறவி என்ற பாத்திரப் பண்பை மறந்து, ஒரு மனிதர் என்று பார்த்தாலும் கூட இவரது பாத்திரம் சிறப்பாகத் தோன்றவில்லை. இவர் வைத்தியர்; நூதனமான வைத்தியர். இவரது வைத்திய முறைக்குப் போட்டியில்லை. போலியோவைக்கூட இவர் குணமாக்கிவிடுகிறார். இவர் இலட்சியத்திற்காகவே தொழில் செய்கிறார் – காசுக்காக அல்ல. பெரிய சினிமா நடிகன்கூட இவர் வீடு தேடி வருகிறான் (காசிலிங்கம் – அருள்குமார்). எல்லோரும் இவரிடத்தில் பிரச்சனையைக் கொடுத்து விடுகிறார்கள். இவர் கூடியவரை தீர்க்க முயல்கிறார். இவரது முயற்சி நடைபெறும்போதே பிரச்சனைகளும் தாமாகத் தீர்கின்றன. இவரால்தான் பிரச்சனைகள் தீருவதைப்போன்ற ஒரு தோற்றம் எழுகிறது.

ஒரு கதையின் தலைவனைச் செயல்வல்லவனாக எதிர்பார்க்கிறோம். அனந்தசாமி இத்தகையவர் அல்லர்.

(இக்கதையில் இவரோடு கூட எத்தனையோ நல்லவர்கள் வருகிறார்கள். இத்தனை நல்லவர்களை ஒரு கதை தாங்குமா!)

கோ.ஞ.

ருக்மணி இத்தனை காலம் காத்திருந்து பெறத்தக்க நாயகனாக இவர் இல்லை.

தி.ஜா. விடும் சரடுதான் கதையில் மேலோங்கியிருக்கிறது. ஒரு மனிதனை விளக்குவதாகவோ, உலகின் ஒரு நிகழ்வை விளக்குவதாகவோ, படைப்பதாகவோ கதை இல்லை. நவீன கால நாவலில் இதை எதிர்பார்க்கிறோம். அனந்தசாமி அற்புதமான வைத்தியர் என்பது எப்படி என்று கதையில் விளக்கப்படவில்லை, சொல்லப்படுகிறது – அவ்வளவே.

6) கதையில் வரும் முக்கோணக் காதல்பற்றி : ரங்கன் முதலில் சந்திராவை விரும்புகிறான். சந்திராவின் மேன்மைக்குப் பயந்து அவளை விட்டு டொக்கியை விரும்புகிறான். டொக்கி அருண்குமாரிடம் ஓரிரவு தன்னை இழந்து விட்டதனால் ரங்கனை மறுக்கிறாள். ரங்கன் இறந்து விடுகிறான். சந்திரா ஆசிரியை ஆகிறாள். டொக்கி சினிமா ஆசையை விட்டு படிக்கப் போகிறாள்.

சந்திராவின் மேன்மைக்கு கதையில் விளக்கவில்லை. இதற்கு மாறாக டொக்கியின் மேன்மைதான் கதையில் விளக்கப் பெறுகிறது. ருக்மணியின் பாராட்டு இதற்குச் சான்றாகிறது. கதையில் நாம் முதலில் எதிர்பார்த்தது போல சந்திரன் ஒரு வில்லன் அல்ல; நாயகனாக முடியாதவன்.

டொக்கியின் கற்பு பறிபோன நிலையில் அதைத் தெரிந்தே ரங்கன் தன்னை மணக்கக் கோரியபோது, அவள் மறுப்பது, இலட்சிய நோக்கமே. கதையின் ரொமாண்டிக் தன்மை இங்கும் மேலோங்குகிறது. கதையில் சந்திரா, டொக்கி இருவரும் இளந்துறவிகள் ஆகிவிடுகின்றனர்.

கதையில் இவர்களோடு சுப்புசாமி முதலியவர்களையும் சேர்த்துப் பார்த்தால், துறவியரின் எண்ணிக்கையே அதிகம். வாழ்க்கையில் துறவிகளின் எண்ணிக்கையே அதிகம் என்பதாகத் தோற்றம் தருகிறது இந்நாவல்.

காதல்தான் வாழ்க்கையில் பெரிய சிக்கலாகத் தோற்றம் தருகிறது. காதலில் ஒரு உண்மையை இக்கதை கற்றுத் தருகிறது. மனிதன் தெய்வத்தைக் காதலிக்க முடியாது. முட்டாள் அறிவாளியைக் காதலிக்க முடியாது. கதைச் சித்திரிப்பில் டொக்கிதான் தெய்வமாகிறாள் – அறிவாளியாகிறாள். இதுவும் தி.ஜா.வுக்குப் பெருமை அல்ல.

7) இந்நாவலில் முதல் கதையும், துணைக் கதையும் சமநிலையில் நடைபெறுகின்றன. இடையில் கதை மனிதர்களுக்கிடையில் தொடர்பு

வருகிறதே ஒழியப் பிரச்சனைகளுக்கிடையில் தொடர்பு வருவதே இல்லை. இறுதியில் துறவில் எல்லோரும் சங்கமமாவதைப் போன்ற தோற்றம் ஏற்படுகிறதே தவிர வேறு ஒற்றுமை அல்லது வேற்றுமை புலப்படவில்லை. ரங்கன் அனந்தசாமிக்குக் குறுக்கே ஒரு கணம் வந்துவிட்டு மறுகணம் மறைகிறான். (கதையில் ஒருவகையில் பார்த்தால் அருண்குமாரால் டொக்கி கெடுவதுகூடத் தேவையில்லைதான்).

இதிலிருந்து நமக்குத் தெரிவது இரண்டு கதைகள். இரண்டும் தனித்தனி நாவலாக இருந்திருக்க முடியும். இணைவது இன்றியமையாமையில் அல்ல. (கதை, அனந்தசாமி – ருக்குமணி முரண்பாட்டில் தொடங்கி இருக்க வேண்டும்; பிரிவில் அல்லது உறவில் கதை முடிந்திருக்கலாம்). கதையில் தீவிரத்தன்மை அறவே கிடையாது. ஒரு அற்புதமான மனிதரோடு கதை ஒரு வகையான போதையிலேயே நகர்கிறது.

இந்நாவலில் – மீண்டும் நினைத்துப் பார்க்கும்போது, ரங்கன் ஒருவன்தான் – அதுவும் சில குணங்களில் இயல்பான பாத்திரமாகத் தோன்றுகிறான். தனது தொழிலை இவன் விமர்சனம் செய்கிறான். அதிலிருந்து தனக்கு வந்த குணத்தைப் புரிந்து கொள்கிறான். தனக்கேற்றவளாக ஒருத்தியைத் தேடுகிறான். சாமியாரை விமர்சனம் செய்கிறான். இவன் சாவு கூட இவன் விரும்பியதாக இருக்கலாம். ஆனால் இவன் விரும்பி மேற்கொண்டதல்ல அது. இவன் டொக்கியிடமிருந்துகூட விலகுவதாகக் கதை நிகழ்வுகள் சித்திரிக்கப்பட்டிருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும் – குணத்துக்கேற்ற செயல் என்ற முறையில்.

8) இவர்களைத் தவிர இந்த நாவலில் மேலோங்கிய வேறு இரு பாத்திரங்கள்: ஒன்று, சுப்புசாமி. தன் மகனைப் பிரிந்த நிலையில் அதை ஒரு தவிப்பாக்கிக் கொண்டு அதை மறைத்து மகிழ்ச்சியாக இருப்பவர். வெற்றிலை பாக்கு போடுவதில் அப்புசாமி மணிக்கணக்கில் தியானத்தில் ஆழ்வதைப் போன்ற சுகானுபவத்தைப் பெறுபவர். துப்பறியும் நாவல்களை படிப்பவர். செட்டியார்க்குக் காரியஸ்தர். அன்புக்காகத் தவிப்பவர். சிறுவயதில் – இளமையில் இருந்த முரட்டுக் குணம் பதுங்கியிருக்கிறது. மீண்டும் தலையெடுக்கும் போது அடக்கிக் கொள்கிறார். கவர்ச்சியான மனிதர் என்பதைத் தவிர வேறு சொல்வதற்கில்லை. பெரிய மனிதர் என்ற சொல்லுக்கேற்றவாறு படைக்கப்பட்டவர்.

மற்றது, அருண்குமார். இளமையில் காசிலிங்கமாக இருந்து, சுப்பு சாமி போன்றவர்களின் ஆதரவில் வாழ்ந்து, பிறகு நாடே போற்றும்

நடிகரானவன். தன் மகனது நோய் குணமாகிவரும்போதே சாமியாரின் பாதிப்பால் மாறுகிறவன். தன்னைப் பற்றிய விரிவான ஒரு சுய விமர்சனம் செய்து கொள்கிறான். நடிப்புக் கலையில் தான் சாதனை செய்துவிடவில்லை. தன்னை கெடுத்தது மக்கள்தான். மக்கட்கூட்டம் எங்கு சென்றாலும் தன்னைச் சூழவந்து கெடுக்கிறது என்பதாக எரிந்து விழுகிறான்.

அருண்குமாரின் மன மாற்றம் இயல்பாக இல்லை. தி.ஜா. சொல்லி மனம் மாறுவதுபோல் இருக்கிறது. எத்தனையோ விந்தைப் பாத்திரங்களில் ஒருவராக அப்புசாமி போலவே அருண்குமாரும் வருகிறான். பெரிய மனிதர்களை நல்லவராக்குவதற்காக இப்படிக் கதைகளில் கொண்டுவருவது சில தேவைக்காக கதாசிரியர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. தி.ஜா.வும் இதற்குப் பலியாகியிருக்கிறார். கல்கி இதழுக்காக கதை எழுதுவது இவரை இப்படிப் பாதித்திருக்கிறதோ!

9) இன்றைய சமுதாயச் சூழலில் பெண்கள் ஆண்டாள்களாவது தவிர்க்க இயலாதது. இவர்கள் கல்விக்கூடங்களில் ஒதுங்குவது, பழைய காலத்து ஆண்டாள், கோயிலில் ஒதுங்கிய மாதிரிதான். கற்பனையில் இவர்கள் 'கண்ணன்'களுக்கே சரணடைந்தவர்கள். கல்வி இவர்களுக்கு ஒரு தொழில் வாயிலே தவிர, விடுதலையாக இல்லை. கல்வி ஒரு மேம்பாடு மட்டுமே. இவர்கள் நாளடைவில் அரக்கிகளாகிவிடுவது இயல்பாக நடக்கிறது. இவர்கள்தான் பிறகு கொடுமைக்காரத் தலைமையாசிரியைகள் – கல்லூரி முதல்விகள். இவர்கள் நடத்தும் ஆசிரமங்களிலும் இவர்கள்தான் சர்வாதிகாரிகள். இவர்கள் மீண்டும் மீண்டும் காதலைக் கெடுக்க – தடுக்கவே நிற்பார்கள்.

இந்தச் சமுதாய எல்லைக்குள்ளேயே சிறைபட்ட இவர்களுக்கு வேறு போக்கிடம் – விடுதலை இல்லை. இவர்களை – நாவலில் வருவது போல – யாரும் அடிமையாக்கவில்லை. இவர்கள் தாங்களாகவே அடிமையாகிவிடுகிறார்கள் – சமுதாய நிலை இத்தகையது. இதை தி.ஜா. வெளிப்படையாகச் சொல்லவில்லை.

ஒருவகையில் பெண்களுக்கு மோட்சம் இல்லை என்று பழைய நூல்களில் கூறியது உண்மைதான். அதுபோலவே பெண்களுக்குத் தெய்வம் இல்லை, கணவனே தெய்வம் என்று கூறியது இம்முறையில் உண்மைதான். (கணவன்மாரைத் துறந்து சமய நெறியில் முழுமையாகச் சென்ற காரைக்காலம்மை முதலியவர்கள் புரட்சிக்காரர்கள்தான்).

பெண்கள் இத்தகைய மாயையில் – பொய்யில் இருப்பதனால், இவர்களுக்கு நேர் எதிரான பாத்திரங்களைப் படைப்பதும்

உண்மையாகிறது. டொக்கியின் தாயார் இவ்வகையில் உண்மைப் பாத்திரம். தி.ஜா.வின் "மரப்பசு" நாயகி முற்றிலும் உண்மையான பாத்திரம். பெண்களுக்குள்ளேயே இயல்பாகவே சீதையும், சூர்ப்பநகையும் இருப்பதன் உண்மைதான் இது. (அருண்குமாரும் இத்தகையவன்தான்). இந்தச் சமுதாயத்தில் பெண்கள் மட்டுமென்ன ஆண்களும் அடிமைகள்தான். குற்ற உணர்வு இவர்களை விட்டுச் செல்வதில்லை. இவர்களில் நேர்மையானவன் ரங்கன்.

10) இலக்கியத்தின் இறுதி நோக்கத்தை மனத்தில் நிலைநிறுத்திக் கொண்டு பார்க்கும் போது இந்த நாவலில் கிடைப்பவை மிகச் சிலவே. மனித வாழ்க்கையை இந்த நாவல் விளக்குகிறதா – எவ்வகையிலாவது?

காதல் சாகாது – இந்த நாவலிலிருந்து தெரிந்து கொள்ளும் சாதாரண உண்மை இது. இன்னோருண்மையை இந்த நாவல் விளக்காவிட்டாலும் நாமாகப் புரிந்து கொள்கிறோம்:

வாழ்க்கையில் துறவியல் இயல்பாகவே இருக்கிறது. இதன் பார்வையில் – இயக்கத்தில்தான் மனிதர் வாழ்கின்றனர். ஒன்றை உறுதியாக – விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருப்பது வாழ்க்கையில்லை. அதை விட்டுவிடும்போதே, அதை உறுதியாய்ப் பெறுகிறோம். உண்மையில் மனிதனுக்கு வைத்தியம் செய்வது என்பது இதுதான்; இதைக் கற்றுத்தருவதுதான். உண்மையறிந்தவன் இயல்பாகவே வைத்தியனாகிறான். இவன் எல்லோரையும் தேடிச் சென்று வைத்தியம் செய்யும் மனநிலை வாய்க்கிறான்.

இந்தப் படைப்பு மனோ நிலையிலான போராளியைத்தான் ஒரு குறுகிய கருவுக்குள் அடைத்து தி.ஜா. தோல்வியடைகிறார். தி.ஜா. உருவாக்கத் தவறிய கதையை நமக்குள்ளே எழுப்பிக் கொள்வதற்கு அவர் தந்துள்ள கதையைப் படியாக்கிக் கொள்வோம்.

(துறவியல் என்பது தன்னை இழந்து தன் மூலமாக உலகப் பரப்பில் தான் ஐக்கியம் கொள்வது; வரலாற்றில் இடங்கொள்வது; குறுகியதிலிருந்து விரிவில் இயங்குவது. நிர்வாணம், பரவசம், தாய்மை, இறைமை இப்படிப் பல பெயரால் கூறப்படும் ஒரு மனநிலை இது. ஒரு படைப்பாளியின் மனோ நிலைதான் இது. துறவி ஒரு படைப்பாளியாவது இந்நிலையில்தான். இந்நாவல் பல நல்லுணர்வுகளை நாசமாக்குகிறது. ஆக்குவதைவிட அழிப்பது அதிகம். தொடர்காதை இப்படி சீரழிக்கிறது)

'கல்கி'க்கான கதை.

தி. ஜானகிராமன் :
உயிர்த்தேன்

1) கதைச் சுருக்கம் : சென்னையில் வணிகத்தில் ஈடுபட்டிருந்த பூவராகவன், வணிகத்தில் சலிப்படைந்து, தன் தந்தையின் இறுதி விருப்பத்தை நிறைவேற்ற மாயவரத்துக்கருகிலுள்ள ஆறுகட்டி கிராமத்தில் நிலமும் வீடும் வாங்கிக் குடியேறுகிறார். சோம்பலுக்கும், வம்புக்கும் பெயர் பெற்ற ஆறுகட்டி கிராமம் இவரைப் பெரிதும் வரவேற்கிறது. வரவேற்கும் போதே சண்டையுடன். பழனிவேல் படித்தவன், ஊர்ப்பணத்தைக் கையில் வைத்திருப்பவன். இவரிடம் பகை கொள்கிறான்.

ஊர்க்கோயிலை இடித்துவிட்டு திரும்ப எடுக்க ஊர்மக்கள் விரும்பினாலும் பழனிவேல் இவரோடு ஒத்துழைக்கவில்லை. கோவில் முடிவடையும் தருணத்தில், செங்கம்மாவின் யோசனைப்படி, கிராமத்தில் விவசாயத்துறை முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறார் பூவராகவன். பொன்னுசாமி என்ற விவசாயத்துறை நிபுணரோடு ஊர்நிலம் முழுவதற்குமே நவீன சாகுபடி முறையைக் கொண்டுவர பாடுபடுகிறார். நாளடைவில் ஊர்மக்கள் இவரை ஒப்புக்கொள்கிறார்கள்.

கோயில் கும்பாபிசேகத்திற்கு தாங்கள் ஏதாவது செய்ய ஊர்மக்கள் விரும்புகின்றனர். அதற்கு முன்னரே ஊர்ப்பொதுக் காரியங்களைச் செய்ய செங்கம்மா பூவராகவன் பெயரை முன்மொழிதலில் தலைமை ஏற்கிறாள். பழனிவேல் பணம் தர மறுத்து, பூவராகவன் பற்றித் தவறான பிரச்சாரத்தில் ஈடுபடுகிறான். ஒரு நாள் பண வசூலுக்குச் சென்ற செங்கம்மாவைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்துவிட்டு, பணத்தையும் ஒப்படைத்துவிடுகிறான். பின்னர் ஊரைவிட்டு வெளியேறி தூக்க மாத்திரை உண்டு, இறந்து விடுகிறான். கும்பாபிசேகம் நிறைவேறுகிறது. இடையில் அனுசூயா, கலைஞர் ஆமருவி, காரியஸ்தர் கணேசபிள்ளை முதலியவர்கள்.

2) கதைக்கரு – தனித்தன்மை முதலியவை : பூவராகவனின் வணிகத்துறைச் சலிப்பு நியாயமானது. போர்க்காலத்தில் பணம் தானே வருகிறது. இது உண்மை. வரி வசூலிக்கும் அதிகாரி சந்தேகம் – தொல்லை தருகிறது. இவர் யதார்த்தமான பாத்திரமா இல்லையா என்பதைவிட இவர் சார்பிலான உண்மைகள் யதார்த்தமானவை.

ஒரு நாவலில் இத்தகைய பாத்திரம் இடம் பெறுவது வரவேற்கத்தக்கது. தொழில் துறையைவிட, வணிகத்துறை அதிகச் சலிப்பைத் தரக்கூடியது. வணிகத்துறைக்கு பிரதிநிதித்துவம் தாங்கும்

பாத்திரம், இவருக்கு எதிராகத்தான் இருக்கும். அதற்காக இவர் பிரதிநிதியாகாமல் இருக்க வேண்டியதில்லை - அதாவது வணிகத்துறையின் முரண்பாட்டின் ஓர் அம்சத்தை இவரும் பிரதிபலிப்பதால்.

இவருக்கு கோயிலில் நம்பிக்கையில்லாத போதும், தன் தந்தைக்காக - ஊர் மக்களுக்காக கோயில் கட்டுகிறார். வேளாண்மை வளர்ச்சிக்காகக் கடுமையாக உழைக்கிறார். இப்படி ஒருவர் உழைப்பாரா என்பது கேள்வி. உழைக்கமாட்டார் - இது எதார்த்தம். உழைக்க முடியும் - இது இலட்சியம். இத்தகைய இலட்சியவாதிகள் அரிதிற்கிடைப்பவர். இவரது குணம் அனுசுயாவோடு இணைந்தமையால் செங்கம்மாளைக் கண்டறிவது. கிராமத்து மக்களைக் குழந்தையாக காண்பது. இப்படி ஒரு விசாலப்பார்வை இவருடையது. இது ஒரு வகையில் சமய வகையிலானது. MYSTICAL. காசை உதறுவது இதனால்தான். இவர் மூலம் கிடைக்கும் நீதி - பணக்காரன் கிராமத்திற்குச் சென்று, கிராமத்தை முன்னேற்றிவிடுவான். முன்னேற்ற வேண்டும் என்பது அல்ல. இவ்வழியில்தான் கிராமம் முன்னேற முடியும் என்பது.

3) ஆறுகட்டி கிராமம் : நமது கிராமங்கள் எப்படி தமக்குள்ளே வம்பு வழக்குகளில் மூழ்கிக் கிடக்கின்றன என்பது பற்றிய சிறந்த படப்பிடிப்பு ஆறுகட்டி. பணமுள்ளவனிடம் இச்சகம் பேசுவது, பின்னர் புறக்கணிப்பது, மீண்டும் மீண்டும் வம்புகளைக் கிளப்புவது - இவை நம் கிராமங்களின் இயல்புகள்.

அரசாங்கத்திடம் எதையும் எதிர்பார்ப்பது - தன் காலில் தானே நிற்க விரும்பாமை - இது, கூடப்பிறந்த குணம். இந்த நடைமுறையை மாற்றுவது பகீரத முயற்சி சார்ந்தது. ஒரு பூவராகவன் இதில் வெற்றி பெறுவது விந்தையானதுதான். கதையில் கிராமத்திலுள்ள வர்க்க முரண்பாடுகள் சித்திரிக்கப்படவில்லை. ஒரு வகையில் பூவராகவன் கிராமத்திற்கு வந்த பின்னராவது அவரது பாத்திரம் ஒரு பெரிய நிலக்கிழார் போல் இல்லாமல் அவரே ஒரு சீர்திருத்தவாதியாக இருப்பதால் வர்க்கப் போராட்டத்திற்கு இடமில்லை.

பழனிவேல் : எதிர்ப்பின் சின்னமாக இவன் உருவகமாகவில்லை. பொறாமையின் சின்னமே இவன். கதையில் இவன் ஒரு "சிறிய" - புறக்கணிக்கப்படக்கூடிய மனிதன். இறுதியில் இவன் எதிர்ப்புக்கே காரணம் செங்கம்மாவின் மீது கொண்ட ஆசை என்பதாகிறது. பாலுணர்வால் பாதிக்கப்பட்ட - ஆனால் அதை எதிர்ப்பதாக நடித்துக் கொண்டிருந்த ஒரு பலவீனன்தான் பழனிவேல். கதையில் இவன் ஒரு வில்லனாவது! கூட கதைக்கு பலவீனம்தான்.

4) செங்கம்மா : செங்கம்மா மாதிரி ஆளுமை உடைய பெண்கள் இயல்பானவர்கள்தான். படித்தும், பயிற்சி செய்தும் கிட்டாத பண்புகள் செங்கம்மாவிடம் இருப்பது விந்தையானதுதான். அதே சமயம் இயல்பானதும்தான். ஒரு பெண் நிர்வாகம் செய்ய முடியும் என்பதற்கு இவள் நல்ல உதாரணம்தான். பெண் விடுதலை என்பது செங்கம்மாவின் வழியிலும்தான். பழனிவேலால் ஏற்பட்ட அருவெருப்பை இவள் அனுசுயாவின் மூலமாக அல்லாமல் தானே தீர்த்துக் கொண்டிருக்கிறாள். ஒரு வகையில் அனுசுயா என்பதும் இதன் தீர்வுக்கான ஒரு உருவகம் மாதிரிதான்.

செங்கம்மா : "நமக்கு கெடுதல் பண்றவங்க, இம்சை பண்றவங்க ஆசையினாலே தானே பண்றாங்க"?

அனுசுயா : செங்கம்மாவுக்கு அனுசுயா செய்வதையும், பேசுவதையும் கண்டு சிரிக்கத் தோன்றவில்லை. தவறாக அவள் எதையுமே செய்ய மாட்டாளோ என்று கூட சந்தேகம் வந்து விட்டது. அவள் எது செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும். (ஆசிரியர் கூறுவதுபோல) இவள் தனிப்பிறவி; பெண் பிறப்பிலேயே தனிவகை. காலம் காலமாக யாருக்காவது பயந்து கொண்டு, வாய்விட்டு வந்த சிரிப்பைக்கூட அடக்கும் பெண்ணுக்கு மாறாக, இவள் இஷ்டப்படி இரைந்து இரைந்து சிரிப்பவள். யாராக இருந்தாலும் எதுவாகயிருந்தாலும் துருவித் துருவி உற்றுப் பார்ப்பவள். அருவருப்புக்களைப் பார்த்துக்கூட அழுதுவிடுபவள். எங்கே எதைப் பார்த்தாலும் விழுங்கிவிடுவது போலப் பார்ப்பவள். யாருக்கும் கட்டுப்படாமல், அடங்காமல் இஷ்டப்படியே எதையும் சொல்லியும், செய்தும், போவதும் வருவதுமாக இருக்கிற மனுஷக் குதிரைக்குட்டி போன்றவள். "மனுஷன் மனுஷனாயிருக்கனும். ஒரு ஆடு ஆடாக இருக்கனும். என்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது. கல்யாணம் பண்ணிகிட்டு யார்கிட்டயும் கட்டுப்பட்டு இருக்க மாட்டேன். எந்தக் கூட்டிலேயும் அடைய மாட்டேன். எல்லாம் விளையாட்டுத்தான். எல்லோரும் எனக்கு விளையாட்டு பொம்மைதான்".

பூவராகவன் : "அதுக்கு கல்யாணத்திலே நம்பிக்கை இல்லை. சுயேட்சையா பட்சி மாதிரி இருக்கு. கல்யாணம் ஆனாப்பலவே இருக்கு. ஆனால் சுத்தமான புடம் போட்ட தங்கம். பொய்யே அது வாயிலே வராது. கடுமையா ஒரு சொல் வராது. வெசாக்கூட திருப்பி வெய்யாது. அழகில்லாம, அசுத்தமா வாழறவங்களை கோபிக்காது, அழும் – இல்லே அழாது. மலர்ந்த மூஞ்சியோட அவங்களை அழகா – சுத்தமா பார்வை பார்க்கும். கல்யாணம் பண்ணிக்காமே, கல்யாணம் ஆனமாதிரி இருக்குதேன்னு அதைப்போய் சீண்டிட முடியாது. நாக்கைப் பிடுங்கிறமாதிரி சிரிச்சுட்டு ஏதாவது சொல்லி விரட்டிவிடும். விசித்திரமான ஆத்மாதான்".

ரங்கநாயகி :- "அது எங்கேயோ காட்டிலே ரிஷி வயித்துலே பொறந்திருக்க வேண்டியது. இல்லாட்டி மானா முயலா பொறந்திருக்க வேண்டியது. தப்பிப்போய் டாப்பு டுப்பா இருக்கிற மனுஷங்க மத்தியில் வந்து பிறந்து வச்சிருக்கு. அது மாதிரி யாராலும் இருக்க முடியாது. அதுக்குத் தனி தைரியம், தனி மனசு எல்லாமே வேணும். காத்துலே போற புகை காத்தோடு மறஞ்சு போறாப்பலே அது கரைஞ்சு போன பிறப்பு".

வரதன் : "இங்கே ஒரு அபார வியக்தி, செங்கம்மான்னு ஒரு திவ்யஸ்ரூபத்தோட, எல்லாரையும் முயற்சி உள்ளவாளா, திரு உள்ளவாளா, வினை உள்ளவாளா இருக்கான்னு தெரிஞ்சுது. எனக்கு அந்த வியக்தியைப் பார்க்கிறபோது எல்லாம் உறங்காவில்லியை தாசானுதாசனாப் பண்ணினாளே அவன் சம்சாரம் ஹேமாம்பா, அந்த பரம பாகவதையோட ஞாபகம் வருது".

அனுசுயா (தனக்காக இறந்தவனைப் பற்றி): "எனக்கு அவன் ஞாபகம் எல்லாம் – ஒன்றிரண்டு வர ஆரம்பிச்சது. அவன் மாதிரி யாரும் அப்படி எனக்காகத் தவிச்சிருக்க முடியாது. கல்யாணம் பண்ணிட்டா, உடம்புக்கு ஏதோ கிடைக்கும். அதை கல்யாணம் பண்ணிக்காமலே நான் அடையமுடியும். ஆனால் அவன் மாதிரி அப்படி எல்லாத்தையும் விட்டுத் தவிச்ச ஒரு தவிப்பை எப்படிப் பார்க்கமுடியும்.? எனக்கு திடீர்ன்னு சுயேச்சையா இருக்கணும் போலிருந்தது. ஒரு கட்டுதான் முடியும். அதுவும் கட்டாமலே தெறிச்சுப் போச்சு. அப்புறம் என்ன இருக்கு"?

பூவராகவன் : "உழைச்சு உழைச்சு ஒண்ணுமே இல்லாம கரைஞ்சு போயிடணும்னு தோணிச்சு. மண்ணையும், செங்கம்மாவையும் பார்த்துத்தான் எனக்கு அந்தப் புத்தி வந்தது. நான் இப்ப இருக்கிற மாதிரி சந்தோஷமா எப்பவும் இருந்ததில்லை. இந்த ஆத்மா உலகத்துக்காகப் பிறந்தது; இந்த வீட்டிலே வந்து நடமாடுது. இப்ப நம்ப குடும்பம், நம்ப பொண்டாட்டி, நம்ப பிள்ளை, நம்ப வீடு, நம்ப சிநேகிதன்னு வட்டம் ஒண்ணு போட்டுகிட்டிருந்தேன், பிறந்ததுலே இருந்து இப்பக் கொஞ்சம் கொஞ்சமா அது பெரிதாயிட்டே இருக்கு. பழனிவேலைப் பற்றி எனக்குக் கோபம் வரமாட்டேங்குது".

பூவராகவன் (செங்கம்மா பற்றி) : "ஒரு சத்தியத்துக்குப் பலி கொடுத்துக்கிற ஆத்மா அது. அதனாலே அதுக்கு உலகம் முழுக்க குழந்தையா ஆயிடுத்து".

இதிலிருந்து நாம் வகுத்துக்கொள்ளும் உண்மை :

த.19.

தி.ஜா.வின் இந்நாவலில் பூவராகவன், செங்கம்மா, அனுசுயா ஆகிய மூவரும் ஒருகிளைப் பறவைகள். மூவரும் சந்திப்பது ஒரு சிகரத்தில். இவர்களுக்கு கடவுள் தேவையில்லை. இவர்கள் கடவுளேயானவர்கள். இவர்களுக்கு உலக மக்கள் குழந்தைகள் போல. இவர்கள் தம்மைப் பிடித்து வைத்துக் கொள்வதில்லை. தங்கள் வியக்தியை – ஆளுமையை உலகத்தில் கரைத்துக் கொண்டவர்கள். பரவசம் – இவர்களின் இயல்பான நிலை. நகரத்தில் படித்தவர்கள் மத்தியில் மட்டும் அல்லாமல் கிராமத்தில் படிக்காதவர்கள் மத்தியிலும் அத்தகைய வியக்திகள் உண்டு. இவர்களை – இத்தகைய மனிதர்களைக் கண்டுபிடித்ததில் – விளக்குவதில்தான் தி.ஜா.வின் ஆற்றலும், தனித்தன்மையும் இருக்கின்றன.

கதை இந்நாவலில் – எந்த நாவலிலும் – முதன்மையானதோ முக்கியமானதோ இல்லை. இத்தகைய மனிதர்கள்தான் முதன்மையானவர்கள். அனுசுயாவின் வாழ்க்கை ஒரு அதிர்ச்சியிலேயே முற்றாக மலர்ந்து விட்டது. பூவராகவன் வாழ்நாள் முழுவதும் தேடித்தான் இந்த மலர்ச்சியைப் பெறுகிறான். செங்கம்மாவிடம் இது செயலாக வடிவெடுக்கிறது. அனுசுயாவிடம் அலைச்சலாக இயங்குகிறது. பழனிவேலு இதில் கரைந்துவிட வேண்டியதுதான்.

"அன்பே ஆரமுதே"வில் வரும் அனந்தசாமிக்கும், "உயிர்த்தேனில்" வரும் பூவராகவனுக்கும் இடையில் ஒரு ஒற்றுமை : மக்கட் பணியில் இருவரும் ஈடுபடுதல். இரண்டிலும் வரும் ரங்கன், பழனிவேலு ஆகியவர்களிடம் உள்ள ஒற்றுமை – தம் காதல் நிறைவேறாதபோது ஒரு குற்ற உணர்வால் பாதிக்கப்பட்டு சாதல்.

ஒருவகையில் "அன்பே ஆரமுதே"வில் வரும் துறவியல் மனப்பாங்கும், "உயிர்த்தேனில்" வரும் தன் இழப்பு மனப்பாங்கும், ஒரே மாதிரியானவை. இரண்டுக்குமிடையில் பெரிய வேறுபாடு, "அன்பே ஆரமுதே"வில் அனுசுயா இல்லை. அனுசுயாதான் தி.ஜா.வின் தனித்தன்மையிலிருந்து உருவான பாத்திரப் படைப்பு. இவ்வகையில் "அன்பே ஆரமுதே"வை விடச் சிறந்த நாவல் "உயிர்த்தேன்". "அன்பே ஆரமுதே" வில் இருக்கும் போதை இதில் குறைவு. இரண்டிலும் பொதுவாக இருப்பது ஒரு லட்சியவாதம். இந்த போதைத் தன்மை குறையக் குறையத்தான் நாவலுக்குள் சம காலம் – நவீனத்துவம் வரமுடியும்.

கற்பு வகையில்"அன்பே ஆரமுதே"வில் இறுக்கமே மிஞ்சுகிறது. இதில் இப்பிரச்சனை நீரோட்டமாகிவிட்டது. "அன்பே ஆரமுதே"வில் புத்த மதமும், இந்த நாவலில் மதமறுப்பு போன்றதொரு பக்தி மனப்பான்மையும் இடம் பெறகின்றன. இவற்றுக்கிடையில் இசைவும் இருக்கிறது.

தி. ஜானகிராமன் : அம்மா வந்தாள்

அலங்காரத்தம்மாள் மகன் அப்பு. கணவன் தண்டபாணியிடம் நிறைவு பெறாமல் சிவசுவை நாடுகிறாள். தண்டபாணி வேத ஆய்வில் மூழ்கியவர். அப்பு வேதம் படித்து முடித்து தன் எதிரில் வரும்பொழுது அவன் காலில் விழுந்து தன் பாவம் தீர்க்கலாம் என்று காத்திருக்கிறாள் அலங்காரம். வேதப்பள்ளி நடத்துகிறவள் பவானி அம்மாள். அவள் மகள் இந்து. திருமணமாகி சில காலத்தில் கணவன் இறந்துவிட தாயோடு வந்து சேர்கிறாள். வேதம் படிக்க வந்த அப்புவை இந்து விரும்புகிறாள். அப்புவும் விரும்புகிறான். இவர்கள் இருவருக்கும் திருமணம். அலங்காரத்தின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. பாவம் – தொலைக்க காசி புறப்படுகிறாள். இது கதை.

1. இந்தக் கதை, பலவற்றை நடைமுறை உண்மைகளாக அங்கீகரித்துக் கொள்கிறது. வேதவாழ்வுக்கும், உலகியல் வாழ்வுக்கும் முரண்பாடு வரும்போது, உலகியல் வாழ்க்கையின் வெற்றியை அங்கீகரிக்கிறது. வேதக்கல்வி – தற்காலக் கல்விக்கு இடையில், தற்காலக் கல்வியை அங்கீகரிக்கிறது. உள்ளத்திற்கும் உடலுக்கும் இடையிலான போராட்டத்தில், உடலை அங்கீகரிக்கிறது. இந்து இறுதியில் வெற்றி பெறுகிறாள். இந்துவோடு சேர்ந்து அப்பு வாழ்க்கைக்குள் வருகிறான். இவனைப் பவானியம்மாள் மறுக்கவில்லை. அலங்காரமும் மறுக்கவில்லை.

கதையில் தண்டபாணி தோல்வியடையவில்லை. அலங்காரமும் கதையில் கடுமையான குற்றவாளியாகிவிடவில்லை. அவளுக்கு சிவசு நியாயமாகவே தேவைப்பட்டாள். எப்படியோ, இவள் குற்ற உணர்ச்சி வயப்பட்டாள். காசிக்குச் சென்று தீர்த்துக் கொள்வாள். வேதம் படிக்க வைத்து மகனைக் கொண்டு தீர்க்கலாம் என்றால் மகனும் அம்மா பிள்ளையாகி விட்டான். கதைத் தலைவன் அப்பு செய்யும் குற்றத்தைத்தான் முன்பே அலங்காரம் செய்திருக்கிறாள். அப்புவுக்குள் தந்தையும், தாயும் போரிடுகிறார்கள். வெற்றி தாய்க்குத்தான்.

வேத வாழ்க்கை, உடலியல் வாழ்க்கையையும் மறுக்கவில்லை. இந்த வகையில், வேதமும்தான் இறுதியில் வெற்றி பெறுகிறது. உலகியல் வாழ்க்கைக்கு செல்வம், உடல்வாகு, அதிகாரம் எல்லாந்தான் தேவைப்படுகின்றன. இவை கல்வி – வேதம் இவற்றை மீறிப் பல சமயங்களில் வெற்றி பெறுவதைத் தடுக்கமுடியாது. பொறுமையாக இருந்தால் சில சமயம் கல்விக்கும் வெற்றி கிடைக்கும் – வாழ்க்கை முரண்பாடு இத்தகையது

இந்துவின் துரத்தல், வாழ்க்கையின் துரத்தல். அப்புவின் தயக்கம், பழமையின் தயக்கம்.

2. கதையில் தன்னிலை உணர்தல் நன்கு செயல்படுகிறது. அப்பு முதலில் இந்துவின் தாக்குதலை மறுத்த போதிலும், இந்து ஆரம்பம் முதலே தனக்குள் இருப்பதைப் பிறகு புரிந்து கொள்கிறான். இந்துவின் திருமணத்தை இவனது அகமனம் – அடிமனம் ஏற்கவில்லை.

இந்து இயல்பாகவே தன்னிலை உணர்வு வாய்க்கப் பெற்றவள். அதுதான் அவளைத் தீவிரப்படுத்துகிறது. அலங்காரமும் இறுதியில் தன்னை அறிகிறாள். சுத்தமாகப் பிறந்தவன் அப்பு என்ற முறையில் 'அவனிடமே மரியாதை – அன்பு முழுவதும்.

பவானியம்மாள் இறுதியில் உலகத்தை உணர்கிறாள். இந்துவின் விருப்பத்தை உணர்கிறாள், ஏற்கிறாள். அப்பு தன்னை உணர்ந்ததற்கான தூண்டுதல், தாய் பற்றிய அறிவு. தாய் பற்றிய அறிவு என்பதுகூட உலகியல் பற்றிய அறிவுதான். கதையில் சிவசு மட்டும்தான் "கெட்டவன்". இவனுக்கு வேறு வகையிலாவதற்கான சந்தர்ப்பமே வாய்க்கவில்லை – தேவையில்லை.

இறுதியில் காலத்தோடும், உடலோடும், உலகத்தோடும் மனிதர்கள் ஒத்துப்போகிறார்கள். ஆனால் இது கோபுவின் வழியிலல்ல. கோபு ஒரு வறடன். தண்டபாணியை யாரும் தீண்டிவிட முடியாது. துன்புறுத்திவிட முடியாது. ஒரு வகையில் அவரும் தன்னை அறிந்தவர். தனது இடத்தை ஏற்றுக் கொண்டவர்.

உலகியல் யதார்த்தம் – யதார்த்தவாதம் கதையில் வெற்றி பெறுகிறது. இலட்சியவாதம் கதையில் பின்னிடுகிறது. ஆனால் அது வெற்றி பெறுவதற்காக பின் வாங்குகிறது.

காவிரிதான் (ஆறு) கதையில் எத்தனை அழகு பெற்றிருக்கிறது! கதையில் காவிரி ஒரு முக்கியமான பாத்திரம்.

தண்டபாணியால் அலங்காரத்தை ஆளமுடியவில்லை. சிவசு ஆளுகிறான்; தப்பு என்ன என்ற முறையில் கதைப்போக்கு! அலங்காரத்தை எல்லோரும் சேர்ந்து குற்ற உணர்ச்சிக்குப் பலியாக்கி விடுகிறார்கள். இறுதியில் காசிக்கு அவள் துரத்தப்படுகிறாள் – அப்புவும் சேர்ந்து துரத்துகிறான். வாழ்க்கை பழைய கோட்டுக்குள் இல்லை; உடைத்து வெளியேற்றுகிறது.

இந்துவின் துரத்தல், திமிர் அல்ல. ஒரு பெண் கொள்ளும் இயல்பான ஆசை. இந்த ஆசையும் நிறுத்தி நிதானமாக அனுபவிக்கும் ஆசைதான்.

அலங்காரத்தைக் கூட திமிர் பிடித்தவள் என்று கூறிவிடமுடியாது. இவளுடைய ஆகிருதி, இவளிடத்தில் சுயநிறைவைக் கோருவது தவறல்ல. உலகியல் போற்றப்படவேண்டுவதன் எல்லைக்குள் தான் இருவரும் இருக்கிறார்கள். தி.ஜா. இந்த வகையில் இவர்கள் சார்பில் நிற்பவராகிறார்.

அலங்காரத்தைப் பழி கூறிவிட்டு, அப்புறம் அவளை உதாரணமாக்கிக் கொள்கிறது உலகம். இதற்காக அலங்காரம் போன்ற துணிச்சல்வாதிகள் பாராட்டுக்குரியவர்கள்தான். இவர்கள் காசிக்குச் செல்வது, இந்தப் பாவத்தைச் செய்யும் பிறரின் நலத்துக்காகவும்தான்.

காசி, ஒரு சமயக் குறியீடு. நெடுங்காலமாக இந்தியர்களின் பாவங்களை இது கழுவியிருக்கிறது. காசி இல்லாவிட்டால், இந்திய வாழ்க்கை நாறியிருக்கும். சமயத்தில் கடவுள் அருளின் இன்னொரு வடிவம் காசி. அது அருளோடு தண்டனையுமாகிறது.

அப்பு, வேத வித்து. அவன் காலில் விழுவதால் அலங்காரத்தின் பாவம் தீர்ந்துவிடாது – இது அலங்காரத்திற்குப் புரியாதா? இப்படி ஒரு காலந்தள்ளல்: காலக்கெடு வாங்கிக்கொள்ளல் – அதாவது இது பாவமல்ல என்பதைத் தனக்குள் கொண்டிருத்தல். வேதவித்தும் இந்தப் பாவம் தேடித்தானே செல்லுகிறான்? அப்புறம் அதில் பாவம் என்ன? உலகியலை அனுசரித்தலின் வகைகளில் இதுவும் ஒன்று. இதை வேதம் மறுத்துவிடக்கூடாது. (44)

3. இந்து : "என் உடம்பை மட்டும் கட்டியாண்டா பெண்டாட்டி ஆயிடமுடியுமா? ஆயிடுவேனா? நான் ஆகலே. எனக்குக் கல்யாணமே ஆகலே. உடம்புக்குத்தான் ஆச்சு. இன்னும் இரண்டுவருடம் உசிரோடு இருந்து நானும் அங்கேயே இருந்திருந்தா, சம்சாரியாக்கூட ஆயிருப்பேன். அப்பவும் கல்யாணம் ஆயிருக்காது" (47). "எனக்குப் பாவமாகத் தோணலியே. அந்தராத்மாவுக்கு விரோதமா ஒரு காரியம் செய்யறதும் பேசறதும்தானே பாவம்!" (48). வேதத்தை இழுக்காதே, வேதம் அப்பு மாதிரி" (92).

அலங்காரத்தம்மாள் உணர்வுகள் : "வேதம் படிக்கணும்; அத்யயனம் பண்ணி அதைக் கரைச்சு குடிச்சு தேஜஸ்வியா ஜொலிக்கணும். அவன் நெருப்பு மாதிரி வந்து நிற்கிறபோது, யார்வந்து அவன் முன்னாலே நின்னாலும், அவா மனசிலே இருக்கிற மாசுக்களெல்லாம் பொசுங்கிப் போகணும்".

தண்டபாணி: "லோகம் ஆரம்பிச்ச நாளிலிருந்து, சம்பாதிக்கிற வனுக்குத்தான் மதிப்பு. அதுவும் பொம்மனாட்டிகளுக்கு, எல்லாம் இருந்தாத்தான் மதிப்பு வரும். நிறையச் சம்பாதிக்கணும், அழகா இருக்கணும். முரடாகவும் இருக்கணும். புத்திசாலியாகவும் இருக்கணும்" (118).

அலங்காரம் : "இரண்டணாவுக்கும், மூன்றணாவுக்கும் மந்திரத்தை வித்தா, அதுக்கே கோபம் வந்துடறது. பறக்கவிட்டு வேடிக்கை பார்க்கிறது. உள்ளே எரியறதை அணைச்சுப்புட்டா, அது வெளியே எரிஞ்சு இருக்கிறதை கரியாக்கிவிடறது. வேதம் படிக்கவேண்டாம், வெறுமனே கைநீட்டினாலே சவக்களை வந்துடறது" (124).

தண்டபாணி : "ஒண்ணையும் புரிஞ்சுக்க சிரமப்படக் கூடாது. பேசாமல் பார்த்துண்டேயிருக்கணும். அதுக்காகத்தான் சுவாமி நம்மைப் படைச்சிருக்கார்" (145).

அலங்காரம் : "என்னத்தைப் பண்ணி சுட்டுக்கலாம்னு அலைஞ்சேன். நெருப்பாலே சுட்டுக்கிறதா? கரண்டுல கோயி கையை வைக்கிறதா? அதெல்லாம் என்ன பண்ணித் தொலைக்கும்? சாகத்தானே அடிக்கும்? சாம்பலாகத்தானே அடிக்கும்? வேதம் படிச்சா வயசேது? அவாள்ளாம் ரிஷியாயிடுவா! நெருப்பா ஆயிடுவா! அப்படி நீ வருவே, அப்ப உன்னைப் பார்த்து உன் கால்லே விழுந்து எல்லாத்தையும் எரிச்சுடலாம்னு தீர்மானம் பண்ணிண்டேன்" (151).

அக்கா : "ஆனா அப்பா வரமாட்டாரே. அம்மாவ விட்டுட்டு அவராலே இருக்க முடியாதே. இத்தனையும் சகிச்சுண்டு அவளைப் பார்த்துண்டு இருப்பாரே தவிர விட்டுண்டு வரமாட்டார். அவரை இந்தண்டை இழுத்துண்டு வந்துட்டா சீக்கிரம் அவர் பிராணன் போய்விடும்" (165).

பவானி : "வேதம் படிச்சா என்ன? வாதம் புடிச்சா என்ன? இல்லாததுகள் வயித்துலே இரண்டு சாதம் விழணும். பசிதான் சுவாமி. அதுக்கு நைவேத்தியம் பண்ணினாப் போதும். அதுகூட அகம்பாவம்தான். நாம் எத்தனை பேருக்கு நைவேத்தியம் பண்ணமுடியும்? பசிரூபத்திலேதானே இருக்கான் அவன்? நாம இல்லைன்னா வேதம் பிழைக்காதா? அது அனாதி. வேதம் சொல்லிக் கொடுக்கிறவன் சுகப்பிரம்மம் மாதிரி இருக்கணும்" (187).

அப்பு : "அத்தை மனசு காவேரி. அகண்ட பிரவாகமாக ஓடறது. பிரியமும் கருணையுமா பொங்கிண்டு ஓடறது" (192).

அலங்காரம் : "அப்பாக்கு எதுக்கடா காசி? அது ஞான சூரியன். கருணா மூர்த்தி. என்னைக் கருக்கிப் போடாம இருந்ததே இத்தனை நாளா, அதுவே பெரிசு" (206).

அப்பு : "அழகா இருந்தா ரொம்பக் கஷ்டம். வருணனே, நாங்கள் ஏமாற்றுகள், தவறுகள் புரிந்திருக்கலாம். அவற்றை எல்லாம் நீக்கிவிடு. உன் அன்பும் கருணையும் எங்களுக்கு வேண்டும்" (207).

இந்திரா பார்த்தசாரதி :
ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கிவிட்டன

1. இ.பா.வின் கதைகளில் – படைப்புக்களில் மிகச் சிறந்த படைப்பு. கதையின் முடிவு, கதையை முழுமையாகப் பரிசீலிக்க வைக்கிறது.

பானுவைத் திருமணம் செய்வதற்காகத் திலகத்தின் திருமண உறவை ரத்து செய்ய அமிர்தத்தால் முடியவில்லை. பானு அமிர்தத்தை உதறிவிடுகிறாள். எனக்கு இப்போது திலகம்தான் வேண்டும் என்று தவிக்கிறான் அமிர்தம்.

கணவன் படித்தவன். நாகரிகம் வேண்டுபவன். மனைவி இப்படி இல்லை. இதனால் கலை உணர்வும், களிப்புணர்வும் உள்ள பானுவைத் தேடுகிறான். பானுவும் அவனது வயதைப் பொருட்படுத்தாமல் அவனை விரும்புகிறாள். இது அமிர்தத்திற்கு இதமாகிறது.

இது ஓர் உண்மை. கணவன் மனைவி உறவு பல காரணங்களால் சலித்து விடுகிறது. கணவன் மனைவி உணர்வுகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள், இதற்குக் காரணம். தவிர ஒரே கூரையின்கீழ் இருவரும் பல்லாண்டுகள் வாழ்வது இன்னொரு முக்கியக் காரணம். இதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

பானு தாயை வெறுத்து – தாய் ஓர் இளைஞனுடன் உறவு கொண்டதை வெறுத்து, அதனாலேயே இளைஞர்களை– அவர்களின் வெட்டியான வேடிக்கையான போக்கை வெறுத்து அமிர்தத்தை விரும்புகிறாள்.

அமிர்தம் – திலகம் வெறுப்பும், அமிர்தம் – பானு விருப்பும் நியாயமே என்ற முறையில் கதை விரைந்து நகர்கிறது. கதையில் பானு கூறியது போல அமிர்தத்தின் மத்திய தர வர்க்கச் சார்பு மேலோங்குகிறது. பகிரங்கமாக பானுவோடு அமிர்தம் உறவு கொள்ள விரும்பவில்லை. பழைய கால ஒட்டலுக்கு அவளை அவன் அழைத்து செல்கிறான். பானு மறுத்தவுடன் வேறு ஒருத்தியை அமிர்தம் நாடுகிறான்.

பானுவுக்கு ஒரு திருமணந்தான் தேவை. அமிர்தத்திற்கு ஒரு உடல் தான் தேவை. பானு திருமணத்திற்குப் பின்னால் திலகமாகத்தான் ஆகப்போகிறாள். அப்புறம் அவள் கணவன் இன்னொரு பானுவைத்

தேடத்தான் போகிறான். மீண்டும் ஒரு விஷச்சூழல் – சக்கரம். இது பயனில்லை.

அதாவது மனைவியாகத் திலகமும் காதலியாகத் தானும் இருப்போம் என்ற முடிவுக்கு பானு வந்திருக்கலாம். பானு திருமண உறவின் விளைவை நினைத்துப் பார்த்து மாறுவதோ அல்லது திலகமாவது ஆணின் குணமறிந்து மாறுவதோ முடியாது. அவர்கள் கெட்டி தட்டிப்போன இந்தியப் பெண்கள்.

அமிர்தத்துக்கு இன்னும் முதுமை வரவில்லை. வேறு முடிவுகளையும் அவனால் எடுக்கமுடியும். உடல்தான் இவர்கள் எல்லோரையும் ஆள்வதென்றால், இந்தப் பன்றிகளுக்கு வேறு வேறு சாக்கடைகள் தேவையில்லை.

பானு இவனை விரும்பும்பொழுதே, இவன் மணமானவன் என்பதைப் பற்றி அதிகம் சிந்தித்திருக்கலாம். ஒரு படைப்பில் ஒரு பாத்திரம் இவ்வாறு இருப்பதுதான் தேவை; மேன்மை.

இந்தியச் சமூதாயத்தில் குடும்ப உறவுகளை மாற்றுவதற்கு ஒரு சிந்தனை ரீதியான மார்க்கம் இல்லை. சிலர் கலவரம் செய்ய வேண்டியதுதான். இதன் தொகை பெருகும்போதுதான் வேறு வழிகள் தென்படும். இந்தக் கலகக்காரன்தான் இதில் நாயகன்.

ஜெயகாந்தனின் "கோகிலா என்ன செய்து விட்டாள்? " இதைவிடத் தீவிரமான படைப்பு– இதிலும் முடிவு வைதீகத்தனமானதுதான். இந்நிலையில் திலகம் வெற்றி பெறுகிறாள். அமிர்தம் – பானு உறவு வேறோர் இடத்தில் வேறோர் சந்தர்ப்பத்தில் தொடரும். அப்புறம் இன்னொரு கலவரம் நிகழும். திலகம் தீயில் எரிய வேண்டும். குடும்ப உறவுதான் இந்தியாவின் பெரிய "மாயை".

இந்திரா பார்த்தசாரதி :
தீவுகள்

1. இ.பா. படைக்கும் தனித்தன்மையோடு கூடிய பாத்திரம் கபூர். கபூர் கூறுகிறார்: "பணக்காரர்களின் பிரதிநிதியாய் இருந்து கொண்டு நான் இப்படிச் சொல்வது உனக்கு ஆச்சரியமாய் இருக்கலாம். பணத்தின் அடிப்படையில் இயங்கும் ஒரு சமூகத்தில், பணத்தினால் கிடைக்கக்கூடிய அற்ப சௌகரியங்களையே வாழ்க்கை மதிப்புக்களாய் மயங்குவது, சமூகத்தில் தன் உருவ வேட்டையாடும் ஒருவனுடைய பலவீனம். தேவைகள் என்ற வலையை அவன் தன்னைச் சுற்றி பின்னிக் கொண்டே செல்கிறான். இந்த வலை அவனைச் சிறைப்படுத்தி விடுகிறது. மீள முடியாத ஒரு நிலையை அடைந்த பிறகுதான் 'இது என்ன பைத்தியகாரத்தனம்?' என்று அவனுக்கு தோன்றுகிறது. எனக்கு நானே தளையிட்டுக் கொண்ட கைதி நான்".

இவர் தன் உருவவேட்டையாடுவது பற்றி : "சமூகத்தில் எல்லோரும் என்னைத் தனித்துக் காண வேண்டும் என்ற உருவ வேட்டையில் நான் இழந்திருப்பதுதான் எத்தனை எத்தனை? இனிமேல் தப்பிக் கொண்டு ஓடுவது என்பது இயலாத காரியம். எது என்னுடைய உண்மையான உருவம்? மோகினியின் கணவனா? பொருளாதார மேதை கபூரா? நேற்றிரவு ஷம்மினின் அரவணைப்பில் – பாதுகாப்பில், அந்தக் கணத்து இன்பமே சொர்க்கமாகக் கண்ட – போர்வைகள் எல்லாம் நீங்கிய வெறும் பௌதீகத் தோற்றமா?"

ஷம்மினுடன் ஏற்பட்ட நெருங்கிய பிணைப்பு பற்றிக் கபூர் : "என்னுள் இருக்கும் அசிங்கமான ஏதோ ஒன்று அவளின்றித் தரிக்காது போல் என்னை ஆட்கொண்டு அவளிடம் அடிமையாக்கி விட்டது. அது அசிங்கமானது என்று நான் ஏன் சொல்லிக் கொள்ளவேண்டும்?"

ஒன்றை ஒன்றை வெறுக்கும் இரண்டு கபூர் பிம்பங்கள். வாழ்நாள் முழுவதும் இரண்டு பிம்பங்களும் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்கின்றன. இல்லாவிட்டால் ஷம்மினை எப்படி ஒரே சமயத்தில் விரும்பவும், வெறுக்கவும் முடியும்? வெறுப்பு அவள் மீதா? தன்மீதா? கல்வியும் நாகரிகமும் அழுத்தி வைத்திருந்த ஏதோ ஒன்று தன் விடுதலையை இப்படியா கொண்டாட வேண்டும்?

ஒரு காலத்தில் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டேன். இப்பொழுது பணத்தை வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறேன். ஷம்மின் நல்லவள்தான்.

அவன் (ரத்தன்லால்) கையில் அவள் ஒரு கருவி. வாழ்க்கை ஒரு நேர்கோடு இல்லை. தொடர்ந்து நிகழும் நிறுத்தப் புள்ளிகள். ஒவ்வொரு புள்ளியும் என்னைப் பொருத்தவரையில் சொர்க்கம். நேர்கோட்டு மாயையில் மயங்கி நிகழ் காலத்தை எதற்காக நரகமாக்கிக் கொள்ளவேண்டும்?

"ஷம்மின்மீது கல்லெறிவதற்கு முன், அப்படிக் கல்லெறிவதற்கு எனக்குத் தகுதியிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். ஒரு சிறையிலிருந்து தப்பி இன்னொரு சிறைக்குள் அகப்பட்டுக் கொள்வதைத் தவிர மனிதனுக்கு வேறு கதி மோட்சமே கிடையாதா?"

தன்னைத்தானே வேட்டையாடும் கபூர் இறுதியில் தன்னைக் கண்டடைகிறாரா? இல்லை. தன்னை வெறும் புள்ளியாகவே காண்கிறார்.

தன்னை யார்மீதும் ஆக்கிரமிப்பாக அமர்த்திக் கொள்ளாதவராக - தேவைப்படும்போது தன்னைத்தானே மேலும் இழந்துவிடக் கூடியவராக கபூர் இயங்குகிறார். இறுதியில் தன்னை மறந்து தூங்கிவிடுகிறார்.

பணம் மனிதனைத் துரத்தும்போது துரத்தலின் இடைவிடாத தொல்லை காரணமாகத் தன்னை இழந்துவிடும் மனிதர், கபூர். ஒவ்வொரு கணத்தையும் ஒரு ஒளியாண்டாக ஆக்கிக் கொள்ள விரும்புபவர் இவர். இவருக்கு கணத்தைத் தவிர உரியது எதுவுமில்லை. இதனால்தான் கடைசியாக ஷம்மினுடன் ஓர் உறவு.

2. மோகினிகள் சாவதில்லை. மகன் அசோக், மோகினி போலவே நடந்து கொள்கிறான். முந்திய நாளிரவு தந்தை எங்கே போனார் என்று கேட்கிறான். தம்பி ராகேஷ், விஜயாவை மணந்து கொள்வதை அவன் ஏற்கவில்லை. உலகில் வித்தியாசமானவர்கள் இருக்க முடியும் என்பதை இவன் ஏற்கவில்லை. மோகினியின் அப்பா இத்தகையவர்தான். விஜயாவின் தங்கை உமா இத்தகையவள்தான். மோகினியின் ஆத்திரம் - தவிப்பு: "எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. உங்கள் அப்பனைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பதனால் . . . உங்களை எல்லாம் பெற்றெடுத்ததனால் . . . சர்வ காலமும் குடித்து கும்மாளம் போடுகிறாளே உன் அக்கா (ஸ்வர்ணா) அவளால் . . . பெண்டாட்டியைக் கட்டி மேய்க்கத் தெரியாமல் என்னைக் கொல்ல வேண்டும் என்கிறானே, உன் அருமை அண்ணன் ராகேஷ். அவனால் . . . இது ஒரு வீடா? வேலைக்கார நாயை துரத்திக் கொண்டு ஓடுகிறான் ஒரு பிள்ளை".

மோகினியிடம் கபூருக்கு அனுதாபம் பிறக்கிறது. போதுமானதாக இல்லை. மோகினியின் ஆத்திரத்திற்கான காரணங்கள் பற்றி ஆசிரியர் அக்கறை கொள்ளவில்லை. மோகினியின் சாவு எல்லோருக்கும் ஒரு (பௌதிக) விடுதலையைத் தருகிறது. இது உண்மையில்லை. இந்தச் சமுதாய முறையின் வேரோடு சம்பந்தப்பட்டவள் மோகினி. இவள் சாகமாட்டாள். இதில் யாராவது அதிகாரம் செய்தாக வேண்டும்.

மோகினியை விளக்காததுதான் இந்நாவலின் படைப்பில் ஒரு பெருங்குறை. இ.பா.வின் அவசரக்கோலம் இதற்குக் காரணம்.

3. ராகேஷ் – விஜயா திருமணம் இந்நாவலில் ஒரு பிரச்சனை: பஞ்சாபிக் குடும்பம்; ராகேஷ், தென்னிந்திய பிராமணக் குடும்பம். விஜயா, பணக்காரக் குடும்பத்திற்கும் மத்தியதரக் குடும்பத்திற்கும் உறவு – இவை பிரச்சனைகள். இவை விவாதிக்கப்படுவது நாவலின் நல்ல பகுதிகள்.

கபூர் : "ஒரு பணக்காரப் பையனுக்குப் பல வாய்ப்புக்கள் இருக்கும் போது நீ விஜயாவைத் தேர்ந்தெடுத்திருப்பதுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இது வாழ்க்கை முழுவதும் நீடித்திருக்குமா என்ற சந்தேகம். நீ பணக்காரன் என்பதால் மட்டுமல்ல, உன் தாயின் மகன் என்பதனால் அவள் இரத்தம் உன் உடம்பில் ஓடாமல் இருக்காது என்ற காரணத்தினாலும் ஏற்பட்ட சந்தேகம்.

"கணவன் மனைவிக்குள் ஆரம்ப காலத்திய பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் காரணமாக ஏற்படும் சமூகப் பிரச்சனை மாறாமலேயே இருந்தால் அவர்களுடைய இல்லற வாழ்க்கை எப்படி அமையும் என்பது எனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்?"

ராகேஷ் பதில் : "இல்லறம் என்பது ஒரே ஆண் – பெண்ணுக்கிடையே இருக்கும் ஒப்பந்தமாக ஆயுட்காலம் முழுவதும் நீடித்திருக்க வேண்டுமா என்ற பிரச்சனை – எல்லாம் தற்காலிகமாகத்தான் என்ற பொருளாதார ஏற்பாட்டுச் சூழ்நிலையில் திருமணம் போன்ற விஷயங்கள் கூட ஏன் விதிவிலக்காக இருக்க வேண்டும்?"

கபூர் : "ஒளி ஆண்டுகளைப் பற்றிப் பேசும் இக்காலத்தில் மனித வாழ்க்கையின் தற்காலிகத் தன்மை பற்றிப் பேசுவதில் அர்த்தம் உண்டு."

கபூர் நிரந்தரத்தில் நம்பிக்கை வைக்கவில்லை. ராகேஷும் இப்படித்தான் – இதுதான் நாவலில் பிரச்சனைக்கான தீர்வாகிறது. மனித

உறவுகளில் இதுதான் சத்தியமும் சாத்திமும் ஆகிறது. மனித அவலம்தான் இதில் வெளிப்படுகிறது. இ.பா.வின் நிரந்தர கதைக்கரு இது.

திருமணத்தில் நிரந்தரத் தன்மை தேவையில்லை. இந்த சுழற்சியிலேயே ராகேஷ் – விஜயா திருமணம் நடைபெறுகிறது. கபூர், தன் மனைவியை மணவிலக்கு செய்ய முடியவில்லை; செய்ய விரும்பியும் செய்யவில்லை.

மணவிலக்கு இச்சிக்கலுக்கு தீர்வாகக் கூறப்படுகிறது. இதற்கு இன்னொரு தீர்வு, கணந்தோறும் காதலைப் புதுப்பித்தல். இதுவும் சாத்தியமில்லை. கபூர்தான் நாவலில் ஓங்கி – அடக்கமாக நிற்கிறார்.

பணம் மனிதனைச் செய்யும் சித்திரவதையை கபூர் பாத்திரப் படைப்பின் மூலம் செய்ததற்காக இ.பா. பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அதுபோலவே பணப்பெருமையால் ஆத்திரப்பட்டு வெடிப்பதை மோகினி மூலம் படைத்ததற்காகவும் அவர் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் கபூர் தனிப் புள்ளி – தனித்தீவாகிவிட்டதில் நிறைவேற்றப்பட இல்லை. அதன் மூலம் அறவே இவர் அறம் X மறம் போராட்டத்தின் எல்லைக்கு வெளியே சென்று விடவில்லை. இந்தப் போராட்டத்தின் போக்கின் இடைநிலையில் கபூர் இருக்கிறார். மோகினிக்காக அனுதாபம், ஷம்மினிடத்துக் குற்றம் காணாத் தன்மை இரண்டும் இவரிடத்துள்ளன.

சாதாரண வாசிப்பில் இந்நாவலை ஒரு மர்மக்கதையாகவே கருதிவிடக்கூடும். ஆனால் இது உண்மையில் மர்மக்கதையில்லை. ஒரு தாயை மகள் செய்யும் கொலை. மகளைத் தாய் 'கொலை' செய்ய மகள் வாங்கும் பலி. ஒரு தாய் என்பவள் இங்கு ஆங்காரம் மற்றும் பணப் பெருமையின் உருவம். பணம் மனிதனைத் துன்புறுத்த மனிதன் பணத்தைக் கொல்லும் நிலை. ராகேஷ் – விஜயா காதல் பெரும் பகுதி பழைய பாணிதான். இப்படி ஒரு காதல் இந்த நாவலுக்கு இன்றியமையாதது இல்லை. ஒரு தென்னாட்டு பிராமணப் பெண் – டெல்லிச் சூழலில் – என்ற முறையில் கதை எழுதியதில் இ.பாவின் நோக்கம் நல்லதுதான்; வெற்றிபெறவில்லை.

ஆதவன் :
காகித மலர்கள்

1. இந்த நாவலில் எவை காகித மலர்கள்? வாழ்க்கை காகித மலர்களா? அழகாக இருக்கிறது – மணக்கவில்லையா?

விசுவம் - சுற்றுச் சூழல் கேடுகளை ஆராயும் மாணவர். அவருக்கு வாழ்க்கை எப்படி காகித மலர்களாயிற்று? இதேபோல மற்றவர்களுக்கும் வாழ்க்கை காகித மலர்கள் தானா? எல்லோருக்கும்தானா? காகித மலர்களை என்ன செய்யலாம்? விட்டுவிடலாமா? முடிகிறதா? விசுவம் சுற்றுச்சூழல் சீர்கேடுகளைப் பார்க்கிறார். மனிதர்கள் ஏற்படுத்தும் கேடுகள் இவை. தாம் வாழ – வாழ்க்கை வசதி பெறத்தான் இந்தக் கேடுகளைச் செய்கிறார்கள். சுற்றுப்புறத்தில் கேடுகள் செய்தால்தான் வாழ்க்கை. சுற்றுப்புறத்தைக் கெடுக்கும் வாழ்க்கை, சீரோடு – சிறப்போடு இருக்க முடியுமா? சிலருக்கு இருக்கலாம் – மற்றவர்க்கு? பலருக்கு?

சேரியைப் பெருக்கி, அதில் வாழ்க்கையை வளமாக்க முடியுமா? இப்போது சமூகம், மனிதர்கள், நோய்களை மூடிவைத்து – தாங்கள் இங்கே நலமாக இருக்கிறோம் என்று காட்டிக்கொள்ள நேரும். இதற்கு முகமூடிகள் வேண்டும். முகமூடிகள் தரித்துத் தரித்து – முடியுமானால் களைந்து – மீண்டும் தரித்து – அப்புறம் முகமூடி தரிப்பதே வாழ்க்கையாகிவிடுகிறதா?

இன்றைய மனித வாழ்க்கையை ஒரு குடும்பத்திலிருந்து, அந்தக் குடும்பத்தைச் சார்ந்த சூழலில் – உலகச் சூழலில் வைத்துப் பார்க்க வேண்டும் – நாவல் படைக்க வேண்டும்.

டெல்லிச் சூழலில் ஒரு குடும்பம் – பெரிய மனிதர்கள் உறவு – பையன்கள் படிப்பு – காதலிகள் உறவு – கலாட்டாக்கள் – பெற்றோர் தவிப்பு – திருமணம் – குழந்தைப்பேறு – வெளிநாட்டுப் படிப்பும் அனுபவமும் இம்மாதிரி நிகழ்வுகள் எந்தக் குடும்பத்திலும் காணப்படலாம். இவற்றைச் சித்திரிக்கும் குடும்பக்கதை நமக்கு வேண்டாம். இதைப் பலர் எழுதிப் பார்த்து விட்டனர்.

இந்தக் குடும்பக் கதையை ஆதவன் தன் பார்வையோடு – மற்றவர்களிலிருந்து வித்தியாசப்பட்டு எழுதுகிறார். இது கதை. இந்தக் கதை "காகித மலர்களை" ஒரு நாவலாக்குகிறது. இதனால்தான் தமிழ் நாவல்களுள் இது குறிப்பிடத்தக்க சாதனையான நாவலாகிறது.

2. முகமூடி – Mask என்ற உளவியல் ஆய்வுக் கருத்தாக்கம் நாவலில் முக்கிய பங்கு வகிக்கிறது. நம் சமூகத்தில் எல்லா மனிதர்களும் தவறாது முகமூடி தரிக்கின்றனர். சிறுவயது முதற்கொண்டு பெற்றோராய், ஆசிரியர்களாய், அரசியல்வாதிகளாய், அதிகாரிகளாய் முகமூடி அணிவிக்கப் பெறுகிறோம்.

நாம் பெற்றோர் – இப்படித்தான் குழந்தைகளை வளர்க்க வேண்டும். நாம் அனுபவிக்காத வாழ்க்கை நம் குழந்தைகளுக்கு வேண்டும். இப்படித்தான் படிக்க வேண்டும் – விளையாட வேண்டும் என்று குழந்தைளுக்கு முகமூடி அணிவிப்பது.

இது பெரிய சாதனைமிக்க பள்ளி என்று சிலவகையான பள்ளிகளில் சேர்க்கிறோம். எதிர்காலத்தில் டாக்டர் ஆக, பொறியியல் வல்லுநராக – இப்படிப் படிக்கவேண்டும். நமக்குத் தேசப்பற்று முக்கியம். நம் நாடு ஜனநாயக நாடு. தலைவர்கள் பெருமைக்குரியவர் – இப்படி கல்வி என்று சில படிப்பினைகள் திணிக்கப்படுகின்றன. திறனாய்வில்லாது இந்த முகத்திரைகளை ஏற்க வேண்டும். நீங்கள் பெண்கள்; இப்படித்தான் அடக்கம், பணிவு, கற்பு – கற்க வேண்டும். நம் சமயம் பெருமைக்குரியது. நீங்கள்தான் இதனைக் காக்க வேண்டும். இப்படிப் பெண்கள் வளர்க்கப்படுகின்றனர். கற்பிக்கப்படுகின்றனர். நான் கவிஞன். நான் எழுதுவதுதான் கவிதை. நான் அறிஞன். அறிவைத் தயாரிப்பவன். உங்களுக்கு அறிவு – கவிதை தருபவன் நான். உங்களிடம் இல்லாத கவிதையை – அறிவை நான் தருகிறேன். இதற்காகச் சிந்திக்கிறேன்; துன்புறுகிறேன்.

நான் துறவி – நான் துறவியாய் இருப்பது உங்களுக்காகத்தான். பொருளாசை துறந்து உங்களுக்கு நான் கற்பிக்கிறேன்.

நீ என் மனைவி – நான் கணவன். நீ எனக்கு அன்பைத் தரவேண்டும். கோபம் கூடாது. நான் உன்னைப் பாதுகாப்பவன். இப்படி எத்தனையோ முகமூடிகள். இவை எப்படி முகமூடிகளாகின்றன? எதனால் முகமூடிகள்?

யாருக்காவது முகமூடிகள் கச்சிதமாய், முழுமையாய் – பொருந்துகிறதா? அந்த முகமூடிகளோடு அவர்கள் நாள் முழுவதும், வாழ்க்கை முழுவதும் இருந்துவிட முடிகிறதா?

பள்ளியில் தரித்த முகமூடியை – வீட்டில் ஆசிரியர் தரித்துக் கொண்டிருக்க முடிகிறதா? பள்ளியில் போட்டுக் கொண்ட முகமூடியை வீட்டில் கழற்றிய பிறகு கணவர் முகமூடி தேவைப்படுகிறதா? அன்பான

கணவர் முகமூடி, அடக்கமான – மனைவி முகமூடி இவற்றோடு எத்தனை காலம்? – முடிகிறதா? இடையிடையே சிலநேரம், சிறிது காலம் – கழற்றிவிட்டு அமைதியாக இருக்க முடிகிறதா? அப்போதும் வேறு முகமூடிகள் – சமூக வாழ்க்கை இப்படி நிர்பந்திக்கிறது. மனிதர்கள் இயல்பாக இல்லை – இயல்பாக இருப்பது என்றால் என்ன? சில வேலைகள், கட்டளைகள், கவலைகள், கற்பிதங்கள், நினைப்புகள் தவிர்க்க இயலாதவை. இவற்றின் மூலமே சமூக வாழ்க்கை; என்றோ தொடங்கிய வாழ்க்கை. சமூக விவரிப்புக்கள், வாழ்க்கைச் சட்டங்கள். இவற்றில் கை கால்களை நுழைத்து நம் காதுகளைத் துளைத்து – இவை இறுகும்போது முக்கி முனகிக் கழற்ற முனைந்து, கழற்றும்போது, கை கால் உடைந்து – காயமாகி – இப்படி வாழ்க்கை. அமைச்சர், போலீஸ், இராணுவம், சேவகர், N.G.O., டாக்டர், வக்கீல், கணவர், மனைவி இப்படியான வாழ்க்கை முகமூடிகள்.

எந்நேரமும் முகமூடியோடு இருக்க முடிவதில்லை. இது மனிதப் பிரச்சனை. மனித அவலம். முகமூடி தரிக்காது வாழ்க்கையைப் பார்க்க முடியாதா? தத்துவம், மெய்யியல், யதார்த்தம், வாழ்க்கை, அன்பு என்பவை வேறு என்ன? – எங்காவது எப்படியாவது சமரசங்கள் சமாதானங்கள் இல்லாமல் வாழ முடியுமா?

தற்கொலை – எப்படி? சமரசத்திலிருந்து தப்ப முயற்சியா? இதுவும் தப்புதல்தானா? நேர்முகச் சந்திப்பு தகாதா? நேர்முகத்திலா அதைச் சந்திக்கிறோம்?

அதுசரி. இப்படி எல்லாம் நாம் எதைத் தேடி – கூண்டுகளை – வலைகளை – விதிகளை – வாழ்க்கையை உருவகப்படுத்த, கட்டமைக்க முனைகிறோம்?

கட்டுமானங்கள், சட்டங்கள், விதிகள், ஒழுங்குகள் – அவற்றுள் நாம் முடங்குகிறோம், முனங்குகிறோம். விசுவம், செல்லப்பா, பத்ரி, பசுபதி, பத்மினி என்ன செய்கிறார்கள்? என்னவாகிறார்கள்?

புத்தர், இயேசு, நபிகள், சாக்ரடீஸ், பாஸ்கல், தாஸ்தாவஸ்கி, டால்ஸ்டாய், சேக்ஸ்பியர், ஹைடெக்கர், சார்த்தர், காமு, காப்கா, மார்க்ஸ் இவர்கள் வாழ்க்கையில் எந்தக் கட்டங்களில் – எந்தக் கூண்டுகளில் கிடந்தார்கள்?

நமக்குள் இவர்களை எங்காவது சந்திக்கிறோமா? விசுவை எப்படி ஏற்றுக் கொண்டார்கள். செல்லப்பா – பத்ரி – பத்மினி? நமக்குள்ளும் விசுவத்திற்கு இடம் உண்டா? நாமும் காகித மலர்களா?

ரா.சு. நல்லபெருமாள் :
கல்லுக்குள் ஈரம்

1. சராசரியான இலக்கிய வாசகர்கள் படித்துத் தீர்ப்பதற்குத் தேவையான சுவையான அம்சங்கள் பலவும் உடையது இந்த நாவல்.

கல்கி வெள்ளி விழாப் பரிசைப் பெற்றது இந்த நாவல். கல்கி பத்திரிக்கைக்குத் தேவையான பல சம்பவங்களையும் கொண்டது இந்த நாவல்.

தேசப்பற்று, பழைய காங்கிரஸின் மீது பற்று.

ராஜாஜியின் மீது ஒரு மரியாதை. கம்யூனிச எதிர்ப்பு, சோசலிச எதிர்ப்பு, அரசியல் வரிசையில் இக்குணங்களோடு இலக்கிய வகையில், காதல், வீரசாகசம், மர்மம், இடையிடையே நகைச்சுவை, தமிழ்நாட்டுக் கல்லூரி மேன்மை. இவற்றோடு கூடியது இக்கதை. இலக்கியத்திற்கு ஒரு தத்துவம் – இலட்சியப் பார்வை, யதார்த்தவாத விமர்சனம். தேவை என்ற முறையில் எழுந்தது இந்த நாவல். மொத்தத்தில் கல்கித்தனமும், பத்திரிக்கைத்தனமும் நிறையவே உடையது இந்த நாவல்.

2. ரங்கமணி நாவலில் முதன்மையான பாத்திரம். தந்தையை வெள்ளையர் கொன்றனர். ஆத்திரம் தீராதவன் எந்நேரமும் சேவல் மாதிரி பலாத்காரத்தைக் கொக்கரித்துக் கொண்டிருக்கிறான். காந்தியைப் பார்க்கவே பயப்படுகிறான். இவனுக்கு குரு சர்தார் சொக்கநாதப்பிள்ளை. வாஞ்சிநாதன் ஆஷ் கலெக்டரைக் கொன்றதற்கு உதவியாக இருந்த எட் குருநாதன் இவன்தான்.

தமிழ்நாட்டில் வன்முறை இயக்கத்திற்கு இவர் தலைவர். சுபாஸ்போஸின் கொள்கையே சரி என்ற கருத்துடையவர். இவர்தான் பாரத மாதா சங்கம் ஏற்படுத்தியவர். சுயேட்சைப் பத்திரிகைப் போர்வையில் இயக்கம் நடத்துபவர்.

இவரது மகளாகக் கருதப்பட்ட வளர்ப்புப் பெண் திரிவேணி காந்தியத்திற்கு உயிரையே தருபவள்.

அப்புறம் தீட்சதர், அத்தையம்மாள், சிவானந்தம் DSP. அவன் மனைவி கமலவாசுகி.

இவள் கல்லூரியில் ரங்கமணியின் காதலி. காதல் தோல்வியால் மனம் சிதைந்தவள் காங்கிரஸ் பழிவாங்கக் கருதியவள்.

கதை திருநெல்வேலியில் – டெல்லியில் – பம்பாயில் நடைபெறுகிறது.

டெல்லியில், தேவிகா முஸல்மான் வடிவில் இருக்கும் சென்குப்தா

இடையில், வெங்கு, பித்துக்குளியாகக் கருதப்பட்டவன்.

பாலத்தைத் தகர்த்தத் திட்டம். திரிவேணி வந்து தடையாகிறாள். சிவானந்தம் மனமாறுதல் – கமலவாசுகியும் மனம் மாறினாள். கடைசியில் ரங்கமணி – காந்தியை பார்க்கப் போகிறாள் காந்தி சாகிறார்.

3. "அலை ஓசை" மாதிரியிலேயே எழுதப்பட்ட கதை :-

காங்கிரஸ் கட்சியிலிருந்து காங்கிரஸ், கட்சியின் நடைமுறைகளைப் பார்த்தபிறகு இந்திய சுதந்திரத்திற்கும் நாட்டு விமர்சனத்திற்கும் இந்தக் கட்சி பயன்படாது என்று கண்டு கம்யூனிஸ்டானவர் கதையை எழுதக்கூடாது.

கம்யூனிஸ்டாக இருந்து – அதுவும் கூட கட்சியில் இல்லாமல் பலாத்காரவாதியாக இருந்து கடைசியில் அஹிம்சாவாதியானவனின் கதைதான் 'கல்கி'க்குத் தேவை.

இப்படித்தான் ரங்கமணி போய்த்தீர வேண்டும். இந்நிலையில் கமலவாசுகியை இவன் கடத்த முடியாது திரிவேணியின் சாவிலேயே மனம் மாறியாக வேண்டும்.

ரங்கமணியைச் சூழ இரு பெண்கள். கமலவாசுகி (ராணி) திரிவேணி.

கமலவாசுகியை அவன் இறுதிவரை மறக்க முடியாது, வாசுகியும் இப்படித்தான்.

கமலவாசுகியின் தந்தை ஜமீன்தார் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் – தன் வழியில் நேர்மையான பற்று உடையவர் சுயதர்மத்தையே வற்புறுத்துபவர் – கமல வாசுகியால் ரங்கமணியின் லட்சியத்தோடு ஒத்துழைக்க முடியவில்லை. இல்லற வாழ்க்கையில் அவருக்கு அவ்வளவு பற்று கமல வாசுகிக்குப் பழி வாங்கியே தீர வேண்டும். சிவானந்தன் நல்லவன். இவள்தான் அவனைக்

கிளப்பிக் காரியங்கள் செய்கிறாள். உத்திரவு போடுபவள் அவள்தான். சர்தார் இயக்கத்தைக் கண்டுபிடிக்க அவள்தான் காரணம். இந்த ஆவேசம் அவளுக்கு எங்கிருந்து ஏன் வந்தது? – தெரியாது மொட்டையாக, ஒரே காரணம் – காதல் தோல்வி.

ரங்கமணி – பலாத்காரவாதி. ஆனால் இவனுக்குக் காதலி தேவை. பெண்ணின் அன்பில்லாமல் முடியாது. திரிவேணி – காந்தியவாதி இவருக்கும் அப்படித்தான்.

என்னதான் கொள்கை – இலட்சியம் என்று பேசினாலும் தனக்கென்று நிம்மதியாக இருக்க ஒரு குடும்பம் – மனைவி. தேவைதானே என்பது தத்துவம்.

தேவிகா வேசிதான். 'ஆனாலும்' நாட்டுப்பற்று நிறைந்தவள் அவள். 'ஆனாலும்' தான் 'ஆகலே' என்பதில்லை.

பெண்களின் வகைவகையான உடல் அழகுகள் குணங்கள் பற்றிய வர்ணனைகள்.

முதலிலிருந்தே, திரிவேணி கூறி வருகிறாள். 'உங்களால் பலாத்காரவாதியாக இருக்கமுடியாது'. அதன்படியே ரங்கமணியால் நெடுங்காலம் இருக்க முடியவில்லை கல்லுக்குள் ஈரம் இருக்கிறது.

பலாத்காரவாதி, ஈரமற்றவன். திரிவேணியை வெங்கு இடையில் வந்து காப்பாற்றினான். போலீசைத் தாக்கியிருக்கக் கூடாது என்று திரிவேணிக்கு வந்த ஆவேசம்! இவளேதான் கேட்கிறாள் திருநெல்வேலியில் ஆள்களே இல்லையா? என்று.

கதையிலிருந்து காந்தியமே சிறந்தது என்பது எந்த வகையில் நிரூபணமாகிறது?

காந்தியமே சிறந்தது என்ற நிரூபணத்தைக் கதையில் கொண்டு வர முடிவுகட்டிக் கொண்டதால் பாத்திரத்திரிபு, கதைத் திரிபுகள் நேர்கின்றன. கமலவாசுகியா மனம் மாறக் கூடியவள்? சிவானந்தம் பரவாயில்லை, ஏற்கலாம்.

'நடுநிலை பிறழ்ந்தால்', இலக்கியம் சிதைவடையத்தான் செய்யும். கதையின் சுவைக்கு இடையில் ஒரு பித்துக்குளி – வெங்கு வரவேண்டும் – கடைசியில் அவன் மேன்மையானவன் ஆகிவிட வேண்டும்.

பித்துக்குளியை விவரிக்கக் கூடாது. உகைத்தை யதார்த்தவாதியாகப் பார்க்கக்கூடாது. தேவிகாவையும் விளக்கிவிடக் கூடாது. நிரூபராக இருந்து மற்றவர்க்குக் கிட்டாத செய்தியை உடனே கொண்டுவரவேண்டும்.

வ.உ.சி. பற்றிச் சில நல்ல செய்திகள் – உண்மைதானா? பாரதி இடையில் குறிப்பிடப்படுகின்றார் – மேலும் சில – வாஞ்சி நாதன் கொலை.

4. ரங்கமணியின் இரட்டை வாழ்வு பற்றித் திரிவேணி பேசுகிறாள் (429) உண்மைதான் திரிவேணி எப்படியாம்? காந்தியவாதிகள் எப்படியாம். உண்மையில் ரங்கமணியின் அன்புதான் உண்மையானது, ஆழமானது. கதை இதை விளக்க முடியாது, கூடாது.

அத்தையின் பாசத்தை அவன்தான் அதிகமாக உணர்கிறான் (427).

விடுதலை இயக்கத்தில் பூரணமாக அமிழ்ந்து, உடல் அவஸ்தையிலிருந்து விடுபடலாம் என்று நம்பினர். ஆனால் என்னதான் முயன்றாலும் மனம் இந்த மண்ணோடுதான் வந்து ஒட்டுகிறது. எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும் கடைசியில் மண்ணுக்கு வந்துதான் தீரவேண்டியிருக்கிறது.

மனம் மனிதனைத் தேவனாக ஆக்கினாலும் அவனை உடல் மனிதனாகவே வைத்திருக்கிறது. மனித இயல்பில் மிருகத்தனமும் கலந்துதான் இருக்கிறது. மனிதன் தன்னைத் தட்டித் தட்டித்தான் மனிதனாக ஆக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்தப் போட்டிதான் ரங்கமணியிடம் வெகு நாட்களாக நடக்கிறது (419) கதைக்கு இது இன்னொரு பரிமாணத்தைக் கொடுத்திருக்கலாம் வீர சாகஸக்கதையில் இது முடியாதே – வெறும் பகட்டும் படாடோபமும் சூழ அற்ப ஆசைகளைச் சுமந்து கொண்டு சுகத்தை மட்டுமே தேடியலைந்து உல்லாச வாழ்க்கையில் மிதக்கும் சோம்பேறிப் பெண்களைவிட தேவிகா எவ்வளவோ உயர்ந்தவள் (பக். 398).

– உண்மைதான் தேவிகாதான் கற்புடையவள் கமலவாசுகி வேசி.
– இன்னொரு பரிமாணம் பழைய கட்டுகளைச் சிதைக்காமல் புதிய படைப்பை உருவாக்கிவிட முடியாது.

பக். 379 – 380 மில்லர் அறிவுரை

இரத்தம் சிந்திப் போராடாமல் வரும் சுதந்திரம் பயனற்றது (விரிவாக)

பக். 344, மில்லர் மனிதனை இன்னும் மனிதனாகவே காப்பாற்றிக் கொண்டிருப்பவை அன்பும் அஹிம்சையும்தான் – சில நேரங்களில் மிருகமாயிருப்போம்.

– மிருகம் – மனிதன் முரண்தான் எப்போதும்.

பக். 342, உலகத்தின் இன்றைய வெறிபிடித்த பரபரப்பும் மனிதர்களைப் பைத்தியமாக்கிவிடலாம். காப்பாற்றும் ஒரு சக்தி உண்டென்றால் அது உங்களுடைய வாழ்க்கை முறையும் சமூக அமைப்பும்தான்.

பக். 336 : ராணி! நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லையே! ஏன் நான் உன்னைப் புரிந்து .கொண்டேனா?

இலக்கியவாதிகள் மற்றும் தத்துவவாதிகளின் நிரந்தரச் சிக்கல்.

இலக்கியம் அதன் பரிமாணத்தில் இயங்க வேண்டும். இறுதிவரை ரங்கமணியே தன்னைப் புரிந்து கொள்கிறானா? பின்னென்ன கதை இது?

பக். 330 – 331 : வாழ்க்கை என்றால் பட்டு மெத்தை என்று தானா அர்த்தம். கல்லும் முள்ளும் காடும் மேடும் கூட வாழ்க்கையைக் கொடுக்கின்றன. குதிரைக்கு கடிவாளம் போட்டமாதிரி வாழ்க்கையை ஒரே திசையில் பார்க்கிறாள் ராணி. உலகம் பரந்து கிடக்கிறது. கிணற்றுக்குள்ளே மட்டும் நீந்தினால் போதாது – ரங்கமணி.

பெண்களுக்குத் தாங்கள் இருக்கும் கிணறுதான் உலகம். அதற்குள்ளேயே அவர்கள் சொர்க்கத்தையும் படைத்துவிட முடியும் – கமலாவாசுகி.

வாழ்வை இருவேறு துருவ முறையில் புரிந்து கொண்ட தன்மை.

பக். 286 : நமக்கு இன்று தேவை லட்சிய நோக்குதான் – ரங்கமணி

பக். 267 : பகத்சிங் – கீதை?

பக். 262 : கம்யூனிசம் சரியில்லை. இயற்கையின் படைப்பிலேயே சமத்துவம் இல்லை. அவனவன் ஆற்றலுக்கும் அறிவுக்கும் தக்கபடி வாழ வேண்டும். இயற்கையின் தூண்டுதலை மட்டுப்படுத்த முயல்வது வீண் மட்டுமல்ல பைத்தியகாரத்தனமும்கூட – ரங்கமணி – கம்யூனிச எதிர்ப்புக் கருத்து.

பக். 202 : ரங்கமணியின் வாய் காந்திக்கு ஜே. போடுகிறதாம். மனிதர்கள் மூலம் அவர்களின் செயல்களுக்கான காரணங்களை சமுதாயத்தில், மனத்தில், இன்னும் பல மூலை முடுக்குகளில் கூடத் தேடிச்சென்று மனிதர்களைப் படைப்பது உண்மைக் கலை. சில குறிப்பிட்ட வரையறைகளில் மனிதனை அடக்கிக் காட்டுவது சித்தாந்தம்தான் நாவல். மையமாக இருப்பது இவரது சித்தாந்தம்தான். இது கலையை முடமாக்குகிறது. இது கலை அல்ல சித்தாந்தம்.

கல்கி, நா.பா., அகிலன், நல்ல பெருமாள் முதலியவர்கள் ஒரு கூண்டுப் பறவைகள் - இவர்கள் நாவல் உலகில் காலங் கடந்தும் வாழ்கிறார்கள் வேத நாயகம்பிள்ளை கூட இன்றும் வாழ்வதைப்போல. இன்றும் புதிதாக எழுதும் எழுத்தாளர் - நாவல் கலை அதுவரை அடைந்துள்ள வளர்ச்சியிலிருந்து தொடங்குவதில்லை - தம்மிடமிருந்தே தொடங்குகின்றனர். இது ஒரு மொழிக்கு அழிவு. வியாபாரத் தனத்தின் விளைவு. இவர்களுக்கும்கூட ஒரு இடம் நிரந்தரப்பட்டு விட்டது. அதிலேயே காய்த்துப் பழுக்கிறார்கள் - இவர்களும் ஒரு கோட்பாட்டை உருவாக்கிக்கொண்டு நிம்மதியடைகிறார்கள், மணியன் முதலியவர்களும் ஒரு எழுத்தாளர் தமது பார்வை வழியே உலகைப் பார்த்து கலை பார்க்க நாவல் படைக்க முடியும். பார்வை முழுமையாக இல்லையானால் கலை சரியாக, கலையம்சம் சரியாக இருக்க முடியாது.

நல்லபெருமாளைப் பொருத்தவரை மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையில் நடைபெறும் போராட்டம், இல்லற வாழ்க்கையின் தேவை இவற்றோடு இலக்கியமும் தேவை என்பது இவரது பார்வை. இது கலையை முடமாக்குகிறது. முடமாக்கப்பட்ட கலையைத்தான் இங்கு நாவல் வடிவில் பார்க்கிறோம்.

இதிலிருந்து உயர் வகைக் கலை தோன்ற முடியாது.

யானை பிழைத்த வேல் ஏந்தல் இனியது.

முயல் எய்த அம்புக்கு பெருமையில்லை.

நூல் : 1969

ரா.சு. நல்ல பெருமாள் :
கேட்டதெல்லாம் போதும்

1. அரண்மனையை விட்டு வெளியேறிய புத்தர் போதி மரத்தடியில் பெற்ற அனுபவம் பற்றிய கற்பனைக் கதை.

திடீர் திருப்பங்களையும், மர்மம் – அதிர்ச்சிகளையும், காதல் விவரங்களில் போதையையும் வழக்கமாகப் படித்துப் பழக்கப்பட்ட வாசகர்களுக்கு இந்தக் கதை சிந்தனையை விரிவாகத் தூண்ட முடியுமென்று முன்னுரையில் குறிப்பிடுகிறார் ரா.சு.ந.

நான் யார்? இந்த உடம்பு யார்? உயிர் யார்? கடவுள் எங்கே? இந்தக் கேள்விகளுக்கு ஆசிரியர் என்னென்ன விடையளிக்கிறார் என்பதை விட அவர் இன்னும் அவற்றைக் கேட்டும், நெஞ்சுரம் பெற்றதும், விடையிறுக்க முயலும் எளிமை நயமுமே அவர் தரும் இலக்கியப் புதுமையை வளப்படுத்தியிருக்கிறது. – பா. நடராஜன்.

2. மனம் தளர்ந்த நிலையில் (கடைசியில்) கௌதமன் சிந்திக்கிறார்.

புண்ணிய தீர்த்தங்கள், பாவத்தைத் தீர்க்கக் கூடியதாக இல்லை. வேள்விகளில், அக்கினிக்கு பல பொருள்கள் இரையாயினவே தவிர எந்த என் அஞ்ஞானமும் இரையாகவில்லை. போதனைகள் நிலைக்கவில்லை. சாதனைகள் செய்தேன் உடல் உரம் பெற்றது உள்ளம் உறங்கித்தான் கிடக்கிறது.

நான் பெற்ற சக்திகள் அனேகம். இவ்வளவும் எதற்காக? 'நான்' அழிந்ததா? என்னிலிருந்து 'நான்' விலகி வெகுதூரம் போய், தோற்றமில்லா சூன்யத்தில் அலைந்த போதிலும் கடைசியில் திரும்பி வந்த ஏமாற்றம் தான் மிஞ்சியது.

உலக வாழ்வை நீ அறிய வந்தது அதோடு ஒட்டி ஒனறாகி விடுவதற்கல்ல அதிலிருந்து புரிந்து கொள்வதற்கு மட்டுமே. பின் கபிலவஸ்து நகர் வீதியில் வறியவனையும், பிணியாளனையும், பிணத்தையும் நீ கண்ட போது உன்னிலிருந்து விழிப்புற்று. அன்றிலிருந்து எப்போதும் உன்னை இயக்கி வந்த ஒரு நிகழ்வை நினைவுபடுத்திப் பார். என்னை நீ மறந்திருக்க முடியாது. அரோமா நதிக்கரையில் சதானந்தரோடு

இருந்தபோது, சாருமதி வேட்கையோடு நெருங்கியபோது, தயானந்தரின் போதனையில் சலிப்புற்றபோது, அஜிதனின் தர்க்கத்தில் குழம்பியபோது, பன்றியைக் கொலை செய்து அதை ஆனந்தன் ருசித்து உண்டது கண்டு வேதனைப்பட்டபோது, என்னை நீ கேட்டிருக்கிறாய். உன்னை அந்த இடங்களிலிருந்து இந்த இடத்திற்குக் கொண்டுவந்த நான் தான். என்னைத் தெளிவாகக் கேட்டிருக்கிறாய்.

ஆனந்தனை கவனித்தாயே! எவ்வளவு சக்தி அவனுக்கு அவனுக்குள் அடங்கியிருக்கிறது. அவனிடத்தில் நீ கண்டிருக்கிறாய். அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒரே பாதைதான் குறிவைப்பது. நீ பல பாதைகளை நாடினாய். திசை தெரியாமல் அலுத்துவிட்டாய், எல்லாவற்றையும் தள்ளிவிட்டு நீயே சிந்தனை செய் வெற்றி கிடைக்கும்.

அவனவன் தன்னுடைய நாணை விலக்கி, தானே நாண் ஏற்றிக் கொள்ள வேண்டும். ஏற்றும்போது புயல் அடித்தாலும், மழை பெய்தாலும் அவனேதான் அதைத் தடுத்துக் கொள்ள வேண்டும். ஞானம் என்பது ஒரு உணர்வு. அதை உணர்த்த முடியாது. ஒரு ஞானி பெற்ற ஞானம் அவனுடைய சுயஅனுபவம்தான்.

இதுவரை கேட்டதெல்லாம் போதும். இனி அவன் தன்னையே தான் கேட்க வேண்டும். அவன் வைத்த குறி விலகாது தப்பாது.

நூல் : 1971

வண்ணநிலவன் :
படைப்புலகம்

எழுபதுகளில் தமிழ் இலக்கியத்திற்குள் வந்த புதிய சக்திகளில் ஒருவர் வண்ணநிலவன். இதுவரை வெளிவந்த அவரது இரண்டு சிறுகதைத் தொகுப்புகளும் மூன்று நாவல்களும், வித்தியாசமான இவரது படைப்பு உலகத்தை வெளிப்படுத்துகின்றன. அவர் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து வந்த சிறந்த சிறுகதைகள் முதலில் 'எஸ்தரி'லும் பிறகு 'பாம்பும் பிடாரனி'லும் தொகுக்கப்பட்டுள்ளன. எஸ்தருக்குப் பிறகு 'கடல்புரத்தில்', பிறகு 'கம்பாநதி' கடைசியாக 'ஒரே ஒரு நாள்' – சிற்சில ஆண்டுகள் இடைவெளியில் வெளிவந்தன. கால அளவில் ஏற்பட்ட வித்தியாசம்போலவே இப்படைப்புக்கள் தமக்குள் சில வேறுபாடுகளையும் கொண்டுள்ளன. வண்ணநிலவனின் படைப்பு உலகத்தை மதிப்பிடுவதற்கு அவரது படைப்புக்களோடு, அவரோடு நடத்திய விரிவான உரையாடலும் (கோவை, இலக்கிய ஆய்வரங்கக் கருத்தரங்கு – 15..6.80) பயன்படுகின்றன.

வண்ணநிலவனின் உலகத்தில் அழுத்தமாகத் தெரிவது வறுமையின் சில கோலங்கள். வறுமையின் காரணங்களில் ஒன்றான வேலையின்மையும், வறுமையின் விளைவுகளில் ஒன்றாகிய குணச்சிதைவும் இந்தக் கோலங்களில் முக்கியமானவை. எஸ்தர், வறுமையின் கோரப் பிடியிலிருந்து தப்பும் ஒரு முயற்சியின்போது, தம் குடும்பத்தின் ஒட்டுமொத்தமான நலன் கருதி, நிதானமாக, தீர்மானத்தோடு காற்று சுழன்றடிக்கும் நள்ளிரவில் பாட்டிக்கு அருகில் நெருங்கிப்படுத்து அவளைக் கொல்கிறாள். இயக்கம் அற்று படுக்கையில் விழுந்துவிட்ட குடும்பத் தலைவனை, குழந்தைகளும் மனைவியுமாகச் சேர்ந்து, முறைபிசகாமல், விடாப்பிடியாக கூவி எழுப்பி கைத்தாங்கலாக, குடும்பப் படத்தோடு சந்தடி மிக்க தெருவோரத்தில் பிச்சைக்காக அழைத்துச் செல்லும் கொடுமை, 'அழைக்கிறவர்கள்' கதையில். இப்படி வறுமை உறைந்து கெட்டியாகிக் கறுத்து அச்சம் தரும் முறையில் வாழ்க்கையில் அழுந்திக் கிடக்கிறது, வண்ணநிலவனின் உலகில். வறுமை இங்கு வாய்திறந்து 'என்னைப் பார்; என் கோரத்தைப் பார்' என்று பிரச்சாரம் செய்வதில்லை. வறட்சியான சூழலிலிருந்து புறப்பட்டு, மெல்ல மெல்லத் தன் கோரப்பிடியை நெருக்கி, இறுதியில் கறுத்த இரவோடும் பேய்க் காற்றோடும் ஒரு தீவிரமான மவுனத்துடன் வந்து கழுத்தை நெரிக்கிறது வறுமை. ஒரு கலைப்படைப்பின் தீவிரம் இங்கு படிப்பவர் நெஞ்சில் ஆழமாகப் பதிகிறது. 'மிருகம்', 'நிஜ நிழல்', 'கரையும் உருவங்கள்' முதலிய கதைகளும் இத்தகைய தீவிரத்தை சற்றுக் குறைந்த அளவில்

கொண்டுள்ளன. வாழ்க்கையாகிய யதார்த்தம் இங்கு குரூரமாகி விட்டதை வண்ணநிலவனின் கதைகள் கற்பனை ஆற்றலோடு சொல்லுகின்றன.

யதார்த்தத்திலிருந்து முற்றாக விலகியதை போலத் தோன்றும் சில கதைகளின் உண்மையைப் பார்க்கலாம். 'ராஜநாகம்', 'பாம்பும் பிடாரனும்', 'அரேபியா' முதலிய கதைகள் இவ்வகைக்கு நல்ல சான்றுகள்.

மனைவி அழகி. அவளுக்கு முன் கணவன் குரூபி. அவள் அழகுக்கு ஈடுகொடுக்காத நிலையில் இவன் தன்னைக் குரூபியாக உணர்ந்திருக்கக் கூடும். அவள் அழகை நேரில் இருந்து இரசிக்க வாய்ப்புக் கிடைத்த நிலையில் அவள் இசையில் மயங்குகிறார்கள் சிலர். காமம் தமக்குள் சுழன்றடிக்கும் நிலையோடு அவள் இசையின் கிறக்கமும் சேர்ந்துகொள்ள, அவள் ராஜநாகம் ஆகிறாள். நாகத்தின் ஆடலில், தப்பித்தால் போதுமென அவர்கள் தவிக்கிறார்கள். இசை மெல்ல ஓய்ந்தபோது அவர்கள் தப்பிச் செல்கிறார்கள். கதை முற்றிலும் கற்பனையில் இயங்குகிறது. யதார்த்தத்திலிருந்து அரும்பி ஆசைகள் கற்பனைகளின் கொடிபற்றி ஏறி, இந்தக் கொடிகளைத் தாங்கியவர்களைப் பின்னி நெருக்கி மூச்சுத் திணற வைப்பதைப் போன்ற கற்பனை. இவர்களின் மனவெளியில் அவள் நாகமாகி ஆட, அந்த நாகத்தின் ஆடலில் இவர்களே விரும்பி தவித்துக் கிறங்க, அந்தக் கிறக்கத்திலிருந்து தப்ப முயல – இப்படி ஒரு கூத்து நிகழ்கிறது. இந்த அலை வீச்சுக்கள் யதார்த்தத்திலிருந்தே எழுகின்றன. பரவிச் செல்லும் கற்பனை அலைகள் யதார்த்தத்தைப் பொய்யாக்கிவிடவில்லை. யதார்த்தத்தின் தீவிரத்தை இந்த அலைகள் வெளிப்படுத்துகின்றன. கதையில் இடம்பெறும் யதார்த்தம், எந்த நிலையிலும் கற்பனை அலைவீச்சிலிருந்து விலகியதாகவும் இல்லை. கணவன் குரூபியாவது மனைவியின் அழகோடு ஒப்பிடும்போதுதான். ஒப்பிடுபவரின் காமக் கண்களில்தான் – இவர்களின் காம குணத்திலிருந்துதான் – நாகம் பற்றிய கற்பனை எழுகிறது.

கற்பனை இங்கு யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளப் பயன்படுகிறது. கற்பனையின் முழுவீச்சில் யதார்த்தத்தின் வக்கிரம் புலனாகிறது. கற்பனை இல்லாமல் மனிதன் இல்லை என்பதையும், கற்பனை என்பது யதார்த்தத்தைப் பற்றிய சரியான, ஆழ்ந்த அறிவுக்கு இன்றியமையாதது என்பதையும், யதார்த்தம் பற்றிய ஆழ்ந்த அறிவிலிருந்து இயல்பாக எழுவது கற்பனை என்பதையும் நாம் இங்கு புரிந்துகொள்ள முடியும்.

ராஜநாகத்தைக் காட்டிலும் மிக நுட்பமாக உருவாக்கப்பட்டது 'பாம்பும் பிடாரனும்'. வண்ணநிலவன் மிக நுண்ணிய குறியீட்டுத் தளத்தில்

இக்கதையை நடத்துகிறார். சூரிய தரிசனத்திற்கு முகம் கொடுத்து, என்றும் இல்லாத முறையில் பாம்பு ஆவேசமாக ஆடுகிறது. மகுடி ஊதி ஊதிக் களைத்த பிடாரன் நுரைதள்ளிச் சாகிறான். பாம்பும் விழுந்து சாகிறது. இடையில் நிறுத்த முடியாமல் இருவரும் கட்டுண்டு கிடக்கின்றனர். வாழ்வின் பேருண்மைகளைத் தரிசிக்க கலை செய்யும் முயற்சியும், இதனோடு இன்றியமையாத உறவில் உள்ள மனிதனின் பாடும், தரிசனத்திற்கான முயற்சியில் – காட்சியில் வீழ்வும், அந்த வீழ்வே வெற்றியாதலுமாக இங்கு விளக்கங்கள் தரக்கூடும். கலையின் பிடிப்பில் கட்டுண்ட, அந்தக் கட்டின் சுதந்திரத்தில் வயப்பட்ட மனிதனை இக்கதை மேலும் நுட்பமாகச் சொல்லக்கூடும். பாம்பை இங்கு துறவியாக – விஞ்ஞானியாக புரிந்து கொள்ளலாம். பிடாரனை, உலகமாகவும் சூழலாகவும் புரிந்து கொள்ளலாம்.

வண்ணநிலவனின் கற்பனை ஒரு தீவிரத்தன்மையோடு இயங்குகிறது. யதார்த்தத்தைப் பார்ப்பதிலேயே திரிபையும் மிகைப்படுத்தலையும் கொண்டுள்ள கற்பனாவாதத்தோடு இக்கற்பனை எவ்வகையிலும் உறவு கொள்வதில்லை. புரிந்து கொள்வதற்குச் சிரமம் தருகின்றன என்பதனால் இக்கதைகள் கற்பனாவாதக் கதைகள் ஆவதில்லை. இவரது கற்பனைகள் வழாவழாத் தன்மை உடையன அல்ல. ஒரு மாய உலகத்திற்குள் தப்பிச் செல்லும் தன்மையும் இவற்றுக்கில்லை. வாழ்வின் நெருக்கடிகளிலிருந்து, பிரச்சனைகளின் தீவிரத்தன்மைகளிலிருந்து சுடர்விடுபவை இக்கற்பனைகள். வாழ்வுக்குள் சேரும் நெருப்பிலிருந்து பற்றி எரிபவை இவை. இவற்றைக் கொண்டவனது வாழ்வை, வேதனைகளை, வேதனைகளுக்குச் சரண் அடையாத தன்மையை இவை சொல்லுகின்றன. இவை எழும்போதே, இவை எழுவதற்கு இடம் தந்தவனுடைய மனத்தைக் கீறிக்கொண்டு இவை புறப்படுகின்றன. இவற்றுக்கு ஒளியைத் தந்துவிட்டுத் தன் வாழ்வை இருளில் கழிக்கத் துணிபவனே இத்தகைய கற்பனைகளைப் படைக்க முடியும். வண்ணநிலவனின் படைப்பு உலகம் இத்தகைய ஒளியால் உக்கிரம் பெறுகின்றது.

வண்ணநிலவனின் சிறுகதைகளில் தெரியும் உலகில் வறுமையின் கோரம், வயதானவர்களுக்கு வாழ்வை மறுக்கிறது. அனாதைப் பிணங்களைத் திருடிவந்து அதன்மூலம் பிழைப்பை நடத்த வைக்கிறது. வீட்டுக்குள் வந்து சட்டி பானைகளை உருட்டும் நாயை கதவிடுக்கில் வைத்து நசுக்கிக் கொல்லத் தூண்டுகிறது. நோயாளியைக் கொண்டு பிச்சை எடுக்க வைக்கிறது. வேலை இல்லாத நிலையில் தற்கொலைக்குத் தூண்டுகிறது. தற்கொலை செய்து கொள்ள முடியாத பலவீனத்தை

ஏற்படுத்துகிறது. வாழ்க்கைக்கு முன் மனிதர்களை பிச்சைக்காரர்களாக்குகிறது. கிழவியைக் கொன்றுவிட்டு, அப்புறம் போய்ப் பெறும் வாழ்க்கையில் என்ன உயிர்ப்பு இருக்க முடியும்? பிணங்களைத் திருடிப் பிழைக்கும் வாழ்வில் என்ன மேன்மை விளையும்? உயிர் வாழ்க்கை இங்கு சாதாரண – மிகச் சாதாரண தளத்தில் நடைபெறுகிறது. நாயை ஆத்திரத்தோடு நசுக்குபவன் மிருகம் ஆகிறான். மிகவும் கீழ்த்தளத்தில் நடைபெறும் இந்த வாழ்வுக்கு என்ன உடைகளும் குளியலும் தேவைப்படுகிறது? இப்படி இருக்கிறது வண்ணநிலவனின் உலகம். இதை ஆவேசத்தோடு அன்றி, இப்படி இருக்கிறது இந்த உலகம் என்னும் ஒரு தீவிரமான நிதானத்தோடு படைக்கிறார். இந்த உலகிற்குள் இருக்கும் எதிர்ச் சக்திகள் மிகவும் பலவீனமானவை. தற்கொலை செய்துகொள்ள எண்ணுபவனிடம் 'நாளை உன்னைப் பார்க்க விரும்புகிறேன்' என்று சொல்லும் நண்பனும், தனக்குள் அந்நியமாகிவிட்டவனுக்கு அறிவுரைகூறும் ஒரு அக்காளுமே இங்கு எதிர்ச்சக்திகள். இவர்களும் நாளை அல்லது நாளை மறுநாள் தம் உயிர் ஆசையை விட்டுவிடக்கூடும்.

•

சிறுகதையின் எல்லைக்குள் தெரியும் உலகம் நாவலில் விரிந்த பரப்பில் காணப்படுகிறது. 'கடற்புரத்தில்' நாவலில் நவீன கால வாழ்வுக்கும் மரபுமுறையில் வரும் வாழ்வுக்கும் இடையிலான மோதல், கடற்கரைப் பகுதியில் வைத்துச் சித்திரிக்கப்படுகிறது. லாஞ்சிக்காரர்களுக்கும் படவுக்காரர்களுக்குமான முரண்பாடு, பறையர்களின் வாழ்வில் தீர்மானமான சக்தி ஆகிறது. கடலில் மீன் பிடி வாழ்விற்கும் கடைவைத்து வியாபாரம் செய்யும் வாழ்விற்கும் இடையிலான முரண்பாடும் வந்து சேர்கிறது. இவை சமூகப் பின்னணிகள். இந்தப் பின்னணியில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. குரூஸ் மிக்கேல் தன் மகனது அழைப்பை ஏற்க முடியாமல், தன் படவுத்தொழிலை விடமுடியாமல் இருந்து, தவித்து, இறுதியில் படவையும் வீட்டையும் விற்க நேர்ந்து பைத்தியம் ஆகிறான். புதிய வாழ்க்கையோடு வரும் மோதலில் குரூஸ் இப்படி அழிகிறான். இந்த வாழ்க்கையிலிருந்து இவன் மகன் செபஸ்தி தப்பிச்செல்ல வியாபார உலகில் மனம் வைக்கிறான். இந்த வியாபாரி ரஞ்சியைக் காதலித்து கைவிட்டவன். இவன் தங்கை பிலோமி, சாமிதாஸைக் காதலிக்கிறாள். சாமிதாஸ் லாஞ்சிக்காரன் மகன். பிலோமி காதலும் தோல்வியில் முடிகிறது. குரூஸ் மிக்கேலின் மனைவி மரியம்மை புதிய சூழலில் மனம் நிறைவடையாமல், வாத்தியோடு தன் காதலை இறுதிவரை இரகசியமாய்த் தொடர்ந்து, குடித்து, குடிவெறியில் கல்லில்மோதி இறக்கிறாள்.

இயந்திர, வணிக உலகம் வந்து தீவிரத்தோடு மோதும்போது பழைய உலகம் தன்னைக் காத்துக்கொள்ள படும் வேதனை சகிக்க முடியாதது ஆகிறது. குடும்ப உறவுகள் கடுமையான சோதனைக்கு உள்ளாகின்றன. புதிய நிலைகளை ஏற்கமுடியாமலும் பழைய நிலைகளைக் கைவிட முடியாமலும் தவிக்கும் நிலையில், தவிர்க்க இயலாமல் சில தற்காலிக உடன்பாடுகள் ஏற்படுகின்றன. 'கடல்புரத்தில்' நாவலின் யதார்த்த உலகம் இத்தகையது.

இந்நாவல் அதன் வெளிப்பாட்டில் — அன்பை எடுத்துரைக்கும் பண்பில் ஓர் உபநிடதம். பிலோமி, ரஞ்சி ஆகியோர் அன்பால் நிறைந்தவர்கள். தம் காதலர்களைத் தாம் பெறமுடியாத நிலையிலும் காதலரிடம் இம்மியளவும் வெறுப்பின்றி வாழ்கின்றனர். மரியம்மையும் வாத்தியின் அன்பால் உயிர்வாழ்கிறாள். வாத்தியும் அவ்வாறே. பவுலுப்பாட்டாவும், தரகர் மாமாவும் கடல்புரத்தில் அன்புத் தேவதைகள். கடல் கருணைமயமானது. பறையர்களை அது என்றும் கைவிடாது. கடற்கரையில் மனைவிமார்கள் 'தவறு' செய்தபோதும் கடல் அவர்களின் கணவர்களை அன்போடு காக்கும். இவர்கள் சொற்களும் மனமும் அன்பால் தூய்மையானவை. இவர்கள் தேவதைகள் மாதிரி. இயந்திர — வணிக உலகம் தம்மை எதிர்கொண்ட நிலையில் இவர்கள் எல்லோரும் தமக்குள் அன்பை நிறைத்துக்கொண்டு தேவதைகள் ஆகிவிடுகின்றனர். அன்பே பிரதானம் என்ற குரல் இந்நாவலில் கோயில் இசையாகக் கேட்கிறது. ஏசு, டால்ஸ்டாய் ஆகியவர்கள் நம் நினைவில் எழுகிறார்கள். வண்ணநிலவனுக்குள்ளும் இத்தகைய ஒரு ஏசு சிலுவையில் அறையப்பட்டிருக்கலாம்.

நிச்சயம் இந்த உலகம் இதே வடிவில் உண்மையானது அல்ல. அன்பு நிறைந்த இந்த உலகம் விரைவில் தகர்ந்துவிடும். தற்காலிகமாகப் பின்வாங்கும் லாஞ்சிகள் விரைவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டும். குரூஸ்மிக்கேல்கள் பலர் பைத்தியம் பிடித்துச் சாவர். இவர்களில் பவுலுப்பாட்டாவும் தரகர் மாமாவும் இருக்கக்கூடும். ரஞ்சியின் வாழ்க்கை — என்னதான் அவள் ஒரு உன்னதத்தைத் தனக்குள் கொண்டிருந்தாலும், இன்னொரு கட்டத்தில் அது சிதையும். அவள் செபஸ்தியைத் தேடி வரலாம். பிலோமி சாமிதாஸைத் தேடிச் செல்லலாம். இவர்களும் மரியம்மை ஆகலாம். இத்தகையவர் இல்லாத உலகம் தோன்றும். வாழ்க்கை மறுபடியும் தனது யதார்த்தத்தில் நம்மை பயமுறுத்தும்.

இடையில் அவ்வப்போது உன்னதங்களை மனிதர் தமக்குள் சாதித்துக் கொள்ள வேண்டாமா? வேண்டும். தொடர்ந்து உன்னதம் சிதையுமா? சிதையும். மீண்டும் உன்னதம் . . . தவிர்க்க முடியாதது. இந்த உன்னதம்தான் கடலைக் கருணை உடையதாகக் காணும். பிரபஞ்சத்தில் பேரொளியைக் காணும். இத்தகைய தரிசனங்கள் வரலாறு முழுவதும் தொடரும். இம்முறையில் ரஞ்சியும், பிலோமியும் பவுலுப்பாட்டாவும் தொடர்ந்து தோன்றுவர். இன்றைய சமூக நிலைகள் உடைத்து நொறுக்கப்பட்டு வேறு ஒரு அடிப்படையில் உருவாக்கப்படும் வரை இது தொடரும். அப்புறமும் . . . . சமூகம் இறுகும். உடைக்கப்படும். அப்புறமும் . . . .

வண்ணநிலவனின் சிறுகதைகளில் தென்படும் உலகம், 'கடல்புரத்தில்' மேலும் தெளிவான வரையறைகளில் காணப்படுகிறது. வறுமை, வேலையின்மை, மனித அவலங்கள் ஆகியவை ஒரு சமூகப் பின்னணியில் பார்க்கப்படுகின்றன. சமூகம் எதிர்எதிர்த் துருவத்திற்குச் செல்லுகிறது. மனிதர்கள் வாழ்வுக்காகத் தவிக்கின்றனர். வாழ்வை இழக்கின்றனர். இழப்பின் ஒரு கட்டத்தில் தம் மனித மேன்மையை – கலாசார குணங்களை இழந்துவிட விரும்பாமல் – முடியாமல் தமக்குள் அன்பை நிறைத்துக் கொள்கிறார்கள். ஒரு சாந்த நிலையை உருவாக்கிக் கொள்ள முயல்கிறார்கள் – இது எவ்வளவு தற்காலிகமானதாக இருந்தபோதிலும்.

இந்நாவலில், மனிதர்களிடத்துப் பொங்கி வழியும் அன்பு, இந்த அன்பின் பார்வையில் மனிதர்களை வடிக்கும் குணம், வண்ணநிலவனின் அன்பாக இருக்க முடியும். இத்தகைய அன்பை இவர் லாஞ்சிக்காரர்களிடம் வைக்கவில்லை என்பதையும் நாம் கவனித்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே நாம் பார்த்த வண்ணநிலவனின் கற்பனை ஆற்றலின் ஒரு பகுதியாகவும் இவர் அன்பு இருத்தல் கூடும்.

•

வண்ணநிலவனின் சிறுகதைகளிலும் நாவல்களிலும் தொடரும் இன்னொரு பண்பை இங்கு நாம் கவனிக்க வேண்டும். ஆண் பெண் உறவில் ஒரு நெகிழ்வை வேண்டுகிறார் வண்ணநிலவன். கற்பு என்ற இறுக்கத்தின் வழியே பெண்களை இவர் பார்ப்பதில்லை. சாமிதாசுடன் பிலோமி கொள்ளும் உடலுறவு, அன்பின் நிறைவாகவே காணப்படுகிறது. இந்த அன்பின் நிறைவு தொடர்ந்து அவள் மனத்தில் நிரந்தரமாகிவிடுகிறது.

பிலோமி, ரஞ்சி, மரியம்மை முதலியவர்கள் அன்பின் பரவசத்தில் ஆழ்ந்தவர்கள். இவர்களிடம் குற்றம் எதுவும் இல்லை. 'எஸ்தர்' தொகுப்பில் உள்ள 'அயோத்தி', 'அவனூர்', 'ஆதி ஆகமம்' ஆகிய கதைகள் இப்பரிமாணத்தோடு சிறக்கின்றன. 'கம்பாநதி', 'ஒரே ஒருநாள்' ஆகிய நாவல்களிலும் இது தொடர்கிறது. தமிழ்க் கதைக்குள் வரும் சிறந்த பெறுமதி இது.

●

'கடல்புரத்தில்' காணப்படும் தேவதைகள், உலகம் 'கம்பாநதி'யில் மீண்டும் மனிதர்களின் யதார்த்த உலகமாகிறது. மனிதர்களை அன்பில் ஊறவைத்து எடுப்பது இங்கு குறைந்திருக்கிறது. யதார்த்த உலகம் இங்கு திரள்கிறது. வண்ண நிலவனின் கற்பனை சற்று வித்தியாசமான பாதையில் செல்லுகிறது.

சங்கரன் பிள்ளை குடும்பப் பொறுப்பு இன்மையாலும், சூதாட்டத்தாலும் சீரழிந்து செல்வத்தை இழந்து விடுகிறார். மகன் பாப்பையா. திருநெல்வேலி ரெயினீஸ் ஐயர் தெருவின் அழகு, தாமிரபரணி ஆறு; தியோப்லஸ், ஒரு இன்டர்வியூவிற்குப் பிறகு ஒரு பகல் நேரத்தை ஆனந்தமாகக் கழிக்க உதவிய காதலி கோமதி இவர்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு இராணுவத்தில் சேர்கிறான். அக்கா சிவகாமி திருமணம் ஆகாமல் குடும்பத்திற்காக சம்பாதிக்க அலுவலகம் போய் வருகிறாள். சங்கரன் மாப்பிள்ளையின் வைப்பாகிய சௌந்தரம் தன் கணவனது சாவுக்குப் போய் வந்திருக்கிறாள். தியோப்லஸின் தாயும் தந்தையும் தம் வாழ்க்கைத் தர உயர்வில் தற்பெருமையோடும் படாடோபத்தோடும் நடந்து கொள்கிறார்கள். காலமெல்லாம் நோயாளியாக இருந்த கண்ணன் செத்துப் போய்விட்டான். ஈசான மடத்துச் சாமிகளுக்கும் பேச்சியா பிள்ளையின் காதலி – நாராயணனின் மனைவி – அலர்மேலுவுக்கும் புதுத் தொடுப்பு ஏற்பட்டிருக்கிறது. கோமதி கதிரேசனை கட்டிக்கொண்டு எல்லோருக்கும் பழக்கமான இல்வாழ்க்கையில் ஈடுபடுகிறாள். உலகம் வித்தியாசம் இல்லாமல் தனது சுற்றுவட்ட இயக்கத்தை ஆர்ப்பாட்டம் இல்லாமல் தொடர்கிறது.

எத்தனையோ பழைய அழகுகளை இழந்துவிட்டு, இழந்துவிட்டது பற்றிய உணர்வே இல்லாமல் அன்றாட வாழ்வில் உலகம் அமிழ்கிறது. சங்கரன் பிள்ளையும் ஒரு காலத்தில் செல்வாக்கோடு வாழ்ந்தார். கோமதிக்கும் ஒரு காதலன் இருந்தான். தியோப்லஸின் பெற்றோர் ஒரு காலத்தில் அன்பாக இருந்தார்கள். தாமிரபரணி நீர் நிறைந்து ஓடியது முன்பு. இப்படி வாழ்க்கை 'கம்பா நதி'யில் சொல்லப்படுகிறது. ஒரு காலத்தில்

இப்படியொரு நதி ஓடிக்கொண்டிருந்தது. இன்று மணலுக்கடியில் அது ஓடுகிறது என்பது போல நாவலின் தலைப்பு.

திருநெல்வேலி நகர வாழ்க்கை இந்நாவலில் சொல்லப்படுகிறது. நகரம் இங்கு ஒரு சக்தியாக ஆதிக்கம் செய்யவில்லை. 'நான் என்ன செய்யட்டும். அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்' என்று சோகத்துடன் நகரம் நிற்பது போன்ற தோற்றம் தருவது நாவல். வாழ்க்கை வந்து கால்களை இடற, மனிதர்கள் தட்டுத்தடுமாறி ஏதாவது ஒரு திசையில் இயங்கத் தொடங்கி, வட்டத்திலேயே வளைய வருகிறார்கள். உய்தி அண்மையில் இல்லை. காப்பவர் இங்கு இல்லை. தங்களுக்கு விடுதலை தேவை என்பதைக்கூட உக்கிரத்துடன் நினைக்க முடியாத மந்த குணத்தில் மனிதர்கள். இந்த மனிதர்களை நாம் கோபித்துக் கொள்ளக்கூட முடியாது. உங்கள் மனத்தில் அன்பு இருந்தால் இவர்களை நேசிக்கப் பாருங்கள். சங்கரன் பிள்ளைக்கு யார் மீதாவது கோபமா? மரகதத்திற்கு? சௌந்தரத்திற்கு? பாப்பையாவுக்கு? கோமதிக்கு? இல்லவே இல்லை.

நாம் முதலில் பார்த்த வறுமையின் கறுத்த உருவம், நள்ளிரவு, நாயை நசுக்கிவிட்டு அச்சத்தோடு காத்திருக்கும் மிருகம், பிணந்தேடித் திரியும் கூலிகள், இடையிடையே நாகம் எழுந்து விழுதல் . . . எல்லாமே இந்தச் சூழலில் அடக்க ஒடுக்கமாய், ஆரவாரம் இல்லாமல், தமது நேரத்திற்காகக் காத்திருக்கின்றன.


●

'ஒரே ஒரு நாளில்' தன் வாழ்க்கையை எங்கோ எப்படியோ தொலைத்துவிட்டு, தொலைத்ததைக் கூட மறந்திருக்கும் மீராவை ராதா தொல்லைப்படுத்தப் போகிறான். வேலை இல்லாத ராதா, வேலை இல்லாதவன் எப்படி பாலன்ஸ்டாக இருக்கமுடியும் என்று கேட்டுக்கொண்டே மீராவைத் தொல்லைப்படுத்தப் போகிறான். ஒட்டல் வேலைக்குப் போய்வந்து, போர்னோ புத்தகங்களிலும் மாதத்தில் ஓர்நாள் கோடம்பாக்கத்திலும் கஞ்சாவிலும் தன்னை மறந்திருக்கும் சுந்தரத்தைப் புரிந்துகொண்டு நேசிக்கும் ராதா, மீராவைப் புரிந்துகொள்ள முடியவில்லை, அவளிடம் தன் ஆண்மை இடம் தேட விரும்புவதால். மீரா கடற்புரத்துப் பிலோமி மாதிரி தூயவளாக – அன்பு நிறைந்தவளாகக் காட்சி தருகிறாள். ஒருவேளை அவள் ராதாவுக்கும் இடம் தந்து அவனையும் ஒரு குழந்தை போலத் தாலாட்ட முடியும். வண்ணநிலவனால் அன்பை மறந்துவிட்டு மனிதர்களைப் பார்க்க முடியாது. அன்பு அனைவரையுமே தூய்மைப்படுத்தி விடுகிறது – சமூகத்தில் இருக்கும் ஆதிக்கச் சக்திகளைத் தவிர.

இந்த நாவலில் வண்ணநிலவன் அரசியல் வண்ணம் பெறுகிறார். வெளிநாட்டுத் துரை – ஒரு தரகு முதலாளி வருகிறான். இவனைப் பெரிதாக மதிக்கும் – நம்பும் கணேசன். எல்லோருக்கும் ஆதரவளிக்க நம்பிக்கையைத் தோளில் வைத்துக்கொண்டு அலையும் ஒரு தொழிற்சங்கவாதி முருகானந்தம். இவனை நோக்கி வளையும் ராதா. இவை இந்த நாவலில் புதிய அம்சங்கள். முருகானந்தம் அப்பழுக்கில்லாத ஒரு தொழிற்சங்கவாதி. தனக்கு என, தனக்குள் ஒரு வாழ்க்கை இல்லாத கட்சிக்காரன். தேவதை மீண்டும் இவன் வழியாக வருகிறதோ? பல்லாவரம் கல்குவாரி வருணனை, டீக்கடை பையன், ஆசாரி பற்றி ராதாவின் மனமாற்றம் இவையெல்லாம் வண்ணநிலவனின் அரசியல் அறிவின் புதிய சேர்க்கைகள்.

●

தொகுத்துப் பார்க்கும்போது வண்ணநிலவனின் படைப்பு உலகம், இருள் லேசாகப் பரவியுள்ள உலகம். இது இருண்ட உலகம் அல்ல. நிதானத்தோடு இங்கு நாம் பயணம் செய்யவேண்டும். இந்த உலகில் ஒளி விளக்குகளைத் தாங்கி நல்ல மனிதர்கள் சிலர் விடாப்பிடியாக உலவுகிறார்கள் – இவர்கள் தாங்கியுள்ள ஒளியும் மங்கி அணைந்து விடுவதற்கான நிலைமைகள் இருந்தபோதிலும். இந்த உலகிற்குள் இன்னும் விடுதலை வீரர்கள் வரவில்லை. வந்துசேரும் இரண்டொரு இளைஞர்களும் கொஞ்சம் ஆரவாரத்தோடு வந்திருக்கிறார்கள். இவர்களையும் இந்த இருள் கவ்வும். இந்த இருளுக்குள்ளிருந்து அவர்கள் ஒளியைப் பெறவேண்டும். அது அவர்களின் சுய ஒளியாக இருக்க முடியும். சிலநாள் வெளிப்பட்டும் சிலநாள் தேய்ந்தும் மறைவதாகிய அன்பு என்ற நிலவு இங்கு இருக்கிறது. இது போதுமானது அல்ல. இதற்குள் ஒரு சூரியன் வரவேண்டும். ஒரு சூரியனின் வரவுக்காக இங்கு மகுடி ஊத வேண்டியிருக்கிறது. வண்ணநிலவனின் கையிலும் ஒரு மகுடி இருக்கிறது. இருள்நிலையில் எங்காவது சோகம் புலம்புகிறதா? குரல் ஓங்கி ஒலிக்கிறதா? அவநம்பிக்கை அலைகிறதா? நிச்சயம் இங்கு அவை இல்லை. இங்கு ஒரு 'மவுனம் அதிர்கிறது'. ஒரு தீவிர உணர்வு – நிதானமான ஒரு மவுனம். சூரியன் இங்கு நாளையாவது தோன்றுவான் என்று யாருக்காகவோ காத்துக் கிடக்கும் எதிர்பார்ப்புக்கூட இங்கு இல்லை. இவர்கள் முயன்றால், தீவிரமவுனத்துடன் இருக்கும் இந்த மனிதர்கள், தமக்குள் ஒரு சூரியனைப் படைத்துக் கொள்ள முடியும். இந்த மனிதர்கள் இன்று இந்த உலகில் சிலுவையோடு வலம் வருகிறார்கள். ஒருநாள் இவர்கள் ஒரு விடியலை உருவாக்குவார்கள்.



நூலாசிரியர் ஞானி

மார்க்சிய நோக்கில் தமிழிலக்கிய ஆய்வில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உழைத்து வரும் திரு. ஞானி அவர்களின் இயற்பெயர் கி. பழனிச்சாமி. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்தை ஆர்வத்தோடு பயின்ற இவர், கோவையில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். புதிய தலைமுறை, பரிமாணம் ஆகிய இதழ்களோடு உறவுடையவர். நிகழ், தமிழ்நேயம் ஆகிய இதழ்களின் ஆசிரியர். வானம்பாடிக் கவிஞர்களில் இவரும் ஒருவர். 'மார்ச்சியமும் தமிழிலக்கியமும்' முதலிய தமிழியல் ஆய்வுநூல் பலவற்றைப் படைத்தவர். மார்க்சியத்தையும் தமிழ் இலக்கியத்தையும் தனக்கு உரமாகக் கொண்டவர்.

பழந்தமிழ் இலக்கியத்தோடு மட்டுமல்லாமல் தற்கால நவீன தமிழ் இலக்கியத்தோடும் நெருக்கமான உறவு கொண்ட இவரது இன்னொரு ஆய்வுநூல் 'தமிழ் நாவல்களில் தேடலும் திரட்டலும்'. தமிழ் நாவல்களைப் பழந்தமிழ் இலக்கியத்திற்கு நிகராக தமிழ்மக்கள் கற்றுப் பயன்பெற முடியும் என்பது நூலாசிரியரின் நம்பிக்கை. வரலாற்றை மட்டுமல்லாமல் இலக்கியத்தையும், வாழ்க்கையையும் ஆழமாகக் கற்பதற்கான திறவுகோலாக மார்க்சியம் விளங்குகிறது என்பது ஆசிரியர் துணிபு.